# வெறும் கிறிஸ்தவம்

C S லூயிஸ்

மொழிபெயர்ப்பு
சகோதரி கிரேஸ் ரோஸலின் விஜய்
சகோதரி சோ. அனிதா ஜெபராணி

ChristianityInTamil.com

வெறும் கிறிஸ்தவம்

1st edition May 2024

# இந்த மொழிபெயர்ப்பு பற்றி

ஒரு முறை என் சகோதரனுடன் உரையாடிக் கொண்டிருந்த போது˙ தேவன் என்ற தலைப்பு வந்தது. என் சகோதரன் தீமை இருப்பதைப் பற்றி தத்துவக் கேள்விகளைக் கேட்கத் தொடங்கியபோதும், பைபிளின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகங்களை வெளிப்படுத்தத் தொடங்கியபோதும் அவர் நாத்திகவாதியாக மாறுகிறார் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்தது. நான் இதே மனநிலையில் இருந்தபோது இதே போன்ற கேள்விகளை எதிர்கொண்டதால், அவரது சில கேள்விகளுக்கு என்னால் பதில்களை வழங்க முடிந்தது. இருப்பினும், அவரது விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களின் ஆழம் மிக பெரியது என்பதை உணர எனக்கு அதிக நேரம் ஆகவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு நான் படித்த "**Mere Christianity**" என்ற புத்தகம் என் சகோதரனுக்கு உதவியாக இருக்கும் உணர்ந்தேன். இந்த நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டால் இன்னும் பல சகோதர சகோதரிகளுக்கு ஒளியைப் பார்க்க தயார்படுத்த இந்த புத்தகம் உதவியாக இருக்கும் முடியும் என்று உணர்ந்தேன், அதன் விளைவாக இந்த புத்தகம் உங்கள் கையில் உள்ளது.

நான் ஒரு தத்துவவாதியோ, இறையியலாளனோ, மொழியியலாளனோ அல்ல. தேவன் தம்முடைய வேலையைச் செய்வதற்குத் தேவையான அனைத்து உயர்மட்ட தாலந்துகளையும் கூட்டிச் சேர்த்தார். அந்த வகையில், சகோதரி கிரேஸ் ரோஸலின் விஜய் மற்றும் சகோதரி சோ.அனிதா ஜெபராணி ஆகியோர் இணைந்து இந்த புத்தகத்தை மொழிபெயர்த்தனர். இந்த மொழிபெயர்ப்பின் துல்லியத்தை உறுதி செய்வதில் அவர்களின் ஒத்துழைப்பு முக்கிய பங்கு வகித்தது. இந்த மொழிபெயர்ப்பைச் செய்ய எங்களைத் தேர்ந்தெடுத்ததற்காக தேவனுக்கு நன்றி.

இந்த புத்தகம் பயனுள்ளதாக இருப்பதாக நீங்கள் கருதினால், நன்றி செலுத்த விரும்பினால், அதைப் படிக்குமாறு உங்களை வழிநடத்திய ஒரே உண்மையான தேவனுக்கு நன்றி செலுத்துங்கள் மற்றும் இந்த புத்தகத்தை உங்களுக்கு வழங்கிய சகோதர சகோதரிக்கு நன்றி செலுத்துங்கள். இந்த புத்தகம் ஆன்லைனில் இலவசமாக கிடைக்கும் christianityintamil.com. மொழிபெயர்ப்பு பிழை இருப்பதாக நீங்கள் கண்டால், உங்கள் கருத்தை எங்களுக்கு மின்னஞ்சல் செய்யவும் feedback@christianityintamil.com.

– சாமுவேல் ஜேக்கப்.

# பொருளடக்கம்

முகவுரை

1. ஆசிரியரின் முன்னுரை 3

பாகம் ஒன்று - பிரபஞ்சத்தின் அர்த்தத்திற்கு ஆதாரமாக சரி மற்றும் தவறு

1. மனித இயல்பின் சட்டம் 14
2. சில எதிர்ப்புகள் 20
3. சட்டத்தின் யதார்த்தம் 26
4. சட்டத்திற்கு பின் என்ன உள்ளது 31
5. நாம் அசௌகரியம் ஆவதற்கு ஒரு காரணம் உண்டு 37

பாகம் இரண்டு - கிறிஸ்தவர்களின் நம்பிக்கை

1. தேவனைக்குறித்த மாற்றுக் கருத்துக்கள் 44
2. படையெடுப்பு 48
3. அதிர்ச்சியளிக்கக்கூடிய மாற்று வழி 55
4. பூரணமான தவம் 61
5. நடைமுறைக்கேற்ற முடிவு 68

பாகம் மூன்று – கிறிஸ்தவ ஒழுக்கம்

1. ஒழுக்கத்தின் மூன்று பகுதிகள் 76
2. முக்கியமான நற்குணங்கள் 83
3. சமூக ஒழுக்கம் 89
4. ஒழுக்கம் மற்றும் மனோபகுப்பாய்வு 96
5. பாலியல் ஒழுக்கம் 102
6. கிறிஸ்தவ திருமணம் 112
7. மன்னிப்பு 123
8. மிகப்பெரிய பாவம் 129
9. ஈகை 137
10. நம்பிக்கை 142
11. விசுவாசம் 146
12. விசுவாசம் 152

பாகம் நான்கு – திருத்துவக் கோட்பாட்டின் முதல் படிகள்


| | |
|---|---|
| 1. உருவாக்குதல் மற்றும் பெற்றெடுத்தல் | 160 |
| 2. மூன்று-தனிநபர் தேவன் | 167 |
| 3. நேரமும் நேரத்திற்கு அப்பாற்பட்டதும் | 173 |
| 4. நல்ல தொற்று | 178 |
| 5. பிடிவாதமான பொம்மை போர் வீரர்கள். | 183 |
| 6. இரு குறிப்புகள் | 187 |
| 7. நாம் பாசாங்கு செய்வோம் | 190 |
| 8. கிறிஸ்தவம் கடினமானதா அல்லது இலகுவானதா? | 197 |
| 9. விலை கிரயத்தை கணக்கிடுதல் | 203 |
| 10. நல்ல மனிதர்கள் அல்லது புதிய மனிதர்கள். | 208 |
| 11. புதிய மனிதர்கள் | 218 |

# முகவுரை

# 1. ஆசிரியரின் முன்னுரை

இந்தப் புத்தகத்தில் அடங்கியவை எல்லாம் முதலாவதாக வானொலியில் பேச்சுரையாக கொடுக்கப்பட்டவை ஆகும். அதன் பிறகு அவை, மூன்று தனித்தனி புத்தகங்களாக வெளியிடப்பட்டன. அவையாவன, கிறிஸ்தவத்திற்கு ஆதரவான வழக்கு[1], கிறிஸ்தவ ஒழுக்கம்[2] மற்றும் ஆளுமைக்கு அப்பால்[3] என்பவை ஆகும். அச்சடிக்கப்பட்ட பதிவுகளில், நான் ஒலிவாங்கியில்[4] பேசியதைக்காட்டிலும் சிலவற்றை கூடுதலாக இணைத்துள்ளேன். மற்றபடி என்னுடைய உரையை அவை இருந்தவண்ணமாகவே விட்டுவிட்டேன். வானொலியில் கொடுக்கப்படும் ஒரு ''பேச்சு'' என்பது, என்னை பொறுத்தவரையில், முடிந்தமட்டும் ஒரு யதார்த்தமான பேச்சாகவே இருக்கவேண்டும் என்றும், அது ஒரு கட்டுரை சத்தமாக வாசிக்கப்படுவது போல் இருக்கக்கூடாது என்றும் நான் நினைக்கிறேன். ஆதலால், என்னுடைய உரைகளில் நாம் சாதாரணமாக உரையாடும்போது பயன்படுத்தும் எல்லாவிதமான சுருக்கங்களையும் பேச்சுவழக்குகளையும் பயன்படுத்தியிருக்கிறேன். அச்சடிக்கப்பட்ட பதிவுகளில், பேச்சுவழக்கில் நான் கூறியவைகளை எழுத்தின் வடிவில் மீண்டும் வழங்கியுள்ளேன். என்னுடைய உரைகளில், எங்கெல்லாம் ஒரு வார்த்தையின் முக்கியத்துவத்தை என்னுடைய குரலின் அழுத்தத்தினால் தெளிவுபடுத்தி இருக்கிறேனோ, அந்த இடங்களை சாய்வான எழுத்துக்களாக அச்சடித்திருக்கிறேன்[5].



ஆனால் இப்பொழுது, இது ஒரு தவறு என்ற எண்ணத்தின் பக்கமே நான் சாய்கிறேன்– அதாவது, பேச்சுக்கலைக்கும் எழுத்துக்கலைக்கும் நடுவே உண்டான ஒரு விரும்பத்தகாத கலவை இது. ஒரு பேச்சாளர், தன்னுடைய குரலில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை பயன்படுத்துவதன் மூலம்தான், எதையும் வலியுறுத்தவேண்டும். ஏனென்றால் அவருடைய அந்த ஊடகமானது இயல்பாகவே அப்படி ஒரு செயல்முறைக்கு வழிவகுக்கிறது. ஆனால் ஒரு எழுத்தாளர் அதே நோக்கத்துக்காக சாய்வான எழுத்துக்களை பயன்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. அவருக்கு முக்கியமான வார்த்தைகளை, தனியே எடுத்துக்காட்ட, தனக்குரிய சொந்த வித்தியாசமான முறைகள் உள்ளன. அவற்றையே அவர் பயன்படுத்தவேண்டும். இந்தப் பதிவில், நான் சுருக்கமாக சொல்லப்பட்டவைகளை எல்லாம் விரிவுபடுத்தியிருக்கிறேன். மேலும், பெரும்பாலான சாய்வாக எழுதப்பட்ட

1 The Case for Christianity, 1943
2 Christian Behaviour, 1943
3 Beyond Personality, 1945
4 மைக்
5 ஒலிபரப்பப்பட்ட உரைகள் என்ற தலைப்பின் கீழ் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது.

வார்த்தைகளுக்குப் பதிலாக, அவைகள் தோன்றுகிற வாக்கியங்களை, சீரமைத்துள்ளேன். ஆனால் எந்த பிரபலமான, பழக்கப்பட்ட தொனியோடு இருக்கவேண்டும் என்று நான் முதலிலிருந்து எண்ணியிருந்தேனோ, அதை மாற்றாமல் வழங்கியிருக்கிறேன் என்று நம்புகிறேன். மட்டுமல்லாமல், என்னுடைய தலைப்பின் எந்த பகுதிகளிலெல்லாம் பத்து வருடத்துக்கு முன்பைவிட, இப்பொழுது நான் நன்றாகப் புரிந்துகொண்டதாக நினைக்கிறேனோ அல்லது எந்த இடங்களிலெல்லாம் அசல் பதிப்பை, மற்றவர்கள் தவறாக புரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று நினைத்தேனோ, அந்த இடங்களில் சிலவற்றை சேர்த்திருக்கிறேன் அல்லது நீக்கியிருக்கிறேன்.

இரண்டு கிறிஸ்தவ பிரிவுகளுக்கிடையில் எதைத் தேர்ந்தெடுப்பதென்று தயங்கிக் கொண்டிருக்கும் எவருக்கும், நான் எந்தவிதமான உதவியும் வழங்கவில்லை என்று வாசகர் எச்சரிக்கப்படவேண்டியுள்ளது. நீங்கள் ஒரு ஆங்கிளிக்கனாக[1] வேண்டுமா, அல்லது மெத்தடிஸ்டாகவா[2], ப்ரிஸ்பைட்டீரியனாகவா[3], அல்லது ஒரு ரோமன் கத்தோலிக்கராக[4] வேண்டுமா என்று, என்னிடத்திலிருந்து எதையும் கற்றுக்கொள்ளப்போவதில்லை. இவை வேண்டுமென்றேதான் விடுபட்டு இருக்கின்றன. (இப்போது கொடுத்திருக்கிற இந்த பட்டியலைக்கூட, ஆங்கில எழுத்துக்களின் வரிசையின்படிதான் நான் கொடுத்திருக்கிறேன்). என்னுடைய நிலையைக் குறித்து எந்த மர்மமும் இல்லை. நான் இங்கிலாந்து திருச்சபையைச்[5] சார்ந்த ஒரு மிக சாதாரண மனிதன். எந்த வகையிலும் நான் குறிப்பாக உயர்ந்தவனும் அல்ல, தாழ்ந்தவனும் அல்ல, அல்லது வேறு விதமான எதுவுமல்ல. ஆனால் நான் இந்தப் புத்தகத்தில், எவரையும் என்னுடைய சொந்த நிலைக்கு மாற்ற முயற்சிக்கவில்லை. நான் ஒரு கிறிஸ்தவன் ஆனதிலிருந்து, எனக்கு அறிமுகமான, (கிறிஸ்தவத்தின் மீது) நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, நான் செய்யக்கூடிய சிறந்த, ஒருவேளை நான் செய்யக்கூடிய ஒரே சேவை என்னவென்றால், எல்லா கிறிஸ்தவர்களுக்கும், எல்லாக் காலத்திலும் பொதுவாக இருந்த அந்த நம்பிக்கையை, நான் விவரித்துக் காண்பித்து நிலைநாட்டுவதுதான் என்றே நினைக்கிறேன். நான் அவ்வாறாக நினைப்பதற்கு, ஒன்றுக்கும் மேலான காரணங்கள் உண்டு. முதலாவதாக, கிறிஸ்தவர்களில், ஒருவரிடமிருந்து ஒருவரை பிரிக்கக்கூடிய கேள்விகள் எல்லாம், உண்மையான வல்லுனர்களே ஒழிய வேறொருவரும் எதிர்கொள்ளக்கூடாத, உயர்ந்த இறையியல் மற்றும் பார்க்கப் போனால், திருச்சபையின் வரலாறு சம்பந்தப்பட்ட கருத்துக்கள் அடங்கியுள்ளவைகளாக இருக்கின்றன.

அப்படிப்பட்ட காரியங்களில், நான் ஆழத்திற்குள் செல்லாமல் வெளியே தான் நிற்க வேண்டும். ஏனென்றால், மற்றவர்களுக்கு நான் உதவுவது என்பதைக் காட்டிலும், அதிகமாக எனக்கே இங்கு உதவி தேவைப்படுகிறதாயிருக்கிறது. இரண்டாவதாக,

1 Anglican
2 Methodist
3 Presbyterian
4 Presbyterian
5 Church of England

இப்படிப்பட்ட சர்ச்சையான கருத்துக்களை விவாதிப்பது, ஒரு வெளிநபரை கிறிஸ்தவ மந்தைக்குள் அழைத்து வராது என்பதை, நாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இவைகளைக் குறித்து நாம் எழுதிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருக்கும் வரையில், ஒருவரை நம்முடைய சொந்த ஐக்கியத்திற்குள் ஈர்ப்பதைக் காட்டிலும், அவர் எந்த கிறிஸ்தவ ஐக்கியத்திற்குள்ளும் நுழைவதை, அதிகமாய் தடுக்கவே செய்கிறோம். ஒரே தேவன் உண்டு, அவருடைய ஒரே குமாரன் இயேசு கிறிஸ்து தான் என்கிற நம்பிக்கைக்குள் ஏற்கனவே வந்துவிட்டவர்களின் முன்னிலையில் தவிர, வேறு எங்கும் நம்முடைய பிரிவினைகள் விவாதிக்கப்படக்கூடாது. கடைசியாக நான் பெற்றுக் கொண்ட எண்ணம் என்னவென்றால், மிகவும் அதிகமான, அதிக திறமை வாய்ந்த ஆசிரியர்கள் எல்லோரும், பாக்ஸ்டர்[1] ''வெறும்'' கிறிஸ்தவம் என்று அழைக்கிறாரே, அதை பாதுகாப்பதைக் காட்டிலும், இப்படிப்பட்ட சர்ச்சைக்குரிய காரியங்களில்தான் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதே ஆகும். எந்தப் பகுதியில் நான் என்னுடைய சிறப்பான சேவையைச் செய்யமுடியும் என்று நினைத்தேனோ, அந்தப் பகுதி தான், மற்றவர்களால் பெரிதும் தெரிந்து கொள்ளப்படாததாய் இருக்கிறது. ஆகையால், இயல்பாகவே நான் அந்தப் பகுதிக்குச் சென்றேன்.

நான் அறிந்தவரையில், இவை மட்டுமே என்னுடைய நோக்கங்களாய் இருக்கின்றன. மேலும், சில சர்ச்சைக்குரிய விஷயங்களைக் குறித்து நான் மௌனமாய் இருப்பதை வைத்து, மனிதர்கள் சில கற்பனையான அனுமானங்களை உருவாக்காமல் இருப்பார்களென்றால், நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். உதாரணத்துக்கு, நான் அப்படி மௌனமாக இருக்கிறேன் என்பதற்காக, நான் மதில் மேல் பூனை போல் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் என்று அர்த்தம் அல்ல. சில வேளைகளில் நான் அவ்வாறாக இருக்கக்கூடும். கிறிஸ்தவர்களுக்கு நடுவே சில விஷயங்களில் கேள்விகள் உண்டு, அவைகளுக்கு என்னிடத்தில் பதில் இல்லை என்றே நான் நினைக்கிறேன். சில கேள்விகளுக்கு என்னால், எப்போதுமே பதில் தரமுடியாமல் போகலாம். அப்படி ஒரு கேள்வியை நான் கேட்கும்போது, ஒரு மேலான உலகத்தில் கூட, (எனக்குத் தெரிந்தமட்டும்) என்னை விட மிகவும் மேன்மையான கேள்வியாளருக்கு கொடுக்கப்பட்ட பதிலான: ''உனக்கென்ன? நீ என்னைப் பின்பற்றி வா'', என்ற பதிலே எனக்கும் கொடுக்கப்படலாம். ஆனால் சில கேள்விகள் உண்டு, அதற்கு நிச்சயமாகவே மதிலின் ஒரு புறத்தில் தான் நான் இருக்கிறேன், என்றாலும், அதைக் குறித்து நான் ஒன்றும் சொல்லுவதில்லை. ஏனென்றால், நான் ''என்னுடைய மார்க்கம்'' என்பதைக் குறித்து விளக்கி எழுதாமல், ''வெறும்'' கிறிஸ்தவம் என்பதையே விளக்கி எழுதியிருக்கிறேன். எனக்குப் பிடித்தாலும் சரி, பிடிக்காவிட்டாலும் சரி, அது ''வெறும்'' கிறிஸ்தவமாகத்தான் இருக்கிறது, நான் பிறப்பதற்கு வெகு முன்பாகவும் அது அப்படியேதான் இருந்தது.

1 Richard Baxter

கிறிஸ்து கன்னியின் வயிற்றில் அவதரித்தார் என்பதைத் தவிர, கிருபை பெற்ற கன்னி மரியாளைக் குறித்து, நான் வேறு எதுவும் சொல்லுவதில்லை என்பதை வைத்து, சில மனிதர்கள் ஆதாரமற்ற முடிவுகளுக்கு வந்து விடுகிறார்கள். ஆனால் நான் அப்படி செய்யாமல் இருப்பதற்குரிய காரணம் மிகவும் வெளிப்படையாகவே தெரிகிறது அல்லவா? நான் அதைக் குறித்து சற்று அதிகம் பேசினாலே, அது உடனடியாக மிகவும் சர்ச்சைக்குரிய பகுதிகளுக்கு என்னை அழைத்துச் சென்றுவிடுகிறது. கிறிஸ்தவர்களுக்கு நடுவே உள்ள இந்த சர்ச்சையைத் தவிர, மிகவும் மென்மையாக கையாளப்பட வேண்டியது வேறு எதுவும் அல்ல. அந்தத் தலைப்பின் மேல் உள்ள ரோமன் கத்தோலிக்க நம்பிக்கையானது, மற்ற எல்லா மத நம்பிக்கைகளுக்கும் உள்ள, அந்த சாதாரண தீவிர பக்தியினால் மட்டும் கட்டப்படாமல், (மிக இயற்கையாகவே வரக்கூடிய) தனித்தன்மை வாய்ந்த உணர்ச்சியினாலும், ஒரு மனிதனுக்கு அவனுடைய தாய் அல்லது அவன் காதலியின் சுயமரியாதை ஆபத்துக்குள்ளாகும்போது எழக்கூடிய, அந்த வீரமிக்க உணர்ச்சியினாலும் கட்டப்பட்டிருக்கிறது.

ஆதலால், அவர்களுடைய பார்வைக்கு ஒரு அயோக்கியனாகவும், மதவெறி பிடித்தவனாகவும் தெரியாமல், வேறு எவ்விதத்திலும் அவர்களோடு கருத்து வேறுபாடு கொள்வது, மிகவும் கடினமான ஒன்றாகும். மாறாக, இந்த தலைப்பின் மேல் உள்ள, இதற்கு எதிரான ப்ரொட்டஸ்டண்ட் [1] நம்பிக்கையானது, எல்லாவிதமான ஏகத்துவத்தின்[2] (ஒரே தெய்வ வழிபாடு) அடிவேருக்குச் செல்லக்கூடிய உணர்ச்சிகளை எழுப்புகிறது. தீவிரமான ப்ரொட்டஸ்டண்டுகளைப் பொறுத்தவரையில், சிருஷ்டிகருக்கும் சிருஷ்டிப்புக்கும் (அது எவ்வளவு புனிதமானதாக இருந்தாலும்) உள்ள வித்தியாசம் ஆபத்துக்குள்ளாகி இருப்பதாக– அதாவது பல தெய்வ வழிபாடு மீண்டும் தலை தூக்கி இருப்பதாக இது காணப்படுகிறது. எனவே அவர்களுடைய பார்வைக்கு, ஒரு மதவெறி பிடித்தவனைக்காட்டிலும் மோசமான– ஒரு உருவ வழிபாடு செய்கிற ஒரு பேகனாகத் [3] தெரியாமல், கருத்து வேறுபாடு கொள்ளுவது மிகவும் கடினமானது. ''வெறும்'' கிறிஸ்தவம் என்ற ஒரு புத்தகத்தைச் சிதைக்க, எந்தத் தலைப்பாவது நம்பிக்கைக்குரியதாய் இருக்குமென்றால்– கன்னியின் மகன் தான் தேவன் என்ற, அந்த நம்பிக்கைக்குள் இன்னும் வராத சிலருக்கு, இந்த புத்தகத்தின் வாசிப்பை, எந்தத் தலைப்பாவது முற்றிலும் லாபமற்றதாய் ஆக்கும் என்றால்– நிச்சயமாக அது இதுதான்.

வழக்கத்திற்கு மாறாக, இந்த சர்ச்சைக்குரிய கருத்துக்களை குறித்த என்னுடைய மௌனத்தை வைத்து, நான் அவைகளை முக்கியமாக நினைக்கிறேனா அல்லது முக்கியத்துவம் இல்லாதவைகளாக நினைக்கிறேனா என்று, உங்களால் ஒரு முடிவுக்கு வரமுடியாது. ஏனென்றால், இதுவே ஒரு சர்ச்சைக்குரிய கருத்தாகும். கிறிஸ்தவர்கள் கருத்து வேறுபாடு கொள்ளுகிற ஒரு விஷயம் எதுவென்றால், அது கருத்து வேறுபாடுகளுக்குரிய முக்கியத்துவத்தை குறித்ததே ஆகும். இரண்டு வெவ்வேறு

1 protestant
2 monotheism
3 pagan

பிரிவுகளைச் சார்ந்த இரண்டு கிறிஸ்தவர்கள் வாதாட ஆரம்பிக்கும்போது, வெகு சீக்கிரத்திலேயே ஒருவர், ஒருசில கருத்து ''உண்மையாகவே முக்கியமானதுதானா?'' என்றும், அதற்கு மற்றொருவர், ''முக்கியமானதா? அது மிகவும் அவசியமானதாகும்!'' என்றும் சொல்லக்கூடும்.

நான் என்ன விதமான புத்தகத்தை எழுத முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதைதெளிவுபடுத்துவதற்காகவே, இவைகளையெல்லாம்சொல்லுகிறேனேயொழிய, என்னுடைய சொந்த நம்பிக்கைகளை மூடி மறைப்பதற்காகவோ அல்லது அந்த பொறுப்பைத் தவிர்ப்பதற்காகவோ அல்ல. அவைகளைக் குறித்து நான் முன்பே சொன்னதைப்போல, எந்த ஒரு ஒளிவுமறைவும் இல்லை. (1759ல் வெளியான ஆங்கில நாவலாகிய ட்ரைஸ்ட்ராம் ஷாண்டி[1] என்ற புத்தகத்தின் கதாபாத்திரமான) அங்கிள் டோபி[2] சொல்லுவதைப் போல: ''அவை பொதுவான ஜெபப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன''.

இங்குள்ள நெருக்கமான ஆபத்து எதுவென்றால், இங்கிலாந்து திருச்சபைக்கோ அல்லது (அதைக் காட்டிலும் மோசமாக) எனக்கோ உள்ள தனிப்பட்ட கருத்துக்களை, நான் பொதுவான கிறிஸ்தவம் என்று முன்வைத்து விடக்கூடாது என்பதே. இதிலிருந்து, பாதுகாத்துக் கொள்ளும் ஒரு முயற்சியாக, இப்போதுள்ள பகுதி இரண்டின் அசல் கையெழுத்துப் படிவத்தை, நான்கு குருமார்களுக்கு (ஆங்கிளிகன், மெத்தடிஸ்ட், ப்ரிஸ்பைடீரியன், ரோமன் கத்தோலிக்) அனுப்பி அவர்களுடைய விமர்சனத்தைக் கேட்டேன். மெத்தடிஸ்ட் பிரிவைச் சேர்ந்தவர், நான் விசுவாசத்தைக் குறித்து அதிகமாக சொல்லவில்லை என்று நினைத்தார். ரோமன் கத்தோலிக்கத்தை சேர்ந்தவர், மற்றவைகளோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, பரிகாரத்தை குறித்த கோட்பாட்டு விளக்கங்களின், முக்கியத்துவம் இன்மையைக் குறித்து, நான் அதிக தூரம் சென்றுவிட்டதாகக் கருதினார். மற்றபடி நாங்கள் ஐந்து பேரும் உடன்பட்டு இருந்தோம். (இந்த புத்தகத்தின்) மற்ற பகுதிகளை நான் இந்த வகையிலே பரிசோதிக்கவில்லை. ஏனென்றால், அவைகளைக் குறித்து கிறிஸ்தவர்களுக்குள்ளே வேறுபாடுகள் எழும்பக்கூடும் என்றாலும், அவைகள் தனிப்பட்ட நபர்கள் அல்லது குறிப்பிட்ட சிந்தனை முறைகளுக்குரிய வித்தியாசங்களே தவிர, கிறிஸ்தவ பிரிவுகளுக்கு நடுவே உள்ள வித்தியாசங்கள் அல்ல.

எனக்கு எழுதப்பட்ட விமர்சனங்களையும், எண்ணிலடங்காத கடிதங்களையும் வைத்து நிதானித்துப் பார்த்தவரையில், இந்த புத்தகம் மற்ற காரியங்களில் எவ்வளவு குறையுள்ளதாக இருந்தாலும், அது குறைந்தபட்சம் எல்லோரும் உடன்பட்ட, ஒரு பொதுவான, ஒரு மையமான, ஒரு ''வெறும்'' கிறிஸ்தவத்தை வழங்குவதில் வெற்றி பெற்றது. இந்த வகையிலே, சர்ச்சைக்குரிய கருத்துகளை எல்லாம் நீக்கிவிட்டால், நமக்கு ஒரு மேலோட்டமான, மோதல் இல்லாத, மிகப் பொதுவான காரணிகள் மட்டுமே

1 Tristram Shandy
2 Uncle Toby

மிஞ்சும் என்ற அந்தக் கோணத்தின் சத்தத்தை அடக்குவதற்கு, இது சற்று உதவியாக இருக்கக்கூடும். அந்த மிகப் பொதுவான காரணிகள், நேர்மறையானவைகள் மட்டுமல்ல, மாறாக கடுமையானவைகளாகவும் இருக்கின்றன. இவை, எல்லா கிறிஸ்தவம் அல்லாத நம்பிக்கைகளிலிருந்தும், ஒரு அகன்ற பள்ளத்தினாலே வகுக்கப்பட்டவைகளாகவும், இவைகளோடு கிறிஸ்தவத்திற்குள் இருக்கிற, எப்பேர்பட்ட மோசமான பிரிவினைகளும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட முடியாதவைகளாகவும் இருக்கின்றன.

நாம் மீண்டும் இணைக்கப்பட வேண்டியதன் காரணத்துக்கு, நான் நேரடியாக உதவி செய்யாமல் போயிருந்தாலும், நாம் ஏன் மீண்டும் இணைக்கப்பட வேண்டும் என்பதின் காரணத்தை, இப்பொழுது நான் ஒருவேளை தெளிவுபடுத்தி இருக்கிறேன் என்று நினைக்கிறேன். என்னுடைய சபை அல்லாத மற்ற சபைகளிலுள்ள, தங்கள் நம்பிக்கையில் மிகுந்த தீர்மானத்துடன் இருக்கின்ற உறுப்பினர்களின், நன்கு அறியப்பட்ட லத்தீன சொற்றொடரான ''ஓடியம் தியாலஜிகம்''[1], அதாவது ''இறையியல் சம்பந்தப்பட்ட வெறுப்பை'' நான் மிகக் குறைவாகவே சந்தித்திருக்கிறேன். இங்கிலாந்து திருச்சபைக்கு உள்ளிருந்தும் சரி அல்லது அதற்கு வெளியில் இருந்தும் சரி, எல்லைக்கோட்டில் நிற்கக்கூடிய மனிதர்களிடமிருந்துதான், விரோதம் மிகவும் அதிகமாக வருகிறது –அதாவது எந்த ஒரு ஐக்கியத்திற்கும் சரியான முறையிலே கீழ்படியாத மனிதர்களிடமிருந்து. இது என்னை, ஒரு புதிரான வகையிலேயே ஆறுதல்படுத்துகிறதாகக் காண்கிறேன். தனக்கு உண்மையாக இருக்கிற பிள்ளைகள் தாபரிக்கிற மையப் பகுதியில் தான், அந்த ஒவ்வொரு ஐக்கியமும், மற்ற எல்லா ஐக்கியத்தோடும், கோட்பாட்டளவில் இல்லாவிட்டாலும் கூட, ஆவியிலே மிகவும் நெருங்கி இருக்கிறது. அந்த ஒவ்வொரு ஐக்கியத்தின் மையத்தில்தான், ஏதோ ஒன்று, அல்லது யாரோ ஒருவர் இருக்கிறார், அவர் எல்லா நம்பிக்கைகளின் பிரிவினைக்கும் எதிராக, எல்லா சுபாவங்களின் வித்தியாசங்களுக்கும் எதிராக, ஒருவரை ஒருவர் துன்பப்படுத்தின எல்லா நினைவுகளுக்கும் எதிராக, ஒரே குரலோடு பேசுகிறார் என்பதை இது உணர்த்துகிறது.

கோட்பாடுகளை குறித்த என்னுடைய புறக்கணிப்புகள் இவ்வளவுதான் போலிருக்கிறது. ஒழுக்கங்களைப் பற்றிய விஷயங்களை கையாளுகிற, இந்த புத்தகத்தின் பகுதி மூன்றிலும், நான் சில காரியங்களை மௌனத்தோடே கடந்து சென்றுவிட்டேன். ஆனால் அது ஒரு வேறுபட்ட காரணத்திற்காகவே. முதலாம் உலகப் போரில் நான் ஒரு காலாட்படை வீரனாக சேவை செய்த காலத்திலிருந்தே, முன்னணியில் இருக்கிற மனிதர்களுக்கு உபதேசித்துக் கொண்டு, தாங்கள் மட்டும் சொகுசாகவும் வசதியாகவும் வாழுகிற சில மனிதர்களை நான் அறவே வெறுக்கிறேன். இதனால்தான், நான் நேரடியாக எதிர் கொள்ளாத சோதனைகளைக் குறித்து அதிகமாக பேசுவதற்கு, எனக்குத் தயக்கம் உண்டு. எந்த ஒரு மனிதனும், எல்லா விதமான

1 odium theologicum

பாவத்திற்கும் சோதிக்கப்பட்டிருக்க மாட்டான் என்று நான் நினைக்கிறேன். மனிதர்களை சூதாட வைக்கக்கூடிய உந்துதல்கள் என்னுடைய வடிவமைப்பிலிருந்து விடுபட்டு இருக்கின்றன. ஆனால் சந்தேகமின்றி, இதற்குரிய விலையை, நான் சில நல்ல உந்துதல்களின் குறைபாடு எனக்குள்ளே அதிகமாகவும் அல்லது வக்கிரமாகவும் இருப்பதின் மூலம் செலுத்தியுள்ளேன். ஆதலால் அனுமதிக்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்படாத சூதாட்டம், என்பதைக் குறித்த என்னுடைய ஆலோசனையை கொடுப்பதற்கு நான் தகுதியுள்ளவன் அல்ல என்றே நான் நினைக்கிறேன். அப்படி அனுமதிக்கப்பட்டது என்று ஏதும் இருக்குமென்றாலும், அதைக் குறித்துக்கூட தெரிந்ததாக நான் எண்ணமாட்டேன். கருத்தடையைக் குறித்தும் நான் எதுவும் கூறவில்லை. நான் ஒரு பெண்ணோ அல்லது ஒரு திருமணமான ஆணோ அல்லது ஒரு போதகரோ அல்ல. வலிகள், ஆபத்துகள் மற்றும் செலவுகள் ஆகியவற்றைக் குறித்துக் கவலையற்றவனாய் இருந்ததால், அவைகளைக் குறித்தும் அடித்துச் சொல்லுகிற இடத்தில் நான் இல்லை என்றே நினைக்கிறேன்; அதாவது எந்தவிதமான போதகப் பணியிலும் நான் இல்லை என்பதே, நான் அவ்வாறாகச் செய்ய (அவைகளைக் குறித்து பேசாமல் இருக்க), என்னைக் கட்டாயப்படுத்தியது.

கிறிஸ்தவத்தின் பொதுவான கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட ஒரு மனிதனை, கிறிஸ்தவன் என்ற வார்த்தையைக் கொண்டு நான் அழைத்ததற்கு எதிராக, மிகவும் ஆழமான எதிர்ப்புகள் உணரப்பட்டு, வெளிப்படுத்தப்பட்டு இருக்கின்றன. சில மனிதர்கள் இவ்வாறாக கேட்கிறார்கள்: ''யார் கிறிஸ்தவன் என்றும், யார் கிறிஸ்தவன் இல்லை என்றும் சொல்லுவதற்கு நீ யார்?'' அல்லது ''இந்த கோட்பாடுகளை நம்பாத பல மனிதர்கள், அவற்றை நம்புகிறவர்களைப் பார்க்கிலும், மிகவும் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாகவும், கிறிஸ்துவினுடைய ஆவிக்கு மிகவும் நெருங்கியவர்களாகவும் இருக்கிறார்கள் அல்லவா?'' என்று. இந்த எதிர்ப்பு, ஒரு வகையிலே மிகவும் சரியானதாகவும், மிகவும் பெருந்தன்மையுள்ளதாகவும், மிகவும் ஆவிக்குரியதாகவும், மிகவும் உணர்ச்சிகரமானதாகவும் இருக்கிறது. இதற்கு எல்லா வகையான மனதுக்கு இனிய குணங்களும் உண்டு, ஆனால் அது பயனுள்ளது என்பதைத் தவிர. இந்த எதிர்ப்பாளர்கள் விரும்புவதைப் போல, நாம் வார்த்தைகளை, பேரழிவுகள் இல்லாமல் சாதாரணமாக பயன்படுத்த முடியாது. ஒரு மிக மிக முக்கியத்துவம் குறைந்த ஒரு வார்த்தையினுடைய வரலாற்றின் மூலம், இதை நான் தெளிவுபடுத்த முயற்சிக்கிறேன்.

''பெரிய மனிதர்''[1] என்கிற வார்த்தை முதலில், ஒன்றை அடையாளம் கண்டுகொள்வதின் அர்த்தத்திலேயே வழங்கப்பட்டது– அதாவது மரபு சின்னங்கள் பொருந்திய மேலங்கியையும், சில நிலங்களை சொத்தாகவும் வைத்திருந்தவர்களை அவ்வாறாக அழைத்தனர். நீங்கள் ஒருவரை, ஒரு பெரிய மனிதர் என்று அழைத்தபோது, அவரைக் குறித்து புகழ்ந்து கூறாமல், அவரைக் குறித்த ஒரு உண்மையை அறிக்கை செய்தீர்கள். நீங்கள் அவர் ஒரு பெரிய மனிதன் அல்ல என்று கூறியிருப்பீர்களென்றால்,

1 gentleman

அவரை நீங்கள் அவமதிக்கவில்லை, மாறாக அவரைக் குறித்த ஒரு தகவலை வழங்கியிருக்கிறீர்கள். ஜான் ஒரு பொய் பேசுபவர் மற்றும் ஒரு பெரிய மனிதர் என்று நாம் கூறும்போது, அதில் எந்தவித முரண்பாடும் இல்லை. அதாவது இப்பொழுது நாம் சொல்லக்கூடிய வகையில், ஜேம்ஸ் ஒரு முட்டாள் மற்றும் ஒரு எம்.ஏ பட்டதாரி என்று கூறுவதைப் போல. ஆனால், பிறகு சில மனிதர்கள் வந்தார்கள், அவர்கள் மிகவும் சரியாக, பெருந்தன்மையாக, ஆவிக்குரிய வகையிலே, உணர்ச்சிமிக்க, எல்லாமாகவும் இருக்கின்ற, ஆனால் எந்த வகையிலும் பயனில்லாத வகையிலே, இவ்வாறாகக் கூறினார்கள், ‘‘ஓ! ஒரு பெரிய மனிதனைக் குறித்த மிக முக்கியமான விஷயம், நிச்சயமாக அவனுடைய மரபுச் சின்னங்கள் பொருந்திய அந்த மேலங்கியோ, அந்த நிலமோ அல்ல. மாறாக, அவனுடைய நடத்தை தானே. உண்மையாகவே பெரிய மனிதனாக நடந்து கொள்ளுகிற ஒருவர் தான், நிச்சயம் ஒரு பெரிய மனிதனாக இருக்கமுடியும். நிச்சயமாக அந்த வகையிலே, எட்வர்ட் என்பவர், ஜானைக் காட்டிலும் மேலான, ஒரு உண்மையான பெரிய மனிதனாக இருக்கிறார் அல்லவா?’’ என்று.




அவர்கள் சரியான அர்த்தத்தில் தான் கூறினார்கள். மதிப்பிற்குரியவராகவும், நாகரீகமானவராகவும், துணிவுமிக்கவராகவும் இருப்பது, நிச்சயமாகவே, சின்னங்கள் பொருந்திய மேலங்கியை கொண்டிருப்பதைக் காட்டிலும், மிகவும் மேன்மையானது தான். ஆனால் இவை இரண்டும், ஒன்றல்ல. சொல்லப்போனால், இது எல்லாராலும் ஒத்துக்கொள்ளப்பட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. ஒருவரை ஒரு பெரிய மனிதன் என்று அழைப்பது, இந்த புதிய, சுத்திகரிக்கப்பட்ட அர்த்தத்தில், ஒருவரை குறித்த தகவலை வழங்குவதாக இல்லாமல், மாறாக ஒருவரைப் புகழுகிற ஒரு வழியாக இருக்கிறது. ஒருவர் பெரிய மனிதன் அல்ல என்று மறுப்பது, சாதாரணமாக அவரை அவமதிப்பதாக அமைகிறது. ஒரு வார்த்தை, ஒருவரைக் குறித்த விளக்கத்தை தருவதாக இருப்பதை நிறுத்திவிட்டு, வெறும் புகழ்ச்சிக்குரிய ஒரு வார்த்தையாக பயன்படுமென்றால், அது அந்தப் பொருளைக் குறித்த உண்மையை சொல்லுவதாக நீடிக்காது. அது அந்த பொருளைக் குறித்துப் பேசுபவருடைய அணுகுமுறையையே தெரிவிக்கிறது. (உதாரணமாக ஒரு நல்ல உணவு என்பது அதைக் குறித்துப் பேசுபவருக்குப் பிடித்த ஒரு உணவு என்கிற அர்த்தத்தையே கொடுக்கிறது). ஒரு பெரிய மனிதர் என்கிற வார்த்தை, அதனுடைய பழைய கரடுமுரடான பொருளுக்குரிய அர்த்தத்திலிருந்து,

புனிதமான, சுத்திகரிக்கப்பட்ட அர்த்தத்துக்கு மாறிய பிறகு, அது அதைக் குறித்து பேசுபவருக்கு பிடிக்கிற ஒரு மனிதர், என்கிற அர்த்தத்துக்கு மேலாக வேறொன்றையும் வழங்கவில்லை. இதன் விளைவாக, பெரிய மனிதர் என்கிற அந்த வார்த்தை, இப்பொழுது ஒரு பிரயோஜனமற்ற வார்த்தையாகிவிட்டது. அங்கீகாரத்தை உணர்த்துகிற வார்த்தைகள், ஏற்கனவே ஏராளமாக நம்மிடத்தில் இருக்கின்றன. ஆதலால், அந்த வார்த்தை அந்த பிரயோஜனத்திற்கு அவசியமற்றதாகிவிட்டது. மற்றொருபுறம், யாராவது ஒருவர் (உதாரணத்துக்கு ஒரு வரலாற்று படைப்புக்காக), அந்த வார்த்தையை அதனுடைய பழைய அர்த்தத்தில் பிரயோஜனப்படுத்த விரும்புவாரென்றால், அதற்குரிய விளக்கங்களைக் கொடுக்காமல் அவரால் அதைச் செய்யமுடியாது. அந்த நோக்கத்திற்காக அதை பிரயோஜனப்படுத்த முடியாதபடி, அது பாழாக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது கிறிஸ்தவன் என்ற வார்த்தையையும், மனிதர்கள் புனிதமாகவும், சுத்திகரிக்கப்பட்ட அர்த்தத்திலும் அல்லது அவர்கள் சொல்லுவதைப் போல, ''ஆழமான'' அந்த அர்த்தத்திலும் உபயோகப்படுத்துவதற்கு நாம் அனுமதித்துவிட்டால், அதுவும் வெகு சீக்கிரத்திலேயே, ஒரு பயனற்ற வார்த்தையாகிவிடும். சொல்லப்போனால், முதலாவது கிறிஸ்தவர்களே அதை யாருக்கும் உபயோகப்படுத்த முடியாதபடி ஆகிவிடும். ஆழமான அர்த்தத்தில், கிறிஸ்துவின் ஆவியானவருக்கு மிகவும் நெருக்கமாக யார் இருக்கிறார் என்றும், யார் இல்லை என்றும் கூறுவது நமக்கு உரியது அல்ல. மனிதர்களுடைய இருதயத்திற்குள் நம்மால் பார்க்க முடிவதில்லை. யாரையும் நம்மால் நியாயம் தீர்க்க முடியாது, மேலும் அப்படி நியாயம் தீர்ப்பதற்கு, நாம் உண்மையில் தடை செய்யப்பட்டு இருக்கிறோம்.

இந்த சுத்திகரிக்கப்பட்ட அர்த்தத்தில், எந்த மனிதனையும் ஒரு கிறிஸ்தவன் என்றும், கிறிஸ்தவன் அல்ல என்றும் நாம் கூறுவது, ஒரு கொடுமையான ஆணவம் நிறைந்த செயலாய் இருக்கும். ஆதலால், எல்லோரும் அறிந்த வண்ணம், ஒருபோதும் பிரயோஜனப்படுத்த முடியாத ஒரு வார்த்தை, மிகவும் பயனுள்ள வார்த்தையாக இருக்கப்போவதில்லை. அவிசுவாசிகள் நிச்சயமாக, எந்த சந்தேகமுமின்றி, அந்த வார்த்தையை அதன் சுத்திகரிக்கப்பட்ட அர்த்தத்தில் மிகவும் உற்சாகத்தோடே பயன்படுத்துவார்கள். அது அவர்களுடைய வாயில், வெறும் புகழ்ச்சிக்காக பயன்படுத்துகிற ஒரு வார்த்தையாக மாறிவிடும். எவரையும் ஒரு கிறிஸ்தவன் என்று அழைக்கும்போது, அவர் ஒரு நல்ல மனிதன் என்ற அர்த்தத்திலேயே, அவர்கள் அழைக்கத் தொடங்கி விடுவார்கள். ஆனால் அந்த வழியிலே அந்த வார்த்தையை பிரயோஜனப்படுத்துவது, அந்த மொழியை எந்த வகையிலும் வளமாக்கப் போவதில்லை. ஏனென்றால், ஏற்கனவே நமக்கு ''நல்ல'' என்கிற வார்த்தை இருக்கிறது. இப்படி இருக்கையிலே, கிறிஸ்தவன் என்கிற வார்த்தை, எந்த ஒரு உண்மையான பிரயோஜனமான நோக்கத்துக்கும் பயன்படும் என்ற நிலையிலிருந்து, பாழாகிப் போய்விட்டிருக்கும்.

ஆதலால், நாம் அந்த வார்த்தையை, அதனுடைய அசல், தெளிவான அர்த்தத்திலேயே கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவேண்டும். கிறிஸ்தவர்கள் என்ற அந்தப் பெயர் முதலாவதாக, அந்தியோகியாவில் (அப்போஸ்தலருடைய நடபடிகள் 11:26) இருந்த ''சீஷர்களுக்கு''– அதாவது, அப்போஸ்தலர்களுடைய போதனைகளை ஏற்றுக்கொண்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அந்தப் போதனையினால் பயனடைந்தவர்களுக்கு மட்டுமே அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டது என்ற வரையறையைக் குறித்து, எந்த கேள்வியும் இல்லை, அதுதான் சரியானதும் கூட. சீஷன் என்கிற தகுதியை மிகவும் குறைவாகவே திருப்தி செய்த ஒருவராக இருந்தாலும், அவரைத் தாண்டி ஏதோ ஒரு சுத்திகரிக்கப்பட்ட, புனிதமான, உள்ளான நிலையில், கிறிஸ்துவினுடைய ஆவிக்கு மிகவும் நெருங்கி இருக்கிற ஒருவருக்கு அந்தப் பெயர் பயன்படுத்தப்படும் என்கிற கேள்வியே இங்கு இல்லை. இந்தக் கருத்து, இறையியல் சார்ந்ததோ அல்லது ஒழுக்கம் சார்ந்ததோ அல்ல. இங்குள்ள ஒரே கேள்வி என்னவென்றால், எது சொல்லப்படுகிறதோ, அதை நாம் எல்லோரும் புரிந்துகொள்ளும் வண்ணமாக, வார்த்தைகள் பயன்படுத்தப்படுகிறதா என்பதுதான். கிறிஸ்தவ கோட்பாடுகளை ஏற்றுக்கொண்ட ஒரு மனிதன், அதற்குத் தகுதியற்றவனாய் வாழ்கிறானென்றால், அவன் கிறிஸ்தவன் அல்ல என்று கூறுவதைக் காட்டிலும், அவன் ஒரு கெட்ட கிறிஸ்தவன் என்று சொல்லுவது மிகவும் தெளிவாக அதை வெளிப்படுத்துகிறது.

''வெறும்'' கிறிஸ்தவமானது, தற்போதுள்ள ஐக்கியங்களின் நம்பிக்கைக்கு ஒரு மாற்றாக இங்கு முன்வைக்கப்படுகிறது என்று, எந்த வாசகரும் நினைத்துவிடமாட்டார் என்று நம்புகிறேன். அதாவது சபைவாதம்[1] அல்லது கிரேக்க மரபு வழி[2] அல்லது வேறு எதற்கும் பதிலாக, இதை ஒரு மனிதன் தழுவிக் கொள்ளலாம் என்று நினைத்துவிடக்கூடாது. ஒரு வரவேற்பறையில் உள்ள பல கதவுகள், பல்வேறு அறைகளுக்கு திறப்பதைப்போல இது இருக்கிறது. நான் உங்களை அந்த வரவேற்பறைக்கு அழைத்து வந்துவிட்டால், நான் எதைச் செய்ய முயற்சித்தேனோ அதை நிறைவேற்றிவிடுவேன். ஆனால் வரவேற்பறையில் அல்ல, அந்த அறைகளில் தான், (குளிருக்கு இதமான) நெருப்பும், (இளைப்பாற) இருக்கையும், (உண்ண) உணவும் உண்டு. அந்த வரவேற்பறை, நாம் காத்திருப்பதற்கான ஒரு இடமாய் இருக்கிறது. இங்கிருந்து நாம் பல்வேறு கதவுகளையும் திறந்து பார்க்க முயற்சிக்க வேண்டுமே ஒழிய, இந்த இடத்திலேயே தங்கிவிடக்கூடாது. ஆதலால் அந்த நோக்கத்துக்காக, எப்பேர்பட்ட மோசமான அறையும் (அது எந்த அறையாக இருந்தாலும்) விரும்பத்தக்கது தான் என்றே நான் நினைக்கிறேன்.

சில மனிதர்கள் அந்த வரவேற்பறையில், நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய அவசியத்திற்குள் வரலாம். ஆனால், அதே நேரம் மற்றவர்கள், தாங்கள் எந்த கதவைத் தட்டவேண்டும் என்ற நிச்சயத்தை, உடனே பெற்றுக்கொள்வதையும் நாம் காணலாம்

1 Congregationalism
2 Greek Orthodoxy

என்பது உண்மைதான். இந்த வித்தியாசம் ஏன் ஏற்படுகிறது என்பது எனக்குத் தெரியவில்லையென்றாலும், தேவன், ஒருவருக்கு நன்மை என்று கண்டால் ஒழிய, யாரையும் காத்திருக்க வைப்பதில்லை என்று உறுதியாக அறிவேன். உங்களுடைய அறைக்குள் நீங்கள் செல்லும்போது, நீங்கள் வெகு காலம் காத்திருந்தது, உங்களுக்கு ஏதோ ஒரு வகையில் ஒரு நன்மையை தந்திருக்கிறது என்பதை உணருவீர்கள். அந்த நன்மை நீங்கள் காத்திருக்காமல் போயிருந்தால், உங்களுக்கு கிடைத்திருக்காது என்பதையும் உணருவீர்கள். ஆனால், நீங்கள் அதை காத்திருப்பாகத் தான் நினைக்க வேண்டுமே ஒழிய, முகாமிட்டுத் தங்குவதாக நினைக்கக்கூடாது. நீங்கள் வெளிச்சத்துக்காக தொடர்ந்து ஜெபித்துக் கொண்டேயிருக்க வேண்டும். மேலும், நிச்சயமாக வரவேற்பறையில் கூட, அந்த முழு வீட்டிற்குமுள்ள பொதுவான விதிகளுக்கு, நீங்கள் கீழ்ப்படிய, முயற்சி செய்ய ஆரம்பிக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக, எந்தக் கதவு உண்மையான ஒன்று என்று நீங்கள் கேட்கவேண்டுமே தவிர, கதவின் வண்ணத்தையும், அது செதுக்கப்பட்ட வடிவத்தையும் பார்த்து, எது உங்களுக்குப் பிடித்திருக்கிறது என்று கேட்கக்கூடாது.



எளிதாகச் சொல்ல வேண்டுமானால், நீங்கள் கேட்கவேண்டிய கேள்வி, ''இந்த விதமான சேவை எனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்பதாக இருக்கவே கூடாது. மாறாக, ''இங்குள்ள கோட்பாடுகள் உண்மையா? இங்கு பரிசுத்தம் இருக்கிறதா? என்னுடைய மனசாட்சி இதற்கு நேராக என்னை நகர்த்துகிறதா? இந்தக் கதவை தட்டுவதற்குரிய என்னுடைய தயக்கம், என்னுடைய பெருமையினாலோ அல்லது என்னுடைய வெறும் விருப்பத்தின் அடிப்படையிலோ அல்லது இந்தக் கதவைக் காக்கிறவர் மேலுள்ள, என்னுடைய சொந்த வெறுப்பினாலோ ஏற்படுகிறதா?'' என்றே கேட்கவேண்டும்.

நீங்கள் உங்களுடைய சொந்த அறைக்குப் போய்ச் சேர்ந்துவிட்ட பிறகு, மற்ற வித்தியாசமான கதவுகளைத் தெரிந்துகொண்டவர்கள் மேலும், இன்னும் வரவேற்பறையில் காத்துக் கொண்டிருக்கிறவர்கள் மேலும் அன்பாயிருங்கள். அவர்கள் செய்வது தவறு என்றால், அவர்களுக்கு உங்களுடைய ஜெபம் மிகவும் அதிகமாய்த் தேவைப்படுகிறது. மேலும், அவர்கள் உங்கள் எதிரிகளாக இருந்தால், பின்பு நீங்கள் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்ற கட்டளையின் கீழ் இருக்கிறீர்கள். அந்த முழு வீட்டிற்குமுள்ள பொதுவான விதிகளில் அதுவும் ஒன்று.

# பகுதி ஒன்று

–

# பிரபஞ்சத்தின் அர்த்தத்திற்கு ஆதாரமாக சரி மற்றும் தவறு

# 1. மனித இயல்பின் சட்டம்

மக்கள் வாக்குவாதம் செய்வதை நாம் அனைவரும் கேட்டிருப்போம். சில நேரங்களில் அது வேடிக்கையாகவும், சில நேரங்களில் அது சங்கடமாகவும் இருக்கும். அது எப்படி இருந்தாலும் அதைக் கவனித்து கேட்பதிலிருந்து நாம் சில காரியங்களைக் கற்றுக் கொள்ளலாம். அவர்கள் இவ்வாறாக சொல்லுவார்கள், இதையே மற்றொருவர் செய்திருந்தால் உனக்கு எப்படி இருக்கும்? நான் முதலில் அதில் உட்கார்ந்து இருந்ததால் அந்த இருக்கை என்னுடையது. அவனைத் தனியாக விட்டு விடு அவன் உனக்கு எந்தத்தீங்கும் செய்யவில்லை. நீ ஏன் பிறரை தள்ளி முன் செல்ல வேண்டும்?. நான் உனக்கு என்னுடைய ஆரஞ்சிலிருந்து ஒரு சுளையை கொடுத்ததால் நீயும் உன்னுடையதிலிருந்து எனக்குத்தா. நீ வாக்குறுதி அளித்தபடியே செய், இதைப் போன்று அனைவரும் பேசுகின்றனர் படித்தவர்களும் படிக்காதவர்களும் சிறியவர்களும் வளர்ந்தவர்களும் கூட.

இந்தக்கருத்துக்களில் எல்லாம் என்னை ஆர்வமூட்டியது என்னவென்றால், இதை சொல்லும் மனிதன், மற்றவர் தனக்கு பிடித்தபடி நடக்கவில்லை என்று சொல்லவில்லை. மாறாக தான் எதிர்பார்க்கும் தகுதிக்குரிய நடக்கை மற்றவருக்கு தெரிந்திருக்கவில்லை என்றே கூறுகிறார். அதற்கு பெரும்பாலாக மற்றவரின் பதில், ''உன் அளவுகோலைப்பற்றி எனக்கு எந்தக்கவலையும் இல்லை'' என்பதே. ஆனால் பெரும்பாலும் ஒருவர் எப்பொழுதும் தான் வைத்திருக்கும் அளவுகோலை மீறாதிருக்கவே முயற்சிக்கிறார். ஏதோ ஒரு விசேஷித்த காரணத்துக்காகவே ஒருவர் அதை மீறுகிறார். அல்லது ஒருவர் ஒரு அளவுகோலை மீறும் போது அதற்கு ஏதோ ஒரு விசேஷித்த காரணம் இருப்பது போல நடிக்கிறார். முதலில் இருக்கையைப் பிடித்தவர் அதில் உட்கார கூடாது என்பதற்கு ஏதோ காரணம் இருப்பது போலவும், அந்த ஆரஞ்சு பழ சுளையைக் கொடுக்கும் விஷயத்தில் ஏதோ மாற்றம் இருப்பது போலவும், ஏதோ ஒன்று நடந்ததால்தான் தான் செய்த சத்தியத்தை மீறுவதாகவும் கூறி பாசாங்கு செய்கிறார்.

இவர்களைப் பார்க்கும்போது இருதரப்பினரும் அவர்களது மனதில் ஒரு சட்டதிட்டத்தை, நல்நடத்தையை, ஒழுக்கத்தை என என்ன வேண்டும் என்றாலும் சொல்லிக் கொள்ளுங்கள், அதை வைத்து அதில் உடன்பாடு உள்ளவர்களாக இருக்கின்றனர். அந்த உடன்பாடு அவர்களிடம் உள்ளது. அப்படி இல்லை என்றால் அவர்கள் மிருகங்களைப் போல சண்டையிட்டுக் கொள்வார்கள் அவர்கள் நேருக்கு நேர் மோதிக் கொள்ளாவிட்டாலும் ஒருவர் பிறர் தவறானவர் என்பதை காண்பிக்கச் சண்டையிடுவார்கள். அவ்விரு தரப்பினரும் அவரவர் தங்களுக்கு ஒத்துப்போகும் கருத்துக்களைக் கொண்டவர்களாய் இருப்பதால்தான் மற்றவர் தவறு என்பதைக் காட்ட நினைக்கின்றனர். அப்படி அவர்கள் மனதில் சரி எது என்பதும் தவறு எது என்பதும் இல்லாது இருந்தால், அவர்கள் சரி என்பதை செய்ய நினைப்பதில் அர்த்தம் இல்லாது

போய்விடும். ஒரு கால்பந்து ஆட்டத்திற்கு விதிமுறைகள் இல்லாவிட்டால் ஒருவர் தவறும் போது நாம் அவரைத்தவறாக விளையாடுகிறார் என்று கூற முடியாதது போலவே இது இருக்கிறது.



இப்பொழுதும் சரி தவறு என்பதைக்குறித்த இந்த சட்டம் அல்லது ஒழுங்கு, ‘‘இயற்கையின் நியதி’’ எனப்படுகிறது. இக்காலத்தில் இயற்கையின் நியதி எனக் கூறும் போது பொதுவாக புவியீர்ப்பு விசையையோ அல்லது மரபையோ அல்லது வேதியியல் விதிகளையோ கூறுவோம். ஆனால், பழைய கால சிந்தனையாளர்கள் சரி, தவறு என்பதன் விதிகளை இயற்கையின் நியதி என்று கூறும் போது அவர்கள் மனித இயல்பையேக் குறித்தனர். கருத்து என்னவெனில் எப்படி அனைத்து உடல்களும் புவி ஈர்ப்பு விசையினாலும் அனைத்து உயிரினங்களும் உயிரியல் சட்டத்தினாலும் ஆளப்படுகிறதோ அதுபோலவே மனிதன் என்னும் படைப்பிற்கும் ஒரு விதிமுறை உண்டு. ஆனால், அதில் ஒரு பெரிய வேறுபாடு காணப்படுகிறது. என்னவென்றால், எந்த உடலும் ஒரு புவியீர்ப்பு விசைக்கு கீழ்ப்படிவதையோ கீழ்ப்படியாமல் போவதையோ தேர்ந்தெடுக்க முடியாது. ஆனால், மனிதனால் மனித இயல்புக்கு கீழ்ப்படிவதையோ கீழ்ப்படியாமல் போவதையோ தெரிந்து கொள்ள முடியும்.

இதை வேறு விதமாகவும் சொல்லலாம். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு கணமும் பலவித சட்டத்திற்கு உட்பட்டவனாக உள்ளான். ஆனால், ஒரே ஒரு சட்டத்திற்கு மட்டும் அவன் கீழ்படியாமல் இருக்கலாம். ஒரு உடலாக அவன் புவியீர்ப்பு விசைக்குக் கட்டுப்பட்டவனாக உள்ளான். அதற்கு அவன் தன்னை கீழ்ப்படுத்தாமல் இருக்க முடியாது. நடுவானில் உதவியின்றி அவனை விட்டால் வழியின்றி ஒரு கல் விழுவதைப்போல அவன் விழுந்தாக வேண்டும். ஒரு உயிரினமாக அவன் பல்வேறு உயிரியல் சட்டத்திற்கு உட்பட்டவனாகவே இருக்கிறான். ஒரு மிருகத்தால் விதிகளை எப்படி மீற முடியாதோ அதேபோல் அவனாலும் மீற முடியாது. அதாவது மற்றவைகளோடு அவனுக்கு இருக்கும் பொதுவான விதிகளை அவனால் மீற முடியாது. ஆனால், பிரத்தியேகமாக மனிதனுக்கு உரியதும் பிற விலங்குகளோடும் காய்கறிகளோடும் அல்லது உயிரற்ற பொருள்களோடும் அவனுக்கு பொதுவாய் இராத சட்டத்தை அவன் விரும்பினால் மீறலாம்.

இந்த விதி எல்லா மக்களுக்கும் இயல்பிலேயே தெரிந்திருக்கும் மற்றும் ஒருவருக்கும் இவை கற்பிக்கப்பட வேண்டியதில்லை என்று மக்களால் கருதப்படுவதால், இதனை ‘‘இயற்கையின் நியதி’’ என்று அழைக்கின்றனர். அதற்காக சில வித்தியாசமான மனிதர்களான ‘‘வண்ணக்குருட்டு மக்களும்’’, ‘‘இசைக்கு செவி இல்லாத மனிதர்களும்’’ நம்மிடம் உள்ளது போல இந்த இயற்கை நியதியை அறியாதவர்கள் இங்கும்

அங்குமாக நம்மிடையே இருப்பார்கள் என்னும் அர்த்தம் கொள்ள அவர்கள் சொல்லவில்லை. ஆனால், பொதுவாக மனித இனத்தை எடுத்துக்கொண்டால் பண்புள்ள அல்லது ஒழுக்கமுள்ள நடக்கையைப்பற்றி எல்லோருக்கும் தெளிவிருக்கும் என்று எண்ணினர். அவர்கள் சொல்வது சரி என்றே நானும் நம்புகிறேன். அப்படி அவர்கள் சொல்வது சரியில்லை என்றால் நாம் இரண்டாம் உலக போரைக் குறித்து கூறும் அனைத்தும் பொருள் அற்றதும் முட்டாள்தனமுமாக ஆகிவிடும். ''சரி'' என்று ஒன்று உண்மையிலேயே இல்லாவிட்டால் நாம் போரில் பகைவன் தவறாய் நடக்கின்றான் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது. நாசிப்படையில் இருந்தவர்களுடைய அடி மனதிற்கும் நமக்கு இது தெரிந்தது போலவே தெரிந்திருக்கும். ஆதலால் அவர்கள் அதை செயல்படுத்தி இருக்க வேண்டுமே? ஒருவேளை நமக்கு சரி என தெரிந்திருப்பது அவர்களுக்கு தெரிந்திராவிட்டாலும் அவர்களை எதிர்த்து நாம் போராடி இருக்க வேண்டும் என்று வரும்போது நாம் அதற்காக அவர்களின் சிகை அலங்காரத்தை குறை சொல்லி இருப்பதை போலிருக்கும்.

எனக்குத் தெரிந்து சில மனிதர்கள் சொல்லுகிறார்கள் இயற்கையின் நியதி அல்லது நன்னடக்கை என்பது எல்லா மனிதர்களுக்கும் தெரிந்தது என்பது சரியானதல்ல. ஏனென்றால், ஒவ்வொரு நாகரீகமும் ஒவ்வொரு காலகட்டமும் முற்றிலும் மாறுபட்ட ஒழுக்க நெறிகளைக் கொண்டிருந்தது என்று. ஆனால் அது உண்மையல்ல. அவர்களது ஒழுக்க நெறிகளில் வேறுபாடு இருந்ததே அன்றி முழுமையான மாறுபாடாய் அது இருக்கவில்லை. யாராவது சிறிது சிரமம் எடுத்து எகிப்தியர், பாபிலோனியர், இந்துக்கள், சீனர்கள், கிரேக்கர் மற்றும் ரோமர்களுடைய ஒழுக்க நெறி பற்றிய போதனைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தோன்றும். என்னவெனில், அவை எவ்வளவாக ஒன்றுக்கு ஒன்று ஒத்திருக்கிறது என்றும் எவ்வளவு ஒற்றுமை அவர்களுக்கும் நமக்கும் இருக்கிறது என்றும். அதற்குச் சில ஆதாரங்களை ஒன்றாக சேர்த்து மற்றொரு புத்தகமான ''தி அபாலிஷன் ஆப் மேன்''[1] என்கிற புத்தகத்தில் பின்னிணைப்பாக இணைத்துள்ளேன். ஆனால் இப்பொழுதைய நோக்கத்திற்கு வாசகர்களிடம் ஒரு முற்றிலும் வேறுபட்ட ஒழுக்க நெறி எதைக் குறிக்கும் என யோசித்துப் பார்க்கச் சொல்கிறேன். ஒரு நாட்டை நினைத்துக் கொள்ளுங்கள் அங்கு போரில் புறமுதுகு காட்டி ஓடியதற்கு மெற்றிக்கொள்ளப்படுகின்றனர். அல்லது தன்னிடம் மிகுந்த கருணை கொண்டு நடந்த மனிதர்கள் எல்லோரையும் ஏமாற்றியதால் ஒருவன் பெருமைப்பட்டுக்கொள்கிறான்.

இதையும் கற்பனை செய்து பாருங்கள். ஒரு நாட்டில் இரண்டும் இரண்டும் ஐந்தாம். மனிதர்கள் எவரிடம் சுயநலமாக இருப்பது என்று குறித்து வேறுபட்டிருந்தனர். அது உன் சொந்த குடும்பத்திற்காகவா, அல்லது உடன் நாட்டு மக்களுக்காகவா, அல்லது அனைவருக்காகவா என்று. ஆனால், ஒன்றை அனைவரும் அறிந்திருந்தனர் தன்னை முதலாவதாக முன்னிறுத்தக்கூடாது என்று. சுயநலம் ஒருபொழுதும்

1 The Abolition of Man

மெச்சிக்கொள்ளப்படவில்லை. மனிதர்கள் ஒருவருக்கு ஒரு மனைவி இருக்க வேண்டுமா? அல்லது நான்கு மனைவிகள் இருக்க வேண்டுமா? என்பதில் வேறுபட்ட கருத்து கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் ஒருவன் தனக்கு பிடித்த எந்த பெண்ணையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதில் ஒன்றுபட்டிருந்தனர்.

இதில் மிகவும் குறிப்பிடத்தக்கது என்னவென்றால் எது சரி எது தவறு என்பதில் நம்பிக்கை இல்லாத ஒரு மனிதனை நீங்கள் கண்டுபிடித்தால் ஒரு கணத்தில் அவன் தன் கருத்தை மாற்றிக் கொள்வதையும் காணலாம். அவன் உங்களிடம் செய்த சத்தியத்தை மீறி இருப்பான். ஆனால், நீங்கள் அவனிடம் செய்த சத்தியத்தை மீறும் போது உங்களைக்குறை சொல்லுவான். இது சரியல்ல என்பான் கண் மூடி முழிப்பதற்குள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் இயற்கை நியதி என்றொன்று இல்லையெனில் நியாயமான ஒப்பந்தம் அநியாயமான ஒப்பந்தம் என்பதில் வித்தியாசம் என்ன? அவர்கள் மறைத்து வைத்திருந்த உண்மை பையில் மறைத்து வைத்த பூனை வெளிவந்தது போல வெளிவந்துவிட்டது. அவர்கள் என்ன சொன்னாலும் சரி பிறருக்கு இயற்கை நியதி எப்படி தெரிந்துள்ளதோ அதுபோல அவர்களுக்கும் தெரிந்துள்ளது.

இதைப் பார்த்தால் எது உண்மையில் சரி தவறு என்பதை நம்ப நாம் கட்டாயப்படுத்தப்படுகிறோம். சில நேரம் மனிதர்கள் அதைத்தவறாய் புரிந்து இருக்கலாம். மக்கள் சில நேரம் கணக்குகளை தவறாய் போடுவது போல, – ஆனால் பெருக்கல் வாய்பாட்டை, நம்முடைய சொந்த விருப்பத்துக்கும் கருத்துக்கும் தகுந்தபடி செய்யமுடியாது. இதை ஒற்று கொண்டால் நாம் இப்போது எனது இரண்டாவது கருத்துக்கு செல்வோம் – அது, நம்மில் ஒருவரும் இந்த இயற்கை நியதியை கடைபிடிக்கவில்லை என்பது. இதில் விதிவிலக்குகள் யாரேனும் இருப்பீர்கள் என்றால் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அவர்கள் வேறு எதையாவது போய் வாசிக்கட்டும். ஏனெனில் நான் சொல்ல வருவது எதுவும் அவர்களுக்கு சம்பந்தம் அல்ல. இப்பொழுதும் மிஞ்சி இருக்கும் சாதாரண மனிதர்களிடம் நான் பேசட்டும்: நான் சொல்லப்போவது எதையும் நீங்கள் தவறாகப்புரிந்து கொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். தேவனுக்குத்தெரியும் நான் எவரையும் விடச்சிறந்தவன் என்று பாசாங்கு செய்யப் போவதில்லை என்று. ஒரு உண்மைக்கு நேராக கவனத்தை திருப்பும்படியே கேட்கிறேன். அந்த உண்மை என்னவெனில் இந்த வருடத்திலேயோ இந்த மாதத்திலேயோ அல்லது இதே நாளிலோ பிறரிடம் நாம் எதிர்ப்பார்க்கும் நன்நடக்கைகளை நாமே செய்யத்தவறியிருப்போம். அதற்கு எல்லாவித சாக்குபோக்குகளும் இருந்திருக்கும். நீங்கள் மிகவும் சோர்வாய் இருந்ததால் தான் குழந்தைகளிடம் அடாத முறையில் நடந்து கொண்டீர்கள், நீங்கள் பண நெருக்கடி நேரத்தில் சிறிதே கள்ளத்தனமான வியாபாரம் செய்தீர்கள், (கிட்டத்தட்ட அதை மறந்தும் போய் விட்டீர்கள்.) எவரிடமோ



கொடுத்த உறுதி மொழியை நீங்கள் நிறைவேற்றவே இல்லை. நீங்கள் மிகவும் ஓய்வில்லாதபடி ஓட வேண்டியதால்தான் அதை மீற வேண்டியதாயிற்று. தெரிந்து இருந்தால் செய்திருக்க மாட்டீர்கள். உங்கள் மனைவி அல்லது கணவனிடம் அல்லது அண்ணன் தங்கையிடம் நீங்கள் நடந்து கொண்ட விதம் பற்றி சொன்னால் அவர்கள் எவ்வளவு எரிச்சல் மூட்டக்கூடியவர்கள் என்று எனக்குத்தெரிந்திருந்தால் நான் அதனைக்குறித்து ஆச்சரியப்பட்டிருந்திருக்கமாட்டேன். இதைப் பற்றி ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. நான் மட்டும் வேறா? நானும் அப்படித்தான்.

நானும் இயற்கை நியதியை முழுமையாய் கடைபிடிப்பதில் சிறந்திருக்கவில்லை. இந்த கணம் யாரோ ஒருவர் என்னிடம் வந்து நீங்கள் கடைபிடிப்பதில் தவறிவிட்டீர்கள் என்று என்னிடம் சொன்னால், ஒரு கை முழநீள அளவிற்கு நான் சாக்கு போக்கு சொல்லுவேன். இந்த கணம் அது சரியான சாக்குபோக்குதானா என்பது கேள்வி அல்ல. நான் சொல்ல வரும் உண்மை என்னவென்றால் நமக்கு பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ இயற்கையின் நியதியை எவ்வளவு ஆழமாக நம்புகிறோம் என்பதற்கு இதுவும் ஒரு சான்று என்பதே. நாம் நல்நடக்கையில் தவறிவிட்டோம் என்று ஒருவர் சொல்லும்போது நாம் ஏன் கலக்கமுற்று என்ன சாக்கு சொல்லலாம் என்று யோசிக்கிறோம்? உண்மை என்னவென்றால் நாம் மிக அதிகமாக நல்நடக்கை என்பதை நம்புகிறோம். நம்மை அந்த சட்டம் அல்லது விதி அழுத்துகிறது. நாம் அந்த விதிகளை மீறுகிறோம் என்னும் உண்மையை நம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. அதேநேரம் நாம் அதற்கு பொறுப்பெடுப்பதை தள்ளி விடுகிறோம். உற்று நோக்கினால் நமது தவறான நடவடிக்கைக்காகவே பலவேறு விளக்கங்களை வைத்திருக்கிறோம்.

களைப்பாகவோ, கவலையாகவோ, பசியாகவோ இருப்பதாக நாம் குறிப்பது நமது கெட்ட குணம் மட்டுமே. நம் நல்ல குணத்தை நாமே தாழ்த்திக்கொள்ளுகிறோம்.இங்கு நான் இரண்டு குறிப்புகளைக்கூற விரும்புகிறேன். முதலாவதாக, உலகிலுள்ள எல்லா மனிதர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வழியில் தான் நடக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அதை அவர்களால் ஒதுக்கித்தள்ள முடியவில்லை. இரண்டாவதாக, உண்மையாகவே அவர்கள் அந்த வழியில் நடப்பதும் இல்லை. அவர்களுக்கு இயற்கையின் நியதி தெரியும் அதை அவர்கள் மீறுகிறார்கள். இந்த இரண்டு உண்மைகளும் நம்மையும் நாம் வாழும் பிரபஞ்சத்தையும் பற்றியதுமான தெளிவான எண்ணத்திற்கு எல்லாம் அஸ்திபாரமாக உள்ளது.

# 2. சில எதிர்ப்புகள்

இதுவே அஸ்திபாரமாக இருக்குமானால் நான் சற்று நிறுத்திக் கொண்டு இந்த அஸ்திபாரத்தை உறுதியாக்கி கொள்கிறேன். எனக்கு வந்த சில கடிதங்கள் எனக்கு காண்பித்தது எது என்னவென்றால் பல நல்ல மக்கள் இயற்கை நியதி அல்லது ஒழுக்க நெறி அல்லது நன்னடத்தையின் விதி இவற்றை அறிந்து கொள்ள மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதே. எடுத்துக்காட்டாக இவ்வாறாக சில மக்கள் எனக்கு எழுதுகின்றனர் நீங்கள் ஒழுக்க நெறி என்று கூறுவது நம் இனத்திற்கு உரிய உள்உணர்வு தானே நாம் பிற உள் உணர்வுகளைப்போல வளர்த்துக் கொண்டது தானே என்று. நம் இனத்திற்கு உரிய உணர்வுகள் உண்டு என்பது உண்மை. ஆனால், நான் ஒழுக்க நெறி என்று கூறுவது அது அல்ல. உள்உணர்வுகளால் உந்தப்படுவது என்ன என்பது நம் அனைவருக்கும் தெரியும். அன்னையின் அன்பு அல்லது பாலுணர்வு அல்லது பசியுணர்வு என்பதாக நம் இனத்திற்கு உரிய உணர்வுகள் உண்டு என்பது உண்மை. ஆனால், நான் ஒழுக்க நெறி என்று கூறுவது அது அல்ல. ஆம், சில நேரங்களில் இன உள்உணர்வால் பிறருக்கு உதவ வேண்டும் என்று ஆசைப்படுகிறோம் அதில் சந்தேகம் இல்லை. ஆனால், உதவுவதற்கு ஆசைப்படுகிறேன் என்பதும், எனக்கு பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ உதவியே ஆக வேண்டும் என்னும் உள்உணர்வும் வேறு.

எடுத்துக்காட்டாக, ஆபத்தில் சிக்கியுள்ள ஒரு மனிதனின் குரலைக்கேட்கும் போது உங்களுக்குள் இரு ஆசைகள் வரும். ஒன்று, உதவ வேண்டும் என்ற ஆசை. (இன உணர்வால் வருவது) மற்றொன்று, ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பது(சுய பாதுகாப்பு என்ற எண்ணத்தில் இருந்து வருவது). இதனோடு உங்களுக்குள்ளே இன்னுமொரு உணர்ச்சி வேகம் வரும். இந்த மூன்றாவது காரியம் உதவி செய்ய வேண்டும் என்ற உள்உணர்வை நீ பின்பற்ற வேண்டும் என்று கூறும். அது ஓட வேண்டும் என்ற உணர்ச்சி வேகத்தை கட்டுப்படுத்தும். இந்த இரு உணர்வுகளையும் நடுநின்று நியாயம் செய்வதும் எதைச்செய்ய வேண்டும் என்று முடிவு எடுப்பதுமான காரியம், அந்த இரு உணர்வில் ஒன்றாக இருக்க முடியாது. நீங்கள் சொல்லலாம் ஒரு கணத்தில் கொடுக்கப்பட்ட ஒரு இசைத்தாளில் இருக்கும் குறிப்புகள் , எந்த ஸ்வரத்தை வாசிக்க வேண்டும் எதை வாசிக்க கூடாது என்று குறிப்பிடுகிறது. ஆனால் இசைத்தாளில் இருக்கும் குறிப்புதான் வாத்தியத்தில் வரும் இசை ஸ்வரம் என்று கூறலாகாது. ஒழுக்க நெறி நமக்கு வாசிப்பதற்கு உரிய ராகத்தை கொடுக்கிறது நமது உணர்வுகள் அனைத்தும் வெறும் பியானோவின் விசைகளே.

ஒழுக்க விதி என்பது வெறும் நம் உள்ளுணர்வுகளில் ஒன்றல்ல என்பதை இந்த கண்ணோட்டத்தின் மூலம் காணலாம். ஒரு படைப்பின் மனதில் இரு உள்ளுணர்வுகள் மாத்திரம் இருந்து அவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டால் அதில் பெலன் மிகுந்ததே வெல்லும். நாம் ஒழுக்கவிதியை குறித்து மிகுந்த உணர்வு உள்ளவர்களாய்

இருக்கும் கணத்தில் ஒழுக்க விதியானது அவ்விரண்டிலும் பலவீனமாய் இருப்பதையே சார்ந்து கொள்ளச் சொல்லும். மூழ்கிக் கொண்டிருக்கும் அந்த மனிதனுக்கு உதவுவதை விட நீங்கள் பாதுகாப்பாக இருக்கவே விரும்புவீர்கள். ஆனால் ஒழுக்க விதி அவருக்கு நீங்கள் உதவ வேண்டுமென சொல்லும். சரியான உணர்ச்சியை இன்னும் நீங்கள் பலப்படுத்த வேண்டும் என்றே அது நிச்சயமாக சொல்லும். நான் என்ன பொருள் படப் பேசுகிறேன் என்றால், நமது இன உணர்வை மூட்டி எழுப்புவது நம் கடமை என நாம் அடிக்கடி எண்ணுகிறோம். நம்முடைய கற்பனைகளை எழுப்பி இரக்கத்தை எழும்பச் செய்வதன் மூலம் நாம் சரியானவற்றை செய்வதற்கு நம்மை சூடேற்றிக் கொள்ள நினைக்கிறோம். ஒரு உள் உணர்வு இருப்பதைவிட பலப்படுத்த நாம் நினைக்கும் போது அது நிச்சயமாக உள்ளுணர்வினால் செயல்படவில்லை. உங்கள் இன உள்ளுணர்வு தூங்கிவிட்டது அதை உசுப்பி எழுப்புங்கள் என்று சொல்லும் போது, அதைச் சொல்லுவது உங்கள் உள்ளுணர்வாக இருக்காது. எந்த ஸ்வரத்தில் பியானோவை இசைக்க வேண்டும் என்று சொல்லுவது ஸ்வரமாக இருக்காது.

இந்த மூன்றாம் வழி மூலம் ஒன்றைக்காணலாம். இந்த ஒழுக்க நெறி என்பது நம் உள் உணர்வுகளுள் ஒன்றாய் இருந்தால் நம்மால் நமக்குள் இருக்கும் நன்மை என்னும் நல்நடக்கையோடு உடன் ஒத்துப் போவதை காணமுடியும். ஆனால், இங்கு அதைக் காண முடிவது இல்லை. சில நேரங்களில், எந்த ஒரு உணர்ச்சி வேகத்தையும் ஒழுக்கநெறி அடக்கி ஆளச்சொல்லாதிருப்பதைக் காணலாம். சில நேரம் எல்லாவற்றையும் அது உற்சாகப்படுத்தவும் செய்யும். நாம் சில உணர்வுகளான தேசப்பற்றை நல்லதென்றும் மற்றவையான பாலுணர்வு, சண்டையிடும் உணர்வு என்பவை தவறு என்றும் எண்ணுவது தவறாகும். மொத்தத்தில் என்னவென்றால் சண்டையிடச்செய்யும் உள்ளுணர்வையும் பாலுணர்வு ஆசைகளையும் கட்டுப்படுத்த வேண்டிய தருணங்கள் தாயன்பையும், நாட்டுப்பற்றையும் கட்டுப்படுத்த வேண்டிய தருணங்களை விட அதிகமாய் உள்ளது. சில சூழ்நிலைகளில் இது வேறுபடும் ஒரு திருமணமான மனிதன் அவன் திருமண கடமைகளுக்காய் அவனுடைய பாலுணர்வை அதிகரித்துக்கொள்ளவும், ஒரு போர் வீரன் தன் போராட்ட குணத்தை அதிகரித்துக் கொள்ளவும் வேண்டும்.

சில தருணங்களும் உண்டு, அங்கு தாய் தனது பிள்ளைகள் மேல் உள்ள அன்பையும், ஒரு போர் வீரன் தன் நாட்டின் மேல் உள்ள பற்றையும் அடக்கி ஆள வேண்டும். இல்லை எனில் அதினால் பிறருடைய பிள்ளைகளுக்கும் பிறருடைய தேசத்திற்கும் அநியாயம் நடக்க நேரிடும். ஒருமுறை மறுபடியும் பியானோவைக் குறித்து யோசித்துப் பாருங்கள் அதில் ஒரு விதமான இசைக்குறிப்புகள் உள்ளது சரியான இசைக்குறிப்புகள் மற்றும் தவறான



இசைக்குறிப்புகள். ஒவ்வொரு இசைக்குறிப்பும் ஒரு நேரம் சரியாகவும் ஒரு நேரம் தவறாகவும் இருக்கும் ஒழுக்க நெறி என்பதும் ஒரு உள்ளுணர்வோ ஒரு கூட்டஉள்ளுணர்வோ அல்ல. அது உள்ளுணர்வை வழிநடத்தி ஒரு விதமான ராகத்தை எழுப்ப வேண்டும். அந்த ராகத்தைத்தான் நன்மைகள் அல்லது நல்ல நடக்கை என்கிறோம்.

மற்றும் இதற்கு பெரிய நடைமுறை விளைவுகள் உண்டு. இதில் நீங்கள் செய்யக்கூடிய மிகவும் ஆபத்தான காரியம் என்னவென்றால், உங்கள் இயல்பின் ஒரு உணர்ச்சி வேகத்தை மட்டும் எடுத்துக் கொண்டு, அதை என்ன நடந்தாலும் பின்பற்றியே ஆக வேண்டும் என நினைப்பதே ஆகும். அதில் எந்த ஒன்றையும் சரியான வழிகாட்டியாக எண்ணினால், அது எதுவாயினும் நம்மை பிசாசைப் போல் ஆக்கிவிடும். நீங்கள் நினைக்கலாம் மனித இனம் மீது உள்ள அன்பு என்பது பாதுகாப்பானது என்று. ஆனால், அது பாதுகாப்பானது அல்ல, நீங்கள் நீதியை விட்டுவிட்டு நீதிமன்றத்தில் மனித நேயம் என்றதன் காரணத்திற்காக நின்றால் ஒப்பந்தங்களை உடைப்பவராகவும்,சான்றுகளை போலியாக்குகிறவராகவும் இறுதியில் ஒரு கொடூரனாகவும் ஒரு ஏமாற்றுக்காரனாகவும் மாறி இருப்பீர்கள்.

சிலர் இவ்வாறாக எனக்கு எழுதினார்கள். நீங்கள் ஒழுக்க நெறி என கூறுவது வெறும் சமூக வழக்கம் அல்லவா? அது கல்வியால் நமக்குள் வைக்கப்பட்டதல்லவா? என்று. இங்கு சில தவறான புரிதல் இருக்கிறது என்று எண்ணுகிறேன். அந்தக் கேள்வியைக்கேட்ட மக்கள் நினைத்து கொண்டனர், நாம் ஒழுக்க நெறியை நமது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து கற்று இருந்தால் அது ஒரு சாதாரண மனித கண்டுபிடிப்பாயிற்றே என்று. ஆனால் நிச்சயமாக அது அப்படி அல்ல. நாம் அனைவரும் பெருக்கல் வாய்ப்பாட்டை பள்ளியில் கற்று இருப்போம். அது தனியாக ஒரு வனாந்தரத்தில் வளர்ந்த குழந்தைக்கு தெரியாது. இதனால் பெருக்கல் வாய்ப்பாடு என்பது ஒரு மனித வழக்கம் என்பது சரியல்ல. ஏனென்றால், பெருக்கல் என்பது மனிதர்கள் தங்களுக்கு ஏற்படுத்திக் கொண்டது அல்ல. இதை அவர்களுக்கு பிடித்தபடி அவர்கள் வேறு விதமாக அமைத்திருக்கமுடியாது.

நாம் நல் நடத்தையின் விதியை, பெற்றோர், நண்பர்கள், புத்தகம் மற்றும் எல்லாவற்றிலும் இருந்து கற்றுக் கொள்கிறோம் என்று நான் முழுவதாக ஒத்துக் கொள்கிறேன். ஆனால், நாம் கற்றுக்கொண்ட சில விஷயங்கள் வெறும் வழக்கத்தினால் வந்த ஒன்றே, அவை வேறு விதமாகவும் இருந்திருக்கலாம்–நாம் சாலையில் இடது பக்கம் நடக்க வேண்டும் என்று கற்று இருக்கிறோம். அந்த விதி வலது பக்கம் நடக்க வேண்டும் என்று கூட இருந்திருக்கலாம். ஆனால் மற்ற விஷயங்கள் உதாரணமாக கணக்கு போன்றவை; உண்மை சத்தியங்கள் ஆகும். கேள்வி என்னவென்றால், மனித இயல்பின் விதி எந்த வகுப்புக்கு உரியது? என்பதே.

இது கணக்கு வகுப்பிற்கு உரியது என்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலில் நான் ஒன்றாவது அத்தியாயத்தில் கூறியது போலவே ஒழுக்க நெறி குறித்த கருத்துக்கள் இரு நாட்டிற்கோ அல்லது இரு காலக் கட்டத்திற்கோ இடையில் வேறுபாடுகளோடு இருந்திருந்தால், அந்த மாற்றங்கள் சிலர் சொல்லும் அளவிற்கு மிகவும் பெரியதாய் இருந்திருக்காது. ஒரே சட்டமே எல்லோர் மேலும் ஓடிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் கண்டுகொள்ள முடியும். அதே நேரம் வெறும் மரபுகளான, ஒரு சாலையைப்பற்றிய விதிகளோ, அணியும் ஆடைகளைப்பற்றிய விதிகளோ, மிகுந்த வேறுபாட்டுடன் காணப்படலாம்.

இது மற்றொரு காரணம் ஆகும். இப்பொழுதும் நாம் ஒரு மக்களுக்கும் மற்றொரு மக்களுக்கும் இடையே இருக்கும் ஒழுக்க நெறிகளை அதில் உள்ள வேற்றுமைகளைக்குறித்து எண்ணும்போது ஒரு மக்களுடைய ஒழுக்க நெறி மற்றுமொரு மக்களின் ஒழுக்க நெறியை விட சிறந்ததாகவோ அல்லது மோசமாகவோ இருக்கிறது என்று எண்ணுகிறீர்களா? அப்படி இல்லை என்றால் ஒழுக்க நெறியில் முன்னேற்றம் என்பது இருந்திருக்காது. முன்னேற்றம் என்பது வெறும் மாற்றம் அல்ல, நன்மைக்கு ஏதுவான மாற்றம். இப்பொழுதும் எந்த ஒழுக்க நெறியும் ஒன்றை விட மற்றொன்று சிறந்ததாகவோ உண்மையுள்ளதாகவோ இருந்திருக்கவில்லை என்றால் நாம் நாகரிகமான ஒழுக்கநெறியை காட்டுமிராண்டித்தனமான ஒழுக்க நெறியில் இருந்து தேர்ந்தெடுப்பதில் அர்த்தம் இருக்காது. அல்லது நாஜி ஒழுக்கநெறியிலிருந்து கிறிஸ்தவ ஒழுக்கநெறியை தேர்ந்தெடுப்பதில் அர்த்தம் இருக்காது. உண்மையைச் சொன்னால் நாம் அனைவரும் சில ஒழுக்க நெறியிலிருந்து மற்றொரு ஒழுக்க நெறிகள் சிறந்தது என்று நம்புகிறோம். அப்படி தன் காலத்தில் இருந்த ஒழுக்க நெறிகளை மாற்ற நினைத்தவர்களையே நாம் சீர்திருத்தவாதிகள் அல்லது முன்னோடிகள் என்று அழைப்போம் என்று நம்புகிறோம். அம்மக்கள் தங்கள் அண்டை வீட்டாரை விட ஒழுக்கநெறி பற்றி நன்கு புரிந்தவர்கள். சரி அது போகட்டும்.

ஒரு கூட்டத்தினரின் ஒழுக்க நெறி கருத்துக்கள் மற்றொரு கூட்டத்தை விடச் சிறந்தது என்று நீங்கள் சொன்ன அக்கணமே நீங்கள் அவ்விரு கூட்டத்தினரையும் ஒரு அளவுகோலால் அளக்கிறீர்கள். அவர்களில் ஒருவர் மற்றொருவரை விடச்சிறந்தவர்கள் என்கிறீர்கள். சொல்லப்போனால் அவர்கள் இருவரையுமே உண்மையான ஓரு ஒழுக்க நெறிகளைக் கொண்டு நீங்கள் அளக்கிறீர்கள். அப்படி செய்வதன் மூலம் மக்கள் என்ன எண்ணினாலும், உண்மையில் ''சரி'' என்று ஒன்று உள்ளது என்று நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்கள். அல்லது, இப்படிச் சொல்வோம், உங்களுடைய ஒழுக்க நெறி கருத்துக்கள் ''மிக உண்மையாகவும்'', நாஜி இராணுவத்தின் ஒழுக்க நெறி கருத்துக்கள் ''உண்மைக்குறைவுள்ளதாகவும்'' இருக்குமானால், ''உண்மையான ஒழுக்கம்'' என்று ஏதோ ஒன்று இருக்கிறது.



நியூயார்க்கை பற்றிய உங்கள் கருத்து என்னுடைய அந்த நகரத்தை பற்றிய கருத்தை விட மிகவும் உண்மையாகவோ அல்லது உண்மைக்குறைந்ததாகவோ இருக்கலாம். ஏனென்றால், நம் கருத்துக்கள் எவ்வளவு வேறுபாடு கொண்டிருக்கிறது என்பதற்கு மேலாக அது ஒரு உண்மையான இடத்தைக்குறித்தது. நாம் இருவரும் நியூயார்க் என்று கூறும் போது நாம் குறிப்பது நம்முடைய சிந்தனையில் உள்ள நியூயார்க் என்ற நகரத்தைக்குறித்த கற்பனையே. இதில் எப்படி ஒருவரை விட ஒருவருக்கு சிறந்த உண்மையான கருத்து இருக்க முடியும். இங்கு உண்மை, பொய் என்ற கேள்விக்கே இடம் இல்லை. அது போலவே நல்நடக்கை விதி என்பது, எளிதாக ஒவ்வொரு நாடும் ''எதை ஒப்புதல் அளிக்கிறதோ அதுவே'' என்றானால் ஒரு நாடு பிற நாட்டை விட மிகச்சிறந்த ஒப்புதலை கொடுத்திருந்தது என்று கூறுவது அர்த்தமில்லாது போய்விடும். உலகம் ஒழுக்க நெறியில் முன்னேறும் அல்லது மோசமாகும் எனச் சொல்வதிலும் அர்த்தம் இருக்காது.

நான் இவ்வாறாக முடிவுரை செய்கிறேன். நல்ல நடத்தையைக்குறித்து மக்களுடைய கருத்துகளில் வேறுபாடுகள் இருப்பதால் ஒரு மனித இயல்புக்கான இயற்கை நியதி எதுவும் இல்லையோ என்று நீங்கள் சந்தேகிக்கலாம். ஆனால், நம்மிடையே உள்ள அந்த வேறுபட்ட கருத்துக்கள் இதற்கு எதிரானவற்றையே நிரூபிக்கிறது. ஆனால், நான் முடிப்பதற்குள் ஒரு வார்த்தையைச்சொல்லுகிறேன். இந்த வேறுபாடுகளை மிகைப்படுத்தும் மக்களை நான் பார்த்திருக்கிறேன். ஏனென்றால், அவர்கள் ஒழுக்க நெறி வேறுபாடுகள் மற்றும் உண்மையைக் குறித்த வேறுபட்ட நம்பிக்கைகள் இதனை பிரித்தெடுத்துப்பார்க்கவில்லை. எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் என்னிடம் இவ்வாறாகக்கூறினான் 300 வருஷங்களுக்கு முன்னாக இங்கிலாந்து மக்கள் சூனியக்காரிகளை கொன்றனர். அதையெல்லாம் நீங்கள் மனித இயல்பின் விதி என்றும் சரியான நடத்தை என்றும் கூறுகிறீர்களா? என்று. ஆனால் இப்போது நாம் சூனியக்காரிகளை கொல்லாமல் இருப்பதற்கான உண்மையான காரணம் என்னவென்றால், நாம் அப்படிப்பட்ட காரியங்கள் உள்ளன என்பதை நம்புவதில்லை என்பதுதான். நாங்கள் நம்பி இருந்தால்– உண்மையிலேயே பிசாசிடம் தங்கள் ஆன்மாவை மக்கள் விற்று அவனிடம் இருந்து இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளை அதற்கு பதிலாகப்பெற்று அயலகத்தாரைக்கொல்லவோ,அவர்களை பைத்தியம் பிடிக்கச் செய்யவோ, அல்லது மோசமான வானிலை கொண்டு வருவதாகவும் நாங்கள் உண்மையிலேயே நினைத்திருந்தால் நிச்சயமாகவே மரண தண்டனைக்கு அந்த இழிவான தேச துரோகிகள் பாத்திரர் என்போம். இங்கு ஒழுக நெறியில் எந்த வேறுபாடும் கிடையாது. இங்கு உள்ள வேறுபாடு வெறும் உண்மையைப் பற்றியதே. ஒருவர் அறிவினால் சூனியக்காரிகளை நம்பாதிருந்தால், அது மிகப் பெரிய முன்னேற்றமே.

அங்கு அச்சூனியக்காரிகள் இருக்கிறார்கள் என்று நீங்கள் நம்பாத போது அவர்களை அழிக்காதிருப்பது ஒழுக்க நெறி முன்னேற்றம் பெரிதாக நடைபெறாததையே குறிக்கிறது. ஒரு மனிதன் அவன் வீட்டில் எலி இல்லை என்று நம்புவதால் அவன் எலிப்பொறி வைக்காது இருக்கும் போது நீங்கள் அவனை மனிதாபிமானம் உள்ளவன் என்று சொல்ல மாட்டீர்கள்.

# 3. சட்டத்தின் யதார்த்தம்

இப்பொழுது நாம் முதல் அத்தியாயத்தில் கடைசியாக நான் சொன்னவற்றை நோக்கி பின் செல்லலாம். மனித இனத்திற்கு இரு விசித்திரக்காரியங்கள் உண்டு முதலவதாக ''சீராக நடத்தல்'', ''நன்னடத்தை'', ''ஒழுக்க நெறி'' அல்லது ''இயற்கை நியதி'' எனப்பட்டவைகளை செய்தாக வேண்டும் என்று அவர்கள் விடாது சூழப்பட்டிருக்கிறார்கள். இரண்டாவதாக, உண்மையைப் பார்த்தால் அவர்கள் அதைச்செய்வதும் இல்லை. இதை ஏன் விசித்திரம் என சொல்லுகிறீர்கள் என உங்களில் சிலர் கேட்கலாம். உங்களுக்கு இது ஒரு மிகவும் இயல்பான விஷயமாகத் தெரியலாம். குறிப்பாக நான் மனித இனத்தின் மீது கடுமையாக நடக்கிறேன் என்று எண்ணலாம். நீங்கள் என்னிடம் மக்கள் சரி தவறு என்பதன் விதிகளை மீறுகிறார்கள் என்று சொல்லும்போது அவர்கள் தாங்கள் பூரண சற்குணர் அல்ல என்பதையே அது குறிக்கிறது என்றும் கூறலாம். ஒருவேளை பிறர் நான் நினைக்கும் முறையில் நடக்கத் தவறினார்கள் என்பதால் நான் அவர்களை சரி செய்ய நினைப்பதாய் நீங்கள் நினைத்தால், நான் எதற்கு அவர்களிடம் எதையும் எதிர்பார்க்க வேண்டும்? என்பதே என்னுடைய பதில். அது எனது வேலையே இல்லை, பிறரை க் குற்றப்படுத்துவது என் நோக்கமும் அல்ல. நான் இங்கு சத்தியத்தை கண்டுபிடிக்கவே முயற்சிக்கிறேன். அந்தக் கோணத்தில் இருந்து நான் பார்க்கும் போது இவ்வாறாக எனக்கு தெரிகிறது. ஒன்று இயல்பின்படியே பழுதுள்ளதாகவும் அது இருக்க வேண்டிய விதத்தில் இல்லாததாயும் இருந்தால் அதற்கு சில பின் விளைவுகளும் உண்டு.

இப்பொழுதும் ஒரு மரத்தையோ ஒரு கல்லையோ எடுத்துக் கொண்டால் அது எப்படி இருக்கிறதோ அப்படியே இருக்கும். இது வேறு விதமாக இருந்திருக்கலாமே என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. ஒருவேளை அந்தக்கல்லை வைத்து பாறைத்தோட்டம் செய்ய நினைத்து, அது அதற்கு ஏற்ற வடிவில் இல்லை என்றால் அது தவறான வடிவில் உள்ளது என்று நீங்கள் கூறலாம். நீங்கள் எதிர்பார்த்த அளவு ஒரு மரம் நிழல் கொடுக்காத போது அதை கெட்ட மரம் எனலாம். ஆனால், இதன் மூலம் உங்கள் சௌகரியத்திற்கும் உங்கள் வேலைக்கும் ஏற்றதாகவே அவை இல்லை என அர்த்தம் கொள்ளவே நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் வேடிக்கையாக வேண்டும் என்றால் அவைகளைக்குறை சொல்லிக் கொள்ளலாம். உங்களுக்கு நன்றாக தெரியும் ஒரு மரம் என்பது அதன் மண்ணிற்கும், கால நிலைக்கும் ஏற்றவாறே வளரும் என்று. ஒரு மரம் தனக்கு இயற்கை கொடுத்த சூழலுக்கு ஏற்றவாறு வளர்கிறது. நல்ல மரமாகவோ கெட்ட மரமாகவோ அது வளர்கிறது.

இது எதைப் பின்பற்றுகிறது என்று நீங்கள் கவனித்தீர்களா? நாம் இயற்கையின் நியதி என்று பொதுவாகச்சொல்வதையே அது பின்பற்றுகிறது. எடுத்துக்காட்டாக பருவநிலை மாற்றம் மரத்தில் செயல்படுவதுபோல்; கண்டிப்பான அர்த்தத்தில் உண்மையில் சட்டங்களாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் பேசும் விதத்தில். ஒரு

கல் விழுகையில் எப்பொழுதும் புவியீர்ப்பு விதிக்கு அது கட்டுப்படுகிறது என்று சொல்லும் போது, அந்த விதி, ''ஒரு கல் எப்பொழுதும் என்ன செய்கிறது'' என்பதை மட்டும் சொல்லுகிறது இல்லையா?. ஒரு கல் மேலிருந்து விழும்போது நான் இப்பொழுது உடனே கீழ் செல்ல வேண்டும் என்ற கட்டளையை திடீரென்று நினைவு கூறுகிறது என்று நீங்கள் நினைப்பதில்லை. நீங்கள் புரிந்து கொள்வது என்னவென்றால் உண்மையாகவே மேலிருந்து போடப்படும் போது கல் கீழே விழும் என்பதுவே. வேறுவிதத்தில் சொல்ல வேண்டுமானால், உண்மைக்கு மேலாக அதற்கும் அப்பால் ஏதேனும் இருக்கிறது என்றும் நடக்க வேண்டிய ஒன்றை விட தனித்துவம் வாய்ந்த ஏதேனும் இருப்பதாக நீங்கள் உறுதியாக நம்ப முடியாது.

உண்மையில், இயற்கை என்ன செய்கிறதோ, மரத்திலும் கல்லிலும் எதை செலுத்துகிறதோ, அதை நாம் ''இயற்கை நியதி'' என்று அர்த்தம் கொள்கிறோம். ஆனால் மனித இயல்பின் விதியையோ, நன்னடத்தையையோ நோக்கினால் அது வேறு விஷயமே. அந்த சட்டம் உண்மையில் ''மனிதர்கள் செய்வது'' என்று நிச்சயமாக அர்த்தம் கொள்ளவில்லை. நான் ஏற்கனவே சொன்னது போல பலர் இந்த சட்டத்திற்கு கீழ்ப்படிவதே இல்லை. அதேபோல எவரும் முழுவதுமாக கீழ்படிவதும் இல்லை. புவி ஈர்ப்பு விசை என்பது ஒரு கல்லைக் கீழே போட்டால் அது என்ன நேரும் என்று கூறும். ஆனால் மனித நியதி ஒரு மனிதன் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று கூறும்.

வேறு விதமாய் சொல்லப்போனால் மனிதர்களை கையாளும்போது உண்மைக்கு மேலாக உயர்வாக ஏதோ ஒன்று வந்து விடுகிறது. உங்களிடம் உண்மை இருக்கிறது (அதாவது மனிதர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்), மற்றும் வேறு ஒன்றும் உள்ளது (மனிதர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்) என்பதே அது. மீதமான பிரபஞ்சத்தில் உண்மையைத் தவிர வேறு எதுவும் இருக்க வாய்ப்பில்லை. மின் அணுவும் மூலக்கூறுகளும் ஒருவிதத்தில் செயல்படுகிறது. அதை சில விளைவுகள் தொடர்கிறது. அதுவே முழுக்கதையாகவும் இருக்கிறது[1]. ஆனால், மனிதர்களுக்கு அவர்கள் ஒருவிதத்தில் செயல்படுவது மாத்திரமே முழுக்கதை அல்ல. உங்களுக்கு இவ்வளவு காலத்திலும் தெரிந்திருக்கும் அவர்கள் வேறு விதமாக நடந்து கொண்டிருக்க வேண்டும் என்று.

இது உண்மையாகவே வினோதமாக இருப்பதால் இதை விளக்க ஒருவர் முயற்சிக்கிறார். அதாவது ஒரு மனிதன் நடக்க வேண்டிய விதத்தில் நடக்கவில்லை என்று நாம் சொல்லும்போது அந்த கல் தவறான வடிவில் இருக்கிறது என்று சொல்லுவதற்கு நிகராகும். ஆனால் அது பொய்யாகும். ஒரு மனிதன் எனக்கு முன்னதாக ரயில் வண்டியில் முதலில் நுழைந்ததால் ஓரமாக இருக்கையில் அமர்ந்து கொள்கிறான். இன்னொரு நபர் என் பையை நகர்த்தி விட்டு அந்த இடத்தில் உட்கார்ந்து

1 இதுவே முழுக்கதை அல்ல அது பின்னால்தான் தெரியும் நான் விவாதிக்கும் இந்த நாள் வரையில் இதுவே முழுக்கதையாக இருக்கலாம்.

விடுகிறார். அவர்கள் இருவருமே எனக்கு அசௌகரியமாகவே இருக்கிறார்கள். ஆனால், இரண்டாம் நபரைத்தான் நான் பழி சொல்லுவேன் முதல் நபரை அல்ல. ஒரு மனிதன் என்னை தெரியாமல் தடுக்கியதால் நான் விழுந்துவிட்டேன் என்பதை உணர்ந்த கணம் நான் அவன் மீது கோபப்படவில்லை. ஒரு மனிதன் என்னை தடுக்கி விழ பண்ண முயற்சித்து, அது நடக்காத போதும், எனக்கு அவன் மேல் கோபம் வந்தது. முதலில் அறியாமல் தடுக்கி விட பண்ணின ஒருவரால் நான் காயப்பட்டேன். இரண்டாம் நபரால் அல்ல.  சில நேரங்களில் நான் கெட்டது என்று அழைக்கும் நடத்தை அசௌகரியமாகவே இருக்காது. ஆனால், அதற்கு மிகவும் எதிர்மறையாக இருக்கும்.

போரின்போது இருபக்கத்தினருக்கும் ஒரு துரோகி கிடைத்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் அவர்கள் அவனுக்கு பணம் கொடுத்து அவனை பயன்படுத்திக் கொண்டாலும் அவனை ஒரு மனித புழுவென்றே எண்ணுவர். ஆதலால் நமக்கு உதவுகிற பிறரிடம் உள்ள நடக்கையை எளிதாக நன்னடக்கை என்று சொல்லிவிட முடியாது. நம்முடைய எந்த நடக்கை நமக்கு லாபமாக இருக்கிறதோ அதுவே நன்னடத்தை என்று பொருள் தராது. நன்னடத்தை என்னும் பொருள் தருவது என்னவென்றால், ஒருவர் தனக்கு முப்பதாயிரம் ரூபாய் கிடைக்காமல் முப்பது ரூபாய் மட்டும் கிடைத்த பொழுதும் அதில் திருப்தியாய் இருப்பதே. ஏமாற்றி பள்ளி வேலைகளை செய்ய வாய்ப்பு இருக்கும்போது ,நேர்மையாய் செய்வது, ஒரு பெண்ணை அடைய வேண்டுமென்று விரும்பும்போதும் அவளைத் தனியாக விட்டு விடுவது. பாதுகாப்பாக இருக்கும் இடத்திற்குச் செல்ல முடியும் என்ற போதும் மற்றவர்களுக்காக ஆபத்தான இடத்தில் தங்குவது, காப்பாற்ற முடியாத சத்தியத்தையும் காப்பாற்றுவது. மற்றும் கோமாளி போல தெரிய நேர்ந்தாலும் உண்மையைச் சொல்லுவது.

சிலர் சொல்கிறார்கள் நன்னடத்தை என்பது ஒரு மனிதன் ஒரு கணத்தில் நடந்துகொள்ளும் விதத்தினால் அவனுக்கு என்ன லாபம் என்பது அல்ல முழு சமுதாயத்துக்கும் அது நன்மையாக இருக்க வேண்டும் என்கின்றனர். அந்தக் கூற்றில் எந்த மர்மமும் இல்லை. மனிதர்களுக்கு உணர்வு இருக்கிறது. மனிதர்கள் நன்னடத்தையோடு நடக்க முற்படுகிறார்கள். ஒரு சமூகத்தில் பாதுகாப்பும் மகிழ்ச்சியும் வேண்டுமென்றால் அங்கு அனைவரும் சரியாக நடந்து கொள்ள வேண்டும் என்று மனிதர்கள் காண்கிறார்கள். எப்பொழுதும் பாதுகாப்பும், மகிழ்ச்சியும் ஒவ்வொரு தனி மனிதனும், வகுப்பினரும், தேசமும், நேர்மையாகவும் சரியாகவும் ஒருவருக்கொருவர் இரக்கம் உள்ளவராய் இருப்பதினாலும் வரும் என்பது பரிபூரண உண்மை. இது உலகில் உள்ள மிக முக்கியமான சத்தியத்தில் ஒன்று. ஆனால் நாம் ஏன் ''சரி மற்றும் தவறை'' குறித்து இவ்வாறாக  உணர்கிறோம் என்பதற்கு விளக்கமாக ''ஏன் நாம் சுயநலம் இல்லாது இருக்க வேண்டும்?'' என்று ஒருவர் கேட்க அதற்கு நீங்கள், ''அது சமுதாயத்திற்கு நல்லது'' என்று சொல்லும் போது, நாம் அந்த கேள்வியிலுள்ள இன்றியமையாததைப் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறோம். அதற்கு அவர் ''தனிப்பட்ட முறையில் எனக்கு வர வேண்டிய நலனை தவிர, சமூகத்திற்கு எது நல்லது என்பதைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும்?'' என்று கேட்கலாம். ''ஏனென்றால் நீங்கள்

சுயநலமற்றவராக இருக்க வேண்டும்'' என்று அதற்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும் – இது நாம் தொடங்கிய இடத்திற்கே நம்மை மீண்டும் கொண்டு வருகிறது.

நீங்கள் எது உண்மை என்றே சொல்லிக்கொண்டு இருப்பீர்கள் ஆனால் எங்கும் முன்னேறிச் சென்றிருக்க மாட்டீர்கள். ''கால்பந்து விளையாடுவதில் என்ன நோக்கம் இருக்கிறது?'' என்று ஒருவர் கேட்டால், நாம் சிறந்த பதிலாக, அது கோல்களை அடிப்பதிற்கே என்று கூற முடியாது. கோல்களை அடிப்பது என்பது அந்த விளையாட்டு. ஆனால் அது அதன் நோக்கம் அல்ல. ''கால்பந்தாட்டம்'' என்றால் ''கால்பந்தாட்டம்'' என்பீர்கள். அதுதான் உண்மை ஆனால் அதை கூறுவதினால் எந்தப் பயனும் இருக்காது. அதேபோலவே ஒருவர் உங்களிடம், மிகவும் ஒழுக்கமாக நடப்பதன் நோக்கம் என்ன? என்று கேட்டால் அது சமுதாயத்திற்கு நன்மை சேர்க்க என்று சொல்லுவீர்களானால், அதாவது சுயநலம் இல்லாமல் இருப்பது சமுதாயத்திற்காக என்றால் அது பிறருக்காக என அர்த்தம் கொள்ளும். இது ஒழுக்கம் உள்ளடக்கிய பலவற்றுள் ஒன்று மட்டுமே. நீங்கள் இதன் மூலம் சொல்வது என்னவென்றால் ஒழுக்கமாக நடத்தல் என்பது ''மனிதர்கள் சுயநலமில்லாமல் இருக்க வேண்டும்'' என்று மட்டும் சொல்லி முடித்தால், நீங்கள் சொல்ல வருவது நல்நடத்தை என்பது நல்நடத்தை என்பதே ஆகும்.

இங்குதான் நானும் நிறுத்துகிறேன். மனிதர்கள் சுயநலம் அற்று தான் இருக்க வேண்டும், சரியாகத்தான் நடக்க வேண்டும், மனிதர்கள் சுயநலமானவர்கள் அல்ல, அவர்களுக்கு சுயநலமற்றவர்களாய் இருப்பது பிடிப்பதும் இல்லை. ஆனால், அவர்கள் அப்படித்தான் இருக்க வேண்டும். ஒழுக்க நெறி மனித இயல்பின் சட்டம் என்பது நிச்சயமாக புவிஈர்ப்பு விசையைக்குறித்தோ அல்லது கனமான பொருட்கள் எப்படி நடந்து கொள்ளும் என்பதைக்குறித்த சாதாரண உண்மை அல்ல, மாறாக இது வெறும் கற்பனையும் அல்ல. நாம் இந்த உண்மையை நிராகரிக்க முடியாது. அப்படி செய்தால் நாம் மனிதர்களை குறித்து சொல்லும் அநேகக் காரியங்கள் ஒன்றும் இல்லாமல் அர்த்தமற்று போய்விடும். நாம் மனிதர்கள் நமக்கு ஏற்றவாறு ஒருவர் எப்படி நடக்க வேண்டும் என்பதைப்பற்றிய சாதாரண வாக்கியம் அல்ல அது. ஏனென்றால் தவறான அல்லது நியாயம் இல்லாத நடத்தை என்பது நாம் அசௌகரியமாக நினைக்கும் நடத்தைக்கு சமம் அல்ல அது அதற்கு நேர்மாறாகவும் இருக்கலாம்.

அதேநேரம் இந்த சரி அல்லது தவறு என்பதைக் குறித்த சட்டம் அல்லது மனித இயல்பின் சட்டம் அல்லது அதை என்ன வேண்டும் என்றாலும் கூறி அழையுங்கள். அது நிச்சயமாக எப்படியும் உண்மையாக இருக்க வேண்டும். நம்மால் சுயமாக உருவாக்கப்படாததும். ஆனால் நிச்சயமாகவே இருக்கின்ற ஒன்றாகவும் அது இருக்க வேண்டும். இது நம் அனுதின வாழ்க்கையில் உள்ள சாதாரண உண்மையைப்போல ஒரு உண்மை அல்ல. இந்த குறிப்பிட்ட காரியத்தில் இதற்கு இன்னும் ஒரு எதார்த்தம் உள்ளது என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அதாவது இந்த குறிப்பிட்ட

காரியத்தில் மனிதர்களின் நடத்தை என்பதற்கும் மேலாக அப்பாற்பட்ட ஏதோ ஒன்று உள்ளது. அது நிச்சயமாக உள்ளது. ஒரு உண்மையான விதி, அது நம் யாராலும் இயற்றப்பட்டதும் அல்ல ஆனால், நம்மை அது அழுத்திக் கொண்டிருக்க காண்கிறோம்.

# 4. சட்டத்திற்கு பின் என்ன உள்ளது

நாம் இதுவரை கடந்து வந்திருப்பதை சேர்த்துப்பார்ப்போம். கல், மரம் அல்லது அது போன்றவற்றின் காரியங்களைப் பார்த்தால் இயற்கையின் நியதி என்று நாம் அழைப்பது பேச்சுவழக்கே அன்றி வேறொன்றும் இல்லை. இயற்கை சில விதிகளால் ஆளுகை செய்யப்படுகிறது என்போமாகில் அதின் அர்த்தம், உண்மையிலேயே இயற்கை ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படுகிறது என்பதுதான். இந்த விதிகள் என்று அழைக்கப்படுவது, யதார்த்தத்தில் நாம் காணும் உண்மைகளுக்கு அப்பாற்பட்ட எதுவும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் மனிதனுடைய காரியத்தில் அது அப்படியல்ல என்று நாம் கண்டோம். மனித இயல்பின் சட்டம் அல்லது சரி மற்றும் தவறு என்பது யதார்த்தத்தில் நாம் காணும் உண்மைகளுக்கு அப்பாற்பட்டதும் மிகவும் உயர்ந்ததாகவும் இருக்க வேண்டும். அந்த உண்மை விதியானது நம்மால் இயற்றப்படாதது மற்றும் நாம் கீழ்படிந்து நிறைவேற்ற வேண்டியதாய் இருக்கிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த பிரபஞ்சத்தைப்பற்றி இது என்ன சொல்லப்போகிறது என்று நான் பரிசீலிக்கப்போகிறேன். சிந்திக்கத் தெரிந்த நாளிலிருந்து அவர்கள் இந்த பிரபஞ்சம் என்னவாக இருக்கும், அது எப்படி உருவாகி இருக்கும் என்று வியந்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு தோராயமாக இரண்டு கண்ணோட்டம் உள்ளது.

முதலாவதாக பொருள்முதல்வாத கொள்கை என்று ஒன்று உள்ளது. அதை ஏற்றுக்கொள்ளும் மனிதர்கள், அவர்கள் இவ்வாறு நினைக்கிறார்கள் – விண்வெளி மற்றும் அதில் உள்ள பொருள் தானாகவே இருந்திருக்கிறது. அது எப்பொழுதும் இருந்திருக்கிறது, ஏன் என்பது எவருக்கும் தெரியாது, அந்த பொருளானது சில செயல்முறையின்படியே செயல்படுகிறது. ஏதோ தற்செயலாக அது நிகழ்ந்துவிட்டது. அது சிந்திக்கும் திறமை கொண்ட நம்மைப் போன்ற மனிதர்களை உண்டாக்கிவிட்டது. ஆயிரத்தில் ஒரு முறை நிகழ்வது போல ஏதோ ஒன்று நமது சூரியனை அடித்தது. அது பல கோள்களை உருவாக்கி விட்டது. இன்னும் ஒரு ஆயிரத்தில் ஒரு முறை நடக்கும் ஒரு செயலாக வாழ்க்கைக்கு தேவையான ரசாயனங்கள், சரியான வெப்பநிலை என இவை அனைத்தும் எல்லா கோள்களிலும் ஒன்றான ஒரே கோளில் நிகழ, அங்கு இருந்த சில பொருள்கள் உயிரோடு வந்துவிட்டது. அதன் பின்னதாக மிக மிக அரிதான காரியமான நம்மைப் போன்ற உயிரினங்களாகப் உருவாகிவிட்டது.

இன்னொரு கண்ணோட்டம் என்னவென்றால், அது மதப்பார்வை – அதன்படி நமக்கு தெரிந்திருக்கும் மனதைப் போலவே ஒன்று இந்த பிரபஞ்சத்திற்கு பின்னால் உள்ளது. இதன் மூலம் சொல்ல வருவது என்னவென்றால் அதற்கு உணர்வு உள்ளது, அதற்கு நோக்கமுண்டு. அது ஒன்றை விட மற்றொன்றை விரும்புகிறது. இந்த கண்ணோட்டத்தில், அது பிரபஞ்சத்தை உருவாக்கியது, ஓரளவு நமக்குத் தெரியாத

நோக்கங்களுக்காக, ஆனால் பகுதியாக, அது எப்படியாகினும், தன்னைப் போன்ற உயிரினங்களை உருவாக்குவதற்காக, அதாவது தன்னைப் போலவே மனதைக் கொண்டிருக்கும் அளவிற்கு.

இந்த இரண்டு கருத்துகளிலும் ஒன்று பல காலமாக உள்ளது மற்றொன்று மெதுவாக வளர்ந்து வந்தது என்று தயவு செய்து எண்ணிக்கொள்ளாதீர்கள். எங்கெங்கு சிந்திக்கும் மனிதர்கள் இருந்தார்களோ அங்கெல்லாம் இவ்விரு எண்ணங்களும் கண்ணோட்டங்களும் எழுந்தது. இதையும் குறித்துக்கொள்ளுங்கள். சாதாரண அர்த்தத்தில், இதில் எது சரியான கண்ணோட்டம் என்பதை உங்களால் அறிவியலை கொண்டு கண்டுபிடிக்க முடியாது. அறிவியல் என்பது பரிசோதனைகளைக் கொண்டு செயல்படும். பொருள்கள் எப்படி செயல்படுகிறது என்பதை அது கூர்ந்து நோக்கும். நீண்ட காலமான அறிவியல் அறிக்கைகளைப்பார்த்தால், அது எவ்வளவுதான் சிக்கலான ஒன்றைப் போல் தெரிந்தாலும். அது இதைப்போன்ற சிலவற்றைக் குறிக்கும். நான் எனது டெலஸ்கோப்பை கொண்டு, ஜனவரி 15 ஆம் தேதி அதிகாலை 2:20க்கு, வானத்தின் அந்த மற்றும் இந்த பகுதிகளில் நோக்கிய போது, அது அல்லது இதைக் கண்டேன். அல்லது நான் இந்த விஷயங்களில் சிலவற்றை ஒரு பானையில் போட்டு இன்ன இன்ன வெப்பநிலையில் சூடாக்கினேன், அது இப்படியாகச் செய்தது. நான் ஏதோ அறிவியலுக்கு விரோதமாக பேசுகிறேன் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். அதன் வேலை அதுவே. அதன் வேலை எதுவோ அதை மாத்திரமே நான் சொல்லுகிறேன். ஒரு மனிதன் அதிக அறிவியல் சார்ந்தவராய் இருப்பாரானால்,



அவர் நான் சொல்வது சரி என்று என்னுடன் உடன்பட்டுக் கொள்ளுவார் என்று நான் நம்புகிறேன். இது மிகவும் பயன் தரக்கூடிய மற்றும் தேவையான வேலை. ஆனால் ‘‘ஏன் எதுவும் இருக்கிறது’’ மற்றும் ‘‘ஏதேனும் விஷயங்கள் அறிவியலால் அறிய படுவதையும் தாண்டி பின்னால் இருக்கிறதா’’ என்பது அறிவியல் கேள்வி அல்ல. அப்படி அதற்கு பின்னால் எதுவும் இருக்குமானால் அது முழுவதுமாக மனிதருக்கு தெரியாததாய் இருக்க வேண்டும் அல்லது அது வேறு விதத்தில் அவர்களுக்கு தன்னை வெளிப்படுத்துவதாய் இருக்க வேண்டும்.

அப்படி ஏதோ ஒன்று இருக்கிறது என்ற அறிக்கை, அப்படி எதுவும் இல்லை என்ற அறிக்கை, இந்த இரண்டு அறிக்கைகளும் அறிவியலால் ஏற்படுத்த முடியாத ஒன்று. உண்மையான ஒரு அறிவியலாளர் அப்படி அறிக்கைகளை ஏற்படுத்த மாட்டார். அரைகுறையாய் அறிவியலை பாடப் புத்தகத்திலிருந்து படித்த பத்திரிகையாளர் அல்லது பிரபல கதை ஆசிரியர்களே அப்படிச் செய்வார்கள். எப்படி இருந்தாலும் அது ஒரு பொது அறிவு சார்ந்த காரியமே, ஒருவேளை அறிவியலுக்கு பிரபஞ்சத்தில் உள்ள

ஒவ்வொரு விஷயமும் தெரிந்து முழுமை அடைந்து விட்டது என எண்ணிக்கொண்டால், ''ஏன் பிரபஞ்சம் இருக்கிறது?'' ''இப்பொழுது போகிறது போல ஏன் அது போய்க் கொண்டிருக்கிறது?'' ''அதற்கு எதுவும் அர்த்தம் இருக்கிறதா?'' என்ற கேள்விகள் எல்லாம் இன்னும் அப்படியே இருக்கும் என்று தெளிவாக தெரியவில்லையா?

இப்போது நிலைமை மிகவும் நம்பிக்கையற்றதாக இருக்கும், இது இல்லை என்றால். ஒரு விஷயம், ஒரே ஒரு விஷயம், இந்த பிரபஞ்சம் முழுவதிலும் நாம் வெளியிருந்து உற்று நோக்கி கவனித்து நாம் கற்றுக்கொள்வதை விட அதிகமாக அதைப் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். அந்த ஒரு விஷயம் மனிதனே. நாம் உற்று நோக்கும் வெறும் விஷயம் மனிதன் அல்ல. நாம் தான் மனிதர்கள். இந்தக் காரியத்தில் நமக்கு உள் தகவல்கள் இருக்கின்றன. நாம் அதை அறிந்திருக்கிறோம். இதனால் நமக்கு தெரியும் மனிதர்கள் தங்களை முழுமையாக ஒழுக்க விதிக்கு கீழாக காண்கிறார்கள். ஆனால், அந்த விதியை அவர்கள் இயற்றியிருக்கவில்லை, அதை அவர்கள் மறக்க முயன்றாலும் அதுவும் முடியவில்லை, மற்றும் அவர்களுக்குத் தெரியும் அதற்கு அவர்கள் கீழ்ப்படிந்தாக வேண்டும் என்று. வரப்போகும் இந்த குறிப்பைப் பாருங்கள். மின்சாரம் அல்லது முட்டைக்கோஸை நாம் ஆய்வு செய்வது போல் மனிதனை வெளியிலிருந்து ஆராய்ந்த எவரும், நமது மொழியை அறியாமல், அதன் விளைவாக நம்மிடமிருந்து எந்த உள் அறிவையும் பெற முடியாமல், நாம் என்ன செய்கிறோம் என்பதை வெறுமனே கவனித்தால், இந்த ஒழுக்க விதியை நம்மிடம் இருந்தது என்பதற்கான ஒரு சிறிய ஆதாரத்தையும் ஒருபோதும் பெற முடியாது. அவரால் எப்படி எடுக்க முடியும்? அவர் மனிதர்களை உற்று ஆராயும் போது நாம் வெளிப்படையாய் செய்யும் செயல்களை மாத்திரமே ஆராய முடியும். ஆனால் ஒழுக்க விதி என்பது, நாம் என்ன செய்ய வேண்டும் என்பது. இதுபோலவே வானிலேயோ, கற்களிலோ ஏதோ ஒன்று மேலாகவும் அதற்கு அப்பாற்பட்டும் இருக்குமானால், நாம் வெளியில் இருந்து அதை படித்து அதை கண்டுபிடிக்க நினைத்தால், அது நடப்பதற்கு எந்த நம்பிக்கையும் கிடையாது.

அப்படியானால் இந்த கேள்வியினுடைய நிலை இதுவே. இந்த பிரபஞ்சம் ஒரு காரணமும் இல்லாமல் தற்செயலாக வந்து விட்டதா அல்லது அதற்கு பின்னாக ஏதோ ஒரு வல்லமை இருந்து கொண்டு அவைகள் இப்பொழுது இருக்கும் வண்ணம் அவைகளை இருக்கச் செய்கிறதா? அப்படி ஒரு வல்லமை இருக்கும் என்றால் அது கண்காணித்து அறியக்கூடிய உண்மையுள் ஒன்றாக இராது. ஆனால் இவைகளை யதார்த்தமாக செய்யும் ஒன்றாய் இருக்கும். வெறும் கண்காணிப்பின் மூலம் இதை அறிய முடியாது.

இன்னும் ஏதேனும் இருக்கிறதா என்று ஒரே ஒரு காரியத்தில் நாம் அறிய முடியும் அது நாமே. அந்த ஒரு காரியத்தில் ஒன்று இருப்பதை நாம் கண்டுபிடித்திருப்போம். இதை வேறு விதமாக சொல்லலாமே, நம் பிரபஞ்சத்திற்கு மேலான ஆளுகை செய்யும் வல்லமை ஒன்று இருக்குமானால் அது உலகிற்குள் உள்ள ஒரு உண்மையாக தன்னை வெளிப்படுத்த முடியாது. இது எது போல் என்றால் ஒரு வீட்டின் கட்டட

வடிவமைப்பாளர் எப்படி ஒரு சுவராகவோ, படிக்கட்டாகவோ அல்லது நெருப்பிடமாகவோ மாற முடியாதோ அது போலவே. அது தன்னை நமக்குள் இருந்து மாத்திரமே வெளிப்படுத்த முடியும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். அது நமக்குள் இருந்து நம்மை ஈர்ப்பதாகவும் அல்லது நம்மை ஒரு விதத்தில் செயல்பட நமக்கு உத்தரவிடுவதாகவும் இருக்க வேண்டும். அதையே நமக்குள் இருப்பதை நாம் காண்கிறோம். நிச்சயமாக இது நம் சந்தேகத்தைத் தூண்டியிருக்க வேண்டுமே? ஒரு இடத்தில் மாத்திரம் நீங்கள் பதிலை எதிர்பார்க்கலாம். அந்த பதில் ஆம் என்று இருக்கிறது; மற்ற சில பதில் கிடைக்காத இடங்களில் உங்களுக்கு பதில் ஏன் கிடைக்கவில்லை என்று உணர்வீர்கள். ஒருவர் என்னிடம் வந்து அந்த காக்கி நிற சீருடை அணிந்த மனிதன் சிறு காகித உறையை ஒவ்வொரு வீட்டிற்கும் கொண்டு சென்று கொடுக்கும்போது அதில் கடிதங்கள் இருக்கும் என்று எப்படி நம்புகிறீர்கள்? என்று கேட்டால் நான் சொல்வேன், ‘‘ஏனென்றால் அவன் அப்படி ஒவ்வொரு முறையும் என்னிடத்தில் கொடுக்கும் பொழுதும் கடிதத்தை நான் கண்டிருக்கிறேன்’’ என்பதே. அவன் ஆட்சேபித்து ஆனால் நீ பிறருக்கு சென்றக் கடிதங்களை கண்ணால் கண்டிராமல் எப்படி அவர்களுக்கு கடிதங்கள் கிடைக்கிறது என்று நம்பலாம்? என்று கேட்டால், நான் சொல்லுவேன் ‘‘அந்த கடிதங்களை என் கண்ணால் காண வேண்டிய அவசியம் எனக்கு இல்லை, ஏனெனில் அவைகள் என் முகவரிக்கு அனுப்பப்பட்டவை அல்ல. என்னால் திறக்கக்கூடாத உறை என்பதை, என்னால் திறக்கக்கூடிய உறை எது என்பதைக் கொண்டு நான் விளக்குகிறேன்’’. இதுவும் அதே கேள்வியே – என்னால் திறக்கக்கூடிய ஒரே உறை மனிதன். அதுவும் குறிப்பாக நான் என்னும் ‘‘மனிதன்’’.



அதாவது ‘‘என்னை’’ நான் திறந்து பார்த்தால் நான் சுயமாக வாழவில்லை என்றும் நான் ஒரு சட்டத்தின் கீழ் வாழ்கிறேன் என்றும் காண்கிறேன். அதாவது யாரோ ஒருவர் எனக்குள் இருந்து நான் ஒரு விதமாக நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நான் நிச்சயமாக நினைக்கிறேன் ஒரு மரத்தின் உள்ளோ, ஒரு கல்லினுள்ளோ சென்று பார்த்தால் அப்படி இருக்காது என்று. அதுபோலவே தெருவில் உள்ள எல்லா மனிதர்களும் நான் பெற்ற கடிதத்தை பெற்றிருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். ஒரு கல் இருக்கிறது என்றால் அது புவியீர்ப்பு விசைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது நான் எதிர்பார்க்க வேண்டியதே, இங்கு எனக்கு கடிதத்தை அனுப்பியவரோ நான் எனது மனித இயல்பு விதிக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று என்னிடம் சொல்லுகிறார். கல்லின் இயல்புக்குகட்டாயமாக அது கீழ்ப்படிந்தாகவேண்டும்என்றுஅதைக்கட்டாயப்படுத்துகிறார். நான் அவ்விரு இடங்களிலும் கடிதங்களை அனுப்புகிறவரை காண்கிறேன். உண்மைக்கு பின் இருக்கும் வல்லமையாக, இயக்குபவராக மற்றும் வழிநடத்துபவராக.

நான் செல்ல வேண்டிய வேகத்தை விட அதிகமாக செல்கிறேன் என்று எண்ணி விடாதீர்கள். கிறிஸ்தவ இறையியல் இருந்து இன்னும் நூறு மைல்களுக்கு மேலாக தள்ளி நான் இருக்கிறேன். நான் சொன்னது எல்லாம் ஏதோ ''ஒன்று'' இந்த பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. அந்த ஒன்று, என்னை சரியானதைச் செய் என்று உந்தக் கூடிய சட்டமாக இருக்கிறது. அது என்னைப்பொறுப்புள்ளவனாகவும் தவறுகள் செய்ய இணக்கமற்றவனாகவும் இருக்கிறது.

நமக்குத் தெரிந்த வேறு எதையும் விட இது ஒரு மனதைப் போன்றது என்று நாம் கருத வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இதற்கு மேலாக பொருள் என்னும் ஒன்றே நமக்குத் தெரிந்த விஷயமாக உள்ளது. ஒரு பொருள் நமக்கு போதிக்கிறது என்று கற்பனை கூட செய்ய முடியாது. ஆனால் அதற்காக குறைந்தபட்சம் ஒரு நபரைப் போலவும் அதிகபட்சம் மனதைப் போலவும் அது இருக்க வேண்டியது இல்லை. வருகிற அத்தியாயத்தில் இன்னும் இதைக் குறித்து ஏதேனும் கண்டுபிடிக்க முடியுமா என்று காணலாம். ஆனால், ஒரு எச்சரிப்பின் வார்த்தை. கடந்த நூறு ஆண்டுகளாக தேவனைக்குறித்த வழவழப்பான பேச்சுக்களைக் கேட்டிருப்பீர்கள். நான் கொடுக்கப்போவது அதுவல்ல. நீங்கள் அது அனைத்தையும் வெட்டி எறிந்து விடலாம்.

**கவனிக்க வேண்டியது:** இப்பகுதியை நான் ரேடியோவில் விளக்கியபோது சுருக்கி பொருள்முதல்வாத கண்ணோட்டம் மற்றும் மத சம்பந்தமான கண்ணோட்டத்தை மட்டுமே குறிப்பிட்டு இருந்தேன். ஆனால், இந்த பகுதி முழுமை அடைய, உயிர் சக்தி தத்துவத்தையும் அல்லது படைப்பு பரிணாமம் அல்லது வெளிப்படும் பரிணாமம் என்ற இடைநிலையில் இருக்கும் இக்கருத்துக்களையும் குறிப்பிட்டாக வேண்டும். இதனுடைய புத்திசாலித்தனமான வெளிப்பாடு பெர்னாட்ஷாவின்[1] புத்தகங்களிலும் வேலைகளிலும் உள்ளது, ஆனால் மிக ஆழமானவை பெர்க்ஸனின்[2] வேலையில் உள்ளது. ஒரு சிறு வடிவிலிருந்து எப்படி மனிதன் உருவானான் என்பதற்கு, அது தற்செயலாக அல்ல, உயிர்சக்தி பாடுபட்டதினால் மற்றும் நோக்கத்தோடு இருந்ததினால் என்று இந்த கண்ணோட்டத்தை கொண்ட மக்கள் கூறுவர்.

இப்படி மக்கள் சொல்லும் போது அவர்கள் மனதை உடைய ஒன்றைப் பற்றி பேசுகிறார்களா இல்லையா? என்று கேட்க வேண்டும். அதற்கு ஆம் என்பார்களாகில், ஒரு மனம் வாழ்வைக் கொடுத்து வாழ வைத்து அதை பூரணப்படுத்துகிறது என்றால், அது தான் உண்மையான தேவன். அவர்களுடைய பார்வையில் மதப்பார்வை என்பதற்கு ஒத்ததே இது. அவர்கள் ஒருவேளை, இல்லை என்பார்களானால், மனம் என்று ஒன்று இல்லாமல் எப்படி ஒன்று பாடுபடவோ அல்லது நோக்கத்தோடு செயல்படவும் முடியும். அது, அவர்கள் கண்ணோட்டத்திற்கு ஒரு மரண அடி போலவே தோன்றுகிறது. படைப்பு நிலை பரிணாமத்தை பலர் ஏன் நம்புகிறார்கள் என்றால், அது தேவனை நம்புவதற்கு இணையான உணர்வுபூர்வமான ஆறுதலை தருகிறது. மேலும்

1 Bernard Shaw
2 Bergson

விருப்பமில்லாத பின்விளைவுகளைத் தருவது இல்லை. நீங்கள் நன்றாக உணரும்போது, நாள் பிரகாசித்துக் கொண்டிருக்கும்போது, இந்த முழு பிரபஞ்சம் ஒரு சாதாரண அணுக்களின் ஆட்டம் என்று நீங்கள் நம்ப விரும்பாத போது, ஒரு வினோதமான விசை பல நூற்றாண்டுகளாக உருண்டு கொண்டு உங்களையும் அதன் முகட்டின் மேல் சுமக்கிறது என்று யோசிக்க நன்றாகவே இருக்கும். மறுபுறம், நீங்கள் ஈனமான ஒன்றை செய்ய விரும்பினால், அப்பொழுது உயிர் விசை ஒரு குருட்டு விசையாக மாத்திரமிருந்து, ஒரு ஒழுக்கமும் மனமும் இல்லாது இருப்பதால், அது நாம் சிறுவயதில் இருந்து கற்றறிந்த கண்டிப்புக்குரிய தேவனைப் போல இராமல், அது ஒரு அடக்கி வைக்கப்பட்ட தேவனாக இருக்கும். நீங்கள் உங்களுக்கு வேண்டிய நேரம் அதை செயல்பட வைக்கலாம். ஆனால் அது உங்களை தொந்தரவு செய்யாது. அது மதத்திற்குரிய எல்லா சுகத்தையும் தரும் மற்றும் அதற்கு எந்தச்செலவும் இல்லை. உலகம் இதுவரைக் காணாத விருப்பத்திற்குரிய சிந்தனை தான் அந்த உயிர் விசையா?

# 5. நாம் அசௌகரியம் ஆவதற்கு ஒரு காரணம் உண்டு

ஒழுக்க விதியில், யாரோ ஒருவர் அல்லது ஏதோ ஒன்று உண்மையில் நம்மை பௌதிக பிரபஞ்சத்திற்கு அப்பால் இருந்து நடத்துகிறது என்ற கருத்துடன் எனது கடைசி அத்தியாயத்தை முடித்தேன். நான் அந்த குறிப்பிற்கு வந்த பொழுது உங்களில் பலருக்கும் ஒருவித எரிச்சல் வந்திருக்கும். நான் உங்களிடம் தந்திரமாக விளையாடி விட்டேன் என்று நினைத்திருப்பீர்கள். நான் கவனமாக தத்துவத்தை பேச வந்தது போன்று மூடி மொழுகினேன் ஆனால், உண்மையிலேயே அது மத சலசலப்பு எனவும் யோசித்து இருப்பீர்கள். நான் ஏதாவது புதிதாக சொல்ல வந்திருந்தால் அதைக் கேட்பதற்கு நீங்கள் தயாராக இருப்பதாக நீங்கள் உணர்ந்திருக்கலாம்; ஆனால் அது மதமாக மாறினதால், நல்லது, உலகம் அதை ஏற்கனவே முயற்சித்துவிட்டது, இப்போது உங்களால் கடிகாரத்தை பின்னோக்கி கொண்டு போக முடியாது என்று நினைக்கலாம். இதைப்போலவே யாரேனும் உணர்வீர்களாகில் உங்களிடம் மூன்று காரியம் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, கடிகாரத்தை பின்னோக்கி செலுத்துவது என்பது பற்றி ஒரு வார்த்தை. நான் கடிகாரத்தை பின்னோக்கி செலுத்துங்கள் எனக் கூறும் போது நான் வேடிக்கையாகச் சொல்கிறேன் என்று நினைத்திருக்கலாம். ஒரு கடிகாரம் தவறாக நேரத்தைக் காட்டினால் அதை சரி செய்ய பின்னோக்கி செலுத்த வேண்டும் என்பது விவேகமான காரியமில்லையா? ஆனால், கடிகாரத்தை பற்றி பேசுவதில் இருந்து முழுவதுமாக விலகிக் கொள்கிறேன். நம் அனைவரின் தேவையும் முன்னேறிச் செல்வதே, முன்னேறுவது என்றால் நீங்கள் செல்ல நினைக்கும் இடத்திற்கு அருகில் நெருங்குவதை ஆகும். ஒரு வேளை நீங்கள் தவறான ஒரு திருப்பத்தை எடுத்து இருப்பீர்களாகில், நீங்கள் முன்னேறிச் செல்வது என்பது எந்த விதத்திலேயும் உங்களைச் சேர வேண்டிய இடத்திற்கு நெருங்கச் செய்யாது. நீங்கள் தவறான சாலையில் இருக்கும் பட்சத்தில் முன்னேற்றம் என்பது தவறான சாலையிலிருந்து சரியான சாலைக்கு நேராக உங்களைத் திருப்பிக் கொள்வதே, அதுவே முன்னேறிச் செல்லுதல் என்பதாகும். இந்தக் காரியத்தில் எந்த மனுஷன் சீக்கிரமாக தனது



வழியை சரி செய்து சரியானத் திருப்பத்தில் திருப்புகிறானோ அவனே அதிகம் முன்னேற்றம் அடைந்த மனிதன் ஆவான். நாம் எண் கணிதம் செய்யும்போது இதை

கவனித்திருப்போம். ஒரு கணிதக் கணக்கை நான் தவறாக ஆரம்பித்துவிட்டேன் என்றால் நான் எவ்வளவு சீக்கிரமாக அதை உணர்ந்து பின் சென்று கணக்கை முழுவதுமாக முதலிலிருந்து செய்ய ஆரம்பிக்கிறேனோ அவ்வளவு சீக்கிரமாகத் தான் நான் முன்னேற முடியும். ஒரு தவறை ஒத்துக்கொள்ளாமல் பிடிவாதமாக இருப்பதினால் எந்த முன்னேற்றமும் வரப்போவதில்லை. இப்பொழுதும் நிகழ்காலத்தில் இருக்கும் உலகத்தை பார்த்தால் மனித இனம் மிகப்பெரிய தவறு செய்கிறது என்பதை தெள்ளத் தெளிவாக பார்க்க முடியும். நாம் தவறான சாலையில் இருக்கிறோம். அப்படியானால் நாம் திரும்பிச் செல்லத்தான் வேண்டும். திரும்பிச் செல்வதே விரைவான வழி.

இரண்டாவதாக, இது இன்னும் மத சலசலப்பாக மாறவில்லை. எந்த ஒரு மதத்தின் தேவனைக் குறித்தும் பேசும் அளவிற்கு நாம் செல்லவில்லை. இன்னும் சொல்லப் போனால் ‘‘கிறிஸ்தவம்’’ எனக் குறிப்பிடப்படும் அந்த மதத்தைப் பேசும் அளவிற்கு அல்ல. ஒழுக்க விதியின் பின்னால் ஏதோ ஒன்று அல்லது யாரோ ஒருவர் இருக்கிறார் என்பது வரை மட்டும் வந்திருக்கிறோம். நாம் வேதாகமத்தில் இருந்தோ அல்லது தேவாலயங்களில் இருந்தோ எதையும் எடுக்கவில்லை. இந்த யாரோ ஒருவரை பற்றி நம்மால் என்ன கண்டுபிடிக்க முடியும் என்பதைப் பார்க்க முயற்சிக்கிறோம். அப்படி நாம் செய்யும்போது நாம் கண்டுபிடிக்கும் அந்த ஒன்று நமக்கு மிகவும் அதிர்ச்சி ஊட்டுவதாக உள்ளது. அந்த யாரோ ஒருவரைப் பற்றி நமக்கு இரு துண்டு ஆதாரங்கள் உண்டு. ஒன்று, அவர் உருவாக்கிய இந்த பிரபஞ்சம். அந்த ஒரே ஒரு ஆதாரத்தை வைத்து பார்த்தால் அவர் ஒரு மாபெரும் கலைஞர். ஏனென்றால், இந்த பிரபஞ்சம் மிக அழகிய இடம். ஆனால், அவர் இரக்கமற்றவராகவும் மனிதனுடைய நண்பராகவும் இல்லாதிருக்கிறார். ஏனெனில் இந்த பிரபஞ்சம் மிக ஆபத்தானது மற்றும் பயங்கரமானது. இன்னும் ஒரு ஆதாரத்துண்டு என்னவென்றால், அவர் நம் மனதினுள் வைத்திருக்கும் ஒழுக்க விதி என்பதே. இது நமக்கு உள்ளாக இருக்கும் தகவலாக இருப்பதால் இது ஒரு சிறந்த ஆதாரம்.

ஒரு மனிதனை அறிய அவன் பேசுவதை கேட்க வேண்டும் அவன் கட்டின வீட்டை மட்டும் கொண்டு அவனைக் குறித்து அதிகம் தெரிந்து கொள்ள முடியாது. அது போலவே தேவனைப் பற்றி பிரபஞ்சத்தை மட்டும் கொண்டு நன்றாக அறிந்து கொள்ள முடியாது. மாறாக ஒழுக்க விதியில் இருந்து அதிகம் அறிந்து கொள்ளலாம். இந்த இரண்டாவது ஆதாரத்திலிருந்து நாம் ஒரு முடிவுக்கு வரலாம். அதாவது, இந்த பிரபஞ்சத்திற்கு பின் இருக்கும் ஜீவனுக்கு, சரியான நடத்தை என்பதன் மீது அதிக ஆர்வம் இருக்கிறது. அதற்கு நியாயமாக செயல்படுதல், சுயநலமில்லாதிருத்தல், தைரியமாய் இருத்தல், நல்ல விசுவாசம், நேர்மை மற்றும் உண்மையோடு இருத்தல் என்பதின் மீதும் அதிக ஆர்வம் இருக்கிறது. இதைப் பார்க்கும்போது கிறிஸ்தவம் மற்றும் பிற மதங்கள் கூறும் ஒன்றை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அது என்னவெனில், ‘‘தேவன் நல்லவர்’’ என்பதே. நாம் அதிக விரைவாக அதற்குள் செல்லவேண்டாம். ஒழுக்க விதியானது தேவன் நல்லவர் என்று எண்ணுவதற்கு எந்த இடமும் கொடுக்கவில்லை. அவர் இனிமையானவர், மென்மையானவர் அல்லது அனுதாபம்

கொள்பவர் என்று எதையும் சொல்வதில்லை. ஒழுக்க விதியானது, வலுவானது மற்றும் மிகவும் உறுதியானது. அது சரியானக்காரியத்தை செய்யச் சொல்லும் அது எவ்வளவு வலி மிகுந்தது, எவ்வளவு அபாயகரமானது, எவ்வளவு கடினமானது என்று எதைக் குறித்தும் கவலைப்படாமல் அதைச் செய்யச் சொல்லும். தேவன் இந்த ஒழுக்க நெறியை போலவே இருப்பாரானால் அவர் மென்மையானவர் அல்ல. இந்த நேரத்தில் நல்ல தேவன் என்பவர் மன்னிக்கக் கூடிய தேவனே என்பதன் அர்த்தத்தைப் பேசுவதில் பிரயோஜனமே இல்லை.

நீங்கள் மிகவும் விரைவாக செல்கிறீர்கள். ஒரு ஆள் மட்டுமே மன்னிக்க முடியும். இன்னும் நாம் ஆள்தத்துவமான தேவனைப் பற்றி பேசவில்லை. நாம் பேசுவது ஒழுக்கத்திற்கு பின்னாக இருந்து செயல்படும் மனதைப் போன்ற ஒன்றைப் பற்றி மட்டுமே வேறு ஒன்றும் இல்லை. ஆனாலும் இது மனிதனைப் போல இல்லாமலும் இருக்கலாம். அது ஒரு தனித்துவம் இல்லாத வெறும் மனமாக இருக்குமானால் அதனிடம் நீங்கள் போய் இம்முறை மன்னித்துவிடு என்று கேட்பதில் எந்த அர்த்தமும் இருக்காது. எப்படி என்றால் ஒரு கணக்கை தவறாகச் செய்ததற்கு பெருக்கல் வாய்ப்பாட்டிடம் சென்று இந்த முறை தவறாய் கணக்கு போட்டதற்கு என்னை விட்டு விடு என்றுக் கூற முடியாதது போலவே. நீங்கள் தவறான பதிலையே பெறுவீர்கள். அப்படி தேவன் ஒருவர் இருக்கிறார் என்று சொல்லி ஒரு பிரயோஜனம் இல்லை. ஆளுமையற்ற முழுமையான நன்மை ஒன்று தேவனாக இருந்தால் உங்களுக்கு அவரைப் பிடிக்கப்போவதுமில்லை நீங்கள் அவரைக் கண்டு கொள்ளப்போவதுமில்லை.

பிரச்சனை என்னவென்றால், உங்களுக்குள்ளேயே, ஒரு பக்கம் தேவன் என்பவர் மனிதர்களின் பேராசையை, வித்தைகளை மற்றும் சுரண்டல்களை ஆதரிக்கவில்லை என்பதை எல்லாம் ஏற்று உடன்பாடு உள்ளவர்களாக உள்ளீர்கள். நீங்கள் உங்கள் விஷயத்தில் மாத்திரம் கொஞ்சம் அனுசரித்து விட்டுவிடும்படி, அதுவும் இந்த முறை மாத்திரம் விட்டுவிடும்படி எதிர்பார்க்கலாம். உங்கள் ஆழ்மனதில் உங்களுக்கு நன்றாக தெரியும், அப்படி தேவன் அதை ஆதரித்தால், அவர் நல்லவர் இல்லை என்று. மறுபக்கத்தில் நமக்கு தெரியும் முழுமையான நன்மை என்று ஒன்று இருக்குமானால், அது நாம் செய்யும் பெரும்பாலானவற்றை வெறுக்கும் என்று. அதுதான் நாம் இருக்கும் இக்கட்டான நிலை. இந்த பிரபஞ்சம் முழு நன்மையால் ஆளுகை செய்யப்படாவிட்டால் நம்முடைய எல்லா முயற்சிகளுமே தொலைதூரத்தில் நம்பிக்கை இல்லாததாக இருக்கும். ஆனால் அப்படி ஒன்று இருக்குமானால் நாம் ஒவ்வொரு நாளும் நம்மை அதற்கு எதிரியாக்கிக் கொண்டு இருக்கிறோம். நாளைய தினத்திலும் நாம் எந்த முன்னேற்றத்தையும் காட்டப் போவதில்லை. ஆதலால் நம் விஷயத்தில் நம்பிக்கை முற்றிலும் அற்று விடுகிறது. அது இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. இருந்தும் ஒன்றும் முடியாது. தேவன் என்பவர் தான் ஒரே ஆறுதல். அவர் தான் பயங்கரத்தின் உச்சமானவரும் கூட. நமக்கு மிகத் தேவையானவரும் அவரே, நாம் அஞ்சி ஒளிய வேண்டியவரும் அவரே. நமக்கு உறைவிடம் அவரே. ஆனால், நாம் அவரையே நமக்கு எதிரியாக்கிக் கொண்டுள்ளோம். சில மனிதர்கள் அப்படி ஒரு

முழுமையான நன்மையைக் காண்பது வேடிக்கையாக இருக்கும் என்று பேசுவர். அவர்கள் பேச்சை மறுபடியும் அவர்கள் யோசித்தாக வேண்டும். அவர்கள் இன்னும் மதத்துடனே விளையாடிக் கொண்டே இருக்கின்றனர். நன்மையானது என்பது பெரிய பாதுகாப்பு அல்லது பெரிய ஆபத்து. நீங்கள் அதற்கு எப்படி எதிர் செயலாற்றுகிறீர்கள் என்பதை பொறுத்தது அது. நாம் தவறாகவே எதிர் செயல் ஆற்றியிருக்கிறோம்.

இப்பொழுது எனது மூன்றாம் குறிப்பு வருகிறது. இப்படி சுற்றி வளைத்து நான் சொல்லவரும் காரியத்தை சொல்ல வருவதால் நான் ஏமாற்றுகிறேன் என்று அர்த்தமல்ல, நான் எந்த தந்திரத்தையும் இங்கு காண்பிக்க முயற்சிக்கவில்லை. இதற்கு என்னிடம் வேறு காரணம் உண்டு. எனது காரணம் என்னவென்றால் நான் விளக்கிக் கொண்டிருக்கும் உண்மைகளை விளக்காவிட்டால் கிறிஸ்தவம் என்ன என்பதன் பொருள் விளங்காது. பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்றுக் கொள்ளுங்கள் என்று கிறிஸ்தவம் கூறுகிறது. ஆதலால், தன்னிடம் மன்னிக்கப்பட வேண்டியது என்று எதுவும் இல்லை மற்றும் தனக்கு மன்னிப்பு தேவையில்லை என்று சொல்பவர்களுக்கு கிறிஸ்தவத்தில் சொல்ல எதுவும் இல்லை. ஒரு ஒழுக்க விதி இருக்கிறது என்றும் அதற்கு பின்னாக ஒரு வல்லமை இருக்கிறது என்றும் அந்த நீதியை மீறிவிட்டு அந்த வல்லமைக்கு எதிராய் தவறு செய்து விட்டேன் என்ற உணர்வு வரும்போது கிறிஸ்தவம் பேசத் துவங்குகிறது. நீங்கள் பலவீனமாய் இருக்கிறீர்கள் என்பதை அறிந்த உடன் தான் நீங்கள் மருத்துவர் கூறுவதைக் கேட்பீர்கள்.

நாம் எவ்வளவு தேவையுள்ள இடத்தில் இருக்கிறோம் என்பதை உணர ஆரம்பிக்கும் போதே கிறிஸ்தவர்கள் பேசுவது நமக்கு புரிய ஆரம்பிக்கும். நாம் எப்படி நன்மையை வெறுப்பதும் நேசிப்பதுமாக இந்த நிலைமைக்கு வந்தோம் என்பதற்கு அவர்கள் விளக்கம் அளிக்கிறார்கள். கடவுள் என்பவர் எப்படி உருவமில்லாத மனமாக ஒழுக்க நியதிக்குப் பின் இருக்கிறார், இருந்தும் அவர் ஒரு நபராகவும் இருக்கிறார் என்பதை அவர்கள் விளக்குகிறார்கள். இந்த நம்மால் பூர்த்தி செய்ய முடியாத நீதியை நமக்காக கடவுளே எப்படி மனிதனாக வந்து பூர்த்தி செய்து மனிதனை கடவுளின் மறுப்பில் இருந்து காப்பாற்றுகிறார் என்று கிறிஸ்தவர்கள் விளக்குகிறார்கள். இது ஒரு பழமையான கதை இதனுள் நீங்கள் செல்ல விரும்பினால் என்னைவிட இதைக்குறித்துப் பேச அதிக அதிகாரம் உள்ளவர்களிடம் போய் விசாரித்துக் கொள்வீர்கள் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. நான் இங்கு செய்வதெல்லாம் மக்களே உண்மையை நேருக்கு நேர் சந்தியுங்கள் என்று கூறுவது தான். கிறிஸ்தவர்கள் பதிலளிப்பதாக சொல்லும் கேள்விகளை புரிந்து கொள்ளுங்கள் என்று கூறுகிறேன். அவை மிகவும் பயங்கரமான உண்மைகளே. மனதிற்கு உகந்த ஏதோ ஒன்றை சொல்ல எனக்கும் ஆசைதான். ஆனால், எது உண்மை என்று நான் நினைக்கிறேனோ அதையே நான் சொல்ல முடியும்.

ஆம் உண்மைதான் தொலைதூர ஓட்டத்தின் போது கிறிஸ்தவ மதம் அளவற்ற ஆறுதலைக் கொடுக்கும். ஆனால், அது ஆறுதலில் தொடங்கவில்லை அது திகைப்பிலேயே தொடங்குகிறது. அதையே நான் விவரித்தேன். அந்த திகைப்பினுள் செல்லாமல் ஆறுதலுக்குள் செல்ல முயன்றால் அதில் ஒரு பயனும் இல்லை. போர் மற்றும் எல்லாக் காரியத்திலும் உள்ளது போலவே மதத்திலும் தேடுவதினால் கிடைக்காத ஒன்று ஆறுதலே. நீங்கள் உண்மையைத் தேடும் போது இறுதியில் ஆறுதல் கிடைக்கும். ஆனால், ஆறுதலைத் தேடினால் உங்களுக்கு ஆறுதலும் கிடைக்காது உண்மையும் கிடைக்காது. உலகம் பேசும் விருப்பத்திற்கேற்ற பேச்சு முதலில் வழவழப்பாகவும் இன்பமான கற்பனையாகவும் இருந்தாலும், அது விரக்தியில் தான் முடியும். நம்மில் பலரும் உலகளாவிய அரசியலைக் குறித்த உலகப்போருக்கு முந்தைய நம்முடைய விருப்பமான எண்ணங்களை விட்டு ஓய்ந்து விட்டோம். மதத்தை குறித்தும் நாம் அதையே செய்ய வேண்டிய நேரம் இது.

# பகுதி இரண்டு

–

# கிறிஸ்தவர்களின் நம்பிக்கை

# 1. தேவனைக்குறித்த மாற்றுக் கருத்துக்கள்

கிறிஸ்தவர்கள் எதை நம்புகிறார்கள் என்று உங்களிடத்தில் சொல்லும்படியாக கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறேன். கிறிஸ்தவர்கள் நம்ப அவசியமில்லாத ஒரு கருத்தைக் கூறி, நான் உங்களிடத்தில் அதைச் சொல்ல ஆரம்பிக்கிறேன். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், மற்ற எல்லா மதங்களும் முற்றிலும் தவறு என்று நம்பவேண்டியதில்லை. நீங்கள் ஒரு நாத்திகராக இருந்தால், உலகத்திலுள்ள அனைத்து மதங்களுக்குமுள்ள முக்கியக் கருத்தே, ஒரு மிகப்பெரிய தவறு என்று நம்பவேண்டும். ஆனால், நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், இந்த எல்லா மதங்களிலும், சில வினோதமான நம்பிக்கைககளிலும் கூட, சத்தியத்தைப்பற்றி ஒருசில சிறு குறிப்புகளாவது உள்ளன என்று சுதந்திரமாகச் சிந்திக்கலாம்.

நான் ஒரு நாத்திகனாக இருந்தபோது, பெரும்பாலான மனித இனங்கள், தங்களுடைய வாழ்க்கையின் மிக முக்கியமான கேள்வியைக் குறித்து எப்போதுமே தவறு செய்கின்றனர் என்று, எனக்கு நானே அறிவுறுத்த முயற்சித்தேன். ஆனால், நான் கிறிஸ்தவனான போது, என்னால் ஒரு பரந்து விரிந்த பார்வையோடு பார்க்கமுடிந்தது. ஆனால் ஒரு கிறிஸ்தவனாக இருப்பது என்பது நிச்சயமாக, கிறிஸ்தவம் எந்த இடத்தில் மற்ற மதங்களில் இருந்து வேறுபடுகிறதோ, அந்த இடத்தில் கிறிஸ்தவம்தான் சரி என்றும் மற்றவை தவறு என்றும் சிந்திப்பதே ஆகும். அதாவது எப்படி எண்கணிதத்தில் ஒரு கணக்குக்கு ஒரு பதில் மட்டும் சரியாகவும் மற்ற எல்லா பதில்களும் தவறாகவும் இருக்கிறதோ அதைப்போலத்தான். ஆனால் சில தவறான பதில்கள் மற்ற தவறான பதில்களைக் காட்டிலும், சரியான பதிலுக்கு மிக நெருங்கி இருப்பதைக் காணமுடியும்.

மனிதகுலத்தின் முதல் மிகப்பெரிய பிரிவு எதுவென்றால், ஏதோ ஒரு தேவன் அல்லது தேவன்களின் மேல் நம்பிக்கைக் கொண்ட பெரும்பான்மையினரும், அப்படி நம்பிக்கை இல்லாத சிறுபான்மையினருமாகும். இந்த இடத்தில் கிறிஸ்தவம் பெரும்பான்மையினரின் வரிசையில் – அதாவது, மேற்கு ஐரோப்பிய பொருள் முதல்வாதி[1]களுக்கு எதிராகவும், பண்டைய கிரேக்கர், ரோமர், இன்றைய நாகரீகமற்றவர்கள்[2], இயல்பறிவாதிகள்[3], பிளாட்டோனியவாதிகள்[4], இந்துக்கள், முகமதியர்கள் என்பவர்களுடனும் சேருகிறது.

இப்பொழுது, அடுத்த பெரிய பிரிவுக்குள் கடந்து செல்கிறேன். தேவனின் மீது நம்பிக்கையுடைய அனைவரையும், அவர்கள் நம்புகிற தேவன் எப்படிப்பட்டவர் என்ற அடிப்படையில் பிரிக்கலாம். இந்த வகையில் இரண்டு மிகவும் வித்தியாசமான

1 Materialists
2 Modern Savages
3 Stoicism
4 Platonists

கருத்துக்கள் உள்ளன. அதில் ஒன்று, தேவன் நன்மை தீமைக்கு அப்பாற்பட்டவர் என்ற கருத்தாகும். ஆனால், சில மனிதர்களை பொறுத்தவரையில், இது நம் மனித கண்ணோட்டம் மட்டுமே என்பதாகும். உங்களுக்கு அறிவு பெருகப் பெருக எந்த ஒரு காரியத்தையும் நன்மை என்றோ தீமை என்றோ சொல்லுவது குறைந்துவிடும். இன்னும் பார்க்கப்போனால், எந்தக் காரியமும் ஒரு வகையில் நன்மையாகவும், ஒரு வகையில் தீமையாகவும் தெரியும். இவற்றில் ஒரு வித்தியாசமும் இல்லை என்று இவர்கள் சொல்லக்கூடும். இதன் விளைவாக, நீங்கள் தேவனுடைய கண்ணோட்டத்துக்கு அருகில் வர நினைப்பதற்கு வெகு முன்பாகவே, இந்த இரண்டிற்கும் உள்ள வித்தியாசம், முற்றிலுமாக மறைந்துவிடும் என்று இவர்கள் நினைக்கிறார்கள்.

புற்றுநோயை மோசமானது என்று கூறுகிறோம். ஏனென்றால் அது ஒரு மனிதனை கொல்லும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், ஒரு வெற்றிகரமான அறுவை சிகிச்சை



நிபுணர், புற்றுநோயை கொல்லுவதால், அவரையும் நாம் மோசமானவர் என்று கூறலாமே. இவை யாவும் நம்முடைய கண்ணோட்டத்தைப் பொறுத்தது. இதற்கு எதிரான மற்றொரு கருத்து என்னவென்றால், தேவன் நிச்சயமாக நல்லவர் மற்றும் நீதியுள்ளவர். அவர் ஒருதரப்பைச் சார்ந்தவர். அன்பை நேசித்து, வெறுப்பை வெறுக்கிறவர். நாம் ஒரு குறிப்பிட்ட வழியில் தான் நடக்க வேண்டும் அடுத்த வழியில் நடக்கக்கூடாது என்று எதிர்பார்ப்பவர் என்பதாகும். இந்த இரண்டு கருத்துகளில் முதலாவதான, தேவன் எல்லா நன்மைக்கும் தீமைக்கும் அப்பாற்பட்டவர் என்கிற கருத்து, சர்வமதம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கருத்தை ப்ருஷ்யாவின் மகா தத்துவ மேதையான ஹேகலும், நான் புரிந்து கொண்டவரையில், இந்துக்களும் கடைப்பிடித்தார்கள். அதற்கு மாறுபட்ட கருத்தை கடைப்பிடித்தவர்கள் யூதர்கள், முகமதியர் மற்றும் கிறிஸ்தவர்களாவர்.

தேவனைக் குறித்து சர்வமதம் மற்றும் கிறிஸ்தவத்தின் கருத்துக்களுக்கு நடுவில் உள்ள இந்தப் பெரிய வித்தியாசத்தை தவிர்த்து மற்றொரு வித்தியாசமும் உண்டு. சர்வமதத்தினருடைய பொதுவான நம்பிக்கை என்னவென்றால், நீங்கள் உங்கள் சரீரத்துக்கு உயிரூட்டுவது போல, தேவன் இந்த பிரபஞ்சத்துக்கு உயிரூட்டுகிறார். பெரும்பாலும், இந்த பிரபஞ்சமே தேவன், அது இல்லை என்றால், தேவனும் இல்லை, இந்த பிரபஞ்சத்தில் நீங்கள் பார்க்கிற ஒவ்வொன்றும் தேவனின் ஒரு பகுதி என்று அவர்கள் நம்புகிறார்கள். கிறிஸ்தவத்தின் கருத்து இதில் முற்றிலும் வேறுபட்டதாகும். ஒரு மனிதன் ஓவியத்தை வரைவது போலவும், இசையமைப்பது போலவும், தேவன் இந்த பிரபஞ்சத்தை உருவாக்கினார் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஒரு ஓவியர் என்பவர் ஒரு ஓவியம் அல்ல. தன்னுடைய ஓவியம் அழிந்துபோனால் அவர் இறந்து விடப்போவதில்லை. ஒருவேளை நீங்கள் இவ்வாறு சொல்லக்கூடும், அவர் தனக்குரியதெல்லாவற்றையும் இதற்குள் செலுத்தி இருக்கிறாரே என்று. ஆனால் உண்மையில் நீங்கள் சொல்வது என்னவென்றால், அதனுடைய எல்லா அழகும்,

அதன்மேல் உள்ள ஆர்வமும், அவருடைய சிந்தனையில் இருந்து வெளிப்பட்டிருக்கிறது என்பதைத்தான். அவருடைய திறமையானது, அவருடைய சிந்தனையிலும் அவருடைய கைகளிலும் இருக்கக்கூடிய அதே வகையில், அந்த ஓவியத்தில் இருப்பதில்லை. சர்வமதத்தினருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையேயுள்ள இந்த வித்தியாசம், எப்படி, அந்த மற்றொரு வித்தியாசத்தோடு இணைந்திருக்கிறது என்பதை நீங்கள் கண்டுகொண்டீர்கள் என்று நினைக்கிறேன். நன்மைக்கும் தீமைக்கும் உள்ள வித்தியாசத்தை நீங்கள் மிகுந்த தீவிரத்தோடு அறிந்து கொள்ளவில்லையென்றால், இந்த உலகத்தில் நீங்கள் பார்க்கிற எந்த ஒரு காரியத்தையும் தேவனின் ஒரு பகுதி என்று இலகுவாக சொல்லிவிடமுடியும். ஆனால், நிச்சயமாக, சில காரியங்கள் மிகவும் தீமையானவை என்றும் தேவன் மிகவும் நல்லவர் என்றும் சிந்திப்பீர்களானால், உங்களால் அப்படிச் சொல்ல முடியாது.

தேவன் இந்த உலகத்திலிருந்து பிரிந்திருக்கிறார் என்றும், நாம் இந்த உலகத்தில் பார்க்கிற சில காரியங்கள், அவருடைய விருப்பத்துக்கு மாறானவை என்றும் நீங்கள் நம்ப வேண்டும். ஒரு புற்றுநோயை குறித்தோ அல்லது ஒரு சேரியை குறித்தோ கேள்வி எழும்போது, ஒரு சர்வமதத்தைச் சார்ந்தவர் இவ்வாறு கூறலாம் – ‘‘தேவனுடைய கண்ணோட்டத்தில் இருந்து மட்டும் உன்னால் பார்க்க முடிந்தால், இதுவும் தேவன்தான் என்று, நீ உணர்ந்து கொள்ளுவாய்’’ என்று. அதற்கு கிறிஸ்தவனுடைய பதில், ‘‘நாசமாய்ப் போகிற அர்த்தமற்ற வார்த்தைகளை பேசாதே’’ என்பது தான்.[1] ஏனெனில், கிறிஸ்தவம் ஒரு போராடுகிற மதமாகும். தேவன் உலகத்தை உண்டாக்கினார் என்று அது நினைக்கிறது. ஒரு மனிதன் ஒரு கதையை உருவாக்குவது போல, இடம் நேரம், உஷ்ணம் குளிர் மற்றும் எல்லா நிறங்கள் சுவைகள், எல்லா மிருகங்கள் காய்கறிகள், இவையெல்லாம், தேவன் தன்னுடைய சிந்தனையின் வெளிப்பாடாக உருவாக்கின காரியங்கள் என்று அது கூறுகிறது. ஆனால், தேவன் உருவாக்கின இந்த உலகத்தில், மிக அநேக காரியங்கள் தவறாக சென்றுவிட்டன என்றும், அதை மீண்டும் நாம் சரி செய்ய வேண்டுமென்று, தேவன் வலியுறுத்துகிறார் – அதாவது மிகவும் உரத்த சத்தத்தோடு வலியுறுத்துகிறார்– என்றும் அது கூறுகிறது.

இது நிச்சயமாக, இன்னும் ஒரு மிகப்பெரிய கேள்வியை எழுப்புகிறது. ஒரு நல்ல தேவன், இந்த உலகத்தை உருவாக்கினாரென்றால், அது ஏன் தவறாகப் போய்விட்டது? இந்தக் கேள்விக்கான கிறிஸ்தவ பதில்களை கேட்பதற்கு, நான் பல வருடங்களாக மறுத்தே வந்தேன். ஏனென்றால், ‘‘நீங்கள் என்ன கூறினாலும், உங்களுடைய வாதங்கள் எவ்வளவு புத்திசாலித்தனமாக இருந்தாலும், ஒரு அறிவார்ந்த சக்தியினால் இந்த உலகம் உருவாக்கப்படவில்லை என்ற வாதம், மிகவும் எளிமையாகவும்

1 ஒரு நேயர் ‘‘நாசமாய்ப் போகிற’’ என்கிற வார்த்தை, கீழ்த்தரமாக சபிப்பதாக இருக்கிறது, என்று குறை கூறினார். ஆனால், நான் நிச்சயமாக, அதே அர்த்தத்தில் தான், அந்த வார்த்தையைப் பேசுகிறேன். நாசமாய்ப் போகிற அர்த்தமற்ற காரியங்கள், தேவனுடைய சாபத்தின் கீழ் வருகின்றன. மேலும் அவை, தேவனுடைய கிருபை இல்லாவிட்டால், அதை நம்புகிறவர்களை நித்திய அழிவுக்கு நேராக நடத்திச் சென்றுவிடுகின்றன.

இலகுவாகவும் இருக்கிறதே. உங்களுடைய வாதங்கள் எல்லாம் ஒரு வெளிப்படையான காரியத்தை தவிர்ப்பதற்கான சிக்கலான முயற்சிகள் தான்'' என்றே நான் சிந்தித்தேன். ஆனால், அது என்னை மீண்டும் மற்றுமொரு சிரமத்துக்குள் தள்ளி விட்டது.

தேவனுக்கு எதிரான என்னுடைய வாதம் என்னவென்றால், இந்த பிரபஞ்சம் மிகவும் கொடூரமானதாகவும் அநியாயமானதாகவும் இருக்கிறது என்பதே. ஆனால், இந்த நியாயம் அநியாயம் என்ற இந்த சிந்தனை எனக்கு எங்கிருந்து வந்தது? ஒரு நேர்க்கோடு எப்படி இருக்குமென்று ஒரு மனிதனுக்கு தெரிந்திருந்தாலொழிய, ஒரு கோடு கோணலாக இருக்கிறது என்று அவன் கூறமுடியாது. இந்தப் பிரபஞ்சம் அநியாயமானதாக இருக்கிறது என்று நான் கூறினபோது, எதனோடு நான் அதை ஒப்பிட்டுப் பார்த்தேன்? முழுக் காட்சியும், துவக்கம் முதல் முடிவு வரை, தீமையாகவும் அர்த்தமற்றதாகவும் இருக்கிறது என்று நான் கூறினால், அந்தக் காட்சியின் ஒரு பகுதியாக இருக்கவேண்டிய நானே, ஏன் அதைக் கடுமையாக எதிர்க்கிறேன்? ஒரு மனிதன் நீரில் விழுந்துவிட்டால், தான் ஈரமாக இருப்பதை உணர்வான். ஏனென்றால், மனிதன் ஒரு நீர்வாழ் மிருகம் அல்ல. ஒரு மீன் ஈரமாக இருப்பதை ஒருபோதும் உணராதே.

நியாயத்தை குறித்த இந்த சிந்தனை, என்னுடைய தனிப்பட்ட கருத்தேயன்றி, வேறொன்றும் இல்லை என்று சொல்லி, அதை விட்டுவிட என்னால் நிச்சயமாக முடியும். ஆனால், நான் அப்படிச் செய்தால், தேவனுக்கு எதிரான என்னுடைய வாதமும் தரைமட்டமாகிவிடும். ஏனென்றால், இந்த உலகம் என்னுடைய தனிப்பட்ட கற்பனைகளை[1] திருப்தி செய்யாததினால் மட்டுமல்ல, உண்மையாகவே இந்த உலகம் அநியாயமாக இருக்கிறது என்கிற கருத்தை, என்னுடைய வாதம் சார்ந்திருந்தது. இப்படியாக, தேவன் இல்லை என்று, நான் நிரூபிக்க நினைத்த அந்தச் செயலே – அதாவது வேறு வார்த்தைகளில், முழு யதார்த்தமும் அர்த்தமற்றது என்று நான் சொல்லும்போது, அந்த யதார்த்தத்தின் ஒரு பகுதியான– என்னுடைய நியாயம் என்கிற அந்த சிந்தனை, முற்றிலும் அர்த்தம் நிறைந்தது என்று கருதவேண்டிய கட்டாயத்துக்கு, நான் தள்ளப்பட்டதைக் கண்டேன்.

இதை வைத்துப்பார்க்கும்போது, நாத்திகம் மிகவும் எளிமையாகத் தோன்றுகிறது. முழு பிரபஞ்சமும் அர்த்தமில்லாதது என்றால், அது அர்த்தமற்றது என்பதை நாம் கண்டுபிடித்திருக்கவே கூடாது. இது எப்படி இருக்கிறதென்றால், இந்த பிரபஞ்சத்தில் ஒளியே இல்லாமலிருந்து, அதனால் கண்களுள்ள உயிரினங்களும் இல்லாதிருந்தால், இருளாக இருக்கிறது, என்பதை நாம் அறியவே முடியாது. இருள் என்பது அர்த்தமற்றதாகிவிடும்.

1 fancies

## 2. படையெடுப்பு


சரி, நாத்திகம் மிகவும் எளிமையானதாகவே இருக்கட்டும். மிகவும் எளிமையான மற்றொரு பார்வையையும், நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். நான், அந்தப் பார்வையை, நீர்த்துப் போன கிறிஸ்தவம் என்று அழைக்கிறேன். இதில், பாவம், நரகம், சாத்தான், மற்றும் இரட்சிப்பு, ஆகியவற்றைக் குறித்த, கடினமான மற்றும் பயங்கரமான கோட்பாடுகளை ஒதுக்கிவைத்துவிட்டு இந்தப் பார்வை, பரலோகத்தில் ஒரு நல்ல தேவன் இருக்கிறாரென்றும், எல்லாம் சரியாக இருக்கிறது என்றும், மிகவும் எளிமையாகச் சொல்லுகிறது. இவை இரண்டும் சிறுவர்களுக்கான தத்துவங்கள்.

ஒரு எளிமையான மதம் வேண்டும் என்று கேட்பதினால், ஒரு நன்மையும் இல்லை. பார்க்கப்போனால், நிஜத்திலுள்ள விஷயங்கள் எதுவுமே எளிமையானவை அல்ல. அவைகள் பார்க்க எளிமையாகத் தோன்றுகின்றன, ஆனால் உண்மையில் இல்லை. நான் உட்கார்ந்திருக்கிற இந்த மேஜை, பார்க்க எளிமையாகத் தோன்றுகிறது: ஆனால், இது நிஜத்தில் எதனாலானது என்று ஒரு விஞ்ஞானியை உங்களுக்குச் சொல்லச் சொல்லுங்கள் – அணுக்களைக் குறித்த எல்லாவற்றையும், ஒளிக்கதிர்கள் எப்படி அந்த மேஜையின் மேல் பிரதிபலித்து, என்னுடைய கண்ணில் படுகிறது, அது என் பார்வை நரம்பையும் என் மூளையையும் என்ன செய்கிறது என்பதையும் சொல்லச் சொல்லுங்கள். ஒரு 'மேஜையைப் பார்ப்பது' என்கிற அந்தச் செயல், உங்களை முடிவில்லாத மர்மங்களுக்குள்ளும், சிக்கலான விஷயங்களுக்குள்ளும் தள்ளிவிடுகிறது என்பதை நீங்கள் காண முடியும். ஒரு சிறு குழந்தை சொல்லக்கூடிய குழந்தைகள் ஜெபம், பார்க்க மிக எளிதாக இருக்கும். ஆனால், நீங்கள் அதோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று நினைத்தால், நல்லது, நன்மையும் கூட. அப்படி நிறுத்தாமல் – இந்த நவீன உலகம் பொதுவாக அதோடு நிறுத்தவும் செய்யாது – இன்னும் சற்று தொடர்ந்து, இங்கு உண்மையாக என்ன நடக்கிறது, என்று கேட்பீர்களானால், பின்னர் நீங்கள் சில கடினமான காரியங்களை அறிந்து கொள்ள உங்களை தயார்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் எளிமையானதற்கும் மேலான சில காரியங்களை கேட்டுவிட்டு, பின்னர் அந்த சில காரியங்கள் எளிமையாக இல்லை என்று குறைகூறுவது முட்டாள்தனமானது.

ஆனால் சாதாரணமாக, இந்த முட்டாள்தனமான முறை, தெரிந்தோ தெரியாமலோ, கிறிஸ்தவத்தை அழிக்க நினைக்கிற, முட்டாள்கள் அல்லாத மனிதர்களால் கடைபிடிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட மனிதர்கள், ஒரு ஆறுவயது குழந்தைக்கு பொருத்தமான ஒரு கருத்தாக கிறிஸ்தவத்தை ஏற்படுத்தி, அதைத் தாங்கள் தாக்குவதற்கு இலக்காக வைக்கிறார்கள். கிறிஸ்தவ கோட்பாடுகளை, நன்றாக கற்பிக்கப்பட்ட ஒரு பெரிய மனிதருக்குரிய புரிதலோடு, அவர்களுக்கு விளக்க முயற்சித்தால், தங்கள் தலை சுற்றுகிறது என்றும், எல்லாம் மிகவும் சிக்கலாக உள்ளது என்றும், உண்மையிலேயே ஒரு தேவன் இருந்தால் அவர் மதத்தை நிச்சயம் மிகவும்

எளிமையாக உருவாக்கியிருப்பார், ஏனென்றால் எளிமையானது தான் மிகவும் அழகானது என்றெல்லாம் குறை கூறுவார்கள். இப்படிப்பட்ட மனிதர்களுக்கு எதிராக, நீங்கள் எப்போதும் தற்காப்புடன் இருக்கவேண்டும். ஏனென்றால், அவர்கள் ஒவ்வொரு நிமிடமும் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டேயிருந்து, உங்கள் நேரத்தைத்தான் வீணடிப்பார்கள். தேவன் ''மதத்தை எளிமையாக உருவாக்கியிருப்பார்'' என்கிற அவர்களுடைய சிந்தனையையும் கவனியுங்கள். ஏதோ ''மதம்'' என்பது தேவன் கண்டுபிடித்த ஒன்று போலவும், அது, தன்னுடைய சொந்த இயல்பைக் குறித்து, முற்றிலும் மாற்றமுடியாத சில உண்மைகளை, அவர் நமக்கு அறிக்கையாகச் சொன்னது அல்ல என்பது போலவும் அது உள்ளது.

யதார்த்தமானது, சிக்கலாக இருப்பதுமட்டுமல்லாமல், என்னுடைய அனுபவத்தில், முரண்பாடாகவும் இருக்கிறது. அது நேர்த்தியாக இருக்காது, வெளிப்படையாக இருக்காது மற்றும் நாம் எதிர்பார்ப்பதைப்போலவும் இருக்காது. உதாரணத்துக்கு, பூமியும் மற்ற கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன என்பதை நாம் புரிந்து கொண்டபோது, இயற்கையாகவே, எல்லா கிரகங்களும் ஒரே விதமாக இருக்கும் என்று நாம் நினைக்கக்கூடும். ஒவ்வொன்றுக்கும் உள்ள இடைவெளி சமமாக இருக்கும் என்றோ, அல்லது அவைகள் இருக்கின்ற தூரங்கள், ஒரு குறிப்பிட்ட முறையில் அதிகரிக்கின்றது என்றோ, அல்லது எல்லாம் ஒரே அளவாக இருக்கிறது என்றோ, அல்லது சூரியனை விட்டு தூரம் செல்லச்செல்ல அவைகள் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ ஆகின்றன என்றோ நாம் சிந்திக்கக்கூடும். உண்மையில், நாம் பார்க்கக்கூடியவரையில், அவைகளுடைய அளவுகளிலோ தூரங்களிலோ எந்த ஒரு ஒழுங்குமுறையோ காரணகாரியமோ இல்லை. மேலும், அவைகளில் சிலவற்றுக்கு ஒரு நிலவும், சிலவற்றுக்கு நான்கு நிலவுகளும், ஒன்றுக்கு இரண்டு நிலவும், சிலவற்றுக்கு நிலவே இல்லாமலும், ஒரு சிலவற்றுக்கு அவைகளை சுற்றி ஒரு வளையமும் இருப்பதைப் பார்க்கிறோம்.



யதார்த்தமானது, உண்மையில் நாம் யூகிக்க முடியாத ஒன்றாக இருக்கிறது. நான் கிறிஸ்தவத்தை நம்புவதற்கு இது ஒரு காரணமாகும். நீங்கள் யூகிக்க முடியாத ஒரு மார்க்கமாக அது இருக்கிறது. நாம் எப்போதும் எதிர்பார்க்கக்கூடிய வகையான பிரபஞ்சத்தை அது நமக்கு வழங்குமென்றால், அது நாமே உருவாக்கிக்கொள்கிற ஒரு கட்டுக்கதை, என்று தான் நான் நினைப்பேன். ஆனால், உண்மையில் அது எவரும் உருவாக்கிக் கொள்ளக்கூடிய ஒரு காரியமாக இல்லை. அது, நிஜமான விஷயங்களுக்கு

இருப்பதைப்போல, ஒரு விசித்திரமான திருப்பத்தைக் கொண்டதாக இருக்கிறது. ஆகையால், நாம் இந்த சிறுவர்களுக்கான தத்துவங்களையும், இந்த மிக எளிமையான பதில்களையும், நமக்குப் பின்னாகத் தள்ளி, விட்டுவிடுவோம். பிரச்சனை எளிமையானது அல்ல. ஆதலால் பதிலும் எளிமையானதாக இருக்கப் போவதில்லை.

பிரச்சனை என்ன? ஒரு பிரபஞ்சம், அதிலுள்ள பெரும்பாலான காரியங்கள், வெளிப்படையான தீமையாகவும், ஆதலால் அர்த்தமற்றதாகவும் உள்ளன. ஆனால், அது தீமையாகவும் அர்த்தமற்றதாகவும் உள்ளது என்று அறிந்த நம்மைப் போன்ற உயிரினங்களும் அதிலுள்ளன. இங்கு இரண்டே இரண்டு பார்வைகள் தான், எல்லா யதார்த்தத்தையும் எதிர்கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. ஒன்று கிறிஸ்தவப் பார்வை. அதென்னவென்றால், ஒரு நல்ல உலகம், அது தவறாகப் போய்விட்டது. ஆனால், அது தான் எப்படி இருக்க வேண்டும் என்கிற ஞாபகத்தை, இன்னும் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது . அடுத்தது, இருமைவாதம்[1] என்று அழைக்கப்படக்கூடிய ஒரு பார்வை. இருமைவாதம் என்னவென்றால், எல்லாவற்றுக்கும் பின்பாக இரண்டு சமமான, சுதந்திரமாகச் செயல்படக்கூடிய சக்திகள் உள்ளன என்ற நம்பிக்கையாகும். அதில் ஒன்று நன்மை, மற்றொன்று தீமை. அவைகள் ஒன்றோடொன்று முடிவில்லாமல் போரிட்டுக் கொண்டிருக்கின்ற போர்க்களம்தான் இந்தப் பிரபஞ்சம், என்று அது கூறுகிறது. கிறிஸ்தவத்துக்கு அடுத்தபடியாக, இந்த இருமைவாதம் தான் மிகவும் திடமானதாகவும், அதிக அர்த்தமுள்ள நம்பிக்கையாகவும் சந்தையில் இருக்கிறது என்றே நான் எண்ணுகிறேன். ஆனால் அதில் ஒரு சிக்கல் மறைந்திருக்கிறது.

நன்மை மற்றும் தீமை ஆகிய இவ்விரண்டு சக்திகளும்– அவைகள் ஆவிகளோ அல்லது தேவன்களோ– ஒன்றுக்கொன்று சுதந்திரமாக இருக்கக்கூடியவை. அவைகள் இரண்டும் என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் இருக்கின்றன. இந்த இரண்டில் எந்த ஒன்றும், மற்றதை உருவாக்கவில்லை. தன்னைத்தான் தேவன் என்று கூறிக்கொள்வதற்கு இவை இரண்டிற்கும், ஒன்றைக் காட்டிலும் மற்றதற்கு அதிகமான அதிகாரம் எதுவும் இல்லை. ஒன்று வெறுப்பையும் கொடூரத்தையும் விரும்புகிறது. மற்றொன்று அன்பையும் இரக்கத்தையும் விரும்புகிறது. இவை இரண்டுமே தங்களுடைய பார்வை, சரி என்று வலியுறுத்துகின்றன. நாம் இதில் ஒன்றை நல்லசக்தி என்றும், மற்றொன்றை தீயசக்தி என்றும் எந்த அர்த்தத்தில் அழைக்கிறோம்? நாம் வெறுமென, ஒன்றைக்காட்டிலும் மற்றொன்றைப் பிடிக்கிறது என்று சொல்லுகிறோமா– அதாவது பாலைக் காட்டிலும் டீ பிடிக்கிறது என்பதைப் போல– அல்லது, இந்த இரண்டு சக்திகளும் தங்களைக் குறித்து என்ன நினைத்துக் கொண்டாலும் சரி, அல்லது மனிதர்களாகிய நாம், இந்த நிமிஷத்தில் எதை விரும்பினாலும் சரி, இதில் ஒன்று, தன்னைத்தான் நல்லது என்று நினைத்துக் கொள்ளுவதில், நிச்சயமாகத் தவறாகவும், நிச்சயமாகப் பிழையாகவும் இருக்கிறதென்று சொல்லுகிறோம்.

1 Dualism

இப்போது, நாம் வெறுமென, முதலாவதாக இருப்பதுதான் எனக்குப் பிடிக்கிறது என்று சொன்னால், பின்னர், நாம் நன்மை தீமை என்ற பேச்சையே முற்றிலுமாக விட்டுவிடவேண்டும். ஏனென்றால், எப்போதும் , உங்களுக்கு எது பிடிக்கிறது என்பதை விட, உங்களுக்கு எது பிடிக்க வேண்டுமோ, அதுதான் நன்மையாகும். ஆக, நன்மை என்று அழைக்கப்படுவது, எந்த உண்மையான காரணமும் இல்லாமல், உங்களுக்குப் பிடித்திருக்கிற அந்த பக்கத்தைச் சேருவதுதான் என்றால், நன்மை, நன்மை என்று அழைக்கப்படக்கூடிய தகுதியை இழந்துவிடும். ஆதலால், நாம் என்ன சொல்கிறோமென்றால், அந்த இரண்டு சக்திகளில் ஒன்று நிச்சயமாக தவறு என்றும் மற்றொன்று நிச்சயமாக சரி என்றும் சொல்லுகிறோம்.

ஆனால், நீங்கள் அப்படிச் சொன்ன அந்த நொடியில், அந்த இரண்டு சக்திகளோடும் சேர்த்து, மூன்றாவதாக ஒரு காரியத்தை இந்த பிரபஞ்சத்திலே வைக்கிறீர்கள். அதென்னவென்றால், நன்மை என்று அழைக்கப்படுவதற்கான ஒருவித சட்டம் அல்லது தரநிலை அல்லது விதி ஆகும். இதனோடு, அந்த இரண்டு சக்திகளில், ஒன்று ஒத்துப்போகிறது, மற்றொன்று ஒத்துப்போகத் தவறிவிடுகிறது. இந்த இரண்டு சக்திகளும், இந்தத் தரநிலை அல்லது விதியை வைத்து மதிப்பிடப்படுகிறபடியால், இந்த விதி அல்லது இந்த விதியை உண்டாக்கினவர், இவைகள் இரண்டுக்கும் இன்னும் பின்பாகவும், அவைகளுக்கு மேலாகவும் இருக்கிறார். மேலும், அவர்தான் மெய்யான தேவனாகவும் இருப்பார். உண்மையில், நாம் இவைகளை நன்மை என்றும் தீமை என்றும் அழைத்தது, எந்த அர்த்தத்திலென்றால், இவைகளில் ஒன்று, அந்த மெய்யான இறுதியான தேவனோடு சரியான உறவில் இருக்கிறது, மற்றொன்று தவறான உறவில் இருக்கிறது என்கிற அர்த்தத்தில்தான்.

இதே பகுதியை வேறுவிதமாகவும் நாம் கூறமுடியும். இருமைவாதம் உண்மையென்றால், அந்தத் தீயசக்தி, அது தீமையாகவே இருக்க விரும்புகிற ஒன்றாக இருக்கவேண்டும். ஆனால், யதார்த்தத்தில், தீமையை தீமைக்காகவே விரும்புகிற எந்த ஒரு அனுபவத்தையும் யாரிடமும் பார்க்க முடியாது. கொடுமையாக இருப்பது வேண்டுமானால், இதற்கு மிகவும் நெருங்கியிருக்கக்கூடிய செயலாக இருக்கும். ஆனால், நிஜவாழ்க்கையில் மனிதர்கள் கொடுமையாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன– ஒன்று, அவர்கள் கொடுமைக்காரர்களாக (சாடிஸ்டுகளாக) இருப்பதினால், அதாவது அவர்கள் பாலியல் வக்கிரமுள்ளவர்களாக இருப்பதினால், கொடுமை அவர்களுக்கு சிற்றின்பத்தை கொடுக்கக்கூடியதாக இருப்பதற்காக, அல்லது, கொடுமையின் மூலமாக அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய பணம், பலம் மற்றும் பாதுகாப்பிற்காக. ஆனால், இன்பம், பணம், பலம் மற்றும் பாதுகாப்பு, இவையெல்லாம் நல்ல காரியங்களாகும். இவைகளை தவறான முறையிலோ, அல்லது தவறான பாதையிலோ, அல்லது அளவுக்கு மிஞ்சியோ அடைய நினைப்பதில்தான் தீமை இருக்கிறது. இப்படிப்பட்ட மனிதர்களெல்லோரும் கெட்டவர்களே

அல்ல என்று, நான் நிச்சயமாக சொல்ல வரவில்லை. நான் சொல்லுவதென்னவென்றால், சரியாக ஆராய்ந்து பார்க்கும்போது, ஒரு நல்ல காரியத்தை, தவறான வழியில் அடைய நினைக்கும்போதுதான், அது தீமையாக மாறுகிறது என்பதே.

நன்மைக்காக மட்டுமே நீங்கள் நல்லவராக இருக்கமுடியும். ஆனால், தீமைக்காக மட்டுமே நீங்கள் தீயவராக இருக்கமுடியாது. நீங்கள் அன்பை உணராதபோதும், அது உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்காதபோதும், அன்பு சரியானது என்பதற்காகவே, ஒரு அன்பான செயலைச் செய்யமுடியும். ஆனால், ஒருவரும் கொடுமை தவறானது என்பதற்காகவே, ஒரு கொடூரமான செயலைச் செய்வதில்லை –அது அவர்களுக்கு இனிமையானதாகவோ, அல்லது பயனுள்ளதாகவோ இருந்தால் மட்டுமே அப்படிச் செய்கிறார்கள். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், நன்மை நன்மையாக இருப்பதினால் வெற்றி பெறும். ஆனால், அதே முறையில், தீமை தீமையாக இருப்பதினால், ஒரு நாளும் வெற்றி பெறமுடியாது. நன்மை, நன்மையானதாகவே இருக்கிறது. ஆனால் தீமை என்னவென்று கேட்டால், அது ஒரு கெட்டுப்போன நன்மை என்று சொல்லலாம். அப்படியானால், ஏதோ ஒன்று கெட்டுப்போவதற்கு முன்பாக, நல்லதாக இருந்திருக்க வேண்டும். சாடிஸத்தை, ஒரு பாலியல் வக்கிரம் என்று கூறுகிறோம். ஆனால், அதை வக்கிரம் என்று கூறுவதற்கு முன்னால், ஒரு இயல்பான நிலையில், பாலியல் எப்படி இருக்கும், என்று நீங்கள் முதலாவது அறிந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் உங்களால், எது வக்கிரம் என்பதைக் காணமுடியும். இதன் மூலமாக, நீங்கள் இயல்பான நிலையிலிருந்து வக்கிரத்தை விளக்க முடியும். ஆனால், வக்கிரத்திலிருந்து, ஒரு இயல்பான நிலையை விளக்க முடியாது.

இதைத்தொடர்ந்து பார்க்கும்போது, நல்லசக்தியோடு சமநிலையில் இருந்திருக்கவேண்டிய இந்த தீயசக்தி, நல்லசக்தி எப்படி நன்மையை விரும்புகிறதோ, அதேபோல தீமையை விரும்புகிற ஒரு கெட்ட ஆவியே ஆகும். அது கெட்டதாக இருக்கவேண்டுமானால், தீமையான வழியில் சில நல்ல காரியங்களை அடைய நினைக்க வேண்டும். அதற்கு முதலில் நன்மையாக இருந்து, பின்னர் வக்கிரமாக மாற்றப்பட்ட உந்துதல்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால், அது கெட்டதாக இருந்தால், அது அடைய நினைப்பதற்கான நல்ல காரியங்களையும், வக்கிரமாக மாற்றப்படுவதற்கு நல்ல உந்துதல்களையும், தானாகவே பெற்றுக் கொண்டிருக்க முடியாது. இவை இரண்டையும், அது அந்த நல்லசக்தியிடமிருந்துதான் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். அப்படியானால், அது சுதந்திரமானது அல்ல. நல்லசக்தியின் உலகத்தில் அது ஒரு பகுதியாக இருக்கிறது. அது, அந்த நல்லசக்தியினாலோ அல்லது இவை இரண்டிற்கும் மேலாக இருக்கின்ற ஒரு சக்தியினாலோ, உருவாக்கப்பட்டிருக்கிறது.

இதை இன்னும் சற்று எளிமையாகச் சொல்லலாம். தீமையாக இருப்பதற்கு, அதற்கு இருப்பு, அறிவாற்றல் மற்றும் உறுதி வேண்டும். ஆனால் இருத்தல், அறிவாற்றல், உறுதி ஆகிய இவையெல்லாம் நன்மையானவைகள். ஆகையால், அது இவைகளை,

நல்லசக்தியிடமிருந்துதான் பெற்றுக்கொண்டிருக்க வேண்டும். தீமையாக இருப்பதற்குக்கூட, அது தன்னுடைய எதிராளியினிடமிருந்து கடனாகவோ, அல்லது திருடியோதான் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. கிறிஸ்தவம் ஏன் எப்பொழுதும் சாத்தானை, ஒரு விழுந்த தூதன் என்று சொல்லுகிறது என்பதை, இப்பொழுது நீங்கள் பார்க்க ஆரம்பிக்கிறீர்களா? இது குழந்தைகளுக்காக சொல்லப்படுகிற வெறும் கதை அல்ல. அது, தீமை ஒரு ஒட்டுண்ணி, அது சுயமானது அல்ல என்கிற யதார்த்தத்தின், உண்மையான அங்கீகாரம் ஆகும். தீமை தொடர்ந்து செயல்படுவதற்கு வேண்டிய சக்திகள் யாவும், நன்மையினிடத்திலிருந்து பெற்றுக்கொண்டவைகளே ஆகும். ஒரு கெட்ட மனிதன், திறம்பட தீமையாக இருப்பதற்கு உதவி செய்கிற எல்லாக் காரியங்களும், தன்னில்தான் நல்ல காரியங்களாகவே இருக்கின்றன. அவை என்னவென்றால், தீர்மானம், புத்திசாலித்தனம், நல்ல தோற்றம், இருத்தல் ஆகியவைகளே. அதனால்தான், ஒரு கண்டிப்பான கண்ணோட்டத்தில், இருமைவாதம் இயங்காது என்பதைப் பார்க்கிறோம்.

உண்மையான கிறிஸ்தவம், (கிறிஸ்தவமும் தண்ணீரிலும் இருந்து முற்றிலும் வேறுபட்டு) மனிதர்கள் நினைப்பதைக் காட்டிலும், இருமைவாதத்துக்கு மிகவும் நெருங்கியிருக்கிறது என்பதை, நான் தாராளமாக ஒத்துக் கொள்கிறேன். புதிய ஏற்பாட்டை நான் முதலாவதாக வாசித்தபோது, எனக்கு மிகவும் ஆச்சரியத்தைத் தந்த ஒரு விஷயம் என்னவென்றால், அது ஒரு இருளின் அதிகாரம் இந்தப் பிரபஞ்சத்தில் இருப்பதைக் குறித்து அதிகமாகப் பேசியது. அந்த அதிகாரம், மரணம், நோய், பாவம் இவைகளுக்குப் பின்பாக இருக்கக்கூடிய சக்தியான, ஒரு வல்லமை மிகுந்த தீய ஆவியாகும். இதில் வித்தியாசம் எங்கே இருக்கிறது என்றால், கிறிஸ்தவம் இந்த இருளான அதிகாரம் தேவனால் உருவாக்கப்பட்டது என்றும், அது உருவாக்கப்பட்டபோது நன்மையாக இருந்து, பின்னர் தீமையாக மாறியது என்றும் நினைக்கிறது. இந்தப் பிரபஞ்சம் போர் செய்கிறது என்பதை இருமைவாதத்தோடு சேர்ந்து கிறிஸ்தவமும் ஒத்துக்கொள்கிறது. ஆனால், இந்தப் போர் இரண்டு தனிப்பட்ட சக்திகளுக்கு இடையேயான போர் என்று அதை நினைக்கவில்லை. இது ஒரு உள்நாட்டுப் போர், அதாவது கிளர்ச்சி என்றும், நாம் இந்த கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிய பிரபஞ்சத்தின் ஒரு பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றும் அது நினைக்கிறது.

எதிரி–ஆக்கிரமித்த பகுதி, அதுதான் இந்த உலகம். அதற்கு உரிமையான ராஜா எப்படி வந்துவிட்டாரென்றும், அதுவும் மாறுவேடத்தில் வந்துவிட்டார் என்பதையும் கூறும் கதைதான் கிறிஸ்தவம். மேலும் அவர் எதிரியின் திட்டத்தை நாசம் செய்யும்படியாக, ஒரு மிகப்பெரிய பிரச்சாரத்துக்கு நம் எல்லோரையும் அழைக்கிறாரென்றும் அது கூறுகிறது. நீங்கள் தேவாலயத்துக்குச் செல்லும்போது, நிஜத்தில் நீங்கள், உங்கள் நண்பர்களிடமிருந்து, வயர்லெஸ் மூலமாக ரகசியங்களை கேட்கிறீர்கள்– அதனால்தான் எதிரியானவன் நாம் போய்விடுவதை எப்படியாவது தடுக்கவேண்டுமென்று ஏங்குகிறான். அவன், நம்முடைய தற்பெருமை, சோம்பல், அறிவுசார்ந்த பெருமை இவைகளின் மூலமாக அதைச் செய்ய நினைக்கிறான். என்னிடத்தில் யாராவது ஒருவர் இப்படி

கேட்கலாம், ‘‘அப்படியானால், நீங்கள் இந்த நேரத்தில்தான் நம்முடைய பழைய நண்பனாகிய சாத்தானை, மீண்டும் அறிமுகம் செய்துவைக்கப் போகிறீர்களா?– அவனுடைய காலின் குளம்புகளோடும் கொம்போடும் மற்ற எல்லாவற்றோடும்?’’ என்று. சரி, நான் எந்த நேரத்திலே சொல்லுகிறேன் என்பதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியவில்லை. நான் அவனுடைய காலில் உள்ள குளம்புகளையும் கொம்பையும் குறித்துச் சொல்லப்போவதுமில்லை. ஆனால், மற்ற எல்லாவிதத்திலும் என்னுடைய பதில், ‘‘ஆமாம். அதைத்தான் சொல்லப் போகிறேன்’’ என்பதாகும். அவனுடைய வெளிப்புறத்தோற்றம் குறித்து எதையும் அறிந்திருக்கிறேன் என்று நான் சொல்லமுடியாது. அவனைக்குறித்து இன்னும் நன்றாக அறிந்து கொள்ளவேண்டும் என்று யாராவது கூறினால், அந்த மனிதரிடம் நான் இப்படியாகக் கூறுவேன்– ‘‘கவலைப்படாதீர்கள். உங்களுக்கு உண்மையில் அவனைக்குறித்து அறிந்து கொள்ளவேண்டுமானால், அறிந்து கொள்வீர்கள். ஆனால், அப்படி அறிந்துகொண்ட பிறகு, உங்களுக்கு அது பிடிக்குமா என்பது கேள்விக்குறிதான்!’’

# 3. அதிர்ச்சியளிக்கக்கூடிய மாற்று வழி

கிறிஸ்தவர்கள் மேலும் ஒரு காரியத்தை நம்புகிறார்கள். என்னவென்றால், இந்தத் தீமையான சக்தி, தன்னைத்தானே, இப்பொழுது இருக்கிற இந்த உலகத்தின் அதிபதியாக ஏற்படுத்திக் கொண்டது, என்று. நிச்சயமாக, இந்த நம்பிக்கை, பிரச்சனைகளை எழுப்பக்கூடும். இந்த ஆட்சிக்குரிய விவகாரங்கள், தேவனுடைய சித்தத்தோடு இணங்குகிறதா இல்லையா? அப்படி இணங்குகிறது என்றால், அவர் ஒரு வினோதமான தேவனாக இருக்கிறார் என்று சொல்லலாம். அப்படி இணங்கவில்லை என்றால், அந்தச் சகல வல்லமையும் கொண்டவருடைய விருப்பத்துக்கு விரோதமாக எப்படி எந்தக் காரியமும் நடக்க முடியும்?

அதிகாரத்தில் இருக்கக்கூடிய எவரும், எப்படி ஒரு காரியம், ஒரு வகையில் தங்களுடைய விருப்பத்துக்கு இணங்குவதாகவும், மற்றொரு வகையில் இணங்காததாகவும் இருக்கும் என்பதை நன்றாக அறிவார்கள். ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளிடம், ‘‘இனிமேல் நான், உங்களை ஒவ்வொரு இரவும், உங்கள் படிக்கும் அறையை சுத்தம் செய்யும்படியாக சொல்லப் போவதில்லை. இனி நீங்களே அதை சுத்தம் செய்ய பழகிக் கொள்ளவேண்டும்’’ என்று சொல்வது மிகவும் சரியானது தான். பின்னர், ஒருநாள் இரவு அந்தத் தாய் சென்று பார்க்கையில், அங்கே பொம்மைகளும், கலர் பென்சில்களும் மற்றும் புத்தகங்களும், தரையில் சிதறிக் கிடப்பதை காண்கிறாள். அது அவளுடைய விருப்பத்துக்கு மாறானது. அவளுடைய பிள்ளைகள் சுத்தமாக இருக்க வேண்டுமென்று அவள் விரும்புகிறாள், ஆனால், மாறாக அவளுடைய விருப்பமே, அந்தப் பிள்ளைகள் சுத்தமாக வைக்காமல் இருப்பதற்குச் சுதந்திரத்தை தந்தது. இதே பிரச்சனைதான் ராணுவப்படைப் பிரிவுகளிலும், வர்த்தக சங்கங்களிலும் இன்னும் பள்ளிகளிலும் எழும்புகின்றன. ஒரு காரியத்தை செய்யும்படி, நீங்கள் அதற்கு சுதந்திரத்தை தருகிறீர்கள், ஆனால் பாதிப் பேர் அதைச் செய்வதில்லை. இது இப்படி நடக்கவேண்டும் என்பது உங்கள் விருப்பம் அல்ல. ஆனால், உங்களுடைய அந்த விருப்பமே அதை சாத்தியமாக்கியது.

இந்தப் பிரபஞ்சத்திலும், பெரும்பாலும் இதே காரியத்தைத் தான் பார்க்கிறோம். தேவன், தன்னிச்சையான விருப்பம் உள்ளவைகளாய், சில காரியங்களை சிருஷ்டித்தார். அதாவது அந்த உயிரினங்கள் தவறானவைகளாகவும் நடக்கலாம் அல்லது சரியானவைகளாகவும் நடக்கலாம். சில மனிதர்கள், ஒரு உயிரினம் சுதந்திரமாக இருந்தாலும், தவறாகப் போவதற்கு எந்த சாத்தியமும் இல்லாதவைகளாகத்தான் கற்பனை செய்து பார்க்கமுடிகிறது என்கிறார்கள். ஆனால், என்னால் அப்படி நினைக்க முடியவில்லை. ஒரு காரியம் நன்மையாக இருப்பதற்கு, அதற்கு சுதந்திரம் உண்டென்றால், அது தீமையாக இருப்பதற்கும், அதற்கு சுதந்திரம் உண்டு. இந்த தன்னிச்சையான விருப்பம் தான் தீமையை சாத்தியமாக்கியிருக்கிறது. அப்படியானால் தேவன் ஏன் அவர்களுக்கு சுயமான விருப்பத்தை தந்தார்?

ஏனென்றால், அந்த சுயவிருப்பம், தீமையை சாத்தியமாக்கினது என்றாலும், அது ஒன்று மட்டும்தான் எந்த ஒரு தகுதியான அன்பையும் நன்மையையும் சந்தோஷத்தையும் சாத்தியப்படுத்துகிறது. ஒரு தானியங்கிகள் நிறைந்த உலகம்– அதாவது எந்திரங்களைப் போல வேலை செய்கிற உயிரினங்கள்– இவைகளை உருவாக்குவதினால், ஒரு மதிப்புமில்லை. தேவன் தன்னுடைய மேன்மையான படைப்புகளுக்கென்று வடிவமைத்திருக்கிற சந்தோஷம் எப்படிப்பட்டதென்றால், அது சுதந்திரமாக செயல்படக்கூடிய, தன்னிச்சையான, அவரோடு இணைக்கப்பட்டு ஒருவருக்கொருவர் அன்பிலும் மகிழ்ச்சியிலும் பரவசப்படக்கூடிய ஒரு சந்தோஷமாகும். இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த உலகத்திலுள்ள ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் நடுவேயுள்ள ஒரு மகா பேரானந்தமான காதல் கூட, வெறும் நீரும் பாலும் தான். தேவனோடு இவ்விதமாக இணைக்கப்படுவதற்கு, அவர்கள் சுதந்திரமாக இருந்தாகவேண்டும்.

நிச்சயமாக, அவர்கள் தங்கள் சுதந்திரத்தை தவறான வழியில் பயன்படுத்தினால், என்ன நடக்கும் என்று தேவன் அறிந்திருந்தார். ஆனாலும், இந்த ஆபத்து அவசியமானதுதான், என்று அவர் நினைத்தார். ஒருவேளை நாம் இதைக் குறித்து ஆண்டவரோடு உடன்படாதவர்களாக இருக்கலாம். ஆனால், அவரோடு உடன்படாமல் இருப்பதில் ஒரு சிரமம் உள்ளது. மூலாதாரமான அவரிடமிருந்துதான், உங்களுடைய எல்லா பகுத்தறியும் திறனும் வருகிறது. ஒரு நதி, தான் தோன்றுமிடத்தைக் காட்டிலும் தன்னை உயர்த்த முடியாததுபோல, நீங்கள் சரியாகவும், அவர் தவறாகவும் இருக்கமுடியாது. நீங்கள் அவரோடு வாக்குவாதம் செய்யும்போது, அந்த வாக்குவாதம் செய்யும் திறனை உங்களுக்குத் தந்த, அந்த சக்திக்கு எதிராகவே நீங்கள் வாக்குவாதம் செய்கிறீர்கள். இது நீங்கள் ஒரு கிளையில் உட்கார்ந்துகொண்டு, அந்த கிளையை வெட்டுவது போன்றதாகும். இந்தப் பிரபஞ்சத்தில் காணப்படும் இந்தப் போர்நிலை சுயவிருப்பத்திற்காக செலுத்தப்பட வேண்டிய விலையாக இருந்தாலும், அது அவசியம்தான் என்று தேவன் நினைத்தால் – அதாவது, தேவன் கயிறுகளை இழுக்கும்போதெல்லாம் அசைகிற ஒரு பொம்மை உலகத்துக்கு பதிலாக, உண்மையாக நன்மையோ அல்லது தீமையோ செய்யக்கூடிய உயிரினங்களும், உண்மையான முக்கியத்துவம் வாய்ந்த சில நிகழ்ச்சிகளும் நடக்கக்கூடிய, ஒரு உயிருள்ள உலகத்தை சிருஷ்டிப்பதற்கு– இந்த விலை செலுத்தப்படவேண்டியது அவசியம்தான் என்று நாமும் ஒத்துக்கொள்ளலாம்.

சுயவிருப்பத்தைக் குறித்து நாம் புரிந்து கொண்டபின்பு, ஒருவர் என்னிடத்தில் ஒரு முறை கேட்ட கேள்வியான, ‘‘இவ்வளவு கெட்டுப்போகக்கூடிய விஷயங்களினால் உருவாக்கப்பட்டதால், தவறாகிப்போன இந்த உயிரினங்களை, தேவன் ஏன் படைத்தார்?’’ என்பதுபோன்ற கேள்விகளைக் கேட்பது, எவ்வளவு முட்டாள்தனமானதென்று நாம் பார்க்கமுடியும். சிறந்த விஷயங்களினால் ஒரு உயிரினம் உருவாக்கப்படும்போது, அது இன்னும் புத்தியுள்ளதாக, பலமுள்ளதாக, சுதந்திரமானதாக இருக்கும். அதனால், அது சரியாகப் போகும்போது, அது மேலும்

நன்மையானதாகவும், தவறாகப் போகும்போது இன்னும் மோசமானதாகவும் இருக்கும். ஒரு மாடு மிகவும் நல்லதாகவோ அல்லது மிகவும் கெட்டதாகவோ இருக்கமுடியாது. ஒரு நாய் மிகவும் நல்லதாகவும் இருக்கமுடியும், மிகவும் மோசமானதாகவும் இருக்கமுடியும். ஒரு குழந்தை, அதைக் காட்டிலும் இன்னும் நல்லதாகவும், இன்னும் மோசமானதாகவும் இருக்கமுடியும். ஒரு சராசரி மனிதன், அதைக்காட்டிலும் அதிகம். ஒரு புத்தியுள்ள மனுஷன், அதைக்காட்டிலும் மேலும் அதிகம். ஒரு அதிமனித ஆவியுள்ளவன், எல்லாவற்றிலும் சிறப்பாகவோ அல்லது எல்லாவற்றிலும் மோசமாகவோ இருக்கமுடியும்.

இந்த இருளின் சக்தி எப்படி கெட்டதாக மாறியது? இங்கு, மனிதர்கள் எந்த நிச்சயத்தோடும், ஒரு பதிலைக் கொடுக்க முடியாத கேள்வியை, நாம் கேட்கிறோம் என்பதில் சந்தேகமே இல்லை. இதற்கு, நம்முடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில், தவறாகப்போவதற்கான ஒரு நியாயமான (மற்றும் வழக்கமான) ஒரு யூகத்தை, வழங்கமுடியும். உங்களுக்கு ஒரு சுயம் இருக்கிறது என்று சொன்ன அந்த மாத்திரத்திலேயே, நீங்களே உங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, எல்லாவற்றுக்கும் மையத்தில் இருக்க விரும்புவது, உண்மையில் சொல்லப்போனால், தேவனாகவே இருக்க விரும்புவதற்கான சாத்தியம் இருக்கிறது. அதுதான் சாத்தானுடைய பாவம். இந்த மனித குலத்துக்கு அவன் சொல்லித்தந்த பாவமும் அதுவே. மனிதனுடைய வீழ்ச்சி பாலியல் சம்பந்தப்பட்டது என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் அது தவறு. ஆதியாகம புத்தகத்திலுள்ள கதை என்ன சொல்லுகிறதென்றால், வீழ்ச்சியைத் தொடர்ந்து, நம்முடைய பாலியலின் இயல்பான நிலை சிதைந்தது என்றும், அது அதனுடைய பின்விளைவே தவிர, அதனுடைய காரணம் அல்ல என்றும் கூறுகிறது.

சாத்தான், நம்முடைய ஆதிகாலத்து மூதாதையர்களுடைய மனதில், எந்த யோசனையை வைத்தானென்றால், அவர்கள் ‘‘தேவனைப்போல இருக்கமுடியும்’’ – தாங்களே தங்களை உருவாக்கிக் கொண்டதைப்போல அமைத்துக்கொள்ள முடியும் – தாங்களே தங்களுக்கு எஜமான்களாக இருக்கமுடியும் – தேவனை விட்டு வெளியே, தேவனை ஒதுக்கிவிட்டு, தங்களுக்கு ஒரு சில விதமான சந்தோஷங்களை கண்டுபிடித்துக்கொள்ள முடியும் என்று. இந்த நம்பிக்கையற்ற முயற்சியிலிருந்து வெளிப்பட்ட, கொஞ்சங்குறைய எல்லாவற்றையும் தான், மனித சரித்திரம் என்று நாம் அழைக்கிறோம் – பணம், தரித்திரம், வெறி, போர், விபச்சாரம், பொருளாதார அடிப்படையிலான வகுப்புகள், சாம்ராஜ்யங்கள், அடிமைத்தனம் – என மனிதனுடைய நீண்ட பயங்கரமான கதை, தேவனைத் தவிர, தனக்கு வேறு ஏதாவது ஒன்று, சந்தோஷத்தைத் தருகிறதா என்று பார்க்க முயற்சிக்கிறது.

இந்த முயற்சி, ஏன் வெற்றிபெறவே முடியாது என்பதின் காரணம் இது தான். தேவன் நம்மை உண்டாக்கினார். ஒரு மனிதன் ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதுபோல, நம்மைக் கண்டுபிடித்தார். ஒரு கார் பெட்ரோலில் ஓடும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறது, அதையன்றி வேறெதிலும் அது ஒழுங்காக ஓடாது. இப்போது, மனித இயந்திரம்,

தன்னைக் கொண்டே ஓடும்படியாக தேவன் வடிவமைத்திருக்கிறார். நம்முடைய ஆவிகள் எந்த எரிபொருளைக் கொண்டு எரியும்படியாக வடிவமைக்கப்பட்டதோ, எந்த உணவை உண்ணும்படியாக வடிவமைக்கப்பட்டதோ, அதுவே அவர் தான். வேறு எதுவுமில்லை. அதனால்தான், பக்தியைக் குறித்து எந்தக் கவலையும் இல்லாமல், தேவன் நம்முடைய சொந்த வழியிலேயே நம்மை சந்தோஷமாக வைக்கவேண்டும் என்று கேட்பதில், ஒரு பயனும் இல்லை. தேவன், தன் மூலமேயன்றி, வேறு ஒரு சந்தோஷத்தையோ, நிம்மதியையோ கொடுக்க முடியாது, ஏனென்றால் அது இல்லை. அப்படி ஒன்று கிடையவே கிடையாது.

அதுதான், சரித்திரத்துக்குரிய சாவி. பயங்கரமான ஆற்றல்கள் பயன்படுத்தப்படுகின்றன– நாகரீகங்கள் கட்டி எழுப்பப்படுகின்றன– சிறப்பான நிறுவனங்கள் வடிவமைக்கப்படுகின்றன– ஆனால், ஒவ்வொரு முறையும், ஏதோ ஒன்று தவறாகிவிடுகிறது. ஏதோ ஒரு கொடிய தவறு, எப்பொழுதும் சுயநலவாதிகளையும், கொடூரமானவர்களையும், மேலுக்கு கொண்டு வந்துவிடுகிறது. இதனால், எல்லாம் மீண்டும் நாசத்துக்குள்ளும், மோசத்துக்குள்ளும் சரிந்து விழுகின்றன. உண்மையாகப் பார்த்தால், இந்த இயந்திரம் பழுதாகிவிடுகிறது. அது துவங்கும்போது, நன்றாக துவங்குவதைப் போல்தான் இருக்கிறது. சிறிது தூரம் நன்றாக ஓடுகிறது. ஆனால் அதற்குப் பிறகு, அது பழுதடைந்து, நின்று விடுகிறது. ஏனென்றால் அவர்கள், அதைத் தவறான எரிபொருளைக் கொண்டு ஓட்ட முயற்சிக்கிறார்கள். இதைத்தான், சாத்தான் மனிதர்களாகிய நமக்கு செய்திருக்கிறான்.

இதற்கு தேவன் என்ன செய்தார்? முதலாவதாக, அவர் நமக்கு மனசாட்சியை– நன்மை எது, தீமை எது என்று அறிகிற உணர்வைத் தந்தார். சரித்திரம் முழுவதையும் பார்க்கும்பொழுது, மனிதர்கள், (அதில் சிலர் மிகவும் கஷ்டப்பட்டு) அதற்குக் கீழ்படிய முயற்சி செய்திருக்கிறார்கள். ஒருவருமே, அந்த முயற்சியில் வெற்றி பெற முடியவில்லை. இரண்டாவதாக, நான் நல்லகனவுகள் என்று அழைக்கக் கூடியவைகளை, தேவன் மனிதகுலத்திற்கு அனுப்பினார். நான் எதைச் சொல்லுகிறேனென்றால், எல்லா புறஜாதி மதத்தினருக்குள்ளும் பரவலாக பேசப்படுகிற, அந்த வினோதமான கதைகளைக் குறித்துச் சொல்லுகிறேன். அந்தக் கதைகள், மரித்து, பின்னர் உயிர்த்தெழுகிற ஒரு தேவனைக் குறித்துச் சொல்லுகின்றன. அவருடைய மரணத்தினால், மனிதர்களுக்கு, ஏதோ ஒரு விதத்தில், ஒரு புது ஜீவன் கொடுக்கப்படுவதாகவும் அவை சொல்லுகின்றன. மூன்றாவதாக, ஒரு குறிப்பிட்ட ஜனங்களை தெரிந்துகொண்டு, அவர்களுடைய தலையில் பதியும்படியாக, தான் எப்படிப்பட்ட தேவன் என்பதை, அவர்கள் புரிந்துகொள்ளும்படியாக, பல நூற்றாண்டுகளைச் செலவழித்தார். அதாவது, தான் ஒருவரே தேவன் என்றும், நல்ல நடத்தையை குறித்து தான் அக்கறையுள்ளவராக இருக்கிறவர் என்றும் கூறினார். அந்த ஜனங்கள், யூதஜனங்களே. மேலும், பழைய ஏற்பாடு, தேவன் அவர்களின் தலையில் பதியும்படியாக செய்த செயல்முறையைப் பற்றி விவரிக்கிறது.

இதற்குப் பிறகுதான், உண்மையான அதிர்ச்சியே வருகிறது. இந்த யூதஜனங்களுக்குள், ஒரு மனிதர் திடீரென்று எழும்பி, தான் தான் தேவன் போல பேசிக்கொண்டு திரிகிறார். அவர் பாவங்களை மன்னிக்க, தனக்கு உரிமை உண்டு, தான் சதாகாலமும் இருந்தவர் என்று கூறுகிறார். காலங்களின் முடிவில் தான் மீண்டும் வந்து இந்த உலகை நியாயந்தீர்க்கப் போவதாகவும் கூறுகிறார். இப்பொழுது, இதைத் தெளிவு படுத்திக்கொள்ளுவோம். இந்தியர்களைப் போல, சர்வமதத்தினருக்குள்ளே யாராவது ஒருவர் இப்படி சொல்லக்கூடும் – இவர் தேவனின் ஒரு பகுதி அல்லது தேவனோடு ஒன்றிணைந்தவர் என்றும், இதைக் குறித்து பெரிதாக வித்தியாசப்படுகிற காரியம் ஒன்றுமில்லை என்றும்– அவர் சொல்லக்கூடும். ஆனால், இந்த மனிதர், ஒரு யூதராக இருப்பதால், அந்த வகையான தேவனாக தன்னைக் கூறியிருக்கமுடியாது. அவர்களுடைய பாஷையில், தேவன் என்றால், இந்த உலகத்திலிருந்து தனியாக பிரிந்திருப்பவர், இந்த உலகத்தை படைத்தவர், எந்த ஒரு காரியத்திலும், எண்ணற்ற வகையில் வித்தியாசமானவர் என்பதாகும். இதை நீங்கள் புரிந்து கொண்டீர்களானால், இந்த மனிதன் சொல்லுகிற காரியங்கள், சாதாரணமாகப் பார்க்கும்போது, மனித உதடுகள் இதுவரை உச்சரிக்காத, மிகவும் அதிர்ச்சியைத் தரக்கூடிய காரியங்களென்பதைக் காணமுடியும்.

தனக்கு உரிமை இருப்பதாக அவர் கூறுகிற காரியத்தின் ஒரு பகுதி, நம்முடைய கவனத்தை விட்டுத் தவறிவிடுகிறது. ஏனென்றால், நாம் அதை அடிக்கடி கேட்டுக்கொண்டே இருப்பதால், அது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக, நமக்கு தெரிவதே இல்லை. அவர் பாவங்களை மன்னிக்க– அதாவது எந்தப் பாவங்களையும் மன்னிக்க– தனக்கு அதிகாரம் உண்டென்று கூறுவதைத் தான் சொல்லுகிறேன். இப்படி கூறுகிறவர், தேவனாக இருந்தாலொழிய, இது வேடிக்கையாக இருப்பதை காட்டிலும், நிஜத்தில் மிகவும் மதிகெட்டதாக இருக்கின்றது. தனக்கு எதிரான குற்றங்களை, ஒரு மனிதன் எப்படி மன்னிக்கிறார் என்பதை, நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. நீ என் காலில் மிதித்தாய், நான் உன்னை மன்னிக்கிறேன். நீ என் பணத்தை திருடினாய், நான் உன்னை மன்னிக்கிறேன். ஆனால், தன்னுடைய பணம் திருடப்படாத, தன்னுடைய கால் மிதிக்கப்படாத ஒருவர், நீ மற்ற மனிதர்களுடைய காலை மிதித்ததையும், மற்ற மனிதர்களுடைய பணத்தை திருடியதையும், நான் உனக்கு மன்னிக்கிறேன் என்று அறிவிக்கிறாரென்றால் அந்த மனிதனைக் குறித்து நாம் என்னவென்று சொல்வது. முட்டாள்தனமான அபத்தம், என்கிற வார்த்தைகள்தான் நாம் அவருடைய இந்த தன்மைக்கு கொடுக்கக்கூடிய, மிகவும் அன்பான விளக்கமாக இருக்கமுடியும். என்றாலும், இதைத்தான் இயேசு செய்தார்.

அவர் மனிதர்களிடம், அவர்களுடைய பாவங்களை மன்னிப்பதாக கூறுவதற்கு முன்னால், அந்தப் பாவங்கள், எந்த மனிதர்களை சந்தேகமின்றி காயப்படுத்தினதோ, அவர்களுடன் கலந்தாலோசிப்பதற்கு அவர் காத்திருக்கவே இல்லை. ஏதோ இவர்தான் அந்த எல்லா காரியங்களிலும் முதன்மையாக சம்பந்தப்பட்டவர் போலவும், அந்த எல்லா காரியங்களினாலேயும், எல்லாத் தவறுகளினாலேயும், தான் தான் முதலாவதாக

காயப்பட்டவர் போலவும், தயங்காமல் நடந்துகொள்ளுகிறார். எந்தக் தேவனுடைய விதிகள் உடைக்கப்பட்டனவோ, எந்தக் தேவனுடைய அன்பு, ஒவ்வொரு பாவத்தினாலும் காயப்பட்டதோ, அந்தக் தேவனாக அவர் இருந்தால் மட்டுமே, அவருடைய இந்த நடவடிக்கை அர்த்தமுள்ளதாய் இருக்கமுடியும். தேவனாக இல்லாத ஒரு பேச்சாளருடைய வாயில், இந்த வார்த்தைகள், வரலாற்றில் எந்த ஒருவருக்கும் இதுவரையில் இல்லாத, ஒரு முட்டாள்தனமான கர்வத்தைத்தான் குறிக்கும்.

இருந்தும் (இதுதான் விசித்திரமான, குறிப்பிடத்தக்க ஒரு காரியம்) அவருடைய எதிரிகள் கூட, சுவிசேஷங்களை வாசிக்கும்போது, முட்டாள்தனம் மற்றும் கர்வத்தைப் போன்ற உணர்வைப் பெற்றுக் கொள்வதில்லை. பாரபட்சமின்றி வாசிப்பவர்களுக்கு, இந்த உணர்வு இன்னும் குறைவு. கிறிஸ்து, தான் தாழ்மையும் சாந்தமும் உள்ளவரென்று கூறுகிறார். அதை நாம் நம்புகிறோம். அவர் வெறும் மனிதனாக மட்டுமே இருந்தாரானால், தாழ்மை, சாந்தம், ஆகிய இந்தப் பண்புகள், அவர் கூறுகிற பல வார்த்தைகளுக்கு, எந்த வகையிலும் ஒத்துவராது என்பதை நாம் கவனிப்பதில்லை.

இயேசுவைக் குறித்து அடிக்கடி சொல்லக்கூடிய, உண்மையில் முட்டாள்தனமான ஒரு காரியத்தை, எவரும் சொல்லிவிடக்கூடாது என்று, மனிதர்களைத் தடுக்கவே, நான் இங்கு முயற்சி செய்கிறேன். எதுவென்றால், ''நான் இயேசுவை ஒழுக்கத்தைப் போதிக்கிற, ஒரு சிறந்த ஆசிரியராக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், அவர்தான் தேவன் என்று கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்கிற வார்த்தைகள். இந்த ஒரு காரியத்தை, நாம் சொல்லவேக் கூடாது. ஒரு மனிதன், வெறும் மனிதனாக இருந்துகொண்டு, இயேசு கூறுகிற காரியங்களைச் சொன்னால், அவர் நிச்சயமாக, ஒரு ஒழுக்கத்தை போதிக்கிற ஒரு சிறந்த ஆசிரியராக இருக்கமுடியாது. அவர் ஒரு பைத்தியக்காரராகவோ– அதாவது அடி முட்டாள் என்று கூறுவார்களே அந்த நிலை – அல்லது நரகத்திலிருந்து வந்த சாத்தானாகவோதான் இருக்கமுடியும். இந்த மனிதன் தேவனுடைய குமாரனாக இருந்தார், மற்றும் இருக்கிறார் என்றோ, அல்லது அவர் ஒரு பைத்தியக்காரர் என்றோ, அல்லது அதைக் காட்டிலும் மோசமான ஒருவர் என்றோ, நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும். நீங்கள் அவரை ஒரு முட்டாள், என்று கூறி அடைத்து விடலாம், அல்லது அவர் மேல் துப்பிவிடலாம், அல்லது பிசாசு என்று கூறிக் கொன்றுவிடலாம் அல்லது அவருடைய காலில் விழுந்து, அவரைக் கர்த்தர் என்றும், தேவன் என்றும் கூறலாம். ஆனால், அவர் மனிதர்களுக்கு போதிக்கிற சிறந்த ஆசிரியர், என்று கூறுகிற, அந்த அறிவில்லாத வார்த்தைகளுக்கு ஆதரவளிக்கிறவர்களாக மட்டும் முன்வந்துவிடக்கூடாது. அப்படி ஒரு வாய்ப்பை அவர் நமக்குத் திறந்து வைக்கவில்லை. அப்படி ஒரு எண்ணமும் அவருக்கு இல்லை.

# 4. பூரணமான தவம்

அப்படியானால், நாம் ஒரு பயமுறுத்தக்கூடிய, ஒரு மாற்று வழியை எதிர்கொள்கிறோம். நாம் பேசிக்கொண்டிருக்கிற இந்த மனிதர், தன்னை யார் என்று சொல்லுகிறாரோ, அப்படியே அவர் இருந்தார், இப்பொழுதும் இருக்கிறார், இல்லையென்றால், அவர் ஒரு பைத்தியக்காரர், இல்லையென்றால், அதைக் காட்டிலும் மோசமான ஒருவர். இப்பொழுது, எனக்கு வெளிப்படையாகத் தெரிவது என்னவென்றால், அவர் பைத்தியக்காரரும் அல்ல ஒரு பிசாசும் அல்ல. இதன் விளைவாக, எவ்வளவுதான் விசித்திரமாகவும், பயங்கரமானதாகவும், சாத்தியமில்லாததாகவும் இருந்தாலும், அவர் தேவனாக இருந்தார், இருக்கிறார், என்கிற அந்தப் பார்வையை, நான் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். ஆக, எதிரி–ஆக்கிரமித்த இந்த உலகத்தில், தேவன், மனித உருவத்தில் வந்து இறங்கியிருக்கிறார்.

இப்பொழுது, இவை எல்லாவற்றினுடைய நோக்கமும் என்ன? அவர் என்ன செய்ய வந்தார்? அவர் போதிக்க வந்தார், உண்மைதான்; ஆனால், நீங்கள் புதிய ஏற்பாட்டையோ அல்லது வேறு கிறிஸ்தவ புத்தகத்தையோ வாசிக்கும்போது, அவர்கள் ஒரு வித்தியாசமான ஒரு காரியத்தைக் குறித்து, பேசிக்கொண்டே இருக்கிறார்கள் என்பதைக் காணமுடியும்– அது அவருடைய மரணம், மற்றும் அவர் மீண்டும் உயிர்த்தெழுந்து வருவதைக் குறித்ததே ஆகும். கிறிஸ்தவர்கள், தங்களுடைய கதையின் உச்சமான பகுதி இங்குதான் அடங்கியிருக்கிறது என்று நினைப்பது, இங்கு வெளிப்படையாகத் தெரிகிறது. அவர், இந்த உலகத்தில், செய்யும்படியாக வந்த, முக்கியமான காரியம், பாடுபட்டு கொல்லப்படுவதற்காகவே என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

நான் ஒரு கிறிஸ்தவனாக ஆவதற்கு முன்பு, என்ன எண்ணத்தைக் கொண்டிருந்தேனென்றால், அவர் ஏன் மரித்தார், என்பதின் முக்கியத்துவத்தை விளக்குகிற, ஒரு குறிப்பிட்ட வாதத்தை, கிறிஸ்தவர்கள் முதலாவதாக நம்பியே ஆகவேண்டும் என்பதை. இந்த வாதத்தின்படி, தேவன் மனிதர்கள் தன்னை விட்டுப்பிரிந்து, அந்த மகாபெரிய கிளர்ச்சியாளனை சேர்ந்ததற்காக, அவர்களை தண்டிக்க நினைத்தார், ஆனால், கிறிஸ்து அவர்களுக்குப் பதிலாக, தண்டனையைப் பெற்றுக்கொள்ளத் தாமே முன்வந்தார், ஆதலால், தேவன் அவர்களை விட்டுவிட்டார். இந்த வாதம்கூட, மிகவும் தவறாகவோ அல்லது மிகவும் முட்டாள்தனமாகவோ, எனக்கு முன்பு தெரிந்ததைப்போல, இப்பொழுது தெரியவில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், நான் குறிப்பிட விரும்பவது அதுவல்ல. நான் பின்பாக எதைக் கண்டுகொண்டேன் என்றால், இந்த வாதமாக இருந்தாலும், வேறு எந்த வாதமாக இருந்தாலும், அது கிறிஸ்தவம் அல்ல என்பதைத் தான்.

கிறிஸ்தவர்களின் மத்திய நம்பிக்கை எதுவென்றால், கிறிஸ்துவின் மரணம், தங்களை ஏதோ ஒரு விதத்தில், தேவனுடன் சரியான ஒரு உறவில் நிறுத்தியுள்ளது, மேலும், ஒரு புது துவக்கத்தை, தங்களுக்குத் தந்திருக்கிறது என்பதுதான். இது எப்படி ஆயிற்று என்கிற வாதங்கள் வைக்கப்படுவது மற்றுமொரு காரியம். இது எப்படி செயல்படுகிறது என்பதை, விளக்குவதற்கான அநேக வித்தியாசமான வாதங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், எல்லா கிறிஸ்தவர்களும் ஒத்துக்கொள்கிற ஒரு காரியம் என்னவென்றால், இது நிச்சயமாகவே செயல்படுகிறது என்பதைத்தான். இது எப்படி இருக்கிறதென்று நான் நினைப்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் களைப்போடும் பசியோடும் இருக்கும்போது, ஒருவேளை உணவு உங்களுக்கு நன்மையைத் தரும் என்பது, அறிவுள்ள எல்லா மனிதர்களுக்கும் தெரிந்ததே. ஆனால், ஊட்டச்சத்தைக் குறித்த இன்றைய காலத்து கோட்பாடுகள், எல்லா வைட்டமின்களையும் புரதங்களையும் குறித்துக் கூறுவது, ஒரு வித்தியாசமானதாக இருக்கிறது. இந்த வைட்டமின்களைக் குறித்த கோட்பாடுகளை, கேள்விப்படுவதற்கு முன்பே, மனிதர்கள் தங்கள் உணவுகளைச் சாப்பிட்டார்கள், நன்றாக வாழ்ந்தார்கள், நன்றாக இருந்தார்கள். இந்த வைட்டமின்களை குறித்த கோட்பாடு என்றாவது ஒருநாள் கைவிடப்பட்டாலும், அவர்கள் தொடர்ந்து தங்கள் உணவைச் சாப்பிடுவார்கள், எப்பொழுதும் போல இருப்பார்கள். கிறிஸ்துவின் மரணத்தை குறித்த வாதங்கள், கிறிஸ்தவம் அல்ல. அது எப்படி செயல்படுகிறது என்பதின் விளக்கங்கள் மட்டுமேயாகும். இந்த வாதங்களுக்கு முக்கியத்துவம் உண்டு என்பதை, கிறிஸ்தவர்கள் ஒருபோதும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

என்னுடைய தேவாலயமான, இங்கிலாந்து திருச்சபை, இந்த வாதங்களில் எந்த ஒன்றையும் சரியானது என்று முன்வைக்கவில்லை. ரோமன் கத்தோலிக்க திருச்சபை, அதைக் காட்டிலும் இன்னும் அதிகம். ஆனால், அவர்கள் எல்லோரும், இறையியலாளர்கள் முன்வைத்த, எந்த ஒரு விளக்கத்தைக் காட்டிலும், இந்தக் காரியம் மிகமிக அதிக முக்கியமானது என்று ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த உண்மைக்கு, எந்த ஒரு விளக்கமும் ஒருபோதும் போதுமானதாய் இராது என்பதை, அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். இந்தப் புத்தகத்தின் முன்னுரையில் சொன்னது போல, நான் ஒரு சராசரி மனிதன் தான், ஆனால், இந்தக் குறிப்பிட்ட இடத்தில், நாம் சற்று ஆழமாக சென்று கொண்டிருக்கிறோம். இந்தக் காரியம், மதிப்புமிக்கதாய் இருப்பதால், இதைத் தனிப்பட்ட முறையில், எப்படிப் பார்க்கிறேன் என்பதை மட்டும், என்னால் உங்களுக்குச் சொல்ல முடியும்.

என்னுடைய பார்வையில், நீங்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக கேட்கப்படுகிற காரியம், இந்த விவாதங்கள் அல்ல என்பதே. ஜீன்ஸ் மற்றும் எடிங்டன் அவர்களுடைய வாதங்களை உங்களில் பலர் வாசித்திருப்பீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவர்கள் அணுவையோ அல்லது அது போன்ற சில காரியங்களையோ விவரிக்கும்போது, என்ன செய்கிறார்களென்றால், உங்களுக்கு ஒரு விளக்கத்தைத் தருகிறார்கள், அதன் அடிப்படையில், நீங்கள் மனதில் ஒரு படத்தை உருவாக்குகிறீர்கள். ஆனால் பின்னர்

விஞ்ஞானிகளால், உண்மையில் நம்பப்படுகிற படம் அது அல்ல என்று அவர்கள் உங்களுக்கு எச்சரிக்கிறார்கள். விஞ்ஞானிகள் நம்புகிறது எதை என்றால், ஒரு கணித சூத்திரத்தை. அந்தப் படங்கள், நீங்கள் அந்த சூத்திரத்தை புரிந்துகொள்ள, உதவி செய்யும்படியாகவே கொடுக்கப்படுகின்றன. அந்த சூத்திரம் இருக்கின்ற வகையில், இந்தப் படங்கள், நிஜத்தில் உண்மையாக இல்லை. அவைகள், அந்த உண்மையான காரியத்தைக் கொடுக்காமல், ஏறக்குறைய அதேபோன்ற ஒரு காரியத்தை மட்டுமே தருகின்றன. உங்களுக்கு உதவுவதற்காகவே அவைகள் இருக்கின்றன. அப்படி உதவவில்லை என்றால் நீங்கள் அவைகளை விட்டுவிடலாம். அந்தக் காரியத்தை படமாக சித்தரிக்க முடியாது, கணித ரீதியாக மட்டுமே வெளிப்படுத்த முடியும்.

இப்பொழுது, நாம் எல்லோரும் ஒரே படகில் இருக்கிறோம். கிறிஸ்துவின் மரணம் வரலாற்றின் ஒரு முக்கியப் புள்ளியாகும். இந்த முக்கியமான இடத்தில் தான், நாம் சற்றும் கற்பனை செய்து பார்க்கவே முடியாத ஒன்று, வெளியேயிருந்து, நம்முடைய உலகத்திற்குள் தெரிய ஆரம்பித்தது என்று நாம் நம்புகிறோம். நம்முடைய சொந்த உலகம் அணுக்களால் கட்டப்பட்டிருக்க, அந்த அணுக்களையே நம்மால் சித்தரிக்க முடியவில்லை என்றால், நிச்சயமாக இந்தக் காரியத்தை, நம்மால் எப்பொழுதும் சித்தரித்துப் பார்க்கவே முடியாது. பார்க்கப் போனால், இந்த காரியத்தை நாம் முழுவதுமாக புரிந்து கொண்டோமென்றால், அப்பொழுதே, அந்தக் காரியம் தன்னை எதுவாகக் காட்டிக்கொள்ளுகிறதோ, அது இல்லை என்பதை நாம் காண முடியும் – அதாவது நினைத்துப் பார்க்க முடியாத, உருவாக்கப்பட்டிராத, இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்தக் காரியம், இயற்கைக்குள்ளே ஒரு மின்னல் போல் தாக்கி இறங்குகிறதாக இருக்கிறது. நீங்கள் கேட்கலாம், நாம் அதைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், அதனால் நமக்கு என்ன பிரயோஜனம் உண்டு என்று. இதற்கு இலகுவாக பதிலளிக்க முடியும். ஒரு மனிதன், தன்னுடைய உணவு தனக்கு எப்படி ஊட்டத்தை கொடுக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளாமலேயே, அதை உண்ணமுடியும். ஒரு மனிதன், கிறிஸ்து செய்தது எப்படி செயல்படுகிறது என்பதை அறியாமலேயே, அதை ஏற்றுக்கொள்ள முடியும். உண்மையில், அவன் அதை ஏற்றுக்கொள்ளும் வரையில், அது எப்படி செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்ளமுடியாது.

கிறிஸ்து நமக்காக கொல்லப்பட்டார் என்றும், அவருடைய மரணம் நம்முடைய பாவங்களை கழுவியது என்றும், அவருடைய இறப்பு மரணத்தையே முடக்கிவிட்டது என்றும், நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் அந்த சூத்திரம். அதுதான் கிறிஸ்தவம். அதுதான் நம்ப வேண்டிய ஒன்று. கிறிஸ்துவின் மரணம், இதையெல்லாம் எப்படிச் செய்தது என்று, நாம் கட்டி எழுப்புகிற எல்லா வாதங்களும், என்னுடைய பார்வையில் இதற்கு அடுத்தபடிதான். அவை வெறும் திட்டங்களும் வரைபடங்களும் தான். நமக்கு உதவவில்லை என்றால், அவைகள் விட்டுவிடப்பட வேண்டியவை. அப்படி உதவினாலும், இந்தக் காரியத்தோடு சேர்ந்து குழப்பிக்கொள்ள வேண்டியவைகள் அல்ல. என்றாலும், இந்த வாதங்களில் சில நாம் பார்ப்பதற்குத் தகுதியானவையாகும்.

பெரும்பாலான மக்கள் கேட்டிருக்கக்கூடிய ஒரு வாதம் எதுவென்றால், நான் உங்களுக்கு முன்பு கூறின, கிறிஸ்து நமக்குப் பதிலாக தண்டனையை ஏற்றுக்கொள்ள முன்வந்ததால், நாம் அதிலிருந்து தப்பித்துக் கொண்ட ஒன்று. மேலோட்டமாகப் பார்க்கும்போது, இது மிகவும் அற்பமான ஒரு வாதமாகும். தேவன் நம்மை விட்டுவிடுவதற்குத் தயாராக இருந்தாரென்றால், பின் ஏன் விட்டுவிடவில்லை? ஒரு குற்றமில்லாத நபரை, குற்றம் செய்தவர்களுக்குப் பதிலாக தண்டிப்பதின் அவசியம் என்ன? நீங்கள் தண்டனையை, காவல்துறை– நீதிமன்றம் ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்து சிந்திப்பீர்களானால், இதில் எந்த ஒரு அவசியமும் பார்க்க முடியாது. மற்றொரு புறம், நீங்கள் இதை கடனாக சிந்தித்துப் பார்த்தால், சொத்துக்கள் உள்ள ஒரு நபர் அது இல்லாத ஒருவருக்காகக் கடனை அடைப்பது, சாத்தியங்கள் நிறைந்த ஒன்றாகும். அதுபோல, நீங்கள் அபராதம் செலுத்துவதை, தண்டிக்கப்படுவது என்ற அர்த்தத்தில் பார்க்காமல், ஒரு பரந்து விரிந்த அர்த்தமான, மோசடியைச் சகித்துக்கொள்ளுதல், அல்லது கட்டணத்தை செலுத்துதல் என்பது போலப் பார்த்தால், நிச்சயமாக இது பலரும், தங்களுடைய அனுபவத்தில் சராசரியாக கண்டிருக்கக்கூடிய ஒரு காரியமாகும். ஒரு நபர் ஒரு குழிக்குள் விழுந்துவிடுகின்றபோது, அந்த நபரை வெளியே எடுக்கக்கூடிய அந்தக் கடினமான வேலை, பெரும்பாலும், ஒரு கருணையுள்ள நண்பன் மேல் விழுகிறது.

இப்பொழுது, எந்த வகையான குழிக்குள் மனிதன் விழுந்துவிட்டான்? அவன் தானாகவே எல்லாவற்றையும் செய்ய முயற்சி செய்தான், அவன் தனக்குத்தானே சொந்தம் என்பதுபோல் நடந்து கொண்டான். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், வீழ்ந்து போன மனிதன் சீர்திருத்தப்பட வேண்டிய, ஒரு பூரணமில்லாத சிருஷ்டிப்பு மட்டுமல்ல. தன் கைகளைத் தாழ்த்திக் கொள்ளவேண்டிய, ஒரு கிளர்ச்சியாளனும் கூட. கைகளைத் தாழ்த்திக் கொள்ளுதல், சரணடைதல், நீங்கள் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்குதல், நீங்கள் தவறான வழியில் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டு, உங்களுடைய வாழ்க்கையை அடிமட்டத்திலிருந்து மீண்டும் துவக்குவதற்கு தயாராகுதல், இவைதான், அந்தக் குழியிலிருந்து வெளியே வருவதற்கான ஒரே வழி. இந்தச் சரணடையும் முறை, இந்த முழு வேகத்துடன் பின்திரும்புகிற இந்த அசைவு, இதைத்தான் கிறிஸ்தவர்கள், மனந்திரும்புதல் என்று கூறுகிறார்கள். இந்த மனந்திரும்புதல், லேசான காரியம் அல்ல.

இது தன்னுடைய குற்றத்தை உணர்ந்துகொண்டு, தன்னுடைய தோல்வியை ஒத்துக்கொள்வது மட்டுமல்ல, இது அதைக் காட்டிலும் மிகவும் கடினமான ஒன்றாகும். இதனுடைய அர்த்தம் என்னவென்றால், பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக, நம்மை நாமே பழக்கப்படுத்திக் கொண்டு வந்த, நம்முடைய எல்லா சுயகர்வத்தையும், சுயவிருப்பங்களையும், நம்முடைய நினைவிலிருந்து அகற்றிவிடுதல் என்பதே. இது உங்களுடைய ஒரு பகுதியை கொன்றுவிடுதல், ஒரு வகையான மரணத்திற்குள் கடந்து செல்லுதல் என்று அர்த்தமாகும். உண்மையில், ஒரு நல்ல மனிதனால்தான்

மனந்திரும்ப முடியும். இங்குதான் ஒரு பிரச்சனை ஒழிந்து கொண்டிருக்கிறது. ஒரு கெட்ட மனிதன் தான் மனந்திரும்ப வேண்டிய அவசியத்தில் இருக்கிறான். ஆனால், ஒரு நல்ல மனிதனால் தான் பூரணமாக மனந்திரும்ப முடியும். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவு சீர்கெட்ட நிலையில் இருக்கிறீர்களோ, அந்த அளவுக்கு மனந்திரும்ப வேண்டிய அவசியம் அதிகரிக்கிறது, ஆனால், அதை செய்யக்கூடிய திறன் குறைகிறது. அதைப் பூரணமாக செய்யக்கூடிய ஒரே நபர், ஒரு பரிபூரண மனிதராக இருப்பார். ஆனால், அப்படிப்பட்டவருக்கு அது தேவைப்படாது.

ஒன்றை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த மனந்திரும்புதலை, தன்னைத் தாழ்த்தி முழுமனதோடு சரணடைவதை, இந்த ஒரு வகையான மரணத்தை, தேவன் உங்களைத் தன்னிடம் சேர்த்துக் கொள்வதற்கு முன்போ அல்லது விரும்பினால், உங்களை இந்த தண்டனையிலிருந்து விட்டுவிடுவதற்கு முன்போ, உங்களிடத்தில் இவைகளை, கோரிக்கையாக வைக்கவில்லை. இது அவரிடத்தில் மீண்டும் திரும்பிச் செல்வது எப்படி, என்பதின் ஒரு விளக்கம் மட்டுமே. மனந்திரும்பாமல், தேவனிடம், மீண்டும் உங்களை திரும்ப எடுத்துக்கொள்ளும்படியாக கேட்பது, உண்மையில், நீங்கள் திரும்பச் செல்லாமலேயே, உங்களை மீண்டும் எடுத்துக்கொள்ளச் சொல்வதைப் போன்றது. இது சாத்தியமாகாது. அப்படியானால், நாம் மனந்திரும்பியே ஆகவேண்டும். ஆனால், எந்தத் தீமை நமக்கு அதை அவசியப்படுத்துகிறதோ, அதே தீமை, அதை செய்யக்கூடாதபடி, நம்மைத் தடுக்கவும் செய்கிறது. ஒருவேளை தேவன் உதவினால் நம்மால் அதைச்செய்ய முடியுமா? முடியும். ஆனால், தேவன் நமக்கு உதவுவது என்று நாம் சொல்லும்போது, எந்த அர்த்தத்தில் சொல்லுகிறோம்? தேவன், தம்முடைய ஒரு சிறு பகுதியை, நமக்குள்ளே வைக்கிறார் என்கிற அர்த்தத்தில் தான் நாம் சொல்லுகிறோம். அவர், தன்னுடைய பகுத்தறியும் திறனின் ஒரு சிறு பகுதியை நமக்குத் தருகிறார், அதனால் தான் நாம் சிந்திக்கிறோம். அவர் தம்முடைய அன்பின் ஒரு சிறு பகுதியை நமக்குள் வைக்கிறார், அதனால் தான் நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கிறோம்.

ஒரு குழந்தைக்கு எழுதக் கற்றுக் கொடுக்கும்போது, நீங்கள் அதன் கையைப் பிடித்து எழுத, அந்த எழுத்துக்கள் உருவாகின்றன. அதாவது, நீங்கள் அதை உருவாக்குவதினால், அந்த எழுத்துக்கள் உருவாகின்றன. தேவன் அன்பாயிருக்கிறார் மற்றும் பகுத்தறிகிறார். நாம் இவைகளைச் செய்யும்போது, அவர் நம்முடைய கைகளைப் பிடித்துக் கொண்டிருப்பதால் தான், நாமும் அன்பாயிருக்கிறோம், பகுத்தறிவுடையவர்களாக இருக்கிறோம். இப்பொழுது, நாம் ஒருவேளை வீழ்ச்சியடையாமல் இருந்திருந்தால், இவையெல்லாம், ஒரு நிம்மதியான படகோட்டமாக இருந்திருக்கும். ஆனால், துரதிர்ஷ்டவிதமாக, இப்பொழுது, தேவனின் உதவியோடு, தேவன் தம்முடைய சொந்த இயல்பில் ஒருபோதும் செய்யாத ஒன்றை, நாம் செய்ய வேண்டியிருக்கிறது – அது சரணடைதல், வருந்துதல்,, சமர்ப்பித்தல், மரித்தல் ஆகியவைகளே. ஆதலால், இப்பொழுது எந்த ஒரு பாதையில் நடப்பதற்கு, முக்கியமாக தேவனுடைய தலைமைத்துவம் நமக்கு வேண்டியிருக்கிறதோ, அந்தப் பாதை, தேவன்

தம்முடைய சொந்த இயல்பில் ஒருபோதும் நடந்திராத ஒன்றாகும். தேவன் தன்னிடம் இருப்பதைத்தான் பகிர்ந்து கொடுக்க முடியும். இந்தக் காரியம் அவருடைய இயல்பில், அவரிடத்தில் இல்லை.

ஆனால் ஒருவேளை, தேவன் ஒரு மனிதனாகிறார் என்று வைத்துக் கொள்வோம். நம்முடைய மனித இயல்பான, பாடுபடுதலும், மரித்தலும், ஒரு நபருக்குள் தேவனுடைய இயல்போடு இணைகிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, அந்த நபரால் நமக்கு உதவ முடியும். அவர் தன்னுடைய விருப்பங்களை, சரணடைய வைக்கமுடியும், பாடுபடவும் மரிக்கவும் முடியும். ஏனென்றால், அவர் ஒரு மனிதன், மேலும் அவர் இதைப் பூரணமாகச் செய்ய முடியும். ஏனென்றால் அவர் தேவனும் கூட. இந்தச் செயல்முறையை, தேவன் நமக்குள் செய்தால் மட்டும்தான், நீங்களும் நானும் இதன் வழியாக கடந்து செல்லமுடியும். ஆனால், தேவன் இதைச் செய்வதற்கு, அவர் ஒரு மனிதனாக ஆக வேண்டும். தேவனுடைய அறிவாற்றல், சமுத்திரத்திலிருந்து ஒரு துளியாக, நமக்குள் வந்ததால்தான், நம்முடைய சிந்திக்கும் திறன் பயனுள்ளதாய் இருக்கிறது. அதைப்போல, மனிதர்களாகிய நாம், தேவனுடைய மரணத்தில் பங்குள்ளவர்களானால் மட்டும் தான், நம்முடைய இந்த மரிப்பதற்கான முயற்சி, வெற்றி பெறமுடியும். ஆனால், தேவன் மரித்தாலொழிய, அவருடைய மரணத்தில் ஒரு பங்கை நாம் பெற்றுக்கொள்ள முடியாது. மேலும், அவர் மனிதனாக இருந்தாலொழிய, மரிக்க முடியாது. இந்த அர்த்தத்தில் தான், அவர் நம்முடைய கடனைச் செலுத்துகிறார். அவர், தாமே பாடுபடவேண்டிய அவசியமில்லை என்றாலும், நமக்காகப் பாடுபடுகிறார்.

சில மனிதர்கள், இப்படியாகக் குறை கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். அதாவது, இயேசு தேவனாகவும் மனிதனாகவும் இருந்தாரானால், பின்னர் அவருடைய பாடுகளும் மரணமும் தங்களுடைய பார்வையில் எல்லா மதிப்பையும் இழந்துவிடுகின்றன. ''ஏனென்றால், அது அவருக்கு இலகுவானதாக இருந்திருக்க வேண்டும்'', என்று கூறுவார்கள். மற்ற சிலர் (மிகச் சரியாக), நன்றியற்ற, கருணையற்ற, இந்த எதிர்ப்புகளை கடிந்து கொள்ளுவார்கள். என்னை திகைக்க வைப்பது எதுவென்றால், அது வெளிப்படுத்திக் காட்டுகிற, இந்தத் தவறான புரிதலே ஆகும். ஒரு வகையில், நிச்சயமாக, அவர்கள் கூறுவது சரிதான். சொல்லப்போனால், அவர்கள் தங்களுடைய வாதத்தை மேலோட்டமாகத் தான் கூறியிருக்கிறார்கள். இந்தப் பூரண சமர்ப்பித்தல், பூரண பாடுபடுதல், பூரண மரணம் இவையெல்லாம், தேவனாக இருந்ததால் மட்டுமே, இயேசுவுக்கு இலகுவாக இருந்தது. மட்டுமல்லாமல், அவர் தேவனாக இருந்ததால் மட்டுமே, சாத்தியமானது. ஆனால், இவைகளை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு, நிச்சயமாக, இது ஒரு மிக வினோதமான காரணமாக இருக்கிறதே?

ஆசிரியரால் குழந்தைகளுக்கு எழுத்துக்களை உருவாக்க முடியும். ஏனென்றால், அவர் பெரியவர். எப்படி எழுத வேண்டும் என்று அறிந்தவர். இது நிச்சயமாக, அந்த ஆசிரியருக்கு இலகுவானதாக இருக்கும். மேலும், அது இலகுவாக இருப்பதனால்தான்,

அவரால் அந்த குழந்தைக்கு உதவ முடிகிறது. பெரியவர்களுக்கு இது இலகுவாக இருப்பதனால், அந்தக் குழந்தை அவர்களை நிராகரித்து விட்டு, ஒரு எழுதத் தெரியாத, ஆதலால் தன்னைக் காட்டிலும் எந்த ஒரு நியாயமற்ற, கூடுதல் திறனும் இல்லாத, மற்றொரு குழந்தையிடம், எழுதப் பழகிக்கொள்ளக் காத்திருக்குமென்றால், அது சீக்கிரமாக, அதைக் கற்றுக்கொள்ளவே முடியாது. நான் ஒரு காட்டாற்றில் மூழ்கிக் கொண்டிருக்கிறேன் என்றால், ஒரு காலை கரையில் வைத்திருக்கிற ஒரு மனிதனால், தன்னுடைய கையை நீட்டி, என்னைக் காப்பாற்ற முடியும். நான் மூச்சுவிடவே திணறிக் கொண்டிருக்கும்போது, ''இல்லை. இது நியாயம் அல்ல. நீ வசதியாக ஒரு காலை கரையில் வைத்திருக்கிறாய்'' என்று சொல்லி, நான் அவனைப் பார்த்துக் கத்திக்கொண்டிருப்பேனா? அந்த வசதி தான்– வேண்டுமானால் அதை ''நியாயமற்றது'' என்று சொல்லிக்கொள்ளுங்கள்–அவன் எனக்கு எந்த வகையிலும், பிரயோஜனமாய் இருப்பதற்கு ஒரே காரணமாகும். உங்களைக் காட்டிலும் வலிமையான ஒன்றை, உங்களுக்கு உதவும்படியாக நீங்கள் பார்க்கவில்லை என்றால், வேறு எதைப் பார்ப்பீர்கள்?

இந்த வகையில் தான், கிறிஸ்தவர்கள், பாவநிவாரணம் என்று கூறுவதை நான் பார்க்கிறேன். ஆனால், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், இதுவும் மற்றுமொரு படம்தான். இதுதான் அந்த முக்கியமான காரியம் என்று நினைத்து விடாதீர்கள். மேலும், இது உங்களுக்கு உதவவில்லை என்றால், விட்டு விடுங்கள்.

## 5. நடைமுறைக்கேற்ற முடிவு

இந்தப் பூரண சமர்ப்பித்தல், மற்றும் தாழ்மைப்படுதல், இவைகளை கிறிஸ்து கடந்து வந்துவிட்டார். பூரணம், ஏனென்றால், அவர் தேவன். சமர்ப்பித்தல் மற்றும் தாழ்த்தப்படுதல், ஏனென்றால், அவர் மனிதர். இப்பொழுது கிறிஸ்தவர்கள் என்ன நம்புகிறார்களென்றால், நாம் எப்படியாவது, கிறிஸ்துவின் தாழ்மை, மற்றும் பாடுகளுக்குப், பங்குள்ளவர்களாகிவிட்டால், மரணத்தின் மீதான, அவருடைய வெற்றிக்குள்ளும், நாம் பங்கு பெறமுடியும் என்று. மேலும், நாம் மரித்த பின்பு, ஒரு புது ஜீவனையும் பெற்றுக்கொண்டு, அதில் பரிபூரணப்படவும், ஒரு பரிபூரண மகிழ்ச்சியுள்ள சிருஷ்டிப்புகளாக வாழவும் முடியும் என்று. இது, நாம் அவருடைய போதனைகளை, பின்பற்ற முயற்சிப்பதைக் காட்டிலும், மிக மேலான ஒரு காரியமாகும். மனிதர்கள், அடிக்கடி கேட்கும் ஒரு கேள்வி, பரிணாமத்தின் அடுத்த நிலை– அதாவது மனிதனுக்கும் அப்பாற்பட்ட ஒரு நிலை– எப்பொழுது நடக்கும் என்று. ஆனால், கிறிஸ்தவத்தின் பார்வையில், இது ஏற்கனவே நடந்தாகி விட்டது. கிறிஸ்துவுக்குள் ஒரு புதுவிதமான மனிதன் உருவாகி விட்டான், மேலும், அவருக்குள் துவங்கின அந்தப் புதுவிதமான ஜீவன், நமக்குள் வைக்கப்பட இருக்கிறது.

இது எப்படி செய்யப்படப் போகிறது? இப்போது, நம்முடைய பழைய சராசரியான ஜீவனை, நாம் எப்படிப் பெற்றுக்கொண்டோம் என்பதை, தயவுசெய்து நினைத்துப் பாருங்கள். அதை நாம் மற்றவர்களிடமிருந்து– அதாவது, நம்முடைய தாய் தகப்பனிடமிருந்தும், மற்றும் எல்லா மூதாதையர்களிடமிருந்தும், நம்முடைய சம்மதம் இல்லாமல், பெற்றுக் கொண்டோம். அதை இன்பம், வலி மற்றும் ஆபத்துகள் உள்ளடக்கிய, ஒரு மிகப் புதிரான முறையின் மூலமாகப் பெற்றுக்கொண்டோம். அது நீங்கள் ஒருபோதும் யூகித்திராத ஒரு முறையாகும். நம்மில் பலரும் நம்முடைய சிறுவயதிலே, அது என்ன என்று யோசித்து, பல வருஷங்களை செலவழித்திருப்போம். மேலும், பல குழந்தைகள் முதலாவதாக அது அவர்களுக்குச் சொல்லப்பட்டபோது, அதனை நம்புவதில்லை. அது அவர்களுடைய தவறு என்று, நான் கூற முடியாது. ஏனென்றால், அது மிகவும் விநோதமானது. அந்த முறையை ஏற்பாடு செய்த அதே தேவன்தான், இந்தப் புதுவிதமான ஜீவனை– கிறிஸ்துவின் ஜீவனை– ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த ஜீவன், அறிவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதுவும் விநோதமாக இருக்கிறது, என்பதை ஏற்றுக்கொள்ள, நாம் தயாராக இருக்கவேண்டும். அவர் பாலியலை கண்டுபிடித்த போது, நம்மிடம் கலந்து ஆலோசிக்கவில்லை. அவர் இதைக் கண்டுபிடிக்கும் போதும் நம்முடன் கலந்தாலோசிக்கவில்லை.

கிறிஸ்துவின் ஜீவனை, நமக்கு அறிவிக்கக்கூடிய மூன்று காரியங்கள் உள்ளன. ஞானஸ்நானம், நம்பிக்கை, மற்றும்– திருவிருந்து, நற்கருணை, இராபோஜனம்– என்று வெவ்வேறு கிறிஸ்தவர்களால், வெவ்வேறு பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகிற, அந்த மறைபொருளான செயல். குறைந்தபட்சம் இந்த மூன்றும்

தான், அவர்கள் பின்பற்றுகிற சாதாரண முறைகள். இவைகளில் ஒன்றோ இரண்டோ இல்லாமல் அறிவிக்கப்படக்கூடிய சில விசேஷித்த தருணங்களும் இல்லாமல் இல்லை, என்பதை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட விசேஷித்த பகுதிகளுக்குள் செல்ல எனக்கு நேரமில்லை, மேலும், அதைக் குறித்துப் போதுமான அளவும் எனக்குத் தெரியாது. ஒரு மனிதனிடம், ஒரு சில நிமிடங்களில் டெல்லிக்கு எப்படிச் செல்வது, என்பதை நீங்கள் சொல்ல முயற்சிக்கிறீர்களென்றால், நீங்கள் ரயில்களை குறித்துச் சொல்லுவீர்கள். ஆனால், அவரால் உண்மையாக, அங்கு ஒரு பேருந்திலோ அல்லது விமானத்திலோ கூட செல்லமுடியும். ஆனால், அவைகளை நீங்கள் குறிப்பிடுவது அரிது. இந்த மூன்று காரியங்களில், எது மிகவும் இன்றியமையாதது என்பதைக் குறித்து நான் எதுவும் சொல்லவில்லை. என்னுடைய மெத்தடிஸ்ட் நண்பனைக் கேட்டால், அவன் நம்பிக்கையைக் குறித்து அதிகமாகவும், மற்ற இரண்டு காரியங்களைக்குறித்து (அளவு) குறைவாகவும் பேசும்படியாகவே, எனக்குச் சொல்லுவான். இப்போது, நான் அதற்குள் செல்லவில்லை. கிறிஸ்தவ தத்துவத்தை கற்றுக் கொடுக்கக்கூடிய எவரும், உண்மையில் இந்த மூன்றையும் கைக்கொள்ளச் சொல்லுவார்கள். நம்முடைய இந்தத் தற்போதைய நோக்கத்துக்கு, அவை மட்டுமே போதுமானவை.

இந்தக் காரியங்கள், ஏன் இந்த புதுவித ஜீவனை, அறிவிக்கிறவைகளாக இருக்கின்றன, என்பதை என்னால் பார்க்க முடியவில்லை. ஆனால், ஒருவருக்கு தெரிந்திருக்காவிட்டால், ஒரு குறிப்பிட்ட சரீர இன்பத்திற்கும், ஒரு புது மனித ஜீவன், இந்த உலகத்தில் தோன்றுவதற்கும் இடையில் உள்ள தொடர்பை, என்னால் கண்டிருக்கவே முடியாது. யதார்த்தம் எப்படி வருகிறதோ, அதை அப்படியே தான் நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். அது எப்படி இருந்திருக்க வேண்டும் அல்லது அது எப்படி இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்த்தோம், என்றெல்லாம் பேசிக் கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை. ஆனால், அது ஏன் அப்படி இருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடியாவிட்டாலும், அது அப்படி இருப்பதை, நான் ஏன் நம்புகிறேன் என்பதை என்னால் சொல்லமுடியும். இயேசு தேவனாக இருந்தார் மற்றும் இருக்கிறார் என்பதை, நான் ஏன் நம்ப வேண்டும் என்பதற்கான விளக்கத்தை நான் உங்களுக்கு ஏற்கனவே சொல்லிவிட்டேன். அவர், தன்னைப் பின்பற்றினவர்களுக்கு, இந்தப் புது ஜீவன், இவற்றின் மூலமாகத்தான் தெரிவிக்கப்படுகிறது என்பதைக் கற்றுத் தந்தார், என்பது, வரலாற்றின் ஒரு குறிப்பாக, தெளிவாகத் தெரிகிறது.

வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், நான் அதை அவருடைய அதிகாரத்தின் மூலம் நம்புகிறேன். அதிகாரம் என்ற வார்த்தையைக் கேட்டு, நீங்கள் பயப்படவேண்டாம். அதிகாரத்தின் மூலம் நம்பிக்கை வைப்பது என்பது, உங்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரமான ஒருவர் மூலமாக, நீங்கள் அதைக் கேள்விப்பட்டதால், அதை நம்புகிறீர்கள் என்று அர்த்தமாகும். நூற்றுக்கு 99 காரியங்களை, நீங்கள் அதிகாரத்தின் மூலம் வைத்த நம்பிக்கையினாலேயே நம்புகிறீர்கள். நியூயார்க் என்ற ஒரு இடம் இருக்கிறது என்பதை, நான் நம்புகிறேன். நான் அதை என் கண்ணால்

பார்த்ததில்லை. என்னுடைய பகுத்தறிவு திறமையின் மூலம், அப்படி ஒரு இடம் இருக்கிறது என்பதை என்னால் நிரூபிக்க முடியாது. என் நம்பிக்கைக்குரிய மனிதர்கள், அப்படி ஒன்று இருக்கிறது என்று சொன்னதால் தான், நான் அதை நம்புகிறேன். சராசரி மனிதன் சூரிய குடும்பத்தையும், அணுக்களையும், பரிணாமத்தையும், ரத்த ஓட்டத்தையும், அதிகாரத்தின் மூலம் நம்புகிறான் – ஏனென்றால், விஞ்ஞானிகள் அப்படிச் சொல்லுவதால் தான்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு சரித்திரக் குறிப்பும், அதிகாரத்தின் மேல்தான் நம்பப்படுகிறது. நார்மன் வெற்றியையோ அல்லது அர்மடாவின் தோல்வியையோ, நாம் ஒருவரும் கண்டதில்லை. கணிதத்தில் ஒரு காரியத்தை நிரூபிப்பது போல, வெறும் தர்க்கரீதியான அறிவினால், நம் ஒருவராலும் இதை நிரூபிக்க முடியாது. நாம் ஏன் இவைகளை நம்புகிறோமென்றால், இவைகளைப் பார்த்தவர்கள், அவைகளைக் குறித்து எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதால்தான்– சரியாகப் பார்த்தால், அதிகாரத்தின் மூலம் இவைகளை நம்புகிறோம். மதத்தைக் குறித்து சில மனிதர்கள் பேசுவதைப் போல, ஒரு மனிதன், மற்ற காரியங்களில் அந்த அதிகாரத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தால், அவன் தன்னுடைய வாழ்க்கை முழுவதும், எதையுமே அறிந்து கொள்ளாமலிருப்பதில், திருப்தியடைந்து கொள்ளவேண்டும்.

நீங்கள், கிறிஸ்துவைப் போல் இருக்க முயற்சி செய்வதற்கு பதிலாக, இந்த ஞானஸ்நானம், நம்பிக்கை, திருவிருந்து, இவைகளையெல்லாம் நான் ஏற்படுத்திக் கொடுக்கிறேனென்று நினைக்க வேண்டாம். உங்களுடைய இயற்கையான ஜீவனை, உங்கள் பெற்றோரிடமிருந்து நீங்கள் பெற்றுக் கொண்டீர்கள். ஆனால் அதற்காக, அதைக் குறித்து நீங்கள் எதுவுமே செய்யவில்லையென்றால், அது எப்பொழுதும் உங்களுக்கு இருக்கும் என்பது அர்த்தம் அல்ல. உங்களுடைய புறக்கணிப்பினால், நீங்கள் அதை இழந்து விடலாம், அல்லது தற்கொலை செய்வதால், அதை தூக்கி எரிந்து விடலாம். நீங்கள் அதற்குரிய உணவைத் தந்து, அதை கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். ஆனால், ஒன்றை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் அதை உண்டாக்கவில்லை. நீங்கள் மற்றொருவரிடமிருந்து பெற்றுக் கொண்டதை, வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் அவ்வளவுதான். இதேபோல, ஒரு கிறிஸ்தவனும், தனக்குள் வைக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் ஜீவனை, இழந்து போக முடியும். அவன் அதை வைத்துக்கொள்ளப் பிரயாசப்படவேண்டும். ஆனால், இதுவரையில் வாழ்ந்த ஒரு சிறந்த கிறிஸ்தவன் கூட, தன்னுடைய சொந்த முயற்சியினால் இதைச் செய்யவில்லை. தன்னுடைய சொந்தப் பிரயாசத்தினால் பெற்றுக் கொள்ளமுடியாத ஒரு ஜீவனை, அவன் போஷித்து, பாதுகாக்க மட்டுமே செய்கிறான். இதனால், அதற்கு நடைமுறைப் பின்விளைவுகள் உள்ளன.

உங்களுடைய சரீரத்தில், இந்த இயற்கையான ஜீவன் இருக்கும் வரையில், அது அந்த சரீரத்தை அநேக காரியங்களின் மூலமாக, சரிசெய்து கொண்டேயிருக்கும். அதை வெட்டினால், ஓரளவு வரை, தன்னுடைய காயத்தை ஆற்றிக் கொள்ளும்.

ஆனால், ஒரு உயிரற்ற சரீரம், அப்படிச் செய்யமுடியாது. ஒரு உயிருள்ள சரீரம் என்றால், எந்தக் காயமும் படாத ஒன்று, என்பது அர்த்தமல்ல. அது தனக்குப் பட்ட காயத்தை, ஓரளவுக்கு சரிசெய்து கொள்ளக்கூடிய ஒன்றாகும். இதுபோலத்தான், ஒரு கிறிஸ்தவன் என்பவன், தவறே செய்யாத ஒரு மனிதன் அல்ல. ஆனால், ஒவ்வொரு முறை தவறி விழும்போதும், மனந்திரும்பவும், தானாக எழுந்து நின்று, மீண்டும் முதலிலிருந்து துவக்கவும் முடிந்த ஒரு மனிதனாவான். ஏனென்றால், கிறிஸ்துவின் ஜீவன் அவனுக்குள் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் அவனைசரி செய்கிறது, கிறிஸ்து, தாமே செய்துமுடித்த, தாமே முன்வந்து மரித்த, அந்த வகையான மரணத்தை (ஒரு சில அளவில்) அவனுக்குள் செயல்படுத்துகிறது.

அதனால்தான், நல்லவர்களாக இருக்க முயற்சி செய்கிற, மற்ற மனிதர்களிடமிருந்து, கிறிஸ்தவன் ஒரு வேறுபட்ட நிலையில் நிற்கிறான். அவர்களுடைய நம்பிக்கை என்னவென்றால், தாங்கள் நல்லவர்களாக இருக்கும்போது, தேவன் என்று ஒருவர் இருந்தால், அவரைப் பிரியப்படுத்த முடியும், –அப்படி இல்லை என்றால்– நல்ல மனிதர்களுடைய அங்கீகாரத்தையாவது பெறமுடியும் என்பதே. ஆனால், ஒரு கிறிஸ்தவன் என்ன சிந்திக்கிறானென்றால், தான் செய்கிற எந்த நன்மையும், தனக்குள் இருக்கிற கிறிஸ்துவின் ஜீவனிடத்திலிருந்து வருகிறது என்று. நாம் நல்லவர்களாக இருப்பதனால், தேவன் நம்மில் அன்பாய் இருப்பாரென்று அவன் நினைக்கவில்லை. தேவன் நம்மில் அன்பாய் இருப்பதனால், நம்மை நல்லவர்களாக்குகிறார் என்றே அவன் நினைக்கிறான். ஒரு செடி கொடிகள் வளர்ப்பதற்காகக் கட்டப்பட்ட, கண்ணாடியால் செய்த வீட்டின் மேல்பகுதி, பிரகாசமாக இருப்பதனால், சூரியனைத் தன்னிடத்தில் ஈர்க்கவில்லை, சூரியன் அதன் மேல் ஒளி வீசுவதினால், அது பிரகாசிக்கிறது.

நான் ஒரு காரியத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதாவது கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் ஜீவன் தங்களுக்குள் இருக்கிறது என்று சொல்லும்போது, அவர்கள் ஒரு மன ரீதியாகவோ அல்லது கருத்து ரீதியாகவோ இதைச் சொல்லவில்லை. அவர்கள் ''கிறிஸ்துவுக்குள்'' இருப்பதாகவும் அல்லது கிறிஸ்து ''தங்களுக்குள்'' இருப்பதாகவும் சொல்லும்போது, அவர்கள் கிறிஸ்துவைக் குறித்து சிந்திக்கிறார்கள் என்றும், அவரைப்போல இருக்க முயற்சிக்கிறார்கள் என்றும், ஒருவகையில் சொல்லுவது மட்டுமல்லாமல், கிறிஸ்து நிஜமாகவே தங்கள் மூலமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்கிற அர்த்தத்தில் கூறுகிறார்கள். அதாவது இந்த முழு நிறைவான அனைத்துக் கிறிஸ்தவர்களும், உடலுள்ள ஒரு உயிரினமாவார்கள். இதன் மூலமாகக் கிறிஸ்து செயல்படுகிறார். அந்த உயிரினம் நாம் தான்.

நாம் தான் அவருடைய விரல்கள், தசைகள், மற்றும் அவருடைய சரீரத்தின் அணுக்கள். ஒருவேளை இது ஒன்றிரண்டு காரியங்களுக்கு விளக்கங்களைத் தரலாம். இந்தப் புது ஜீவன், முழுக்க மன ரீதியான செயல்களான, நம்பிக்கை போன்றவைகளால் மட்டும் அறிவிக்கப்படாமல், சரீரத்தின் செயல்களான ஞானஸ்நானம், திருவிருந்து, ஆகியவைகளின் மூலமாகவும் அறிவிக்கப்படுகிறதென்று இது விளக்குகிறது. இது, ஒரு

கருத்து அறிவிக்கப்படுகிற காரியம் மட்டுமல்ல, பரிணாமத்தைப் போன்ற – ஒரு உயிரியல் அல்லது அதீத உயிரியல் உண்மையும் ஆகும். தேவனைக் காட்டிலும் அதிக பக்தியாய் இருக்க முயற்சிப்பதனால், ஒரு நன்மையும் இல்லை. மனிதன் முழுக்க முழுக்க ஆன்மீக சிருஷ்டிப்பாய் மட்டுமே இருக்கவேண்டும் என்று, தேவன் ஒருபோதும் எண்ணவில்லை. அதனால்தான் அவர் அப்பம் மற்றும் திராட்சைரசம் போன்ற பொருட்களை பிரயோஜனப்படுத்தி, புது ஜீவனை நமக்குள் வைக்கிறார். இது சற்றுப் பண்படாததாகவும், ஆன்மீகமற்றதாகவும், இருப்பதாக நாம் நினைக்கலாம். தேவன் அப்படி நினைக்கவில்லை. அவர்தான் சாப்பிடுவதை கண்டுபிடித்தார். அவருக்குப் பொருட்கள் பிடிக்கும். அவைகளை அவர்தான் கண்டுபிடித்தார்.

இங்கே, எனக்குப் புதிராகத் தோன்றின மற்றொரு காரியத்தை கூறுகிறேன். இந்தப் புது ஜீவன், கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவர் மேல் நம்பிக்கை வைக்கிற மனிதர்களுக்கு மட்டுமே, என்பது ஒரு பயமுண்டாக்குகிற அநியாயமாகத் தெரியவில்லையா? ஆனால் உண்மையென்னவென்றால், தேவன், அந்த மற்ற மனிதர்களுக்காக, என்ன ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதை நமக்குச் சொல்லவில்லை. கிறிஸ்துவின் மூலமேயன்றி, எந்த மனிதனும் இரட்சிக்கப்படவே முடியாது என்பது நமக்குத் தெரியும். ஆனால், அவரை அறிந்தவர்கள் மட்டும்தான் அவர் மூலமாக இரட்சிக்கப்பட முடியுமா என்பது நமக்குத் தெரியாது. எனினும், அதுவரையில், நீங்கள் அந்த வெளியிலுள்ள மனிதர்களைக் குறித்துக் கவலைப்படுவீர்களானால், நீங்கள் செய்யக்கூடிய நியாயமற்ற காரியம், நீங்களும் அவர்களோடு சேர்ந்து வெளியில் நிற்பதாகும். கிறிஸ்தவர்கள்தான் கிறிஸ்துவின் சரீரம். இந்த உயிரினத்தின் மூலமாகத்தான் அவர் செயல்படுகிறார். இந்த சரீரத்தோடு, கூடுதலாகச் சேர்க்கப்படுகிற ஒவ்வொன்றும், அவரை இன்னும் அதிகமாகச் செயல்படவைக்கிறது. நீங்கள் வெளியில் இருப்பவர்களுக்கு உதவிசெய்ய விரும்பினால், உங்களுடைய சொந்த, சிறிய உயிரணுவை, கிறிஸ்துவின் சரீரத்தோடு இணைத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், அவர் ஒருவர்தான், அவர்களுக்கு உதவமுடியும். ஒரு மனிதனுடைய விரல்களை வெட்டி எடுத்துவிட்டு, அவனை இன்னும் அதிக வேலை செய்யவைப்பது, ஒரு வினோதமான வழியாகும்.

மற்றுமொரு எதிர்ப்பு, முன்வரக்கூடும். அதாவது, தேவன் ஏன் இந்த எதிரி–ஆக்கிரமித்த உலகத்திற்கு, மாறுவேடத்தில் வந்து இறங்கி, சாத்தானுடைய ஆற்றலை குறைப்பதற்காக, ஒரு விதமான ரகசிய சமூகத்தை உருவாக்கினார்? அவர் ஏன் வலிமையோடு இறங்கி படையெடுக்கவில்லை? அவருக்குப் போதுமான பலன் இல்லாததாலா? அவர் வல்லமையோடு வந்து இறங்கப் போகிறார் என்றே கிறிஸ்தவர்கள் நினைக்கிறார்கள் –அது எப்போதென்று நமக்குத் தெரியாது. ஆனால், அவர் ஏன் தாமதிக்கிறார் என்று நம்மால் யூகிக்கமுடியும். நாம் சுதந்திரமாக, அவருடைய பக்கத்தில் இணையும்படியான வாய்ப்பை, நமக்குத் தருவதற்கு அவர் விரும்புகிறார். கூட்டணிகளின் படை, ஜெர்மனிக்குள் அணிவகுத்துச் செல்லும்வரை காத்திருந்துவிட்டு, பின்னர் நம்முடைய பக்கத்தில் இருப்பதாக அறிவிக்கிற, ஒரு பிரெஞ்சு மனிதரைக்

குறித்து, நீங்களோ நானோ பெரிதாக எண்ணப்போவதே இல்லை. தேவன் நிச்சயமாகப் படையெடுத்து வருவார். ஆனால், தேவனை, நம்முடைய உலகத்துக்குள் வெளிப்படையாகவும், நேரடியாகவும், தலையிடச் சொல்லிக் கேட்டுக்கொள்கிற மனிதர்கள், உண்மையாகவே அவர் அப்படிச் செய்யும்போது, எப்படி இருக்கும் என்பதை உணர்ந்து இருக்கிறார்களா, என்பதைக்குறித்து நான் ஆச்சரியப்பட்டதுண்டு. அது நடக்கும்போது அதுதான் இந்த உலகத்தின் முடிவாக இருக்கும்.

கதாசிரியர் மேடையில் நடந்து வரும்போது, நாடகம் முடிந்து விடும். தேவன் படையெடுத்து வரப்போகிறார், சரிதான், ஆனால் இந்த முழு இயற்கையான பிரபஞ்சமுமே, ஒரு கனவைப்போல கரைந்து போவதைப் பார்க்கும்போது, நீங்கள் அவருடைய பக்கத்தில் இருக்கிறேன் என்று சொல்வதனால், என்ன நன்மை இருக்கிறது. மேலும், மற்றுமொரு காரியம், இதுவரை உங்களுடைய சிந்தனையில் நினைத்துக் கூடப் பார்க்கமுடியாத ஒன்று, இடியைப்போல வந்து இறங்குகிறது. சிலருக்கு அது மிகவும் அழகானதாகவும், மற்றவர்களுக்கு மிகவும் பயங்கரமானதாகவும் இருக்கிறது. ஆனால், அந்த நேரத்தில் நம் யாருக்கும், தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருக்காது. ஏனென்றால் இந்த முறை தேவன் மாறுவேடத்தில் வரமாட்டார். நம்மை மூழ்கடிக்கக்கூடிய இந்தக் காரியம், ஒவ்வொரு சிருஷ்டிப்புக்குள்ளும், ஒரு தவிர்க்கமுடியாத அன்பையோ அல்லது தவிர்க்கமுடியாத பீதியையோ இறக்கும்.

அந்த நேரத்தில், நீங்கள் ஒரு பக்கத்தை தேர்ந்தெடுக்கக்கூடிய காலம் கடந்துவிடும். உங்களுக்கு எழுந்து நிற்பதே சாத்தியம் இல்லாத ஒன்றாக இருக்கும்போது, நான் படுத்துக்கொள்வதை விரும்புகிறேன் என்று சொல்வதில் ஒரு பயனும் இல்லை. நாம் தேர்ந்தெடுக்கக்கூடிய காலமாக, அது இருக்காது. அதை நாம் அதற்கு முன்பாக அறிந்திருந்தாலும், அறியாவிட்டாலும், நாம் எந்தப் பக்கத்தை, உண்மையாகவே, தேர்ந்தெடுத்தோம் என்பதை கண்டறிகிற காலமாக அது இருக்கும். இப்பொழுது, இன்று, இந்த நொடிதான், நாம் சரியான பக்கத்தை தேர்ந்தெடுக்க வேண்டிய ஒரு வாய்ப்பாகும். நமக்கு அந்த வாய்ப்பைக் கொடுப்பதற்காக, தேவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், அது வெகுகாலம் நீடிக்காது. இந்த வாய்ப்பை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது விட்டுவிட வேண்டும்.

# பகுதி மூன்று

–

# கிறிஸ்தவ ஒழுக்கம்

# 1. ஒழுக்கத்தின் மூன்று பகுதிகள்

ஒரு பள்ளிச் சிறுவனைக் குறித்த கதை ஒன்று உண்டு. அதில், அவனிடம், தேவன் எப்படிப்பட்டவர் என்கிற கேள்வி கேட்கப்பட்டபோது, அவனுடைய பதில் இவ்வாறாக இருந்தது. தனக்குத் தெரிந்தவரையில், தேவன் என்பவர், ''யாராவது சந்தோஷமாக எதையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களா என்று நோட்டம்விட்டு, அவர்களை தடுக்க நினைக்கிற ஒருவர்'', என்று அவன் கூறினான். பல மனிதர்களுடைய எண்ணத்தில், 'ஒழுக்கம்' என்ற அந்த வார்த்தை, இப்படிப்பட்ட ஒரு எண்ணத்தைத்தான் எழுப்புகிறதோ, என்று நான் அஞ்சுகிறேன்: தங்களுடைய வாழ்க்கையில் குறுக்கிடுகிற ஒன்று, தாங்கள் சந்தோஷமாக இருக்கின்ற நேரங்களையெல்லாம், தடுக்க முயற்சிக்கிற ஒன்று என்பதாக. ஆனால் உண்மையில், ஒழுக்கத்தின் விதிகள் எல்லாம், மனித இயந்திரத்தை ஓட்டுவதற்கான வழிமுறைகளாகும். ஒவ்வொரு ஒழுக்கத்தின் விதிமுறையும், அந்த இயந்திரத்தின் ஓட்டத்தில், அது பழுதடைவதையும், அழுத்தத்தால் கஷ்டப்படுவதையும், உராய்வதையும் தடுப்பதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் தான், இந்த விதிமுறைகள் தொடக்கத்தில் நம்முடைய எல்லா இயல்பான விருப்பத்திலும், எப்போதும் குறிக்கிடுகிறவைகளாகவே தெரிகின்றன. எந்த ஒரு இயந்திரத்தையும் எப்படி பிரயோஜனப்படுத்துவது என்று உங்களுக்கு கற்பிக்கப்படும்போது, அதை நமக்கு கற்பிப்பவர் தொடர்ந்து, ''வேண்டாம். அப்படிச் செய்யாதீர்கள்'', என்று சொல்லிக் கொண்டேயிருப்பதைக் காணமுடியும். ஏனென்றால், பலவகையான காரியங்கள், உங்களுக்கு பார்ப்பதற்குச் சரியாகவும், அந்த இயந்திரத்தை இயக்குவதற்கான இயல்பான வழியாகவும் தோன்றலாம். ஆனால் உண்மையில், அவைகள் சரியான செயல்பாடு அல்ல.

சில மனிதர்கள் ஒழுக்கத்தின் விதிகளைக்காட்டிலும் ஒழுக்கத்தின் ''இலட்சியங்களையும்'', ஒழுக்கத்தின் கீழ்ப்படிதலைக்காட்டிலும், ஒழுக்கத்தின் ''குறிக்கோள்களையும்'' குறித்துப் பேச விரும்புவர். ஒழுக்கத்தில் பூரணத்தை நாம் ஒருபோதும் அடையமுடியாது என்கிற அர்த்தத்தில் பார்க்கும்பொழுது, அது ஒரு இலட்சியமாக இருக்கிறது என்பது உண்மைதான். அந்த வகையில் ஒவ்வொரு வகையான பூரணமும், மனிதர்களாகிய நமக்கு ஏற்ற ஒரு இலட்சியமாய் இருக்கிறது. நாம் ஒரு பிழையே செய்யாத கார் ஓட்டுனராகவோ அல்லது ஒரு பூரணமான டென்னிஸ் விளையாட்டுவீரராகவோ அல்லது ஒரு நேர்கோட்டை மிகத்துல்லியமாக வரைபவராகவோ இருக்கவேமுடியாது. ஆனால் ஒழுக்கத்தில் பூரணத்தை ஒரு இலட்சியம் என்று கூறுவது, இன்னொரு வகையில் நம்மை மிகவும் தவறாக வழிநடத்தக்கூடும். ஒரு மனிதன், ஒரு குறிப்பிட்ட பெண்ணையோ, ஒரு வீட்டையோ, ஒரு கப்பலையோ அல்லது ஒரு தோட்டத்தையோ தனக்கு ஏற்ற இலட்சியமாகக் கூறும்பொழுது, (அவர் ஒரு முட்டாளாக இருந்தாலொழிய) மற்ற எல்லோருக்கும் அதே இலட்சியம்தான் இருக்கவேண்டும் என்று எண்ணமாட்டார்.

இப்படிப்பட்ட காரியங்களில், நமக்கு வெவ்வேறான விருப்பங்களும் அதன் காரணமாக வெவ்வேறான இலட்சியங்களும் வைத்திருப்பதற்கு, நமக்கு உரிமை உண்டு. ஆனால் ஒழுக்கச் சட்டங்களை கடைபிடிப்பதில், மிகவும் கடினமாக முயற்சிக்கும் ஒரு மனிதனை, ''உயர்ந்த இலட்சியங்களையுடைய மனிதர்'' என்று விவரிப்பது ஆபத்தானது. ஏனென்றால் பூரண ஒழுக்கம் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விருப்பம் என்றும், அதில் மற்றவர்களும் பங்குள்ளவர்களாயிருக்கும்படி அழைக்கப்படவில்லை என்றும் நினைக்கும்படியாக, அது உங்களை வழிநடத்தக்கூடும். இது ஒரு ஆபத்து விளைவிக்கக்கூடிய தவறாகும். நாம் ஓட்டும்பொழுது, மிகச்சரியாக கியர்(gear) மாற்றுவது என்பது சாதிக்கமுடியாத ஒன்றாயிருப்பதைப்போல, மிகச்சரியான நடத்தை என்பதும் சாதிக்கமுடியாததாக இருக்கலாம். ஆனால் மிகச்சரியான கியர் மாற்றுதல்தான், அந்த காருக்கு ஏற்றது என்று, எல்லா ஓட்டுனர்களுக்கும் அந்தக் காரினுடைய இயல்பே பரிந்துரைக்கிற, ஏற்றுக்கொள்ளப்பட்ட இலட்சியமாயிருப்பதுபோல, மிகச்சரியான நடத்தை என்பது மனித இயந்திரத்தின் இயல்பே எல்லா மனிதர்களுக்கும் பரிந்துரைத்த, ஒரு மிகத்தேவையான, ஏற்ற இலட்சியமாயிருக்கிறது. மேலும் ஒருவர் தன்னைத்தானே மிகச்சிறந்த இலட்சியமுள்ள ஒரு மனிதராக எண்ணிக்கொள்வது, அதைக்காட்டிலும் மிகவும் ஆபத்தானது. ஏனென்றால், அவர் (ஒரு சில பொய்களை மட்டும் கூறலாம் என்று நினைப்பதற்கு மாறாக) பொய்யே கூறக்கூடாது என்று முயற்சிக்கிறார் அல்லது (மிகவும் அரிதாக விபச்சாரத்தில் ஈடுபடலாம் என்ற எண்ணத்திற்கு மாறாக) விபச்சாரத்தில் ஈடுபடவே கூடாது என்றும், மற்றவர்களை (மிதமாக கொடுமைப்படுத்தலாம் என்ற சிந்தனைக்கு மாறாக) கொடுமைப்படுத்தவே கூடாது என்றும் அவர் முயற்சிக்கிறார்.

இது உங்களை ஒரு அகங்காரம் உள்ளவராக மாற்றுவதற்கும், உங்களுடைய இந்த ''உயர்ந்த குறிக்கோளுக்காக'', நீங்கள் மற்றவர்களால் பாராட்டப்படுவதற்கு தகுதியுடைய ஒரு விசேஷித்த நபராக, உங்களை நீங்களே நினைப்பதற்கும் வழிநடத்தும். உண்மையில், இது நீங்கள் ஒவ்வொரு முறையும் ஒரு கணக்கை செய்யும்போது அதை சரியாகச் செய்ய முயற்சிப்பதற்காகவே, மற்றவர்களிடத்திலிருந்து பாராட்டு எதிர்பார்ப்பது போன்றதாகும். இதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டுமானால், ஒரு பூரணமான கணிதம் என்பது ''ஒரு இலட்சியத்தை'' போன்றது: நீங்கள் நிச்சயமாகவே அதில் சில கணக்குகளைச் செய்யும்போது சில தவறுகள் செய்யக்கூடும். ஆனால், ஒவ்வொரு கணக்கின் ஒவ்வொரு படியையும் மிகத்துல்லியமாக செய்ய முயற்சிப்பது, பெரிய விஷயம் ஒன்றுமில்லை. அப்படிச் செய்ய முயற்சிக்காமல் இருப்பது முட்டாள்தனமாகும். ஏனென்றால் ஒவ்வொரு தவறும் பின்னர் ஒரு பிரச்சனையை உருவாக்கும். இதே வகையில் ஒவ்வொரு ஒழுக்கக்கேடும், அநேகமாக மற்றவர்களுக்கும், நிச்சயமாக உங்களுக்கும், பின்னர் ஒரு பிரச்சனையை உருவாக்கும். ''இலட்சியங்கள்'' மற்றும் ''குறிக்கோள்களை'' குறித்துப் பேசுவதற்குப் பதிலாக, விதிகளையும் கீழ்ப்படிதலையும் குறித்து நாம் பேசும்போது, நமக்கு நாமே இந்த உண்மைகளை ஞாபகப்படுத்திக்கொள்ள உதவுகிறோம்.

இப்போது நாம் ஒரு படி மேலே செல்லலாம். மனித இயந்திரம் தவறாக செயல்படுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று, தனிப்பட்ட மனிதர்கள் ஒருவரிடமிருந்து மற்றவர் பிரிந்து செல்லுவது, அல்லது மற்றவர்களை ஏமாற்றுவதன் மூலமாகவும், கொடுமைப்படுத்துவதின் மூலமாகவும், ஒருவர் மேலொருவர் மோதி, ஒருவரை ஒருவர் சேதப்படுத்துவது ஆகும். மற்றொரு வழி எதுவென்றால், ஒரு மனிதனுக்கு உள்ளே இருக்கிற காரியங்கள் தவறாக செயல்படுவது– அதாவது அந்த மனிதனுடைய வெவ்வேறு பகுதிகளும், (அவருடைய வித்தியாசமான திறன்கள் மற்றும் விருப்பங்கள் போன்றவைகள்) ஒன்றிலிருந்து மற்றது பிரிந்து செல்லுவது அல்லது ஒன்றினுடைய செயல்பாட்டில் மற்றொன்று குறிக்கிடுவது ஆகும். ஒரு குறிப்பிட்ட அமைப்பில் அணிவகுத்து செல்லுகின்ற, ஒரு கப்பல் படையின் கப்பல்களாக நம்மை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்களானால், நீங்கள் இந்தக் கருத்தை எளிதாக புரிந்துகொள்ள முடியும். இந்தப் பயணம் வெற்றிகரமாக முடியவேண்டுமானால், முதலாவதாக இந்த கப்பல்கள் ஒன்றோடொன்று மோதி, ஒன்றின் வழியில் ஒன்று வராமல் இருக்கவேண்டும். இரண்டாவதாக, அவை ஒவ்வொன்றும் கப்பல் பிரயாணத்துக்கு ஏற்றதாகவும் அவைகளுடைய பொறி இயந்திரங்கள் நல்ல நிலைமையிலும் இருக்கவேண்டும். பார்க்கப் போனால், இவை இரண்டில், எந்த ஒன்று இல்லாவிட்டாலும், மற்றொன்றும் இருக்கமுடியாது.

இந்தக் கப்பல்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டே இருந்தால், அவைகள் கப்பல் பிரயாணத்துக்கு ஏற்றவைகளாக நீண்ட நாட்கள் இருக்கமுடியாது. அதே சமயத்தில், அவைகளுடைய திசைமாற்றும் கியர்கள் பழுதடைந்துவிட்டால் அவைகளால் மற்ற கப்பல்களின் மீது மோதுவதை தவிர்க்கமுடியாது. வேண்டுமானால் நீங்கள் மனித குலத்தை ஒரு இசை வாசிக்கின்ற இசைக்குழுவாக நினைத்துக் கொள்ளுங்கள். அது நன்றாக செயல்பட இரண்டு காரியங்கள் தேவைப்படுகின்றன. ஒவ்வொருவருடைய இசைக்கருவியும் டியூன் செய்யப்பட்டிருக்கவேண்டும் மற்றும் அவை ஒவ்வொன்றும் மற்ற எல்லாக் கருவிகளோடும் ஒத்திசைந்து இருக்கும்படியாக, சரியான நேரத்தில் வாசிக்கப்பட வேண்டும்.

ஆனால் ஒரு காரியத்தை நாம் இன்னும் கருத்தில் கொள்ளவில்லை. அந்த கப்பல்படை எங்கு செல்ல முயற்சிக்கிறது என்றோ அல்லது அந்த இசைக்குழு எந்த இசையை வாசிக்க முயற்சிக்கிறது என்றோ நாம் கேட்கவில்லை. அந்த இசைக்கருவிகள் அனைத்தும் டியூன் செய்யப்பட்டிருக்கலாம், அவையெல்லாம் சரியான நேரத்தில் வாசிக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும்கூட அது ஒரு நடனத்துக்கான இசையை வழங்கவேண்டும் என்று அழைக்கப்பட்டிருக்கும்போது, ஒரு இறுதிச்சடங்கில் வாசிக்கப்படும் இசையை வாசித்தால் அந்த நிகழ்ச்சி வெற்றியடையமுடியாது. அதுபோல எவ்வளவுதான் நன்றாக அந்த கப்பற்படை பயணித்தாலும், அது நியூயார்க் போய்ச்சேருவதற்கு பதிலாக கல்கத்தாவில் வந்து சேர்ந்தால் அதனுடைய பயணம் தோல்வியடைந்துவிடும்.

அப்படியானால் ஒழுக்கம் என்பது மூன்று காரியங்கள் சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகிறது. முதலாவது, ஒவ்வொரு தனிமனிதர்களுக்கிடையே நியாயமும் இணக்கமும் காணப்படுவது. இரண்டாவது, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள்ளே இருக்கின்ற பகுதிகள், சுத்தப்படுத்தப்பட்டதாகவும் ஒன்றோடொன்று இசைந்து செயல்படுவதாகவும் இருப்பது. மூன்றாவது ஒட்டுமொத்த மனித வாழ்க்கையின் பொதுவான நோக்கம் சம்பந்தப்பட்டதாக – அதாவது மனிதன் எதற்காக படைக்கப்பட்டான்: அந்த முழு கப்பல்படையும் எந்த வழியில் போகவேண்டும்: அந்த இசைக் குழுவின் இசையமைப்பாளர் அது எந்த இசையை வாசிக்கவேண்டுமென விரும்புகிறார் என்பதைக் குறித்ததாய் அது இருக்கிறது.

இந்த நவீன உலகத்திலுள்ள மனிதர்கள், எப்பொழுது பார்த்தாலும் அந்த முதல் காரியத்தைக் குறித்தே சிந்திக்கிறார்கள். ஆனால் மற்ற இரண்டு காரியங்களையும் மறந்து விடுகிறார்கள் என்பதை நீங்கள் கவனித்திருக்கமுடியும். செய்தித்தாள்களில் மனிதர்கள், தாங்கள் கிறிஸ்தவ ஒழுக்க நிலையை அடையும்படியாக முயற்சிசெய்து கொண்டிருப்பதாகச் சொல்லும்போது, எதைச் சொல்லுகிறார்களென்றால், அவர்கள் தேசங்களுக்கு இடையிலும், வர்க்கங்களுக்கிடையிலும், தனிமனிதர்களுக்கிடையிலும், அன்பையும் நியாயத்தையும் நிலைநாட்டும்படியாக முயற்சிப்பதாகவே சொல்லுகிறார்கள். அதாவது அவர்கள் அந்த முதல் காரியத்தை மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதன் ஒரு காரியத்தைக் குறித்து இவ்வாறாக, ‘‘இது தவறாக இருக்க முடியாது. ஏனென்றால் இது யாருக்கும் தீங்கு செய்யவில்லை’’ என்று சொல்லும்போது, அவர் அந்த முதல் காரியத்தை மட்டுமே சிந்திக்கிறார். தன்னுடைய கப்பல் அடுத்த கப்பலின் மீது மோதாமல் இருக்கும் வரைக்கும், தன்னுடைய கப்பல் எப்படி இருக்கிறது என்பது முக்கியம் அல்ல என்று அவர் நினைக்கிறார். அதுபோல இந்த ஒழுக்கத்தைக் குறித்து நாம் சிந்திக்கும்போது, முதல் காரியமான, சமூக உறவுகளிலிருந்து தொடங்குவது இயல்பான ஒன்றுதான்.

ஆனால் ஒருவகையில், கெட்ட ஒழுக்கத்தின் விளைவுகள், அந்த வட்டத்துக்குள் மிகவும் வெளிப்படையாகவும் ஒவ்வொரு நாளும் நம்மை அழுத்துகிறதாகவும் உள்ளன. எவையென்றால் போர், வறுமை, ஊழல், பொய்கள் மற்றும் தரமற்ற வேலைகள் ஆகியன. மேலும், நாம் முதல் காரியத்தை மட்டுமே பேசுவோம் என்றால், அதில் ஒழுக்கத்தைக் குறித்த கருத்துவேறுபாடுகள், மிகவும் குறைவாகவே இருக்கும். பெரும்பாலும் எல்லா மனிதர்களும் எல்லா நேரங்களிலும் ஒத்துக்கொண்ட ஒரு காரியம் எதுவென்றால், தத்துவார்த்த ரீதியாக(In theory) மனிதர்கள் ஒருவருக்கொருவர் உண்மையாகவும் அன்பாகவும் உதவியாகவும் இருக்கவேண்டும் என்பதே. இப்படியாக இந்த காரியங்களையெல்லாம் வைத்துத் துவங்குவது இயல்பாக இருந்தாலும், ஒழுக்கத்தைக் குறித்த நம்முடைய சிந்தனை அந்த இடத்திலேயே நின்று போகுமானால், அதைக் குறித்து நாம் சிந்திக்காமல் இருப்பதே நல்லது. நாம் இரண்டாவது

காரியத்துக்குள் கடந்து செல்லும் வரை –அதாவது ஒவ்வொரு மனிதனும் தனக்கு உள்ளாக சுத்தம் செய்துகொள்ளும் வரை– நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கிறோம்.

அந்தக் கப்பல்களுக்குள் இருக்கிற பாகங்களெல்லாம் மிகவும் பழமையாகவும் திசைமாற்றவே முடியாத நிலையிலும் இருக்கும்பொழுது, மற்ற கப்பல்களோடு மோதாமல் இருக்க, எப்படி திசைமாற்ற வேண்டும் என்று அவைகளிடம் சொல்லுவதினால் என்ன நன்மை இருக்கப்போகிறது? சமூகத்திலே மனிதன் எவ்வாறாக நடந்துகொள்ளவேண்டும் என்று, சில விதிகளையெல்லாம் ஒரு காகிதத்தில் எழுதி வைத்துவிட்டு, அதை கடைப்பிடிக்க முடியாதபடி, நம்முடைய பேராசையும் கோழைத்தனமும் மோசமான மனநிலையும் சுயஅகங்காரமும் தடுக்கும் என்று தெரிந்திருந்தோமானால், அவ்வாறாக எழுதி வைப்பதில் என்ன பயன் இருக்கிறது? நம்முடைய சமூகம் மற்றும் பொருளாதார அமைப்பை மேம்படுத்தும்படியாக, நாம் சிந்திக்கக்கூடாது என்றோ அல்லது நன்றாக யோசிக்கக்கூடாது என்றோ நான் ஒருபோதும் நினைக்கவில்லை. ஒரு தனிமனிதனுடைய தைரியம் மற்றும் அவனுடைய சுயநலமின்மையின் மூலமாக மட்டுமே எந்த ஒரு அமைப்பும் சரியாக செயல்படமுடியும் என்பதை நாம் உணர்ந்துகொள்ளாத வரை, இப்படிப்பட்ட எல்லாச் சிந்தனைகளும் வெறும் நிலவின் வெளிச்சம் மட்டுமே என்கிற அர்த்தத்தில்தான் சொல்லுகிறேன்.

இப்போதுள்ள அமைப்பின் கீழ், ஒருசில குறிப்பிட்ட வகையான ஊழல்களையோ ஒடுக்குதலையோ அகற்றுவது சுலபமாக இருக்கலாம், ஆனால் மனிதர்கள் மோசடி செய்பவர்களாகவும் ஒடுக்குபவர்களாகவும் இருக்கும்வரை, அவர்கள் எந்த ஒரு புது அமைப்பிலும்கூட, தங்களுடைய பழைய ஆட்டத்தைத் தொடர்ந்து நடத்த, புது வழிகளைக் கண்டுபிடிப்பார்கள். சட்டத்தின் மூலம் மனிதர்களை நல்லவர்களாக மாற்றமுடியாது: அதே நேரம் நல்ல மனிதர்கள் இல்லாமல் நல்ல சமூகத்தை ஏற்படுத்த முடியாது. அதனால்தான் நாம் இரண்டாவது காரியத்தை அடுத்ததாகச் சிந்திக்க வேண்டும்: அதாவது ஒரு மனிதனுக்குள்ளே இருக்கக்கூடிய ஒழுக்கத்தைக் குறித்து.

ஆனால், நாம் அந்த இடத்தோடு நிறுத்திவிடலாமென்றும் என்னால் சிந்திக்க முடியவில்லை. பிரபஞ்சத்தைக் குறித்து வெவ்வேறு நம்பிக்கைகள் வெவ்வேறு நடைமுறைகளுக்கு வழி வகுக்கின்றன என்ற கட்டத்திற்கு நாம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறோம். அந்த இடத்தை அடையும் முன்பாகவே நின்றுவிடலாம் என்று நாம் நினைப்பது ஒரு விவேகமான செயலாக முதலில் தோன்றலாம். நாம் அதோடு நிறுத்திவிட்டு, எல்லா உணர்வுள்ள மனிதர்களும் ஒழுக்கம் என்று ஏற்றுக் கொள்ளுகிற அந்தப் பகுதிகளை மட்டும் தொடர்ந்து செயல்படுத்துவது சரியாகத் தோன்றலாம். ஆனால் அப்படி நம்மால் செய்யமுடியுமா? மதம் என்பது உண்மையைக் குறித்த, சரியாகவோ தவறாகவோ இருக்கக்கூடிய தொடர் அறிக்கைகளை உள்ளடக்கியது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

அவைகள் உண்மையாக இருந்தால், மனிதக் கடற்படையின் சரியான படகோட்டம் பற்றி ஒரு தொகுப்பு முடிவுகள் பின்பற்றப்படும்: அவை தவறானவை என்றால், முற்றிலும் வேறுபட்ட தொகுப்பு பின்பற்றப்படும். உதாரணத்துக்கு, ஒரு காரியம் மற்ற மனிதர்களை சேதப்படுத்தாதவரை அது தவறல்ல என்று கூறிய அந்த மனிதனிடத்திற்கு நாம் திரும்புவோம். அவர் கப்பற்படையில் உள்ள மற்ற கப்பல்களை சேதப்படுத்தக்கூடாது என்று தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார். அதே நேரம் அவர் தன்னுடைய சொந்தக் கப்பலுக்குத் தான் என்ன செய்கிறார் என்பது தன்னுடைய சொந்த விவகாரமென்றும் அவர் நிஜமாக நினைக்கிறார். ஆனால் அவருடைய கப்பல் அவருக்கு சொந்தமான சொத்தா இல்லையா? என்பது, ஒரு மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டாக்குகிறதல்லவா? சொல்லப்போனால் என்னுடைய சொந்த மனதுக்கும் சரீரத்துக்கும் நான்தான் உரிமையுள்ள சொந்தக்காரனா? அல்லது உண்மையான உரிமையாளருக்கு பொறுப்பாக இருக்கவேண்டிய ஒரு வாடகைக்கு குடியிருப்பவனா என்பது ஒரு மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டாக்குகிறதல்லவா? ஒருவேளை, மற்றொருவர் தன்னுடைய சொந்த நோக்கங்களுக்காக என்னை உருவாக்கியிருப்பாரானால், நான் எனக்கு மட்டுமே சொந்தமானவனாய் இருப்பதைக்காட்டிலும், இப்பொழுது எனக்கு நிறைய கடமைகள் இருக்கும்.

ஒவ்வொரு தனிமனிதனும் என்றென்றும் வாழப்போகிறான் என்று கிறிஸ்தவம் மீண்டும் வலியுறுத்துகிறது. இது உண்மையாக இருக்கவேண்டும் அல்லது தவறாக இருக்கவேண்டும். இப்போது நான் ஒருவேளை எழுபது வருடங்கள்தான் வாழப் போகிறேனென்றால் நிறைய காரியங்களைக் குறித்து நான் கவலைப்படுவதற்கு, அவைகள் தகுதியற்றவைகளாயிருக்கின்றன. ஆனால், ஒருவேளை நான் என்றென்றும் வாழப்போகிறேன் என்றால், அவைகளைக்குறித்து நான் மிகவும் தீவிரமாகக் கவலைப்படவேண்டிய அவசியமுடையவனாக இருக்கிறேன். ஒருவேளை என்னுடைய கோபகுணமும், என்னுடைய பொறாமையும், படிப்படியாக மோசமடைகிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த படிப்படியாக மோசமாகிற நிலை எழுபது வருடங்களில் அவ்வளவு கவனிக்கத்தக்கதாக இருக்காது. ஆனால் ஒருவேளை அது ஆயிரமாயிரம் வருடங்களாக மோசமடையும் என்றால், அது உண்மையிலேயே நரகமாகத்தான் இருக்கும். மெய்யாகவே கிறிஸ்தவம் உண்மையென்றால், அந்த நிலை எப்படி இருக்கும் என்பதற்கு 'நரகம்' என்ற வார்த்தை துல்லியமான, மிகச்சரியான ஒரு சொல்லாகும். மேலும் சாவாமை[1], சர்வாதிகாரத்துக்கும் ஜனநாயகத்துக்குமுள்ள வித்தியாசத்தோடு தொடர்புடைய மற்றொரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. தனிமனிதர்கள் எழுபது வருடங்கள்தான் வாழுவார்களென்றால், ஆயிரம் வருடங்கள் நீடிக்கக்கூடிய ஒரு மாநிலமோ ஒரு தேசமோ அல்லது ஒரு நாகரீகமோ அந்த தனிநபரைக்காட்டிலும் மிகவும் முக்கியத்துவமுள்ளதாய் காணப்படுகிறது. ஆனால் கிறிஸ்தவம் உண்மையாக இருக்குமானால், அந்த தனிநபர் மிகவும் முக்கியமானவர் மட்டுமல்ல, ஈடு இணையில்லாத வகையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவராகக்

1 immortality

காணப்படுகிறார். ஏனென்றால், அவர் என்றென்றும் வாழப்போகிறவர். ஒரு தேசம் அல்லது ஒரு நாகரீகத்தினுடைய வாழ்வுகாலத்தை, அவருடைய நாட்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அது ஒரு கணம் மட்டுமே ஆகும்.

ஆக, நாம் ஒழுக்கத்தைக் குறித்து சிந்திப்போமென்றால், நாம் அந்த மூன்று துறைகளையுமே சிந்தித்தாக வேண்டும்: மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவு: ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளே இருக்கின்ற காரியங்கள்: மனிதனுக்கும் அவனை உண்டாக்கின அந்த சக்திக்கும் உள்ள உறவு. இதில் முதலாவது காரியத்தை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்வோம். இரண்டாவது காரியத்தில் கருத்துவேறுபாடுகள் ஆரம்பித்து, மூன்றாவதில் அவை தீவிரமடைகின்றன. மூன்றாவது காரியத்தை நாம் கையாளும்போதுதான் கிறிஸ்தவத்துக்கும் கிறிஸ்தவமல்லாத ஒழுக்கத்துக்கும் உள்ள முக்கியமான வேறுபாடுகள் வெளிவருகின்றன. இந்த புத்தகத்தின் மீதமுள்ள பகுதிகளை நான் கிறிஸ்தவ பார்வையைக் கருத்தில்கொண்டவனாய், கிறிஸ்தவம் உண்மையானது என்கிற கண்ணோட்டத்தில் முழுப்படத்தையும் பார்க்கப்போகிறேன்.

# 2. முக்கியமான நற்குணங்கள்

முந்தின பகுதி ரேடியோவில் ஒரு சுருக்கமான பேச்சாகக் கொடுக்கப்படுவதற்கென்று முதன்முதலில் இயற்றப்பட்டது. நீங்கள் பத்து நிமிடம் மட்டுமே பேச அனுமதிக்கப்படும்போது, பெரும்பாலும் மற்ற எல்லாவற்றையும் அந்தச் சுருக்கமான பேச்சுக்காக தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. ஒழுக்கத்தை மூன்று வகையாக (என்னுடைய கப்பல்கள் அணிவகுத்து பிரயாணம் செய்கிற அந்தப் படத்தை கருத்தில்கொண்டு) நான் பிரிப்பதற்கான ஒரு முக்கிய காரணம் என்னவென்றால், அது அந்த தலைப்பு முழுவதையும் உள்ளடக்குவதற்கான ஒரு சுருக்கமான பாதையாக தெரிந்தது. இங்கு பழைய எழுத்தாளர்கள் அந்தப் பாடத்தை மற்றொரு வகையில், எவ்வாறாக பிரித்தனர் என்பதைக் குறித்து, சில கருத்துகளை உங்களுக்கு கொடுக்க நான் விரும்புகிறேன். அது நான் ரேடியோவில் பேசமுடியாத அளவுக்கு மிக நீளமாக இருந்தாலும், மிகவும் நன்றானது.

இந்த நீண்ட பிரிவின்படி, ஏழு ''நற்குணங்கள்[1]'' உள்ளன. அதில் நான்கு ''முக்கியமான[2]'' நற்குணங்கள் என்றும், மீதமுள்ள மூன்று ''இறையியல்[3]'' நற்குணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அந்த ''முக்கியமானவைகள்'', நாகரீகம் அறிந்த எல்லா மனிதர்களாலும் அங்கீகரிக்கப்படுகின்றன. அந்த ''இறையியல் சார்ந்தவைகள்'', விதிப்படி கிறிஸ்தவர்கள் மட்டுமே அறிந்தவைகளாகும். இந்த இறையியல் சார்ந்தவைகளை நான் பின்னர் பார்த்துக்கொள்கிறேன். இப்பொழுது நான் அந்த நான்கு முக்கியமான நற்குணங்களை குறித்துப் பேசுகிறேன். (இந்த ''கார்டினல்'' என்ற வார்த்தை ரோமன் தேவாலங்களில் உள்ள ''கார்டினல்களோடு'' எந்த வகையிலும் சம்பந்தப்பட்டவை அல்ல. அது ''ஒரு கதவின் கீல்'' என்னும் அர்த்தமுடைய லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது. ஆனால் இவைகள் ''முக்கியமான[4]'' நற்குணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஏனென்றால் இவை மிகவும் ''முக்கியத்துவம் வாய்ந்தவை[5]'') அவையாவன: விவேகம், நிதானம், நீதி மற்றும் துணிவு ஆகும்.

விவேகம் என்பது நடைமுறைக்கான பொது அறிவு. அதாவது நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று யோசித்து, அதன் விளைவாக என்ன வெளிவரும் என்பதையும், மிகத் தீவிரமாக, உங்களை வருத்தி யோசிப்பதுதான். இப்போதெல்லாம் மனிதர்கள் விவேகத்தை ''நற்குணங்களில்'' ஒன்றாக நினைப்பது அரிது. உண்மையில் கிறிஸ்து தன்னுடைய உலகத்துக்குள் நாம் வரவேண்டுமானால், நாம் சிறுபிள்ளைகளைப்

1 virtues
2 Cardinal
3 Theological
4 cardinal
5 pivotal

போல ஆகவேண்டும் என்று கூறியதால், நிறைய கிறிஸ்தவர்கள், நீ முட்டாளாக இருந்தால் கூட பரவாயில்லை, ஆனால் நீ ''நல்லவனாக'' இருக்கவேண்டும் என்று யோசிக்கிறார்கள். ஆனால், அது ஒரு தவறான புரிந்துகொள்ளுதல் ஆகும். முதலாவதாக, பெரும்பாலான சிறுபிள்ளைகள், தாங்கள் ஆர்வமாய் இருக்கிற காரியங்களில், அதிக விவேகத்தை காண்பிக்கிறார்கள். மேலும், அதைக் குறித்து புத்திசாலித்தனமாகவும் சிந்திக்கிறார்கள். இரண்டாவதாக, புனித பவுல் சுட்டிக்காட்டியதைப்போல, கிறிஸ்து நம்முடைய அறிவுத்திறனில் நாம் குழந்தைகளாகவே இருந்துவிட வேண்டும் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. மாறாக, அவர் நம்மை ''புறாக்களைப்போலக் கபடற்றவர்களாக'' மட்டுமல்ல, ''சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாகவும்'' இருக்கவேண்டும் என்றே கூறினார். அவருக்கு ஒரு குழந்தையினுடைய இருதயம் வேண்டும், ஆனால், அது பெரியவர்களைப் போல சிந்திக்க வேண்டும். அவர் நாம் நல்ல பிள்ளைகள்போல எளிமையான, அலைபாயாத எண்ணமுடைய, அன்பான, கற்பிக்கப்படக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார், ஆனால், நம்மிடத்தில் உள்ள ஒவ்வொரு துளி அறிவுத்திறனும், தன்னுடைய வேலையில் மிகவும் விழிப்பாகவும், எந்த எதிர்ப்பையும் சந்திக்கக்கூடிய, முதல்–தரமான தயார்நிலையில் இருக்கவேண்டும் என்றும், அவர் விரும்புகிறார். நீங்கள் ஒரு தொண்டு நிறுவனத்துக்கு பணம் தருகிறீர்கள் என்பதற்காக, அது ஒரு மோசடியான நிறுவனமா இல்லையா? என்பதைக் கண்டறிய முயற்சிக்கக்கூடாது என்பது அர்த்தம் அல்ல. நீங்கள் சிந்திப்பது தேவனைக் குறித்துதான் என்பதற்காக (உதாரணத்துக்கு நீங்கள் ஜெபிக்கும்போது) நீங்கள் ஐந்து வயது குழந்தையாக இருந்தபொழுது கொண்டிருந்த, அவரைக் குறித்த அந்த குழந்தைத்தனமான எண்ணங்களே போதும் என்பது அர்த்தம் அல்ல .

ஆனால், ஒருவேளை நீங்கள் மிகவும் இரண்டாம்–தரமான சிந்திக்கும் திறனுடன் பிறந்துவிட்டால், அதற்காக நிச்சயம் தேவன் உங்களை குறைவாக நேசிக்கவோ, அல்லது உங்களை குறைவாக பயன்படுத்தவோ மாட்டார் என்பது முற்றிலும் உண்மையானது. மிகக்குறைவான சிந்திக்கும் திறனுள்ள மனிதர்களுக்கும், அவரிடம் இடமுண்டு. ஆனால், அவர் ஒவ்வொருவரும் தங்களிடத்திலுள்ள அனைத்து அறிவுத்திறனையும் பயன்படுத்தவேண்டும் என்றும் விரும்புகிறார். (ஒரு தகப்பன் தன் மகளுக்கு கூறுகிற ஆலோசனையாக எழுதப்பட்ட, ஒரு கவிதையில் வரக்கூடிய) சரியான பொன்மொழி ''நல்லவளாக இரு இளம்பெண்ணே, புத்திசாலியாயிருப்பவர்கள் செய்வதைச் செய்யட்டும்'' என்பது அல்ல, மாறாக, ''நல்லவளாக இரு இளம்பெண்ணே, ஆனால் அதில் உன்னால் முடிந்தமட்டும் புத்திசாலியாக இருக்கவேண்டும் என்பதும் அடங்கி இருக்கிறது என்பதை மறவாதே'' என்பதுதான். மற்ற எந்த காரியத்திலும் சோம்பேறியாயிருப்பவர்களை, தேவனுக்குப் பிடிக்காததுபோல, அறிவுத்திறனிலும் சோம்பேறியாய் இருப்பவர்களை, அவருக்குப் பிடிக்காது. நீங்கள் கிறிஸ்தவனாகவேண்டும் என்று நினைக்கிறீர்கள் என்றால், உங்களை முழுவதுமாக உங்கள் சிந்தனைகள் மற்றும் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளப்போகிற ஒரு காரியத்திற்குள் நீங்கள் இறங்குகிறீர்கள் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன்.

ஆனால், நல்ல வேளையாக, அது எதிர் வழியிலும் செயல்படுகிறது. யாராவது ஒருவர், உண்மையாகவே கிறிஸ்தவனாக ஆக முயற்சிக்கிறார் என்றால், அவர் வெகு சீக்கிரமே தன்னுடைய அறிவுத்திறன் மிகவும் கூர்மையாக்கப்படுவதை கண்டறிவார். கிறிஸ்தவனாக ஆவதற்கு விசேஷித்த கல்வி எதுவும் ஏன் தேவையில்லை என்பதின், ஒரு காரணம் என்னவென்றால், கிறிஸ்தவமே ஒரு கல்வி தான். அதனால்தான் ஒரு படிப்பறிவில்லாத விசுவாசியான பன்யனால்[1] இந்த முழு உலகத்தையே வியக்கச்செய்த ஒரு புத்தகத்தை[2] எழுதமுடிந்தது.

துரதிஷ்டவிதமாக, நிதானம் என்பது தன்னுடைய வார்த்தையின் அர்த்தத்தையே மாற்றிக்கொண்ட வார்த்தைகளில் ஒன்றாக இருக்கிறது. இப்பொழுதெல்லாம், அதனுடைய அர்த்தம் என்னவென்றால் மதுவகைகளை ஒதுக்கிவைப்பது என்பதுதான். ஆனால், முக்கியமான நற்குணங்களில் இரண்டாவது, ''நிதானம்'' என்று பெயரிடப்பட்ட அந்த நாட்களில், அப்படி எந்த அர்த்தத்தோடும் அது சொல்லப்படவில்லை. நிதானம் குடிப்பழக்கத்தை மட்டுமல்ல, மற்ற எல்லா சிற்றின்பங்களையும் குறிப்பிடுவதாக இருந்தது. மேலும் அது, அதைத் தவிர்ப்பது என்கிற அர்த்தத்தில் அல்ல, சரியான தூரம் சென்றுவிட்டு அதற்குமேல் செல்லாமல் இருப்பது என்பதைத்தான் அது குறித்தது. கிறிஸ்தவர்கள் எல்லோருமே கண்டிப்பாக மதுப்பழக்கத்தை ஒதுக்கி வைக்கவேண்டும் என்று பலர் நினைப்பதுண்டு. மதுப்பழக்கத்தை முற்றிலுமாக ஒதுக்கிவைத்த மதம் முகமதியம் தானேயொழிய கிறிஸ்தவம் அல்ல. நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட கிறிஸ்தவனுக்கோ அல்லது எந்த ஒரு கிறிஸ்தவனுக்கும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு வலுவான பானத்தைத் தவிர்ப்பது ஒரு கடமையாக இருக்கலாம். ஏனென்றால், ஒருவேளை அவர் குடிக்க ஆரம்பித்தாலே மிகவும் அதிகமாக குடித்துவிடுபவராக இருக்கக்கூடும், அல்லது அதற்குரிய பணத்தை ஒரு ஏழைக்கு கொடுக்க விரும்புகிற ஒருவராக இருக்கக்கூடும், இல்லையென்றால் தன்னோடு இருக்கிறவர்கள் குடிப்பழக்கத்தின்மேல் விருப்பமுடையவர்களாக இருப்பதை அறிந்துகொண்டு, தான் குடிப்பதினால் அவர்களையும் தூண்டிவிடக்கூடாது என்கிற எண்ணத்தோடு அவர் தவிர்க்கக்கூடும். ஆனால், இதன் முழு அம்சமும் என்னவென்றால், அவர் தன்னால் கண்டனம் தெரிவிக்கப்படாத ஒரு காரியத்தை, மற்றவர்கள் அனுபவிப்பதைப் பார்த்து, தான் விரும்பக்கூடிய ஒரு காரியத்தை, ஒரு நல்ல காரணத்துக்காக தவிர்க்கிறார் என்பதுதான்.

ஒரு சில வகையான கெட்ட மனிதர்களுக்குரிய ஒரு அடையாளம் என்னவென்றால், தான் கைவிடவேண்டும் என்று நினைக்கிற ஒரு காரியத்தை மற்றவர்களும் கைவிட்டே தீரவேண்டும் என்று அழுத்தினாலொழிய, அவர்களால் அந்தக் காரியத்தை கைவிடவேமுடியாது. ஆனால் அது கிறிஸ்தவ வழி அல்ல. ஒரு தனிப்பட்ட கிறிஸ்தவன் சில விசேஷித்த காரணங்களுக்காக சில காரியங்களை கைவிடக்கூடும். உதாரணமாக திருமணம், இறைச்சி, பீர் அல்லது சினிமா போன்றவை. ஆனால், அந்தக் காரியங்கள்

1 Bunyan
2 The pilgram progress

எல்லாம் கெட்டவைகள் என்று அவன் சொல்லுகிற அந்த நிமிஷத்திலேயே, அதை செய்யக்கூடிய மற்றவர்களுக்கு மேலாக தன்னை உயர்த்துவானென்றால், அவன் ஒரு தவறான பாதையில் திரும்பி விடுகிறான்.

குடிப்பழக்கம் என்கிற காரியத்தில், நவநாகரீக கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தப்படுகிற 'நிதானம்' என்ற வார்த்தை, குறும்பு நிறைந்த ஒரு பெரும்பகுதியை விளையாடியிருக்கிறது. அதாவது மனிதர்கள் மற்ற அநேக காரியங்களிலும் நிதானம் இழந்து செயல்படக்கூடும் என்பதை மறக்கவைத்திருக்கிறது. ஒரு மனிதன் கோல்ஃப்[1] விளையாட்டையோ அல்லது மோட்டார் சைக்கிள் ஓட்டுவதையோ தன்னுடைய வாழ்க்கையின் மிக முக்கிய பகுதியாக வைத்துக்கொள்வதும், அல்லது ஒரு பெண் தன்னுடைய எல்லா சிந்தனையையும் தன்னுடைய துணிமணிகளுக்கோ, அல்லது பெண்ணியக்கத்துக்கோ[2] அல்லது தன் நாய்க்குட்டிக்கோ அர்ப்பணிப்பதும், ஒரு மனிதன் ஒவ்வொரு மாலை வேளையும் குடியால் நிறைந்து நிதானம் இழப்பதைப் போன்றதுதான். நிச்சயம் இது வெளியில் தெரியக்கூடிய காரியம் அல்ல. அதாவது பெண்ணியக்கத்தின் மேலுள்ள பற்றோ அல்லது கோல்ஃப் விளையாடுவதின் மேலுள்ள வெறியோ எதுவும் உங்களை ரோட்டின் நடுவில் சுயநினைவின்றி விழுந்துகிடக்க வைக்கப்போவதில்லை. ஆனால், தேவன் வெளிப்புறமாக இருக்கிற காரியங்களைப் பார்த்து ஏமாறுபவர் அல்ல.

நீதிமன்றங்களில் நடந்து கொண்டிருக்கின்ற பல காரியங்களைக்காட்டிலும், நீதி என்பது மிகவும் மேலானது. ''நியாயம்[3]'' என்று நாம் இப்பொழுது அழைக்கின்ற ஒவ்வொரு காரியத்தின் பழைய பெயர் தான் அது. இதில் நேர்மை, விட்டுக்கொடுப்பது, உண்மை, கொடுத்தவாக்கை காப்பாற்றுதல் மற்றும் வாழ்க்கையிலுள்ள அப்படிப்பட்ட காரியங்களெல்லாம் அடங்கும். மேலும் துணிவு என்பது இரண்டு விதமான வீரத்தை அடக்கும்– அதாவது, ஆபத்து நேரிடும்போது அதை எதிர்கொள்ளுகிற அந்த வகையான தைரியம், மற்றும் வேதனையான சூழலிலும் கைவிடாமல் இருக்கக்கூடிய அந்த வகையான தைரியம். ''கட்ஸ்'' என்கிற வார்த்தைதான் நவீன ஆங்கிலத்தில் இதற்கு மிக நெருங்கி இருக்கக்கூடிய ஒரு வார்த்தையாகும். இந்த ஒரு நற்குணத்தை நீங்கள் செயல்படுத்தாமல் நிச்சயமாக மற்ற எந்த விதமான நற்குணத்தையும் நீண்ட நாட்களுக்கு செயல்படுத்தமுடியாது என்பதை நீங்கள் கவனிக்கக்கூடும்.

நாம் கண்டிப்பாக கவனிக்கவேண்டிய நற்குணங்களைக் குறித்து, மேலும் ஒரு காரியம் உள்ளது. ஒரு செயலை நேர்மையாகவோ அல்லது நிதானமாகவோ செய்வதற்கும், ஒரு மனிதன் நேர்மையாகவோ நிதானமாகவோ இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. ஒரு நல்ல டென்னிஸ் விளையாட்டு வீரராக இல்லாதவர்கூட சில நேரங்களில் பந்தை நன்றாக அடிக்கமுடியும். ஒரு நல்ல விளையாட்டு வீரர் என்று நீங்கள் யாரை குறிப்பிடுகிறீர்கள் என்றால், தன்னுடைய கண், தசை, நரம்புகள்

1 Golf
2 Bridge

எல்லாம், கணக்கில்லாத பல நல்ல அடிகளை அடித்தபடியால், இப்பொழுதுகூட அவைகள் நம்பகத்தன்மையோடு செயல்படக்கூடியதாயிருக்கிற ஒரு மனிதனைத்தான் குறிப்பிடுகிறீர்கள். அந்த மனிதன் விளையாடாதபோது கூட, அவற்றிற்கு ஒரு வித தொனியோ அல்லது தரமோ இருப்பதை நாம் பார்க்கமுடியும். எப்படியென்றால், ஒரு கணிதமேதையின் சிந்தனை அவர் கணக்கு செய்யாதபோது கூட ஒருவிதமான பழக்கத்தோடும் கண்ணோட்டத்தோடும் இருப்பதைப்போல. இதே வகையில்தான், ஒரு மனிதன் எப்பொழுதும் நீதியோடு செயல்களைச் செய்யும்போது, முடிவில் ஒரு தரமான குணத்தை பெற்றுக்கொள்ளுகிறார். நாம் நற்குணங்கள் என்று பேசும்போது, அந்தக் குறிப்பிட்ட செயல்களைக்காட்டிலும் அந்தத் தரத்தை தான் குறிப்பிடுகிறோம்.

இந்த வித்தியாசம் பின்வரும் காரணங்களுக்காக மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. நாம் அந்த குறிப்பிட்ட செயல்களை மட்டுமே சிந்திப்போமானால், மூன்று தவறான கருத்துக்களை ஊக்குவித்து விடுவோம்.

1. நீங்கள் ஒரு சரியான செயலைச் செய்யும்போது, அதை எப்படி அல்லது ஏன் செய்தீர்கள்– அதாவது நீங்கள் அதை விரும்பிச் செய்தீர்களா அல்லது விருப்பமின்றி செய்தீர்களா, கசப்போடு செய்தீர்களா அல்லது உற்சாகத்தோடு செய்தீர்களா, மற்ற மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்று பயந்து செய்தீர்களா அல்லது சரி என்பதற்காகவே அதைச் செய்தீர்களா என்பதெல்லாம் ஒரு விஷயமே இல்லை என்பதுபோல நாம் சிந்திக்கக்கூடும். ஆனால் உண்மை என்னவென்றால், தவறான காரணங்களுக்காகச் செய்யப்பட்ட சரியான செயல்கள், நற்குணங்கள் என்று அழைக்கப்படுகிற அந்த உள்ளான தரத்தையோ குணத்தையோ கட்டி எழுப்ப உதவுவதில்லை. ஆனால், இந்த தரம் அல்லது குணம்தான் உண்மையில் முக்கியமானது. (அந்த மோசமான டென்னிஸ் விளையாட்டு வீரர், மிகவும் ஓங்கி அடித்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஒரு பலமான அடி தேவை என்பதற்காக அப்படிச் செய்யவில்லை, மாறாக, தன்னுடைய பொறுமையை இழந்து, கோபத்தோடு அப்படி அடித்து விடுகிறார். ஆனால், அவர் அடித்த அந்த அடி, அதிர்ஷ்டவசமாக அவர் அந்த ஆட்டத்தில் ஜெயிப்பதற்கு உதவி செய்யக்கூடும் என்றாலும், அது அவர் ஒரு நம்பத்தகுந்த விளையாட்டு வீரராக இருப்பதற்கு உதவாது.

2. ஒரு குறிப்பிட்ட சட்டத்தொகுப்புகளுக்கு, அப்படியே கீழ்ப்படிவதைத்தான் தேவன் விரும்புகிறார் என்று நாம் சிந்திக்கக்கூடும். ஆனால் உண்மையில், அவர் ஒரு வித குறிப்பிட்ட வகையான மனிதர்கள் வேண்டுமென்று விரும்புகிறார் என்பதே உண்மை.

3. இந்த ‘‘நற்குணங்கள்’’, இந்தத் தற்கால வாழ்க்கைக்கு மட்டும்தான் தேவையாக இருக்கிறது என்று நாம் நினைக்கக்கூடும். அந்த மற்றொரு வாழ்க்கையில், நாம் நியாயமாய் இருப்பதை நிறுத்திக் கொள்ளலாம், ஏனென்றால், அங்கு

எதைக்குறித்தும் சண்டைகளே இருக்கப்போவதில்லை. மேலும் நாம் தைரியமாய் இருக்கவேண்டாம், ஏனென்றால் அங்கு ஆபத்துகளே இல்லை என்று. இப்போது அந்த அடுத்த உலகில் நாம் நியாயமாய் இருப்பதற்கும், வீரமான செயல்களைச் செய்வதற்கும், வேண்டிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் இருக்கக்கூடும் என்பது ஒருவகையில் உண்மைதான், ஆனால், அந்த ஒரு வகையான மனிதர்களாக மாறுவதற்கான எல்லா சந்தர்ப்பங்களும், இங்கு நாம் அப்படிப்பட்ட செயல்களைச் செய்வதன் விளைவாகத்தான் இருக்கும். இங்கு நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது, தேவன் உங்களிடத்தில் அப்படிப்பட்ட தரமான குணங்கள் இல்லையென்றால், உங்களை தன்னுடைய அந்த நித்திய உலகத்துக்குள் சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கமாட்டார் என்பது அல்ல. நாம் கவனிக்க வேண்டியது எதுவென்றால், மனிதர்கள் தங்களுக்குள்ளே இப்படிப்பட்ட தரங்களை குறைந்தபட்சமாவது கொண்டிருக்காவிட்டால், பின்னர் எப்பேற்பட்ட வெளியான சூழ்நிலைகளும் அவர்களுக்கு ஒரு ''மோட்சத்தை' – அதாவது தேவன் நமக்குக் கொடுக்க நினைக்கிற, அந்த ஆழமான, பலமான, அசைக்க முடியாத வகையான சந்தோஷத்தை ஏற்படுத்திக் கொடுக்கமுடியாது என்பதுதான்.

# 3. சமூக ஒழுக்கம்

மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள கிறிஸ்தவ ஒழுக்கத்தைக் குறித்து நாம் தெளிவாக தெரிந்து கொள்ளவேண்டிய முதல் காரியம் என்னவென்றால், இந்தத் துறையில், கிறிஸ்து ஏதோ ஒரு புத்தம்புதிதான ஒரு ஒழுக்கத்தை போதிக்கும்படியாக வரவில்லை. புதிய ஏற்பாட்டின் பொற்கொள்கையானது (மற்றவர்கள் உங்களுக்குச் செய்யவிரும்புவதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்), எல்லோரும் தங்களுடைய ஆழ்மனதில், இதுதான் எப்பொழுதும் சரி, என்று நினைப்பவைகளின் சுருக்கமாய் இருக்கிறது. உண்மையான சிறந்த அறநெறி ஆசிரியர்கள் ஒருவரும் புதிதான ஒழுக்கங்களை ஒருபோதும் அறிமுகப்படுத்தவில்லை. குள்ளநரிகளும் பித்துபிடித்தவர்களும் தான் அப்படிச் செய்தார்கள். டாக்டர் ஜான்சன் சொன்னதைப்போல ‘‘மனிதர்கள் அறிவுறுத்தப்பட வேண்டியதைவிட, அதிகம் நினைவுபடுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள்’’. ஒவ்வொரு ஒழுக்க ஆசிரியரின் உண்மையான வேலையும் எதுவென்றால், நாம் தவிர்க்க நினைக்கிற பழைய எளிமையான கோட்பாடுகளுக்கு, நம்மை மீண்டும் மீண்டும் கொண்டுவருவதுதான். ஒரு குதிரையை மீண்டும் மீண்டும் அது தாண்ட மறுக்கிற அந்த வேலிக்கு அழைத்துவருவது போலவும், ஒரு குழந்தையை, தான் படிக்க விரும்பாத ஒரு பாடத்தின் சிறு பகுதிக்கு மீண்டும் மீண்டும் அழைத்துவருவது போன்றதும்தான் இது.

நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டிய இரண்டாவது காரியம் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட சமூகத்துக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்திலே ‘‘மற்றவர்கள் உங்களுக்குச் செய்யவிரும்புவதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்’’ என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும்படியாக, ஒரு விரிவான அரசியல் திட்டத்தை கிறிஸ்தவம் ஏற்படுத்தவில்லை. அப்படி ஏற்படுத்தியதாகத் தன்னை அது காண்பித்துக்கொள்ளவும் இல்லை என்பதாகும். அதனால் அப்படிச் செய்திருக்கவும் முடியாது. அது எல்லாக் காலங்களிலுமுள்ள எல்லா மனிதர்களுக்கும் கொடுக்கப்பட்டது. மேலும் ஒரு இடத்துக்கோ அல்லது காலத்துக்கோ பொருந்தக்கூடிய குறிப்பிட்ட திட்டம், மற்றொரு காலத்துக்கோ இடத்துக்கோ பொருந்தாது. ஆனால், எப்படியானாலும் கிறிஸ்தவம் என்பது அவ்வாறு செயல்படுவது அல்ல. பசித்தவர்களுக்கு உணவளியுங்கள் என்று அது கூறும்போது சமையல் வகுப்புகளை அது கற்றுத்தருவதில்லை. வேதத்தை வாசிக்கும்படியாக அது சொல்லும்பொழுது, அது எபிரேய பாஷையையோ அல்லது கிரேக்க பாஷையோ அல்லது ஆங்கில இலக்கணத்தையோ, கற்றுத் தருவதில்லை. சாதாரண மனித கலைகளுக்கும் அறிவியலுக்கும் பதிலாகவோ அல்லது அவைகளை மாற்றியமைக்கவேண்டும் என்பதோ அதனுடைய நோக்கம் அல்ல. மாறாக, அது ஒரு இயக்குனராக இருந்து அவர்கள் எல்லோருக்கும் நல்ல வேலையை

அமைத்துக்கொடுத்து, அவர்களுக்கு ஒரு புது வாழ்க்கையைக் கொடுக்கிற, ஒரு ஆற்றலின் ஆதாரமாக இருக்கிறது. ஆனால் அப்படி ஆவதற்கு அவர்கள் தங்களை அதன் வசம் கீழ்ப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சபைதான் எங்களுக்கு ஒரு தலைமையைக் கொடுக்க வேண்டும் என்று மனிதர்கள் சொல்லுவார்கள். சரியான பார்வையில் பார்க்கும்போது, இது உண்மைதான். ஆனால், தவறான பார்வையில் பார்க்கும்போது, இது உண்மையல்ல. சபை என்று சொல்லும்போது கிறிஸ்தவர்களாகச் செயல்படுகிற அந்த முழு அமைப்பையும்தான் அவர்கள் குறிப்பிடவேண்டும். சபை தங்களுக்கு ஒரு தலைமையை வழங்கவேண்டும் என்று அவர்கள் சொல்லும்போது, நல்ல திறமைகளுள்ள சில கிறிஸ்தவர்கள், பொருளாதார வல்லுனர்களாகவும் அரசியல்வாதிகளாகவும் இருக்கவேண்டும் என்றும், எல்லாப் பொருளாதார வல்லுனர்களும் அரசியல்வாதிகளும் கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும் என்றும், அரசியலிலும் பொருளாதாரத்திலும் அவர்கள் எடுத்துக்கொள்ளுகிற எல்லா முயற்சிகளும், ‘‘மற்றவர்கள் உங்களுக்குச் செய்யவிரும்புவதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்’’ என்பதைச் செயல்முறைப்படுத்தும்படியாக இயக்கப்படவேண்டும் என்றும் கூறுகிறார்கள். அப்படி நடந்துவிட்டால், மற்றவர்களான நாமும் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தால், நம்முடைய சொந்தச் சமூகப் பிரச்சினைகள் எல்லாவற்றுக்கும், கிறிஸ்தவத்தின் மூலமாக ஒரு தீர்வை வெகு சீக்கிரத்தில் கண்டுபிடிக்கமுடியும். ஆனால் நிச்சயமாக, சபையிலிருந்து தலைமை வேண்டுமென்று அவர்கள் கேட்கும்பொழுது, பெரும்பாலான மனிதர்கள், சபைகுருமார்கள் ஒரு அரசியல் திட்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்கிற அர்த்தத்திலேயே கேட்கிறார்கள்.

அது முட்டாள்தனமானது. மத குருமார்கள் என்பவர்கள் நித்தியமாக வாழப்போகிற உயிரினங்களான, நம்மைக் குறித்த காரியங்களைப் பார்த்துக்கொள்வதற்காக, விசேஷித்தவிதமாக பயிற்றுவிக்கப்பட்ட, பிரித்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட மனிதர்களாவர். ஆனால் நாம் அவர்களை, பயிற்றுவிக்கப்படாத முற்றிலும் வேறுபட்ட வேலையைச் செய்யும்படியாகக் கேட்கிறோம். அந்த வேலை, உண்மையில் சாமானியர்களான நாம் செய்யவேண்டிய ஒன்றாகும். தொழிற்சங்கவாதங்களிலும் கல்வியிலும் கிறிஸ்தவக் கொள்கையின் பயன்பாடு என்பது கிறிஸ்தவத் தொழிற்சங்கவாதிகளிடமிருந்தும் கிறிஸ்தவ ஆசிரியர்களிடமிருந்தும் வரவேண்டும். இது எப்படியென்றால், கிறிஸ்தவ இலக்கியம், கிறிஸ்தவ நாவலாசிரியர்களிடமிருந்தும் நாடகக் கலைஞர்களிடமிருந்தும் வருவதுபோல ஆகும். தங்களுடைய ஓய்வு நேரத்திலே ஒன்றாகக்கூடி நாடகங்களையும் நாவல்களையும் எழுத முயற்சிக்கிற ஒரு ஆயர்கள் குழுவிடமிருந்து அல்ல.

அதேபோல, புதிய ஏற்பாட்டை மேலோட்டமாகப் பார்க்கும்போது, ஒரு முழு கிறிஸ்தவ சமூகம் எப்படி இருக்கும் என்பதைக் குறித்த அறிகுறியை, அது மிகவும் தெளிவாகக் கொடுக்கிறது. சொல்லப்போனால் நாம் கிரகிக்கக்கூடியதற்கும் மேலாக, அது நமக்குத்

தருகிறது. விருந்தாளிகளாகவோ அல்லது ஒட்டுண்ணிகளாகவோ இருக்கக்கூடாது என அது நமக்குச் சொல்லுகிறது– அதாவது, ஒரு மனிதன் வேலை செய்யவில்லை என்றால், அவன் சாப்பிடவும் கூடாது. ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தக் கைகளினாலே வேலை செய்யவேண்டும். இதற்கும் மேலாக, ஒவ்வொருவருடைய வேலையும் ஏதாவது ஒரு நன்மையை உருவாக்க வேண்டும். முட்டாள்தனமான ஆடம்பரங்களை உற்பத்தி செய்வதோ அல்லது அதற்குப்பின்பு அவைகளை வாங்கச்சொல்லி நம்மை வற்புறுத்தும், முட்டாள்தனமான விளம்பரங்களோ இருக்கக்கூடாது. தங்களுடைய பொருள், அறிவு, திறமைகளைக் குறித்துப் பெருமையாய் பேசுவதோ, மற்றவர்களைக்காட்டிலும் தங்களை உயர்த்திப் பேசிக்கொள்வதோ இருக்கவே கூடாது.

அந்த அளவு மட்டும் பார்க்கும்பொழுது ஒரு கிறிஸ்தவ சமூகம் என்பது, நாம் இப்பொழுது அழைக்கிறதுபோல ஒரு இடதுசாரியாக இருக்கிறது. ஆனால், இன்னொருபுறம் அது நாம் கீழ்படியவேண்டுமென்று எப்பொழுதும் நம்மை வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறது– கீழ்ப்படிதலை (மற்றும் வெளிப்புறமாகக் காண்பிக்கக்கூடிய மரியாதையை) நாம் எல்லோரும், சரியான முறையில் நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்கும், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கும் மற்றும் (நான் சொல்லப்போவது பலரால் மிகவும் விரும்பப்படாத ஒன்றாக இருக்கப்போகிறது என்று நான் அஞ்சுகிறேன்) மனைவிகள் தங்கள் கணவன்மார்களுக்கும் காண்பிக்கவேண்டும். மூன்றாவதாக, அது ஒரு உற்சாகமுள்ள சமூகமாக இருக்கவேண்டியதாயிருக்கிறது. பாடல்களும் மகிழ்ச்சியும் நிறைந்தவைகளாயும், கவலை மற்றும் விசாரங்களை தவறு என எண்ணுவதாகவும் இருக்கவேண்டும். மரியாதைக்குரியவர்களாய் நடந்துகொள்வது என்பது கிறிஸ்தவ நற்குணங்களில் ஒன்றாகும். மேலும், மற்றவருடைய விவகாரங்களில் தலையிடும் காரியங்களை புதிய ஏற்பாடு வெறுக்கிறதாயிருக்கிறது.

அப்படி ஒரு சமுதாயம் இருந்து நீங்களும் நானும் அதைப் பார்த்துவிட்டு வந்திருந்தால், நாம் வரும்பொழுது அதைக்குறித்த ஒரு விசித்திரமான உணர்வைக் கொண்டிருந்திருப்போம் என்று நினைக்கிறேன். அதனுடைய பொருளாதார வாழ்க்கை, ஒரு மிகுந்த சமதர்மவாதக் கொள்கையைப் பின்பற்றுவதால் ''முற்போக்கானதாகவும்'', ஆனால் அதனுடைய குடும்ப வாழ்க்கையும், அதனுடைய நடத்தைக்கான நெறிமுறைகளும் பழைய பாணியைப் பின்பற்றுவதாகவும் இருப்பதை, நாம் உணர்ந்திருப்போம். சொல்லப்போனால், சம்பிரதாயங்களும் மற்றும் பிரபுத்துவங்களும் நிறைந்தவைகளாய் இருப்பதையும்கூடக் காணமுடியும். நம் ஒவ்வொருவருக்கும், அதில் சில சிறு பகுதிகள் பிடிக்கலாம். ஆனால், மிகச்சிலருக்கே அதை முழுமையாக பிடித்திருக்கமுடியும் என்று நான் அஞ்சுகிறேன். மனித இயந்திரத்திற்கான முழு திட்டமும் கிறிஸ்தவம் என்றால் இதைத்தான் ஒருவர் எதிர்பார்க்க முடியும்.

நாம் எல்லோருமே அந்த முழுத் திட்டத்திலிருந்து, வெவ்வேறு வழிகளில் விலகிவிட்டோம். மேலும் நாம் ஒவ்வொருவரும் நமக்கு ஏற்றார் போல் அந்த அசல் திட்டத்தை மாற்றி அமைத்துக்கொண்டு, அதையே உண்மையான திட்டமாக ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறோம். உண்மையில் கிறிஸ்தவம் சார்ந்ததாகக் காணப்படுகிற எந்தக் காரியத்திலும் நீங்கள் இதை மீண்டும் மீண்டும் பார்க்கமுடியும். ஒவ்வொருவரும் அதில் சிறு சிறு பகுதிகளில் ஈர்க்கப்பட்டு, தங்களுக்குப் பிடித்த பகுதிகளை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்றவைகளை விட்டுவிடுகிறார்கள். அதனால்தான் நம்மால் இதில் அதிகமாக முன்னேற முடியவில்லை. மேலும் இதனால்தான் இதற்கு முற்றிலும் எதிரான காரியங்களுக்காகப் போராடுகிற மனிதர்கள், தாங்கள் கிறிஸ்தவத்துக்காக போராடுவதாகவும் சொல்லிக்கொள்ளமுடிகிறது.

இன்னொரு விஷயத்தைச் சொல்லுகிறேன். பண்டைய காலத்துப் புறஜாதிகளான கிரேக்கர்களும், பழைய ஏற்பாட்டு யூதர்களும், இடைக்காலத்தில் வாழ்ந்த பெரிய கிறிஸ்தவ போதவர்களும், நமக்குத் தந்த ஒரு சிறு துண்டு ஆலோசனை இருக்கிறது, அதற்கு இந்த நவீன காலத்துப் பொருளாதார அமைப்பு அறவே கீழ்ப்படியவில்லை. இந்த மனிதர்கள் யாவரும் பணத்தை வட்டிக்குக் கொடுக்கக்கூடாது என்று நமக்கு கூறினர். ஆனால் வட்டிக்கு பணம் தருவது– நாம் முதலீடு என்று அழைக்கிறோமே– அதுதான் நம்முடைய முழு அமைப்பின் அடித்தளமாக இருக்கிறது. இப்போது நாம் செய்வது முற்றிலும் தவறு என்று அது குறிப்பிடவில்லை எனலாம். மோசே, அரிஸ்டாட்டில் மற்றும் அந்தக் கிறிஸ்தவர்கள் எல்லாரும், வட்டிக்குக் கொடுப்பதை (குந்து வட்டி என்று அவர்கள் அதை அழைத்தார்கள்) தடைசெய்தபோது, ஒரு தனிப்பட்ட மனிதர் தன் பணத்தை கொடுப்பதைக் குறித்துதான் இந்த ஆலோசனையை திணித்தார்களே தவிர, கூட்டு பங்கு நிறுவனங்களை அவர்கள் எதிர்பார்க்கவில்லை, ஆதலால் அவர்கள் சொன்னவற்றை குறித்து நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை என்று சில மனிதர்கள் சொல்லுவார்கள்.

என்னால் ஒரு முடிவுக்கு வரமுடியாத ஒரு கேள்வியாய் அது இருக்கிறது. நான் ஒரு பொருளாதார வல்லுநர் அல்ல. நாம் இப்பொழுது இருக்கின்ற இந்த நிலைக்குக் காரணம் இந்த முதலீடு அமைப்புதானா என்று எனக்குச் சுத்தமாகத் தெரியாது. இந்த இடத்தில் தான், நமக்கு ஒரு கிறிஸ்தவ பொருளாதார வல்லுனர் தேவைப்படுகிறார். ஆனால், நாம் நம்முடைய முழு வாழ்க்கையின் அடித்தளமாக அமைத்துக்கொண்ட, அந்த முக்கியமான காரியத்துக்கே கண்டனம் தெரிவிப்பதில் ஒன்றுபட்ட (அல்லது துவக்கத்தில் அப்படியாக தோன்றின) அந்த மூன்று மாபெரும் நாகரீகங்களைக் குறித்து, நான் உங்களுக்குச் சொல்லாமல் இருந்திருந்தால், நான் நேர்மையானவனாக இருக்கமுடியாது.

இன்னும் ஒரு காரியத்தைச் சொல்லி நான் முடிக்கிறேன். ஒவ்வொரு மனிதனும் வேலை செய்யவேண்டும் என்று குறிப்பிடுகிற, புதிய ஏற்பாட்டில் உள்ள அந்தப் பகுதி, அதற்கு ஒரு காரணத்தையும் தருகிறது. என்னவென்றால் ‘‘தேவை உள்ளவர்களுக்குக்

கொடுக்கும்படியாக, சிலவற்றை அவர்கள் வைத்திருக்கவேண்டும்'' என்பதுதான். சமூகசேவை – அதாவது ஏழைகளுக்குக் கொடுப்பது– கிறிஸ்தவ ஒழுக்கத்தின் ஒரு முக்கியமான பகுதியாகும். நமக்கு பயமுண்டாக்கக்கூடிய உவமையான, செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளின் உவமையில், இதை மையமாக வைத்துதான் எல்லாக் காரியங்களும் மாறுதலாக முடிகின்றன. சமீபநாட்களில் சில மனிதர்கள், சமூகசேவை என்பது தேவையே இல்லை என்றும், ஏழைகளுக்கு கொடுப்பதற்குப் பதிலாக, கொடுப்பதற்கு ஏழைகளே இல்லாத ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்.

அப்படி ஒரு வகையான சமுதாயத்தை உருவாக்குவது என்று அவர்கள் சொல்லுவது சரியானதாக இருக்கலாம், ஆனால் அதன் விளைவாக, யாராவது ஒருவர் அப்படி ஒரு சமுதாயம் உருவாகும்வரைக்கும் நாம் கொடுப்பதை நிறுத்திக்கொள்ளலாம் என்று நினைப்பாரானால், பின்னர் அவர் எல்லாக் கிறிஸ்தவ ஒழுக்கத்திலிருந்தும் வழிவிலகிவிடுகிறார். நாம் மற்றவர்களுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்கிற அந்த அளவைக்குறித்து எவரும் ஒரு முடிவுக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை. இந்தக் காரியத்தில் இருக்கக்கூடிய ஒரே பாதுகாப்பான விதி என்னவென்றால், நாம் மிச்சம்பிடிப்பதற்கும் மேலாக நாம் கொடுக்கவேண்டும் என்பதே. வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், நம்முடைய வசதிகள், ஆடம்பரங்கள், பொழுதுபோக்குகள் ஆகியவைகளுக்கான நம்முடைய செலவு, நம்மைப்போல அதே வருமானம்கொண்ட மற்றவர்களுக்கு நிகரான தரத்தில் இருக்குமென்றால், அநேகமாக நாம் மிகவும் குறைவாகவே மற்றவர்களுக்கு கொடுக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளலாம். நம்முடைய சமூகசேவைகள் நம்மைக் கிள்ளவோ அல்லது கட்டுப்படுத்தவோ இல்லையென்றால், நாம் மிகவும் குறைவாகத்தான் கொடுக்கிறோம் என்றே நான் கூறுவேன். நாம் விருப்பப்பட்டு செய்யவேண்டும் என நினைத்தும், நம்முடைய தானதர்மங்களின் செலவுகள் இடம்கொடாததால், செய்யமுடியாத காரியங்கள் இருக்கவேண்டும். இப்பொழுது நான் பேசிக்கொண்டிருப்பது, சாதாரணமாக எல்லாரும் 'தொண்டுகள்' என்று கூறுகிற சமூகசேவையை குறித்தே.

சில குறிப்பிட்ட சூழல்களில், துன்பத்தில் இருக்கக்கூடிய நம்முடைய சொந்த உறவினர்கள், நண்பர்கள், அண்டை வீட்டார் அல்லது பணியாளர்களை, தேவன், நம்முடைய கவனத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தும்போது, அது இன்னும் அதிகமான தேவைகளை முன்வைக்கலாம்: அது உங்களை முடக்கி, உங்களுடைய சொந்த நிலைக்கே ஆபத்து விளைவிக்கக்கூடியதாகக்கூட இருக்கலாம். நம்மில் பலருக்கு மற்றவர்களுக்கு உதவுவதற்கு ஒரு பெரிய தடையாக இருப்பது, நம்முடைய ஆடம்பரமான வாழ்க்கையோ, பணஆசையோ அல்ல. மாறாக நம்முடைய பயம் தான் தடையாக இருக்கிறது– பாதுகாப்பற்ற ஒரு நிலையின் பயம். பெரும்பாலான சமயங்களில் நாம் இதை ஒரு சோதனையாகவே அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். சில நேரங்களில் நம்முடைய பெருமைகூட நம்முடைய சமூகசேவைக்குத் தடையாக

இருக்கலாம். நம்முடைய பகட்டான, உதாரகுணத்திற்காக (ஹோட்டலில் அதிக டிப்ஸ் வைப்பது, விருந்தாளிகளை கவனிப்பது போன்றவற்றில்) அதிகம் செலவிடவும் உண்மையில் தேவையுள்ளவர்களுக்கு உதவி செய்வதற்கு குறைவாகச் செலவு செய்யவும் நாம் தூண்டப்படக்கூடும்.

இப்போது நான் முடிக்கும் முன்பாக, இந்தப் பகுதி, அதை வாசித்தவர்களை எந்த வகையில் பாதித்திருக்கிறது என்று துணிகரமான ஒரு யூகத்தை கொடுக்கப் போகிறேன். என்னுடைய யூகம் என்னவென்றால், தங்களுடைய திசையில் செல்லாமல்போனதற்காக மிகவும் கோபமாக இருக்கிற சில இடதுசாரி மனிதர்கள் இங்கு இருக்கிறார்கள். மேலும் இதற்கு எதிர்மறையான வகையில் சில மனிதர்கள், இந்தக் காரியம், மிகவும் மிஞ்சிப் போய்விட்டது என்று சொல்லி கோபமாக இருக்கிறார்கள். அப்படியானால் அது நம்மை ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கான வரைபடத்தை (ப்ளூ பிரிண்ட்) வரைவதில் இருக்கிற, அந்த மறைவான தடைக்கு நேரெதிராக நிறுத்துகிறது. நம்மில் பலர் உண்மையில் இந்தப் பாடத்தை, கிறிஸ்தவம் என்ன சொல்லுகிறது என்று கண்டுபிடிக்கும்படியாக அணுகவில்லை. மாறாக, நாம் நம்முடைய கட்சியின் கொள்கைகளுக்கும் பார்வைகளுக்கும் ஆதரவாக, கிறிஸ்தவம் ஏதேனும் சொல்லுகிறதா என்று தெரிந்துகொள்ளும் நோக்கத்தோடுதான் அதை அணுகுகிறோம்.

நமக்கு ஒரு எஜமான் அல்லது ஒரு நீதிபதியின் பதவியை வழங்கக்கூடிய ஒரு கூட்டாளியை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். நானும் அதேபோலத்தான். நான் விட்டுவிடவேண்டும் என்று நினைத்த சில சிறு பாகங்கள் இந்தப் பகுதியில் உண்டு. அதனால்தான் நாம் எதைக்குறித்துப் பேசினாலும் நாம் இன்னும் சற்று தொலைவு, இன்னும் நீண்டதூரம் செல்லவில்லை என்றால், அப்படிப்பட்ட பேச்சுகளினால் ஒன்றும் கிடைக்கப்போவதில்லை. ஒரு கிறிஸ்தவ சமுதாயம் என்பது நம்மில் அநேகர் விரும்பி வேண்டினால் ஒழிய வரப்போவதில்லை. மேலும் நாம் முழுக்க ஒரு கிறிஸ்தவனாக மாறும்வரையில் அது வேண்டும் என நாம் விரும்பப்போவதுமில்லை. ‘‘மற்றவர்கள் உங்களுக்குச் செய்யவிரும்புவதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்’’ என்பதை நான் திரும்பத்திரும்பச் சொல்லி என் முகம் கருக்கும் அளவிற்கு தொண்டைகிழிய கத்தினாலும், நான் உண்மையாக பிறரை என்னைப்போல நேசிக்கவில்லையென்றால், என்னால் அதைச் செயல்படுத்தமுடியாது– நான் தேவனை நேசிக்கக் கற்றுக்கொள்ளும் வரையில் என்னால் பிறனை நேசிக்கக் கற்றுக்கொள்ளமுடியாது. நான் தேவனுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ளும்வரையில் என்னால் அவரை நேசிக்க கற்றுக்கொள்ளமுடியாது. ஆதலால் நான் உங்களுக்கு எச்சரித்தது போலவே, நாம் மிக உள்ளான சில காரியங்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். அதாவது சமூக காரியங்களிலிருந்து மதம் சம்பந்தமான காரியங்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோம். ஏனென்றால் சுற்றிவளைத்து செல்லுகிற நீண்ட பாதைதான், நம் வீட்டிற்கு (பரலோகம்) சென்றடையக்கூடிய குறுக்குப் பாதையாய் இருக்கிறது.

## 4. ஒழுக்கம் மற்றும் மனோபகுப்பாய்வு

நம்மில் பலரும் ஒரு கிறிஸ்தவ மனிதராக மாறாவிட்டால் நம்மால் ஒரு கிறிஸ்தவ சமுதாயத்தை பெற்றுக்கொள்ளவே முடியாது என்று நான் கூறியிருக்கிறேன். அதற்காக நாம் இந்த சமுதாயத்தை குறித்துச் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் அதுவரை காலவரையின்றி தள்ளிப்போட்டு விடலாம் என்பதல்ல. இந்த இரண்டு வேலைகளையும் ஒரே நேரத்தில் நாம் செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன்– (1) மற்றவர்கள் உங்களுக்குச் செய்ய விரும்புவதை நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள் என்ற கொள்கையை எப்படி இந்த நவநாகரீக சமுதாயத்தின் மேல் விரிவாக செயல்படுத்தமுடியும் என்று நாம் பார்க்கக்கூடிய அந்த வேலை, மற்றும் (2) இதை எப்படி செய்யமுடியும் என்பதை தெரிந்துகொள்ளும் பட்சத்தில், உண்மையாகவே அப்படியே செயல்படக்கூடிய மனிதர்களாக மாறுகிற வேலை. இப்போது ஒரு நல்ல மனிதன் எப்படி இருக்கவேண்டும் என்ற கிறிஸ்தவ சிந்தனையை, நான் என் கருத்தில்கொள்ள ஆரம்பிக்க விரும்புகிறேன்– மனித இயந்திரத்துக்கான கிறிஸ்தவ விபரக்குறிப்பு[1].

நான் அதன் விவரங்களுக்கு வருவதற்குமுன் இன்னும் இரண்டு பொதுவான குறிப்புகளை முன்வைக்க விரும்புகிறேன். முதலாவது, கிறிஸ்தவ ஒழுக்கம், மனித இயந்திரத்தை சரியாக செயல்பட வைக்கக்கூடிய ஒரு தொழில்நுட்பமாக தன்னைக் கூறுகிறபடியால், அதே முறையில் மனித இயந்திரத்தை சரியாக இயக்க வைக்கக்கூடிய மற்றொரு தொழில்நுட்பத்துடன் அது எவ்வாறு தொடர்புடையதாய் இருக்கிறது என்று நீங்கள் அறிய விரும்புவீர்கள் என்று நினைக்கிறேன். அது மனோபகுப்பாய்வு[2] ஆகும்.

இப்போது இவை இரண்டுக்குமுள்ள மிகத் தெளிவான வித்தியாசத்தைத் தெரிந்துகொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள்: அதாவது மனோபகுப்பாய்வின் உண்மையான மருத்துவ கோட்பாடுகளுக்கும் தொழில்நுட்பங்களுக்கும் மற்றும் ஃப்ராய்ட்[3] என்பவரும் இன்னும் சிலரும் இதைக்குறித்து சொல்லிவைத்துவிட்டுச் சென்றிருக்கின்ற உலகத்தைக் குறித்த பொதுவான தத்துவப் பார்வை, இவை இரண்டிற்குமுள்ள வித்தியாசம். இதில் இரண்டாவதான ஃப்ராய்டின் தத்துவங்கள் கிறிஸ்தவத்துக்கு நேர்மாறாக இருக்கின்றது. மேலும் அது மற்றுமொரு உளவியலாளர் யூங்[4] என்பவருடைய பார்வைக்கும் நேர்மாறாக இருக்கின்றது. மேலும் ஃப்ராய்ட், நரம்புக் கோளாறை எப்படி குணப்படுத்துவது என்பதைக்குறித்துப் பேசும்போது, அவர் தன்னுடைய சொந்தத் துறையில் ஒரு நிபுணராக பேசுகிறார். ஆனால் அவர் பொதுவான தத்துவங்களைக் குறித்துப் பேசும்பொழுது ஒரு கற்றுக்குட்டியைப்போல், தன்னுடைய

1 Christian specification
2 psychoanalysis
3 Freud
4 Jung

துறையை சாராதவர்) பேசுகிறார். ஆதலால் ஒரு காரியத்தில் அவர் சொல்வதை மரியாதையுடன் கேட்டுக்கொண்டு, அடுத்த காரியத்தில் அப்படிச்செய்யாமல் இருப்பதுதான் மிகவும் விவேகமான செயலாகும்– நானும் அதைத்தான் செய்கிறேன்.

அப்படி செய்வதற்கு நான் எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். ஏனென்றால் அவர் தன்னுடைய துறையை அல்லாமல், நான் சற்று கற்றறிந்த ஒரு துறையைக் (அதாவது மொழிகள்) குறித்துப் பேசும்பொழுது அவர் அதிகம் அறியாதவராய் இருக்கிறார் என்பதைக் கண்டுகொண்டேன். ஆனால் மனோபகுப்பாய்வு, ஃப்ரூட் மற்றும் மற்றவர்கள் அதைக் குறித்துச் சொன்ன, கூடுதல் தத்துவங்களை எல்லாம் அகற்றிவிட்டுப் பார்க்கும்போது, அது சிறிதுகூட கிறிஸ்தவத்துக்கு எதிர்மறையானதாக இல்லை. அதனுடைய நுட்பங்கள், சில பகுதிகளில் கிறிஸ்துவ ஒழுக்கத்தோடு ஒன்றின் மேல் ஒன்றாக ஒத்துப்போகிறது. மேலும் இதைக்குறித்து ஒவ்வொரு மனிதனும் சிறிதளவு தெரிந்துவைத்திருப்பதில் தவறு ஏதுமில்லை. ஆனால் அவை இரண்டும் முழுதூரமும் ஒன்றோடு ஒன்றாக இணைந்து ஓடவில்லை. ஏனென்றால் அந்த இரண்டு நுட்பங்களும் வெவ்வேறான காரியங்களை செய்கின்றன.

ஒரு மனிதன், ஒரு ஒழுக்கரீதியான முடிவை எடுக்கும்பொழுது இரண்டு காரியங்கள் அங்கே ஈடுபடுகின்றன. ஒன்றாவது அதைத் தேர்ந்தெடுக்கிற அந்த செயல். மற்றொன்று அவனுடைய உளவியல் உரை வழங்குகிற, அவனுடைய தேர்வுக்கான மூலப்பொருட்களாய் இருக்கிற வெவ்வேறான உணர்வுகள், உந்துதல்கள் ஆகியவை. இந்த மூலப் பொருட்கள் இரண்டு வகையாக இருக்கக்கூடியதாயிருக்கிறது. அது நாம் சாதாரணம் என்று அழைக்கக்கூடியதாய் இருக்கலாம்: இது பொதுவாக எல்லா மனிதர்களும் கொண்டிருக்கிற அந்த வகையான உணர்வுகளை உள்ளடக்கியது. அல்லது, அவனுடைய ஆழ்மனதில், சில காரியங்கள் தவறாக இருப்பதினால் ஏற்படுகிற, முற்றிலும் இயற்கைக்கு மாறுபட்ட உணர்ச்சிகளாகவும் இருக்கலாம். ஆக, உண்மையாகவே ஆபத்து விளைவிக்கக்கூடிய காரியங்களை கண்டு பயப்படுவது முதல் வகைக்கான ஒரு உதாரணமாகும். பூனைகளுக்கும் சிலந்திப்பூச்சிக்கும் பயப்படக்கூடிய ஒரு ஆதாரமற்ற பயம் என்பது இரண்டாவது வகைக்கான ஒரு உதாரணமாகும்.

ஒரு ஆணுக்கு ஒரு பெண்ணின் மேலுள்ள ஆசை என்பது முதல் வகையை சேர்ந்தது. ஒரு ஆணுக்கு ஒரு ஆணின் மேலுள்ள ஒரு வக்கிரமான ஆசை என்பது இரண்டாவது வகையைச் சேர்ந்தது. இப்போது மனோபகுப்பாய்வு எதை, தான் செய்வதாக உத்தரவாதம் கொடுக்கிறதென்றால், அந்த இயற்கைக்குப் புறம்பான உணர்வுகளை அது நீக்குகிறது. அதாவது அந்த மனிதனுக்கு தான் தெரிந்தெடுக்கக்கூடிய அந்த செயலுக்கான சிறந்த மூலப்பொருட்களை அது தருகிறது: ஆனால், ஒழுக்கம் என்பது, முடிவு எடுக்கிற அந்த செயல் சம்பந்தப்பட்டதாகவே இருக்கிறது.

இதை இந்தக் கோணத்தில் வைத்துப் பார்ப்போம். மூன்று மனிதர்கள் போருக்குச் செல்வதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். ஒருவனுக்கு ஆபத்தைக் கண்டு, எந்த மனிதனுக்கும் இருக்கக்கூடிய சாதாரண இயற்கையான பயம் இருக்கிறது. அதை அவன் தன்னுடைய ஒழுக்கமான முயற்சியினால் கீழடக்கி ஒரு மாவீரனாக மாறுகிறான். மற்ற இரண்டு பேருக்கும் தங்களுடைய ஆழ்மனதில் உள்ள காரியங்களின் விளைவாக, எந்த அளவிலான ஒழுக்கமுயற்சிகளும் எதுவும் செய்யமுடியாத, பூதாகரமாக்கப்பட்ட, ஆதாரமற்ற பயங்கள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். இப்போது ஒரு மனோபகுத்தாய்வு நிபுணர் அந்த வழியாக வந்து, இவர்கள் இருவரையும் குணமாக்கிவிடுகிறார். அதாவது இவர்கள் இருவரையும் அந்த முதல் மனிதன் இருக்கும் நிலைக்கு கொண்டுவந்து விடுகிறார். சரி, இந்த இடத்தில்தான் மனோபகுப்பாய்வுக்குரிய பிரச்சனை முடிந்து, ஒழுக்கத்திற்கான பிரச்சனை ஆரம்பிக்கிறது. ஏனென்றால், அவர்கள் குணமாகிவிட்ட இந்த நிலையில், இவர்கள் இருவரும் முற்றிலும் வெவ்வேறான பாதையைத் தெரிந்துகொள்ளக்கூடும்.

இதில் ஒருவர் ''நல்லவேளை நான் அந்த எல்லா பயங்களையும் தொலைத்துவிட்டேன். இப்பொழுது நான் எப்பொழுதும் செய்ய விரும்புகிற அந்த காரியத்தைச் செய்வேன். சுதந்திரத்துக்காக என்னுடைய கடமையைச் செய்வேன்'' என்று சொல்லக்கூடும். ஆனால் மற்றொருவர் ''நான் முன்பைக்காட்டிலும் தாக்குதலின்போது தைரியமாக இருக்கிறேன் என்பதை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நிச்சயமாக அது, நான் அந்த முதல் நபரை கவனித்துக்கொண்டு எனக்கு வேண்டியபோதெல்லாம், அந்த ஆபத்தான வேலையை அவனையே செய்யவைக்கவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன் என்ற உண்மையிலிருந்து சற்றும் மாறாது. உண்மையில், நான் சற்று பயம் குறைந்தவனாக உணர்கிறேன் என்பதில் இருக்கிற ஒரு நல்ல காரியம் என்னவென்றால், இப்பொழுது என்னை நானே இன்னும் நன்றாக கவனித்துக் கொள்ளமுடியும். மேலும் இந்த உண்மையை மற்றவர்களிடமிருந்து இன்னும் புத்திசாலித்தனமாக மறைக்கவும் முடியும்'' என்று கூறலாம். இப்போது இந்த வித்தியாசம் முற்றிலும் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். மனோபகுப்பாய்வு இதைக்குறித்து எதுவும் செய்யமுடியாது. நீங்கள் எவ்வளவுதான் அந்த மனிதனுக்குரிய மூலப்பொருட்களை மேம்படுத்தினாலும், மற்றொன்றை குறித்தும் நீங்கள் சிந்திக்க வேண்டும்: தனக்கு வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் அடிப்படையில் தனது சொந்த நன்மையை முதலில் வைப்பதா அல்லது கடைசியில் வைப்பதா என்கிற உண்மையான, சுதந்திரமாக, அந்த மனிதன் எடுத்த முடிவு. இந்த சுதந்திரமான முடிவு என்கிற ஒரே காரியத்தைக் குறித்துதான் ஒழுக்கம் கவலைப்படுகிறதாயிருக்கிறது.

கெட்ட உளவியல் மூலப்பொருட்கள் என்பது ஒரு பாவமல்ல, மாறாக, அது ஒரு நோயாகும். அது வருத்தப்படவேண்டிய ஒன்று அல்ல, மாறாக குணமாக்கப்படவேண்டிய ஒன்று. மேலும் இது மிகவும் முக்கியமானது. மனிதர்கள் தங்கள் வெளிப்புறச் செயல்களை வைத்து ஒருவரையொருவர் நியாயம் தீர்க்கிறார்கள். ஆனால் தேவன்

அவர்களுடைய ஒழுக்கமான தேர்வுகளை வைத்து அவர்களை நியாயம் தீர்க்கிறார். பூனைகளைக் கண்டாலே பயந்து அலறுகிற நோயான, ஒருவித உளவியல் பிரச்சனையுள்ள ஒரு மனிதர் ஒரு நல்ல காரணத்திற்காக ஒரு பூனையைத், தானே தூக்குகிறார் என்றால், அவர் தேவனுடைய பார்வையில், வி.சி[1] ( வீரத்திற்கான பிரிட்டனின் மிக உயர்ந்த ராணுவ விருது) மெடலை வாங்கும்படியாக அதீத வீரத்தைக் காட்டிய ஒரு திடகாத்திரமான மனிதனைக்காட்டிலும், அதிகமான தைரியத்தைக் காட்டியிருக்கிறார் என்பது முற்றிலும் சாத்தியமே. தன்னுடைய இளமைப்பருவம் முதல், வக்கிரமாக வாழ்ந்து, கொடூரத்தை சரியான காரியம் என்று கற்றுத்தந்த ஒரு மனிதன், ஒரு மிகவும் சிறிய அன்புநிறைந்த ஒரு வேலையைச் செய்கிறார் அல்லது அவர் செய்யக்கூடிய ஒரு கொடூரமான செயலைச் செய்யாமல் தவிர்த்துவிடுகிறார், இதன் விளைவாக, ஒருவேளை தன்னுடைய நண்பர்களால் அவர் கேலி செய்யப்படக்கூடிய நிலை வந்தாலும், அதை ஏற்றுக் கொள்கிறார் என்றால் அவர் தேவனுடைய பார்வையில், நீங்களோ நானோ ஒரு நண்பருக்காக உயிரையே கொடுக்கக்கூடிய ஒரு செயலைக்காட்டிலும், மிகவும் மேலான ஒரு காரியத்தைச் செய்பவராக இருக்கலாம்.

இதை ஒரு எதிர் வழியில் வைத்துப்பார்ப்பதும் நல்லது. நம்மில் சிலர் பார்க்க மிகவும் நல்ல மனிதர்களைப் போல இருந்தாலும், உண்மையில் அவர்கள் தங்களுடைய நல்ல பாரம்பரியத்தையும் நல்ல வளர்ப்பையும் சிறிதளவு கூட செயல்முறைப்படுத்தவில்லை என்றால், நாம் பிசாசுகள் என்று எவர்களை நினைக்கிறோமோ அவர்களைக்காட்டிலும் மோசமானவர்களாக இருப்பார்கள். ஒருவேளை நமக்கு இந்த உளவியல் உரைகள் மாட்டப்பட்டு, பிறகு தவறான வளர்ப்பில் நாம் வளர்க்கப்பட்டு, பிறகு ஹிம்லருடைய (இங்கு ஹிட்லர் மறைமுகமாக குறிப்பிடப்படுகிறார்) சக்தி நமக்கு கொடுக்கப்பட்டால், நாம் எப்படி நடந்துகொண்டிருப்போம் என்று நிச்சயமாக நம்மால் கூறமுடியுமா? ஆதலால்தான் நியாயம் தீர்க்கக்கூடாது என்று கிறிஸ்தவர்களுக்கு சொல்லிக்கொடுக்கப்படுகிறது.

ஒரு மனிதன் தன்னுடைய மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கிற தீர்மானங்களின் விளைவுகளைத்தான் நாம் பார்க்கிறோம். ஆனால் தேவன் அந்த மூலப்பொருட்களை வைத்து அந்த மனிதனை நியாயந்தீர்ப்பதே இல்லை. அவன் அவைகளை வைத்து என்ன செய்கிறான் என்பதை வைத்தே நியாயந்தீர்க்கிறார். மனிதனுடைய அநேக உளவியல் மேல்பூச்சுகளுக்கெல்லாம் காரணம், பெரும்பாலும் அவனுடைய சரீரம்தான். அவனுடைய சரீரம் சாகும்போது அவையெல்லாம் கீழே விழுந்துவிடும். அந்த உண்மையான, நடுமையத்தில் உள்ள மனிதன், அந்தத் தீர்மானத்தை எடுத்த அந்த மனிதன், அந்த பொருட்களைச் சிறப்பாகவோ அல்லது மோசமாகவோ உபயோகப்படுத்தினவன், அவன் நிர்வாணமாக நிற்பான். நாம் சுயமாக செய்வதாக நினைத்துக்கொண்டிருந்த, ஆனால் உண்மையில், நம்முடைய உணவு நன்றாக செரிமானம் ஆனதினால் வந்த எல்லாவிதமான வளவளப்பான காரியங்களும்,

1 Victoria cross

நம்மில் சிலரிடமிருந்து கீழே விழுந்துவிடும். தாழ்வு மனப்பான்மை அல்லது ஆரோக்கியமற்ற உடல்நிலை காரணமாக வந்த எல்லாவகையான மோசமான காரியங்களும் மற்ற சிலரிடமிருந்து விழுந்துவிடும். அதன்பின்பு நாம் எல்லோருடைய உண்மையான சுயரூபத்தையும் முதன்முதலாகக் காண்போம். அங்கு நிறைய ஆச்சரியங்கள் இருக்கப்போகின்றன.

இது என்னுடைய இரண்டாவது குறிப்புக்கு நேராக நடத்துகிறது. கிறிஸ்தவ ஒழுக்கம் என்பது, தேவன் நம்மிடம் ''நீ இந்தச் சட்டங்களையெல்லாம் பின்பற்றினால், நான் உனக்கு பலனளிப்பேன். அப்படிச் செய்யவில்லையென்றால் நான் அந்த இன்னொரு காரியத்தைச் செய்வேன்'' என்று சொல்லுகிற, ஏதோ ஒரு பேரம்பேசுவதைப் போன்றது என்று மனிதர்கள் பெரும்பாலும் நினைக்கிறார்கள். இது, அதைப் பார்ப்பதற்கான சரியான பார்வை என்று நான் நினைக்கமாட்டேன். ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கும்போது, உங்களுடைய மையப்பகுதியை, தீர்மானங்களை எடுக்கின்ற அந்தப் பகுதியை திருப்புகிறீர்கள். முன்பைக்காட்டிலும் சற்று வித்தியாசப்படும்படியாக அதை திருப்புகிறீர்களென்றே நான் சொல்லுவேன். இப்படியாக உங்கள் முழு வாழ்க்கையையும் எடுத்துக்கொண்டால், நீங்கள் உங்கள் வாழ்க்கை முழுவதும் எடுக்கிற, அதிலுள்ள கணக்கில்லாத தீர்மானங்கள் ஒவ்வொன்றும், அந்த மையப் பகுதியை சிறிது சிறிதாகத் திருப்பி, அதை ஒரு தெய்வீகப் படைப்பாகவோ அல்லது ஒரு நரகத்தின் சிருஷ்டிப்பாகவோ மாற்றுகிறது. அதாவது தேவனோடும், மற்ற உயிரினங்களோடும், தன்னோடும் நல்லிணக்கத்தோடு இருக்கின்ற ஒரு உயிரினமாகவோ அல்லது தேவனோடும், தன் கூட வாழும் உயிரினங்களோடும், தன்னோடும்கூட ஒரு போர் நிலையில், வெறுப்போடு இருக்கின்ற ஒரு உயிரினமாகவோ அதை மாற்றுகிறது.

இதில் ஒரு உயிரினமாக இருப்பதென்பது மோட்சத்தைப் போன்றது: அதாவது அது சந்தோஷம், சமாதானம், அறிவு மற்றும் வலிமையுள்ளதாக இருக்கிறது. மற்றொன்றாக இருப்பது என்பது பைத்தியக்காரத்தனம், பயங்கரம், முட்டாள்தனம், மூர்க்கம், இயலாமை மற்றும் நித்திய தனிமை என்பதாக இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நொடியும் இதில் ஒரு நிலைக்கோ அல்லது மற்ற நிலைக்கோ முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இது கிறிஸ்தவ எழுத்தாளர்களைக் குறித்து, எனக்கு எப்பொழுதும் இருந்துவந்த ஒரு புதிரை விளக்குகிறது. அவர்கள் சில நேரங்களில் மிக கண்டிப்பாகவும் மற்ற நேரங்களில் மிகவும் சுதந்திரமாகவும் எளிமையானவர்களாகவும் தோன்றுகிறார்கள். அவர்கள் பாவத்தைக் குறித்த ஒரு சிந்தனை கூட மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லுகிறார்கள்: ஆனால் அதன்பிறகு மிகவும் பயங்கரமான கொலைகளையும் துரோகங்களையும் குறித்து, இவைகளிலிருந்து மனந்திரும்பினால் மட்டுமே போதும், எல்லாம் மன்னிக்கப்பட்டுவிடும் என்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வது சரி என்பதை நான் இப்பொழுது பார்க்கிறேன்.

அவர்கள் எதைக்குறித்து சிந்தித்துக்கொண்டே இருக்கிறார்களென்றால், அந்தச் செயல் நம்முடைய அந்த சிறு மையப்பகுதியான சுயத்தின் மேல் ஏற்படுத்தக்கூடிய சுவடை குறித்தே. நம்முடைய அந்த சிறு மையப்பகுதியை இந்த வாழ்க்கையில் யாரும் பார்க்கமுடியாது, ஆனால் நாம் ஒவ்வொருவரும் அதனை என்றென்றைக்கும் சகித்துக்கொள்ளவோ அல்லது அனுபவிக்கவோ வேண்டியிருக்கிற கட்டாயம் உள்ளது. ஒரு மனிதனுடைய கோபம் ஆயிரக்கணக்கான மனிதருடைய ரத்தத்தைச் சிந்தும்படியான ஒரு நிலையும், இன்னொரு மனிதனுடைய கோபம் மற்றவர்கள் அவனைப் பார்த்து சிரிக்கக்கூடியதான ஒரு நிலையும் இருக்கக்கூடும். ஆனால் இந்த இருவருடைய ஆத்துமாவின் மேலும் ஏற்படுகிற, அந்த சிறு சுவடு ஏறக்குறைய ஒன்றாகவே இருக்கலாம். இவர்கள் இருவரும் தங்களுக்கு தாங்களே செய்துகொண்ட ஒரு காரியத்தைக்குறித்து மனந்திரும்பவில்லையென்றால், அடுத்தமுறை அவர்கள் சோதிக்கப்படும்போது அப்படிப்பட்ட கோபத்திலிருந்து தங்களை காத்துக்கொள்வது, மிகவும் கடினமானதாகிவிடும். மேலும் அப்படி அந்த சோதனைக்குள் அவர்கள் விழுந்துவிட்டால் அந்தக் கோபம் முன்பைக்காட்டிலும் மோசமானதாக இருக்கும். அவர்கள் ஒவ்வொருவரும் உண்மையாகவே தேவனிடத்தில் திரும்புவார்களானால், தங்களுடைய அந்த மையத்தில் உள்ள அந்த மனிதனை மீண்டும் சரிசெய்துகொள்ளும்படியான அந்தத் திருப்புதலை பெற்றுக்கொள்ளமுடியும். அப்படிச் செய்யவில்லையென்றால் அவர்கள் இருவருமே காலப்போக்கில் நாசமாகிவிடுவார்கள். எந்த ஒரு காரியமும், வெளியிலிருந்து பார்க்கும்பொழுது எவ்வளவு பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருக்கிறது என்பது உண்மையில் முக்கியமானது அல்ல.

கடைசியாக ஒரு குறிப்பு. ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், நான் சொன்னதுபோல சரியான திசை சமாதானத்துக்கு நேராக மட்டுமல்ல அறிவுக்கு நேராகவும் நம்மை நடத்துகிறது. ஒரு மனிதன் தேறி வரும்பொழுது தனக்குள் இன்னும் மிச்சமிருக்கிற அந்தத் தீமையை, அவன் மேன்மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ளுகிறான். ஆனால் ஒரு மனிதன் மோசமடையும்பொழுது தன்னுடைய சொந்தத் தீமையைக் குறித்து மிகமிகக் குறைவாகவே புரிந்துகொள்ளுகிறான். ஒரு சராசரியான கெட்ட மனிதனுக்கு, தான் மிகவும் நல்லவன் அல்ல என்பது தெரியும்: ஆனால் மிகவும் கெட்டவனாக இருக்கிற ஒரு மனிதன் தான் நன்றாக இருப்பதாகவே நினைத்துக்கொள்கிறான். உண்மையில் இதுதான் பொது அறிவு. தூக்கம் என்ன என்பதை நீங்கள் விழித்திருக்கும்போது புரிந்துகொள்கிறீர்கள். தூங்கிக்கொண்டிருக்கும்போது அல்ல. கணிதத்திலுள்ள தவறுகளை, உங்களுடைய மூளை சரியாக வேலை செய்யும்போது உங்களால் பார்க்கமுடியும். அந்தத் தவறுகளை நீங்கள் செய்யும்போது அல்ல. நீங்கள் தெளிந்து இருக்கும்போதுதான் குடிப்பழக்கத்தின் இயல்பு என்ன என்பதை புரிந்துகொள்வீர்கள். நீங்கள் நன்றாக குடித்திருக்கும்போது அல்ல. நல்ல மனிதர்களுக்கு நன்மையைக்குறித்தும் தெரியும், தீமையைக்குறித்தும் தெரியும்: கெட்ட மனிதர்களுக்கு இவை இரண்டைக்குறித்தும் தெரியாது.

# 5. பாலியல் ஒழுக்கம்

நாம் இப்பொழுது பாலியல் தொடர்பான கிறிஸ்தவ ஒழுக்கத்தை, அதாவது கற்பு என்கிற நற்குணம், என்று கிறிஸ்தவர்கள் சொல்லுகிறோமே, அதைக்குறித்து கவனிக்கப்போகிறோம். கிறிஸ்தவம் கூறுகிற கற்பு குறித்த கிறிஸ்தவ விதியை, சமுதாய விதியான ''ஒழுக்கத்தோடு[1]'' (ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில்): அதாவது தகுதியான (நடைமுறை வரம்புக்குத் தகுந்து) அல்லது மரியாதையான, என்பவைகளோடு நாம் குழப்பிக்கொள்ளக்கூடாது. தகுதி[2] என்ற வார்த்தைக்கான சமூக விதி, ஒரு மனிதனுடைய சரீரம், எந்த அளவு காண்பிக்கப்படலாம், என்ன விஷயங்களைக் குறித்துப்பேசலாம், என்ன வார்த்தைகளைப் பிரயோஜனப்படுத்தலாம் என்பவைகளெல்லாம், ஒரு குறிப்பிட்ட சமூக வளையத்திலுள்ள பழக்கவழக்கத்தின் அடிப்படையில் தான் அமைக்கப்படுகிறது. அதன்படி கற்புக்கான விதி என்பது எல்லா கிறிஸ்தவர்களுக்கும் எல்லா நேரத்திலும் ஒரே விதமாக இருந்தாலும், தகுதிக்கான விதியானது மாறுகிறதாயிருக்கிறது. ஒரு பசிஃபிக் தீவில் வாழுகிற ஒரு பெண், மிகமிகக் குறைவாக ஆடையணிந்திருந்தாலும், விக்டோரியன் காலத்தில் வாழுகிற ஒரு பெண்மணி முற்றிலும் தன்னை மூடிமறைத்திருக்கிற ஆடைகளை அணிந்திருந்தாலும், இவர்கள் இருவரும் தங்கள் தங்கள் சமூகத்தின் அடிப்படையில் சமமாக அடக்கத்துடனும் தகுதியானவர்களாகவும் மரியாதைக்குரியவர்களாகவும் (அல்லது சமமாக மரியாதை குறைவானவர்களாகவும்) எண்ணப்படலாம். ஷேக்ஸ்பியர் வாழ்ந்த காலத்தில் இருந்த கற்புள்ள பெண்கள் பிரயோஜனப்படுத்தின சில வார்த்தைகளை, 19ஆம் நூற்றாண்டில், எல்லாராலும் முற்றிலும் கைவிடப்பட்டு ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு பெண் மட்டுமே பயன்படுத்தியிருப்பார். தாங்கள் வாழுகிற காலத்துக்கும் அந்த இடத்துக்கும் ஏற்ற தகுதிக்கான விதியை உடைக்கிற மனிதர்கள், தங்களுக்குள்ளோ அல்லது மற்றவர்களுக்கோ பாலியல் இச்சையை தூண்டுவதற்காக அப்படிச் செய்வார்களானால், அவர்கள் கற்புக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய ஒரு செயலைச் செய்கிறார்கள். ஆனால் ஒருவேளை, அவர்கள் அறியாமையினாலோ அல்லது கவனக்குறைவினாலோ அப்படிச் செய்வார்களென்றால், அவர்கள் கண்ணியமற்றவர்கள் என்ற குற்றம் மட்டுமே சாட்டப்படுவார்கள். பெரும்பாலான சமயங்களில் அவர்கள் அந்த விதிக்கு எதிர்த்து நின்று மற்றவர்கள் அதிர்ச்சியடையும்படியாகவோ அல்லது வெட்கப்படும்படியாகவோ அதை உடைப்பார்களென்றால், அவர்களை கற்பற்றவர்கள் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை என்றாலும், அவர்கள் இரக்கமற்றவர்களாய் இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால், மற்ற மனிதர்களை சங்கடப்படுத்தி அதில் மகிழ்ச்சி அடைகிற எந்த செயலும் இரக்கமற்றதாய் இருக்கிறது. தகுதிக்கான மிகவும் கண்டிப்பான வளைந்துகொடுக்காத ஒரு தரநிலை என்பதை, கற்புக்கான எந்த ஒரு ஆதாரமாகவும் அதற்கு இணையானதாகவும் நான் நினைக்கவில்லை. ஆதலால் தான்நான்வாழ்கிறகாலத்தில்அந்தவிதிமிகவும்தளர்த்தப்பட்டுஎளிமையாக்கப்பட்டபோது

1 modesty
2 propriety

அதை நான் நல்ல காரியமாக எண்ணுகிறேன். என்றாலும், அது இப்பொழுது இருக்கிற இந்த நிலையில், வெவ்வேறு வயதிலுள்ள வெவ்வேறு விதமான மனிதர்கள் எல்லோரும், ஒரே தரநிலையை ஏற்றுக் கொள்வதில்லை என்கிற ஒரு சங்கடம் இருப்பதினால், நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை நாம் அறியமுடியவில்லை. இந்தக் குழப்பம் நீடித்துக் கொண்டிருக்கையில், வயதான அல்லது பழைய காலத்து மனிதர்கள் யாவரும், இளைஞர்கள் அல்லது ''எல்லாப் பழைய விதியிலிருந்தும் விடுவிக்கப்பட்ட'' மனிதர்கள், (பழைய காலத்துத் தரநிலைப்படி தகுதியற்றவர்களாய் இருக்கும் போது, அவர்கள் கெட்டுப்போய்விட்டார்கள் என்று எண்ணிவிடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். அதேபோல, இளைஞர்களும், பெரியவர்கள் இந்தப் புதிய விதியை, இலகுவாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக அவர்களை ப்ரூட்ஸ்[1]( ஒழுங்காக அல்லது அடக்கமாக இருப்பதில் அதிக அக்கறை கொண்டவர்கள்) என்றோ தூய்மைவாதிகள்[2] என்றோ அழைக்கக்கூடாது . மற்றவர்களுக்கு எல்லா வகையிலும் நன்மை செய்யவேண்டும் என்கிற உண்மையான விருப்பமும், முடிந்தமட்டும் மற்றவர்களுக்கு எந்தச் சங்கடமும் கொடுக்காமல் நடந்துகொள்ளுவதும், பெரும்பாலான பிரச்சனைகளைத் தீர்த்துவிடும்.

கிறிஸ்தவ ஒழுக்கங்களிலேயே கற்பு என்பதுதான் மிகவும் செல்வாக்கிழந்ததாய் இருக்கிறது. அதிலிருந்து விடுபடவே முடியாது: ஆதிமுதல் கிறிஸ்தவ விதி இவ்வாறாகவே சொல்லுகிறது ''ஒன்று, உன் வாழ்க்கை துணைக்கு முழுவதும் விசுவாசமாய் திருமணத்தில் நிலைத்திருக்கவேண்டும் அல்லது முற்றிலும் அந்த காரியத்திலிருந்து உன்னை விலக்கிக்கொள்ளவேண்டும்''. இது மிகவும் கடினமானதாகவும் நம்முடைய உள்ளுணர்வுக்கு மிகவும் எதிர்மறையானதாகவும் இருக்கிறது. இதைப் பார்க்கும்போது, ஒன்று, கிறிஸ்தவம் தவறாக இருக்கிறது அல்லது நம்முடைய பாலியல் உள்ளுணர்வு இப்பொழுது இருக்கிறதைப்போல, தவறாகப் போய்விட்டது. ஒன்று அல்லது மற்றொன்று தான் நடந்திருக்கவேண்டும். நிச்சயமாக நம்முடைய உள்ளுணர்வு தான் தவறாகி விட்டது என்று ஒரு கிறிஸ்தவனாக நான் எண்ணுகிறேன். ஆனால் அப்படி நான் எண்ணுவதற்கு மற்ற காரணங்கள் உண்டு. நாம் சாப்பிடுவதன் உயிரியல் நோக்கம், நம்முடைய உடலை சீரமைப்பதாயிருக்கிறதைப்போல, பாலியலின் உயிரியல் நோக்கம் குழந்தைகளாகும். நமக்கு வேண்டும்போதெல்லாம், நமக்கு வேண்டிய அளவு சாப்பிட்டுக் கொண்டிருப்போமானால், உண்மையாக நம்மில் பலரும் மிக அதிகமாக சாப்பிடுவோமென்றாலும், பயப்படும்படியான அளவுக்கு அதிகமாக அல்ல. ஒரு மனிதன் இருவருக்கான உணவை உண்ணமுடியும். ஆனால் பத்து பேருக்கான உணவை உண்ணமுடியாது. பசி என்பது அவனுடைய உயிரியல் நோக்கத்துக்கும் சற்று அதிகமாகச் செல்லுகிறது, ஆனால் மிகவும் அதிகமாக அல்ல. ஆனால் ஒரு ஆரோக்கியமான இளைஞன் எப்பொழுதெல்லாம் தனக்கு மாம்ச இச்சைக்கான பசி உண்டாகிறதோ, அப்பொழுதெல்லாம் அந்த காரியத்தில் ஈடுபட்டு, அப்படி அந்த ஒவ்வொரு காரியமும் ஒரு குழந்தையை உருவாக்கினால், பத்து வருடங்களில் அவன்

1 prudes
2 puritans

மிக இலகுவாக ஒரு சிறிய கிராமத்தையே நிரப்பமுடியும். இந்தப் பசியானது தன்னுடைய செயல்பாட்டில் வேடிக்கையாகவும் அபத்தமானவகையிலும், மிகவும் அதிகமாக இருக்கிறது.

அல்லது இன்னொரு வகையில் இதைப் பார்ப்போம். மேடையில் ஒரு பெண் ஒன்றன்பின் ஒன்றாக தன்னுடைய ஆடைகளை கழற்றுகிற அந்த நிகழ்ச்சிக்கு[1] உங்களால் ஒரு பெரிய பார்வையாளர்கள் கூட்டத்தை, கூடிவரச் செய்யமுடியும். ஒரு குறிப்பிட்ட தேசத்தில் உங்களால் இலகுவாக ஒரு தியேட்டரை நிரப்பமுடியும் என்று வைத்துக்கொள்வோம். எதற்காகவென்றால், மேடையில் ஒரு மூடி வைக்கப்பட்ட பெரிய தட்டைக் கொண்டுவந்து வைத்து, மெதுவாக அதனுடைய மூடியைத் திறந்து, விளக்குகள் அணைக்கப்படும் சற்றுமுன்பு, அதில் உள்ள ஆட்டு இறைச்சியையோ அல்லது ஒரு துண்டு கோழி இறைச்சியையோ எல்லோரும் பார்க்கும் வண்ணத்தில் வைப்போமென்றால், அந்தத் தேசத்தில் உணவுக்கான பசிகுறித்த காரியத்தில், ஏதோ ஒன்று தவறாகப் போய்விட்டது என்று நாம் நினைக்கமாட்டோமா? அதேபோல வேறு ஒரு உலகத்தில் வளர்ந்த ஒருவர், நம்மிடையேயுள்ள பாலியல் உள்ளுணர்வுக்கான நிலை, இதற்குச் சமமான நிலையில் வினோதமாக இருக்கிறது என்று நினைக்கமாட்டாரா?

ஒரு விமர்சகர் இவ்வாறாகக் கூறினார். ஒரு தேசத்தில் உணவுகளுக்கான உரைகள் கழற்றப்படுகிற நிகழ்ச்சி மிகவும் பிரபலமாக இருக்குமென்றால் அந்த நாட்டின் ஜனங்கள் மிகவும் பசியினால் வாடுகிறார்கள் என்று, தான் முடிவுசெய்வதாக. நிச்சயமாக அவர் எந்த அர்த்தத்தில் கூறுகிறாரென்றால், இப்படிப்பட்ட உரைகளை கழற்றுகிற நிகழ்ச்சிகள் பாலியல் சீர்கேட்டினால் வந்தது அல்ல பாலியல் பசியினால் வருகிறது என்று. நான் அவருடன் உடன்படுகிறேன். எப்படியென்றால், ஒரு சில விசித்திரமான இடத்தில், இப்படிப்பட்ட ஆட்டு இறைச்சி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் மிகவும் பிரபலமாக இருக்குமென்றால் எனக்குத் தோன்றுகிற ஒரு சாத்தியப்படக்கூடிய விளக்கம், பஞ்சம் ஆகும். ஆனால் இதற்கு அடுத்த கட்டம், நம்முடைய அனுமானத்தை சோதிக்கும்படியாக, உண்மையிலேயே அந்த நாட்டிலுள்ள மக்கள் நிறையவோ அல்லது குறைவாகவோ உண்ணுகிறார்களா என்று நாம் கண்டறிவதுதான். நமக்கு கிடைத்த ஆதாரங்கள், போதுமான அளவு உணவு உண்ணப்படுகிறது என்பதைக் காண்பிக்குமானால், நம்முடைய பசி என்கிற அனுமானத்தை நாம் நிச்சயமாக கைவிட்டு விட்டு, வேறு ஒன்றை சிந்திக்க முயல்வோம். இதே முறையில் ஆடை நீக்கப்படுவதற்கான காரணம், பாலியல் பசி என்பதை நாம் ஏற்றுக்கொள்ளும் முன்பாக, உண்மையிலேயே நம்முடைய இந்தக் காலகட்டத்தில், ஆடை நீக்குதல் போன்ற காரியங்கள் என்னவென்றே தெரியாத அந்த காலத்தைக்காட்டிலும், பாலுறவு அதிகமாக தவிர்க்கப்படுகிறதா என்பதின் ஆதாரத்தை, நாம் கண்டுபிடிக்க முயற்சிசெய்யவேண்டும். ஆனால் உண்மையில், அப்படியான ஆதாரங்கள் எதுவுமே

1 striptease act

இல்லை. கருத்தடைப் பொருட்கள் முன்பைவிட திருமண பந்தத்துக்குள்ளாக பாலுறவில் ஈடுபடுகிறதற்கான விலையை மிகவும் குறைத்து, அதற்கப்பாற்பட்டு அதை மிகவும் பாதுகாப்பானதாகவும் மாற்றி இருக்கிறது. மேலும் சட்டவிரோதமான உறவுகளுக்கும், சொல்லப்போனால் முறைகேடான உறவுகளுக்கும்கூட பொதுமக்களுடைய எதிரான கருத்து, பக்தியற்ற காலங்களில் இருந்ததைக்காட்டிலும் மிகவும் குறைவாகவே இருக்கிறது. மேலும் நம்மால் கற்பனை செய்து பார்க்கக்கூடியது, ''பசி''யைக் குறித்த அனுமானம் மட்டுமல்ல. பாலியல் பசி என்பது நம்முடைய மற்ற பசிகளைப்போல அதிகமாக ஈடுபடுவதினால் வளருகிறது என்பது எல்லோரும் அறிந்ததே. பசியோடு இருக்கிற மனிதர்கள் தங்களுக்குள் ஆர்வத்தையும் மனஎழுச்சியையும் எழுப்பக்கூடிய கற்பனைகளாக, உணவைக்குறித்து நினைக்கக்கூடும்; ஆனால் அதைத்தான் பெருந்தின்னிக்காரர்களும், கழுத்துவரை உண்ணுபவர்களும், இவர்களோடு, பட்டினியாய் இருப்பவர்களும்கூட நினைக்கிறார்கள்.

மூன்றாவதாக ஒரு காரியத்தைக் குறிப்பிடுகிறேன். வெகு சில மனிதர்கள்தான், உணவாகக் கருதப்படாத சில காரியங்களை சாப்பிட விரும்புவார்கள், அல்லது உணவைச் சாப்பிடுவதற்கு பதிலாக, அதைவைத்து வேறு காரியங்களைச் செய்வார்கள் என்பதை நீங்கள் காணமுடியும். வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால், உணவுப் பசியின் முறைகேடுகளாகிய இவை, மிகவும் அரிதானவை ஆகும். ஆனால், பாலியல் உள்ளுணர்வின் முறைகேடுகள் எண்ணிலடங்காததும், குணப்படுத்த கடினமானதும், பயப்படத்தக்கதுமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களின் விரிவுக்குள்ளாக நான் செல்லவேண்டியதைக் குறித்து வருந்துகிறேன். ஆனால் அப்படி நான் செய்தாக வேண்டியிருக்கிறது. நான் அப்படிச் செய்வதற்கான காரணம் என்னவென்றால் உங்களுக்கும் எனக்கும், கடந்த 20 ஆண்டுகளாக, நாள் முழுவதும் பாலியல் குறித்த, நல்ல திடமான பொய்கள், உணவாக அளிக்கப்பட்டிருக்கின்றன. 'பாலியல் விருப்பம் என்பது நம்முடைய மற்ற இயல்பான விருப்பங்களுக்குச் சமமான நிலையில்தான் இருக்கிறது. ஆனால் அதை வெளிப்படையாகப் பேசாமல் இருக்கவேண்டும் என்கிற அந்த முட்டாள்தனமான விக்டோரியன் காலத்து பழைய ஆலோசனையை நாம் கைவிட்டுவிட்டால், தோட்டத்திலுள்ள எல்லாம் மிகவும் அழகாக மாறிவிடும்' என்பது நாம் கேட்டு சலித்துப்போகும் அளவுக்கு நமக்கு கூறப்பட்டிருக்கிறது. இது உண்மை அல்ல. நீங்கள் இதன் உண்மையை கவனிக்க ஆரம்பித்து, அவர்கள் கூறுகிற பிரச்சாரத்தைவிட்டு உங்கள் முகத்தை திருப்பிக்கொள்ளும் அந்த நொடியில், அது அப்படி அல்ல என்பதைக் காணமுடியும்.

வெளிப்படையாக பேசப்படாததால் தான் பாலியல் ஒரு குழப்பத்துக்குள்ளாகிவிட்டது என்று அவர்கள் கூறுவார்கள். ஆனால் கடந்த 20 வருடங்களாக அது வெளிப்படையாகப் பேசப்படாமல் இல்லை. நாள் முழுவதும் அதைக்குறித்துப் பேசப்படுகிறது. என்றாலும் அது இன்னும் ஒரு குழப்பமான நிலையில்தான் இருக்கிறது. அதை மூடிமறைப்பது தான் அந்தப் பிரச்சினைக்கான காரணமென்றால், அதை வெளிப்படையாகப் பேசுவது அதை சரியாக்கி இருக்கவேண்டும். ஆனால் அப்படி அது சரியாகவில்லை. நான்

நினைக்கிறேன் இது எதிர்திசையில் நடக்கிறது என்று. இது மிகவும் குழப்பத்துக்கு உள்ளானதால்தான் மனித இனம் இதை முதலாவதாக மூடிமறைத்தது என்றே நான் நினைக்கிறேன். நவநாகரீக மனிதர்கள் இவ்வாறாகக் கூறுகிறார்கள். ''பாலியல் என்பது நீங்கள் வெட்கப்படும்படியான காரியம் ஒன்றுமல்ல'' என்று. அவர்கள் இரண்டு காரியங்களை இங்கு குறிப்பிடுகிறார்கள் . மனித இனம் ஒரு குறிப்பிட்ட வழியில் இனப்பெருக்கம் செய்கிறது என்பதும், அது இன்பம் தருகிறதாயிருக்கிறது என்பதைக் குறித்தும் வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை என்கிற அர்த்தத்தில் அவர்கள் சொல்லலாம். அப்படியானால் அவர்கள் சரியாகத்தான் சொல்லுகிறார்கள். கிறிஸ்தவமும் அதைத்தான் சொல்லுகிறது. அந்த காரியமோ அல்லது அந்த இன்பமோ இங்கு பிரச்சனையல்ல. பழைய கிறிஸ்தவ போதனையாளர்கள், மனிதன் வீழ்ச்சி அடையாமல் இருந்திருந்தால், பாலியல் இன்பமானது இப்பொழுது குறைவாக இருப்பதற்குப் பதிலாக, நிச்சயம் அதிகமாகவே இருந்திருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். எனக்கு சில குழம்பிப் போன சிந்தனையுடைய கிறிஸ்தவர்களைத் தெரியும். அவர்கள் கிறிஸ்தவம் பாலுறவையும், உடலையும், இன்பத்தையும் கெட்டது என்று நினைக்கிறது என்று பேசுவார்கள். அவர்கள் சொல்வது தவறு. பெரிய மதங்கள் எல்லாவற்றிலும் அநேகமாக, கிறிஸ்தவம் ஒன்றே ஒன்றுதான் உடலை முழுமையாக அங்கீகரிக்கிறது– அது திடப்பொருள் என்பது நன்மையானது என்றும், தேவன் தாமே ஒரு முறை மனித உடலை அவதாரமாக எடுத்துக்கொண்டார் என்றும், நமக்கு பரலோகத்தில்கூட ஒரு வகையான சரீரம் கொடுக்கப்படப்போகிறது என்றும், நம்முடைய உடலானது, நம்முடைய மகிழ்ச்சி, அழகு மற்றும் நம்முடைய சக்தியின் ஒரு இன்றியமையாத பகுதியாய் இருக்கப்போகிறது என்றும் அது நம்புகிறது. மற்ற எந்த மதத்தைக்காட்டிலும், கிறிஸ்தவம்தான் திருமணத்தை மகிமையுள்ளதாக்கியிருக்கிறது. மேலும், உலகத்தின் தலைசிறந்த காதல் கவிதைகளெல்லாம் பெரும்பாலும் கிறிஸ்தவர்களால் தான் உருவாக்கப்பட்டிருக்கிறது. யாராவது ஒருவர் பாலுறவு என்பது மிகவும் தவறு என்று கூறுவார்களானால், கிறிஸ்தவம் உடனடியாக அவர்களுக்கு முரண்படுகிறது. ஆனால் நிச்சயமாக மனிதர்கள் ''பாலியல் என்பதைக்குறித்து நீ வெட்கப்படுவதற்கு ஒன்றுமில்லை'' என்று கூறும்பொழுது, அவர்கள் சொல்லுகிற அர்த்தம், ''பாலியல் உள்ளுணர்வு இப்பொழுது இருக்கிற நிலை வெட்கத்திற்குரியது அல்ல'' என்பதே ஆகும்.

அவர்கள் அந்த அர்த்தத்தில் கூறுவார்களானால், அவர்கள் சொல்வது தவறு என்றே நான் எண்ணுவேன். அது எல்லா வகையிலும் நாம் வெட்கப்படுவதற்குரியது என்று நான் நினைக்கிறேன். நம்முடைய உணவை நாம் அனுபவிப்பதில், எந்த விதமான வெட்கப்படவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால், இந்த உலகத்தில் பாதி ஜனங்கள், உணவை மட்டுமே தங்களுடைய வாழ்வதற்கான முக்கிய காரணமாக எண்ணி, தங்களுடைய வாழ்நாள் முழுவதும் உணவுப் படங்களைப் பார்த்து, வாயில் நீர்வடிய தங்கள் உதடுகளை அரைத்து கொண்டிருப்பார்களென்றால், அது எல்லா வகையிலும் வெட்கத்திற்குரியதாய் இருக்கிறது. இப்போதைய இந்த சூழ்நிலைக்கு நீங்களும் நானும் தனிப்பட்ட முறையில் பொறுப்பானவர்கள் என்று நான்

சொல்லவில்லை. இப்படியாக திரிக்கப்பட்ட உயிரினங்களைத்தான், நம்முடைய மூதாதையர்கள் நம்முடைய கைகளில் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நாமும், கற்பில்லாத நிலைக்கு ஆதரவான பிரச்சாரங்கள், நம்மை சூழ்ந்திருக்கிற நிலையில்தான் வளர்கிறோம். நம்முடைய பாலியல் உள்ளுணர்வை, வீக்கமடைந்த நிலையிலேயே வைத்து, அதன் மூலமாக பணம் சம்பாதிக்க நினைக்கிற மனிதர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால், நிச்சயமாக ஒரு பொருளின்மேல் வெறிகொண்ட மனிதன், அதன் விற்பனைக்கு மிகமிகக் குறைவாகவே எதிர்ப்புத் தெரிவிக்கிற மனிதனாய் இருக்கிறான். தேவனுக்கு நம்முடைய நிலை தெரியும். நாம் இவைகளை மேற்கொள்வதில், நமக்கு எந்த ஒரு கடினமும் இல்லை என்பதைப் போல அவர் நிச்சயம் நியாயம் தீர்க்கமாட்டார். இங்கு முக்கியமானது எதுவென்றால், அவைகளை மேற்கொள்ள நினைக்கிற நம்முடைய விருப்பத்திலுள்ள நேர்மையும் விடாமுயற்சியும் மட்டுமே ஆகும்.

நாம் குணப்படுவதற்கு முன்பாக, நாம் குணப்படவேண்டும் என்று விரும்பவேண்டும். உதவி வேண்டும் என்று உண்மையாக விரும்புபவர்களுக்கு அது கிடைக்கும். ஆனால் பல நவநாகரீக மனிதர்களுக்கு, அந்த விருப்பம்கூட மிகவும் கடினமாய் இருக்கிறது. நமக்கு ஒரு காரியத்தின்மேல் உண்மையான விருப்பம் இல்லையென்றாலும், அது வேண்டும் என்று நினைப்பது சுலபம் தான். ஒரு பிரபலமான கிறிஸ்தவர், பல காலங்களுக்கு முன்பாக நமக்கு இவ்வாறாக சொல்லியிருக்கிறார். அவர் இளைஞனாக இருந்தபோது கற்புக்காக விடாமல் ஜெபித்துக் கொண்டேயிருந்தாராம். ஆனால் பல வருடங்களுக்குப் பின்புதான் அவர் ஒன்றை உணர்ந்திருக்கிறார். தன்னுடைய உதடுகள் ‘‘ஆண்டவரே என்னை கற்புள்ளவனாக்கும்’’ என்று ஜெபித்தபோது, தன்னுடைய இருதயம் ரகசியமாக ‘‘ஆனால் அதை இப்பொழுதே செய்துவிடாதீர்’’ என்று சேர்த்துச் சொன்னதை உணர்ந்துகொண்டிருக்கிறார். இது மற்ற நல்லொழுக்கங்களுக்கான ஜெபங்களில்கூட நடக்கக்கூடும். ஆனால் இப்பொழுது முழுமையான கற்புள்ளவர்களாக ஆவதற்கு– சொல்லப்போனால் ஆசைப்படுவதற்குக்கூட– ஏன் இப்பொழுது விசேஷித்த வகையில் கடினமாக இருக்கிறது என்பதைக் குறித்து மூன்று காரணங்கள் உண்டு.

முதலாவதாக, நம்முடைய திரிக்கப்பட்ட இயல்பு, நம்மைச் சோதிக்கிற சாத்தான் மற்றும் இப்பொழுது இருக்கிற மாம்ச இச்சைக்குரிய பிரச்சாரங்கள், இவையெல்லாம் இணைந்து, நாம் தவிர்க்க நினைக்கிற ஆசைகளெல்லாம் மிகவும் ‘‘இயல்பானவை’’, மிகவும் ‘‘ஆரோக்கியமானவை’’, மிகவும் நியாயமானவை, அதாவது அவைகளை தவிர்க்க நினைப்பதே வக்கிரம் மற்றும் இயற்கைக்கு மாறானது என்கிற அளவுக்கு நம்மை உணரவைக்கும். விளம்பரங்களுக்குமேல் விளம்பரமாக, படத்துக்குமேல் படமாக, நாவலுக்குமேல் நாவலாக வந்து பாலுறவில் ஈடுபடுவது என்கிற சிந்தனை ஆரோக்கியம், இயல்பு, இளமை, வெளிப்படை மற்றும் நல்ல நகைச்சுவைக்கான சிந்தனைகள் என்பதுபோல நம்மைப் பழக்கப்படுத்தும். இந்தப் பழக்குதல் ஒரு பொய்யாகும். மற்ற எல்லா சக்திவாய்ந்த பொய்களையும்போல, இதுவும் ஒரு உண்மையின் அடிப்படையில் வந்ததாதகும்– அந்த உண்மை, முன்பு ஒப்புக்கொண்டதைப்போல, பாலுறவு என்பது (அதைச் சூழ்ந்து வளர்ந்த அதிகப்படியான

மற்றும் வெறித்தனமான காரியங்களுக்கு அப்பாற்பட்டு பார்க்கும்போது) தன்னில் தானே, ‘‘இயல்பான’’, ‘‘ஆரோக்கியமான’’ மற்றும் அதுபோன்ற மற்ற காரியங்களாய் இருக்கிறது. ஆனால், எந்த ஒரு சமயத்திலும் உங்களைச் சோதிக்கிற எந்த ஒரு பாலியல் செயலும்கூட ஆரோக்கியமானது, இயல்பானது, என்கிற யோசனையில் தான், அந்தப் பொய் அடங்கியிருக்கிறது . இப்போது இது கிறிஸ்தவத்துக்கு அப்பாற்பட்டு, எந்த ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட பார்வையிலிருந்தும் பார்க்கும்போது, ஒரு முட்டாள்தனமானதாக இருக்கவேண்டும். நம்முடைய எல்லா ஆசைகளுக்கும் அடிபணிந்து செல்வது என்பது வெளிப்படையாகவே இயலாமை, நோய், பொறாமைகள், பொய்கள், மூடிமறைத்தல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கிறது. மற்றும் ஆரோக்கியம், நல்ல நகைச்சுவை, வெளிப்படைத்தன்மை இவை எல்லாவற்றுக்கும் எதிர்மறையானதாக இருக்கிறது. இந்த உலகத்தில்கூட, எந்த ஒரு சந்தோஷத்துக்கும், ஓரளவுக்கு நிறைய கட்டுப்பாடுகள் தேவைப்படப்போகிறது. ஆதலால் ஒவ்வொரு ஆசையும், தான் வலுவானதாயிருக்கும்போது, அது ஆரோக்கியமானதாகவும் நியாயமானதாகவும் இருக்கிறது என்கிற கூற்று ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது. ஒவ்வொரு அறிவுள்ள நாகரீகமான மனிதனும் ஒரு கோட்பாடுகளின் தொகுப்பை கொண்டவனாகவும், அதன் அடிப்படையில் தன்னுடைய சில ஆசைகளை நிராகரித்து, மற்ற ஆசைகளை அனுமதிக்கிறவனாகவும் இருக்கவேண்டும். ஒரு மனிதன் இதை கிறிஸ்தவ கோட்பாடுகளின் அடிப்படையிலும், மற்றவன் சுகாதார அடிப்படையிலும், மற்றொருவன் சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையிலும், இதைச்செய்கிறான். இங்கு உண்மையான கருத்து வேறுபாடு கிறிஸ்தவத்துக்கும் ‘‘இயற்கைக்கும்’’ இடையில் அல்ல. மாறாக, ‘‘இயற்கையின்’’ கட்டுப்பாடுகளைக் குறித்து, கிறிஸ்தவ கோட்பாட்டுக்கும், மற்ற கோட்பாடுகளுக்கும் இடையில்தான் நடக்கிறது. ஏனென்றால் ‘‘இயற்கை’’ என்பது (இயல்பான ஆசை என்ற அர்த்தத்தில்) உங்கள் முழு வாழ்க்கையையும், நீங்கள் அழித்துக் கொள்ளவேண்டும் என்று இருந்தாலொழிய, எப்படியாயினும் கட்டுப்படுத்தப்பட வேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்தவ கோட்பாடுகள், ஒத்துக்கொண்டபடி மற்றவைகளைக் காட்டிலும் கண்டிப்பாகத்தான் இருக்கிறது என்றாலும், மற்றவைகளுக்கு கீழ்ப்படியும்போது, உங்களுக்குக் கிடைக்காத உதவி, இதற்கு நீங்கள் கீழ்ப்படியும்போது உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும் என்றே எண்ணுகிறோம்.

இரண்டாவதாக, பல மனிதர்கள் கிறிஸ்தவம் குறிப்பிடுகிற கற்பைக் காத்துக்கொள்ள தீவிரமாக முயற்சி எடுப்பதிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் அதற்கு முயற்சிசெய்யும் முன்பாகவே அது சாத்தியம் அல்ல என்று நினைக்கிறார்கள். ஆனால் ஒரு காரியத்திற்கான முயற்சிகள் எடுக்கப்படும்போது, அது சாத்தியமா அல்லது சாத்தியம் இல்லையா என்பதைக் குறித்து ஒருவர் சிந்திக்கக்கூடாது. ஒரு கேள்வித்தாளில் விருப்பமான கேள்விகள் கேட்கப்படுவதை எதிர்நோக்கும்போது, ஒருவர் தன்னால் அதை செய்ய முடியுமா முடியாதா என்று யோசிக்கிறார். ஆனால் ஒரு கட்டாயக் கேள்வியை எதிர்நோக்கும்போது ஒருவர் தன்னால் முடிந்தமட்டும் அதை சிறப்பாகச் செய்தாக வேண்டும். மிகவும் முழுமையற்றதாக எழுதப்படும் ஒரு பதிலுக்கு, ஒரு சில மதிப்பெண்கள் கிடைக்கக்கூடும். ஆனால் பதிலே எழுதாமல் விடப்பட்ட

கேள்விக்கு எந்த மதிப்பெண்ணும் கிடைக்கப்போவதில்லை. தேர்வுகளில் மட்டுமல்ல, போரிலோ, மலையேறுவதிலோ, ஸ்கேட்டிங் அல்லது நீச்சல் பழகுவதிலோ, அல்லது சைக்கிள் ஓட்டுவதிலோ, ஏன் இன்னும் காலர் பட்டனை குளிரினால் விரைத்த விரல்களுடன் மாட்டுவதில்கூட, மனிதர்கள் பல நேரங்களில், தாங்கள் செய்துமுடிக்கும் வரையிலும் சாத்தியம் இல்லை என்று நினைத்தவைகளை, செய்துமுடித்திருக்கிறார்கள். நீங்கள் செய்யவேண்டிய கட்டாயத்துக்கு வரும்பொழுது, உங்களால் செய்யக்கூடிய காரியங்கள் மிகவும் ஆச்சரியமானவைகளாகும்.

ஒரு காரியத்தைக்குறித்து நாம் நிச்சயமாக அறிந்துகொள்ளமுடியும். என்னவென்றால் முழுமையான தொண்டு என்பதைப்போல, முழுமையான கற்பு என்ற ஒன்று, வெறும் மனித முயற்சிகளினால் அடையக்கூடியது அல்ல. நீங்கள் தேவனுடைய உதவியைக் கேட்கவேண்டும். அப்படிச் செய்தபின்பும்கூட நீண்ட காலத்துக்கு எந்த ஒரு உதவியும் இல்லாததுபோலவும், உங்கள் தேவைக்கும் மிகவும் குறைவான உதவியே கொடுக்கப்பட்டதைப் போலவும், உங்களுக்குத் தோன்றலாம். அதை விட்டுத்தள்ளுங்கள். ஒவ்வொரு தோல்விக்குப் பின்பும் மன்னிப்பைக் கேளுங்கள். உங்களை நீங்களே தூக்கி நிறுத்தி, மீண்டும் முயற்சி செய்யுங்கள். பெரும்பாலும் தேவன் நமக்கு முதலாவதாக உதவுவது, அந்த ஒழுக்கத்தை நோக்கி அல்ல. மீண்டும் மீண்டும் முயற்சி செய்துகொண்டே இருக்கிற அந்த பலத்தை நோக்கித்தான். ஏனென்றால் கற்பு (அல்லது துணிவு, உண்மை, அல்லது மற்ற எந்த நற்குணமும்) எவ்வளவுதான் முக்கியமானதாக இருந்தாலும், இந்தச் செயல்முறை, அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாயிருக்கிற, நம்முடைய ஆத்துமாவுக்கான பழக்கங்களில், நம்மை பயிற்றுவிக்கிறது. அது நம்மைக்குறித்து நமக்கு இருக்கின்ற, மாயையான காரியங்களையெல்லாம் குணப்படுத்தி, தேவன் மேல் சார்ந்துகொள்வதை நமக்குக் கற்பிக்கிறது. நம்முடைய சிறப்பான தருணங்களில்கூட நம்மை நாமே நம்பமுடியாது என்று ஒருபுறம் நாம் கற்றுக்கொள்கிறோம். மறுபுறம் நம்முடைய மோசமான நேரத்தில்கூட நாம் விரக்தியடைய வேண்டிய அவசியம் இல்லை, ஏனென்றால் நம்முடைய தோல்விகள் எல்லாம் மன்னிக்கப்படுகின்றன என்றும் கற்றுக்கொள்கிறோம். நாம் செய்யக்கூடிய ஒரே கொடிதான காரியம் எதுவென்றால், முழுமையடையாத நிலையிலும் அதைக் குறித்துத் திருப்தியடைந்து அமர்ந்து விடுவதுதான்.

மூன்றாவதாக, உளவியல், ''அடக்குமுறை[1]'' என்று நமக்குக் கற்பிக்கிற காரியத்தை, மனிதர்கள் பெரும்பாலும் தவறாகப் புரிந்துகொள்ளுகிறார்கள். ''அடக்கி'' வைக்கப்பட்ட பாலுணர்வு மிகவும் ஆபத்தானது என்று அது நமக்குக் கற்பிக்கிறது. ஆனால், இங்கு ''அடக்கி'' வைக்கப்பட்ட என்ற வார்த்தை, அறிவியல் தொடர்பான ஒரு தொழில்நுட்பச் சொல்லாகும்[2]. அது ''கீழ்ப்படுத்தப்பட்ட'' , அதாவது ''மறுக்கப்பட்ட'' அல்லது ''எதிர்க்கப்பட்ட'' என்ற அர்த்தத்தில் சொல்லப்படவில்லை. ஒரு அடக்கிவைக்கப்பட்ட ஆசை அல்லது எண்ணம் என்பது, (பொதுவாக மிகவும் இளம்வயதிலேயே)

1 repressions
2 technical term

ஆழ்மனதுக்குள் தள்ளப்பட்ட ஒன்றாயிருக்கிறது. மேலும் இப்பொழுது அது நம்முடைய சிந்தனைக்கு முன்பாக ஒரு மாறுவேடத்திலோ அல்லது அடையாளம் கண்டுகொள்ளமுடியாத ரூபத்திலோதான் வரமுடியும். அடக்கிவைக்கப்பட்ட பாலுணர்வு என்பது அந்த நோயாளிக்கு ஒரு பாலுணர்வாகவே தெரிவதில்லை. ஒரு இளம் பருவத்தில் உள்ளவரோ அல்லது ஒரு வயது வந்தவரோ, ஒரு உணர்வுப் பூர்வமான ஆசையை எதிர்ப்பதில் ஈடுபடும்பொழுது அவர் அடக்குமுறையை சமாளிக்கவோ அல்லது அப்படி ஒன்றை உருவாக்குகிற அபாயத்திலோ சிறிதளவுகூட இல்லை. மாறாக, கற்பை அடையும்படியாக, தீவிரமாக முயற்சி எடுக்கிறவர்கள் அதிக விழிப்புணர்வோடு இருக்கிறார்கள். மேலும் வெகுசீக்கிரத்தில் தங்களுடைய சொந்த பாலுணர்வைக்குறித்து, வேறு எவரைக்காட்டிலும் மிகவும் நன்றாகவே அறிந்துகொள்ளுவார்கள். அவர்கள் தங்களுடைய ஆசைகளைக்குறித்து அறிந்துகொள்ளும்போது, அது வெலிங்டன், நெப்போலியனை அறிந்துகொண்டது போலவும், ஷெர்லாக் ஹோம்ஸ், மோரியார்டியை அறிந்துகொண்டது போலவும்; ஒரு எலி பிடிப்பவர், எலிகளைக் குறித்து அறிந்துகொள்வது போலவும், அல்லது ஒரு பிளம்பர் ஒழுகுகிற குழாய்களைக் குறித்து அறிந்துகொள்வது போலவும் இருக்கும். நற்குணம் – அடையும்படியாக முயற்சி எடுக்கப்படுகிற நற்குணம்கூட– வெளிச்சத்தைக் கொண்டு வரும். ஆனால் ஈடுபடுதல்[1] மூடுபனியைக் கொண்டுவரும்.

இறுதியாக, பாலுணர்வைக் குறித்து இவ்வளவு நீளமாக நான் பேச வேண்டியதாக இருந்தாலும், கிறிஸ்தவ ஒழுக்கத்தின் மையம், இங்கு இல்லை என்பதை, என்னால் முடிந்தமட்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். யாராவது ஒருவர், கிறிஸ்தவர்கள் கற்பற்ற தன்மையைத்தான், தீமையின் உச்சம் என்று கருதுகிறார்கள் என்று நினைத்தால், அவர் நினைப்பது முற்றிலும் தவறு. மாம்சத்தின் பாவங்கள் தீமையானவைகள் தான், ஆனால் எல்லாப் பாவங்களிலும், அவைகள்தான் குறைந்தபட்ச தீமையாய் இருக்கின்றன. எல்லாவிதமான மோசமான இன்பங்களும் முற்றிலும் (மனிதனுடைய) ஆவி[2] சம்பந்தப்பட்டதாயிருக்கிறது: மற்றவர்களைக் குற்றப்படுத்தி மகிழ்ச்சியடைவது , ஒடுக்குவது, பாரபட்சமாய் இருப்பது, நியாயமற்ற முறையில் நடந்துகொள்ளுவது, புறம் கூறுவது, அதிகாரம் மற்றும் வெறுப்பு இவைகளினால் வருகிற இன்பங்கள் போன்றவை. ஏனென்றால், நான் எந்த மனிதசுயமாக மாறவேண்டும் என முயற்சி செய்கிறேனோ, அதனோடு போட்டி போடுகிற, இரண்டு காரியங்கள் எனக்குள் இருக்கின்றன. அவை ‘‘மிருகமான சுயம்’’ மற்றும் ‘‘கொடூரமான சுயம்’’ ஆகும். கொடூரமான சுயம் தான், இவை இரண்டிலும் மோசமானதாய் இருக்கிறது. அதனால்தான் தவறாமல் தேவாலயத்துக்குச் செல்லுகிற ஒரு அன்பற்ற சுயநீதியுடைய அகங்காரி, ஒரு வேசியைக்காட்டிலும், நரகத்துக்கு மிக அருகில் இருக்கிறார். ஆனால் நிச்சயம், இந்த இருவரில், யாராகவும் இருக்காமல் இருப்பதுதான் நல்லது.

1 indulgence
2 spiritual

# 6. கிறிஸ்தவ திருமணம்

முந்தின அதிகாரம் பெரும்பாலும் எதிர்மறையானதாகவே இருந்தது. மனிதனுக்குள் இருக்கிற பாலுணர்வின் உந்துதல்களில், என்ன தவறாக இருக்கிறது என்பதைக்குறித்து நான் விவாதித்தேன். ஆனால் என்ன சரியாக வேலைசெய்கிறது என்பதைக்குறித்து மிகவும் குறைவாகவே சொல்லியிருக்கிறேன்– அதாவது கிறிஸ்தவ திருமணத்தைக் குறித்து. நான் குறிப்பாகத் திருமணத்தைக் குறித்துப் பேச விரும்பாததற்கு, இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது, இந்த பாடத்தைக்குறித்த கிறிஸ்தவ கோட்பாடுகள், மிகவும் செல்வாக்கிழந்தவைகளாய் இருக்கின்றன. இரண்டாவது, நான் திருமணம் செய்துகொள்ளாதபடியினாலே, என்னால் ஒரு இரண்டாம் நபரின் நிலையிலிருந்துதான் இதைக்குறித்துப் பேசமுடியும். திருமணத்தைக் குறித்த கிறிஸ்தவ சிந்தனையானது, ஒரு மனிதனும் அவன் மனைவியும், ஒரே உயிரினமாக எண்ணப்படவேண்டும் என்ற கிறிஸ்துவின் வார்த்தைகளின் அடிப்படையில் அமைந்திருக்கிறது– ஏனென்றால் இவ்வாறாகத்தான், ''ஒரே சரீரம்[1]'' என்ற வார்த்தையை இப்பொழுதுள்ள பேச்சுவழக்கின்படி கூறமுடியும் . மேலும் அவர் இவ்வாறாக கூறினபோது ஒரு உணர்வை வெளிப்படுத்தாமல், ஒரு உண்மையை[2] வெளிப்படுத்தினார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள்– அதாவது ஒரு பூட்டும் ஒரு சாவியும் ஒரே இயந்திரமாய் இருப்பதுபோல, அல்லது ஒரு வயலினும் அதனுடைய வில்லும் ஒரே கீதவாத்தியமாய் இருப்பதுபோல என்று, ஒருவர் ஒரு உண்மையைக் கூறுவதற்கு இது இணையாகும். மனித இயந்திரத்தை கண்டுபிடித்தவர், நமக்கு என்ன சொல்லுகிறாரென்றால், அதனுடைய இரண்டு பாகங்களான ஆண் மற்றும் பெண், ஒரு ஜோடியாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு இருக்கவேண்டும். அது பாலியல் நிலையில் மட்டுமல்ல, முற்றிலுமாக இணைந்து இருக்கவேண்டும் என்று . திருமண பந்தத்துக்கு வெளியே ஏற்படுகிற பாலியல் உறவின் அரக்கத்தனம் என்பது, அதில் ஈடுபடுகிறவர்கள், அதில் ஒன்றாக சேர்ந்து இயங்கி, மொத்த இணைப்பாகச் செயல்படவேண்டிய, மற்ற எல்லா வகையான ஐக்கியங்களிலுமிருந்து, ஒருவகையான ஐக்கியத்தை(பாலியல்) மட்டும், பிரிக்க நினைக்கிற முயற்சியே ஆகும். சாப்பிடுவதில் உள்ள மகிழ்ச்சியைப்போல, பாலியலில் உள்ள இன்பத்திலும் எந்தத் தவறும் இருப்பதாக, கிறிஸ்தவ அணுகுமுறை சொல்லவில்லை. நீங்கள் சாப்பிடுகிற உணவின் ருசியை அனுபவிப்பதோடு சேர்த்து, அதை முழுங்கி செரிமானம் செய்யாமல், அதை வாயில்போட்டு மென்றுவிட்டு துப்பி விடுவதைப்போல, பாலியல் இன்பத்தை மட்டும் தனிப்படுத்தி, அதைமட்டும் பெற்றுக்கொள்ள முயற்சிக்கக்கூடாது என்றே அது சொல்லுகிறது.

1 one flesh
2 fact

இதைத் தொடர்ந்து, திருமணம் என்பது முழு வாழ்க்கைக்கானது என்று கிறிஸ்தவம் கற்பிக்கிறது. நிச்சயமாக இதில் வெவ்வேறு சபைகளுக்கு நடுவே வித்தியாசங்கள் உண்டு. சில சபைகள் விவாகரத்தை அனுமதிப்பதே இல்லை, சில சபைகள் வேறு வழியின்றி சில விசேஷித்த வழக்குகளில் இதை அனுமதிக்கிறது. கிறிஸ்தவர்களுக்குள் இப்படிப்பட்ட ஒரு கேள்வியில் கருத்துவேறுபாடு காணப்படுவது மிகவும் வேதனைக்குரியது. ஆனால் ஒரு படிப்பறிவில்லாத ஒரு மனிதன் கவனிக்கக்கூடிய ஒரு காரியம் என்னவென்றால், எல்லா சபைகளும் வெளி உலகத்தோடு ஒத்துக்கொள்வதைப் பார்க்கிலும், மிகவும் அதிகமாக திருமணத்தைக்குறித்து ஒன்றோடொன்று ஒத்துக்கொள்கின்றன. அதாவது விவாகரத்து என்பது ஒரு அறுவை சிகிச்சையைப்போல, ஒரு உயிருள்ள சரீரத்தை வெட்டுவது போன்றது என அவை எண்ணுகின்றன. அவற்றில் சில அந்த அறுவை சிகிச்சை மிகவும் வன்முறையானது என்பதால் அதை செய்யவேகூடாது என்று நினைக்கின்றன. மற்றவை ஒரு தீவிரமான வழக்கில், வேறுவழியில்லாத தீர்வாக அதை அனுமதிக்கின்றன. இது ஒரு வியாபாரக் கூட்டுறவைக் கலைப்பது அல்லது ஒரு படைப்பிரிவைவிட்டு வெளியேறுவதைப் போன்றது, என்பதைக்காட்டிலும் மேலாக, உங்கள் இரண்டு கால்களையும் வெட்டி எடுப்பதைப்போன்றது என்பதில் இவையெல்லாம் ஒத்துக்கொள்ளுகின்றன. எந்தக் காரியத்தில் இவை வேறுபடுகின்றனவென்றால், வாழ்க்கைத் துணையாக இருக்கிற இருவருக்கும் ஒருவர் மேல் ஒருவருக்குள்ள காதல் இல்லாமல் போய்விட்டால் அல்லது அவர்கள் இருவரில் ஒருவருக்கு மற்றொரு நபர் மேல் காதல் வந்துவிட்டால், தங்கள் வாழ்க்கைத் துணையை எளிதாக மாற்றி, சரிசெய்து கொள்ளலாம் என்கிற நவநாகரீக பார்வையில்தான்.

இந்த நவீன பார்வைக்கும் கற்புக்கும் இடையேயுள்ள தொடர்பை நாம் கவனிக்கும் முன்பாக, அதற்கு மற்றொரு ஒழுக்கமான 'நியாயம்' என்பதோடுள்ள தொடர்பை, கவனிக்க மறந்துவிடக்கூடாது. நியாயம் என்பது நான் முன்பு சொன்னதைப்போல வாக்குறுதிகளை காப்பாற்றுவதை உள்ளடக்கியதாகும். இப்பொழுது தேவாலயத்தில் திருமணம் செய்துகொண்ட ஒவ்வொருவரும், மரணம் வரை தங்கள் வாழ்க்கைத் துணையோடு சேர்ந்து இருப்பதாக, சபையிலே ஒரு புனிதமான வாக்குறுதியை செய்திருக்கிறார்கள். இந்த வாக்குறுதியை காப்பாற்றுகிற கடமைக்கும், பாலியல் ஒழுக்கத்துக்கும் நடுவே எந்த ஒரு விசேஷித்த சம்பந்தமும் இல்லை. மற்ற எல்லா வாக்குறுதிகளைப்போன்ற அதே நிலையில்தான், இதுவும் உள்ளது. நாகரீகமான மனிதர்கள் சொல்லுவதைப்போல, பாலியல் உந்துதல்கள் மற்ற எல்லா உந்துதல்களைப் போன்றவைகளாய் இருக்குமானால், மற்ற உந்துதல்களை நடத்துகிற அதே விதத்தில்தான், இதுவும் நடத்தப்படவேண்டும். மேலும் மற்றவைகளில் உள்ள ஈடுபாடு நம்முடைய வாக்குறுதிகளினால் கட்டுப்படுத்தப்படுவது போலவே, இதுவும் கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால், நான் நினைப்பதைப்போல, இது நம்முடைய

மற்ற உந்துதல்களைப்போல் இல்லாமல், நோயுற்ற வகையிலே வீக்கம் அடைந்திருக்குமானால், பிறகு நாம், அது நம்மை அநியாயத்துக்குள்ளாக[1] நடத்திச்சென்றுவிடாதபடிக்கு, விசேஷித்த கவனம் கொண்டவர்களாய் இருக்கவேண்டும்.

இதற்கு ஒருவர் இவ்வாறாக பதிலளிக்கலாம். அதாவது தேவாலயத்தில், தான் தந்த அந்த வாக்குறுதியை வெறும் சடங்காகவே எண்ணுவதாகவும், அதை காப்பாற்றுகிற எண்ணம் தனக்கு அறவே இல்லை என்பதாகவும் அவர் சொல்லலாம். அப்படியானால் அவர் அதைச் செய்தபோது யாரை ஏமாற்ற முயற்சித்தார்? தேவனையா? அது உண்மையில் மிகவும் ஞானமற்றது. தன்னையா? அது மிகவும் புத்தியற்ற செயல். அல்லது மணமகனையா, மணமகளையா இல்லை புகுந்த வீட்டாரையா? அது துரோகம். நான் நினைக்கிறேன், பெரும்பாலும் அந்த தம்பதியர் அல்லது அவர்களில் ஒருவர் அந்தச் சபையை ஏமாற்றிவிடலாம் என்றே நினைத்திருக்கிறார். அவர்களுக்கு அந்த திருமணத்துக்கு செலுத்தப்படவேண்டிய விலையை செலுத்துகிற எண்ணம் இல்லை, ஆனால் அதனோடு இணைந்த மரியாதை மட்டும் வேண்டும்: அப்படியென்றால், அவர்கள் வஞ்சகர்கள், ஏமாற்றுபவர்கள். அவர்கள் அப்படியே ஏமாற்றுபவர்களாய் இருப்பதில் திருப்தியடைந்தவர்களாக இருந்தால், அவர்களுக்குச் சொல்லுவதற்கு என்னிடத்தில் ஒன்றும் இல்லை. நேர்மையாக இருப்பதற்குக்கூட விரும்பத் துவங்காத மனிதர்களிடம், உயர்ந்த கடினமான கடமையான கற்பை எப்படி வலியுறுத்த முடியும்? ஒருவேளை இப்பொழுது அவர்கள் எல்லாவற்றையும் உணர்ந்துகொண்டு, நேர்மையாக இருக்க விரும்புவார்களானால், அவர்கள் ஏற்கனவே செய்த வாக்குறுதியானது, அவர்களைக் கட்டுப்படுத்தும். இங்கே, இது நியாயம் என்ற தலைப்பின் கீழ் வருகிறது, கற்பின் கீழ் அல்ல என்பதை நீங்கள் பார்க்கலாம். நிரந்தரமான திருமணத்தின் மீது மனிதர்களுக்கு நம்பிக்கை இல்லையென்றால், தங்கள் வாக்குறுதிகளை முதலில் கொடுத்துவிட்டு, அதைக் காப்பாற்றாமல் போவதைப்பார்க்கிலும், திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வது சற்று நலம். அப்படி அவர்கள் திருமணம் ஆகாமல் இணைந்து வாழ்ந்தார்களென்றால், (கிறிஸ்தவ பார்வையில்) விபச்சாரம் செய்வதாக குற்றம் சாட்டப்படுவார்கள். ஒரு தவறு, மற்றொரு தவறைச் சேர்த்துக் கொள்வதினால் சரியாகாது. ஒழுக்கமின்மை, பொய் சத்தியத்தை சேர்த்துக் கொள்வதினால் மேம்படுத்தப்படப்போவதில்லை.

''காதல்'' வசப்படுவது தான் திருமணத்தில் நிலைத்திருப்பதற்கான ஒரே காரணம் என்கிற சிந்தனை, திருமணத்தை ஒரு ஒப்பந்தமாகவோ அல்லது வாக்குறுதியாகவோ இருப்பதற்கு, எந்த இடமும் தரவில்லை. காதல்தான் அந்த முழு காரியமாயிருக்குமென்றால், பின்னர் வாக்குறுதிகள், எதையும் அதனோடு சேர்க்கப்போவதில்லை. அப்படி அது எதையும் சேர்க்கவில்லை என்றால் அது செய்யப்படவேண்டியதே இல்லை. இங்கு வினோதமான காரியம் என்னவென்றால் காதலர்கள் தாமே, உண்மையாகவே காதல் வசப்பட்டு இருக்கும்பொழுது, அதைக்

1 dishonesty

குறித்துப் பேசுபவர்களைக்காட்டிலும் அதை நன்றாக அறிந்து வைத்திருப்பார்கள். செஸ்டர்டன் (Chesterton) குறிப்பிட்டு சொல்லுவதைப்போல, காதல் வசப்படுவோர் தாமாகவே முன்வந்து வாக்குறுதிகளால் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வார்கள். உலகம் முழுவதிலுமுள்ள காதல் கீதங்கள் எல்லாம், என்றென்றும் அதில் நிலைத்திருப்பதைக்குறித்த வாக்குறுதிகளால் நிறைந்திருக்கிறது. கிறிஸ்தவ விதி, காதல் வேட்கையின் சொந்த இயல்புக்கு அந்நியமான வேறு எந்த காரியத்தையும் திணிக்கவில்லை: அது, காதலர்கள் தங்களுடைய வேட்கை எதைச் செய்யும்படியாகத் தூண்டுகிறதோ, அந்தக் காரியத்தைத் தீவிரத்தோடு எடுத்துச் செய்யவேண்டும் என்றே வற்புறுத்துகிறது.

மேலும், நிச்சயமாக, நான் காதலில் இருக்கும்போதும், நான் காதலில் இருப்பதனாலும், என் அன்பிற்குரியவருக்கு நான் உயிரோடு இருக்குமளவும் உண்மையாக இருப்பேன் என்று சொன்ன அந்த வாக்குறுதி, நான் அப்படி காதலில் இருப்பதை நிறுத்திவிட்டபின்பும், அதற்கு உண்மையாய் இருக்கும்படி என்னை உறுதிப்படுத்துகிறது. ஒரு வாக்குறுதி அல்லது சத்தியம் என்பது, நான் செய்யக்கூடிய காரியமாய், என்னுடைய செயல்களைக் குறித்ததாக இருக்கிறது. ஒருவரும், தங்களுடைய உணர்வுகள் ஒரு குறிப்பிட்ட வழியில் இருக்கும் என்று, வாக்குறுதி கொடுக்கமுடியாது. அப்படி முடிந்தால், தனக்குத் தலைவலியே வராது என்றும், எப்பொழுதும் தான் பசியோடு இருக்கப்போவதாகவும், ஒருவர் வாக்குறுதியைக் கொடுக்கலாம். ஆனால், இனி தங்களுக்குள் காதல் இல்லை, என்ற நிலையில் இருக்கக்கூடிய இருவரை, ஒன்றாக சேர்த்துவைப்பதில் என்ன பிரயோஜனம் இருக்கிறது என்ற கேள்வி எழும்பக்கூடும். இதற்கு பல திடமான சமூக காரணங்கள் உண்டு; தங்கள் குழந்தைகள் வாழுவதற்கு ஒரு வீடு அவர்களுக்கு அளிக்க, (திருமணம் செய்துகொண்டதினால் அநேகமாக தன்னுடைய உத்தியோகத்தை தியாகம்செய்த அல்லது சேதப்படுத்திக்கொண்ட) ஒரு பெண்ணை, தனக்கு அலுத்துவிட்டது என்பதினால் கைவிட்டுவிடுகிற நிலையிலிருந்து அவளைப் பாதுகாக்கும்படியாக, ஆகிய காரணங்கள். ஆனால் விவரிப்பதற்குச் சற்று கடினமாக இருந்தாலும், நிச்சயமாக இதற்கு மற்றுமொரு காரணம் உண்டு என்று நான் எண்ணுகிறேன்.

அது ஏன் கடினமாக இருக்கிறதென்றால் , C யைக்காட்டிலும் B நல்லது என்று இருக்கும்போது, B யைக்காட்டிலும் A இன்னும் நன்றாக இருக்கிறது என்று, பல மனிதர்களுக்கு நாம் உணர்த்தமுடியாது. அவர்கள் நல்லது, இன்னும் நல்லது, சிறந்தது என்றோ கெட்டது, மோசமானது, முற்றிலும் மோசமானது என்றோ சிந்திக்காமல், நல்லதா அல்லது கெட்டதா என்ற அந்த கோணத்தில் மட்டுமே சிந்திக்க விரும்புகிறார்கள். ''தேசப்பற்று ஒரு நல்ல காரியம் என்று நினைக்கிறீர்களா?'' என்று அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள்: அதற்கு நீங்கள் ''நிச்சயமாக, அது சுயநலமாக வாழ்வதைக் காட்டிலும் சிறந்தது, ஆனால் அது உலகத் தொண்டு சேவைகளைக் காட்டிலும் கீழானது. மேலும், இவை இரண்டும் எதிரெதிராக நிற்கும்பொழுது, உலக சேவைக்குத்தான் நாம் வழிவிடவேண்டும்'' என்று நீங்கள்

பதிலளித்தால், நீங்கள் மழுப்பி பேசுகிறீர்கள் என்று அவர்கள் நினைப்பார்கள். அவர்கள் ‘‘சண்டையிடுவதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?’’ என்று கேட்கிறார்கள், அதற்கு நீங்கள் ‘‘ஒரு மனிதனை மன்னிப்பது, அவனோடு சண்டையிடுவதைக் காட்டிலும் மேலானது, ஆனால் வாழ்க்கை முழுவதும் ஒரு மனிதனோடு பகையை வைத்து, அவனைக் கீழேதள்ளி விடுவதற்காக ரகசியமாக முயற்சி எடுப்பதன் மூலம், அதை வெளிக்காட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கிலும், சண்டையிடுதல் எவ்வளவோ மேலானது’’ என்று நீங்கள் கூறுவீர்களானால், நீங்கள் அவர்களுக்கு ஒரு நேரான பதிலைக் கூறவில்லை என்றுசொல்லி அவர்கள் குறை கூறுவார்கள். இந்தத் தவறை, நான் சொல்லப்போகும் காரியத்தைக் குறித்து, ஒருவரும் செய்யாதிருப்பார்களாக.

‘‘காதல் வசப்படுதல்’’ என்று நாம் கூறுவது, ஒரு உன்னதமான நிலை ஆகும். மேலும் அது பல வழிகளில் நமக்கு நன்மையாகவும் இருக்கிறது. நாம் தாராளகுணம் உள்ளவர்களும், வீரம் உள்ளவர்களுமாய் இருப்பதற்கு அது உதவுகிறது. நம் அன்பிற்குரியவருடைய அழகை மட்டுமல்ல, எல்லா அழகுக்கும் நம்முடைய கண்களை அது திறக்கிறது. மேலும், அது நம்முடைய வெறும் மிருககுணமான பாலியல் உணர்வை (முக்கியமாக துவக்கத்தில்) கீழ்ப்படுத்துகிறது. இந்த வகையில் காதல், மாம்ச இச்சையை, சிறந்த முறையில் மேற்கொள்ளுகிறது. சொந்தபுத்தியுள்ள எவரும், சாதாரண பாலுணர்வு அல்லது அன்பற்ற சுயநலம் இவைகளைக்காட்டிலும், காதல் வசப்படுதல் மிகவும் மேலானது என்பதை மறுக்கமுடியாது. ஆனால், நான் முன்பு சொன்னதைப்போல, நீங்கள் செய்யக்கூடிய ஒரு மிக ஆபத்தான காரியம் என்னவென்றால், உங்களுடைய சொந்த இயல்பின் ஒரு உந்துதலை எடுத்துக்கொண்டு, எந்த விலையைக் கொடுத்தும் நீங்கள் பின்பற்றவேண்டியது அது ஒன்றுதான் என ஆக்கிக்கொள்வதாகும். காதல் வசப்படுவது என்பது ஒரு நல்ல காரியம் தான், ஆனால் அது சிறந்த காரியம் அல்ல. அதற்குக் கீழாக நிறைய காரியங்கள் உள்ளன, ஆனால் அதற்கு மேலாகவும் பல காரியங்கள் உள்ளன. உங்களுடைய முழு வாழ்க்கையின் அடித்தளமாக நீங்கள் அதை ஏற்படுத்திக் கொள்ளமுடியாது. அது ஒரு உன்னதமான உணர்வு என்றாலும் அது ஒரு உணர்வு மட்டுமே. எந்த உணர்வும் தன்னுடைய முழு தீவிரத்துடனும் நிலைத்திருக்கும் என்று நிச்சயமாக நாம் சொல்ல முடியாது. சொல்லப்போனால், அந்த உணர்வே நீடித்திருக்கும் என்று சொல்லமுடியாது. அறிவு நீடித்திருக்கமுடியும், கோட்பாடுகள் நீடித்திருக்கமுடியும், பழக்கங்கள் நீடித்திருக்கமுடியும். ஆனால் உணர்வுகள் வந்து போகும். உண்மையில், மனிதர்கள் என்னதான் கூறினாலும் ‘‘காதல் வசப்படுகிற’’ நிலை என்பது பெரும்பாலும் நீடித்திருப்பதில்லை. பழைய விசித்திர கதைகளின்[1] முடிவான ‘‘அதற்குப்பின்பு அவர்கள் என்றென்றும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள்’’ என்பது பொதுவாக அடுத்த ஐம்பது வருடங்களுக்கு தங்கள் திருமணத்துக்கு முந்தைய நாள் எப்படி இருந்தார்களோ அதே போல இருந்தார்கள் என்ற அர்த்தத்திலேயே எடுத்துக்கொள்ளப்படுமானால், அநேகமாக அப்படி இல்லாத ஒன்றை, ஒருபோதும் உண்மையாக இருக்கமுடியாத ஒன்றைத்தான்

[1] fairytale

அது கூறுகிறது. அப்படியே இருந்தாலும், அது மிகவும் விரும்பப்படாத ஒன்றாகத்தான் இருக்கமுடியும். அப்படிப்பட்ட ஒரு உற்சாகத்தோடு இன்னும் ஐந்து வருடங்களுக்கு வாழ்வதைக்கூட யாரால் தாங்கிக் கொள்ளமுடியும்? அப்படி இருந்தால் உங்களுடைய வேலை, உங்கள் பசி, உங்கள் தூக்கம், உங்கள் நண்பர்கள் இவையெல்லாம் என்ன ஆகும்? ஆனால், நிச்சயமாக ''காதல் வசப்பட்டிருப்பது'' நின்றுவிடுவது என்பது அன்பே இல்லாமல் போய்விடுவது என்கிற அர்த்தம் கொண்டதல்ல. இந்த இரண்டாவது வகையான அன்பு[1], காதல் வசப்படுவது என்கிறதிலிருந்து வித்தியாசப்படுகிறது. இது வெறும் ஒரு உணர்வு மட்டுமல்ல. இது தீர்மானத்தினால் பராமரிக்கப்பட்ட, பழக்கத்தினால் வேண்டுமென்றே பலப்படுத்தப்பட்ட; (கிறிஸ்தவ திருமணங்களில்) இருவருடைய பெற்றோர்களும் தேவனிடத்தில் வேண்டி பெற்றுக்கொண்ட கிருபையினால் வலுவூட்டப்பட்ட, ஒரு ஆழமான இணைப்பாகும். ஒருவருக்கொருவர் பிடிக்காமல்போய்விடுகிற அந்த தருணங்களில்கூட, இந்த அன்பை ஒருவர்மேலொருவர் வைத்துக்கொள்ளமுடியும். உங்களுக்கே உங்களை பிடிக்கவில்லை என்றாலும், நீங்கள் உங்களை நேசிப்பதைப்போல. அவர்கள், ஒருவேளை, தாங்களே அதை அனுமதிக்கும் பட்சத்தில், வேறொருவரோடு எளிதாகக் காதல் வசப்படுகிற சூழல் வந்தாலும், இந்த அன்பை தக்கவைத்துக்கொள்ளமுடியும். ''காதலில் வசப்படுதல்'' முதலாவதாக அவர்கள் தங்களுடைய விசுவாசத்தை வாக்குறுதியாக கொடுக்கச்செய்தது: இந்த அமைதியான அன்பு, அவர்களுடைய வாக்குறுதியை காத்துக்கொள்ளச்செய்தது. இந்த அன்பைக் கொண்டுதான் திருமணம் என்கிற எந்திரம் ஓடுகிறது: காதல் வசப்படுதல் அதை தொடக்கின அந்த தீப்பொறியாய் இருக்கிறது.

நீங்கள் என்னோடு முரண்பட்டால், நிச்சயமாக இப்படிச் சொல்லுவீர்கள். ''இவனுக்கு இதைக்குறித்து ஒன்றும் தெரியாது, ஏனென்றால் இவனுக்கு திருமணமே ஆகவில்லையே'' என்று. நீங்கள் சொல்லுவது ஓரளவுக்குச் சரியாக இருக்கலாம். ஆனால், அப்படிச் சொல்லுவதற்கு முன்பாக, நீங்கள் என்னை உங்களுடைய சொந்த அனுபவத்திலிருந்தும், உங்கள் நண்பர்களுடைய வாழ்க்கையை கவனித்ததிலிருந்தும் நியாயந்தீர்ப்பதாக இருக்கட்டும், நாவல்களிலிருந்தும் படங்களிலிருந்தும் நீங்கள் பெற்றுக்கொண்ட சிந்தனைகளின் அடிப்படையில் அல்ல. நம்முடைய அனுபவம் புத்தகங்களினாலும் நாடகங்களினாலும் சினிமாவினாலும் மீண்டும் மீண்டும் வண்ணம் தீட்டப்படுகிறது. வாழ்க்கையிலிருந்து நாம் உண்மையில் கற்றுக்கொண்ட சில காரியங்களிலுள்ள சிக்கல்களை அவிழ்க்க, பொறுமையும் திறமையும் நமக்கு வேண்டியிருக்கிறது.

நீங்கள் சரியான நபரைத் திருமணம் செய்துகொண்டால் வாழ்க்கை முழுவதும் காதல் வசப்பட்டு இருக்கும்படியாக எதிர்பார்க்கமுடியும் என்கிற யோசனையை, மனிதர்கள் புத்தகங்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் அப்படியாக அது இல்லை என்பதைக் கண்டறியும்போது, அவர்கள் ஒரு

1 love

தவறு செய்துவிட்டதாகவும், அதை சரி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை அது உறுதி செய்வதாகவும் நினைத்துக்கொள்கிறார்கள்– இதில் அவர்கள் உணர்ந்துகொள்ளாத ஒன்று என்னவென்றால், அப்படி அவர்கள் மாற்றியமைத்துக்கொண்டபிறகு, இந்தப் புது காதலில் உள்ள பளபளப்பும், அந்தப் பழைய காதலிலிருந்து போனதைப்போல போய்விடும் என்பதைத்தான். வாழ்க்கை என்கிற இந்தத் துறையில், மற்ற எல்லாத் துறைகளிலும் இருப்பதுபோல, துவக்கத்தில் வருகிற சிலிர்ப்பு எப்போதும் நீடித்திருக்காது. ஒரு சிறுவனுக்கு பறக்கவேண்டும் என்ற முதல் யோசனை வரும்போதுள்ள அந்த சிலிர்ப்பு, அவன் விமானபடையில் இணைந்து, உண்மையில் பறக்கப் பழகும்பொழுது நீடிக்காது. ஒரு மகிழ்ச்சி தரக்கூடிய இடத்தை நீங்கள் முதன்முதலில் பார்த்தபோது உணர்ந்த சிலிர்ப்பானது, நீங்கள் நிஜத்தில் அங்கு போய் வாழ ஆரம்பித்தபிறகு, சிறிது சிறிதாக மறைந்துவிடும். அப்படியானால் நீங்கள் பறக்கப் பழகுவதும், அந்த மனமகிழ்ச்சியான இடத்தில் போய் வாழ்வதும் நல்லதல்ல என்று அர்த்தமா? கிடையவே கிடையாது. இந்த இரண்டு வழக்குகளிலும், நீங்கள் அதைக் கடந்து வரும்பொழுது முதலில் இருந்த சிலிர்ப்பு, அழிந்துபோனாலும், அதற்கு ஈடாக, ஒரு அமைதியான நீடித்து நிலைக்கிற ஒரு வகையான ஆர்வம் ஏற்படும். இதற்கும் மேலான ஒன்று என்னவென்றால் (இது எவ்வளவு முக்கியமானது என்று நான் நினைக்கிறேன் என்பதை சொல்லுவதற்கு எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை), இந்த சிலிர்ப்பின் இழப்புக்கு தங்களைக் கீழ்ப்படுத்தி, அந்த நிதானமான ஆர்வத்துக்கு தங்களை அமர்த்திக்கொள்ளத் தயாராக இருக்கின்ற மனிதர்கள் மட்டும்தான், மற்றொரு வித்தியாசமான திசையில், புது சிலிர்ப்புகளை சந்திக்கும்படியான வாய்ப்புகளைப் பெறுகிறார்கள். பறப்பதற்கு பழகி ஒரு நல்ல விமானியான அந்த மனிதன் திடீரென்று இசையின் மேலுள்ள ஆர்வத்தைக் கண்டறிவான். அந்த அந்த அழகிய இடத்தில் குடியமர்ந்து வாழத்துவங்கின மனிதன், தோட்டக்கலையை கண்டறிவான்.

ஒரு காரியம், முதலாவதாக சாகாவிட்டால் உண்மையில் ஜீவனோடு வாழாது என்று கிறிஸ்து கூறின அர்த்தத்தின் ஒரு சிறு பகுதிதான் இது என்று நான் நினைக்கிறேன். எந்த ஒரு சிலிர்ப்பையும் தக்கவைத்துக்கொள்ள முயற்சி எடுப்பதில், எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. அதுதான் நீங்கள் செய்கிற மிக மோசமான காரியமாய் இருக்கக்கூடும். அந்த சிலிர்ப்பு போய்விடட்டும்– அது அழிந்துபோக விட்டுவிடுங்கள்– அந்த மரணத்தின் காலத்தைக்கடந்து, அதைத் தொடர்ந்து வருகிற அமைதியான ஸ்வாரஸ்யம் மற்றும் சந்தோஷத்துக்குள் வாருங்கள். அப்படி வரும்போது நீங்கள் எல்லா நேரத்திலும் ஒரு புது வகையான சிலிர்ப்பு நிறைந்த ஒரு உலகத்தில் வாழுகிறீர்கள் என்பதைக் கண்டறிவீர்கள். ஆனால் அந்த சிலிர்ப்புகள் உங்கள் அன்றாட உணவாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்து, செயற்கையான முறையிலே அது நீடித்திருக்க முயற்சி செய்வீர்களானால், அவைகள் மேலும் மேலும் வலுவிழந்து, மேலும் மேலும் குறைந்து போய்விடும். பிறகு, உங்கள் மிச்சமுள்ள வாழ்க்கை முழுவதும், நீங்கள் சலிப்படைந்த, ஏமாற்றமடைந்த ஒரு வயதான மனிதனாகத்தான் வாழ்வீர்கள். இதை மிகக் குறைவான மனிதர்கள் மட்டுமே புரிந்துகொண்டதால்தான், பல நடுத்தர வயது

ஆண்களும் பெண்களும், புது அடிவானங்கள் தோன்றி, புது வாசல்கள் தங்களை சுற்றிலும் திறக்கிற அதே வயதில், தாங்கள் தொலைத்த வாலிபத்தைக் குறித்தே பேசிக்கொண்டிருப்பதைக் காணமுடியும். நீங்கள், ஒரு சிறுவனாக முதன்முதலில் படகோட்ட துடுப்புப் போடப்பழகின அந்த உணர்வை பெற்றுக்கொள்ளுவதற்காக முடிவில்லாமல் (நம்பிக்கையற்ற) முயற்சி எடுப்பதைப் பார்க்கிலும், நீந்துவதற்கு பழகிக்கொள்ளுவது அதைவிட மேலாக, சுவாரஸ்யம் நிறைந்ததாய் இருக்கிறது.

நாவல்களிலிருந்தும் நாடகங்களிலிருந்தும் நாம் பெற்றுக்கொள்ளுகிற மற்றொரு கருத்து என்னவென்றால், காதலில் விழுவது என்பது தவிர்க்கவே முடியாத ஒரு காரியம் என்பதாகும்; அதாவது அம்மையைப்போல[1], அது சாதாரணமாக ஒருவருக்கு வருகிற ஒரு காரியம் என்று. இதை நம்புவதினால், சில திருமணமான மனிதர்கள், புதிதாக அறிமுகமான ஒரு நபரின் மேல் ஈர்க்கப்படும்போது, தோல்வியைத் தழுவி, எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்துவிடுகிறார்கள் . எப்படி இருந்தாலும் ஒரு வயது வந்தவருக்கு, இப்படிப்பட்ட தவிர்க்கமுடியாத வேட்கையானது, புத்தகங்களைக்காட்டிலும் நிஜ வாழ்க்கையில் வருவது மிகமிக அரிது என்றே நான் நினைக்கிறேன். நாம் அழகான, புத்திசாலியான, இரக்ககுணம் உள்ள ஒருவரை சந்திக்கும்பொழுது, நிச்சயமாக ஒரு வகையில், அந்த குணங்களைப் போற்றவும் விரும்பவும் வேண்டும். ஆனால் இந்த விதமான அன்பு, நாம் ''காதலில் வசப்படுதல்'' என்று அழைக்கிறோமே, அப்படியாக மாறவேண்டுமா மாறக்கூடாதா என்பது, பெரிய அளவில், நம்முடைய சொந்த தீர்மானத்தில்தான் இருக்கிறது, இல்லையா? நம்முடைய எண்ணம் முழுவதும் நாவல்களும் நாடகங்களும் காதல் பாடல்களுமாக நிறைந்ததாகவும், நம்முடைய உடல் முழுவதும் மதுவாகவும் இருந்ததானால், சந்தேகமின்றி நாம் உணருகிற எந்த அன்பையும், அந்த விதமான காதலாக மாற்றிவிடுவோம். நீங்கள் நடக்கிற பாதையில் ஒரு தேய்ந்த சுவடு இருக்குமென்றால் எல்லா மழைநீரும் அதற்குள் ஓடுவதைப்போலவும், நீங்கள் நீலவண்ணக் கண்ணாடியை அணிந்திருப்பீர்களென்றால், எல்லாம் உங்களுக்கு நீலவண்ணத்தில் தெரிவதைப்போலவும்தான் இது. ஆனால், அது நம்முடைய சொந்தத் தவறாகத்தான் இருக்கும்.

விவாகரத்து என்ற கேள்வியிலிருந்து விலகும் முன்பாக, அடிக்கடி குழப்பிக் கொள்ளப்படுகிற இரண்டு காரியங்களை வித்தியாசப்படுத்த நான் விரும்புகிறேன். இதில் கிறிஸ்தவம், திருமணத்தைக் குறித்துக் கொண்டிருக்கின்ற எண்ணம் ஒன்றாகும். மற்றொன்று மிகவும் வித்தியாசமான கேள்வியான – இதுவரை கிறிஸ்தவர்கள் ஓட்டுரிமை உள்ளவர்களாக இருந்தாலும் அல்லது பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், திருமணத்தைக் குறித்த தங்களுடைய பார்வையை, விவாகரத்துக்கான சட்டங்களுடன் இணைத்து, மற்ற எல்லா சமுதாயத்தினர் மேலும் அதை திணிப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்பது. பெரும்பாலான மனிதர்கள் இவ்வாறாக நினைக்கிறார்கள், ''நீ ஒரு கிறிஸ்தவனாக இருந்தால் மற்ற எல்லோருக்கும்,

1 measles

விவாகரத்தை மிகவும் கடினமான ஒரு காரியமாக ஆக்க, முயற்சி செய்யவேண்டும்'' என்று. நான் அவ்வாறு நினைக்கவில்லை. முகமதியர்கள், மீதமுள்ள நம் எல்லாரும் வைன்[1] குடிப்பதை, தடுக்க முயற்சிசெய்தால் நான் மிகவும் கோபப்படவேண்டும் என்பது மட்டும் குறைந்தபட்சம் எனக்குத் தெரியும். என்னுடைய சொந்தப் பார்வை என்னவென்றால், பிரிட்டிஷ் மக்களில் பெரும்பாலானோர் கிறிஸ்தவர்கள் அல்ல என்பதை சபைகள் வெளிப்படையாக அடையாளம் கண்டுகொள்ளவேண்டும். ஆதலால் அவர்கள் கிறிஸ்தவ வாழ்க்கை வாழும்படியாக நாம் எதிர்பார்க்கமுடியாது என்பதையும் அவர்கள் கண்டுகொள்ளவேண்டும். இங்கே இரண்டு முற்றிலும் வேறுபட்ட வகையான திருமணங்கள் இருக்கவேண்டும். ஒன்று, எல்லா குடிமக்களின் மீதும் அமல்படுத்தப்பட்ட விதிகளோடு மாநிலத்தின் ஆட்சிக்குட்பட்டது, மற்றொன்று தேவாலயத்தின் ஆட்சிக்கு உட்பட்டு அதன் சட்டங்கள், அதன் உறுப்பினர்கள் மேல் அமல்படுத்தப்பட்ட ஒன்று. ஒரு மனிதன், எந்தத் தம்பதியர் கிறிஸ்தவத்தின் உணர்வோடு திருமணம் செய்து கொண்டவர்கள் என்றும், எவர்கள் அப்படிச் செய்யாதவர்கள் என்றும் அறிந்துகொள்ளும்படியாக, இவை இரண்டிற்குமுள்ள வித்தியாசம், மிகவும் திட்டவட்டமாய் இருக்கவேண்டும்.

திருமணத்தின் நிரந்தர தன்மையைக் குறித்த கிறிஸ்தவத்தின் கோட்பாடு இவ்வளவுதான் போல. மற்றும் ஒரு காரியம் இதைக்காட்டிலும் அதிகம் செல்வாக்கிழந்த ஒன்று, நாம் சமாளிக்க வேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்தவ மனைவிகள் தங்கள் கணவர்களுக்கு கீழ்ப்படிவதாக வாக்குறுதி அளிக்கிறார்கள். கிறிஸ்தவ திருமணத்தில் அந்த ஆண்தான் ''தலை'' என்று சொல்லப்படுகிறான். இங்கே இரண்டு கேள்விகள் எழும்புகின்றன (1) ஏன் தலை என்று ஒன்று இருக்கவேண்டும்– ஏன் சமத்துவம் இருக்கக்கூடாது? (2) அது ஏன் அந்த ஆணாக இருக்கவேண்டும்?

1) திருமணம் நிரந்தரமானது என்கிற சிந்தனையில் இருந்துதான், ஒரு தலையின் அவசியம் தொடர்கிறது. நிச்சயம் கணவனும் மனைவியும் ஒருவரோடொருவர் ஒத்துப்போகும்போது, ஒரு தலை என்கிற கேள்வி எழும்பவேண்டிய அவசியம் இல்லை. இதுவே ஒரு கிறிஸ்தவ திருமணத்தின் இயல்பான நிலையாக இருக்கும் என்று நாம் நம்புவோம். ஆனால் ஒரு உண்மையான கருத்து வேறுபாடு ஏற்படும்பொழுது என்ன நடக்கும்? நிச்சயமாக அதைக்குறித்துப் பேசித்தீர்த்துக் கொள்ளவேண்டும். ஆனால் அவர்கள் அதையும் செய்துபார்த்து, ஒரு சம்மதத்துக்கு வரமுடியவில்லையென்றால், அடுத்து அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் பெரும்பான்மை ஓட்டை வைத்து எதையும் தீர்மானிக்க முடியாது. ஏனென்றால், இரண்டு பேர் உள்ள ஒரு சங்கத்தில், பெரும்பான்மை என்று எதுவும் இருக்கமுடியாது. நிச்சயமாக இதில், இரண்டு காரியங்களில், ஒன்றோ அல்லது அடுத்ததோதான் நடக்கும். ஒன்று, அவர்கள் இருவரும் பிரிந்து தங்கள் தங்கள் வழிகளைப் பார்த்துச் செல்லவேண்டும் அல்லது இருவரில் ஒருவர் அறுதிவாக்கைப்[2](இரு தரப்பிலும் உள்ள வாக்குகள் சமமாக

1 wine
2 casting vote

இருக்கும்போது ஒரு பிரச்சினையைத் தீர்மானிக்க ஒரு தலைவரால் வழங்கப்படும் கூடுதல் வாக்கு) பெற்றிருக்கவேண்டும். திருமணம் நிரந்தரமானதென்றால், ஒருவர் அல்லது மற்றொருவர், கடைசி முயற்சியாக, குடும்பத்தின் கொள்கைகளைத் தீர்மானிக்கிற அதிகாரத்தை உடையவராக இருக்கவேண்டும். ஒரு அரசியலமைப்பு [1] இல்லாமல், ஒரு நிரந்தர கூட்டுறவை நீங்கள் வைத்துக்கொள்ளமுடியாது.

2) ஒரு தலை இருக்கவேண்டுமானால் அது ஏன் அந்த ஆணாக இருக்கவேண்டும்? சரி முதலாவது, ஒரு பெண்தான் தலையாக இருக்கவேண்டும் என்ற மிகத் தீவிரமான விருப்பம் ஏதும் இருக்கிறதா? ஏற்கனவே சொன்னதைப்போல, நான் திருமணம் ஆகாத ஒருவன்தான். ஆனால் நான் பார்த்தவரையில் தன்னுடைய சொந்த வீட்டிற்குத் தலையாக இருக்கவேண்டும் என்று விரும்புகிற ஒரு பெண்கூட, அதே நிலை தன்னுடைய பக்கத்து வீட்டில் இருப்பதைப் பாராட்டுவது இல்லை. அவள் இப்படியாகப் பேச, அதிக வாய்ப்புண்டு. ''பாவம் மிஸ்டர். எக்ஸ். ஏன் அவர் அந்த பயங்கரமான மனுஷி தன்மேல் ஆதிக்கம் செலுத்தும்படியாக அனுமதிக்கிறார் என்பதை, என்னால் கற்பனை செய்துபார்க்கக்கூட முடியவில்லை'' என்று அவள் கூறலாம். யாராவது ஒருவர் அவளுடைய சொந்த தலைமைத்துவத்தைக் குறித்துச் சொன்னால்கூட, அவள் இவ்வளவு அலட்டிக்கொள்ளுவாள் என்று நான் நினைக்கமாட்டேன். மனைவிகள் கணவர் மேல் ஆளுவது என்கிற விதியைக்குறித்து, ஏதோ ஒன்று இயற்கைக்கு மாறாக இருக்கவேண்டும். ஏனென்றால் அந்த மனைவிகள் தாங்களே அதைக்குறித்துப் பாதி வெட்கப்படுகிறார்கள். மேலும் தாங்கள் ஆளுகிற தங்கள் கணவரை இகழுகிறார்கள். ஆனால், இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. நான் இங்கே ஒரு மணமாகாதவனாக வெளிப்படையாகப் பேசுகிறேன். ஏனென்றால், இந்தக் காரணம் நீங்கள் உள்ளிருந்து பார்ப்பதைவிட வெளியிலிருந்து மிகவும் நன்றாகப் பார்க்கமுடியும். ஒரு குடும்பத்துக்கு வெளி உலகத்தோடு இருக்கக்கூடிய தொடர்பு– அதாவது நாம் வெளியுறவுக் கொள்கை என்று அழைப்பது– கடைசி முயற்சியாக, அந்த ஆணின் மேல்தான் சார்ந்து இருக்கவேண்டும். ஏனென்றால் அவர் வெளியிலுள்ள மனிதர்கள் இடத்தில், அதிக நியாயமாக இருக்கவேண்டும், பொதுவாக அவர் அப்படித்தான் இருக்கிறார். ஒரு பெண் பிரதானமாக தன்னுடைய சொந்த பிள்ளைகளுக்காகவும் கணவருக்காகவும் உலகத்தில் உள்ள மற்றவர்களை எதிர்த்துச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறாள். இயற்கையாகவே இன்னும் சொல்லப்போனால், ஒரு வகையில் சரியாகவே, அவளுக்கு மற்ற எல்லாருடைய சொல்லைப் பார்க்கிலும், தன் குடும்பத்தினுடைய சொல் மேலாக இருக்கிறது. அவள்தான் அவர்களுடைய விசேஷித்த அறங்காவலர்(trustee) ஆவாள். ஒரு கணவனுடைய செயல்பாடு என்னவென்றால், இயற்கையாக அவள் கொடுக்கிற இந்த முன்னுரிமைக்கு, தலைமைத்துவம் கொடுக்கப்படாமல் பார்த்துக்கொள்வது தான். மனைவியினுடைய இந்தத் தீவிரமான குடும்பப்பற்றிலிருந்து, மற்றவர்களை பாதுகாப்பதற்கான கடைசி வார்த்தை, கணவனிடம்தான் இருக்கிறது. யாருக்காவது இதில் சந்தேகமிருந்தால், ஒரு எளிதான கேள்வியை கேட்கிறேன். உங்களுடைய நாய்

1 constitution

பக்கத்துவீட்டுக் குழந்தையைக் கடித்துவிட்டது அல்லது உங்களுடைய குழந்தை பக்கத்துவீட்டு நாயை காயப்படுத்திவிட்டது என்றால், யாரிடம் நீங்கள் முதலாவதாக பேசிச்சமாளிக்க வேண்டியிருக்கும், அந்த குடும்பத் தலைவனையா அல்லது தலைவியையா? அல்லது நீங்கள் ஒரு திருமணமான பெண்ணாக இருந்தால் உங்களிடம் இந்த கேள்வியைக் கேட்கிறேன். உங்கள் கணவரை நீங்கள் போற்றினாலும், அவர் தன்னுடைய உரிமைக்காகவும், உங்களுடைய உரிமைக்காகவும், பக்கத்து வீட்டாருக்கு எதிராக, நீங்கள் விரும்புகிற வீரியத்தோடு, எதிர்க்காமல் நிற்கிற தன்மை, அவருடைய பிரதான தோல்வியாய் இருக்கிறது என்று நீங்கள் சொல்லுவீர்கள் அல்லவா? சிறிதளவு ஒரு சமாதானம் செய்பவராக அவர் இருக்கிறார் என்று?

# 7. மன்னிப்பு

நான் முந்தின ஒரு அதிகாரத்தில் கற்பு என்பது கிறிஸ்தவ ஒழுக்கங்களில் மிகவும் செல்வாக்கிழந்த்தாய் இருக்கிறது என்று கூறினேன். ஆனால் நான் இப்பொழுது அப்படி கூறினது சரியா என்று யோசிக்கிறேன். இன்று நான் பேசவேண்டிய ஒன்று, அதைக்காட்டிலும் மிகவும் செல்வாக்கிழந்ததாய் இருக்கிறது: எதுவென்றால் கிறிஸ்தவ விதியான ''உன்னைப்போல பிறனையும் நேசி'' என்பதே. ஏனென்றால் கிறிஸ்தவ ஒழுக்கங்களில், ''உனக்குப் பிறன்'' என்கிற வார்த்தை, ''உன்னுடைய எதிரியையும்'' உள்ளடக்குகிறது. ஆதலால் நம்முடைய எதிரிகளை மன்னிக்க வேண்டிய அந்த பயங்கரமான கடமையை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எல்லோரும் மன்னிப்பு என்பது, மிகவும் அழகான ஒரு சிந்தனை என்றே கூறுவர், ஆனால் அது தாங்கள் ஒரு காரியத்தை மன்னிக்க வேண்டிய சூழ்நிலை வரும்வரையில் தான். நமக்கு போரின் போது ஏற்பட்ட சூழ்நிலையைப்போல. மேலும், இந்தத் தலைப்பைக் குறித்துப் பேச ஆரம்பித்தாலே, கோபத்தின் அலறல்கள் தான் நம்மை வரவேற்கும். மனிதர்கள் இதை மிக உயர்ந்த மற்றும் கடினமான ஒரு ஒழுக்கம் என்று நினைக்கிறார்கள் என்பதல்ல, மாறாக அதை ஒரு வெறுக்கப்படத்தக்க, ஒரு இழிவான ஒன்றாகவே நினைக்கிறார்கள். அந்த வகையான பேச்சுகளே அவர்கள் உடல்நிலையை மோசமாக்குகிறது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். உங்களில் பாதிப்பேர் என்னிடத்தில் இந்த கேள்வியை முதலாவதாக கேட்க விரும்புவீர்கள், ''ஒருவேளை நீ ஒரு போலந்து நாட்டைச் சேர்ந்தவனாகவோ யூதனாகவோ இருந்தால் கெஸ்டாப்போவை[1] (ஹிட்லரின் கொடூரமான போலீஸ் படை) மன்னிப்பதைக் குறித்து எப்படி உணர்வாய் என்பதை நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்று.

நானும் அதைத்தான் செய்கிறேன். அதைக்குறித்து மிகவும் அதிகமாகவே சிந்திக்கிறேன். நான் சித்திரவதைப்பட்டு சாக நேர்ந்தாலும், என்னை காப்பாற்றிக் கொள்ள என்னுடைய மார்க்கத்தை நான் மறுக்கக்கூடாது என்று கிறிஸ்தவம் எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அப்படி ஒரு நிலை எனக்கு ஏற்பட்டால், நான் என்ன செய்வேன் என்று நான் மிகவும் அதிகமாக சிந்திக்கிறேன். இந்தப் புத்தகத்தில் என்னால் என்ன செய்யமுடியும் என்பதைக் குறித்து உங்களிடத்தில் நான் சொல்ல முயற்சிக்கவில்லை– என்னால் மிகமிக குறைவாகவே செய்யமுடியும்– நான் சொல்லுகிறது கிறிஸ்தவம் என்ன என்பதே ஆகும். நான் அதை கண்டுபிடிக்கவில்லை. மேலும், அதற்கு மத்தியில் ''எங்களுக்கு விரோதமாய் குற்றம் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்'' என்பதை நான் காண்கிறேன். வேறு எந்த நிபந்தனையிலும் நமக்கு மன்னிப்பு வழங்கப்படுகிறது என்பதைக்குறித்த, ஒரு சிறு யோசனை கூட அங்கு இல்லை. நாம் மற்றவர்களை

1 Gestapo

மன்னிக்காவிட்டால் நாமும் மன்னிக்கப்படமாட்டோம் என்பது, அங்கு மிகவும் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்த மாற்று வழி ஏதும் இல்லை. நாம் என்ன செய்யமுடியும்?

எப்படியானாலும், இது மிகவும் கடினமாகத்தான் இருக்கப்போகிறது. ஆனால் இதை எளிதாக்கிக்கொள்ள இரண்டு காரியங்களை நாம் செய்யமுடியும் என்று நான் நினைக்கிறேன். நீங்கள் கணிதத்தைப் படிக்க ஆரம்பிக்கும்போது, கால்குலசிலிருந்து [1] துவங்குவதில்லை. மிகவும் சாதாரண கூட்டல் கணக்கிலிருந்துதான் துவங்கியிருப்பீர்கள். இதே வழியில், உண்மையாகவே நீங்கள் மன்னிப்பது எப்படி என்று அறிந்துகொள்ள விரும்பினால் (ஆனால் இது நீங்கள் மிகவும் உண்மையாக விரும்புவதைப் பொறுத்தது), ஒருவேளை கெஸ்டாப்போவைக் காட்டிலும் சற்று எளிதான ஒரு காரியத்திலிருந்து நாம் அதை துவங்குவது நல்லது. ஒருவர் தன் மனைவியையோ கணவனையோ மன்னிப்பது அல்லது பெற்றோரையோ பிள்ளைகளையோ அல்லது உங்களுக்கு மிக அருகிலுள்ள ஒரு அதிகாரியையோ, கடந்த வாரத்தில் அவர்கள் செய்த ஒரு காரியத்திற்காகவோ, சொன்ன ஒரு காரியத்திற்காகவோ மன்னிப்பதிலிருந்து ஆரம்பிக்கலாம். தற்சமயத்துக்கு அநேகமாக, அது நம்மை பரபரப்பாக வைத்துக்கொள்ளும். இரண்டாவதாக, உன்னைப்போல பிறனையும் நேசி, என்பதின் சரியான அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம். நான் அவனை என்னைப்போல நேசிக்கவேண்டும். சரி, நான் என்னை எவ்வாறாக நேசிக்கிறேன்?

இப்பொழுது நான் அதைப்பற்றி யோசிக்கும்போது, என்னைக் குறித்த ஒரு விருப்பமான அல்லது ஒரு நேசிக்கத்தக்கதான உணர்வு எனக்கு இல்லை. மேலும் என்னுடைய சொந்த சமூகத்தை குறித்துக்கூட என்னால் எப்பொழுதும் மகிழ்ச்சி அடையமுடியவில்லை. ஆக, ''உனக்குப் பிறனை நேசி'' என்பதின் அர்த்தம், ''அவனை எனக்கு மிகவும் பிடிக்கும்'' என்பதோ ''அவன் விரும்பப்படத்தக்கவனாக இருக்கிறான்'' என்பதோ அல்ல. இதை நான் முன்கூட்டியே கண்டிருக்கவேண்டும். ஏனென்றால், நிச்சயமாக நீங்கள் முயற்சிசெய்து ஒருவரை உங்களுக்குப் பிடித்தமானவராக நினைத்துக்கொள்ளமுடியாது. நான் என்னைக்குறித்து ஒரு நல்ல மனிதனாக நினைக்கிறேனா? ஆமாம், நான் சில வேளைகளில் என்னைக்குறித்து அப்படி நினைக்கிறேன் என்று அஞ்சுகிறேன். (அவையெல்லாம் சந்தேகமின்றி என்னுடைய மோசமான நேரங்களே) ஆனால் நான் என்னையே நேசிப்பதற்கு அது காரணம் அல்ல. உண்மையில் இது எதிர்மறையாக செயல்படுகிறது: நான் என்னையே நேசிப்பதினால்தான், என்னை நல்லவனாக நினைக்கிறேன். நான் நல்லவனாக நினைப்பதினால் என்னை நான் நேசிக்கவில்லை. அப்படியானால் என் எதிரிகளை நான் நேசிக்கவேண்டும் என்பது, பார்க்கப்போனால், அவர்களைக் குறித்து நான் நல்லதாக நினைக்க வேண்டும் என்றும் அர்த்தம் அல்ல. இது ஒரு மிகப்பெரிய பாரத்தை நீக்குகிறது. ஏனென்றால், அநேக மனிதர்கள் என்ன கற்பனை

1 calculus

செய்கிறார்களென்றால், அவர்களுடைய எதிரிகள் உண்மையாகவே கெட்ட மனிதர்களாக இருக்கும்போதும், உங்கள் எதிரிகளை மன்னிப்பது என்பது, அவர்களை அப்படி ஒன்றும் மோசமான மனிதர்கள் அல்ல என்று நினைத்துக் கொள்ளவேண்டும் என்பதாக. ஒரு படி முன்னே செல்லலாம். என்னைக் குறித்த மிகத் தெளிவான பார்வையுடைய தருணங்களில், நான் என்னை ஒரு நல்ல மனிதனாக நினைக்காமல் இருப்பது மட்டுமல்ல, என்னை மிகமிக மோசமானவனாகவும் நினைக்கிறேன். நான் செய்த சில காரியங்களைக் குறித்து மிகவும் பயங்கரத்தோடும் வெறுப்போடும் பார்க்கிறேன். ஆக, என்னுடைய எதிரிகளை குறித்து சில காரியங்களை நான் பயங்கரத்தோடும் வெறுப்போடும் பார்க்க எனக்கு அனுமதி உண்டு. இப்பொழுது நான் அதைக்குறித்து சிந்திக்கும்பொழுது, கிறிஸ்தவ போதகர்கள் பல காலங்களுக்கு முன்பாக எனக்குச் சொன்னதை நினைவுகூறுகிறேன். அதாவது ஒரு கெட்ட மனிதனுடைய செயல்களை நான் வெறுக்கவேண்டும், ஆனால் அந்த கெட்ட மனிதனை வெறுக்கக்கூடாது அல்லது அவர்கள் சொல்லுகிற பிரகாரமாக, பாவத்தை வெறுத்துவிடு பாவியை அல்ல.

பல காலங்களாக நான் இதை ஒரு முட்டாள்தனமான, பிளக்கும் முடிகள்[1] போன்ற வேறுபாடு என்று நினைத்துக் கொண்டிருந்தேன்: எப்படி ஒரு மனிதன் செய்யும் செயலைமட்டும் வெறுத்துவிட்டு, அந்த மனிதனை வெறுக்காமல் இருக்கமுடியும்? ஆனால், பல வருடங்களுக்குப்பிறகு நான் ஒரு மனிதனுக்கு, இவ்வாறாக என் வாழ்க்கை முழுவதும் செய்துகொண்டிருக்கிறேன் என்று எனக்குத் தோன்றினது– யாரென்றால், அது நான் தான். நான் எவ்வளவுதான் என்னுடைய சொந்தக் கோழைத்தனத்தையும் அகந்தையையும் பேராசையையும் வெறுத்தாலும், நான் என்னைத் தொடர்ந்து நேசித்துக் கொண்டேயிருக்கிறேன். அது எனக்கு சிறிதளவு கூட கடினமாக இருந்ததில்லை. சொல்லப்போனால் அந்தக் காரியங்களை நான் வெறுத்ததின் காரணமே, நான் அந்த மனிதனை நேசிப்பதால் தான். நான் என்னை நேசித்ததினால், நான் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிற ஒரு மனிதனாக இருப்பதைக்கண்டு வருந்தினேன். கிறிஸ்தவம் கொடுமையின்மேலும் துரோகத்தின்மேலும் நமக்கு இருக்கக்கூடிய வெறுப்பின் உணர்வை ஒரு சிறு அணு கூட, நாம் குறைத்துவிடக்கூடாது என்று விரும்புகிறது. நாம் அவைகளை கண்டிப்பாக வெறுக்கவேண்டும். அவற்றைக்குறித்து நாம் சொன்ன ஒரு வார்த்தைகூட, நாம் சொல்லி இருக்கக்கூடாது என்று நினைக்கத் தேவையே இல்லை. ஆனால் நமக்குள் இருக்கிற காரியங்களை நாம் எப்படி வெறுக்கிறோமோ, அதே வகையில் நாம் அதை வெறுக்கவேண்டும் என்று அது விரும்பவில்லை: அதாவது ஒரு மனிதன் தான் செய்த செயல்களைக் குறித்து வருந்தி, அவன் ஏதாவது ஒரு வகையில், எப்படியாவது, எந்த நேரத்திலாவது, எங்கேயாவது மீண்டும் குணப்பட்டு மனிதனாக மாறுவான் என்ற நம்பிக்கையோடு இருக்கும் வகையில் அதை வெறுப்பது.

[1] splitting hairs

உண்மையான சோதனை இதுதான். ஒருவர் செய்தித்தாளில் இழிவான கொடுமைகளைப் பற்றிய ஒரு கதையை வாசிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். பின்னர், அந்தக் கதை முற்றிலும் உண்மையானது அல்ல என்றோ, அது வாசித்ததைப்போல அப்படி மோசமான ஒன்று இல்லை என்றோ தெரியவருகிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஒருவருடைய முதல் உணர்வு, ''தேவனுக்கு நன்றி அவர்கள்கூட அந்த அளவுக்கு மோசமானவர்கள் அல்ல'' என்ற உணர்வா? அல்லது ஏமாற்றமடைந்த ஒரு உணர்வோடு சேர்த்து, அந்த முதல் கதை, உங்கள் எதிரிகள் மிக மோசமானவர்கள் என்ற அந்த சிந்தனை, தனிப்பட்ட மகிழ்ச்சியைத் தருவதினால், அதையே பற்றிக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தோடுள்ள அந்த உணர்வா? ஒருவேளை இரண்டாவதான உணர்வு இருக்குமானால், அது அதைத்தொடர்ந்து செல்லும்போது, முடிவிலே நம்மை சாத்தானாக மாற்றக்கூடிய ஒரு செயல்முறையின் முதல்படியாகும் என்று நான் அஞ்சுகிறேன். இங்கு பாருங்கள், ஒருவர் கருமை நிறம் இன்னும் சற்று அதிகக் கருமையாக இருக்கவேண்டும் என்று விரும்ப ஆரம்பிக்கிறார். இந்த விருப்பத்துக்கு நாம் இடம்கொடுத்துவிட்டால், பின்னர் சாம்பல் நிறமும் கருப்பாக வேண்டும் என்று விரும்ப ஆரம்பித்துவிடுவோம். இன்னும் பின்னர் வெள்ளையும் கருப்பாக இருக்கவேண்டும் என்று விரும்புவோம். முடிவில் நாம் பார்க்கிற எல்லாமே– தேவன், நமது நண்பர்கள், நம்மையும் சேர்த்து– கெட்டதாக இருக்கவேண்டும் என்று நாம் வலியுறுத்த ஆரம்பித்துவிடுவோம். மேலும் அப்படிச் செய்வதை நம்மால் நிறுத்தவும் முடியாமல் போய்விடும்: முழுக்க முழுக்க வெறுப்பு நிறைந்த ஒரு பிரபஞ்சத்திற்குள் நாம் என்றென்றும் மாட்டிக்கொள்ளுவோம்.

இப்போது ஒரு படி மேலே செல்லலாம். உங்கள் எதிரியை நேசிக்கவேண்டும் என்றால் அவனைத் தண்டிக்கக்கூடாது என்று அர்த்தமா? இல்லை. ஏனென்றால் என்னை நான் நேசிப்பது என்பது என்னைத் தண்டனைக்கு உட்படுத்தக்கூடாது என்பதின் அர்த்தம் அல்ல. அது மரணமாக இருந்தாலும் கூட. ஒருவர் ஒரு கொலை செய்துவிட்டார் என்றால் அவர் செய்யக்கூடிய சரியான கிறிஸ்தவ காரியம், தன்னை காவல்துறையிடம் ஒப்புக்கொடுத்து தூக்கில் தொங்குவதுதான். ஆதலால் தான், ஒரு கிறிஸ்தவ நீதிபதி ஒரு மனிதனுக்கு, மரணதண்டனை அளிப்பதும் அல்லது ஒரு கிறிஸ்தவ ராணுவ வீரன் ஒரு எதிரியை அழிப்பதும் மிகவும் சரியானது என்றே நான் கருதுகிறேன். நான் கிறிஸ்தவனாக மாறினதிலிருந்தும் போர் தொடங்குவதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தும், நாம் சமாதானத்தோடு இருக்கிறோம் என்றே நான் எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதும்கூட அவ்வாறே நான் நினைக்கிறேன். ''கொலை செய்யாதிருப்பாயாக'' என்று சொல்லிக்கொள்வதில் எந்த நன்மையும் இல்லை. இரண்டு கிரேக்க வார்த்தைகள் உண்டு: 'கொல்லுகிற செயலைக்' [1] குறித்த ஒரு சாதாரண வார்த்தை மற்றும் 'கொலை'[2] என்ற ஒரு வார்த்தை. கிறிஸ்து இந்த கட்டளையை நமக்கு சொல்லும்பொழுது அவர் கொலை என்ற அர்த்தத்தில் தான் மத்தேயு, மாற்கு மற்றும் லூக்கா ஆகிய மூன்று சுவிசேஷங்களிலும் குறிப்பிடுகிறார்.

1 kill
2 murder

எபிரேய மொழியிலும் இதே வேறுபாடு உண்டு என்று எனக்கு சொல்லப்பட்டிருக்கிறது. எல்லாக் கொல்லுகிற செயலும், கொலை அல்ல. எல்லா பாலியல் உறவும் விபச்சாரம் அல்ல என்பதுபோல. யோவான் ஸ்நானகனிடம் போர்ச் சேவகர்கள் வந்து, என்ன செய்யவேண்டும் என்று கேட்டபொழுது, அவர்கள் படையை விட்டு வெளியே வந்து விடவேண்டும் என்று சிறிதளவு கூட அவர் பரிந்துரைக்கவில்லை. கிறிஸ்துவும் கூட ரோமப் படை அதிகாரியை– நூற்றுக்கதிபதி என்ற அவர்கள் அழைக்கிறார்களே அவரை– சந்தித்தபோது அவ்வாறு கூறவில்லை. மாவீரன்[1] என்கிற அந்தக் கருத்து– ஒரு நல்ல காரணத்தை காக்கும்படியாக சர்வாயுதத்தை தரித்துக்கொண்ட ஒரு கிறிஸ்தவன் என்பது– ஒரு மிகச்சிறந்த கிறிஸ்தவ கருத்தாகும். போர் மிகவும் பயங்கரமான ஒரு காரியமாகும். ஒரு உண்மையான அமைதிவாதியை என்னால் மரியாதையோடு மதிக்கமுடியும் என்றாலும் அவருடைய கருத்து முற்றிலும் தவறானது என்றே நான் நினைக்கிறேன். என்னால் புரிந்துகொள்ளமுடியாதது எதுவென்றால், இந்த நாட்களில் சில மனிதர்கள் கொண்டிருக்கிற, பாதி அமைதிவாதி விதத்தைதான். அதாவது நீங்கள் போர் செய்ய வேண்டியிருந்தாலும், நீங்கள் அதை மிகவும் சோகத்தோடும் அவமானத்தோடும் அதைச் செய்யவேண்டும் என்கிற அந்த கருத்து. இந்த உணர்வுதான் பல அற்புதமான இளம் கிறிஸ்தவர்கள் தாங்கள் உரிமையாக செய்யவேண்டிய சேவைகளில், தங்கள் வீரத்தோடு சேர்ந்து, இயல்பாக துணையாக இருக்கக்கூடிய சில காரியங்களை– ஒரு வகையான சந்தோஷம் மற்றும் முழுமனம் ஆகியவற்றை– திருடி விடுகிறது.

எனக்கு நானே அடிக்கடி சிந்தித்துக் கொள்ளுகிற ஒரு காரியம் உண்டு. நான் முதலாம் உலகப்போரில் சேவை செய்தபோது, ஒருவேளை நானும் ஒரு இளம் ஜெர்மன் வாலிபனும் ஒருவரையொருவர் ஒரே நேரத்தில் கொன்றுவிட்டு, நாங்கள் இறந்த பிறகு அடுத்த நிமிடமே இருவரும் ஒன்றாக இணைந்து இருப்பதை கண்டோமானால் எப்படி இருந்திருக்கும் என்று. எங்கள் இருவருக்குமே எந்த ஒரு மனக்கசப்பும் அல்லது எந்த ஒரு சங்கடமும் கூட இருந்திருக்கும் என்று என்னால் கற்பனை செய்யமுடியவில்லை. நாங்கள் இருவருமே அதைக்குறித்து வாய்விட்டுச் சிரித்திருப்போம் என்றே நான் நினைக்கிறேன். யாரோ ஒருவர் இவ்வாறு சொல்வதாக நான் கற்பனை செய்கிறேன், ‘‘சரி ஒருவர் எதிரியின் செயல்களுக்கு கண்டனம் தெரிவிக்கவும் அவரைத் தண்டிக்கவும் அவரைக் கொலை செய்யவும் அனுமதி உண்டு என்றால், கிறிஸ்தவ ஒழுக்கத்துக்கும் மற்ற சாதாரண பார்வைக்கும் என்ன வித்தியாசம் இருக்கமுடியும்?’’ என்று. உலகத்தில் உள்ள எல்லா வித்தியாசமும் உண்டு. கிறிஸ்தவர்களாகிய நாங்கள், மனிதன் என்றென்றும் வாழப்போகிறான் என்று நினைக்கிறோம், என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆதலால் எது முக்கியம் என்றால், நம்முடைய ஆத்துமாவுக்கு உள்ளே இருக்கிற மையப்பகுதியில், தொடர்ந்து செயல்பட்டு, அதை நீண்ட காலத்துக்குப் பிறகு ஒரு பரலோக உயிரினமாகவோ அல்லது நரக உயிரினமாகவோ மாற்றக்கூடிய, அந்த சிறு சுவடுகளும் திருப்பங்களும் தான்.

1 knight

அவசியமானால் கொல்லலாம், ஆனால் (யாருக்கு அதைச் செய்கிறோமோ அவரை) நாம் வெறுக்கவோ, அந்த வெறுப்பில் மகிழவோ கூடாது. அவசியமானால் தண்டிக்கலாம், ஆனால் அப்படிச் செய்வதை மகிழ்ச்சியோடு செய்யக்கூடாது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் நமக்குள் இருக்கிற அந்த மனக்கசப்பின் உணர்வு, அந்தப் பழி வாங்கவேண்டும் என்ற உணர்வு, அப்படியே கொல்லப்பட வேண்டும். ஒருவரும் இந்த நொடியில், ‘இனி ஒருபோதும் அப்படியாக நினைக்கவேமாட்டேன்’ என்று தீர்மானிக்க முடியும் என்று நான் கூறவில்லை. காரியங்கள் அந்த வகையில் நடப்பன அல்ல. நான் எந்த அர்த்தத்தில் கூறுகிறேன் என்றால், ஒவ்வொரு முறையும் அது தன் தலையை தூக்கும்போதும், நாளுக்கு நாள், வருடத்துக்கு வருடம், நம்முடைய வாழ்க்கை முழுவதும் நாம் அதைத் தலையில் குட்டவேண்டும். அது கடினமான வேலை தான். ஆனால் முயற்சியினால் சாதிக்கமுடியாத ஒன்று அல்ல. நாம் கொல்லும்போதும் தண்டிக்கும்போதும் கூட நம்மைக் குறித்து நாம் எப்படி உணர்கிறோமோ, அதே வகையில்தான் எதிரியைக் குறித்தும் உணரவேண்டும். அதாவது அவன் கெட்டவனாக இருந்திருக்கக்கூடாது எனவும், அவன் இந்த உலகத்திலோ அல்லது வேறொன்றிலோ குணப்படுவான் என்ற நம்பிக்கையோடும், உண்மையில் அவனுடைய நன்மையை விரும்பும்படியாகவே சிந்திக்கவேண்டும். வேதாகமத்தில் இந்த அர்த்தத்தில் தான் அவனை நேசிக்கும்படியாக சொல்லப்பட்டிருக்கிறது. அவனுடைய நன்மையை விரும்பும்படிதானேயொழிய, அவனை விரும்பும்படியாகவோ அல்லது அவன் நல்லவனாக இல்லாத போதுகூட, அவன் நல்லவனாக இருக்கிறான் என்று சொல்லும்படியாகவோ அல்ல.

தங்களிடத்தில் நேசிக்கும்படியான எந்தக் காரியமும் இல்லாத மனிதர்களைக்கூட நேசிக்கவேண்டும் என்று இது உணர்த்துகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒருவருக்கு தன்னுடைய சுயத்தில் உள்ள ஏதும் நேசிக்கும்படியாக இருக்கிறதா? நீங்கள் நீங்களாக இருப்பதினால் உங்கள் சுயத்தை நேசிக்கிறீர்கள். தேவனும் அதே வகையில், அதே காரணத்துக்காக ஒவ்வொருவருடைய சுயத்தையும் நாம் நேசிக்கவேண்டும் என்று எண்ணுகிறார். ஆனால் அதை எப்படிச் செய்யவேண்டும் என்று காண்பிக்க, அவர் நம்முடைய சொந்த வழக்கிலேயே, இந்தக் கணக்கை ஏற்கனவே செய்துமுடித்துக் கொடுத்திருக்கிறார். நாம் அடுத்து செய்யவேண்டியதெல்லாம், இந்த விதியை மற்ற எல்லாருடைய சுயத்துக்கும் பிரயோஜனப்படுத்த வேண்டியதுதான். ஒருவேளை, தேவனும் நம்மை இப்படித்தான் நேசித்தார் என்பதை நாம் நினைவுகூர்ந்தால், இது நமக்கு இன்னும் எளிமையாகிறது. நம்மிடத்தில் நல்ல விரும்பத்தக்க தன்மைகள் இருப்பதினால் அல்ல, நாம் நம்முடைய சுயமாக மட்டுமே இருப்பதினால். ஏனென்றால் உண்மையில் நம்மிடத்தில் நேசிக்கும்படியாக வேறு ஒன்றுமே இல்லை: வெறுப்பை, மகிழ்ச்சிதரக்கூடிய ஒன்றாக பார்க்கிற உயிரினங்களாகிய நமக்கு, அதை விட்டுவிடுவது என்பது மது அருந்துவதையோ புகைபிடிப்பதையோ விட்டுவிடுவதைப் போன்றதாகும்.

# 8. மிகப்பெரிய பாவம்

கிறிஸ்தவ ஒழுக்கங்களில் மற்ற எல்லா ஒழுக்கங்களிலுமிருந்து, திட்டவட்டமாக வேறுபடுகிற பகுதிக்கு நான் இப்பொழுது வருகிறேன். இந்த உலகத்திலுள்ள எந்த மனிதனும் விடுபடமுடியாத தீமை ஒன்று உள்ளது. அது இந்த உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் மற்றவர்களிடத்தில் அதைக் காணும்போது வெறுக்கிற ஒன்றாகவும், அந்தக் குற்றம் தங்களிடத்திலேயே இருப்பதைக், கிறிஸ்தவர்கள் தவிர, மற்ற எந்த மனிதர்களும் நினைத்துக்கூட பார்க்கமுடியாததாகவும் இருக்கிறது. மனிதர்கள் தாங்கள் மிகவும் கோபப்படுகிறவர்களாக இருப்பதையும், பெண்கள் அல்லது மதுவைப் பற்றின தங்கள் சிந்தனைகளை நிலையாக வைத்துக் கொள்ளமுடியாதவர்களாக இருப்பதையும், தாங்கள் கோழைகளாக இருப்பதையுங்கூட ஒத்துக்கொண்டிருப்பதை நான் கேட்டிருக்கிறேன். ஆனால், ஒரு கிறிஸ்துவனைத் தவிர வேறு ஒருவரும் இந்தத் தீமையை தன்னிடத்தில் கொண்டிருப்பதாக, தன்னைத் தானே குற்றம் சாட்டிப் பேசுவதை நான் கேட்டதாக நினைவில்லை. அதே நேரத்தில் மற்றவர்களிடத்தில் இந்த குணத்தை காணும்போது, அதை சிறிதளவுகூட பொறுத்துக்கொண்ட, ஒரு கிறிஸ்தவர் அல்லாத மனிதனை, நான் மிகவும் அரிதாகவே சந்தித்திருக்கிறேன். ஒரு மனிதனுக்கு அதிகமாகக் கெட்டபெயர் வாங்கித்தரக்கூடிய தவறு, வேறு எதுவும் இல்லை. மேலும் அது நம்மிடத்தில் இருந்தும், அதைக்குறித்த அதிக உணர்வற்ற நிலை, வேறு எந்தத் தவறைக்குறித்தும் இல்லை. அது நம்மிடத்தில் அதிகமாக இருக்கும்பொழுதுதான், மற்றவர்களிடத்தில் நாம் அதை அதிகமாக வெறுக்கிறோம்.

நான் பேசிக்கொண்டிருக்கிற அந்தத் தீமை, 'தற்பெருமை' அல்லது 'கர்வம்' ஆகும். கிறிஸ்தவ ஒழுக்கங்களில் இதற்கு எதிரான ஒழுக்கம் 'தாழ்மை' என்று அழைக்கப்படுகிறது. நான் பாலியல் ஒழுக்கத்தைக் குறித்துப் பேசும்பொழுது, கிறிஸ்தவ ஒழுக்கங்களின் மையம் அங்கு இல்லை என்று உங்களை எச்சரித்தது, உங்கள் ஞாபகத்துக்கு வரலாம். நாம் இப்பொழுதுதான் அதன் மையத்திற்கு வந்திருக்கிறோம். கிறிஸ்தவ போதகர்களைப் பொறுத்தவரை, அந்த முக்கியமான தீயகுணம், அந்த உச்சகட்ட தீமை, பெருமை தான். இதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கற்பின்மை, கோபம், பேராசை, குடிப்பழக்கம் இவையெல்லாம் வெறும் கொசுக்கடி போலத்தான். பெருமையின் மூலமாகத்தான் சாத்தான், சாத்தானாக மாறினான்: பெருமை மற்ற எல்லாத் தீயகுணத்திற்கும் வழிநடத்தும்: இதுதான் முழுமையான, தேவனுக்கு எதிரான ஒரு மனநிலை ஆகும்.

இது மிகவும் மிகைப்படுத்தப்பட்டதாக உங்களுக்கு தோன்றுகிறதா? அப்படி தோன்றினால் மீண்டும் யோசித்துப் பாருங்கள். ஒருவரிடத்தில் அதிக பெருமை இருக்கும்பொழுது, அவர் மற்றவர்களிடம் அந்தப் பெருமையை அதிகமாக வெறுக்கிறார் என்று நான் சற்றுமுன் உங்களுக்கு சுட்டிக்காட்டினேன். உண்மையில், உங்களுக்கு எவ்வளவு பெருமை இருக்கிறது என்று நீங்கள் அறிந்து கொள்ளவேண்டுமானால், அதற்கு மிகவும் எளிதான வழி, உங்களை நீங்களே இந்த கேள்வியை கேட்டுக்

கொள்வது தான்: ‘‘மற்றவர்கள் என்னை அவமதிக்கும்போதும், என்னை கவனிக்க மறுக்கும்போதும், என்னுடைய விஷயங்களில் தலையிடும்போதும், என்னைத் தாழ்த்தும்போதும், பெருமையாக நடந்துகொள்ளும்போதும், நான் எந்த அளவுக்கு அதை வெறுக்கிறேன்?’’. இங்கு நாம் குறிப்பிட்டு கவனிக்கவேண்டியது என்னவென்றால், ஒவ்வொருவருடைய தற்பெருமையும், மற்ற எல்லோருடைய பெருமையோடும் போட்டிபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான். ஏனென்றால் எந்த ஒரு கூட்டத்திலும் என்னுடைய குரலே உயர்ந்து இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆதலால் மற்றொருவருடைய குரல் உயர்ந்து இருப்பதைக் கண்டு நான் எரிச்சலடைகிறேன். ஒரே வியாபாரத்தில் இருவர் ஒத்துக் கொள்வதில்லை[1]. இங்கு நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டிய காரியம் என்னவென்றால், மற்ற எல்லா தீய குணங்களும் தற்செயலாகத்தான் போட்டி மனப்பான்மை உள்ளவைகள். ஆனால், பெருமை அடிப்படையிலேயே போட்டி மனப்பான்மை உள்ளது –அதன் அடிப்படை இயல்பே ஒப்பிட்டுப் பார்க்கிற மனநிலைதான்– இப்படிச் சொல்லலாம், பெருமைக்கு, ஒரு காரியம் தனக்கு கிடைப்பதினால் எந்த மகிழ்ச்சியும் இல்லை. மற்ற மனிதனைக்காட்டிலும் அதிகமாக தனக்குக் கிடைப்பதில்தான் அதற்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. மனிதர்கள் தாங்கள் பணக்காரராக இருப்பதனாலும், புத்திசாலிகளாக இருப்பதனாலும், நல்ல தோற்றம் உடையவர்களாக இருப்பதனாலும், பெருமையாக இருக்கிறார்கள் என்று நாம் கூறுகிறோம். ஆனால் அப்படி அல்ல. அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் அதிக பணக்காரராகவும், அதிக புத்திசாலிகளாகவும், அதிக அழகுடையவர்களாகவும் இருப்பதனால் தான் பெருமையாக இருக்கிறார்கள். எல்லோருமே சமமான அளவு பணம் உள்ளவர்களாகவும் புத்தியுள்ளவர்களாகவும் நல்ல தோற்றம் உடையவர்களாகவும் இருப்பதில் பெருமைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை. அந்த ஒப்பீட்டுப் பார்வை தான் நம்மை பெருமை கொள்ளச்செய்கிறது. மற்றவர்களைக் காட்டிலும் மேலானவர்களாக இருப்பதில் உள்ள இன்பம் அது. அந்தப் போட்டி மனப்பான்மை ஒழிந்துவிட்டால், பெருமையும் ஒழிந்துவிடும். அதனால்தான் மற்ற எல்லாத் தீமைகளும் இல்லாத வகையில், பெருமை, அடிப்படையில் போட்டி மனப்பான்மை கொண்டதாக இருக்கிறது என்று நான் கூறினேன். இரண்டு மனிதர்கள் ஒரே பெண்ணின் மேல் ஆசை கொள்ளும்போது, அந்தப் பாலியல் உந்துதல்கள் அவர்களை ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொள்ளும்படி செய்கிறது. ஆனால் அது ஒரு தற்செயலான காரியம்தான். அவர்கள் முற்றிலும் இரண்டு வெவ்வேறு பெண்கள் மீது ஆசைப்படக்கூடும். ஆனால் ஒரு பெருமையுள்ள மனிதன் உங்களிடத்திலிருந்து, உங்களுக்குரிய பெண்ணை எடுத்துக்கொள்வான். அவள் தனக்கு வேண்டும் என்பதினால் அல்ல, உங்களைக் காட்டிலும் தான் மேலானவன் என்பதை நிரூபிக்கும்படியாகவே அப்படிச் செய்வான். எடுத்துக்கொள்ள போதுமான அளவு இல்லாதபோது, பேராசை, மனிதர்களை போட்டி மனப்பான்மைக்குள் தள்ளிவிடும். ஆனால் ஒரு பெருமையுள்ள மனிதன், தனக்கு வேண்டிய அளவுக்கு

1 two of a trade never agree– இது வியாபாரத்தில் ஒரே நோக்கத்தைக் கொண்ட இருவர், ஒருவர் மேலொருவர் பொறாமை கொண்டவர்களாகவும் அடுத்தவரைக் காட்டிலும் தாங்கள் மேலானவர்கள் என்றும் சிந்தித்து, ஒருவரோடொருவர் ஒத்துப்போவதில்லை என்று குறிக்கிற ஒரு ஆங்கில சொற்றொடராகும்

அதிகமாக இருக்கும்போதுகூட, தன்னுடைய பலத்தை வலியுறுத்துவதற்காக, இன்னும் அதிகம் எடுத்துக்கொள்ள முயற்சி செய்வான். மனிதர்கள் பேராசை அல்லது சுயநலம் என்று அழைக்கக்கூடிய, உலகத்தில் உள்ள ஏறக்குறைய எல்லாத் தீமைகளும், பெருமையின் விளைவாக ஏற்பட்டவைதான்.

பணத்தை வைத்து, இந்தக் காரியத்தைப் பார்ப்போம். பேராசை, ஒரு மனிதனை ஒரு நல்ல வீட்டுக்காகவும், நல்ல விடுமுறை நாட்களுக்காகவும், சாப்பிட குடிக்க நல்ல உணவுக்காகவும், பணத்தின் மீது விருப்பம் கொள்ளச்செய்யும். ஆனால் இது ஒரு குறிப்பிட்ட அளவுவரை மட்டுமே. ஒரு வருடத்துக்கு ஒரு கோடி சம்பாதிக்கிற ஒரு மனிதனை, எப்படியாவது வருடத்துக்கு இரண்டு கோடி வாங்கிவிடவேண்டும் என்று துடிக்கும்படியாகச் செய்வது எது? அது அதிக மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்கிற பேராசை அல்ல. எந்த ஒரு மனிதனும் உண்மையாக அனுபவிக்கக்கூடிய எல்லா சொகுசுகளையும், ஒரு கோடி ரூபாய் கொடுக்கமுடியும். இது பெருமையினால் வந்தது– பணமுள்ள மற்றொரு மனிதனைக் காட்டிலும், தான் பணக்காரனாக ஆக வேண்டும் என்கிற ஆசை. இன்னும் சொல்லப்போனால், அதிகாரத்தின் மீதுள்ள ஆசை. ஏனென்றால் நிச்சயமாக, பெருமை, உண்மையில் அனுபவித்து மகிழ்வது, அதிகாரத்தை தான். ஒரு மனிதனுக்கு மற்றவர்களைக் காட்டிலும் தன்னை மேலானவனாக எண்ணக்கூடிய உணர்ச்சியைத் தருவது, மற்றவர்களை பொம்மை சிப்பாய்களைப்போல அங்கும் இங்கும் நகர்த்துகிற அந்த அதிகாரம் தானே தவிர, வேறு எதுவும் அல்ல. ஒரு அழகான பெண், தான் போகிற இடத்தில் எல்லாம் தன் அழகில் மயங்குபவர்களை சம்பாதிப்பதின் மூலம் வேதனையைப் பரப்புவதன் காரணம் என்ன? நிச்சயமாக, அது அவளுடைய காம உள்ளுணர்வு அல்ல. இந்த வகையான பெண்கள் பெரும்பாலும் அந்த காரியத்தில் ஆர்வமற்றவர்களாகவே இருப்பார்கள். இது பெருமை. ஒரு அரசியல் தலைவரையோ அல்லது ஒரு முழு தேசத்தையோ மேலும் மேலும் கோரிக்கைகளை வைத்துக்கொண்டே போகச்செய்வது எது? பெருமைதான். பெருமையின் அடிப்படை இயல்பே, மற்றவர்களுடன் போட்டியிடுவது தான். அதனால்தான் அது மேலும் மேலும் கேட்டுக்கொண்டே இருக்கிறது. நான் ஒரு பெருமையுள்ளனாக இருந்தால், பின்னர் இந்த உலகம் முழுவதிலும் ஒரு மனிதன் என்னைக்காட்டிலும் அதிகாரம் உள்ளவனாகவும், பணம் உள்ளவனாகவும், புத்திசாலியாகவும் இருக்கும்வரையில், அவனே என்னுடைய போட்டியாளனும் என்னுடைய எதிரியுமாய் இருப்பான்.

கிறிஸ்தவர்கள் சரியாகத்தான் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்த உலகம் ஆரம்பித்தது முதல் வேதனையின் முக்கியமான காரணமாக இருப்பது இந்தப் பெருமைதான். மற்ற தீய குணங்கள் சில நேரங்களில் மனிதர்களை ஒன்றுபடுத்தக்கூடும். குடிகாரர்களும் ஒழுக்கமற்ற மனிதர்களும் நல்ல ஐக்கியத்துடன், வேடிக்கையாகப் பேசி மகிழ்வதையும், நட்போடு இருப்பதையும் நாம் காணமுடியும். ஆனால் பெருமை என்றாலே விரோதம் என்றுதான் அர்த்தம்– அது விரோதமே தான். மேலும் அது மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயுள்ள விரோதம் மட்டுமல்ல, தேவனுக்கு எதிரான விரோதமும் கூட. தேவன், உங்களைக்காட்டிலும்

எல்லாவகையிலும் அளக்கவே முடியாத அளவு, மேலானவர் என்ற ஒரு காரியத்தை நீங்கள் அவரில் எதிர்கொள்ளுகிறீர்கள். தேவனை நீங்கள் அப்படி அறிந்திருந்தால் ஒழிய– அதாவது அவரோடு ஒப்பிடும்போது நீங்கள் ஒன்றுமே இல்லை என்பதை அறியாவிட்டால்– நீங்கள் தேவனைக் குறித்து ஒன்றுமே அறியவில்லை என்பதே அர்த்தமாகும். நீங்கள் பெருமையுள்ளவராக இருக்கும்வரையில், தேவனை அறிந்து கொள்ளமுடியாது. ஒரு பெருமையுள்ள மனிதன் எப்பொழுதும் எல்லாவற்றையும், மனிதர்களையும், தனக்குக் கீழாக இருப்பதாகவேப் பார்க்கிறான். ஆகவே நிச்சயமாக நீங்கள் எல்லாவற்றையும் கீழாக பார்த்துக் கொண்டேயிருக்கும் வரையில், உங்களுக்கு மேலாக இருக்கிற ஒன்றைப் பார்க்கவே முடியாது.

இது ஒரு பயங்கரமான கேள்வியை எழுப்புகிறது. இவ்வளவு வெளிப்படையாகப் பெருமை நிறைந்தவர்களாய் இருக்கின்ற மனிதர்களால், தாங்கள் தேவனை நம்புகிறவர்கள் என்று சொல்லிக்கொண்டும், தங்களுக்குத் தாங்களே மிகவும் பக்தியுள்ளவர்களாகக் காணப்படவும் எப்படி முடிகிறது? அவர்கள் ஒரு கற்பனையான தேவனை வணங்குகிறார்கள் என்பதுதான் இதின் அர்த்தம் என்று நான் அஞ்சுகிறேன். இந்த மாயையான தேவனின் பிரசன்னத்தில், தாங்கள் ஒன்றுமே இல்லை என்பதை வார்த்தைகளினால் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் எல்லா நேரமும், அவர் எப்படி தங்களை அங்கீகரிக்கிறார் என்றும், மற்ற சாதாரண மனிதர்களைக் காட்டிலும், தங்களைக் குறித்து மேலாக எப்படி சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்றும் அவர்கள் எல்லா நேரமும் நினைக்கிறார்கள்– அதாவது ஒரு காசு அளவு கற்பனையான தாழ்மையை அவருக்கு செலுத்திவிட்டு, அதிலிருந்து ஒரு பவுண்டளவு பெருமையை, தங்கள் சகமனிதர்களிடம் காட்டுகிறார்கள். கிறிஸ்து, சிலர் தன்னைக் குறித்து பிரசங்கித்ததாகவும் அவருடைய நாமத்தினாலே பேய்களை விரட்டியடித்ததாகவும் கூறுவார்களென்றும், உலகத்தின் முடிவிலே அந்த மனிதர்களை, தான் அறியவில்லை என்று சொல்லுவதாகவும் கூறினார். அவர் அப்படிச் சொன்னபொழுது, இப்படிப்பட்ட மனிதர்களைத் தான் சிந்தித்திருப்பார் என்று நினைக்கிறேன். மேலும் நம்மில் எவரும் எந்த நேரத்திலும் இந்த ஒரு மரணப்பிடியில் மாட்டிக்கொள்ளக்கூடும். ஆனால் அதிர்ஷ்டவசமாக நாம் அதை சோதித்துப் பார்க்கமுடியும். எப்பொழுதெல்லாம் நம்முடைய பக்தியான வாழ்க்கை, நம்மை நல்லவர்கள் என சிந்திக்கவைக்கிறதோ, சொல்லப்போனால் மற்றவர்களைக் காட்டிலும், நாம் மேலானவர்கள் என சிந்திக்கவைக்கிறதோ, அப்பொழுதெல்லாம், நாம் தேவனினால் அல்ல, சாத்தானால் செயல்படுத்தப்படுகிறோம் என்று நிச்சயமாக அறிந்துகொள்ளலாம் என நான் நினைக்கிறேன். தேவனுடைய பிரசன்னத்தில் இருப்பதற்கான உண்மையான சோதனை எதுவென்றால், ஒன்று, நீங்கள் உங்களைக்குறித்து முற்றிலும் மறந்துவிடுவது அல்லது உங்களை ஒரு சிறு தூசியான பொருளாகப் பார்ப்பது. இதில் உங்களைக்குறித்து நீங்கள் முற்றிலும் மறந்துவிடுவதே மேலானது.

எல்லாவற்றிலும் மோசமான இந்தத் தீயகுணம், எப்படி நம்முடைய பக்தி வாழ்க்கையின் மையத்திற்கே தன்னைக் கடத்தி வந்துவிடுகிறது என்பது பயங்கரமான காரியமாய் இருக்கிறது. ஆனால் அது ஏன் என்று, உங்களால் பார்க்கமுடியும். சற்று குறைவான மற்ற தீயகுணங்கள், சாத்தான் நம்முடைய மிருக இயல்பின் மூலமாக செயல்படுவதினால் வருகிறது. ஆனால் இது நம்முடைய மிருக இயல்பின் மூலமாக வருவதே அல்ல. இது நேரடியாக நரகத்திலிருந்து வருகிறது. இது முற்றிலும் நம்முடைய ஆவி சார்ந்ததாக இருப்பதால், இதன் விளைவாக, அது மிக அதிக நுட்பமானதாகவும் கொடியதாகவும் இருக்கிறது. இதே காரணத்துக்காகத் தான், பெருமை பெரும்பாலும் மற்ற எல்லா சாதாரண தீயகுணங்களையும் தோற்கடித்துவிடுகிறது. பொதுவாக ஆசிரியர்கள், ஒரு சிறுவன், சரியான முறையில் நடந்துகொள்ளும்படியாக வைப்பதற்கு, அவனுடையபெருமையையோஅல்லதுஅவர்கள்அழைக்கும்படி,சுயமரியாதையையோ தான் சுட்டிக்காட்டுவார்கள். பல மனிதர்கள் கோழைத்தனத்தையும், காம உணர்ச்சியையும், கோபப்படுவதையும், அது தங்கள் சுயமரியாதைக்குக் கீழானது என்று நினைக்க பழகிக்கொண்டு அதை மேற்கொண்டார்கள்– அதாவது தங்கள் பெருமையின் மூலமாக. இதைக் கண்டு சாத்தான் சிரிக்கிறான். பெருமை என்னும் சர்வாதிகாரத்துக்குள் உங்களை நிலைநிறுத்திக் கொள்ளும்வரையில், நீங்கள் கற்புள்ளவர்களாகவோ வீரமுள்ளவர்களாகவோ இச்சையடக்கம் உள்ளவர்களாகவோ இருநதாலும், அதைக் கண்டு, அவன் முற்றிலும் திருப்தியடைகிறான் – அதாவது, உங்கள் சருமத்தில் குளிர்காலத்தில் ஏற்படுகிற சொறியை[1] குணமாக்கிவிட்டு, அதற்குப் பதிலாக, புற்றுநோயைக்[2] கொடுத்தால், அவன் எவ்வளவு திருப்தியடைவானோ அதைப்போல. ஏனென்றால் பெருமை என்பது நம்முடைய ஆவிக்குரிய புற்றுநோய் ஆகும்– அது அன்பு செலுத்துவது, மனநிறைவுடன் இருப்பது அல்லது சுயபுத்தியுடன் வாழுகிற சாத்தியத்தையே கூடத் தின்றுவிடும்.

இந்தப் பகுதியை விட்டுக் கடந்துசெல்லும் முன்பாக, சில காரியங்கள் தவறாக புரிந்துகொள்ளப்படும் சாத்தியத்தை எதிர்த்து, நான் காத்துக்கொள்ளவேண்டும்:

1. மற்றவர்களால் புகழப்படுவதால் வருகிற மகிழ்ச்சி, பெருமை அல்ல. ஒரு பாடத்தை நன்றாகப் படித்ததால், தன்னுடைய தோளில் தட்டிக்கொடுக்கப்படுகிற ஒரு குழந்தையும், தன்னுடைய காதலனால் தன்னுடைய அழகு புகழப்படுகிற ஒரு பெண்ணும், கிறிஸ்துவிடமிருந்து ‘‘நல்லது’’ என்று கூறப்படுகிற ஒரு இரட்சிக்கப்பட்ட ஆத்துமாவும் மகிழ்ச்சியடைகிறார்கள். அவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டியவர்கள் தான். ஏனென்றால் இந்த மகிழ்ச்சி, நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதில் இருக்கவில்லை, மாறாக நீங்கள் (நியாயமாக) பிரியப்படுத்த நினைத்த ஒருவரை பிரியப்படுத்தினதினால் வந்ததாகும். பிரச்சனை எங்கு ஆரம்பிக்கிறது என்றால் ‘‘நான் அவரை பிரியப்படுத்திவிட்டேன் எல்லாம் நல்லபடியாக இருக்கிறது’’ என்று நீங்கள் சிந்திப்பதற்குப் பதிலாக, ‘‘நான் இந்த காரியத்தைச் சாதிக்கும் அளவிற்கு, எவ்வளவு சிறப்பானவனாக இருக்கிறேன்!’’

1 childblains
2 cancer

என்று நினைக்கும்போது தான். நீங்கள் உங்களைக் குறித்து அதிகமாக மகிழ்ச்சியடைந்து, அந்தப் புகழ்ச்சியைக் குறித்துக் குறைவாக மகிழ்ச்சியடைந்தீர்கள் என்றால், நீங்கள் மிகவும் மோசமானவராகிக் கொண்டு வருகிறீர்கள். நீங்கள் முழுக்க முழுக்க உங்களைக் குறித்தே மகிழ்ச்சியடைந்துவிட்டு, அந்த புகழ்ச்சியைக் குறித்து எந்த கவனமும் இல்லாமல் இருப்பீர்களானால், நீங்கள் அடிமட்டத்தை அடைந்து விட்டீர்கள். அதனால் தான், மாயை என்பது மேலோட்டமாக தெரியக்கூடிய ஒரு வகையான பெருமையாக இருந்தாலும், உண்மையில், அது குறைந்தபட்சக் கேடாகவும் மன்னிக்கப்படக்கூடிய வகையாகவும் இருக்கிறது. ஒரு மாயையான மனிதன் புகழையும் கைத்தட்டல்களையும் பாராட்டுகளையும் மிக அதிகமாக விரும்பி, அந்தக் கோணத்திலேயே செயல்படுவார். அது ஒரு தவறுதான், ஆனால் ஒரு குழந்தைத்தனமான, சொல்லப்போனால் ஒரு வினோதமான வழியில், அடக்கமான தவறும் கூட. நீங்கள் உங்களுடைய சொந்தப் புகழ்ச்சியினால் இன்னும் முழுவதுமாக திருப்தியடையவில்லை என்பதை இது காட்டுகிறது. மற்ற மனிதர்கள் உங்களைப் பார்க்கவேண்டும் என்று விரும்பும் அளவிற்கு, அவர்களை மதிக்கிறீர்கள். நீங்கள் உண்மையில் இன்னும் மனித குணத்தோடு தான் இருக்கிறீர்கள். மற்றவர்கள் உங்களைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி நீங்கள் சற்றும் கவலையற்றிருக்கும் அளவிற்கு, அவர்களை இழிவாகப் பார்க்கும்பொழுது தான், அந்த உண்மையான, கருமை நிறமுள்ள கொடூரமான பெருமை வருகிறது. மற்ற மனிதர்கள் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளக்கூடாது என்பது, நிச்சயமாக மிகச்சரியான, பெரும்பாலும், நமது கடமையாகவும் இருக்கிறது. ஆனால் சரியான காரணங்களுக்காக நாம் அதைச் செய்யவேண்டும்– என்ன காரணமென்றால், தேவன் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறார் என்பதற்கு, நாம் ஈடு இணையற்ற அளவு அதிக கவனமுள்ளவர்களாய் இருப்பதுதான் அந்தக் காரணம். ஆனால் ஒரு பெருமையுள்ள மனிதன், அப்படி கவலையற்று இருப்பதற்கு ஒரு வித்தியாசமான காரணம் உண்டு. அவன் இவ்வாறாகக் கூறுவான். ''நான் ஏன் இந்த கும்பலுடைய கைத்தட்டல்களைக் குறித்துக் கவலைப்படவேண்டும்? ஏதோ இவர்களுடைய கருத்துக்கு நான் மதிப்பு கொடுப்பதைப்போல? அப்படியே அவர்களுடைய கருத்து மதிப்புள்ளதாக இருந்தாலும், ஒரு சிறுபிள்ளைத்தனமான அடக்கமில்லாத பெண்ணைப்போல, அந்தப் புகழ்ச்சியைக் கேட்டு, வெட்கத்தில் நெளிகிற அந்த வகையான மனிதனா நான்? இல்லை. நான் ஒரு முழுமையான முதிர்ச்சியடைந்த ஆளுமை உள்ளவன். நான் செய்த எல்லாம் என்னுடைய சொந்த கொள்கைகளையோ – அல்லது என்னுடைய கலையுணர்வு மிக்க மனசாட்சியையோ– அல்லது என் குடும்பத்தின் பாரம்பரியங்களையோ திருப்தி செய்வதற்காகத் தான்– ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் நான் 'அந்த வகையான உயர்ந்த மனிதனாய்' இருப்பதனால் தான். அந்தக் கூட்டத்துக்கு அது பிடித்திருந்தால் பிடிக்கட்டும். என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒன்றுமே இல்லை'' என்று. இந்த வழியில், உண்மையான பூரணமான பெருமை, மாயையைக் கட்டுக்குள் வைக்கிறது. ஏனென்றால், நான் சற்றுமுன் சொன்னதைப்போல சாத்தானுக்கு, ஒரு சிறிய தவறை, ஒரு மிகப்பெரிய ஒன்றைத் தருவதனால்

''குணப்படுத்துவது'' மிகவும் பிடிக்கும். நாம் மாயையாக இருக்கக்கூடாது என முயற்சி செய்யவேண்டும். ஆனால் நம்முடைய பெருமையை வைத்து, அந்த மாயையை குணப்படுத்தக்கூடாது. நெருப்பைக் காட்டிலும் வறுக்கும் சட்டி மேல் என்பதைப் போல.

2. ஒரு மனிதன் தன் மகனைப் பற்றியோ அல்லது தன் தந்தையைப் பற்றியோ, தன் பள்ளியைப் பற்றியோ அல்லது தன் படைப்பிரிவைப் பற்றியோ ''பெருமைப்படுவதாக'', நாம் பேசுவதுண்டு. இந்த அர்த்தத்தில் கூறப்படும் ''பெருமை'', ஒரு பாவமா? என்று நாம் கேட்கக்கூடும். இது நாம் ''பெருமைப்படுகிறோம்'' என்று சொல்லும்போது, குறிப்பிட்ட எந்த அர்த்தத்தில் பேசுகிறோம் என்பதைப் பொறுத்தது என்று நான் நினைக்கிறேன். பெரும்பாலும், அப்படிப்பட்ட வாக்கியங்களில், நான் ''பெருமைப்படுகிறேன்'' என்று சொல்லுகிற அந்தப் பகுதி, ஒருவர் தன்னுடைய ''மனம் குளிர்ந்து அடுத்தவரைப் புகழுவது'' ஆகும். அப்படிப்பட்ட புகழ்ச்சி, நிச்சயமாக ஒரு பாவமாகக் கருதப்படுவதிலிருந்து வெகுதொலைவில் இருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட அந்த நபர் தன்னுடைய புகழ்பெற்ற தகப்பன் நிமித்தமாகவோ, அல்லது ஒரு புகழ்பெற்ற படைப்பேரிவைச் சார்ந்தவராக இருப்பதாலோ, மற்றவர்களைக் காட்டிலும் தன்னை உயர்த்திக்கொள்ளுவதையும் கூட அது குறிக்கக்கூடும். இது தெளிவாக ஒரு தவறாகும். ஆனால் அப்போது கூட, அது நிச்சயமாக, ஒருவர் தன்னைக்குறித்தே பெருமையடைவதைக் காட்டிலும், மேலானதாகத்தான் இருக்கும். உங்களைவிட்டு வெளியே இருக்கிற எதையும் நீங்கள் நேசிப்பதும் புகழ்வதும், நீங்கள் முற்றிலும் ஆவிக்குரிய நாசமடைவதிலிருந்து விலகி, ஒரு அடி எடுத்துவைப்பதாகும். என்றாலும், நாம் தேவனிடம் அன்பு செலுத்தி, அவரைப் புகழுவதைக் காட்டிலும் அதிகமாக, வேறு எதையும் நேசித்துப் புகழும் வரையில், அது நமக்கு நலமானதாக இருக்கமுடியாது.

3. பெருமை தேவனைப் புண்படுத்துகிறது என்பதனால், அது அவரால் தடை செய்யப்பட்ட ஒன்றாக இருக்கிறது என்றோ, அல்லது தாழ்மை என்பது தேவன் தன்னுடைய சொந்த கௌரவத்துக்குச் செலுத்தும்படியாக ஆணையிடுகிற ஒன்று என்றோ– அதாவது தேவனே ஒரு பெருமையுள்ளவர் என்பதுபோல– நாம் சிந்திக்கக்கூடாது. அவர் தன்னுடைய கௌரவத்தைப் பற்றி குறைந்தபட்சம்கூட கவலைப்படுகிறவர் அல்ல. இங்கு குறிப்பிடப்படவேண்டியது எதுவென்றால், அவர், நீங்கள் அவரை அறிந்து கொள்ளவேண்டும் என்று விரும்புகிறார். அவர் உங்களுக்குத் தன்னையே கொடுக்க விரும்புகிறார். நீங்களும் அவரும் எந்த வகையில் அமைந்திருக்கிறீர்களென்றால், நீங்கள் உண்மையாகவே அவரோடு எந்த விதத்திலாவது தொடர்புடையவர்களாக இருந்தால், நீங்கள் தாழ்மை உடையவர்களாய்– சந்தோஷத்தோடு தாழ்மையுடையவர்களாகத்தான் இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கை முழுவதும் உங்களை அமைதியற்றவர்களாய், மகிழ்ச்சியற்றவர்களாய் ஆக்கின, உங்கள் சொந்த கௌரவத்தைக் குறித்த, எல்லாத் தேவையில்லாத, அனாவசியமான காரியங்களையும் முற்றிலுமாக விட்டொழித்து, அந்த எல்லையில்லாத விடுதலையை நீங்கள் உணருவீர்கள். அப்படி ஒரு தருணம் உங்களிடம் சாத்தியமாகும்படியாகவே, அவர் உங்களை தாழ்மையுள்ளவர்களாக ஆக்க முயற்சிசெய்கிறார். நம்மிடத்திலிருந்து

பல முட்டாள்தனமான, அசிங்கமான, வேஷமான சில ஆடைகளை அவர் நீக்கிவிட முயற்சிக்கிறார். இவைகளை நமக்கு நாமே மாட்டிக்கொண்டு அங்கும் இங்கும் சுற்றித்திரியும் சிறு முட்டாள்களாக இருக்கிறோம். நானும் என்னுடைய தாழ்மையை, இன்னும் சற்று அதிகமாக பெற்றிருந்தால் நலமாய் இருக்கும். அப்படிப் பெற்றிருந்தால், அந்த விடுதலையைப் பற்றி நான் உங்களுக்கு இன்னும் அதிகமாகக் கூறியிருக்கமுடியும்–அதாவது, அந்த வேஷமான ஆடைகளை களைந்துபோடுவதிலுள்ள அந்த சொகுசைக் குறித்தும் – உங்களுடைய பொய்யான சுயமாகிய ''இங்கே என்னைப் பாருங்கள்'', ''நான் நல்லவனாய் இருக்கிறேன் இல்லையா?'' ஆகிய எல்லாக் காரியங்களும், நடை உடை பாவனைகள் இவை எல்லாவற்றையும் விட்டு ஒழிப்பதைக் குறித்தும் கூறியிருப்பேன். அப்படி ஒரு நிலைக்கு அருகில் செல்வது, அது ஒரு நொடியாக இருந்தாலும்கூட, அது பாலைவனத்தில் இருக்கிற ஒரு மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய, ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீரைப் போன்றதாக இருக்கும்.

4. நீங்கள் உண்மையாகவே தாழ்மையாக இருக்கிற ஒரு மனிதனைச் சந்தித்தால், இப்போதெல்லாம், எல்லோரும் ''தாழ்மை'' என்று அழைக்கிறார்களே, அப்படியாக அவர் இருப்பார் என்று கற்பனை செய்யாதீர்கள்: வழவழப்பாகப் பேசிக்கொண்டு, மற்றவர்களுடைய புகழ்பாடி நலனடைகிற மனிதனாக, எப்போது பார்த்தாலும் 'தான் ஒன்றுமே இல்லை' என்று சொல்லுகிற ஒரு வகையான மனிதனாக, அவர் இருக்கமாட்டார். பெரும்பாலும், அவரைப் பற்றி நீங்கள் சிந்திப்பதெல்லாம், அவர் உற்சாகம் உள்ளவராய், நீங்கள் அவரிடம் சொன்னவற்றைக் குறித்து உண்மையான ஆர்வமுள்ள ஒரு புத்திசாலியாய் இருக்கிறார் என்பதே ஆகும். அவரை உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் அதன் காரணம், 'எப்படி ஒருவர் வாழ்க்கையை இவ்வளவு சுலபமாக அனுபவிக்க முடியும்?' என்று அவர் மேல் உங்களுக்கு வருகிற ஒரு சிறு பொறாமை உணர்வுதான். அவர் தாழ்மையைக் குறித்து சிந்திக்கமாட்டார்: தன்னைக்குறித்து முற்றிலுமாக சிந்திக்கவே மாட்டார்.

யாராவது தாழ்மையை அடையவேண்டும் என்று விரும்பினால், அவர்களுக்கு அதன் முதல் படியை, என்னால் சொல்லமுடியும் என்று நான் நினைக்கிறேன். முதல் படி எதுவென்றால், ஒருவர் தான் பெருமையுள்ளவராய் இருக்கிறோம் என்பதை உணர்வதுதான். அது மிகப்பெரிய படியும்கூட. இதற்கு முன்பாக செய்யக்கூடிய குறைந்தபட்ச காரியம், வேறு எதுவும் இல்லை. நீங்கள் பெருமையுள்ளவர் அல்ல, என்று நினைப்பீர்களானால், அதன் அர்த்தம் நீங்கள் மிகவும் பெருமையுள்ளவர்களாய் இருக்கிறீர்கள் என்பதுதான்.

# ൯. ஈகை

முந்தின ஒரு அதிகாரத்தில், நான்கு முக்கியமான நற்குணங்கள் உள்ளன என்றும் மூன்று இறையியல் நற்குணங்கள் உள்ளன என்றும் நான் கூறியிருந்தேன். அந்த மூன்று இறையியல் நற்குணங்கள் எவையென்றால், விசுவாசம், நம்பிக்கை மற்றும் ஈகை ஆகும். விசுவாசத்தைக் குறித்து, கடைசி இரண்டு அதிகாரங்களில் பார்க்கப்படும். ஈகையின் ஒரு பகுதியை, ஏழாவது அதிகாரத்தில் நாம் பார்த்தோம். ஆனால் அங்கு 'மன்னிப்பு' என்று கூறப்படுகிற ஈகையின் ஒரு பகுதியைக் குறித்துதான் நான் ஆழமாகக் கூறினேன். இப்போது, அதனோடு சற்று கூட சேர்த்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக அந்த வார்த்தையின் அர்த்தத்தைப் பார்ப்போம். ஈகை[1] என்பது நாம் ''பிச்சை'' என்று கூறுகிற அந்த அர்த்தத்தில் மட்டுமே இப்பொழுது பயன்படுத்தப்படுகிறது– அதாவது ஏழைகளுக்குக் கொடுப்பது. ஆனால் முதன்முதலில் இந்த வார்த்தைக்கு, ஒரு பரந்து விரிந்த அர்த்தம் இருந்தது (இந்த காலத்திலுள்ள அர்த்தத்தை, அது எப்படி பெற்றுக்கொண்டது என்பதை உங்களால் பார்க்கமுடியும். பொதுவாக ஒரு மனிதனுக்கு ஈகை குணம் இருக்குமென்றால், அவர் செய்யக்கூடிய காரியங்களில், அதிகமாக வெளிப்படையாகத் தெரிவது ஏழைகளுக்கு கொடுப்பதாகும். ஆதலால் மனிதர்கள் ஈகை என்பதின் முழு அர்த்தமுமே அதுதான் என்பதுபோலப் பேசினார்கள் . இதே முறையில்தான் ரைம்[2], அதாவது வாக்கியங்கள் ஒரே விதமான ஒலியில் முடிவடைவது ஒரு கவிதையில் அதிகமாக வெளிப்படையாகத் தெரியக்கூடிய ஒரு காரியமாய் இருக்கிறது. ஆகையால் மனிதர்கள் கவிதை என்பது, வாக்கியங்கள் ஒரே விதமான ஒலியில் முடிவடைவது தானேயொழிய வேறொன்றுமில்லை என்பது போல குறிப்பிட ஆரம்பித்தார்கள்). ஈகை என்பது ''கிறிஸ்தவ அர்த்தத்தில் பார்க்கும்போது, அன்பு ஆகும்''. ஆனால் கிறிஸ்தவ அர்த்தத்தில் அன்பு ஒரு உணர்ச்சியைக் குறிப்பிடவில்லை. அது நம்முடைய உணர்ச்சிகளின் நிலைப்பாடு அல்ல, நம்முடைய தீர்மானத்தின் நிலைப்பாடாக இருக்கிறது. இந்த தீர்மானத்தின் நிலைப்பாடு நம்மேல் நமக்கு இயல்பாக வருகிறது, ஆனால் அது மற்றவர்கள் மேல் இருப்பதற்கு, நாம் அதை கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

மன்னிப்பு என்கிற அதிகாரத்தில் நான் சுட்டிக்காட்டினதைப் போல, நம் மேல் நமக்குள்ள அன்பு என்பதின் அர்த்தம், நமக்கு நம்மைப் பிடித்திருக்கிறது என்பது அல்ல, நம்முடைய நன்மையை நாம் விரும்புகிறோம் என்பதே. இதே வழியில், நம்மைச் சுற்றி இருப்பவர்கள் மேலுள்ள கிறிஸ்தவ அன்பு அல்லது ஈகை என்பது, நமக்குப் பிடிக்கக்கூடிய அல்லது நமக்குப் பிரியமான காரியங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாய் இருக்கிறது. சில மனிதர்களை நமக்குப் பிடிக்கும் அல்லது நாம்

1 charity
2 rhyme

விரும்புவோம். ஆனால் மற்ற சிலரை நமக்குப் பிடிக்காது. நம்முடைய உணவில் நமக்கு சிலவை பிடிக்கும் சிலது பிடிக்காமல் இருக்கும், இது ஒரு பாவமோ அல்லது நற்குணமோ அல்ல என்பதைப் போல, இந்த இயல்பான பிரியம் ஒரு பாவமும் அல்ல ஒரு நற்குணமும் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம். இது ஒரு யதார்த்தம் அவ்வளவுதான். ஆனால் நிச்சயமாக அதைக் குறித்து நாம் என்ன செய்கிறோம் என்பதுதான் பாவமாகவோ அல்லது நற்குணமாகவோ இருக்கிறது.

நமக்கு மனிதர்களை இயல்பாகப் பிடிக்கும்போதும், பிரியம் வைக்கும்போதும் அது அவர்களுக்குக் கொடுப்பதை எளிதாக்கி விடுகிறது. ஆதலால் நம்முடைய பிரியங்களை நாம் உற்சாகப்படுத்துவது நம்முடைய அன்றாட கடமையாய் இருக்கிறது– அதாவது மனிதர்கள்மேல், நம்மால் இயன்றமட்டும் பிரியம் வைப்பது என்பது, (உடற்பயிற்சியின் மீதும், ஒரு முழுமையான சத்து நிறைந்த உணவின் மீதும் நம்முடைய பிரியத்தை நாம் ஊக்கப்படுத்துவது போல) நம்முடைய கடமையாய் இறுக்கிறது– இந்தப் பிரியம் வைக்கிற செயலே, ஈகையின் நற்குணம் அல்ல, ஆனால் அதற்கு உதவுகிறதாயிருக்கிறது. மாறாக ஒரு குறிப்பிட்ட மனிதர் மேலுள்ள பிரியம், மற்றொரு மனிதருக்கு நாம் கொடுக்காமல் இருப்பதற்கோ, இன்னும் சொல்லப்போனால், அநியாயமாய் நடந்துகொள்ளுவதற்கோ வழிவகுத்து விடக்கூடாது என்பதை நாம் பயத்தோடு மிகவும் கூர்ந்த பார்வையுடன் நோக்கவேண்டியது, அவசியமாய் இருக்கிறது. பல நேரங்களில் நம்முடைய பிரியமும், நாம் நமக்குப் பிடித்த நபருக்கு செய்யக்கூடிய அந்த ஈகை குணமும், ஒன்றோடொன்று எதிர்மறையாக இருப்பதையும் காணமுடியும். உதாரணமாக, ஒரு செல்லம் கொடுக்கிற தாய் தன்னுடைய இயல்பான அன்பிநிமித்தம், தன் குழந்தையை கெடுக்கும்படி சோதிக்கப்படலாம். அதாவது அவள் தன்னுடைய சொந்த பிரியத்தின் உந்துதல்களைத் திருப்திசெய்ய, அந்தக் குழந்தை பின்னர் பெறக்கூடிய உண்மையான சந்தோஷத்தை, விலையாகச் செலுத்திவிடக்கூடும்.

இயல்பான பிரியங்கள் சாதாரணமாக ஊக்கப்படுத்தப்படவேண்டும் என்றாலும், ஒருவர் ஈகை குணம் உள்ளவராவதற்கு, உட்காந்து மற்றவர்கள் மேல் பிரியப்படுகிற சிந்தனைகளை உருவாக்கிக் கொள்வதுதான் வழி என்று நினைப்பது மிகவும் தவறானதாகும். சில மனிதர்களுடைய சுபாவமே உணர்ச்சியற்றதாய் இருக்கும். அது அவர்களுக்கு ஒரு துரதிர்ஷ்டமாக இருக்கலாம். ஆனால் உணவுச்செரிமானம் சரியாக இல்லாதது, ஒரு பாவம் இல்லை என்பதுபோலவே இதுவும் ஒரு பாவம் அல்ல. மேலும் இது, அவர்கள் ஈகை குணத்தை பழகிக்கொள்ளும் வாய்ப்பை வெட்டிவிடுவதும் அல்ல, அந்தக் கடமையிலிருந்து விலகுவதற்கு அவர்களுக்குரிய சாக்குபோக்கும் அல்ல. நம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட விதி முற்றிலும் எளிமையானது. நீங்கள் மற்றவர்களை நேசிக்கிறீர்களா இல்லையா என்று யோசித்து, காலத்தை வீணாக்காதீர்கள். மற்றவர்களை நேசிப்பதுபோல நடந்துகொள்ளுங்கள். நாம் இதைச்செய்ய ஆரம்பித்த உடனேயே, ஒரு மிகப்பெரிய ரகசியத்தைக் கண்டுகொள்ள முடியும். நீங்கள் ஒருவரை நேசிப்பதுபோல நடந்துகொள்ளும்போது, உண்மையாகவே அவர்களை நேசிக்க ஆரம்பித்து விடுவீர்கள். உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை நீங்கள் காயப்படுத்தினால்,

அவரை இன்னும் அதிகமாய் உங்களுக்குப் பிடிக்காமல் போய்விட்டதைக் காணமுடியும். அவருக்கு ஒரு நல்ல காரியத்தை செய்வீர்களானால், அவரைச் சற்று குறைவாக வெறுப்பதை நீங்களே பார்க்கமுடியும். நிச்சயமாக இதில் ஒரு விதிவிலக்கு உண்டு. நீங்கள் தேவனைப் பிரியப்படுத்தவோ அல்லது ஈகையின் விதிகளுக்குக் கீழ்ப்படிந்தோ அவருக்கு ஒரு நன்மையைச் செய்யாமல், மாறாக நீங்கள் எவ்வளவு ஒரு சிறந்த மன்னிக்கக்கூடிய நபராக இருக்கிறீர்கள் என்பதைக் காண்பிக்கவும், அவரைக் கடனாளியாக மாற்றுவதற்காகவும் அதைச் செய்துவிட்டு, பின்னர் அவருடைய ''நன்றியுணர்வுக்காக'' காத்துக் கொண்டிருப்பீர்களானால், நீங்கள் அநேகமாக ஏமாற்றமடைவீர்கள் (மனிதர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. பெருமையாகக் காட்டிக்கொள்வதையும், தங்களை உயர்த்துவது போன்ற காரியங்களையும் அவர்கள் வெகு விரைவாக கண்டுபிடித்துவிடமுடியும்). ஆனால் எப்பொழுதெல்லாம் நாம் இன்னொரு சுயத்துக்கு, அதுவும் ஒரு சுயமாக இருக்கிறது என்பதற்காகவும் (நம்மைப் போல) அதுவும் தேவனால் படைக்கப்பட்டது என்பதற்காகவும் மட்டுமே அதற்கு நன்மை செய்து, நம்முடைய சந்தோஷத்தை நாம் விரும்புவதுபோலவே, அதனுடைய சந்தோஷத்தையும் நாம் விரும்பும்போது, நாம் இன்னும் சற்று அதிகமாக நேசிக்கக் கற்றுக் கொண்டிருப்போம் அல்லது குறைந்தபட்சம் சற்று குறைவாக வெறுக்க கற்றுக் கொண்டிருப்போம்.

இதன் விளைவாக, கிறிஸ்தவ ஈகை என்பது, உணர்ச்சி வசப்படக்கூடிய சிந்தனைகள் நிறைந்த மனிதர்களுக்கு, மிகவும் உணர்ச்சிகள் தணிந்துபோன ஒரு காரியமாகத் தோன்றினாலும், மேலும் அது அன்பு செலுத்துவதிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒன்றாக இருந்தாலும்கூட, அது அன்புக்கு நேராக வழி நடத்துகிறது. ஒரு கிறிஸ்தவனுக்கும் ஒரு உலகப்பிரகாரமான மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் என்பது, உலகப்பிரகாரமான மனிதனுக்கு பிரியங்களும் விருப்பங்களும் மட்டுமே உள்ளன என்பதும், கிறிஸ்தவனுக்கு ஈகை மட்டுமே உள்ளது என்பதும் அல்ல. அந்த உலகப்பிரகாரமான மனிதன், சில மனிதர்களிடம் அன்பாக நடந்துகொள்ளுவார் ஏனென்றால் அவருக்கு அவர்களைப் பிடிக்கும். ஒரு கிறிஸ்தவன் எல்லோரிடமும் அன்பாக நடக்க முயற்சிசெய்வார், அப்படித் தொடர்ந்து செய்யும்போது, இன்னும் அதிகமதிகமான மனிதர்கள் மேல் தனக்கு விருப்பம் உண்டாவதைத் காண்பார்– தொடக்கத்தில் தன்னால் விரும்பக்கூடும் என்று கற்பனை கூட செய்து பார்க்கமுடியாத சில மனிதர்களையும் சேர்த்து.

இதே ஆவிக்குரிய விதி, எதிர்மறையான திசையிலும் மிகவும் பயங்கரமாக செயல்படுகிறது. ஜெர்மானியர்கள் முதலில் யூதர்களை வெறுத்ததினால், ஒருவேளை அவர்களை மோசமாக நடத்தியிருப்பர். அதற்குப்பின்பு அவர்களை மோசமாக நடத்தின காரணத்தினாலேயே அவர்களை இன்னும் அதிகமாக வெறுத்தனர். நீங்கள் அதிகக் கொடூரமானவராக இருக்கும்போது அதிகமாக வெறுப்பீர்கள்; மேலும் நீங்கள் அதிகமாக வெறுக்கும்பொழுது அதிகக் கொடூரமானவராக மாறிவிடுவீர்கள். ஆக, இப்படியே அந்தத் தீமையான வட்டம் என்றென்றும் சுழன்று கொண்டேயிருக்கும்.

நன்மையும் தீமையும் இரண்டுமே கூட்டுவட்டி விகிதத்தில் கூடிக்கொண்டே இருக்கும். அதனால்தான், ஒவ்வொரு நாளும் நாம் எடுக்கிற சிறுசிறு தீர்மானங்கள் முடிவில்லாத முக்கியத்துவம் வாய்ந்தவையாய் இருக்கின்றன. இந்த நாளிலே நீங்கள் செய்கிற ஒரு மிகச் சிறிய நல்ல காரியம், ஒரு குறிப்பிட்ட மூலோபய பகுதியின் (strategic point) கைப்பற்றுதலாக இருக்கலாம், இதிலிருந்து சில மாதங்கள் கழித்து, கனவில் கூட நினைக்காத வெற்றிகளை நீங்கள் தொடர்ந்து பெற்றுக்கொண்டே செல்லக்கூடும். இந்த வகையிலே சிறிதளவு காமத்திலோ அல்லது கோபத்திலோ இன்று நீங்கள் ஈடுபடுவது என்பது, (போர் சூழலில்) ஒரு மேட்டையோ அல்லது ஒரு ரயில் பாதையையோ அல்லது பாலத்தையோ நீங்கள் இழப்பதற்கு ஒப்பாகும். இதன் மூலமாக, அதுவரையில் சாத்தியம் இல்லாததாக இருந்த ஒரு தாக்குதலை, எதிரி உங்கள் மேல் ஏவக்கூடும்.

சில எழுத்தாளர்கள், ஈகை என்ற வார்த்தையைக் கொண்டு, மனிதர்களுக்கு இடையேயுள்ள கிறிஸ்தவ அன்பை மட்டும் குறிப்பிடாமல், மனிதன் மேலுள்ள தேவனுடைய அன்பையும், தேவன் மேலுள்ள மனிதனுடைய அன்பையும் குறிப்பிடுவதற்கு பிரயோஜனப்படுத்துகிறார்கள். இதில் இரண்டாவதாக சொன்ன காரியத்தைக் குறித்துதான், மனிதர்கள் மிகவும் கவலைப்படுகிறார்கள். அவர்களுக்கு தேவனை நேசிக்கவேண்டும் என்று சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அப்படி ஒரு உணர்வை தங்களுக்குள் அவர்களால் காணமுடியவில்லை. அவர்கள் என்ன செய்யமுடியும்? இதற்கான பதில், முன்பு கூறின அதே பதில்தான். நேசிப்பது போல நடந்துகொள்ளுங்கள். உணர்ச்சிகளை உருவாக்கும்படியாக, உட்கார்ந்து முயற்சி செய்து கொண்டிருக்காதீர்கள். ‘‘நான் தேவனை நேசிக்கிறேன் என்பது நிச்சயமாக எனக்குத் தெரிந்தால், நான் என்ன செய்வேன்?’’ என்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். பதிலைக் கண்டுபிடித்தவுடன் போய் அப்படியே செய்யுங்கள்.

சுருக்கமாக, தேவன் மேலுள்ள நம்முடைய அன்பைக்காட்டிலும், நம்மேலுள்ள தேவனுடைய அன்பு என்பது யோசிப்பதற்கு மிகவும் பாதுகாப்பான ஒரு பாடமாக இருக்கிறது. ஒருவரும், எல்லா நேரத்திலும் பக்தியான உணர்வுகளை கொண்டிருக்கமுடியாது. அப்படி இருந்தாலும், நம்முடைய உணர்ச்சிகளைக் குறித்துத், தேவன் பிரதானமாக கவலைப்படுவது இல்லை. தேவன்மேலும் மனிதர்கள் மேலுமுள்ள கிறிஸ்தவ அன்பு என்பது, நம் தீர்மானம் சார்ந்த காரியமாய் இருக்கிறது. நாம் அவருடைய விருப்பத்தை செய்ய முயற்சிப்போம் என்றால், அவருடைய கட்டளையான ‘‘உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூறுவாயாக’’ என்பதற்கு நாம் கீழ்படிகிறவர்களாயிருக்கிறோம். அவருக்குச் சித்தமானால், அவர் நமக்கு அன்பின் உணர்ச்சிகளைத் தருவார். அவைகளை நாமே நமக்காக உருவாக்கிக் கொள்ளமுடியாது. அது நம்முடைய உரிமை என்பதுபோல அதை ஒரு கோரிக்கையாகவும் நாம் வைக்கமுடியாது. ஆனால் நாம் நினைவுகூரவேண்டிய ஒரு சிறந்த காரியம் என்னவென்றால், நம்முடைய உணர்ச்சிகள் வரும், போகும். ஆனால் அவருடைய அன்பு அப்படி அல்ல. நம்முடைய பாவங்களினாலோ அல்லது நம்முடைய

அலட்சியத்தினாலோ அது சோர்வடைவதில்லை. ஆகையால், நாம் எந்த விலையைச் செலுத்தியாவது, அவர் எந்த விலையைச் செலுத்தியாவது, நாம் அவைகளிலிருந்து குணப்படுவோம் என்ற தீர்மானத்தில் அது மிகவும் திடமாய் இருக்கிறது.

# 10. நம்பிக்கை

நம்பிக்கை, இறையியல் நற்குணங்களில் ஒன்றாகும். இதன் அர்த்தமான, நித்திய உலகத்தை எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பது என்பது, (இக்காலத்து மனிதர்கள் சிலர் நினைப்பதைப்போல) எதார்த்தத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் முறையோ அல்லது ஆசைப்பட்ட காரியங்களை கற்பனை செய்துபார்ப்பதோ அல்ல, மாறாக ஒரு கிறிஸ்தவன் கண்டிப்பாக செய்யவேண்டிய ஒன்றாய் இருக்கிறது என்பதே. நாம் இப்பொழுது இருக்கிற இந்த உலகத்தைவிட்டு பிரிந்து வந்துவிடவேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. நீங்கள் சரித்திரத்தை வாசித்துப் பார்த்தால், இப்போதைய உலகத்துக்காக அதிகமான காரியங்களைச் செய்த கிறிஸ்தவர்கள், அடுத்த உலகத்தைக் குறித்து அதிகம் சிந்தித்தவர்களாக இருந்தார்கள் என்பதைக் காணமுடியும். ரோம சாம்ராஜ்யத்தின் மாற்றத்துக்கு முதல் அடியெடுத்து துவக்கிவைத்த அப்போஸ்தலர்களுக்கும், இடைக்காலங்களைக் கட்டி எழுப்பின மாபெரும் மனிதர்களுக்கும், அடிமை வியாபாரத்தை ஒழித்துக் கட்டின ஆங்கிலேய சுவிசேஷர்களுக்கும், அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம் பரலோகத்தினால் நிரப்பப்பட்டிருந்ததால்தான், இந்த உலகத்தில் தங்கள் அடையாளத்தை விட்டுச் சென்றிருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் அந்த அடுத்த உலகத்தை குறித்து அதிகம் சிந்திப்பதை நிறுத்திவிட்டதிலிருந்து தான், இந்த உலகத்திலும் அவர்கள் திறனற்றவர்களாக மாறிவிட்டார்கள். ''பரலோகத்தை குறி வை, அப்பொழுது உலகம் உனக்கு கொடுக்கப்படும்: உலகத்தைக் குறி வை உனக்கு இரண்டுமே கிடைக்காது''. இது ஒரு வினோதமான விதியாகத் தெரிகிறது. ஆனால் இந்த விதியைப் போன்ற ஒன்றுதான், மற்ற எல்லாவற்றிலும் செயல்படுவதைக் காணமுடிகிறது. ஆரோக்கியம் என்பது ஒரு பெரிய ஆசீர்வாதம். ஆனால் ஆரோக்கியத்தை உங்களுடைய முக்கியமான, நேர்க் குறிக்கோளாக வைக்கும்பொழுது உங்களில் பிரச்சனைகள் ஆரம்பித்து, உங்களுக்குள் ஏதோ சரியாக இல்லை என்பதுபோல கற்பனை செய்வீர்கள். நீங்கள் மற்ற காரியங்களை – அதாவது உணவு, விளையாட்டு, வேலை, கொண்டாட்டம், திறந்தவெளி ஆகிய இவைகளை அதிகமாக விரும்பும்போதுதான், ஆரோக்கியத்தை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். இதே முறையில், நாகரீகத்தை நம்முடைய முக்கிய குறிக்கோளாக வைக்கும் வரையில், நம்மால் அதைக் காப்பாற்ற முடியாது. நாம் அதற்கும் மேலான சில காரியங்களை விரும்ப கற்றுக்கொள்ள வேண்டும்.

நம்மில் பலருக்கு ''மோட்சம்'' என்பது இறந்துபோன நம்முடைய நண்பர்களை மீண்டும் சந்திப்பது என்கிற ஒரு காரணத்துக்காகவே தவிர, ''மோட்சம்'' என்ற ஒன்று நமக்கு வேண்டும் என்று விரும்புவதே மிகவும் கடினமாகத் தெரிகிறது. இந்த கடினத்திற்கு ஒரு காரணம், நாம் அதற்காக பழக்கப்படவில்லை என்பதுதான். நம்முடைய முழு கல்வியும் நம்முடைய எண்ணத்தை இந்த உலகத்தின் மேல்தான் நிறுத்தி வைக்கிறது. மற்றொரு காரணம் என்னவென்றால், மோட்சம் வேண்டும் என்ற

உண்மையான விருப்பம் நமக்குள் இருக்கும்போதும், அதை நாம் அடையாளம் கண்டுகொள்வதில்லை. பல மனிதர்கள் தங்களுடைய சொந்த இருதயத்திற்குள் உண்மையாக பார்க்கப் பழகிக் கொண்டால், இந்த உலகத்தில் கிடைக்காத ஒன்று, அவர்களுக்கு மிகமிக தீவிரமாய் அவசியப்படுகிறது என்பதை அறிந்து கொள்வார்கள். இந்த உலகத்தில் பலவகையான காரியங்கள் அதை உங்களுக்குத் தருவதாக உறுதியளித்தாலும், அவைகளால் அந்த வாக்கை ஒருபோதும் காப்பாற்ற முடிவதில்லை. முதல்முறையாக காதலில் விழும்போதோ அல்லது முதல் முறையாக ஒரு மேல்நாட்டைக் குறித்து நினைக்கும் போதோ, அல்லது நமக்கு மிகவும் பிடித்த ஒரு படிப்பை எடுத்துப் படிக்கும்போதோ ஏற்படுகிற ஏக்கங்கள், எந்த திருமணத்தாலும், எந்த பிரயாணத்தினாலும், எந்தக் கல்வியினாலும் திருப்தி செய்ய முடியாதவை ஆகும். நான் இப்பொழுது, பொதுவாக தோற்றுப்போனதாக சொல்லப்படுகிற திருமணங்களைக் குறித்தோ அல்லது விடுமுறைகளை குறித்தோ அல்லது கற்ற தொழில்களை குறித்தோ பேசவில்லை. நான் மிகச் சிறந்தவைகளாக சாத்தியப்படுகிறவற்றைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறேன். நம்முடைய ஏக்கங்களின் முதல் தருணத்தில் நாம் புரிந்துகொண்ட ஒரு விஷயம், எதார்த்தத்தில் அப்படியே மறைந்து போய்விடுகிறது. நான் எதைக் குறித்து பேசுகிறேன் என்று அனைவருக்கும் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். மனைவி நல்ல மனைவியாக இருக்கலாம், நாம் தங்குகிற ஹோட்டல்களும் இயற்கை காட்சிகளும் மிகச் சிறப்பாக அமையலாம், வேதியியல் நமக்கு மிகவும் ஆர்வமான ஒரு வேலையாக இருக்கலாம். ஆனால் ஏதோ ஒன்று நம்மிடம் இருந்து நழுவி சென்றுவிட்டது. இந்த உண்மையை எதிர்கொள்ள இரண்டு தவறான வழிகளும், ஒரு சரியான வழியும் உள்ளது.

1. முட்டாளின் வழி – இவன் எப்போதும் அந்த காரியங்களின் மேலேயே பழியைப் போடுகிறான். தான் மட்டும் வேறொரு பெண்ணிடம் பழகி இருந்தால் அல்லது இன்னும் அதிகம் செலவழித்து தன் விடுமுறை நாட்களை கழித்து இருந்தால், என்று இது போன்ற காரியங்களைச் சொல்லி, அந்த நேரத்திலே அந்த ஒரு மர்மமான காரியத்தை நான் பிடித்திருக்கக் கூடும் என்று தன் வாழ்க்கை முழுவதும் நினைத்துக் கொண்டிருக்கிறான். இந்த உலகத்தில் உள்ள பெரும்பாலான சலித்துப்போன, திருப்தியற்ற பணக்காரர்கள் எல்லோரும் இந்த வகையைச் சேர்ந்தவர்கள் ஆவர். தங்கள் வாழ்க்கை முழுவதும், ஒரு பெண்ணிடமிருந்து மற்றொரு பெண்ணிற்கு (விவாகரத்துகள் மூலமாக) தாவிக்கொண்டும், ஒரு கண்டத்தில் இருந்து இன்னொரு கண்டத்துக்கும், ஒரு தொழிலில் இருந்து மற்றொரு தொழிலுக்கும் மாறிக்கொண்டே இருந்து, கடைசியாக மாறின காரியம்தான் ''உண்மையான காரியம்'' என்று நினைத்து, மேலும் மேலும் ஏமாற்றம் அடைகிறார்கள்.

2. ஏமாற்றமடைந்த ''புத்தியுள்ள மனிதனின்'' வழி – இவன் இந்த முழு காரியமும் ஒரு முட்டாள்தனம் என்று விரைவாகவே தீர்மானித்துவிடுகிறான். ''நிச்சயமாக ஒருவன் இளமையில் அப்படி நினைப்பதுண்டு, ஆனால் அவன் என்னுடைய வயதுக்கு

வரும்பொழுது வானவில்லின் பின்னால் ஓடுவதை நிறுத்தி விடுகிறான்'' என்று அவன் சொல்லுகிறான். ஆதலால் அவன் தன்னை ஒருநிலைப்படுத்தி அமர்ந்து, எதிலும் அதிகம் எதிர்பார்க்கக்கூடாது என்று கற்றுக் கொள்ளுகிறான். ''நிலா வேண்டும்''[1] என்று கூக்குரலிடுகிற தன்னுடைய பகுதியை அவன் கீழே அமுத்தி அடக்கி விடுகிறான். நிச்சயமாக இது, அந்த முதல் வழியைக் காட்டிலும் மிகவும் மேலானது ஆகும். இது ஒரு மனிதனை அதிக சந்தோஷமாகவும், சமூகத்துக்கு ஒரு தொந்தரவாக இருப்பதைக் குறைக்கிறதாகவும் இருக்கிறது. இது அவனை அகங்காரியாக மாற்றக்கூடும் (அவன், இளம் பருவத்தினருக்கு மேலாகத் தன்னைத் தான் உயர்த்திக் கொள்ளுவான்). ஆனால் மொத்தமாகப் பார்க்கும் பொழுது, இவன் மற்றவர்களுடன் மிக நன்றாகவே ஒத்துப் போய்விடுவான். மனிதன் என்றென்றைக்கும் வாழாதவனாக இருந்தால், இது நாம் எடுக்கக்கூடிய சிறந்த அணுகுமுறையாகும். ஆனால் ஒருவேளை எல்லையில்லாத மகிழ்ச்சி என்று ஒன்று உண்மையாகவே நமக்காக காத்திருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஒருவன் நிஜமாகவே வானவில்லைப் பிடிக்கமுடியும் என்று வைத்துக்கொள்வோம். அப்படி ஒரு நிலை இருக்குமானால், நம்முடைய இந்த ''பொதுவான புத்தியின்'' மூலமாக, அந்த ஒரு மகிழ்ச்சியை நாம் அனுபவிக்க முடியாதபடி, நம்மை நாமே தடுத்துவிடுவோம் என்பதை, மிகவும் காலம் தாழ்த்தியே (நாம் மரித்து அடுத்த நொடி) தெரிந்துகொள்வோம் என்பது வருத்தத்திற்குறியது ஆகும்.

<u>3. கிறிஸ்தவ வழி</u> – கிறிஸ்தவன் இவ்வாறு சொல்லுகிறான், ''உயிரினங்கள் தங்களுடைய ஆசைகள் திருப்திப்படுத்தப்படும் வழிகள் இல்லாமல், அவைகளோடு பிறப்பதில்லை''. ஒரு குழந்தைக்கு பசிக்கிறது, அதற்கு உணவு என்று ஒன்று இருக்கிறது. ஒரு வாத்துக்குஞ்சு நீந்த விரும்புகிறது, அதற்கு தண்ணீர் என்று ஒன்று இருக்கிறது. மனிதனுக்கு பாலியல் ஆசை ஏற்படுகிறது, அதற்கு பாலியல் உறவு என்று ஒன்று இருக்கிறது. இந்த உலகத்தில் எந்த அனுபவமும் திருப்தி செய்யமுடியாத ஒரு ஆசையை, எனக்குள் நான் கண்டேனென்றால், அதற்குரிய சிறந்த சாத்தியமான விளக்கம், நான் மற்றொரு உலகத்துக்காக உருவாக்கப்பட்டேன் என்பதுதான். உலகத்திலுள்ள எந்த இன்பமும் அதை திருப்தி செய்யவில்லை என்றால், அதற்காக இந்த பிரபஞ்சம் ஒரு போலியானது என்று அர்த்தம் அல்ல. அநேகமாக, உலகத்திலுள்ள இன்பங்கள் எதுவும் அதை திருப்தி செய்யும்படியாக ஏற்படுத்தப்படாமல், அதைத் தூண்டும்படியாகவும், அந்த உண்மையான காரியத்தை பரிந்துரை செய்யும்படியாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கக்கூடும் என்பதுதான். காரியம் இப்படியாக இருக்குமானால், நான் மிகவும் கவனமாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஒரு பக்கம், இந்த உலகத்திலுள்ள ஆசீர்வாதங்களை நான் இழிவாகவோ, அவைகளுக்காக நன்றியுணர்வில்லாதவனாகவோ இருக்கக்கூடாது என்றும், மற்றொரு பக்கம், அவைகள் எந்த காரியத்தின் நகலாகவும், எதிரொலியாகவும், கானல் நீராகவும் மட்டுமே இருக்கின்றனவோ, அந்த காரியத்தை, இவைகளோடு குழப்பிக் கொள்ளக்கூடாது

1 to cry for the moon– சாதிக்கமுடியாத ஒன்றை அடையவிரும்புவது

என்றும், நான் கவனமாய் இருக்கவேண்டும். நான் இறந்தபிறகு, என்னால் காணமுடியாத, என்னுடைய தேசத்துக்காக நான் கொண்டிருக்கிற ஆசையை, நான் எனக்குள் எப்பொழுதும் உயிரோடு வைத்துக்கொள்ளவேண்டும். நான் அதை ஒருபோதும் குளிர்ந்து போகவிடவோ அல்லது ஒதுக்கிவிடவோ கூடாது. நான் அதை என் வாழ்க்கையின் முக்கியமான குறிக்கோளாக வைத்து, அந்த மற்றொரு தேசத்துக்கு முன்னேறவும், மேலும் மற்றவர்களும் அப்படியே செய்வதற்கு உதவி செய்யவும்வேண்டும்.

''தங்களுடைய நித்திய வாழ்க்கையை, யாழை வாசித்துக்கொண்டு கழிக்க விரும்பவில்லை'' என்று சொல்லி, கிறிஸ்தவ நம்பிக்கையான ''மோட்சத்தை'' கேலிசெய்ய முயற்சிக்கிற பரியாசக்கார மனிதர்களைப் பற்றி, நான் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்ட மனிதர்களுக்குரிய பதில், பெரியவர்கள் வாசிக்கும்படியாக எழுதப்பட்ட புத்தகங்களை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், அதைக்குறித்து அவர்கள் பேசவும்கூடாது என்பதுதான். வேதத்திலுள்ள உருவங்களின் தொகுப்பு யாவும் (யாழ், கிரீடம், தங்கம் ஆகியவை), நிச்சயமாக விவரிக்கமுடியாத ஒரு காரியத்தை, வெறுமனே அடையாளங்களைக் கொண்டு விவரிக்கும்படியாக எடுக்கப்பட்ட முயற்சியே ஆகும். இசைக்கருவிகள் ஏன் குறிப்பிடப்படுகின்றனவென்றால், பல மனிதர்களுக்கு (எல்லோருக்கும் அல்ல) இந்த வாழ்க்கையில் அறிந்துகொண்ட காரியங்களில், பரவசத்தையும் முடிவில்லாமையையும், மிகவும் வலுவாக எடுத்துக்காட்டுவதாக, இசை இருப்பதனால்தான். கிரீடங்கள் குறிப்பிடப்படுவதன் காரணம் என்னவென்றால், தேவனோடு நித்தியத்தில் இணைந்தவர்கள், அவருடைய மகிமையையும் வல்லமையையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளப்போகிறார்கள் என்கிற உண்மையை, அது எடுத்துக்காட்டுகிறதாயிருக்கிறது என்பதால். தங்கம் குறிப்பிடப்படுவதன் காரணம், மோட்சத்தினுடைய காலத்தால் அழியாத தன்மையையும் (தங்கம் துருப்பிடிப்பதில்லை), அதனுடைய விலையேறப்பெற்ற தன்மையையும் பரிந்துரைக்கும்படியாகவே. இந்த அடையாளங்களை, அவைகளுடைய வார்த்தையின் நேரடிப் பொருளாக எடுத்துக்கொள்ளுகிற மனிதர்கள், கிறிஸ்து, நாம் புறாக்களைப் போல இருக்கவேண்டும் என்று கூறினபோது, நாம் அவைகளைப் போல முட்டையிடவேண்டும் என்கிற அர்த்தத்தில் கூறினார் என்பதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

# 11. விசுவாசம்

கிறிஸ்தவர்கள் ''விசுவாசம்''[1] என்று அழைக்கிறார்களே அதைக்குறித்து நான் இந்த அதிகாரத்தில் பேசியாக வேண்டும். பொதுவாக பேசும்போது ''விசுவாசம்'' என்கிற வார்த்தை கிறிஸ்தவர்களால் இரண்டு அர்த்தங்களில், இரண்டு நிலைகளில் பிரயோஜனப்படுத்தப்படுகிறது. நான் அதை ஒவ்வொன்றாக எடுத்துப் பேசப் போகிறேன். முதலாவது அர்த்தத்தில், அது சாதாரணமாக ''நம்பிக்கை''[2] எனப்படும் – அதாவது கிறிஸ்தவ கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வது அல்லது அவைகள் உண்மை என்று கருதுவது ஆகும். இது மிகவும் எளிமையாகத் தெரிகிறது. ஆனால் மனிதர்களுக்கு புதிராக இருக்கிற– குறைந்தபட்சம் எனக்குப் புதிராக இருந்த – ஒரு உண்மை என்னவென்றால், கிறிஸ்தவர்கள் இந்த விசுவாசத்தை ஒரு நற்குணமாக கருதுவதுதான். இது எந்தவகையில் ஒரு நற்குணமாக இருக்கமுடியும்? என்று நான் கேட்பதுண்டு. ஒரு அறிக்கைகளின் தொகுப்பை நம்புவதிலும், நம்பாமல் இருப்பதிலும், நன்மை தீமை என்று என்ன இருக்கமுடியும்? நான் வெளிப்படையாக இவ்வாறு சொல்வதுண்டு– ஒரு புத்தியுள்ள மனிதன் எந்த ஒரு அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். அது அவனுக்கு பிடித்திருக்கிறது அல்லது பிடிக்கவில்லை என்பதினால் அல்ல, அதனுடைய ஆதாரம் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருப்பதனால் அவ்வாறு செய்யலாம். அந்த ஆதாரத்தின் நன்மை அல்லது தீமை என்ற தன்மையை, அவன் தவறாகப் புரிந்துகொண்டால், அதற்காக அவன் கெட்ட மனிதன் என்பது அர்த்தம் அல்ல அவன் சற்று புத்தி குறைவானவன் என்பதைத்தான் அது குறிப்பிடுகிறது. ஒருவேளை அந்த ஆதாரம் கெட்டது என்று தெரிந்திருந்தும்கூட அதை நம்பியே ஆக வேண்டும் என்று தன்னைத் தானே அவன் வற்புறுத்தினானென்றால், அது வெறும் முட்டாள்தனம் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்த விதமான பார்வையைத்தான், நான் இப்பொழுதும் எடுத்துக்கொள்வதாக நினைக்கிறேன். ஆனால் நான் அப்பொழுது கவனிக்காத ஒரு காரியம் – மேலும் பல மனிதர்கள் இன்னும் பார்க்காத ஒரு காரியம் இதுதான்– மனிதனுடைய சிந்தனை ஒரு காரியத்தை உண்மை என்று ஒருமுறை ஏற்றுக்கொண்டுவிட்டால், அந்தக் காரியம் தவறு என்று சுட்டிக் காட்டப்படும்படியான உண்மையான காரணம் எழும் வரை, அது தன்னிச்சையாகவே அதைத் தொடர்ந்து சரி என்றே கருதிக்கொண்டிருக்கும், என்றுதான் நான் நினைத்தேன். உண்மையில் சொல்லப்போனால் மனித சிந்தனை முற்றிலும் பகுத்தறியும் திறனாலேயே ஆளப்படுகிறது என்று நான் நினைத்தேன். ஆனால் அது அப்படி அல்ல. உதாரணத்திற்கு மயக்க மருந்துகள் என்னை மூச்சுத்திணற வைப்பதில்லை என்றும், முறையாக பயிற்றுவிக்கப்பட்ட அறுவை சிகிச்சை நிபுணர்கள் நான் மயக்கமாகும் வரையில் அறுவை சிகிச்சையை துவக்குவதில்லை என்றும், நல்ல ஆதாரத்தினாலே என்னுடைய பகுத்தறிவு முற்றிலும் நம்புகிறது. ஆனால் என்னை

1 Faith
2 belief

அவர்கள் அந்த அறுவை சிகிச்சை மேஜையின் மேல் வைத்து அந்த பயங்கரமான முகமூடியை என்னுடைய முகத்தின் மேல் வைத்த உடனேயே, ஒரு முற்றிலும் குழந்தைத்தனமான பயம் எனக்குள் எழுகிறது என்கிற உண்மையை அது மாற்றுவதில்லை. எனக்கு மூச்சு முட்டப்போகிறது என்று நினைக்க ஆரம்பித்துவிடுகிறேன், மேலும் நான் மயக்கம் அடைவதற்கு முன்பே, அவர்கள் என்னை வெட்ட ஆரம்பித்து விடுவார்களோ என்றும் பயப்படுகிறேன். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், மயக்க மருந்துகளின் மேல் எனக்கு இருந்த விசுவாசத்தை நான் இழந்துவிடுகிறேன். என்னுடைய விசுவாசத்தை என்னிலிருந்து எடுத்துவிடுவது பகுத்தறியும் திறன் அல்ல, என் பகுத்தறிவின் அடிப்படையில் தான் என் விசுவாசமே இருக்கிறது. என்னுடைய விசுவாசத்தை எடுப்பது எதுவென்றால் என்னுடைய கற்பனையும் உணர்ச்சிகளும்தான். விசுவாசமும் பகுத்தறிவும் ஒரு பக்கமும், உணர்ச்சிகளும் கற்பனையும் இன்னொரு பக்கமுமாக, இவை இரண்டிற்கும் இடையில்தான் இந்த யுத்தம் நடக்கிறது.

இதைப் பற்றி நீங்கள் சிந்தித்தால், அநேக உதாரணங்களை பார்க்கமுடியும். ஒரு மனிதனுக்கு, தனக்கு அறிமுகமான ஒரு அழகான பெண்ணைப் பற்றி நன்றாகத் தெரியும். அவள் ஒரு பொய் பேசுபவள் என்றும், அவளால் ஒரு ரகசியத்தை வைத்துக்கொள்ள முடியாது என்றும், அவள் நம்பத்தக்கவள் அல்ல என்றும், மிகச் சரியான ஆதாரங்களின் மூலம், நன்றாகவே தெரியும். ஆனால், தான் அவளோடு இருக்கும்பொழுது, அவனுடைய சிந்தனை அவளைக் குறித்து தெரிந்துவைத்திருந்த, அந்த சிறிதளவு அறிவின் மேலுள்ள விசுவாசத்தை இழந்துவிட்டு, ''ஒருவேளை இந்த முறை அவளிடம் ஒரு மாற்றம் இருக்கும்'' என்று சிந்திக்க ஆரம்பித்து, சொல்லக்கூடாத ஒரு காரியத்தை அவளிடம் சொல்லி, மேலும் ஒரு முறை தன்னை முட்டாளாக்கிக் கொள்ளுகிறான். அவனுடைய புலன்களும் உணர்ச்சிகளும், அவன் உண்மை என்று நன்றாக தெரிந்துவைத்திருந்த காரியத்தின் மேல் உள்ள விசுவாசத்தை அழித்துவிடுகின்றன. அல்லது நீச்சல் பழகுகிற ஒரு சிறுவனை எடுத்துக்கொள்ளுங்கள். பிடித்துக்கொள்ள ஒரு ஆதாரம் இல்லாவிட்டால், ஒரு மனித உடல் தண்ணீரில் கண்டிப்பாக மூழ்கிவிடவேண்டும் என்ற அவசியம் இல்லை, என்பது அவனுடைய அறிவுக்கு மிக நன்றாகவே தெரியும். பல மனிதர்கள் மிதப்பதையும் நீந்துவதையும் அவன் பார்த்திருக்கிறான். ஆனால் இப்போதுள்ள முக்கியமான கேள்வி என்னவென்றால், அவனுக்குப் பயிற்சி அளிக்கிறவர், தன்னுடைய கரத்தை எடுத்துவிட்டு அவனை ஆதாரமில்லாமல் தண்ணீரில் விட்டுவிட்டால், அவன் தொடர்ந்து இந்த நம்பிக்கையை வைத்து இருப்பானா? – அல்லது அவன் தன்னுடைய நம்பிக்கையை விட்டுவிட்டு, பயந்துபோய் கீழே மூழ்க ஆரம்பித்து விடுவானா? என்பதுதான்.

இப்பொழுது இதே காரியம்தான் கிறிஸ்தவத்தைக் குறித்தும் நடக்கிறது. ஆதாரத்தின் கனம் எதிராக இருக்கிறது என்று, ஒருவனுடைய சிறந்த பகுத்தறிவுத் திறன் சொல்லும் பட்சத்தில், நான் ஒருவரையும் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கவில்லை. விசுவாசமானது, அந்தக் குறிப்பிட்ட இடத்தில் வருவதில்லை. ஆனால், ஒருவேளை ஒரு

மனிதனுடைய பகுத்தறிவு, ஆதாரத்தின் கனம் அதற்கு ஆதரவாக இருக்கிறது என்று தீர்மானிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது, அடுத்த சில வாரங்களிலே அவருக்கு என்ன நடக்கக்கூடும் என்று என்னால் அந்த மனிதனிடம் சொல்லமுடியும். அவருக்கு கெட்ட செய்தியாக இருக்கக்கூடிய ஒரு தருணம் வரலாம், அல்லது அவர் ஒரு பிரச்சனையில் சிக்கி கொள்ளலாம், அல்லது அந்தக் காரியத்தை நம்பாத அநேக மனிதர்களின் மத்தியில் அவர் வாழலாம். இப்படியிருக்கும்பொழுது, உடனேயே அவருடைய உணர்ச்சிகள் எழும்பி அந்த நம்பிக்கைக்கு எதிராக வெடித்துச் சிதறும். இல்லையென்றால் ஒரு பெண்ணின் மேல் ஆசைப்படுகிற தருணமோ, அல்லது ஒரு பொய் சொல்லவேண்டிய ஒரு தருணமோ, தன்னைக் குறித்து மிகவும் பெருமைபட்டுக் கொள்ளுகிற ஒரு தருணமோ, அல்லது ஒரு தவறான வழியில் சிறிது பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்புள்ள ஒரு தருணமோ வரும்போது, அந்தத் தருணத்தில், நிச்சயமாக, கிறிஸ்தவம் உண்மையாக இல்லாமல் இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும் என்பதுபோல இருக்கும். மறுபடியும் அவருடைய ஆசைகளும் விருப்பங்களும் வெடித்துச் சிதறும். கிறிஸ்தவத்திற்கு எதிரான புது காரணங்கள் எழும்பக்கூடிய தருணங்களை குறித்து நான் இங்கு பேசவில்லை. அவைகளும் எதிர்கொள்ளப்பட வேண்டியவை தான், ஆனால் அவை முற்றிலும் வேறுபட்ட காரியம் ஆகும். நான் பேசிக்கொண்டிருப்பது எதைப்பற்றி என்றால், சாதாரணமாக நம்முடைய மனநிலை[1] அதற்கு எதிராக எழுவதைக் குறித்து தான்.

விசுவாசம் என்கிற அந்த வார்த்தையை, இப்பொழுது நான் எந்த அர்த்தத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேனென்றால், உங்களுடைய பகுத்தறிவு ஒரு முறை ஏற்றுக்கொண்ட அந்தக் காரியத்தை, உங்கள் மனநிலை மாறும் பட்சத்திலும் நீங்கள் கெட்டியாக பிடித்துக் கொண்டிருக்கும் கலை என்கிற அர்த்தத்தில்தான். உங்கள் பகுத்தறிவு எந்த கோணத்தை ஏற்றுக்கொண்டாலும், உங்கள் மனநிலை மாறிக்கொண்டே தான் இருக்கும். அது என்னுடைய அனுபவத்தின் மூலம் நான் தெரிந்துகொண்டது. இப்பொழுது நான் ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதினால், இந்த முழு காரியமும் சாத்தியமல்லாததைப் போலத் தோன்றுகிற மனநிலை எனக்கும் வருவதுண்டு. ஆனால் நான் ஒரு நாத்திகனாக இருந்தபோது, கிறிஸ்தவம் ஒரு பயங்கரமான விதத்தில் சாத்தியமாக இருக்கும் என்கிற தோற்றமுடையதாய் இருப்பதைப் போன்ற மனநிலை எனக்கு இருந்தது. உங்களுடைய உண்மையான சுயத்துக்கு எதிராக உங்களுடைய மனநிலை இருக்கக்கூடிய இந்தப் போராட்டம், நிச்சயமாக எப்படியாவது வந்தே ஆகும். அதனால் தான் விசுவாசம் என்பது மிகவும் அவசியமான ஒரு நற்குணமாகும்: உங்களுடைய மனநிலை எந்த இடத்தில் ஒதுங்கி நிற்க வேண்டும் என்று நீங்கள் அதற்கு கற்பிக்காத வரையில், நீங்கள் ஒரு நல்ல கிறிஸ்தவனாகவும் இருக்கமுடியாது, ஒரு நல்ல நாத்திகனாகவும் இருக்கமுடியாது. வெறும் வானிலையையும், தன்னுடைய செரிமானத்தின் நிலையையும், தன்னுடைய

1 mood

நம்பிக்கையின் அடிப்படையாகக் கொண்ட, அங்கும் இங்கும் அலைபாய்ந்து கொண்டிருக்கிற ஒரு உயிரினமாக மட்டுமே நீங்கள் இருக்கமுடியும். ஆதலால், ஒருவர் தன்னுடைய விசுவாசத்தை ஒரு பழக்கமாக பயிற்றுவிக்க வேண்டியது அவசியமாகும்.

இதன் முதல் படி, நம்முடைய மனநிலைகள் மாறக்கூடியவை என்ற உண்மையை நாம் கண்டுகொள்வதுதான். நீங்கள் கிறிஸ்தவத்தை, ஒருமுறை ஏற்றுக் கொண்டுவிட்டீர்களானால், பின்னர் அதனுடைய முக்கியக் கோட்பாடுகளை, ஒவ்வொரு நாளும் உங்கள் சிந்தனையில் சில மணிநேரங்களுக்கு கட்டாயமாக நிறுத்திக் கொள்ளவேண்டும் என்பதை, நீங்கள் உறுதிப்படுத்துவதுதான் இதன் அடுத்த படியாகும். அதனால்தான் ஒவ்வொரு நாளும் ஜெபிப்பதும், வேதாகமத்தை வாசிப்பதும், தேவாலயத்துக்கு செல்வதும் கிறிஸ்தவ வாழ்க்கையின் அவசியமான பகுதிகளாய் இருக்கின்றன. நாம் எதின் மேல் நம்பிக்கை கொண்டிருக்கிறோமோ, அதைத் தொடர்ந்து நமக்கு நினைவுபடுத்திக் கொண்டேயிருக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த நம்பிக்கையோ, அல்லது வேறு எந்த நம்பிக்கையோ, எதுவாக இருந்தாலும் அது தன்னைத்தானே நம்முடைய சிந்தனையில், தன் உயிரோட்டத்தோடு நிலை நிறுத்திக்கொள்ளாது. அதற்கு உணவு ஊட்டப்பட வேண்டும். உண்மையில், கிறிஸ்தவத்தின் மேல் தங்கள் நம்பிக்கையை இழந்த, நூற்றுக்கணக்கான மக்களை சோதித்துப் பார்க்கும்போது, அதில் எத்தனை பேர் தங்கள் பகுத்தறிவில் எழுந்த ஒரு நியாயமான தர்க்கத்தின் விளைவாக, அதிலிருந்து விலகி வந்தார்கள்? என்று நான் சிந்திக்கிறேன். அநேக மனிதர்கள், வெறுமனே விலகிப்போய் விடுகிறார்கள் அல்லவா?

இப்பொழுது நான் விசுவாசத்தின் இரண்டாவது மற்றும் மேலான அர்த்தத்துக்கு திரும்ப வேண்டியுள்ளது. நான் இதுவரை சமாளித்த எல்லா காரியங்களையும்விட, இது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கிறது. தாழ்மை என்ற பகுதிக்கு மீண்டும் திரும்பச்சென்று, நான் இதை எதிர்கொள்ள விரும்புகிறேன். தாழ்மைக்கு நேரான முதல்படி, ஒருவர் பெருமையாய் இருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்வது தான் என்று நான் உங்களுக்கு சொன்னதை நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடும். இப்பொழுது அதனோடுகூட நான் சொல்ல விரும்புவது எதுவென்றால், இதனுடைய அடுத்த படியாக, கிறிஸ்தவ ஒழுக்கங்களை நீங்கள் பின்பற்ற சில தீவிரமான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதுதான். ஒரு வார காலம் போதாது. முதல் வாரத்திலே, காரியங்கள் பெரும்பாலும் நீந்திச் செல்வதைப் போலத் தெரியும். ஆறு வாரங்களுக்கு முயற்சி செய்யுங்கள். அந்தக் காலத்துக்குள் எப்படியும், ஒருவர் தன் பார்வைக்கு, தான் முற்றிலும் விழுந்து விட்டதையோ அல்லது தான் துவங்கின இடத்திலிருந்து சற்று கீழாக வந்துவிட்டதையோ பார்க்கமுடியும். மேலும் இதிலிருந்து, தன்னைக் குறித்து சில உண்மைகளை அவர் கண்டறிய முடியும். ஒரு மனிதன் நல்லவனாக இருப்பதற்கு கடின முயற்சி எடுக்க ஆரம்பிக்கும் வரையிலும், தான் எவ்வளவு கெட்டவனாக இருக்கிறான் என்பதை அறியமுடியாது. ‘நல்ல மனிதர்களுக்கு சோதனைகள் என்றால் என்னவென்றே தெரியாது’ என்கிற முட்டாள்தனமான ஒரு சிந்தனை இப்பொழுது பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது ஒரு வெளியரங்கமான

பொய் ஆகும். சோதனைகளை எதிர்த்துப் போராட முயற்சிக்கிற ஒருவரால் தான், அது எவ்வளவு வலிமையானது என்பதை தெரிந்து கொள்ளமுடியும். ஜெர்மானிய படையின் வலிமையை, அதற்கு எதிராகப் போரிடுவதின் மூலமாகத்தான் தெரிந்து கொள்ளமுடியும். அதனிடத்தில் சரணடைவதினால் அல்ல. எதிர்காற்றின் வலிமையை அறிந்துகொள்ள நீங்கள் அதற்கு எதிராக நடக்க முயற்சிக்க வேண்டும். கீழே படுத்துக் கொள்வதினால் அல்ல. ஐந்து நிமிடங்களிலேயே சோதனைக்கு அடிபணிகிற ஒரு மனிதனுக்கு, ஒரு மணி நேரம் கழித்து அந்த போராட்டம் எப்படி இருந்திருக்கக்கூடும் என்பது தெரியாது. அதனால்தான் ஒரு விதத்தில் கெட்ட மனிதர்கள், தீமையைப் பற்றி மிகவும் குறைவாகவே அறிந்திருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுதும் அடிபணிந்து கொண்டே இருப்பதினால், ஒரு பிரச்சனையில்லாத வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நமக்குள் இருக்கிற அந்தத் தீமையான உந்துதல்களுக்கு எதிராக நாம் சண்டையிட முயற்சிக்காமல் இருக்கும்வரையில், அவைகளின் பலத்தை தெரிந்துகொள்ளவே முடியாது: கிறிஸ்து, தீமைக்கு ஒருபோதும் அடிபணியாத ஒரே மனிதனாய் இருந்ததனால் தான், சோதனை என்பது என்ன என்று முழுமையாக அறிந்த ஒரே மனிதனாகவும் அவர் இருக்கிறார்– ஒரே முழுமையான யதார்த்தவாதி அவரே. நல்லது. ஆக, கிறிஸ்தவ ஒழுக்கங்களை பின்பற்ற, நாம் எடுக்கிற தீவிரமான முயற்சிகளிலிருந்து, நாம் தெரிந்துகொள்ளுகிற முக்கியமான காரியம் என்னவென்றால், நாம் தோல்வி அடைகிறோம் என்பதுதான். தேவன், நமக்கு ஏதோ ஒரு வகையான தேர்வை வைத்து, நாம் அதில் தகுதியான நல்ல மதிப்பெண்களை பெறக்கூடிய வகையில் செய்கிறார், என்பது போன்ற சிந்தனை ஏதும் இருந்தால், அது முற்றிலும் துடைத்து எறியப்பட வேண்டியதாகும். பேரம் பேசுவது போன்ற சிந்தனை ஏதும் இருக்கும் என்றால்– அதாவது ஒப்பந்தத்தில் நம்முடைய பகுதியை நாம் நிறைவேற்றி, இதன் மூலம் தேவனை நம்முடைய கடன்களை செலுத்துகிற நபராகவும், ஆதலால் அவருடைய பகுதியை நியாயமாக செய்வது அவருக்கு உரியது என்பது போலவும் ஏதாவது சிந்தனை இருக்கும் என்றால்– அது முற்றிலும் துடைத்தெறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

தேவனைக் குறித்த மேலோட்டமான நம்பிக்கையுள்ள யாவரும், ஒரு கிறிஸ்தவனாகும் வரையிலும், ஒரு தேர்வை போலவோ அல்லது ஒரு பேரம் பேசுவதை போன்ற ஒரு யோசனையையோ தான் தங்கள் மனதில் வைத்திருப்பார்கள். உண்மையான கிறிஸ்தவத்தின் முதல் விளைவு, அந்த யோசனையை தவிடுபொடியாக்குவது தான். அப்படி அந்த யோசனை தவிடுபொடியாவதைக் காணும்போது, சிலர் கிறிஸ்தவம் தோற்றுப்போன ஒன்று என்று நினைத்து, அதை விட்டுவிடுவார்கள். தேவன் மிகவும் எளிமையான சிந்தனையுள்ளவர் என்பதுபோல அவர்கள் கற்பனை செய்கிறார்கள். உண்மையில் இவையெல்லாம் அவருக்கு நிச்சயமாகத் தெரியும். கிறிஸ்தவம் அமைக்கப்பட்டதின் ஒரு முக்கிய காரணமே, இந்த யோசனையை தவிடு பொடியாக்குவது தான். நீங்கள் தேர்வில் வெற்றி பெறுவீர்களா அல்லது அவரை உங்கள் கடனாளி ஆக்குவீர்களா என்ற கேள்வியே இதில் இல்லை என்று, நீங்கள் கண்டறியும் அந்தத் தருணத்திற்காக தேவன் காத்துக் கொண்டிருக்கிறார்.

இதற்குப் பின்பு மற்றொரு கண்டுபிடிப்பு வருகிறது. நீங்கள் சிந்திக்கிற ஒவ்வொரு திறனும், உங்கள் கைகால்களை ஒவ்வொரு நொடியும் அசைக்கிற அந்த திறனும், இவையெல்லாம் தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது. உங்கள் முழு வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும், அவருடைய சேவைக்கென்று நீங்கள் அர்ப்பணித்தாலும், அவருக்கு ஏற்கனவே சொந்தம் அல்லாத புதிதான எதையும் நீங்கள் அவருக்குக் கொடுக்கமுடியாது. ஆதலால் ஒரு மனிதன் தேவனுக்கென்று எதையும் செய்வதுபோலவோ அல்லது தேவனுக்கென்று எதையும் கொடுப்பதுபோலவோ நாம் பேசும்போது, அது எப்படி இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அது ஒரு சிறு குழந்தை தன்னுடைய தகப்பனிடம் சென்று ‘‘அப்பா உங்களுக்கு பிறந்தநாள் பரிசு வாங்க எனக்கு ஆறு ரூபாய் கொடுங்கள்’’ என்று கேட்பதுபோல இருக்கிறது. நிச்சயமாகவே அந்த தகப்பன் கொடுப்பார், அந்தக் குழந்தை பரிசு வாங்க நினைத்ததை எண்ணி மகிழ்ச்சியும் அடைவார். இவையெல்லாம் மிகவும் இனிமையாகவும் சரியானதாகவும் தோன்றினாலும், அந்த தகப்பன், ஆறு ரூபாய் மதிப்பான அந்த பரிவர்த்தனையினால் லாபமடைந்தார் என்று ஒரு முட்டாள் மட்டுமே சிந்திப்பான். இந்த இரண்டு கண்டுபிடிப்புகளையும் ஒரு மனிதன் அறிந்துகொண்ட பின்பு, தேவன் முழுமூச்சாக வேலையில் இறங்குவார். இதற்குப் பிறகுதான் உண்மையான வாழ்க்கை ஆரம்பிக்கிறது. அந்த மனிதன் இப்பொழுது நல்ல விழிப்போடு இருக்கிறான். நாம் விசுவாசம் என்ற வார்த்தையின் இரண்டாவது அர்த்தத்தைப் பார்க்க, இப்பொழுது தொடங்கலாம்.

# 12. விசுவாசம்

எல்லோரும் மிகவும் கூர்ந்து கவனிக்கவேண்டிய ஒரு காரியத்தைக் கூறி, நான் துவக்க விரும்புகிறேன். அது இதுதான். இந்த அதிகாரம், உங்களுக்கு தேவை இல்லாததாகத் தோன்றினால், நீங்கள் கேட்காத சில கேள்விகளுக்கு பதில் கொடுக்க அது முயற்சிக்கிறது போல உங்களுக்குத் தோன்றினால், இதை உடனடியாக விட்டுவிடுங்கள். இதைக்குறித்து எந்தக் கவலையும் படாதீர்கள். கிறிஸ்தவத்தில் உள்ள சில காரியங்கள், நீங்கள் கிறிஸ்தவனாக ஆகும் முன்பே, வெளியில் இருந்து புரிந்து கொள்ளக்கூடியவையாக இருக்கும். ஆனால் நிறைய காரியங்களை, கிறிஸ்தவ பாதையில், நீங்கள் சிறிது தூரம் செல்லும் வரைக்கும், உங்களால் புரிந்து கொள்ளமுடியாது. இவைகள் பார்ப்பதற்கு அவ்வாறாக தோன்றாவிட்டாலும், முழுக்க முழுக்க நடைமுறை சம்மந்தப்பட்ட காரியங்களாய் இருக்கின்றன. இவை (கிறிஸ்தவ) பிரயாணத்தில் உள்ள குறிப்பிட்ட சாலை சந்திப்புகளையும், தடைகளையும் எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் ஆகும். அப்படிப்பட்ட இடங்களை நாம் சென்று அடையாதவரை, அவைகள் அர்த்தமற்றவைகளாய் இருக்கின்றன. கிறிஸ்தவ எழுத்துக்களில் (இலக்கியங்களில்) உள்ள சில அறிக்கைகள், உங்களுக்கு ஒன்றுமே புரியாததாகத் தெரிந்தால், அதைக்குறித்து கவலைப்படாதீர்கள். அதை விட்டுவிடுங்கள். திடீரென்று, அதனுடைய அர்த்தம் இதுதான் என்று நீங்கள் கண்டுகொள்ளுகிற ஒரு நாள், ஒருவேளை அது பல வருடங்கள் கழித்துக்கூட இருக்கலாம், அது நிச்சயம் வரும். அதை ஒருவர் இப்போதே புரிந்துகொண்டால், அது அவரை காயப்படுத்துவதாகத் தான் இருக்கும்.

இவையெல்லாம், நிச்சயமாக மற்றவர்களைப் போல, எனக்கும் எதிராகத்தான் சொல்லப்படுகிறதாக இருக்கிறது. இந்த அதிகாரத்தில் நான் விளக்க முயற்சிக்க போகிற அந்த காரியம் எனக்கு முன்பாக வெகுதூரத்தில் இருக்கலாம். நான் அந்த இடத்தை அடையாதபோதும், அந்த இடத்தை அடைந்துவிட்டதாக நான் நினைக்கக்கூடும். கற்றுத் தேர்ந்த கிறிஸ்தவர்களை, என்னை மிகவும் கவனமாக கவனித்து, நான் தவறாக செல்லும்போது, எனக்குச் சொல்லும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்; மற்றவர்கள் நான் சொல்லுவதை தீவிரமாக சிந்தித்து[1] எடுத்துக்கொள்ளும்படியாக கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக நான் சொல்லுவது சரி என்று நான் நினைப்பதினால் அல்ல, உங்களுக்கு வழங்கப்பட்ட ஒன்று, உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும் என்பதனால், அதை எடுத்துக்கொள்ளும்படியாகச் சொல்லுகிறேன்.

நான் விசுவாசத்தைக் குறித்து, அதனுடைய இரண்டாவது, உயர்ந்த அர்த்தத்தில் பேச முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு மனிதன் கிறிஸ்தவ ஒழுக்கங்களை தன்னால் முடிந்தமட்டும் சிறப்பாக நடைமுறைப்படுத்த முயற்சிசெய்து, அதில் தான் தோல்வியுற்றதை காணும்போதும், அப்படி தோல்வியுறாவிட்டாலும், தேவனுக்கு

1 Take it with a grain of salt

அவருக்கு ஏற்கனவே சொந்தமான ஒன்றைத்தான் அவனால் கொடுக்கமுடியும் என்பதையும் பார்க்கும்பொழுதுதான், இந்த அர்த்தத்தில் உள்ள விசுவாசம் எழுகிறது என்று இதற்கு முன்பாகக் கூறினேன். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், தான் திவால் ஆனதை அவன் கண்டறிகிறான். இப்போது மறுபடியுமாக, தேவன் கவலைப்படுவது நம்முடைய செயல்களைக் குறித்தே அல்ல. அவர் எதைக்குறித்து கவலைப்படுகிறார் என்றால், நாம் ஒருவகையான அல்லது ஒரு தரமான உயிரினங்களாய் இருக்கவேண்டும் – அதாவது, நாம் எப்படி இருக்கவேண்டும் என்று அவர் நினைத்தாரோ அந்த வகையான உயிரினங்களாய்– ஒரு குறிப்பிட்ட வகையிலே அவரோடு உறவுள்ள உயிரினங்களாய் இருக்கவேண்டும் என்றுதான். மேலும் ‘‘மற்றவர்களோடும் ஒரு குறிப்பிட்ட வகையிலே உறவு உடையவர்களாய் இருக்கவேண்டும்’’ என்பதை நான் சேர்த்துச் சொல்லவில்லை. ஏனென்றால் அதுவும் அதனோடு உள்ளடங்கியதுதான்: நீங்கள் அவரோடு சரியான உறவிலே இருப்பீர்களென்றால், தவிர்க்கமுடியாத வகையிலே மற்ற சகஉயிரினங்களோடும் நீங்கள் சரியான உறவிலேதான் இருப்பீர்கள். எப்படி ஒரு சக்கரத்தில் உள்ள ஆரங்கள் எல்லாம் மையத்தோடும், விளிம்போடும் சரியான முறையிலே பொருந்தி இருந்தால், நிச்சயமாக அவைகள் ஒன்றுக்கொன்றும் சரியான நிலையில்தான் பொருந்தியிருக்குமோ, அதைப் போல. ஒரு மனிதன் தேவனை, தன்னை தேர்வு எழுதும்படியாக சொன்ன ஒரு தேர்வாளராகவோ, அல்லது ஒரு வகையான பேரம்பேசுகிற ஒரு எதிர்க்கட்சியாகவோ பார்க்கும் வரையில்– தனக்கும் தேவனுக்கும் இடையே கேட்கப்படுகின்ற, உரிமைகளையும் எதிர்உரிமைகளையும் சிந்திக்கும் வரையில்– அவரோடு அவன் இன்னும் சரியான உறவில் இல்லை. தான் யார் என்பதையும், தேவன் யார் என்பதையும் அவன் தவறாக புரிந்துகொண்டிருக்கிறான். நாம் திவாலான உண்மையை அவன் கண்டுபிடிக்கும் வரைக்கும் அவன் தேவனோடு சரியான உறவிலே இருக்கமுடியாது.

நான் ‘‘கண்டுபிடிப்பது’’ என்று சொல்லும்போது, உண்மையாகவே கண்டுபிடிப்பது என்கிற அர்த்தத்தில்தான் சொல்லுகிறேன்: கிளிப்பிள்ளை சொல்லுவதைபோல (அர்த்தமில்லாமல்) வெறுமனே மீண்டும் மீண்டும் திரும்பச் சொல்லவில்லை. நிச்சயமாக எந்தக் குழந்தையும், அதற்கு மதத்தைக் குறித்த கல்வி சிறிதளவு வழங்கப்பட்டால், தேவனுக்கு சொந்தம் இல்லாத எதையும் அவருக்கு வழங்கும் அளவிற்கு நம்மிடம் ஒன்றும் இல்லை என்பதையும், அப்படியே நாம் வழங்கினாலும், நமக்கென்று சிலவற்றை வைத்துக்கொள்ளாமல், அவருக்கு முழுவதையும் கொடுப்பதில் நாம் தவறிவிடுகிறோம் என்பதையும், வெகு சீக்கிரத்திலேயே சொல்ல பழகிக்கொள்ளும். ஆனால் உண்மையாகவே இதை கண்டுபிடிப்பதைக் குறித்து நான் பேசிக்கொண்டிருக்கிறேன்: நம்முடைய அனுபவத்தின் மூலம் இது உண்மை என்பதை உண்மையாகக் கண்டுபிடிப்பதைக் குறித்து.

தேவனுடைய கட்டளைகளை கைகொள்வதில், நாம் தோல்வியடைகிறோம் என்பதை, நாம் மிகவும் கடினமாக முயற்சிசெய்து, அதில் தோற்றுப்போவதின் மூலமாகவே ஒழிய, வேறு எவ்விதத்திலும் கண்டுபிடிக்கமுடியாது. நாம் உண்மையாகவே முயற்சி செய்து பார்த்தால் தவிர, நாம் என்ன கூறினாலும், நம்முடைய சிந்தனையின் பின்பகுதியில், நாம் முற்றிலும் நல்லவர்களாக இருப்பதற்கு, அடுத்த முறை இன்னும் கடுமையாக முயற்சி செய்தால், நம்மால் வெற்றி பெறமுடியும் என்கிற யோசனை இருந்து கொண்டேயிருக்கும். ஆதலால் ஒரு வகையிலே, தேவனிடம் திரும்பிச் செல்லுவதற்குறிய பாதையானது, நாம் மேன்மேலும் கடினமாக முயற்சி செய்கிற, ஒரு ஒழுக்கத்தின் முயற்சி நிறைந்த பாதையாகும்.

ஆனால் இன்னொரு வகையிலே, நாம் சென்றடையவேண்டிய வீட்டிற்கு, நம்மை அழைத்து வருவது, ஒருபோதும் நம்முடைய முயற்சிகள் அல்ல. இந்த எல்லா முயற்சிகளும் நம்மை ஒரு முக்கியமான தருணத்துக்கு நடத்திச் செல்கிறது. அந்த தருணத்தில் நீங்கள் தேவனிடம் திரும்பி ‘‘நீங்கள் தான் இதை செய்யவேண்டும் என்னால் முடியவில்லை’’ என்று சொல்லுவீர்கள். ‘‘அந்த தருணத்தை நான் அடைந்து விட்டேனா?’’ என்று உங்களை நீங்களே கேள்வி கேட்க ஆரம்பித்து விடாதீர்கள் என்று நான் மன்றாடி கேட்டுக்கொள்கிறேன். உட்கார்ந்து கொண்டு உங்களுடைய சிந்தனைகளில் முன்னேற்றம் இருக்கின்றதா என்று பார்க்க ஆரம்பிக்காதீர்கள். அது ஒரு மனிதனை மிகத் தவறான பாதையில் நிறுத்திவிடும். நம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமான காரியங்கள் நடந்து கொண்டிருக்கும்போது, அந்தத் தருணத்தில் அது நடக்கிறது என்பதை பெரும்பாலும் நாம் அறிவதில்லை. ஒரு மனிதன் ‘‘இங்கே பார்! நான் வளர்ந்து கொண்டிருக்கிறேன்’’ என்று தன்னிடம் ஒருபோதும் சொல்லிக் கொள்வதில்லை. பெரும்பாலும் அவன் திரும்பிப்பார்த்து, பின்பு அது நடந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு, மற்ற மனிதர்கள் ‘‘வளர்ந்துவிட்டான்’’ என்று சொல்லுவார்களே, அதை அடையாளம் கண்டுகொள்ளுகிறான். இதை நீங்கள் சாதாரண விஷயங்களில் கூட காணமுடியும். ஒரு மனிதன், தான் தூங்கப் போகிறானா இல்லையா என்பதை மிகவும் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தால், அவன் அநேகமாக முற்றிலும் விழித்தே இருப்பான்.

இதே போல, நான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிற இந்த காரியமும் – புனித பவுலுக்கோ[1] பன்யனுக்கோ[2] நடந்த விதமாக– எல்லோருக்கும் ஒரு மின்னலைப் போல திடீரென்று நடந்து விடுவதில்லை. ஒருவர் இந்த குறிப்பிட்ட மணிநேரத்தில் அல்லது இந்த குறிப்பிட்ட வருடத்தில், என்று குறிப்பிட்டு சொல்லமுடியாத அளவுக்கு, அது மிகவும் படிப்படியாக நடக்கக்கூடும். அந்த மாற்றத்தின் இயல்புதான் இங்கு மிக முக்கியமானதே தவிர, அது நடக்கும்பொழுது நாம் எப்படி உணர்கிறோம் என்பது அல்ல. என் சொந்த முயற்சியினால் செய்யமுடியும் என்கிற அந்த தைரியத்திலிருந்து,

1 Paul
2 Bunyan

என்னால் எனக்காக, ஒன்றும் செய்துகொள்ள முடியாது என்கிற அந்த விரக்தியின் நிலையை அடைந்து, பின்னர் தேவனிடம் அதை விட்டுவிடுவதுதான் அந்த மாற்றமாகும்.

''தேவனிடம் விட்டுவிடுவது'' என்கிற வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ளப்படக்கூடியவை என்பது எனக்குத் தெரியும் என்றாலும், இந்த நேரத்திலே அவைகளைச் சொல்லியாக வேண்டும். ஒரு கிறிஸ்தவன், தேவனிடத்தில் விட்டுவிடுகிறான் என்பதின் அர்த்தம் என்னவென்றால், அவன் தன்னுடைய முழு நம்பிக்கையையும், கிறிஸ்துவின் மேல் வைத்துவிடுகிறான் என்பதே. கிறிஸ்து, தன்னுடைய பிறப்பு முதல் தன்னுடைய சிலுவை மரணம்வரை கடைப்பிடித்த, மனிதனுடைய முழுமையான கீழ்ப்படிதலை, எப்படியாயினும் தன்னோடு பகிர்ந்து கொள்ளுவார் என்கிற நம்பிக்கை– அதாவது கிறிஸ்து அந்த மனிதனை, தன்னைப்போல மாற்றி, ஒரு வகையில் அவனுடைய எல்லா குறைவுகளையும் சரி செய்துவிடுவார் என்கிற நம்பிக்கை. இதை கிறிஸ்தவ மொழியில் சொன்னால், அவர் தன்னுடைய ''புத்திர சுவீகாரத்தை'' நம்மோடு பகிர்ந்துகொள்ளுவார், நம்மையும் அவரைப்போல ''தேவனுடைய பிள்ளைகள்'' ஆக்கிவிடுவார்: பகுதி நான்கில், இந்த வார்த்தைகளின் அர்த்தத்தை, இன்னும் சற்று அதிகமாக ஆராய்ந்துபார்க்க முயற்சி செய்யப்போகிறேன். வேண்டுமானால் நீங்கள் இப்படி சொல்லலாம், ஒன்றுமில்லாத நிலைக்கு, கிறிஸ்து ஏதோ ஒன்றை வழங்குகிறார். பார்க்கப்போனால், அவர் நம்முடைய ஒன்றும் இல்லாத நிலைக்கு, எல்லாவற்றையுமே வழங்குகிறார். ஒரு வகையில், இந்த முழு கிறிஸ்தவ வாழ்க்கையும், அந்த மிகவும் குறிப்பிடத்தக்க சலுகையை ஏற்றுக்கொள்வதில்தான் அடங்குகிறது. ஆனால், நாம் செய்தவை எல்லாமும், நாம் செய்யக்கூடியதெல்லாமும், ஒன்றுமே இல்லை என்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ளும் அந்த குறிப்பிட்ட இடத்தை அடைவதுதான் கடினமானது. நாம் எதை விரும்பி இருப்போமென்றால், தேவன் நம்முடைய நல்ல காரியங்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, நம்முடைய தீயகாரியங்களை எல்லாம் புறக்கணித்து விடவேண்டும் என்று. மேற்கொள்ளவேண்டும் என்ற முயற்சியை நிறுத்திவிட்டு, தோல்வியை ஒப்புக்கொள்ளும் வரையில், எந்த சோதனையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று ஒருவிதத்தில், நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் சரியான வழியில், சரியான காரணத்துக்காக ''முயற்சியை நிறுத்துவது'' என்பது, நீங்கள் மிகமிக கடினத்தோடு முயற்சிசெய்து பார்க்காதவரையில் நடக்காது. மேலும் மற்றொரு விதத்தில் பார்க்கும்போது, எல்லாவற்றையும் கிறிஸ்துவின் இடத்தில் ஒப்புக்கொடுப்பது என்பது, நிச்சயமாக, உங்கள் முயற்சியை நிறுத்துவது என்று அர்த்தம் அல்ல. அவரை நம்புவது என்றால், அவர் சொல்லுகிற எல்லாவற்றையும் செய்ய முயற்சிப்பதே ஆகும். நீங்கள் ஒரு மனிதரை நம்புகிறீர்கள் என்று சொல்லிவிட்டு, அவர் கொடுக்கிற ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆதலால், நீங்கள் உண்மையாகவே உங்களை அவரிடம் ஒப்புக்கொடுத்தீர்களானால், அவருக்கு கீழ்ப்படிய முயற்சிக்கிறீர்கள் என்பது பின்தொடர வேண்டும். ஆனால், இதை ஒரு புதிய வழியில், உங்கள் கவலைகள் சற்று குறைந்த விதமான ஒரு வழியில் நீங்கள் முயற்சிக்கவேண்டும். இந்த காரியங்களை நீங்கள்

இரட்சிக்கப்பட வேண்டும் என்பதனால் அல்ல, அவர் ஏற்கனவே உங்களை இரட்சிக்க ஆரம்பித்துவிட்டார் என்பதனால் செய்யவேண்டும். உங்கள் செயல்களின் வெகுமதியாக பரலோகத்துக்குச் சென்றுவிடலாம் என்கிற நம்பிக்கையில் அல்ல, மாறாக ஒரு குறிப்பிட்ட வழியில், தவிர்க்கமுடியாத விருப்பத்தோடு, நீங்கள் அவ்வாறு செயல்படவேண்டும், ஏனென்றால் பரலோகத்தினுடைய முதல் மெல்லிய ஒளி உங்களுக்குள் ஏற்கனவே வந்துவிட்டது.

ஒரு கிறிஸ்தவனை அவனுடைய வீட்டிற்கு (பரலோகத்துக்கு) வழிநடத்துவது அவனுடைய நல்ல செயல்களா? அல்லது கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமா? என்பதைப்பற்றி, கிறிஸ்தவர்கள் பலமுறை விவாதம் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கடினமான கேள்வியைக் குறித்துப் பேசுவதற்கு, உண்மையில் எனக்கு எந்த உரிமையும் இல்லை. ஆனால் ஒரு கத்திரிக்கோலிலுள்ள இரண்டு கத்திகளில், எது மிகவும் தேவையானது? என்று கேட்பதைப்போல எனக்கு இது தோன்றுகிறது. ஒரு தீவிரமான ஒழுக்கமுயற்சி மட்டுமே, நீங்கள், உங்கள் தோல்வியை ஒப்புக்கொள்கிற அந்த இடத்திற்கு, உங்களை அழைத்துவருகிறது. கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் மட்டுமே, அந்த இடத்தில் உங்களுக்கு ஏற்படுகிற விரக்தியிலிருந்து உங்களை காப்பாற்றுகிறது. மேலும் அவர் மேலுள்ள அந்த விசுவாசத்தின் தவிர்க்கமுடியாத வெளிப்பாடாக மட்டுமே, நல்ல செயல்கள் வருகின்றது. சத்தியத்தைக் குறித்த இரண்டு பகடிகள்[1] உள்ளன. இவற்றை வெவ்வேறு பிரிவினரான கிறிஸ்தவர்கள், முந்தின காலங்களில் கொண்டிருந்ததாக, விசுவாசம் கொண்ட மற்ற கிறிஸ்தவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள்: ஒருவேளை அவைகள் உண்மையை இன்னும் சற்று தெளிவாக்கக்கூடும். ஒரு பிரிவினர், ''நல்ல செயல்கள் மட்டுமே முக்கியமானவை. அதில் உள்ள சிறந்த நல்ல செயல், ஈகையாகும்[2]. அதிலும் சிறந்த வகையான ஈகை என்பது, மற்றவர்களுக்கு பண உதவிசெய்வது ஆகும். பண உதவி செய்வதிலேயே மிகவும் சிறந்தது, அதை தேவாலயத்துக்கு கொடுப்பதுதான். ஆதலால் எங்களுக்கு ஒரு கோடி தாருங்கள். நாங்கள் உங்களை (பரலோகத்துக்கு) கொண்டுபோய் சேர்த்துவிடுவோம்'' என்று கூறுவதாக குற்றம் சாட்டப்பட்டார்கள். இந்த முட்டாள்தனமான பேச்சுக்குரிய பதில், நிச்சயமாக இதுதான்– அந்த நோக்கத்துக்காக செய்யப்பட்ட நல்ல காரியங்கள், அதாவது பரலோகத்தை வாங்கிவிடலாம் என்ற யோசனை மூலமாக செய்யப்பட்ட காரியங்கள், ஒருபோதும் நல்ல காரியங்களாக இருக்கமுடியாது, அவை வெறும் வியாபார கணிப்பாகத்தான் இருக்கும். மற்றொரு பிரிவினர் ''விசுவாசம் மட்டுமே முக்கியமானது. ஆதலால் நீ விசுவாசமுள்ளவனாய் இருந்தால், நீ என்ன செய்கிறாய் என்பது முக்கியமே அல்ல. இளம் வாலிபனே, பாவம் செய். நன்றாக உன் நேரத்தை அனுபவி. முடிவில் இதில் எந்த ஒரு வித்தியாசமும் இல்லாதபடி கிறிஸ்து பார்த்துக்கொள்வார்'' என்று கூறுவதாக குற்றம் சாட்டப்படுகிறார்கள். இந்த முட்டாள்தனமான பேச்சுக்குரிய பதில் என்னவென்றால், கிறிஸ்துவின் மேல் உள்ள ''விசுவாசம்'' என்று நீங்கள் அழைப்பது எதுவோ, அது, அவர் என்ன கூறுகிறார்

1 parodies – நையாண்டிகள்
2 charity

என்பதைக்குறித்து, சற்றும் சிந்தனையற்ற ஒன்றாக இருக்குமானால், அது விசுவாசமே அல்ல – அது அவர் மேலுள்ள விசுவாசமோ, நம்பிக்கையோ அல்ல. மாறாக, அவரைக்குறித்த ஏதோ ஒரு கோட்பாட்டை, உங்கள் அறிவு ஏற்றுக்கொள்ளுகிறது என்பது மட்டுமே.

வேதாகமம் இந்த இரண்டு விஷயங்களையும், ஒன்றாக, அற்புதமான வாக்கியத்தில் இணைப்பதன் மூலம், இந்தக் காரியத்தை அடக்கிவிடுகிறது. இதன் முதல் பாதி, ''பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்'' என்பதே– இதைப் பார்க்கும்பொழுது, எல்லா காரியங்களும் நம்மேலும், நம்முடைய நல்ல செயல்களின் மேலும் சார்ந்திருப்பதைப் போல தெரிகிறது. ஆனால், இந்த இரண்டாவது பாதி, ''ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்'' என்று சொல்லும்போது, தேவன்தான் எல்லாவற்றையும் செய்கிறார், நாம் ஒன்றும் செய்யவில்லை என்பதைப் போலவும் தெரிகிறது. இப்படிப்பட்ட காரியங்களைத்தான் நாம் கிறிஸ்துவத்தில் எதிர்நோக்கவேண்டியிருக்கும் என்று நான் பயப்படுகிறேன். எனக்கு இது புதிராக இருக்கிறது, ஆனால் ஆச்சரியமாக இல்லை. இங்கு பார்த்தீர்களானால், தேவனும் மனிதனும் இணைந்து செயல்படும்பொழுது, தேவன் என்ன செய்கிறார், மனிதன் என்ன செய்கிறான், என்பதை நாம் தெல்ல தெளிவாக புரிந்துகொள்ள இப்பொழுது முயற்சிசெய்கிறோம், மேலும் அவைகளை பிரித்துவைக்கவும் முயற்சிசெய்கிறோம். உடனேயே, இரண்டு மனிதர்கள் ஒன்றாக இணைந்து வேலை செய்வதைப்போல, நாம் சிந்திக்க ஆரம்பிக்கிறோம். அப்படியாக, நீங்கள் இவ்வாறு சொல்லக்கூடும்– அவர் அந்தப் பகுதியை செய்தார், நான் இந்த பகுதியை செய்தேன் என்று. ஆனால் இந்த விதமான சிந்தனை உடைந்து விழுந்துவிடும். தேவன் அப்படிப்பட்டவர் அல்ல. அவர் உங்களுக்குள்ளும் இருக்கிறார், வெளியிலும் இருக்கிறார். யார் எதை செய்தார்கள் என்பது உங்களால் விளங்கிக் கொள்ளமுடிந்தாலும்கூட, மனித பாஷைகளினால் இந்த காரியத்தை, சரியான முறையிலே விளக்கமுடியும் என்று என்னால் நினைக்க முடியவில்லை. இதை விளக்கும் முயற்சியாகத்தான், வெவ்வேறு சபைகள், வெவ்வேறு காரியங்களைச் சொல்லுகின்றன. ஆனால் உங்களுடைய நல்ல செயல்கள்தான் மிகவும் முக்கியம் என்று மிக அழுத்தி சொல்லக்கூடியவர்கள்கூட, உங்களுக்கு விசுவாசம் தேவை என்று சொல்லுவதை நீங்கள் பார்க்கமுடியும். மேலும் உங்கள் விசுவாசம்தான் முக்கியம் என்று அடித்து சொல்லுபவர்கள்கூட, நீங்கள் நல்ல செயல்களைச் செய்யவேண்டும் என்று சொல்லக்கூடும். எவ்விதத்திலாகிலும், இதுவரை மட்டும் தான் என்னால் கடந்து வர முடியும்.

கிறிஸ்தவத்தை முதலில் பார்க்கும்பொழுது, அது எல்லா ஒழுக்கத்தையும், எல்லா கடமைகளையும், விதிகளையும், குற்ற உணர்ச்சியையும், நல்ல குணங்களையும் குறித்தது என்று தோன்றினாலும்கூட, இவை எல்லாவற்றிலிருந்தும், இதற்கு மேல் ஒரு காரியத்திற்கு, அது உங்களை வழிநடத்துகிறது என்று நான் சொல்லுவதை எல்லா

கிறிஸ்தவர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். நகைச்சுவையாக மட்டுமேயன்றி, இந்தக் காரியங்களெல்லாம் பேசப்படாத ஒரு தேசத்தை, ஒருவரால் ஒரு கணநேர காட்சியாகப் பார்க்கமுடிகிறது. ஒரு கண்ணாடி வெளிச்சத்தினால் நிறைந்திருப்பதைப் போல, அங்குள்ள ஒவ்வொருவரும், நன்மை என்று நாம் அழைக்கிறோமே, அதனால் நிறைந்தவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அதை நன்மை என்று அழைப்பதில்லை. அதற்கு எந்த பெயர் சொல்லியும் அவர்கள் அழைப்பதில்லை. அவர்கள் அதைக் குறித்து சிந்திப்பதே இல்லை. அவர்கள் எல்லாரும் அந்த நன்மை எங்கிருந்து வருகிறதோ, அந்த ஆதாரத்தை பார்த்துக் கொண்டிருப்பதில் மிகவும் பரபரப்பாக இருக்கிறார்கள். ஆனால் இது, (மனிதனுடைய) அந்த பாதை இந்த உலகத்தின் விளிம்பை கடந்து செல்லுகிற அந்த நிலைக்கு, மிகவும் அருகில் இருக்கிறது. யாருடைய கண்களும் இதற்கு அப்பாற்பட்டு பார்த்ததில்லை: பல மனிதர்களுடைய கண்கள், என்னுடையவைகளைக் காட்டிலும் அப்பாற்பட்டுப் பார்க்கக் கூடியவைகளாய் இருக்கின்றன.

# பகுதி நான்கு

—

# திருத்துவக் கோட்பாட்டின் முதல் படிகள்

# 1. உருவாக்குதல் மற்றும் பெற்றெடுத்தல்

நான் இந்த கடைசி புத்தகத்தில் உங்களிடம் சொல்லப்போவதை சொல்லவே கூடாது என்று அனைவரும் என்னை எச்சரித்தனர். ஒரு சாதாரண மனிதனுக்கு திருத்துவம் என்பது தேவையில்லை, அவனுக்கு நடைமுறையில் உள்ள வெறும் மதம் போதும் என்றனர். அவர்களது ஆலோசனையை நான் புறக்கணித்து விட்டேன். ஒரு சாதாரண வாசகர் அவ்வளவு முட்டாள் அல்ல என்று நான் நினைக்கிறேன் திருத்துவம் என்பது ''தேவனின் அறிவியல்''. தேவனைப்பற்றி சிந்திக்க விரும்பும் எந்த மனிதனும் அவரைப் பற்றி இருக்கும் தெளிவான மற்றும் துல்லியமான கருத்துக்களை அறிய வேண்டும் என விரும்புவான். நீங்கள் குழந்தைகள் அல்ல: நீங்கள் குழந்தைகளைப் போல ஏன் நடத்தப்பட வேண்டும்?

சிலர் ஏன் இறையியலால் ஆர்வம் இழந்துவிடுகிறார்கள் என்று ஒருவிதத்தில் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஒருமுறை விமானப்படையில் பேட்டி கொடுத்த போது நிகழ்ந்தது என் நினைவில் உள்ளது. ஒரு வயதான பிடிவாதமுடைய எரிச்சல் கொண்ட ஒரு அதிகாரி எழுந்து சொன்னார், ''இந்த அனைத்து காரியங்களால் எனக்கு எந்த பிரயோஜனமும் இல்லை. ஆனால், நானும் ஒரு மத நம்பிக்கை கொண்ட மனிதன் என்பதை மனதில் கொள்ளுங்கள். தேவன் இருக்கிறார் என்பது எனக்கு தெரியும். நான் அவரை உணர்ந்து இருக்கிறேன்: பாலைவன இரவில் நான் தனிமையில் விடப்பட்ட போது: அது ஒரு மகத்தான மர்மம். ஆதலால் தான் அவரைப் பற்றிய உங்களுடைய செவ்வையான சிறு கோட்பாடுகளையும், சூத்திரங்களையும் நான் நம்பவில்லை''.என்று. உண்மையாய் அதை சந்தித்த எவருக்கும் அவை எல்லாம் அற்பமாகவும் ஏட்டுச்சுரைக்காய் போலவும் உண்மையற்றதாகவும் தெரியும் என்று. இப்பொழுதும் ஒரு அர்த்தத்தில் எடுத்துக் கொண்டால், அந்த மனிதன் சொல்வதில் நான் உடன்பாடு கொள்கிறேன். அநேகமாக, அந்த மனிதன் தேவனை பாலைவனத்தில் உண்மையாய் உணர்ந்திருக்கிறான் என்று எண்ணுகிறேன். அந்த அனுபவத்திலிருந்து அவன் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு திரும்பும் போது, அவன் மிகவும் உண்மையான ஒன்றிலிருந்து சிறிது குறைவான உண்மையான ஒன்றிற்கு திரும்புகிறான்.

இதைப்போலவே, அட்லாண்டிக் கடலை கடற்கரையில் இருந்து பார்த்த ஒரு மனிதன் பின்னர் அட்லாண்டிக் கடலின் வரைபடத்தை சென்று பார்க்கும் போது அவனும் மிக உண்மையான ஒன்றிலிருந்து சிறிது குறைவான உண்மையான ஒன்றுக்கு திரும்பி இருப்பான்: உண்மையான அலைகளில் இருந்து ஒரு துண்டு வண்ணத் தாளிற்கு நேராய் திரும்பி இருப்பான். ஆனால், நான் சொல்லவரும் கருத்து இப்பொழுது வருகிறது. வரைபடம் என்பது ஒப்புக்கொண்டபடி மறுப்பின்றி ஒரு வண்ணத்தாளே. ஆனால், அதில் இரு காரியங்களை நீங்கள் ஞாபகம் கொள்ள வேண்டும். முதலாவதாக, அது உண்மையான அட்லாண்டிக்கிற்கு சென்ற நூறு மற்றும் ஆயிரம் மக்களால் கண்டறியப்பட்டதின் அடிப்படையில் உள்ளது. அந்த வகையில், அதன் பின்னால்

நேரில் நாம் கடற்கரைக்கு செல்லும் அனுபவத்திற்கு ஒத்ததான அநேகரின் அனுபவங்கள் உள்ளது. உங்களுடைய அனுபவம் வெறும் ஒரே ஒரு தனிமைப்படுத்தப்பட்ட கண்ணோட்டமாக இருக்கும் பொழுது, வரைபடமானது பலருடைய அனுபவங்களையும் ஒன்றிணைத்து பொருத்துகிறது. இரண்டாவதாக, நீங்கள் எங்காவது செல்ல விரும்பும் போது வரைபடம் என்பது ஒரு கட்டாய தேவை. கடற்கரை நடைபயணம் உங்களுக்கு திருப்தியாக இருக்கும் வரையில் நீங்கள் நேரில் கடற்கரையை பார்வையிடுவது ஒரு வரைபடத்தை பார்ப்பதைவிட உற்சாகமூட்டுவதாக இருக்கும். ஆனால், நீங்கள் அமெரிக்கா வரையில் செல்ல விரும்புவீர்கள் என்றால், அதற்கு கடற்கரையில் நீங்கள் மேற்கொண்ட உங்களுடைய நடைப்பயணத்தை விட வரைபடம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்பொழுதும் இறையியல்[1] என்பது ஒரு வரைபடமே. கிறிஸ்தவ கோட்பாடுகளை [2] கற்பது மற்றும் சிந்திப்பதோடு நிறுத்திக் கொண்டால் என் நண்பர் பாலைவனத்தில் அனுபவித்ததை விட குறைந்த உண்மையாகவும், குறைந்த உணர்ச்சியூட்டுவதாகவும் இருக்கும். கோட்பாடுகள் தேவன் அல்ல: அவைகள் ஒரு வகையான வரைபடம் மாத்திரமே. ஆனால், அந்த வரைபடமானது தேவனோடு உண்மையான தொடர்பு வைத்திருக்கும் நூற்றுக்கணக்கான மக்களின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டது. –அந்த அனுபவங்களோடு நம்முடைய எந்த சிலிர்ப்பையும் அல்லது பக்தி உணர்வையும் ஒப்பிட்டால் உங்களுடைய மற்றும் என்னுடைய உணர்வுகள், மிகவும் ஆரம்ப நிலையில் உள்ளதும் குழப்பம் மிகுந்ததாயும் இருக்கும். இரண்டாவதாக, நீங்கள் இன்னும் முன் செல்ல வேண்டுமானால் நீங்கள் வரைபடத்தை பயன்படுத்தியே ஆக வேண்டும்.

இதோ பாருங்கள், அந்த பாலைவனத்தில் அந்த மனிதனுக்கு நடந்தது உண்மையாக இருக்கலாம். மற்றும் நிச்சயமாக சிலரை அது சிலிர்ப்பூட்டி இருக்கும். ஆனால், அதிலிருந்து ஒன்றும் வராது. அது எதற்கு நேராகவும் வழி நடத்தாது. அதை குறித்து செய்வதற்கு வேறு ஒன்றும் இல்லை. சொல்லப்போனால், இதனால் தான் (இயற்கையில் இறைவனை உணர்வதினால்) தெளிவற்ற ஒரு மதம் மிகவும் ஈர்க்கக் கூடியதாய் இருக்கிறது. இது மிகவும் சிலிர்பூட்டக்கூடியதும் ஒரு உழைப்பும் தேவையில்லாததாய் இருக்கிறது. கடற்கரையிலிருந்து அலைகளை பார்த்துக் கொண்டிருப்பது போல அட்லாண்டிக் கடலை அவ்வாறு படிப்பதன் மூலம் நீங்கள் கனடா சென்று விட முடியாது மற்றும் ஒரு மலரிலோ அல்லது இசையிலோ தேவனுடைய பிரசன்னத்தை உணர்வதன் மூலமாக நீங்கள் நித்திய ஜீவனை பெற முடியாது. நீங்கள் கடலுக்கு செல்லாமல் வெறும் உலகப்படம் பார்த்துக் கொண்டிருந்தால் எந்த இடத்திற்கும் கூட செல்ல முடியாது. அல்லது வரைபடம் இன்றி கடலுக்குள் பாதுகாப்பாக செல்லவும் முடியாது.

1 Theology
2 doctrine

வேறு விதமாகச் சொன்னால், இறையியல் எதார்த்தமானது.: விசேஷமாக இப்பொழுது. சிறிதளவே கல்வியும், விவாதங்களும் இருந்த பழங்காலத்தில் தேவனை குறித்த வெகு சில சாதாரணமான கருத்துக்களை வைத்துக்கொண்டே சென்றுவிடலாம். ஆனால், இப்பொழுது அப்படி அல்ல. அனைவரும் வாசிக்கின்றனர், அனைவரும் கவனிக்கின்றனர், காரியங்கள் விவாதிக்கப்படுகிறது. ஆகையால், நீங்கள் இறையியலை கவனிப்பதில்லை என்பதால் உங்களுக்கு தேவனைப் பற்றி ஒன்றும் தெரியாது என்று அர்த்தம் இல்லை. அது குறிப்பது என்னவென்றால், உங்களுக்கு மோசமான, குழப்பமான, மற்றும் நாளடைந்த கருத்துக்கள் உள்ளது என்பதே. இந்த காலகட்டத்தில் விரைவாக செல்லும் புதுமையான தேவனைப்பற்றின பெரும்பாலான கருத்துக்கள் எல்லாம் பல உண்மையான இறையியலாளர்களால் பல நூற்றாண்டுகளுக்கு முன்னாக முயற்சிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டவைகளே. நவீன இங்கிலாந்தின் பிரபலமான மதத்தை நம்புவது என்பது பிற்போக்கு நிலைக்கு செல்வதாகும். அதாவது, பூமியானது தட்டையாக உள்ளது என்று சொல்லுவது போல.

நீங்கள் இதை இன்னும் கவனமாக பார்த்தால், பிரபலமான கிறிஸ்தவ கருத்து என்பது வெறும் இதுவல்லவா?: அதாவது இயேசு கிறிஸ்து சிறந்த நீதிபோதகர் மற்றும் அவரது ஆலோசனைகளை எடுத்துக் கொண்டால் மாத்திரமே சிறந்த சமூக ஒழுங்கை ஏற்படுத்தி இன்னும் ஒரு போரை தடுக்க முடியும். இப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள் இது நிச்சயமாக உண்மைதான். ஆனால், கிறிஸ்தவத்தை குறித்த முழு உண்மையை விட மிகக் குறைவானதையே இது சொல்லுகிறது. மற்றும் யதார்த்தத்தில் இது எந்த முக்கியத்துவத்திற்கும் உரியதும் அல்ல. உண்மையிலேயே நாம் கிறிஸ்துவின் அறிவுரைகளை பின்பற்றினால் சீக்கிரமாக நாம் மகிழ்ச்சியான ஒரு உலகத்தில் வாழலாம். நீங்கள் கிறிஸ்து அளவிற்கு கூட செல்ல வேண்டியதில்லை. ப்ளேட்டோ[1] அல்லது அரிஸ்டாட்டில்[2] அல்லது கன்பூசியஸ்[3] சொன்ன அறிவுரைகளை பின்பற்றினால் கூட நாம் இப்பொழுது இருப்பதைவிட நன்றாகவே இருப்போம். அதனால் என்ன? நாம் எந்த ஒரு சிறந்த ஆசிரியரின் அறிவுரைகளையும் பின்பற்றி இருக்கவில்லை. நாம் ஏன் இப்பொழுது தொடங்கலாம்? நாம் ஏன் எவருக்கும் மேலாக கிறிஸ்துவை பின்பற்றலாம்? அவர் சிறந்த நீதிபோதகர் என்பதாலா? ஆனால், நாம் அவரை பின்பற்றுவதற்கு இன்னும் குறைவான சாத்தியத்தை அது உருவாக்குகிறது.

நாம் ஆரம்ப நிலை பாடங்களை படிக்க தயாராக இல்லாத போது மிகவும் மேம்படுத்தப்பட்ட ஒன்றை கற்பது எப்படி சாத்தியம்? கிறிஸ்தவம் இன்னும் கொஞ்சம் சிறந்த கருத்தை கூறும் ஒன்றாக மட்டும் இருக்குமானால், கிறிஸ்தவம் என்பது எந்த முக்கியத்துவம் உரியதும் அல்ல. கடந்த நாலாயிரம் ஆண்டுகளாக நல்ல அறிவுரைகளுக்கு பஞ்சமே இல்லை. அதிலிருந்து கொஞ்சம் அதிகமாக இருப்பதால் அதனால் ஒரு மாற்றமும் நடக்கப் போவதில்லை. நீங்கள் உண்மையான கிறிஸ்தவ

1 Plato
2 Aristotle
3 Confucius

எழுத்துக்களை வாசித்திருப்பீர்களானால், நீங்கள் உடனடியாக கண்டிருப்பீர்கள், இந்த ''பிரபலமான மதம்'' என்று சொல்லப்படுவதற்கு முற்றிலும் மாறாகவே அது இருக்கிறது என்று. அவர்கள் சொல்வார்கள், கிறிஸ்து என்பவர் தேவனுடைய குமாரன் என்று. (அதன் அர்த்தம் எதுவாக இருந்தாலும்) அவர்கள் சொல்வார்கள் அவர் மேல் நம்பிக்கை வைக்கிற யாவரும் தேவனுடைய குமாரர்கள் ஆவார்கள் என்று. (அதன் அர்த்தம் எதுவாக இருந்தாலும்). அவர்கள் சொல்வார்கள் அவருடைய மரணம் நம்மை பாவத்திலிருந்து ரட்சித்தது என்று. (அதன் அர்த்தம் எதுவாக இருந்தாலும்)

இந்த வாக்கியங்கள் எல்லாம் கடினமாக இருக்கிறது என்று குறை சொல்வதால் எந்த நன்மையும் இல்லை. வேறொரு உலகத்தை குறித்து கிறிஸ்தவம் சொல்லுகிறது என்று அது வாதாடுகிறது. நாம் தொடுகிற, கேட்கிற, பார்க்கிற இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டதான ஏதோ ஒன்றைக் குறித்து அது பேசுகிறது. அந்த கூற்று தவறு என்று நீங்கள் எண்ணலாம். அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அது நம்மிடம் சொல்வது கடினமான ஒன்றாகவே இருக்கும். அதே காரணத்தால் அது நவீன இயற்பியல் அளவிற்காகவாவது கடினமாக இருக்கும்.

கிறிஸ்தவத்தில் நம்மை அதிர்ச்சியூட்டக்கூடிய ஒரு கூற்று உள்ளது. அந்த கருத்து என்னவென்றால் நம்மை நாம் கிறிஸ்தவோடு இணைத்துக் கொள்ளும்போது நாம் தேவனின் குமாரர்கள் ஆகிறோம் என்பதே. ஒருவர் கேட்கலாம், ''நாம் ஏற்கனவே தேவனின் குமாரர்கள் தானே ?''என்று.நிச்சயமாக, ''தேவன் ஒரு தந்தையை போன்றவர் என்பது கிறிஸ்தவத்தில் உள்ள முக்கியமான கருத்துக்களில் ஒன்றுதானே? ''என்று. ஆம், ஒரு அர்த்தத்தில் சந்தேகமே இல்லை நாம் ஏற்கனவே தேவனின் மகன்கள் தான். நான் இவ்வாறாக பொருள்பட சொல்லுகிறேன். தேவன் நம்மை உயிரோடு வாழ்வதற்கு கொண்டு வந்தவர், மற்றும் நம்மிடம் அன்பு காண்பிக்கின்றவர், மற்றும் நம்மை பார்த்துக் கொள்கிறவர் அந்த வகையில் அவர் ஒரு தகப்பனை போன்றவரே. ஆனால், வேதாகமம் நாம் குமாரர்களாக மாறுகிறோம் என்று சொல்லும் போது நிச்சயமாக அது வேறு பொருள்படவே குறிக்கிறது. அது நம்மை மறுபடியும் இறையியலின் நடு மையத்திற்கு எதிராக நம்மை நிறுத்துகிறது.

விசுவாச பிரமாணங்களில் ஒன்று இவ்வாறாகச் சொல்லுகிறது. கிறிஸ்து தேவனுடைய குமாரன், ''உண்டாக்கப்படாமல் ஜெனிபிக்கப்பட்டவர்'' மற்றும் இதையும் கூட்டிக் கொள்கிறது ''உலகத் தோற்றத்திற்கு முன்பே தந்தையால் ஜெனிபிக்கப்பட்டவர்''. கிறிஸ்து இந்த உலகில் மனிதனாய் பிறந்த பொழுது ஒரு கன்னியின் மகனாகப் பிறந்தார் என்ற உண்மைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்று தயவு செய்து நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இப்பொழுது நாம் கன்னியின் மூலம் பிறந்ததைக் குறித்து சிந்திக்கப் போவதில்லை. காலங்கள் உருவாகுவதற்கு முன்னும், இயற்கை படைக்கப்படுவதற்கு முன்னும், ஏதோ ஒன்று நடந்திருக்கிறது. அதை குறித்தே சிந்திக்கப் போகிறோம். உலகம் தோன்றும் முன்பே கிறிஸ்து ஜெனிபிக்கப்பட்டார், உருவாக்கப்படவில்லை இது எதை குறிக்கிறது?

நவீன ஆங்கிலத்தில் ஜெனிப்பிக்கப்படுகிறவைகள் மற்றும் ஜெனிப்பிக்கப்பட்டவைகள் என்ற வார்த்தைகளை அதிகம் நாம் பயன்படுத்துவதில்லை. ஆனாலும் எல்லோருக்கும் அது என்ன அர்த்தம் கொள்கிறது என்று தெரியும். ஜெனிப்பித்தல் என்பது ஒருவர் ஒரு குழந்தைக்கு தகப்பனாகுதல். உருவாக்குதல் என்பது ஒன்றைச் செய்தல். ஒன்றை ஜெனிப்பிக்கும் போது, உங்களைப் போன்ற ஒன்றையே நீங்கள் பிறப்பிக்கிறீர்கள். ஒரு மனிதன் மனித குழந்தைகளை பிறப்பிக்கிறான். ஒரு பீவர் சிறு பீவர்களை பிறப்பிக்கிறது மற்றும் ஒரு பறவை முட்டையை பிறப்பித்து அது சிறு பறவையாக பின் மாறுகிறது. ஆனால், நீங்கள் ஒன்றை உருவாக்கும்போது உங்களிலிருந்து வேறுபட்ட ஒன்றையே உருவாக்குகிறீர்கள். ஒரு பறவை கூட்டை உருவாக்குகிறது. ஒரு பீவர் என்ற விலங்கு அணையை கட்டுகிறது. மனிதன் கணினியை செய்கிறான். அல்லது, கணினியை விட தன்னைப் போலவே இருக்கும் ஒன்றைச் செய்கிறான். அதை ஒரு சிலை எனலாம். அவர் ஒரு திறமையுள்ள சிற்பியானால்,அது மனிதனைப் போலவே இருக்கும். ஒரு சிலையை உருவாக்கி விடுவார். ஆனால், நிச்சயமாக அது உண்மையான மனிதன் அல்ல. மனிதனைப் போல உள்ள ஒன்றே. அதனால் சுவாசிக்கவோ சிந்திக்கவோ முடியாது. அது உயிரற்றது.

இதுவே தெளிவாக்கப்பட வேண்டியவைகளில் முதலானது. ஒரு மனிதன் பிறப்பிப்பது ஒரு மனிதனை என்பது போலவே தேவன் பிறப்பிப்பது தேவனே. மனிதனால் செய்யப்படுவது எப்படி ஒரு மனிதனாக இருக்காதோ, அதே போலவே தேவனால் உருவாக்கப்படுகிற ஒன்று தேவன் அல்ல. இதனால் தான் கிறிஸ்து எப்படி தேவனின் குமாரரோ அது வகையில் மனிதர்கள் தேவனின் குமாரர்கள் அல்ல. அவர்கள் சில விதங்களில் தேவனைப் போல இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் ஒரே விஷயங்களால் ஆனவர்கள் அல்ல. அவர்கள் தேவனின் ஒரு சிலையை போல அல்லது அவரின் புகைப்படத்தை போல் ஆனவர்கள். ஒரு சிலைக்கு மனிதனுடைய உருவம் உள்ளது. ஆனால், அது உயிருடன் இல்லை. இது போலவே மனிதனும் (அது என்ன அர்த்தத்தில் என்று விளக்கப் போகிறேன்). தேவனைப் போல உருவத்தில் இருக்கிறான். ஆனால், தேவனுடைய ஜீவனைப் போன்ற அந்த வகையான ஜீவன் அவனுக்கு இல்லை. முதல் குறிப்பை முதலில் எடுத்துக் கொள்ளலாம்(மனிதன் சாயலில் தேவனுக்கு ஒத்து இருக்கிறான்). தேவன் உருவாக்கிய எல்லாமே தேவனை ஏதோ ஒரு விதத்தில் பிரதிபலிக்கிறது.

பிரம்மாண்டமாய் இருப்பதில் ஆகாயம் தேவனைப் போலவே உள்ளது. ஆனாலும் ஆகாயத்தின் பிரம்மாண்டமும் தேவனின் பிரம்மாண்டமும் ஒரே வகையானது அல்ல. ஆனால், அதற்கு ஒரு அடையாளத்தை போன்று அது விளங்குகிறது. ஆவிக்குரிய வார்த்தைகள் இன்றி சொல்லப் போனால் அது ஒரு மொழிபெயர்ப்பைப் போல உள்ளது. பொருள் என்பது ஆற்றலை கொண்டிருக்கும் தன்மையில் தேவனைப் போல உள்ளது இருந்தாலும், மறுபடியும், நிச்சயமாக, தேவனுடைய வல்லமையிலிருந்து இந்த இயற்பியல் சக்தி வேறுபட்டதாகவே உள்ளது. உயிருடன் இருப்பதினால் காய்கறி உலகமும் அவரைப்போலவே இருக்கிறது மற்றும் அவர் ஜீவனுள்ள தேவன்.

உயிரியலில் உயிர் என்னும் அர்த்தத்தைப்பார்க்கும்போது அந்த உயிர் என்பது தேவனுடைய ஜீவனிலிருந்து வேறுபட்டது. அதனுடைய வெறும் அடையாளம் மற்றும் நிழல் போன்றது இது.மிருகங்களிடம் வருவோமானால், உயிரியல் வாழ்வு என்பதனோடு கூட வேறு வகையான ஒத்துப் போகுதலை காணலாம். பூச்சிகளின் கருவளம் மற்றும் தீவிரமான செயல்பாடுகளே, நீங்கா உழைப்பு மற்றும் சிருஷ்டிப்புத் தன்மை என்பவைகளை மங்கலாக பிரதிபலிக்கும் முதல் எடுத்துக்காட்டு ஆகும்.

உள்ளார்ந்த அன்பின் ஆரம்பத்தை உயரிய பாலூட்டிகளிடம் பெறலாம். ஆனாலும், அது தேவனிடம் உள்ள அதே அன்பாக இல்லாமல் அதைப் போன்று இருக்கிறது– ஒரு தட்டை தாளில் வரையப்பட்ட ஒரு நிலத்தோற்றம் எப்படி ஒரு நிலம் இல்லையோ அதை போலவே. மிருகங்களிலேயே உயர்வான மனிதர்களை எடுத்துக் கொண்டால் ஒரு முழுமையான தேவனின் பிரதிபலிப்பை காணலாம். வேறு உலகங்களில் தேவனை மனிதனை விடவும் நன்றாக பிரதிபலிக்கும் சிருஷ்டிகள் இருக்கலாம். ஆனால், அதைப் பற்றி நமக்குத் தெரியாது. மனிதன் வாழ்வது மட்டுமல்லாமல், நேசிக்கிறான் மற்றும் சிந்திக்கிறான். உயிரியல் வாழ்வு அவனில் உச்ச நிலையை அடைகிறது.

ஆனால், மனிதன் தன்னுடைய இயற்கையான நிலையில் பெறாத ஒன்று அவனுடைய ஆவிக்குரிய வாழ்வு[1]. அது தேவனில் உள்ள உன்னதமும் வேறு விதமான ஒன்றுமாகும். வாழ்க்கை என்னும் ஒரே வார்த்தையை இவை இரண்டிற்கும் பயன்படுத்துகிறோம். ஆனால், இவை இரண்டும் ஒரே விதமான காரியம் என்று எண்ணுவீர்கள் என்றால், அது இயற்கையின் பிரம்மாண்டமும் தேவனின் பிரம்மாண்டமும் ஒன்று என்று நினைப்பது போல் ஆகும். நிதர்சனத்தில் உயிரியல் வாழ்வு மற்றும் ஆவிக்குரிய வாழ்வு என்பதன் நடுவில் உள்ள வேறுபாடுகள் மிக முக்கியமானது. ஆதலால், அதற்கு நான் இரு வேறு பெயர்களை கொடுக்கப் போகிறேன். உயிரியல் வகையாக இயற்கை மூலம் வருவது இயற்கையில் உள்ள மற்ற எல்லாவற்றையும் போலவே ஓடிமுடிவதாகவும் மற்றும் அழிவதாகவும் உள்ளது. இயற்கையின் மானியங்களான காற்று, தண்ணீர், உணவு போன்றவற்றை விடாது எடுத்துக் கொண்டு மட்டுமே அதனால் வாழ முடிவதால் அதற்கு பயோஸ்[2] என்று பெயர். முழு உலகையும் படைத்ததும், நித்திய காலமாக தேவனுக்குள் இருப்பதுமான வாழ்க்கை சோயி[3] ஆகும். நிச்சயமாக பயோஸ் என்பது சோயி–யினுடைய நிழலுடைய பிரதிபலிப்பின் அடையாளம். ஆனால், அது ஒரு புகைப்படத்திற்கும் உண்மையான இடத்திற்கும் உள்ள வித்தியாசத்தை போன்றதாகும். அல்லது ஒரு சிலைக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசத்தை போன்றதாகும். பயோஸ் கொண்ட ஒரு மனிதன் சோயி கொண்டவனாக மாறும் போது ஒரு கல்லிலிருந்து செதுக்கப்பட்ட ஒரு சிலை ஒரு மனிதனானால், அவனுக்குள் எவ்வளவு பெரிய மாற்றம் வருமோ அந்த அளவு மாற்றத்திற்குள் கடந்து போகின்றான். கிறிஸ்தவம் துல்லியமாக அதை குறித்ததே.

1 spiritual life
2 BIOS
3 Zoe

இந்த உலகம் ஒரு பெரிய சிற்பியின் கடை. நாம்தான் சிலைகள், மற்றும் நம்மில் சிலர் ஏதோ ஒரு நாளில் உயிரடைய போகிறோம் என்கிற வதந்தி அந்த கடையை சுற்றிச் செல்கிறது.

# 2. மூன்று–தனிநபர் தேவன்

கடைசி அத்தியாயம் ஜெனிப்பித்தல் மற்றும் உண்டாக்கப்படுதல் என்பவைகளின் வேறுபாடுகளைப்பற்றியது. ஒரு மனிதன் குழந்தையை பெறுகிறான். ஆனால், சிலையை உருவாக்குகிறான். தேவன் கிறிஸ்துவை பெற்றார். ஆனால், மனிதனையோ உருவாக்கினார். ஆனால் அப்படி சொல்லுவதின் மூலம் தேவனைக்குறித்த ஒரே ஒரு குறிப்பை மட்டும் விளக்கி இருக்கிறேன். அது என்னவென்றால், தந்தையான தேவன் பெற்றெடுத்தது தேவனை. அவரை போன்ற விதத்தில் உள்ள ஒருவரை. இது ஒரு மனித தந்தை மனிதக் குழந்தையை பெற்றெடுப்பது போல் ஆகும். ஆனால், முற்றிலும் அதேபோல் அல்ல. ஆதலால், நான் அதை சிறிது அதிகமாக விளக்க நிச்சயம் முயற்சிக்கிறேன்.

இந்தக் காலத்தில் உள்ள அநேக மனிதர்கள் சொல்லுகிறார்கள், ''நான் தேவனை நம்புகிறேன். ஆனால், தனிப்பட்ட விதத்தில் இடைபடுகிற தேவனை அல்ல''. எல்லா காரியங்களுக்கும் பின்பாக உள்ள, மர்மமாக உள்ள, அந்த ஏதோ ஒன்று, ஒரு ஆளுக்கும் மேற்பட்டவர் அவர் என்று நம்புகின்றனர். இப்பொழுதும் இதற்கு கிறிஸ்தவர்கள் ஆமோதிக்கின்றனர். ஆனால், ஒரு ஜீவன் ஆளுமைக்கு மேலாக இருந்தால் எப்படி இருப்பார் என்பதை குறித்த கருத்து கொண்ட ஒரே மக்கள் கிறிஸ்தவர்கள் தான். மற்ற எல்லா மனிதர்களும் தேவன் ஆளுமைக்கு அப்பாற்பட்டவர் என்று சொன்னாலும் அவர்கள் அவரை தனிப்பட்ட நபர் அல்லாதவர் போலவே காண்கின்றனர். அதாவது தனிப்பட்ட விதத்தில் நம்முடன் இடைபடுகிற தேவனாக அல்ல. நீங்கள் மிகவும் நெருக்கமான தனிப்பட்ட விதத்துக்குரிய ஒன்றை தேடுவீர்களானால், ஒரு மனிதனுக்கு மேலான ஏதோ ஒன்றை, பின்னர் அந்தக் கேள்வி கிறிஸ்தவ கருத்தா? அல்லது பிற கருத்துக்களா? என்று தேர்ந்தெடுப்பதில் அல்ல. கிறிஸ்தவ கருத்து ஒன்று மட்டுமே சந்தையில் உள்ளது.

மறுபடியும், இந்த வாழ்விற்கு பின்னர் அல்லது பல வாழ்க்கைகளுக்கு பின்னர் மனித ஆத்துமா தேவனுக்குள்ளாக உறிந்து கொள்ளப்படும் என்று சில மனிதர்கள் சிந்திக்கின்றனர். ஆனால், தாங்கள் சொல்லவரும் அர்த்தத்தை விவரிக்க நினைக்கும் போது இவ்வாறாக எண்ணுகிறார்கள். எப்படி ஒரு பொருள் இன்னொரு பொருளுக்குள் ஈர்த்துக்கொள்ளப்கொள்ளப்படுகிறதோ, அதுபோல, நமது ஜீவனும் தேவனுக்கு உள்ளாக ஈர்த்துக் கொள்ளப்படுகிறது என்று. ஒரு துளி தண்ணீர் கடலில் கலப்பது எப்படி இருக்கிறதோ அதுபோலவே இதுவும் என்கிறார்கள். ஆனால் நிச்சயமாக அதுவே அந்த துளியின் முடிவாகும். இதுவே நமக்கும் நிகழ்வதாக இருக்குமானால் நாம் முற்றிலுமாக உயிர் வாழ்வதை நிறுத்தி விடுகிறோம் என்பதற்கே அது ஒப்பாகிறது. ஒரு உயிர் தேவனுக்குள் முற்றிலும் இழுத்துக் கொள்ளப்பட்ட பின்பும் அவை தாமாகவே இருக்கின்றன என்ற கருத்து கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமே உள்ளது. இறையியல் என்பது நடைமுறைக்குரியது என்று நான் உங்களை எச்சரித்து இருந்தேன். நமது

வாழ்க்கையின் முழு நோக்கமுமே தேவனுடைய ஜீவனுக்குள் நாம் இழுத்துக் கொள்ளப்படுவதற்காகத்தான். வாழ்க்கை என்ன என்பதனை குறித்த தவறான கருத்துக்கள் அதை கடினம் ஆக்கிவிடும். இப்பொழுதும் இன்னும் சில நிமிடங்கள் என்னை நீங்கள் கவனமாக பின்பற்ற வேண்டும் என்று உங்களை நான் நிச்சயம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

வெளியில் நீங்கள் மூன்று விதங்களில் அசையலாம்– இடது அல்லது வலது, பின்னதாக அல்லது முன்னதாக, மேலாக அல்லது கீழாக. ஒவ்வொரு திசையும் இவை மூன்றில் ஒன்றாகும் அல்லது இவைகள் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுப்பதாகும். இதுவே மூன்று பரிமாணங்கள்.இப்பொழுது கவனியுங்கள் ஒரு பரிணாமத்தை மாத்திரம் பயன்படுத்துவீர்களானால் நீங்கள் ஒரு நேர்கோட்டை வரையலாம். நீங்கள் இரண்டு பரிணாமத்தை பயன்படுத்துவீர்களானால் சதுரத்தை வரையலாம். சதுரம் என்பது நான்கு நேர்க்கோடுகளைக் கொண்டது. இன்னும் ஒரு படி முன் செல்லலாம். உங்களிடம் மூன்று பரிணாமங்கள் இருந்தால் நீங்கள் திடப்பொருள் என்று அழைக்கப்படும் கனசதுரத்தை[1] வரையலாம்.– கனசதுரம் அல்லது திரட்டிய சீனி போன்ற பொருள். கனசதுரம் என்பது ஆறு சதுரங்களால் உருவாக்கப்பட்டது.

உங்களுக்கு இந்த செய்திக்கூற்றை புரிந்துகொள்ள முடிகிறதா? ஒரு பரிமாண உலகம் என்பது ஒரு நேர்க்கோடு. இரு பரிமாண உலகிலும் உங்களுக்கு கிடைப்பது நேர்க்கோடுகள். ஆனால், பல கோடுகள் சேர்ந்து ஒரு உருவம் உருவாக்கப்படுகிறது. மூன்று பரிமாண உலகிலும் உங்களுக்கு கிடைப்பது பல உருவங்கள் இணைந்து உருவாகும் ஒரு கனப்பொருள். வேறு வார்த்தைகளை சொன்னால், மிக உண்மையானதும் அதிக சிக்கல்களைக் கொண்ட நிலையை நெருங்குகையில் நீங்கள் அடிப்படையான நிலையில் கண்டுகொண்ட காரியங்களை பின்னாக விட்டுவிடுவதில்லை. இப்பொழுதும் அது உங்களுடனேயே இருக்கும். ஆனால், புதிய வகையில் ஒருங்கிணைந்த ஒன்றாக– உங்களுக்கு எளிதான நிலை மட்டுமே தெரிந்திருக்கும் பட்சத்தில் இதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாது. இப்பொழுதும் கிறிஸ்தவர்கள் தேவனைப் பற்றி கூறும் காரியங்கள் இந்த கொள்கைகளையே உள்ளடக்கி உள்ளது. மனித நிலை என்பது எளிதான மற்றும் வெறுமையான நிலை. மனித நிலையில் ஒரு மனிதன் என்பவர் ஒரு ஆள். இரண்டு நபர்கள் என்றால் அவர்கள் இரு வேறு ஆட்கள் –எப்படி இரண்டு பரிமாணங்களில் (ஒரு தாளில் என்று எடுத்துக் கொண்டால்) ஒரு சதுரம் என்றால் ஒரு உருவம், இரண்டு சதுரங்கள் என்றால் இரு வேறு உருவங்கள். தெய்வீக நிலையிலும் நீங்கள் ஆளுமைகளை காண முடியும். ஆனால், நீங்கள் வேறு விதத்தில் ஒருங்கிணைந்ததாக காண முடியும்.அதனை, அங்கு வாழாத நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியாது.

1 cube

தேவனின் பரிமாணத்தில் நாம் பேசும் பொழுது அங்கு ஒரு ஜீவன் மூன்று நபர்களாக இருப்பதையும் அப்படி இருந்தும் அவர் ஒருவராக இருப்பதையும் காணலாம். எப்படி ஒரு கனசதுரம் ஆறு சதுரங்கள் கொண்டதாயினும் ஒரு கன சதுரமாக உள்ளதோ அதுபோல. நிச்சயமாக இப்படி ஒரு நபரை நம்மால் புரிந்து கொள்ள முடியாதுதான்– வெளியில்[1] இரு பரிமாணங்களே இருக்கிறது என்று நாம் நினைக்கும் பட்சத்தில், நம்மால் சரியாக ஒரு கன சதுரத்தை யோசித்துப் பார்க்க முடியாது. ஆனால், ஒரு மங்கலான புரிதலை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அப்படி நாம் செய்யும்போது முதன்முறையாக நம் வாழ்வில் ஒரு நேர்மறை எண்ணங்களை அடைகிறோம். அது எவ்வளவு மங்கலாக இருந்தாலும் அது மிகவும் நெருக்கமான ஒன்றைப் பற்றியதும் ஒரு நபரை விட மேலான ஒன்றைப் பற்றியதும் ஆகும். அது நம்மால் யூகித்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனாலும் நமக்கு அது சொல்லப்பட்ட போது ஒருவர் தன்னால் யூகிக்க முடிவது போல் உணர்வார்.ஏனென்றால், நமக்கு ஏற்கனவே தெரிந்த எல்லாவற்றோடும் அது பொருந்துவதாக காணப்படுகிறது.

மூன்று தனிப்பட்ட நபரை நாம் கற்பனை செய்யக்கூடாததால், அவரைக் குறித்து பேசுவதால் என்ன நன்மை இருக்க போகிறது? என்று நீங்கள் கேட்கலாம். இதில் முக்கியமான காரியம் என்னவென்றால், உண்மையாகவே அந்த மூன்று தனிப்பட்ட நபருக்குள் நாம் இழுத்துக் கொள்ளப்பட வேண்டியது தான். அது எந்த நேரத்திலும் நடக்கலாம் நீங்கள் விரும்பினால் இன்று இரவில் கூட. நான் என்ன பொருள்பட சொல்கிறேன் என்றால் ஒரு சாதாரண கிறிஸ்தவன் முழங்காலிட்டு தன் ஜெபங்களை சொல்ல துவங்குகிறான். அவன் தேவனேடு தொடர்பு கொள்ள முயற்சிக்கிறான். அவன் ஒரு கிறிஸ்தவனானால் அவனுக்குத் தெரியும் தன்னை ஜெபிக்கச் சொல்லி தூண்டுபவரும் தேவனே என்று. தேவன் அவனுக்குள் இருந்து பேசினார். அவனுக்கு இருக்கும் எல்லா உண்மையான தேவனை குறித்த அறிவும் கிறிஸ்துவினிடமிருந்து வருகிறது என்று அவனுக்கு தெரியும். கிறிஸ்து என்பவர் மனிதர். அவர் தேவனாய் இருந்தார். அந்த கிறிஸ்து அவனுக்கு பின்னாக நின்று கொண்டிருக்கிறார். அவனுக்கு ஜெபம் செய்வதற்கு உதவுகிறார். அவனுக்காக ஜெபிக்கிறார். இப்பொழுது நீங்கள் நடந்து கொண்டிருக்கிறது என்ன என்று பார்க்கிறீர்கள். தேவனிடமே அவன் ஜெபித்துக் கொண்டிருக்கிறான்– அவன் அடைய நினைக்கும் குறிக்கோள் அவர்தான். அவனுக்குள் இருந்து அவனை உந்தித்தள்ளி ஜெபிக்க வைக்கும் உற்சாகமூட்டும் வல்லமையும் தேவன்தான். தேவன்தான் குறிக்கோளுக்கு நேராக அவனை தள்ளிய சாலை அல்லது பாலமும். ஆதலால், ஒரு சாதாரண சிறிய படுக்கையறையில் ஒரு சாதாரண மனிதன் தன் ஜெபத்தை சொல்லுகையில், இந்த மூன்று தனிப்பட்ட ஜீவனாய் முழுமையான மூன்று மடங்கு ஜீவனானவர் உண்மையாய் இருக்கிறார். அந்த மனிதன் உன்னதமான வாழ்விற்குள் இழுத்துக்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறான்.இதனை நான் சோயி [2] அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை என்கிறேன். அவன் தேவனால் தேவனுக்குள் இழுத்துக்கொள்ளப்பட்டான் இருந்தபோதிலும் அவன் அவனாகவே இருந்தான்.

1 space
2 zoe

இப்படித்தான் இறையியல் தொடங்கியது. மக்களுக்கு ஓரளவு தேவனை பற்றி ஏற்கனவே தெரிந்திருந்தது. பின்னர் தன்னை தேவன் என்று சொல்லிக் கொண்ட ஒரு மனிதன் வந்தார். ஆனால், நீங்கள் பைத்தியம் என்று நிராகரித்து விடக்கூடிய மனிதனாய் அவர் இல்லை. அவர்களை அவர் நம்ப வைத்தார்.அவர் கொல்லப்பட்டதை அவர்கள் கண்டார்கள். அதன் பின்னும் அவர்கள் அவரை சந்தித்தார்கள். அதன் பின்னர் அவர்கள் ஒரு சிறு சமூகமாக மாறின பொழுது, அவர்கள் தேவனை தங்களுக்குள் இருக்க கண்டார்கள். அவர்களை அவர் அவர்கள் முன்பதாக செய்ய முடிந்திடாத காரியங்களை செய்யும்படி வழி நடத்தினார், செய்யச் செய்தார். அவர்கள் அந்த அனைத்தையும் வைத்துப் பார்த்தபோது அவர்கள் தாங்கள் மூன்று தனிப்பட்ட தேவன் என்பதன் கிறிஸ்தவ விளக்கத்திற்கு தாங்கள் வந்தடைந்திருப்பதை கண்டு கொண்டார்கள்.

இது நாமாகவே கொண்டு வந்த ஒரு விளக்கம் அல்ல இறையியல் என்பது சோதனையை அடிப்படையாகக் கொண்ட அறிவு ஆகும். சிறியதான மதங்களே கற்பனையானது. நான் சோதனையின் அடிப்படையிலான அறிவியல் என்று கூறும் பொழுது அது ஒரு விதத்தில் பிற அறிவியல் சோதனைகளைப் போலானது என்று பொருள்பட சொன்னேன். ஆனாலும், எல்லாவற்றிலும் அல்ல. நீங்கள் பாறைகளை பற்றி படிக்கும் ஒரு புவியியல் வல்லுனரானால், நீங்கள் பாறைகளைத் தேடிச் செல்ல வேண்டும். அவைகள் உங்களிடம் வராது. நீங்கள் அவைகளிடம் செல்லும்போது அவைகளால் ஓடி செல்ல இயலாது. துவக்க முயற்சி உங்கள் மேலேயே சார்ந்துள்ளது. அவைகளால் உதவவோ மறுக்கவோ முடியாது. ஆனால், நீங்கள் ஒரு விலங்கியலாளராய் இருந்து காட்டு விலங்குகளை அவைகளின் சொந்த இருப்பிடத்தில் புகைப்படம் எடுக்க விரும்பினால், அது பாறைகளை படிப்பதை விட சற்று வேறுபட்டது. காட்டு விலங்குகள் உங்களிடம் வராது ஆனால் உங்களிடமிருந்து அவைகள் விலகி ஓட முடியும். நீங்கள் மிகவும் அமைதியாக இருக்கவில்லை என்றால் அவைகள் ஓடிவிடும். அவைகளிடமிருந்தும் மிகச் சிறிய முயற்சியின் இழையை காணலாம்.

இப்பொழுது ஒரு படி மேலாக; நீங்கள் ஒரு மனிதரை குறித்து அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளலாம், அவர் உங்களை தன்னிடம் விடக்கூடாது என்று உறுதியாக இருந்தால், அவரை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது. அவரது நம்பிக்கையை நீங்கள் வெல்ல வேண்டும் இந்த காரியத்தில் துவக்க முயற்சி சரியாக பகிரப்பட்டுள்ளது. ஒரு நட்பு உண்டாக இருவர் வேண்டுமே. தேவனை நீங்கள் அறிய வேண்டும் என்று வரும்போது முதல் முயற்சி அவருடைய பகுதியிலேயே உள்ளது. அவராகவே தன்னை உங்களிடம் வெளிப்படுத்தாத பட்சத்தில் நீங்கள் என்ன செய்து பார்த்தாலும் உங்களால் அவரை அறிந்து கொள்ள முடியாது. சொல்லப்போனால் அவர் தன்னை எல்லோரிடமும் வெளிப்படுத்துவதை விட அதிகமாக சிலரிடம் வெளிப்படுத்துகிறார் அவர்கள் அவருக்கு மிகவும் பிடித்தவர்கள் என்பதினால் அல்ல. ஒரு மனிதனுடைய முழு மனதும் குணங்களும் தவறான நிலையில் இருக்கும் போது அவரால் தன்னை அவனுக்கு வெளிப்படுத்துவது என்பது முற்றிலும் கூடாத

காரியமாக இருப்பதாலேயே. ஒரு சூரியனுக்கு தனக்கு பிடித்தது என்று எதுவும் இல்லாவிட்டாலும், எப்படி அதனால் சுத்தமான கண்ணாடியில் பிரதிபலிப்பதை போல தூசி படிந்த கண்ணாடியில் பிரதிபலிக்க முடியாதோ அது போலவே.

இவ்வாறாக, இதை வேறுவிதத்திலும் சொல்லலாம். உங்களிலிருந்து வெளியில் உள்ள கருவிகளை பிற அறிவியலில் பயன்படுத்துவீர்கள் (நுண்ணோக்கி தொலைநோக்கி என்னும் பொருட்களை போல). தேவனை உங்கள் மூலமே காண முடியும் அதற்கான கருவி முழுவதுமாக நீங்களே. ஒரு மனிதன் தன்னை சுத்தமாகவும் பிரகாசமாகவும் வைத்துக் கொள்ளவில்லை என்றால் தேவனை பார்க்கும் அவன் பார்வை மங்கலாக இருக்கும். அழுக்கான தொலைநோக்கியை கொண்டு பார்க்கும் பொழுது தெரியும் நிலவைப் போல. அதனால் தான் மோசமான நாட்டிற்கு மோசமான மதம் உள்ளது. அவர்கள் தேவனை அழுக்கு கண்ணாடி வில்லையின்[1] மூலம் பார்க்கின்றனர். தேவன் தன்னை தான் இருக்கிற வண்ணமாக உண்மையான மனிதனிடமே காண்பிக்க முடியும். இது தனித்து நல்லவர்களாய் இருக்கும் மனிதர்களுக்கு மாத்திரமல்ல. ஆனால், ஒரே உடலாக இணைக்கப்பட்ட மனிதர்களுக்கே, அவர்கள் ஒருவரை ஒருவர் நேசிக்கிறார்கள் ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள். ஒருவருக்கொருவர் அவரை காண்பிக்கிறார்கள். மானிடர் என்று பொருள்பட தேவன் நினைத்தது இதுவே. இசைக் குழுவில் உள்ள குழு உறுப்பினர்கள் போலவும், உடலில் உள்ள உறுப்புகள் போலவும்.

ஆகையால் தேவனைக் குறித்து அறிந்து கொள்ள போதுமான ஒரே கருவி என்பது அவருக்காக காத்திருக்கும் முழு கிறிஸ்தவ சமுதாயமே. கிறிஸ்தவ சகோதர ஐக்கியமே, இந்த அறிவியலுக்குரிய தொழில்நுட்பக் கருவி–ஆய்வு கூட ஆடை ஆகும். இதனால் தான் சில வருடங்களுக்கு ஒரு முறை என வெளிவரும் சில மனிதர்களுடைய காப்புரிமை கொண்ட அவர்களது எளிமையாக்கப்பட்ட சொந்த மதம் கிறிஸ்தவ வழக்கத்திற்கு மாற்றாக வந்தாலும் அவைகள் உண்மையாக நேரத்தை வீணடிக்கின்றன. ஒருவர் தன்னிடம் கருவிகள் எதுவும் இல்லாததால் ஒரு பழைய கண்ணாடியை மட்டும் வைத்துக்கொண்டு உண்மையான வான சாஸ்திரிகளை சரி செய்ய முயல்வது போல் இருக்கும் அது. அவன் சில உண்மையான வான சாஸ்திரிகளை விட அவன் புத்திசாலியாக கூட இருக்கலாம். அவன் தன்னுடைய வாய்ப்பை கெடுத்துக் கொள்ளுகிறான். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவனைக் குறித்த யாவற்றையும் எல்லோரும் மறந்து விட்டார்கள். ஆனால், உண்மையான அறிவியல் இன்னும் சென்று கொண்டு தான் இருக்கிறது.

கிறிஸ்தவம் என்பது நாம் கற்பனை செய்யும் ஒன்றாக இருக்குமானால், நாம் அதை இலகுவாக்கிக் கொள்ள முடியுமே. ஆனால், அது அப்படி அல்ல. எளிமையாக்கி கொள்வதில் மதங்களை உருவாக்கும் மனிதர்களோடு நாம் போட்டியிட முடியாது.

1 lens

நம்மால் எப்படி முடியும்? நாம் உண்மையை கையாண்டு கொண்டிருக்கிறோம். உண்மையை குறித்து கவலைப்படாத எவராலும் நிச்சயமாக எளிமையாக இருக்க முடியும்.

# 3. நேரமும் நேரத்திற்கு அப்பாற்பட்டதும்

புத்தகங்களை வாசிக்கும் போது பக்கங்களை தாவாமல் வாசிக்க வேண்டும் என்று சொல்லுவது ஒரு சிறுபிள்ளைத்தனமான கருத்து. விவேகமான மனிதர் எவரும் தனக்கு பயன்படாத அத்தியாயத்திற்கு வரும்போது எளிதாக பக்கங்களை புரட்டி விடுவார்கள். இந்த அத்தியாயத்தில் சில வாசகர்களுக்கு பிரயோஜனமாக இருக்கலாம் என்கிற காரியங்களை குறித்து பேச போகிறேன். ஆனால், மற்றவர்களுக்கு இது வெறும் தேவையில்லாத சிக்கலாக தோன்றலாம். நீங்கள் அந்த இரண்டாவதாக சொன்ன வாசகர்களாக இருக்கும் பட்சத்தில், இந்த அத்தியாயத்தை குறித்து கவலைப்படாமல் நீங்கள் அடுத்த அத்தியாயத்திற்கு நேராக சென்று விடுங்கள் என்று அறிவுரை சொல்கிறேன். கடைசி அத்தியாயத்தில் நான் ஜெபம் என்னும் தலைப்பை குறித்து பேச வேண்டியதாயிற்று. அது உங்கள் மனதிலும் என் மனதிலும் இன்னும் புதிதாக இருக்கும் போதே, ஜெபம் என்னும் முழு கருத்து சிலருக்கு கடினமாக இருப்பதைகுறித்துப் பேசப் போகிறேன். ஒரு மனிதன் அதை இவ்வாறாக என்னிடம் சொன்னார். ‘‘சரிதான் நான் தேவனை நம்புகிறேன். ஆனால், என்னால் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து என்னவென்றால், அவர் எப்படி பல நூறு கோடிக்கணக்கான மக்களுடைய ஜெபங்களை ஒரே கணத்தில் கேட்டு பதில் அளிக்கிறார்? ’’ என்பதே. இதைப் போன்றே பலரும் உணர்வதை நான் கண்டிருக்கிறேன்.

இப்பொழுதும், முதலாவதாக கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்த முழு பிரச்சனையும் ‘‘ஒரே கணத்தில் அத்தனை வார்த்தைகளும்’’ என்கிறதால்தான் வருகிறது. நம்மில் பலருக்கும் தேவனிடம் விண்ணப்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரும் பட்சத்தில் எண்ணிக்கைக்குள் இல்லாத விண்ணப்பங்களுக்கு அவர் பதில் அளிக்கிறார் மற்றும் அதை செய்வதற்கு அவருக்கு அளவற்ற நேரம் இருக்கும் என்று கற்பனை செய்கிறோம். ஆக இதற்குப் பின்னால் இருக்கும் பிரச்சனைக்குரிய கருத்து என்னவென்றால், ஒரு கணத்தில் தேவன் செய்ய வேண்டியதான பல காரியங்களே ஆகும். சரி, இதுவும் நமக்கு நிகழ்வதுதான். நமது வாழ்க்கை ஒரு கணத்திற்கு அடுத்து மறுகணம் என்றே நம்மிடம் வருகிறது. அடுத்த நொடி வரும்பொழுது இந்த நொடி மறைந்திருக்கும். ஒரு காரியத்தை செய்வதற்கு சிறிதான இடமே ஒரு கணத்தில் இருக்கும். நேரம் என்பது அப்படித்தான் இருக்கும். நாம் இந்த நேரங்களை ஒரு பொருட்டாக எண்ணுகிறது இல்லை, இந்த நேரத் தொகுப்பு கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வாழ்க்கை நம்மிடம் வரும் முறை மட்டுமல்ல, இப்படித்தான் எல்லா காரியங்களும் இருக்கிறது. முழு பிரபஞ்சமும் தேவனும் எப்பொழுதும் கடந்த காலத்திலிருந்து நிகழ்காலத்திற்கு நம்மைப் போலவே கடந்து வருகிறார்கள் என்று நாமாகவே கருதி கொள்ள வாய்ப்புள்ளது. ஆனால், கற்றுத் தேர்ந்த அநேக மனிதர்கள் அதை ஒப்புக்கொள்வதில்லை. இறையியலாளர்களே சில

விஷயங்கள் நேரங்களுக்கு உட்பட்டது அல்ல என்று முதலில் சொன்னார்கள். பின்னர் தத்துவவாதிகள் அக்கருத்தை எடுத்துக் கொண்டனர். இப்பொழுது சில விஞ்ஞானிகளும் அதையே செய்கின்றனர்.

எல்லா விதத்திலும் நிச்சயமாக தேவன் நேரத்திற்குள் இல்லை. அவருடைய வாழ்வு ஒரு கணம் சென்றதும் மறுகணம் என்று இல்லை. இன்று இரவு 10:30 மணியளவில் லட்சக்கணக்கான மக்கள் அவரிடம் ஜெபிக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளலாம். அவை அனைத்தையும் அவர் அந்த பத்தரை என்னும் நேரத் துளியில்தான் கேட்க வேண்டுமென்று இல்லை. பத்தரை மணியோ அல்லது உலகம் துவங்கினது முதற்கொண்டு ஒவ்வொரு கணமும் அவருக்கு நிகழ்காலமே ஆகும். தனது விமானம் மோதி தீக்கிரையானபோது செய்யப்பட்ட ஒரு விமானியின் ஒரு நொடிப்பொழுது ஜெபத்தை கேட்க அவரிடம் முழு நித்தியமும் இருக்கிறது.

இது கடினமானது என்று எனக்கு தெரியும் ஒரே மாதிரி அல்லாத ஒன்றை கொடுக்க முயற்சி செய்கிறேன். ஆனால், இது கொஞ்சம் அது போலவே இருக்கும். நான் ஒரு புதினத்தை எழுதுகிறேன் என்ற வைத்துக் கொள்ளலாம். நான் இவ்வாறாக எழுதுகிறேன். மேரி தனது வேலையை முடித்த மாத்திரத்திலேயே மறு கணம் கதவை தட்டும் ஓசை அவளுக்கு கேட்டது. என்னுடைய கதையில் என் கற்பனை நேரத்தில் வாழும் மேரிக்கு வேலையை முடித்துவிட்டு பின்னர் கதவை தட்டும் சத்தத்தை கேட்க இடைவெளி இல்லை. ஆனால்,மேரியை உருவாக்கிய நானோ அந்த கற்பனை நேரத்தில் வாழ்வதில்லை. அந்த வாக்கியத்தின் முதல் பாதியை மட்டும் எழுதிவிட்டு இரண்டாம் பாதியை எழுதுவதற்குள் நான் 3 மணி நேரம் உட்கார்ந்து கொண்டு மேரியை குறித்து அசராமல் யோசித்துக் கொண்டே இருக்கலாம். என் புத்தகத்தின் ஒரே கதாபாத்திரம் மேரி என்பது போல அவளைக் குறித்து எவ்வளவு நேரம் எனக்கு தோன்றுகிறதோ அவ்வளவு நேரம் யோசித்துக் கொண்டே இருக்கலாம். நான் அவ்வாறு கழித்த மணி நேரங்கள் மேரியின் கால நேரத்தில் தோன்றப் போவது இல்லை (அந்த கதையின் உள் நிகழும் நேரம்).

இது கச்சிதமான விளக்கம் இல்லைதான். ஆனால், நான் உண்மை என்று நினைப்பது குறித்த ஒரு சிறு பார்வையை இது கொடுத்திருக்கும். ஒரு கதாயாதாசிரியர் அவருடைய சொந்த கதை எழுதும் நேரத்தில் எப்படி நேரம் எடுக்கிறாரோ அதுபோலவே தேவனும் இந்த பிரபஞ்சத்தை குறித்த அவருடைய நேரத்தில் நிதானமாய் இருக்கிறார். நம் ஒவ்வொருவர் மேலும் கவனம் வைக்க எண்ணிலடங்காத கவனம் நம்மில் அவருக்கு உள்ளது. நம் அனைவரையும் மொத்தமாக அவர் கையாள வேண்டியதில்லை. நீங்கள் ஒருவர் மாத்திரமே அவரால் படைக்கப்பட்டவர் போல, அவரோடு நீங்கள் முற்றிலும் தனிமையாக இருக்கிறீர்கள். கிறிஸ்து மரித்த போது நீங்கள் மாத்திரமே உலகில் தனியாக இருப்பது போல உங்களுக்காக மரித்தார்.

என் உவமை உடைந்து போகும் விதம் இதுதான். .ஒரு நேர தொடரில் இருந்து வெளிவரும் போது (ஒரு கற்பனை நேரம்) ஒரு கதை ஆசிரியர் அடுத்த நேரத்தொடருக்கு செல்கிறார் (அவரது வாழ்வில் உண்மையான நேரம்). ஆனால், தேவன் நேரத் தொடரில் எல்லாம் வாழ்வதில்லை என்று நான் நினைக்கிறேன். நம் வாழ்வை போல சிறு துளிகளாக ஒரு கணம் விட்டு கணம் என்று தேவனின் வாழ்க்கை இருப்பதில்லை. அவருக்கு எப்படி என்று சொல்லப் போனால், இப்பொழுதே 1920 மற்றும் ஏற்கனவே 1960. ஏனெனில், அவர்தான் அவரது வாழ்க்கையே.

நேரத்தை நாம் பயணிக்க கூடிய நேர்க்கோடு என்று நீங்கள் காட்சி செய்து கொண்டால், அப்பொழுது தேவனை அந்த கோடு வரையப்பட்ட முழு பக்கம் என்று நீங்கள் காட்சியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த நேர்கோட்டின் பகுதிகளை குறித்து ஒன்றன்பின் ஒன்றாக நாம் வரலாம். ஆ–விற்கு வருவதற்கு முன்னாக நாம் அ–வை பின்தள்ளி விட வேண்டும். அதை தள்ளி விடாமல் நாம் இ–ஐ அடைய முடியாது. தேவன், மேலிருந்து, வெளியில் இருந்து, சுற்றிலும் இருந்து அந்த முழு கோட்டையும் உடையவராய் இருக்கிறார், காண்கிறவராய் இருக்கிறார். இது புரிந்து கொள்வதற்கு ஏற்ற கருத்தாய் இருக்கிறது. ஏனெனில்,கிறிஸ்தவத்தில் உள்ள பிரத்தியட்சமான பிரச்சனைகளை அது நீக்குகிறது. நான் கிறிஸ்தவனாவதற்கு முன்பாக நான் மறுத்த காரியங்களில் ஒன்று பின் வருகிறது. முழு பிரபஞ்சத்தையும் வைத்திருக்கிற மற்றும் இயங்கச் செய்கிற, எங்கும் இருக்கிற, நித்தியமான தேவன் முன்பு மனிதனானார் என்று கிறிஸ்தவர்கள் சொல்லுகிறார்கள். அப்பொழுது நான் கேட்டேன், ‘‘சரிதான். ஆனால், அவர் குழந்தையாய் இருந்தபோது அல்லது அவர் தூங்கிக் கொண்டிருந்தபோது எப்படி இந்த முழு பிரபஞ்சமும் சென்று கொண்டே இருந்தது? என்று. எப்படி அவர் ஒரே நேரத்தில் எல்லாம் அறிந்த தேவனாகவும் மற்றும் தன் சீஷர்களை பார்த்து யார் என்னை தொட்டது என்று கேட்ட மனிதனாகவும் இருந்தார்? என்று.’’ நீங்கள் கவனித்தீர்கள் என்றால் பிரச்சனைக்குரிய நேரத்தின் வார்த்தைகள். ‘‘அவர் குழந்தையாய் இருந்த பொழுது என்பதே’’– அவர் எப்படி அதே நேரம் இருந்தார்? வேறு வார்த்தையில் சொன்னால் ஏதோ தேவன் நேரத்தில் உள்ளார் என்றும் அதைப் போலவே கிறிஸ்துவின் வாழ்க்கையும் என கற்பனை செய்து கொண்டேன், தேவனுடைய நேரத்திலிருந்து ஒரு சிறிய நேரத்தை எடுத்ததே அவர் பாலஸ்தீனத்தில் இயேசுவாக வாழ்ந்தது என்று– எப்படி என் முழு வாழ்வில் இருந்து ஒரு சிறு பகுதியே நான் ராணுவத்தில் சேவை செய்த என் நாட்கள் போல. அப்படித்தான் நம்மில் அநேகரும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். தேவன் வாழ்ந்து கொண்டே இருக்கும் வேளையில் எதிர்காலத்தில் அவரது மனித வாழ்க்கை இருந்தது: பின்னர் அவர் பின் திரும்பி பார்க்கும் வண்ணம் அது கடந்த காலமானது. ஆனால், உண்மையான கருத்துக்களுக்கு இது பெரும்பாலும் ஒன்றும் சொல்வதில்லை. கிறிஸ்து இந்த உலகத்தில் பாலஸ்தீனத்தில் வாழ்ந்த காலத்தின் நேரங்களை அவர் தேவனாக, வெளிக்கும்[1] அப்பாலாக இருப்பதோடு உள்ள நேர தொடரினையும் ஒன்றிணைக்க

[1] space

முடியாது. இது உண்மையிலேயே, நான் பரிந்துரைக்கும் தேவனை குறித்த காலத்துக்கு அப்பாற்பட்ட உண்மை. தேவனுடைய தெய்வீக தன்மையில் மனித அனுபவங்களான பலவீனம் மற்றும் அறியாமை, எப்படியோ அவருடைய முழு தெய்வீக வாழ்வில் இணைந்து விடுகிறது. தேவனில் உள்ள இந்த மனித வாழ்க்கை நம்முடைய கண்ணோட்டத்தின்படி இந்த உலகத்தின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு காலம் (அது கி.பி முதல் வருடத்தில் இருந்து சிலுவையில் அறைதல் வரை). ஆதலால், இது தேவன் வாழ்ந்த சரித்திரத்தின் காலங்கள் என்று கற்பனை செய்து கொள்கிறோம். ஆனால் தேவனுக்கு வரலாறு என்பதே கிடையாது. அவர் ஒரு முழுமையான மற்றும் முற்றிலும் உண்மையானவர் என்பதால் அவருக்கு வரலாறு கிடையாது. அதாவது ஒரு வரலாறு இருக்கிறது என்று சொல்லும் போது உங்களுடைய நிதர்சனத்தில் ஒரு பகுதியை தொலைத்து விடுவது (ஏனென்றால் அது கடந்த காலத்திற்குள் ஏற்கனவே சென்றுவிட்டது). அதில் இன்னும் ஒரு பகுதி வரவில்லை: (ஏனெனில் அது இன்னும் எதிர்காலத்தில் இருக்கிறது): சிறிது நிகழ்காலமே அன்றி அதில் வேறொன்றும் இல்லை. அதை குறித்து பேசுவதற்கு முன்னாகவே அதுவும் மறைந்துவிடும். நாம் அப்படி தேவனை நினைப்பதை தேவன் தடை செய்வாராக. நாம் அப்படி யோசிக்க நினைத்தல் கூட முயலாதிருப்போம்.

தேவன் நேரத்தில் இருந்தார் என்று நம்புவதற்கு கடினமான காரியம் இதுவே. தேவனை நம்பும் ஒவ்வொருவரும் ஒன்றை நம்புகிறோம். அதாவது நாம் நாளை என்ன செய்யப் போகிறோம் என்பது அவருக்கு தெரியும் என்று. ஆனால் நாம் செய்வதெல்லாம் அவருக்கு தெரிந்திருக்கும் பட்சத்தில், நான் விடுதலையாக வேறு எப்படி செயல்படுவது?. தேவனும் நம்மை போலவே நேர்கோட்டில் முன்னேறுகிறார் என்னும் எண்ணமே மறுபடியும் கடினமாக்குகிறது. ஒரே வித்தியாசம் என்னவென்றால் அவரால் முன்னோக்கி பார்க்க முடியும். ஆனால், நம்மால் முடியாது. சரி, அது உண்மையாக இருக்குமானால், தேவனால் நம் செயல்களை முன்னமே பார்க்க முடியும் என்றால், அதைச் செய்யாமல் இருக்க நமக்கு இருக்கும் விடுதலையை புரிந்து கொள்வது நமக்கு மிகவும் கடினமாகிவிடும். ஆனால், தேவன் காலக்கோட்டிற்கு மேலாகவும், அப்பாலாகவும் உள்ளார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இருக்கும் பட்சத்தில் இன்றைய தினம் நமக்கு எப்படி தெரிகிறதோ அதுபோலவே அவருக்கும் நாளைய தினம் இருக்கிறது. தேவனுக்கு நீங்கள் செய்வதெல்லாம் தெரிந்து இருப்பதால் இந்த கணம் நீங்கள் செய்யும் எந்த காரியமும் விடுதலை குறைவானது இல்லை– இதே போலவே, நாளைய தினத்திற்கான உங்களுடைய செயல்கள் அவருக்கு தெரிந்திருக்கும் தான்– ஏனெனில், அவர் ஏற்கனவே நாளைய தினத்தில் இருந்து உங்களை கவனிக்கிறார். இதன் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் செய்து முடிக்கும் வரை உங்கள் செயல்கள் அவருக்கு தெரியாது: ஆனால், நீங்கள் செய்து முடிக்கும் நேரமும் அவருக்கு ஏற்கனவே நிகழும் காலமான, இப்போதைய நேரம் ஆகும்.

இந்தக் கருத்து எனக்கு மிகவும் உதவியது இது உங்களுக்கு உதவவில்லை என்றால் விட்டுவிடுங்கள். இது ஒரு கிறிஸ்தவ கருத்து. இது உயர்ந்த மற்றும் ஞானமுள்ள கிறிஸ்தவர்களிடம் இருந்தது. இதற்கு மாறாக கிறிஸ்தவத்தில் வேறு எதுவும் இல்லை. ஆனால், இது வேதத்திலேயோ அல்லது எந்த பிரமாணத்திலேயோ இல்லை. இதை ஏற்றுக்கொள்ளாமலோ அல்லது இதை ஒரு விஷயமாகவோ கூட எண்ணாமல் நீங்கள் நல்ல கிறிஸ்தவர்களாக இருக்க முடியும்.

# 4. நல்ல தொற்று

ஒரு படத்தை தெளிவாக மனதில் கொள்ள உங்களை வேண்டிக் கொண்டு இந்த அத்தியாயத்தை துவங்குகிறேன். இரண்டு புத்தகங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக ஒரு மேஜையின் மேல் இருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அடியில் உள்ள புத்தகமே மேல் உள்ளதை தாங்கிக் கொண்டிருப்பது, வெளிப்படையாக தெரிந்ததே. கீழ் இருக்கும் புத்தகத்தின் மேலேயே மேலுள்ள புத்தகம் இருக்கிறது. அந்த காரணத்தால் அது மேஜையை தொடாமல் மேஜையில் இருந்து இரு இன்ச்[1] மேலாக உள்ளது. அடியில் உள்ள புத்தகத்தை (அ) என்றும் அதன் மேல் உள்ள புத்தகத்தை (ஆ) என்றும் வைத்துக் கொள்ளலாம். (அ)–வினுடைய நிலை (ஆ)–வினுடைய நிலைக்கு காரணமாய் இருக்கிறது. இது புரிகிறதா? இப்பொழுது ஒன்றை கற்பனை செய்யலாம் இது உண்மையிலேயே நடக்க வாய்ப்பில்லை. ஆனால், விளக்கத்திற்காக இவ்வாறு செய்யலாம். அந்த இரு புத்தகங்களும், நித்திய நித்திய காலமாக அதே நிலையில் இருக்கிறது என்று கற்பனை செய்து கொள்ளலாம். அப்படி இருக்கும் போது, (ஆ)–வினுடைய நிலை (அ)–வினுடைய நிலையை பொறுத்து இருக்கும். ஆனால் எந்த மாற்றமும் இல்லாமல் (அ)–வினுடைய நிலை (ஆ)–வினுடைய நிலைக்கு முன் இருந்திருக்க முடியாது. வேறு வார்த்தையில் சொன்னால் முடிவு என்பது காரணத்திற்கு பின்னர் வராது. ஆமாம், முடிவுகள் அப்படியே வரும். இது ஏன் முக்கியம்? என்பதை இன்னும் ஒரு கணத்தில் கண்டு கொள்வீர்கள்.

சில பக்கங்களுக்கு முன்னால் சொல்லியிருந்தேன். தேவன் என்பவர் ஒருவராயினும் மூவரைக் கொண்டவர். ஒரு கன சதுரத்தில் ஆறு சதுரங்கள் இருந்தாலும் எப்படி அது ஒரு உடலாக இருக்கிறதோ அதுபோலவே. ஆனால், இவர்கள் எப்படி இணைந்திருக்கிறார்கள் என்பதை நான் விவரிக்க ஆரம்பித்ததில் இருந்தே அவர்களில் ஒருவர் ஏற்கனவே இருந்தார் என்பது போலவே கேட்கும்படியான வார்த்தைகளை பயன்படுத்த வேண்டியதாயிற்று. முதலாம் நபர் தகப்பன் என்பவர் மற்றும் இரண்டாம் நபர் மகன் ஆவார். முதலாம் நபர் இரண்டாம் நபரை பெற்றெடுத்தார். அதை நாம் பெற்றெடுத்தல் என்போமே அன்றி உருவாக்குதல் என்று சொல்ல மாட்டோம். ஏனெனில், அவர் கொடுத்தது அவரைப் போன்ற ஒருவரையே. இந்த வகையில் தகப்பன் என்ற ஒரே வார்த்தையே பயன்படுத்தப்பட வேண்டியது. ஆனால், துரதிஷ்டவசமாக அவர் முதலில் இருந்தவர் என்று அது அறிவுறுத்துகிறது– ஒரு தகப்பன் தன் மகனுக்கு முன்னதாகவே இருப்பது போல. ஆனால், அது அப்படி அல்ல. முன்,பின் என்று எதுவும் இல்லை. ஆதலால் தான் நான் எப்படி ஒரு பொருள் முன்னாக இல்லாவிட்டாலும், எப்படி அதற்கு மூலப்பொருளாக இருக்க முடியும் என்று விவரிக்க நேரம் எடுத்துக் கொண்டேன். தகப்பன் இருப்பதால் குமாரன் இருக்கிறார். தகப்பன் மகனை தந்ததற்கு முன் எதுவும் இருந்ததில்லை.

1 inch

இதைக் குறித்து சிந்திப்பதற்கான சிறந்த வழி இப்படியாக இருக்கலாம். அந்த இரு புத்தகங்களையும் கற்பனை செய்து கொள்ள உங்களிடம் சொல்லியிருந்தேன். அநேகமாக அதையே நீங்கள் செய்தீர்கள். அதாவது கற்பனை என்ற செயலைச் செய்ததன் மூலம் உங்களுக்கு ஒரு படம் கிடைத்தது. மிகத் தெளிவாக அந்த செயலை செய்யும் காரணமாக, அதன் விளைவு ஒரு மனப்படமாகவும் இருக்கிறது. ஆனால், நீங்கள் முதலில் கற்பனை செய்தீர்கள் பின்னர் அந்தப் படம் உங்களுக்கு கிடைத்தது என்ற பொருள் வராது. நீங்கள் கற்பனை செய்த அந்த கணமே அந்த படம் அங்கு இருந்தது. உங்கள் சித்தம் (விருப்பம்) எப்பொழுதும் அந்த படத்தை வைத்துக் கொண்டு இருந்தது. ஆனால், அந்த கற்பனை செய்யும் செயலும், அந்த படத்தைப் பெற்ற செயலும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது ஒரே நேரத்தில் முடிந்தது. ஒரு ஜீவன் எப்பொழுதும் இருந்து கொண்டிருந்து, எப்பொழுதும் ஒரு காரியத்தை சிந்தனை செய்து கொண்டிருக்கும் போது, அந்த செயல் எப்பொழுதும் ஒரு மனப்படத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். ஆனால், அந்த படம் அந்த செயலைப் போலவே நித்தியமானது.

இதைப்போலவே, நாம் குமரனையும் சிந்திக்க வேண்டும். சொல்லப் போனால் தகப்பனிடம் இருந்து வீசி பாய்கிறவராயும், அதாவது ஒரு விளக்கிலிருந்து வரும் ஒளியைப் போல, நெருப்பிலிருந்து வரும் சூட்டை போல, மனதில் இருந்து வரும் எண்ணங்களை போல, அவர் தகப்பனுடைய சுய வெளிப்பாடாக தகப்பன் சொல்ல வருவது எதுவோ அதைச் சொன்னார்.அவர் அப்படி சொல்லாத நேரமே இருந்ததில்லை. ஆனால் நடக்கிறது என்னவென்று கவனித்தீர்களா? வெளிச்சம் அல்லது சூடு என்னும் படங்களாகிய இவைகள் அவரை இரண்டு நபர்களுக்குப் பதிலாக இரண்டு விஷயங்கள் என்று சொல்லலாம். புதிய ஏற்பாட்டில் உள்ள தந்தையை மற்றும் குமாரனைக் குறித்த படமானது, நாம் அதற்கு பதிலாக மாற்றாக எதைக் கொண்டு வர முயற்சித்தாலும் அவை எல்லாவற்றையும் விட துல்லியமாக உள்ளதாக இருக்கிறது. வேத வார்த்தையில் இருந்து விலகிச் செல்லும்போது எப்போதும் இதுதான் நடக்கிறது? ஒரு விசேஷித்த கருத்தை தெளிவாகுவதற்கு ஒரு கணம் தள்ளிச் செல்வது மிகச்சரியானதுதான். ஆனால், நீங்கள் மறுபடியும் பின் சென்றாக வேண்டும். இயல்பாகவே நாம் தேவனை விவரிக்க முயற்சிப்பதை விட தேவனுக்கே தன்னை எப்படி விவரிக்க வேண்டும் என்று மிக நன்றாக தெரியும். நாம் நினைக்கும் எதையும் விட முதல் மற்றும் இரண்டாம் நபருக்குள்ளான உறவைப் போன்றதே தகப்பனுக்கும் குமாரனுக்குமான உறவு என்பது தேவனுக்கு நன்றாக தெரியும். நாம் அதில் இருந்து அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால், இது ஒரு அன்பான உறவு. தகப்பன் குமாரனில் மகிழ்ச்சி கொள்கிறார், குமாரன் தந்தையை நோக்கி பார்க்கிறார்.

தொடர்ந்து செல்வதற்கு முன், எதார்த்தத்தில் இதன் முக்கியத்தை கவனிக்க வேண்டும். தேவன் அன்பானவர் என்கிற கிறிஸ்தவ வாக்கியத்தை திருப்பி கூற எல்லா மக்களுக்கும் விருப்பம் உண்டு. ஆனால், அவர்கள் அப்படி சொல்லும் போது ஒன்றை கவனிப்பது இல்லை தேவனிடம் குறைந்தபட்சம் இரு நபர்கள் இல்லை என்றால் தேவன் அன்பானவர் என்று சொல்லுவதில் உண்மையான அர்த்தம் இருக்காது. அன்பு

என்பது ஒருவருக்கு மற்றொருவர் மேல் உள்ளதாகும். தேவன் ஒருவராய் இருப்பாரானால் பின்னர் படைக்கப்படுவதற்கு முன் அவர் அன்பானவராக இல்லை. இந்த மக்கள் தேவன் அன்பானவர் என்று சொல்லும் போது நிச்சயமாக வேறொன்றையே சொல்லுகிறார்கள்: அவர்கள் உண்மையாக ‘‘அன்பு என்பது தேவன்’’ என்று கூறுகிறார்கள். அவர்கள் என்ன பொருள்பட கூறுகிறார்கள் என்றால் நம்முடைய அன்பு என்னும் உணர்ச்சியானது எப்படியும், எங்கேயும் அது எழுந்தாலும், அது என்ன விளைவை விளைவித்தாலும், அது மிகவும் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும்: ஒருவேளை அவர்கள் சொல்லுவது சரியாக இருக்கலாம். ஆனால், கிறிஸ்தவர்கள் ‘‘தேவன் அன்பானவர்’’ என்று சொல்லும் போது வேறு அர்த்தம் கொள்ளவே அவர்கள் சொல்லுகிறார்கள். உயிர் உள்ளதும் தொடர்ந்து சக்தி வாய்ந்த அன்பின் செயல் தேவனிடம் உள்ளது. அது மற்ற எல்லாவற்றையும் உருவாக்கியுள்ளது என்று நம்புகிறார்கள்.

அதுவே ஒரு வேளை கிறிஸ்தவத்திற்கும் மற்ற மதங்களுக்கும் இடையே உள்ள பெரிய வேறுபாடு ஆகும். கிறிஸ்தவத்தில் தேவன் என்பவர் நிலையான பொருள் அல்ல– அவர் ஒரு தனிப்பட்ட நபரும் அல்ல– மாறாக சுறுசுறுப்பான, துடிக்கும் செயல்பாடுகள் கொண்ட, ஒரு ஜீவன், கிட்டத்தட்ட ஒரு நாடகத்தைப் போன்றவர். நான் பயபக்தி இல்லாதவன் என்று நீங்கள் என்னை எண்ணாத பட்சத்தில், கிட்டத்தட்ட ஒரு நடனம் போன்றவர் அவர். தந்தைக்கும் குமரனுக்குமான இந்த ஐக்கியம் ஒரு உயிருள்ள திடமான ஒன்றாகும். இந்த ஐக்கியமே, ஒரு நபர் ஆவார். எனக்குத் தெரியும் இது விளங்கிக் கொள்ள முடியாதது தான். ஆனால், அதை இப்படி பாருங்கள் மனிதர்களுக்குள்ளாக அவர்கள் குடும்பமாகவோ அல்லது சங்கமாகவோ அல்லது வியாபாரிகள் தொழிற்சங்கமாகவோ ஒன்று சேரும்போது மக்கள் அந்த குடும்பம் அல்லது வியாபாரிகளின் தொழிற்சங்க உணர்வை குறித்து பேசுவார்கள். ஏனென்றால், அந்த தனிப்பட்ட நபர்கள் ஒன்றுகூடி இருக்கும்போது ஒரு விதமான பேச்சையும் நடந்து கொள்ளுதலையும் வளர்த்திருப்பார்கள். அவர்கள் தனித்தனியே இருந்தால் அது அவர்களுக்குள் இருக்காது[1].

அது ஒரு இனத்துக்குரிய ஆளுமை உயிரோடு வந்தது போல் இருக்கும். நிச்சயமாக அது உண்மையான நபர் அல்ல. ஆனால், அது நபர் போன்ற ஒன்று. ஆனால், அது தேவனுக்கும் நமக்கும் உள்ள பல வேறுபாடுளுக்குள் ஒன்று மட்டுமே. தந்தையும் குமாரனும் இணையும் ஜீவன் ஒரு உண்மையான நபர். அவரே மூன்று நபர்களான தேவனில் மூன்றாம் நபர். இந்த மூன்றாம் நபர் தூய ஆன்மா அல்லது தூய ஆவி என்று இறையியல் மொழியில் அழைக்கப்படுகிறார். இவரைக் குறித்து மற்றிருவரையும் விட மங்கலான நிழல் போன்ற எண்ணங்களே உங்களில் இருக்குமாயின் ஆச்சரியப்படாதிருங்கள். அப்படி தெரிவதற்கு ஒரு காரணம் உள்ளது. கிறிஸ்தவ வாழ்க்கையில் நீங்கள் எப்பொழுதும் அவரை பார்த்துக் கொண்டிருக்க மாட்டீர்கள்.

1 இந்த கூட்டு நடக்கைகள் ஒருவேளை அவர்களது தனிமனித நடவடிக்கையை விட சிறந்ததாகவோ மோசமானதாகவோ இருக்கலாம்.

அவர் எப்பொழுதும் உங்கள் மூலமாகவே கிரியை செய்கிறவர். நீங்கள் தந்தையை அங்கு இருப்பவராகவும், உங்கள் முன் இருக்கிறவராகவும், குமாரனை உங்கள் அருகில் நிற்பவராகவும், உங்களுக்கு ஜெபிக்க உதவுகிறவராகவும், உங்களை இன்னொரு குமாரனாக மாற்றுகிறவராகவும் நினைப்பீர்களானால், அப்பொழுது இந்த மூன்றாம் நபரை உங்களுக்குள் அல்லது பின் இருக்கும் ஒன்றாக எண்ணிக் கொள்ளுங்கள். ஒருவேளை சிலருக்கு மூன்றாம் நபரில் இருந்து ஆரம்பித்து அதாவது கடைசியிலிருந்து ஆரம்பித்து முன்னுக்குச் செல்வது இலகுவாய் இருக்கும். தேவன் அன்பானவர், அந்த அன்பு மனிதர்கள் மூலமாய் கிரியை செய்கிறது. விசேஷமாக, முழு கிறிஸ்தவ சமூகத்தின் மூலமாய் . ஆனால், இந்த அன்பின் ஆவியானது நித்தியமாக தந்தைக்கும் குமாரனுக்கும் நடுவே உள்ளதாய் இருக்கிறது.

இப்பொழுதும் இதனால் என்ன விஷயம்? இதுவே உலகில் எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம். இந்த முழு நடனம் அல்லது நாடகம் அல்லது இந்த மூன்று–தனிப்பட்ட வாழ்க்கையின் மாதிரியானது., நம் ஒவ்வொருவரில் அரங்கேற்றப்பட வேண்டியதாக உள்ளது. அல்லது(இதை வேறுவிதமாக சொல்லப்போனால்) நாம் ஒவ்வொருவரும் அந்த மாதிரியின் உள்ளாக நுழைய வேண்டும். அந்த நடனத்தில் தன் இடத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். நமக்கு உண்டாக்கப்பட்ட மகிழ்ச்சியை அடைய வேறு வழி இல்லை. உங்களுக்கு தெரிந்த நன்மையான காரியங்களோ, கெட்ட காரியங்களோ அவைகள் ஒருவித தொற்றால் பிடிக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு இதமான சூடு வேண்டுமானால், நீங்கள் நெருப்பண்டையில் தான் நிற்க வேண்டும். நீங்கள் நனைய வேண்டுமானால், தண்ணீருக்குள் இறங்க வேண்டும். உங்களுக்கு சந்தோஷம், வல்லமை, சமாதானம், நித்திய ஜீவன், இவைகள் வேண்டுமானால் அவைகளை கொண்டிருக்கும் பொருள் அருகே நீங்கள் நெருங்க வேண்டும்.அல்லது, அந்த பொருளுக்குள் செல்ல வேண்டும். அவைகள் தேவன் தான் விரும்பினால் எல்லாருக்கும் எடுத்துக் கொடுக்கக்கூடிய பரிசு இல்லை. அவைகள் நிதர்சனத்தின் நடுமையத்திலிருந்து பீச்சி அடிக்கப்படும் ஒரு பெரும் ஆற்றல் அல்லது அழகு ஆகும். அந்த தூறலுக்கு அருகில் நீங்கள் இருக்கும்போது, நீங்கள் நனைந்து விடுவீர்கள். அப்படி இல்லாவிடில், நீங்கள் உலர்ந்து இருப்பீர்கள் ஒரு தரம் ஒரு மனிதன் தேவனேடு இணைக்கப்பட்ட பின்பு அவன் எப்படி நித்தியமாக வாழாமல் இருக்க முடியும். ஒரு மனிதன் தேவனிடமிருந்து பிரிந்த பிறகு அவன் உதிர்ந்து மறைவதை தவிர வேறு என்ன செய்ய முடியும்.

ஆனால், எப்படி தேவனேடு இணைக்கப்பட முடியும்?. அந்த மூன்று தனிப்பட்ட ஜீவனுக்குள் எப்படி நாம் எடுத்துக் கொள்ளப்பட முடியும்?

இரண்டாம் அத்தியாயத்தில் நாம் பெற்றெடுத்தல் மற்றும் உருவாக்குதல் என்பவைகளைப் பற்றி பேசியவைகள் உங்களுக்கு நினைவிருக்கிறதா? நாம் தேவனால் பெற்றெடுக்கப்படவில்லை நாம் அவரால் உருவாக்கப்பட்டு மட்டுமே இருக்கிறோம்: நம்முடைய இயல்பான நிலையில் நாம் தேவனின் குமாரர்கள் அல்ல

வெறும் சிலைகளே. நமக்கு சோயி[1]அல்லது ஆவிக்குரிய வாழ்க்கை இல்லை. வெறும் பயோஸ்[2] அல்லது இப்பொழுது சென்று கொண்டிருக்கும் மற்றும் மரணிக்கும் உயிரியல் வாழ்வு மட்டுமே உள்ளது. இப்பொழுதும் கிறிஸ்தவம் அளிக்கும் முழு சலுகையும் இதுவே. தேவனுக்கு நாம் இடமளிக்கும் போது, நம்மால் கிறிஸ்துவின் வாழ்வைபகிர்ந்துகொள்ளமுடியும். அப்படிசெய்வோமானால், உருவாக்கப்பட்டதல்லாமல் பெற்றெடுக்கப்பட்டதான அந்த வாழ்வை நாம் பகிர்வோம். அது தேவனின் குமாரனான கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் இருந்த மற்றும் எப்பொழுதும் இருக்கப் போகும் வாழ்க்கை. கிறிஸ்துவே தேவனின் குமாரன். இந்த வாழ்க்கையை நாம் பகிர்வோமானால் நாமும் தேவனின் குமாரர்கள் தான். அவர் தந்தையிடம் அன்பு கூர்ந்தது போலவே நாமும் அன்பு கூறுவோம். மற்றும் ஆவியானவர் நமக்குள் எழுந்தருள்வார். அவரிடம் உள்ள அந்த ஜீவனை மற்ற மனிதரிடம் பரப்பும்படியாகவே அவர் மனிதராக இவ்வுலகிற்கு வந்தார். அதையே நான் நல்ல தொற்று என்கிறேன். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சிறிய கிறிஸ்துவாக மாற வேண்டும். கிறிஸ்தவனாவதன் முழு நோக்கமும் இதுவே வேறு ஒன்றும் இல்லை.

1 zoe
2 Bios

# 5. பிடிவாதமான பொம்மை போர் வீரர்கள்.

தேவனுடைய குமாரன் மனிதர்களை தேவனுடைய குமாரர்கள் ஆக்க மனிதனாகப் பிறந்தார். நமக்குத் தெரியாது– எப்படியும், எனக்குத் தெரியாது– மனித இனம் தேவனுக்கு எதிராக கலகம் செய்யாமல் எதிரியுடன் சேராமல் இருந்திருந்தால், எப்படி காரியங்கள் நடந்திருக்கும் என்று. ஒருவேளை ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவுக்குள்ளாக இருந்திருக்கலாம். அவன் பிறந்ததிலிருந்தே கர்த்தருடைய ஜீவனோடு பங்கு கொண்டிருந்திருக்கலாம். ஒருவேளை பயாயோஸ்[1] அல்லது இயற்கை வாழ்வு உருவாக்கப்படாத சோயி–யினுள்[2] உடனடியாகவும் சிறிது சிறிதாகவும், உள்ளீர்க்கப்பட்டு இருந்திருக்கலாம். ஆனால், இது எல்லாம் கற்பனையே. நம் எல்லோருக்கும் இப்பொழுது காரியங்கள் எப்படி செயல்படுகிறது என்பதை கவலை.

இப்பொழுது இருக்கும் நிகழ்காலத்தின் நிலை இதுவே. இவ்விரு வாழ்க்கையும் வேறு என்பது மட்டுமல்ல, அவை அப்படியே எப்பொழுதும் இருந்திருக்கலாம். ஆனால், நிச்சயமாக மாறுபாடாய் உள்ளது. நம்மில் உள்ள இயற்கை வாழ்வானது சுயத்தை மையமாகக் கொண்டது. அது சீராட்டுதலையும் மெச்சிக் கொள்ளப்படுதலையும் விரும்புகிறது. பிறர் வாழ்க்கையை வைத்து லாபம் கொள்ள, பயன்படுத்த விரும்புகிறது. முழு பிரபஞ்சத்தையும் தன் சுயநலத்திற்காக சுரண்ட விரும்புகிறது. குறிப்பாக தான் தனியே விடப்படுவதையே விரும்புகிறது. தன்னை குறைவாக எண்ண வைக்கக்கூடிய சிறந்ததான பலனுள்ளதான உயர்வான எதனிடமிருந்தும் விலகி இருக்க விரும்புகிறது. ஆவிக்குரிய உலகத்தின் வெளிச்சத்திற்கும்,காற்றிற்கும் அது பயப்படுகிறது. எப்படி அழுக்காகவே வளர்க்கப்பட்டவர்கள் குளிக்க பயப்படுவார்களோ அதுபோல. ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில் இது மிகவும் சரியே. அதற்குத் தெரியும் இந்த ஆவிக்குரிய வாழ்க்கை அதை பிடித்துக் கொண்டால், அதனுடைய எல்லா சுயமையங்களும், சுய விருப்பமும் கொல்லப்படும் என்று, அதை தவிர்க்க கைகலப்பு, வாய் கலப்பு என்று எதையும் செய்து சண்டையிடும்.

நீங்கள் சிறு குழந்தையாக இருக்கும் போது உங்கள் பொம்மைகள் எல்லாம் உயிர்பெற்றால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும் என்று எண்ணி இருக்கிறீர்களா? சரி நீங்கள் அவைகளை உயிருடன் கொண்டு வந்து விடுவீர்கள் என்று வைத்துக் கொள்ளலாம். ஒரு தகர போர் வீரனை ஒரு உண்மையான சிறிய மனிதனாக மாற்றிவிட்டீர்கள் என்று கற்பனை செய்து கொள்ளலாம். அது அந்த தகரத்தை சதையாக்கும் மாற்றத்தையும் உள்ளடக்கி இருக்கும். ஒருவேளை அது அந்த தகரப் போர் வீரனுக்கு பிடிக்கவில்லை என்றால், அவனுக்கு சதையாக தன் தகரம் மாறுவதில் இஷ்டம் இல்லை என்றால் அவனுக்கு தெரிவதெல்லாம் அந்த தகரம் பாழாக்கப்படுகிறது

1 BIOS
2 zoe

என்பதே. நீங்கள் அவனை கொல்லுகிறீர்கள் என்று அவன் நினைக்கிறான். அதை தடுக்க அவன் செய்யக்கூடிய எல்லாவற்றையும் செய்வான். அவன் ஒத்துழைக்காவிட்டால் அவன் ஒரு மனிதனாக முடியாது.

நீங்கள் அந்த தகர போர்வீரனை என்ன செய்திருப்பீர்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால், தேவன் நம்மை குறித்து இதைச் செய்தார். இரண்டாம் நபரான தேவன், குமாரன். அவர் தாம் மனிதனாகவே மாறினார். ஒரு உண்மையான மனிதனாக இந்த உலகில் பிறந்தார். குறிப்பிட்ட உயரத்தைக் கொண்ட நிஜமான மனிதனாக, குறிப்பிட்ட நிறத்தை உடைய தலைமுடியை கொண்டவராக, குறிப்பிட்ட மொழியை பேசுகிறவராக, பல கற்களின் கனத்திற்கு ஒத்த எடையுள்ளவராக, எல்லாம் தெரிந்த முழு பிரபஞ்சத்தையும் படைத்த நித்திய ஜீவனானவர் ஒரு மனிதனாக மட்டும் மாறவில்லை, அதற்கு முன்னாக ஒரு குழந்தையானார், அதற்கு முன்னாக ஒரு பெண்ணின் உடலில் உள்ள கருவானார். இதை விளங்கிக் கொள்ள வேண்டுமானால், நீங்கள் நத்தையாகவோ, நண்டாகவோ மாற எவ்வாறு விரும்புவீர்கள் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.

இதன் விளைவு என்னவென்றால், மனிதர் உண்மையாக எப்படி இருந்திருக்க வேண்டுமோ அப்படி ஒரு மனிதர் உங்களுக்காக இப்பொழுது உள்ளார். தாயிடமிருந்து வெளிப்பட்ட உருவாக்கப்பட்ட உயிரைக் கொண்ட ஒரு மனிதன் தன்னை முழுமையாக பூரணமாக ஜெனிப்பிக்கப்பட்ட ஜீவனாக மாற்றிக் கொண்டது. அவரிலிருந்து இயற்கையான மனித சிருஷ்டி முழுமையான தெய்வீக குமாரனுக்குள் எடுத்துக் கொள்ளப்பட்டது. மனித இனத்திடம் இருந்த ஒன்று அதனை வந்தடைந்த ஒரு கணமது. அது கிறிஸ்துவின் வாழ்வுக்குள்ளாக பாய்ந்தது. நமக்கு முழுமையாக கடினமாக இருப்பது இந்த இயற்கை வாழ்வை அழிப்பது என்பதால், அவர் எல்லா விதத்திலும் மனிதனுடைய ஆசையை கொல்லும் ஒரு உலக வேலையையே ஒவ்வொரு விதத்திலும் தெரிந்து கொண்டார். வறுமை, வீட்டினரே தவறாய் புரிந்து கொள்ளும் நிலை, தன்னுடைய மிக நெருக்கமான நண்பர்களுள் ஒருவரால் காட்டிக்கொடுக்கப்படுதல், காவலரால் ஏளனம் செய்யப்படுதல், முரட்டுத்தனமாக இழுக்கப்படுதல் மற்றும் சித்திரவதை செய்து கொல்லப்படுதல். அப்படியாக தன்னில் உள்ள மனித சிருஷ்டியை கொன்ற பின்பு ஒவ்வொரு நாளும் அது கிறிஸ்துவினுடைய ஜீவனோடு இணைக்கப்பட்டிருப்பதால், அது மறுபடியும் உயிருடன் வந்தது கிறிஸ்துவில் இருந்த மனிதன் உயிரோடு வந்தான்: தேவன் மாத்திரம் அல்ல. உண்மையான மனிதனை நாம் முதல்முறையாக கண்டோம் என்ற முழு கருத்து இதுதான். ஒரு தகரப் போர் வீரன்– மற்ற தகரப் போர் வீரர்களைப்போல, உண்மையான தகரம்– முழுமையாக அற்புதமாக அவன் உயிருடன் வந்தான்.

நாம் இப்பொழுதுதான் தகரப் போர் வீரனை குறித்து என் விளக்கத்தை போட்டு உடைக்கும் கருத்திற்கு வந்திருக்கிறோம். ஒரு பொம்மையான போர் வீரன் அல்லது சிலையினுடைய விஷயத்தில் ஒன்று உயிருடன் வருவதால் மற்ற எதற்கும் ஒரு

மாற்றமும் நிகழாது. அவை அனைத்தும் தனித்தனியானவை. ஆனால் மனிதர்கள் அப்படியல்ல. அவர்கள் தனித்தனியாக நடப்பதை நீங்கள் பார்ப்பதால் உங்களுக்கு அவர்கள் தனித்தனியானவர்கள் என்று தோன்றுகிறது. ஆனால் நாம் படைக்கப்பட்டபடி நிகழ்காலத்தை மாத்திரமே நாம் காண முடியும். நமக்கு கடந்த காலத்தை பார்க்க முடிந்திருக்குமானால், அது நிச்சயமாக வேறு மாதிரியாக இருந்திருக்கும். ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் தன் தாயின் ஒரு பகுதியாகவும், தந்தையின் ஒரு பகுதியாகவும் இருந்த காலம் உண்டு மற்றும் அவர்கள் தாத்தா, பாட்டியின் பகுதியாக இருந்த நேரமும் உண்டு. தேவன் மனித இனம் பரம்பி இருப்பதை பார்க்கும் பார்வை கொண்டு நீங்கள் பார்த்தீர்களானால் புள்ளி புள்ளியாக தனித்தனியே உள்ள காரியங்களாக அது இருக்காது. அது ஒன்றாய் வளர்ந்து வரும் ஒரு காரியமாகவே இருக்கும் மிகவும் சிக்கலான ஒரு மரத்தை போல. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் மற்றவருடன் இணைக்கப்பட்டவராய் காணப்படுவார். அது மட்டுமல்ல ஒவ்வொரு மனிதர்களிடமும் அவர்கள் பிரியாமல் இருப்பது போலவே தேவனுடன் இருக்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் பெண்ணும் உலகெங்கும் உள்ள ஒவ்வொரு குழந்தையும் தேவனாலேயே, உணர்வோடும் சுவாசத்தோடும் இந்த கணத்தில் இருக்கிறது. தேவன் இவைகளை தொடர்ந்து இயங்க செய்கிறார் என்று சொல்லலாம். அதன் விளைவாக, கிறிஸ்து மனிதனாவது என்று சொல்லும் போது நீங்கள் ஒரு தகரப் போர்வீரர் ஆகலாம் என்று சொல்லவரும் ஒன்றல்ல. எப்பொழுதும் மனித கூட்டத்தை பாதிக்கும் ஒன்று ஒரு நேரத்தில் முழு மனித கூட்டத்தையும் புதிய வழியில் பாதிக்க தொடங்கி விட்டது என்பதே ஆகும். அந்த கணத்திலிருந்து அதன் விளைவுகள் முழு மனித இனத்தின் மேலும் பரவி விட்டது.

அப்படியானால், அவர் மனிதத் திரள் கூட்டத்திற்கு செய்த மாற்றம்தான் என்ன? அது இதுதான். அதாவது, தேவனுடைய குமாரராக நம்மை மாற்றுவது. உருவாக்கப்பட்டது என்ற நிலையிலிருந்து, பெற்றெடுக்கப்பட்ட ஒன்றாக மாற்றுவது. இந்த தற்காலிகமான உயிரியல் வாழ்வில் இருந்து நம்மை நித்தியமான காலத்திற்குள்ளாக ஆவியின் வாழ்வில் நுழையச் செய்வது. இவைகளை செய்து முடித்தார். கோட்பாடுகளின் படி பார்த்தால் மனித இனம் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டது. தனிப்பட்டவர்களாக நாம் தான் அந்த இரட்சிப்பை நமக்கு உரித்தாக்கிக் கொள்ள வேண்டும். ஆனால், மிகக் கடினமானது மற்றும் ஒரு துளி கூட நமக்காக நாம் செய்ய முடியாததும் நமக்காக செய்யப்பட்டாயிற்று. நம்முடைய சுய முயற்சியினால் நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஏறிச் செல்ல முயற்சிக்க வேண்டியது இல்லை. அது ஏற்கனவே மனித இனத்திற்குள் இறங்கி வந்துவிட்டது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் அது முழுமையாக உள்ள தேவனாய் மாத்திரம் அல்லாமல் உண்மையான மனிதனாய் உள்ளவரிடம் நம்மை திறந்து கொடுப்பதே ஆகும்.அவர் நமக்காக நம்மில் அதைச் செய்வார். நல்ல தொற்றைப்பற்றி நான் கூறியதை நினைவில் கொள்ளுங்கள். நம் சொந்த இனத்தில் உள்ள ஒருவரிடமே இந்த புதிய ஜீவன் உள்ளது. அவரிடம் நாம் நெருங்கும் போது அதை அவரிடம் இருந்து நம்மிடம் பற்றிக் கொள்ளும்.

நிச்சயமாக, இதை நீங்கள் எல்லாவிதத்திலும் வெவ்வேறு வழியில் வெளிப்படுத்தலாம். கிறிஸ்து எனக்காக மரித்தார் என்று நீங்கள் சொல்லலாம். நாங்கள் செய்ய வேண்டியதை கிறிஸ்து எங்களுக்காக செய்ததால் தந்தை எங்களை மன்னித்துவிட்டார் என்று நீங்கள் சொல்லலாம். நாங்கள் ஆட்டுக்குட்டியின் ரத்தத்தால் கழுவப்பட்டோம் என்றும் நீங்கள் சொல்லலாம். கிறிஸ்து மரணத்தை தோற்கடித்தார் என்றும் நீங்கள் சொல்லலாம்.

இவையெல்லாம் உண்மையே. இதில் எதுவும் உங்களுக்கு ஏற்றதாக இல்லாவிடில் அதை தனியே விட்டு விடுங்கள். உங்களுக்கு ஏற்ற சூத்திரத்தோடு தொடருங்கள், மற்றும் நீங்கள் எது செய்தாலும், பிறர் உங்கள் சூத்திரத்தை அல்லாமல் வேறு ஒன்றை பயன்படுத்துவதால், அவர்களிடம் சண்டையிடத் தொடங்கி விடாதீர்கள்.

# 6. இரு குறிப்புகள்

தவறான புரிந்து கொள்ளுதலை தவிர்ப்பதற்காக கடைசி அத்தியாயத்தின் இரு கருத்துக்கள் மேல் இரு குறிப்புகளை சேர்க்கிறேன்.

1. ஒரு விவேகம் உள்ள விமர்சகர் கேள்வி ஒன்றை எனக்கு எழுதி இவ்வாராக கேட்டார், ''தேவனுக்கு தகரப் போர் வீரர்களை அல்லாமல் மகன்கள் தான் வேண்டும் எனும் பொழுது அவர் எதற்காக முதலில் தகர போர் வீரர்களை குமாரர்களுக்கு பதிலாக செய்து, பின்னர் அவர்களை ஒரு கடினமான மற்றும் வலி மிகுந்த செயல்முறை மூலம் அவர்களை உயிருடன் கொண்டு வர வேண்டும்?''என்று. இந்த கேள்வியின் பதிலில் ஒரு பகுதி மிகவும் இலகுவானது. இன்னொரு பகுதியானது, மனிதர்களுடைய எல்லா அறிவுக்கும் அப்பால் ஆனது. இலகுவான பகுதி இதுதான். பல நூற்றாண்டுகளுக்கு முன் தேவனை விட்டு மனிதர்கள் திரும்பி தள்ளி செல்லாது இருந்திருந்தால், அப்பொழுது இந்த செயல்முறை இவ்வளவு கடினமாகவும், வலி மிகுந்ததாகவும் இருந்திருக்காது.

அவர் அவர்களுக்கு சுய விருப்பத்தை கொடுத்ததால் அவர்களால் இதை செய்ய முடிந்தது. அவர் அவர்களுக்கு சுய விருப்பத்தை கொடுத்தது ஏனென்றால், வெறும் இயந்திரம் போல் இயங்கும் ஒரு உலகில் அன்பு இருக்காது. ஆதலால், அவர்கள் எல்லை இல்லாத அன்பை அறிந்து கொள்ள முடியாது. கடினமான பகுதி இதுதான். எல்லா கிறிஸ்தவர்களும் முழுமையாக மூலாதாரமாக ஒப்புக் கொள்வது என்னவென்றால், ஒரே ஒரு தேவனின் குமாரன் தான் உள்ளார் என்பதே.

''ஆனால், பலர் இருந்திருக்கலாமேமோ?'' என்று வலியுறுத்தி நாம் கேட்போமாகில் நாம் கடுமையான சிக்கலில் மாட்டிக்கொண்டுயிருப்பதை நாம் காண முடியும். தேவனைக்குறிக்கும் போது ''இருந்திருக்கலாமே'' என்ற வார்த்தை ஏதாவது அர்த்தம் தருகிறதா?. ஏதோ ஒரு காரியம் வித்தியாசமாக இருந்திருந்தால் குறிப்பிட்ட அந்த காரியமும் வித்தியாசமாக இருந்திருக்கும் என்று நீங்கள் சொல்லலாம். மூன்றாம் காரியமும் வேறாக இருந்திருக்கும் அந்த ஏதோ ஒன்று வேறாக இதில் இருந்திருந்தால் என்று சொல்லிக்கொண்டே போகலாம். (அச்சடிக்கும் இயந்திரத்தின் அச்சு சிவப்பாக இருந்தால் அந்தப் பக்கத்தில் உள்ள எழுத்துக்களும் சிவப்பாக இருந்திருக்கும். மற்றும் அவரிடம் அதில் சிவப்பு மை ஊற்றச் சொல்லியிருந்தால் அவர் சிவப்பு மையூற்றி இருப்பார் என்று இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்).

ஆனால், தேவனை பற்றி நீங்கள் பேசும்போது அதாவது ஆழத்தில் உள்ளவைகளைப் பற்றி, மற்ற எல்லா உண்மைகளும் சார்ந்திருக்கும் அடிப்படை உண்மையை பற்றி பேசும்போது, இது வேறு விதமாக இருந்திருக்கலாமே என்று பேசுவது முட்டாள்தனமாகும்.அது அப்படித்தான் இருக்கும். அதுவே அக்காரியாத்தின்

முடிவு. ஆனால், இதிலிருந்து பிரித்துப் பார்த்தால், தந்தையானவர் பல குமாரர்களை நித்தியமாக ஜெனிப்பித்தார் என்று சொல்லும்போது அந்த கருத்தே எனக்கு மிகவும் கடினமாய் இருக்கிறது.

அவர்கள் அநேகராய் இருக்க வேண்டுமானால் ஏதோ ஒரு விதத்தில் அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டு இருக்க வேண்டும் இரண்டு நாணயங்கள் ஒரே வடிவில் இருக்கின்றன. அவைகள் எப்படி இரண்டாகும்? அவைகள் வேறு இடங்களில் இருப்பதாலும், வேறு அணுக்களை கொண்டிருப்பதாலும் அப்படி ஆகும். வேறுவிதத்தில் சொல்ல வேண்டுமானால் அவைகளை இரண்டு என சிந்திக்க வேண்டுமானால் நாம் வெளியையும்[1] அல்லது பொருளையும்[2] கொண்டு வர வேண்டும். உண்மையிலேயே நாம் இயற்கையையும் அல்லது உருவாக்கப்பட்ட பிரபஞ்சத்தையும் கொண்டுவர வேண்டும். தந்தைக்கும் மகனுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை வெளியையும் பொருளையும் கொண்டு வராமலேயே என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஏனென்றால், ஒருவர் பெற்றவர் மற்றவர் பெற்றெடுக்கப்பட்டவர்.

தகப்பனுக்கு குமாரனோடு இருக்கும் உறவும், குமாரனுக்கு தகப்பனோடு இருக்கும் உறவும் ஒரே போன்றது அல்ல. ஆனால், அநேக குமாரர்கள் இருப்பார்களானால் அவர்கள் ஒருவரோடு ஒருவர் சொந்தமானவர்களாகவும் தகப்பனோடும் அதே உறவு கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் ஒருவரிலிருந்து ஒருவர் எப்படி வேறுபட்டவர்களாக இருக்க முடியும்? நிச்சயமாக, முதலில் அதில் உள்ள கஷ்டம் தென்படாது. ஒருவர் நினைக்கலாம் அநேக மகன்கள் என்னும் கருத்தை உருவாக்கிவிடலாம் என்று. ஆனால், நான் சிந்தித்துப் பார்த்தபோது ஏதோ ஒரு வெளியில் சேர்ந்து நிற்கும் மனித உருவங்களாக, மங்கலாக கற்பனை செய்ததாலேயே அது சாத்தியமாயிற்று வேறு வார்த்தையில் சொன்னால், நான் பிரபஞ்சத்தின் படத்தை கடத்திவந்து அந்த ஏதோ ஒன்றை அதில் வைத்து விட்டேன்.

அப்படி செய்வதை நிறுத்திவிட்டு இன்னும் தந்தையானவர் குமாரனை பெற்றெடுத்ததை சிந்திக்க முயற்சித்த போது, ''உலகிற்கு முன்னால் என்னால் எதையும் சிந்திக்க இயலாமல் இருப்பதையே காண்கிறேன்''. அந்த யோசனை வெறும் வார்த்தையாகவே மங்கி விட்டது. (இயற்கையாக– வெளியாக மற்றும் நேரமாக, பொருளாக துல்லியமாக உருவாக்கப்பட்டது அநேகத்தை சாத்தியமாக்கும் வண்ணமாகவா? ஒருவேளை முதலாவதாக அநேக இயற்கையான சிருஷ்டிகளை பிரபஞ்சத்தில் உருவாக்கி பின்னர் அவைகளை ஆவிக்குரியவைகளாக ஆக்குவதே அன்றி அநேக நித்திய ஆவிகளை உருவாக்குவதற்கு வேறு வழி இல்லையா? ஆனால், நிச்சயமாக இவையெல்லாம் கற்பனை வேலை தான்).

1 space
2 matter

2. முழு மனித இனமும் ஒரு பொருள் ஒரு பெரிய உயிர், ஒரு மரத்தைப் போல என்னும் யோசனையை, தனிப்பட்ட வேறுபாடுகள் தேவையற்றது என்ற யோசனையோடு குழப்பி விடக்கூடாது. ரவி, ராஜேஸ், மேரி என்பவர்கள் கூட்டுப் பொருளான, இனம் ஜாதி இவைகளை விட குறைவு என்ற கருத்தே அது. உண்மையாகவே, அந்த இரு கருத்துக்களும் மாறுபட்டது. ஒரே உயிரினத்தின் பகுதிகள் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடலாம். அப்படி இல்லாதவைகள் ஒரே போன்று இருக்கலாம்.

ஆறு நாணயங்கள் பிரிந்திருந்தாலும் ஒரே போன்று இருக்கும்: என்னுடைய மூக்கு,மற்றும் நுரையீரல் மிகவும் வேறுபட்டது. ஆனால், அவைகள் எல்லாம் என் உடலில் உள்ள பகுதிகளானதால் ஒரே உயிரை பொதுவாக பகிர்ந்து உயிருடன் இருக்கின்றன. கிறிஸ்தவம் ஒவ்வொரு மனிதனையும் ஒரு கூட்டத்தின் வெறும் உறுப்பினராகவோ அல்லது பட்டியலில் உள்ள பொருளாகவோ எண்ணாமல் அவர்களை ஒரு உடலில் உள்ள உறுப்புகளாக எண்ணுகிறது. ஒருவரிலிருந்து ஒருவர் வேறுபட்டவர்கள். ஒவ்வொருவரும் மற்றவரால் கொடுக்க முடியாத ஒன்றை கொடுப்பவர். நீங்கள் உங்கள் குழந்தைகளை அல்லது மாணவர்களை அல்லது அயலகத்தாரையோ உங்களை போல மாற்ற நினைக்கும் போது தேவன் அதை விரும்புவதில்லை என்று கண்டு கொள்வீர்கள்.நீங்களும் அவர்களும் வெவ்வேறு காரியங்களை செய்யும் வெவ்வேறு உறுப்புகள். மறுபக்கத்தில், நாம் பிறருடைய பிரச்சனையை குறித்து கவலைப்பட வேண்டும். ஏனெனில், அது உங்கள் வேலை இல்லை என்ற எண்ணத்தால் தூண்டப்படும் போது, அவர் வேறு நபராக இருந்தாலும் நீங்களும் அவரும் ஒரே உயிரினத்தின் பகுதிகள் என்று நினைவில்கொள்ளுங்கள். உங்களைப்போல அவரும் ஒரே உயிரினத்தின் பகுதி என்பதை நீங்கள் மறந்து விடுவீர்களானால், நீங்கள் தனித்துவவாதிகள் ஆகிவிடுவீர்கள். அவர் ஒரு தனி உறுப்பு என்பதை மறந்து, அந்த வேறுபாடுகளை அடக்கி, எல்லா மக்களையும் ஒரே போல் ஆக்க நினைப்பீர்களாகில், நீங்கள் சர்வாதிகாரியாக மாறி இருப்பீர்கள். ஆனால், ஒரு கிறிஸ்தவன் ஒரு சர்வாதிகாரியாகவோ, தனித்துவவாதியாகவோ இருக்கக் கூடாது.

எனக்கு இதை உங்களிடம் சொல்ல வேண்டும் என்று மிகுந்த ஆசையாய் இருக்கிறது– மற்றும் நீங்களும் அதிக ஆசையை உணர்ந்து என்னிடம் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்– இது இரண்டிலும் எது மோசமான தவறு? அதாவது, சாத்தான் நம்மை பிடிப்பது. அவன் தவறுகளை எப்பொழுதும் ஜோடியாகவே அனுப்புகிறான் – எதிரான ஜோடிகளை. மற்றும் அதில் எது மோசம் என்பதை சிந்திக்க நாம் அதிக நேரம் செலவு செய்ய வேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறான். ஏன் என்று உங்களுக்கு தெரிகிறது தானே? ஒரு தவறின் மீது உங்களுக்குள்ள கூடுதல் வெறுப்பை பயன்படுத்தி, எதிரான தவறுக்கு நேராக உங்களை இழுக்கிறான். ஆனால், நாம் முட்டாள்கள் ஆகிவிடக்கூடாது. நாம் குறிக்கோளின் மீது கண் வைத்து இரண்டு தவறுகளுக்கும் ஊடாக செல்ல வேண்டும். இவை இரண்டை குறித்தும் வேறு எந்த கவலையும் நமக்கு இல்லை.

# 7. நாம் பாசாங்கு செய்வோம்

மறுபடியும் உங்கள் மனதில் இரண்டு கதைகள் அல்லது இரண்டு படங்களை போட்டு நான் துவங்கலாமா? முதலாவது, நீங்கள் எல்லோரும் வாசித்திருக்கும் ‘‘அரக்கனும் அழகியும்’’ என்ற கதையே. உங்களுக்கு நினைவிருக்கும் ஏதோ ஒரு காரணத்திற்காக அந்தப் பெண் ஒரு அரக்கனை திருமணம் செய்து கொள்ள வேண்டி இருக்கும். அவளும் அப்படி செய்தாள். அது ஒரு மனிதன் என்பது போல் அவள் முத்தமிட்டாள். அவளுக்கு பெரிய விடுதலை கிடைக்கும் வண்ணம் அது மனிதனாகவே மாறினது. எல்லாம் நன்றாக சென்றது. மற்றொரு கதையானது, முகமூடி அணிந்திருக்க வேண்டிய ஒருவரை பற்றியது. அந்த முகமூடியானது அவன் உண்மையாக இருந்ததை விட அதை அணியும் போது அவனை அழகாக காட்டியது. அவன் வருடம் முழுவதும் அதை அணிய வேண்டியதாயிற்று. அதை அவன் எடுத்த போதோ அவனுடைய முகம் அதன் வடிவிற்கு ஏற்றார் போல் இசைந்து வளர்ந்திருப்பதை கண்டான். இப்பொழுது அவன் மிகவும் அழகாகி விட்டான். மாறுவேடமாக துவங்கிய ஒன்று உண்மையான ஒன்றாக மாறிவிட்டது. இந்த இரு கதைகளும் (நிச்சயமாக கற்பனையாகவே) நான் விவரிக்க நினைப்பதை சொல்ல உதவும் என்று நம்புகிறேன். இதுவரையில் நான் உண்மைகளை விவரித்து சொல்லிக் கொண்டிருந்தேன். தேவன் என்றால் என்ன மற்றும் அவர் என்ன செய்திருக்கிறார் என்று. இப்பொழுது செயல்படுத்துவது குறித்து பேச போகிறேன். இனி நாம் என்ன செய்யலாம்? இந்த எல்லா இறையியலும் என்ன மாற்றத்தை உண்டு பண்ணுகிறது?. இன்று இரவே அது மாற்றத்தை ஏற்படுத்த தொடங்கலாம். நீங்கள் இவ்வளவு தூரம் ஆர்வமாய் வாசித்து வருவதால், ஒரு ஜெபத்தை செய்யும் அளவிற்கு ஒரு வேளை நீங்கள் விருப்பப்படலாம். மற்றும் நீங்கள் எதைச் சொன்னாலும் நீங்கள் அநேகமாக கர்த்தருடைய ஜெபத்தை சொல்லுவீர்கள்

அதனுடைய முதலாவதான வார்த்தைகளே, ‘‘எங்கள் பிதாவே’’ என்பதாகும். இப்பொழுது உங்களுக்கு புரிகிறதா அது எதைக் குறிக்கிறது என்று?. அது மிகவும் வெளிப்படையாக நீங்கள் தேவனுடைய குமாரனுடைய இடத்தில் உங்களை வைக்கிறீர்கள் என்ற கருத்தையே சொல்லுகிறது. அப்பட்டமாக சொல்ல வேண்டுமானால் நீங்கள் கிறிஸ்துவை போல் உடையை அணிகிறீர்கள். நீங்கள் விரும்பினால் நீங்கள் பாசாங்கு செய்கிறீர்கள். ஏனெனில், நிச்சயமாக அந்த வார்த்தைகள் என்ன சொல்கிறது என்று நீங்கள் உணரும் போது நீங்கள் தேவனுடைய குமாரன் இல்லை என்று உணர்வீர்கள். நீங்கள் தேவனுடைய குமாரனான தந்தையின் விருப்பத்தையும் ஆசையையும் தன்னுடையதாய் இணைத்துக் கொண்ட அவரைப் போன்றவர் அல்ல. நீங்கள் உங்களை மையமாகக் கொண்ட பயம், நம்பிக்கைகள், பேராசைகள், பொறாமைகள் மற்றும் தற்பெருமை போன்றவற்றால் ஆன பொட்டணமே. இவை எல்லாம் சபிக்கப்பட்ட மரணத்திற்கே நியமிக்கப்பட்டவைகள் ஆதலால் கிறிஸ்துவைப் போல வேடம் அணிதல் என்பது ஒரு மட்டுமீறிய செயலாகும். ஆனால், விசித்திரமானது என்னவென்றால் அவரே நாம் அப்படி செய்ய கட்டளை இடுகிறார்.

ஏன்? நீங்கள் இல்லாத ஒன்றைப்போல் பாசாங்கு செய்வதினால் என்ன நன்மை இருக்க போகிறது? சரி மனித அளவின்படி கூட இரண்டு வகையான பாசாங்கு முறை இருக்கிறது என்று உங்களுக்கு தெரியும். தவறான வகையில் உண்மைக்கு பதிலாக பாசாங்கு மாத்திரமே இருக்கும். உண்மையாக உங்களுக்கு உதவி செய்யாமல் உதவி செய்வது போல நடிக்கும் மனிதர்களைப் போல். ஆனால், நல் முறை ஒன்றும் இருக்கிறது. இங்கு பாசாங்கு உண்மைக்கு நேராக வழி நடத்துகிறது. உங்களுக்கு நட்பு உணர்வு இல்லை. ஆனால், நட்புணர்வு பாராட்ட வேண்டும் என்ற பட்சத்தில் அநேகந்தரம் நீங்கள் செய்யக்கூடிய சிறந்த செயல் நட்பான பாங்கை தரித்துக் கொள்ளுதல் மற்றும் நீங்கள் இயல்பாக இருப்பதை விடவும் நட்பான பாணியில் இனிமையானவர்களாக நடந்து கொள்வதே ஆகும். நீங்கள் கவனித்து இருந்தீர்களானால் சில மணி நேரங்களில் இயல்பாக நட்பாய் இருப்பதைவிட உண்மையாகவே இன்னும் நட்பாய் இருப்பதையே உணர்வீர்கள்.

பல நேரம் இயல்பாகவே ஒரு பண்பை பெற நம்மிடம் அது ஏற்கனவே உள்ளது போல நடந்து கொள்ள ஆரம்பிப்பதே ஒரே வழி. இதனால்தான் குழந்தைகளின் விளையாட்டு மிகவும் முக்கியம். அவர்கள் எப்பொழுதும் வளர்ந்தவர்கள் போலவே பாசாங்கு செய்கிறார்கள். ராணுவ வீரர்களை போல் விளையாடுவது, கடை வைத்திருப்பது போல் விளையாடுவது ஆகியன. ஆனால் எல்லா நேரமும் அவர்கள் தங்கள் தசைகளை உறுதிப்படுத்துகிறார்கள்,மற்றும் புத்தியை கூர்மையாக்குகிறார்கள். அவர்கள் வளர்ந்தவர்களாக பாசாங்கு செய்வது உண்மையிலேயே வளர்வதில் உதவுகிறது. இப்பொழுதும் நான் கிறிஸ்துவாக வேடம் அணிந்து இருக்கிறேன் என்று உணரும் போது, ஏதோ ஒரு கணத்தில் அது பாசாங்கு என்பதைவிட உண்மையாக நடப்பது போல உணர்வீர்கள். நீங்கள் உங்கள் மனதில் பல்வேறு காரியங்கள் ஓடிக்கொண்டிருப்பதை காண்பீர்கள். ஒருவேளை நீங்கள் உண்மையாக தேவனின் குமாரனாக இருந்தால் அந்த எண்ணங்கள் உங்களுக்குள் ஓடாது. சரி, அப்படி என்றால் அதனை நிறுத்துங்கள். இல்லாவிட்டால், ஜெபத்தை சொல்வதற்கு பதிலாக நீங்கள் கீழே சென்று கடிதத்தை எழுத வேண்டும் அல்லது உங்கள் மனைவிக்கு கழுவ உதவ வேண்டும் என உணர்ந்திருக்கலாம். சரி போய் அதை செய்யுங்கள்.

என்ன நடக்கிறது என்று பாருங்கள்? கிறிஸ்துவே தேவனுடைய குமாரனாக மற்றும் தேவனாக அவரது தந்தையை போலவே உங்கள் பக்கம் தயாராக இருக்கிறார். மற்றும் ஏற்கனவே அவர் அந்த கணமே உங்கள் பாசாங்கை நிதர்சனமாகவே மாற்ற ஆரம்பித்துவிட்டார். இது, உங்கள் மனசாட்சி எதை செய்ய சொல்கிறது என்பதை வெறும் கற்பனையின்படி சொல்லுவதல்ல, நீங்கள் வெறும் மனசாட்சியிடம் கேட்டால் உங்களுக்கு ஒரு பதில் கிடைக்கும் நீங்கள் கிறிஸ்துவை போல வேடம் அணிந்ததை நினைவு கொண்டால் உங்களுக்கு வேறு பதில் கிடைக்கும். நிச்சயமாக தவறானது என்று உங்கள் மனசாட்சியால் கூறப்படாத அநேக காரியங்கள் உண்டு. விசேஷமாக உங்கள் மனதில் உள்ளவை. ஆனால், நீங்கள் தீவிரமாக கிறிஸ்துவை போல் இருக்க முயற்சிக்கும் பட்சத்தில் நீங்கள் அதை செய்து கொண்டே இருக்க முடியாது என்பதை

உடனடியாக கண்டு கொள்வீர்கள். ஏனெனில், இதற்கு மேலாக நீங்கள் சரி தவறு என்பதை பற்றி மாத்திரம் சிந்திக்கப் போவதில்லை. நீங்கள் ஒரு மனிதரிடமிருந்து நல்ல தொற்றை பெற முயற்சிக்கிறீர்கள். இது ஒரு கூட்ட விதிகளுக்கு கீழ்ப்படிவது என்பதை விட ஒரு ஓவியத்தை வரைவதை போல் ஆகும். இதில் விசித்திரமான காரியம் என்னவென்றால், ஒருவிதத்தில் இது விதிகளை கடைபிடிப்பதை விட கடினமானதாயினும் இன்னொரு விதத்தில் இது மிகவும் எளிதானது. உண்மையான தேவனுடைய குமாரன் உங்கள் அருகில் இருக்கிறார். அவர் அவரைப் போன்ற ஒன்றாகவே உங்களை மாற்ற ஆரம்பித்து விட்டார். சொல்லப்போனால், அவரது ஜீவனை போன்ற ஜீவனையும் எண்ணத்தையும் அவரது சோயியையும்[1] உங்களுக்குள் உட்புகுத்த ஆரம்பித்துவிட்டார். அவர் தகரப் போர் வீரனை உயிருள்ள மனிதனாக மாற்ற ஆரம்பித்து விட்டார். உங்களில் அதை விரும்பாதது எந்த பகுதி என்றால் தகரமாக இன்னும் இருக்கும் பகுதியே.

உங்களில் பலர் உங்கள் சொந்த அனுபவத்திற்கு இது மிகவும் வேறுபாடு உள்ளதாக உணரலாம். நீங்கள் சொல்லலாம் நான் கண்ணுக்கு புலப்படாத கிறிஸ்துவால் உதவி செய்யப்பட்டதில்லை. ஆனால்,அடிக்கடி பிற மனிதர்களால் உதவி பெற்றிருக்கிறேன் என்று. இது முதல் யுத்தத்தில் ஒரு பெண் சொன்ன கூற்றான, ''ரொட்டிகள் குறைந்ததால் அது பற்றி நான் கவலை கொள்ள போவதில்லை, ஏன் என்றால் எங்கள் வீட்டில் நாங்கள் வாட்டப்பட்டவைகளையே(ரொட்டிகளை) சாப்பிடுவோம்'' என்பதற்கு ஒத்ததாக உள்ளது. ரொட்டி இல்லை என்றால் வாட்டப்பட்ட ரொட்டி இருக்காது.

கிறிஸ்துவிடமிருந்து உதவி வரவில்லை என்றால், மற்ற மனிதர்களிடமிருந்தும் எந்த உதவியும் கிடைக்காது. அவர் நம்மில் எல்லா விதத்திலும் வேலை செய்கிறார். நாம் நினைக்கும்படி நம்முடைய மத வாழ்க்கை என்பதன் மூலம் மட்டுமல்ல, அவர் இயற்கையின் மூலம் செயல்படுகிறார். நம்முடைய சொந்த உடலின் மூலம், புத்தகங்களின் மூலம், சில நேரம் கிறிஸ்தவத்திற்கு மாறானதாக அந்த நேரத்தில் காணப்படும் அனுபவங்கள் மூலமும் சில நேரம் செயல்படுகிறார். ஒரு வாலிபன் தேவாலயத்திற்கு வழக்கத்தின் படி சென்று கொண்டிருந்தான். அதை உணர்ந்த போது கிறிஸ்தவத்தில் தனக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லி தேவாலயத்திற்கு செல்வதை நிறுத்திவிட்டான். அவன் நேர்மையாய் இருக்க வேண்டும் என்றே நிறுத்தி, அவன் தன் தாய் தந்தையை எரிச்சல் ஊட்ட செய்யாத பட்சத்தில், எப்பொழுதும் இருந்ததை விடவும் கிறிஸ்துவின் ஆவி அவன் அருகே எப்பொழுதும் இல்லாத வகையில் நெருங்கி இருக்கலாம். ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக அவர் நம் ஒவ்வொருவர் மூலமாய் ஒருவரில் ஒருவர் கிரியை செய்கிறார்.

1 Zoe

மனிதர்கள் கண்ணாடிகள் அல்லது கிறிஸ்துவை பிறரிடம் கொண்டு செல்லும் சுமை தாங்கிகள் சில நேரம்சுய நினைவில்லாமல் அதைச் சுமக்கும் சுமை தாங்கிகள். அந்த நல்ல தொற்றை அதை பெறாதவர்கள் கூட சுமந்து செல்ல முடியும். கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் தாங்களே எனக்கு கிறிஸ்தவத்தை அடைய உதவியிருக்கிறார்கள். ஆனால், பொதுவாக கிறிஸ்துவை அறிந்தவர்கள் பிறரிடம் அவரை அழைத்து வருவார்கள். ஆதலால் தான் தேவாலயம் கிறிஸ்தவர்களான முழு உடலும் ஒருவருக்கொருவர் அவரை காண்பிக்கிற மிகவும் முக்கியமானதும் ஆனது. நீங்கள் சொல்லலாம் இருவர் தனித்தனியாக கிறிஸ்தவத்தை பின்தொடரும் போது கிடைக்கும் கிறிஸ்தவத்தை விட அவர்கள் இணைந்து கிறிஸ்தவத்தை தொடரும் போது இரு மடங்கு அல்ல 16 மடங்கு மிகுதியாக இருக்கும் என்று.

ஆனால், இதை மறந்து விடாதீர்கள். ஆரம்பத்தில் ஒரு குழந்தை தனது அம்மாவின் பாலை உண்ணும் போது, அதற்கு அதன் அம்மாவை தெரியாது என்பது இயற்கையே. நமக்கு உதவும் ஒரு மனிதன் நமக்குத் தெரிந்து, அவர் பின்னால் இருக்கும் கிறிஸ்துவை நாம் காணாமல் இருப்பது அது போலவே இயற்கையானது. ஆனால், நாம் குழந்தையாகவே இருந்து விடக்கூடாது. நமக்கு உண்மையாக கொடுப்பவரை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். அப்படி செய்யாதிருப்பது பைத்தியக்காரத்தனம். ஏனென்றால், அப்படி நாம் செய்யாவிட்டால் நாம் மனிதர்களையே சார்ந்து கொண்டிருப்போம். மற்றும் அது நம்மை கைவிட்டு விடும். அவர்களில் சிறந்தவர்கள் கூட தவறுகள் செய்வார்கள். அவர்கள் எல்லோரும் மறைந்து போய்விடுவார்கள். நமக்கு உதவிய அனைத்து மக்களுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். அவர்களை நாம் கனப்படுத்தி நேசிக்க வேண்டும். ஆனால், ஒரு மனிதன் மேல் உங்கள் முழு நம்பிக்கையும் வைப்பது என்பது கூடவே கூடாது. அவர் ஒரு முழு உலகிலேயே சிறந்தவரும், ஞானம் மிகுந்தவருமாக இருந்தாலும் கூடாது. நீங்கள் மணலை வைத்து அநேக நல்ல காரியங்களைச் செய்ய முடியும். ஆனால், அதன் மேல் வீடு கட்ட முயற்சி செய்யாதீர்கள்.

மற்றும் இப்பொழுது அந்த புதிய ஏற்பாடு, எதைக் குறித்து எப்பொழுதும் பேசிக் கொண்டிருக்கிறது என்று நாம் காண ஆரம்பித்து விடுவோம். அது கிறிஸ்தவர்கள் ‘‘மறுபடியும் பிறப்பதை’’ குறித்து பேசுகிறது; அவர்கள் கிறிஸ்துவை தரித்துக் கொள்வதை கிறிஸ்து நம்மில் உருவாகுவதை நாம் கிறிஸ்துவின் மனதை உடையவர்களாக மாறுவது என்பதை குறித்து பேசுகிறது. இவைகள் சுற்றிவளைத்து கூறுவது என்னவேன்றால் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து என்ன சொன்னாரோ அந்தக் கருத்துகளை வாசித்து, அதை செயல்படுத்த வேண்டும் எப்படி ஒரு மனிதன் ப்ளேட்டோவையும்[1] மார்க்ஸ்-ஐயும்[2] வாசித்து அதை நடைமுறைப்படுத்துவதற்கு முயல்வது போல என்ற உங்கள் எண்ணத்தை எறிந்து விடுங்கள். அவைகள் அதற்கும் மேலாக ஏதோ ஒன்றைச் சொல்லுகிறது. நீங்கள் இந்த இடத்தில் இப்பொழுது இதே அறையில் நீங்கள்

1 Plato
2 Marx

ஜெபிக்கும்போது கிறிஸ்து உண்மையான நபராக உங்களுக்காக காரியங்களை செய்து கொண்டிருக்கிறார். இது இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பாக இறந்து போன ஒரு மனிதனைப் பற்றிய கேள்வி அல்ல.

இவர் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன், உங்களைப் போலவே ஒரு மனிதன், அதே நேரம் அவர் உலகைப் படைத்தபோது எப்படி இருந்தாரோ அதே தேவன், உண்மையாக உங்களிடம் வந்து உங்களுடனேயே இடைபடுகிறார். உங்களில் உள்ள பழைய இயற்கையான சுயத்தைக் கொன்று அதற்கு பதிலாக அவருடைய சுயத்தை போன்ற ஒரு சுயமாக அதை மாற்றி வைக்கிறார். முதலில், ஒரு சில கணத்திற்கு, பின்னர் நீண்ட காலங்களுக்கு. இறுதியாக, எல்லாம் சரியாக சென்றால், உங்களை நிரந்தரமாக வேறு ஒன்றாக மாற்றிவிடுகிறார்; புதிய குட்டி கிறிஸ்துவாக,தன் சொந்த பாங்கிலேயே தேவனில் உள்ள ஜீவனைப் போன்றதொரு ஜீவனைப் பெற்ற; அவருடைய வல்லமையை, மகிழ்ச்சியை, அறிவை, நித்தியத்தை பகிர்கிற ஒரு ஜீவனாக மாற்றிவிடுகிறார். சீக்கிரத்திலேயே நாம் இரு வெளிப்பாடுகளை கண்டறிகிறோம்.

1. நாம் ஒன்றை கவனிக்க ஆரம்பித்திருப்போம், நம்முடைய குறிப்பிட்ட பாவம் நிறைந்த செயல்களைத் தவிர, நம் பாவம் நிறைந்த தன்மை; நம் செயல்களை குறித்து மாத்திரம் கலவரம் அடைந்திருக்காது. ஆனால், நாம் யார் என்பதை குறித்தும். இது கடினமாக கூட தோன்றலாம். அதனால், என்னுடைய காரியத்தில் இருந்தே அதை தெளிவாக்க முயற்சி செய்கிறேன். நான் என்னுடைய மாலை ஜெபத்தின் போது என் பாவங்களை கணக்கிட முயற்சிக்கும் போது, பத்துக்கு ஒன்பது முறை தர்மத்திற்கு எதிரான பாவம் வருகிறது. நான் சிலரிடம் பேச மறுத்து இருப்பேன், அல்லது அடைத்துக் கொண்டிருந்திருப்பேன், அல்லது முகம் சுளித்திருப்பேன், அல்லது கண்டு கொள்ளாதிருந்திருப்பேன் அல்லது விரைந்து சென்றிருப்பேன். அதற்காக என் மனதில் உடனடியாக மேலோங்கும் சாக்குப் போக்கு என்னவென்றால், அந்த தூண்டுதல் மிக துரிதமாகவும் எதிர்பாராத வண்ணமாகவும் இருந்தது என்பதே. திடீரென நடந்ததால் நான் நிதானித்து என்னை கட்டுக்குள் கொண்டு வர எனக்கு நேரமில்லை. அந்த காரியங்களை பொருத்தவரை அது மிகவும் கடுமையான குற்றம் செய்த சூழல் அல்ல. அது வேண்டுமென்று செய்யப்பட்டிருந்தாலோ, திட்டமிட்டு செய்திருந்தாலோ அவை வெளிப்படையாகவே மிகவும் மோசமாக இருந்திருக்கும்.

மற்றொரு பக்கத்தில் உண்மையாகவே ஒரு மனிதன் எதிர்பாராத சூழ்நிலைகளில் எப்படி நடந்து கொள்கிறான் என்பதே அவன் எப்படிப்பட்டவன் என்பதை காண்பிக்கும் சிறந்த ஆதாரம் அல்லவா? உண்மையாகவே ஒரு மனிதன் வேடம் அணிவதற்கு முன் எப்படி இருக்கிறானோ அதுவே உண்மை அல்லவா. ஒரு கட்டிடத்தின் அடித்தளத்தில் எலிகள் இருக்குமாயின் நீங்கள் திடீரென்று அங்கு செல்லும்போதே அவற்றை காணலாம். ஆனால், அப்படி உடனடியாக செல்வது அந்த எலிகளை உண்டாக்கவில்லை. அது அவைகள் ஒளிந்து கொண்டிருப்பதை மாத்திரமே தடுக்கிறது. அதுபோலவே, திடீரென தூண்டப்படுதல் என்னை கோபக்கார மனிதனாக உருவாக்கவில்லை அது

நான் எவ்வளவு கோபக்காரனாக இருக்கிறேன் என்பதை காண்பிக்கிறது. எலிகள் அந்த அடித்தளத்தில் எப்பொழுதும் இருந்தன. ஆனால் நீங்கள் சத்தமாக கத்திக் கொண்டே செல்வீர்களானால் விளக்கை எரியச் செய்ய சுவிட்ச்[1] நீங்கள் அழுத்துவதற்குள் அவைகள் மறைந்து கொள்ளும். வெளிப்படையாகவே கோபம் என்னும் எலிகளும் சுட்டிக்காட்டுதலும் என்னுடைய ஆத்துமாவின் அடித்தளத்தில் எப்பொழுதும் இருக்கின்றன. இப்பொழுது அந்த அடித்தளம் எனது உணர்வுள்ள[2] விருப்பங்களுக்கு தள்ளி சென்று விட்டது. என்னுடைய கோபத்தின் மேல் எனக்கு நேரடியான கட்டுப்பாடு இல்லை. நான் முன்னதாக சொன்னது போலவே நாம் என்ன செய்கிறோம் என்பதைவிட நாம் யார் என்பது முக்கியமாக இருக்குமானால் உண்மையிலேயே நாம் என்ன செய்கிறோம் என்பது, முக்கியமாக நாம் என்னவாக இருக்கிறோம் என்பதற்கு சான்றாக இருந்தால், அது இவ்வாறாக பின் தொடர்கிறது எனக்கு மிகவும் தேவைப்படுகிறதான மாற்றம் என்னுடைய சொந்தமான நேரடியான முயற்சியாலோ, தன்னார்வ முயற்சியினாலோ கொண்டு வரப்பட முடியாது. மற்றும் இது எனது நல்ல நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்.

சரியான நோக்கத்திற்காக அவைகளில் எத்தனை செய்யப்பட்டது? எத்தனை பொதுவான அபிப்பிராயத்திற்கு பயந்து, அல்லது எல்லோரும் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் செய்தது? எத்தனை பிடிவாதத்தினால் செய்தது? அல்லது வேறு சூழ்நிலைகளில் தவறான செயலுக்கு நேராக நடத்திடும் ‘‘நான் உயர்ந்தவர்’’ என்ற எண்ணத்தால் செய்தது?. ஆனால், என்னுடைய நேரான ஒழுக்கமான முயற்சியால் எனக்கு புதிய நோக்கத்தை கொடுக்க என்னால் முடியாது. முதல் சில படிகளுக்கு பின்னர் கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் நிச்சயமாக நம் ஆத்துமாவில் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் தேவனால் மாத்திரமே செய்ய முடியும் என்று உணர்ந்து கொள்கிறோம். மற்றும், அது இதுவரை என் மொழியில் மிகவும் திசைதிருப்பும் ஏதோ ஒன்றுக்கு நேராக நம்மை நடத்துகிறது.

2. அதை எல்லாம் ஏதோ நாமே செய்தது போலவே நான் பேசிக் கொண்டிருக்கிறேன். நிதர்சனத்தில், நிச்சயமாக, தேவனே எல்லாவற்றையும் செய்கிறார். அதிகபட்சமாக, நமக்கு அது செய்யப்பட நாம் அனுமதிக்கிறோம். நீங்கள் தேவன்தான் பாசாங்கு செய்கிறார் என்னும் பொருள்படவும் சொல்லலாம். மூன்று–தனிப்பட்ட தேவனானவர் சொல்லப் போனால் அவருக்கு எதிராக உண்மையிலேயே ஒரு சுய மையம் கொண்ட பேராசை கொண்டு முறுமுறுக்கும் எதிர்க்கும் மனித மிருகத்தையே காண்கிறார். ஆனால், அவர் சொல்கிறார், ‘‘நாம் இது வெறும் சிருஷ்டி என்று பாவிக்காமல் நம் குமாரன் என்று பாசாங்கு செய்வோம் அது எந்த அளவுக்கு மனிதனோ அந்த அளவிற்கு அது கிறிஸ்துவை போன்றது, ஏனென்றால் அவர் மனிதனானார். அது

1 switch
2 conscious

ஆவியிலும் அவர் போலவே என்று பாசாங்கு செய்து கொள்வோம். அது எப்படி உண்மையாக இருக்கிறதோ அப்படி அது இல்லாதது போலவே அதை நடத்துவோம். அந்த பாசாங்கை உண்மையாக்கும் வண்ணம் நாம் பாசாங்கு செய்வோம்'' என்று.

நீங்கள் ஒரு சிறிய கிறிஸ்து என்பது போலவே தேவன் உங்களைப் பார்க்கிறார். உங்களை அப்படி மாற்றுவதற்காகவே கிறிஸ்து உங்கள் அருகில் நிற்கிறார். நிச்சயமாக என்னால் சொல்ல முடியும் இந்த தெய்வீகமாக மாறும் யோசனை முதலில் விசித்திரமாகவே தோன்றும். ஆனால், அது உண்மையிலேயே இவ்வளவு விசித்திரமானதா? எப்பொழுதுமே உயர்வான ஒன்றுதானே தாழ்வான ஒன்றை உயர்த்தும்? ஒரு தாய் தன் குழந்தை அதனிடம் பேசுவது என்ன என்று அது புரிந்து கொள்ளும் முன்னமே அதற்கு பேசச் சொல்லிக் கொடுக்கிறாள். கிட்டத்தட்ட ஒரு மனிதனை நடத்துவது போலவே நாம் நமது நாய்களையும் நடத்துகிறோம். அதனால் தான், இறுதியில் கிட்டத்தட்ட ஒரு மனிதனாகவே உண்மையாக அது மாறுகிறது.

# 8. கிறிஸ்தவம் கடினமானதா அல்லது இலகுவானதா?

இறுதியாக, உண்மையான குமாரனாக மாறுவதற்கு கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுதல் அல்லது முதலாவதாக கிறிஸ்துவாக உடை அணிந்து கொள்ளுதல் என்ற யோசனைகளை குறித்து கடைசி அத்தியாயத்தில் பார்த்தோம். நான் தெளிவாக்க விரும்புவது என்னவென்றால், இது ஒரு கிறிஸ்தவன் செய்ய வேண்டிய அநேக வேலைகளில் ஒன்றல்ல. இது உயர் குலத்தின் ஒரு சிறந்த உடற்பயிற்சியும் அல்ல. இதுவே முழு கிறிஸ்தவமாகும். கிறிஸ்தவம், இதைத் தவிர வேறு எதையும் வழங்கவில்லை. மேலும், இது எப்படி ஒழுக்கமாய் இருத்தல் மற்றும் நல்லவனாய் இருத்தல் என்பவைகளில் இருந்து மாறுபடுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நாம் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன் நமக்கு இருக்கும் பொதுவான கருத்து இதுவே. நாம் பொதுவாக, நம் சுயம் மற்றும் அதனுடைய பல ஆசைகள், விருப்பங்களையே நாம் துவக்க இடமாக வைக்கிறோம். ஒழுக்கம் அல்லது நன்னடத்தை அல்லது சமுதாயத்தின் நன்மை என்கிற ஏதோ இவைகள் சுயத்தில் உரிமை கொண்டாடுவதை ஒத்துக்கொள்கிறோம். அதனுடைய சுய விருப்பத்திலேயே இவை உரிமை கொண்டு தலையிடும். நாம் நல்லவர்களாக இருப்பது என்பது இப்படிப்பட்ட உரிமைகளுக்கு விட்டுக்கொடுத்தலே என்கிறோம். நமது சுயம் சாதாரணமாக செய்ய விரும்பும் சில காரியங்கள் தவறானவை என்றாகிவிடுகிறது. அவைகளை நாம் விட்டு விட வேண்டும். நம் சுயம் செய்ய விரும்பாத மற்ற காரியங்கள், நாம் ‘நல்லது’ என்று அழைக்கப்படுகிறவைகளாய் இருப்பதினால், நாம் அதைச் செய்தாகவேண்டும். எல்லா நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்பு அந்த பாவப்பட்ட இயற்கையான சுயத்திற்கு, அது தனது இஷ்டத்தின் படி தனது வாழ்க்கையை நடத்த ஏதேனும் வாய்ப்பு இன்னும் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறோம். உண்மையிலேயே நாம் தன் வரியை செலுத்துகிற நேர்மையான மனிதனைப் போல உள்ளோம் அவன் எல்லாவற்றையும் சரியாக செலுத்துகிறான். ஆனாலும், தான் வாழும்படிக்கு மீதியுள்ள பணம் போதுமானதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். ஏனென்றால், இன்னும் நமது சுயத்தையே நாம் தொடக்கப் புள்ளியாக வைத்திருக்கிறோம்.

அப்படி நாம் சிந்தித்துக் கொண்டிருக்கும் வரைக்கும் ஓரிரண்டு விளைவுகள் அதை தொடரும். நாம் நல்லவர்களாக இருப்பதை கைவிட்டு விடுவோம். அல்லது, மகிழ்ச்சியற்றவர்களாக மாறிவிடுவோம். ஏனென்றால், சந்தேகமின்றி உங்களது இயல்பான சுயத்தின் மீது வைக்கப்படும் கோரிக்கைகள் அனைத்தையுமே பூர்த்தி செய்ய, உண்மையாகவே முயற்சி செய்வீர்கள் என்றால் அதில் வாழ்வதற்கு என்று மீதி எதுவும் இருக்காது. அது சுயத்தை ஒவ்வொரு திருப்பத்திலும் பட்டினி போட்டு தடுத்து கவலைப்பட வைக்கும். இதனால், சுயத்திற்கு கோபத்தின் மேல் கோபம் பொங்கும். இறுதியாக, நல்லவர்களாக இருக்க முயற்சிப்பதை நீங்கள் நிறுத்தி விடுவீர்கள். இல்லை

என்றால் ''பிறருக்காக வாழ்வோம்'' என்று கூறும் மக்களுள் ஒருவராக மாறி இருப்பீர்கள். ஆனால், எப்பொழுதும் திருப்தி இல்லாமல் முறுமுறுக்கிறவர்களாக இருப்பீர்கள். ஏன் பிறர் அதை அதிகமாக கண்டு கொள்ளவில்லை என்று புரியாமல் உங்களையே தியாகம் செய்து கொண்டிருப்பீர்கள். அப்படி நீங்கள் ஆகும்போது நீங்கள் தனிமையாக, வெளிப்படையாக, சுயநலமாக இருந்து எரிச்சல் ஊட்டுவதை விட பிறருடன் சேர்ந்திருந்தாலும் உங்களுடன் வாழ்பவருக்கு மிகவும் தொந்தரவாக இருப்பீர்கள்.

கிறிஸ்தவ முறை என்பது வேறு. அது கடினமாகவும் இலகுவாகவும் இருக்கும். கிறிஸ்து சொல்கிறார், எனக்கு முழுவதுமாக கொடுத்துவிடு. எனக்கு இந்த அளவுக்கு உனது நேரம், உனது பணம், உனது உழைப்பு என வேண்டாம். எனக்கு நீ வேண்டும். உனது இயல்பான சுயத்தை நான் சித்திரவதை செய்ய வரவில்லை. அதை அழிக்கவே வந்திருக்கிறேன். அரைகுறையான அளவுகோலால் எந்த நன்மையும் இல்லை. நான் இங்கும் அங்குமாக கிளையை வெட்ட விரும்பவில்லை. அந்த முழு மரத்தையும் வெட்டி முறிக்க விரும்புகிறேன். அந்த பல்லை ஓட்டையிட விரும்பவில்லை, அதற்கு மூடி போட விரும்பவில்லை, அதை நிறுத்த விரும்பவில்லை, ஆனால், அதை முழுவதுமாக வெளியில் எடுக்க விரும்புகிறேன்.

இயற்கையான உள் சுயத்தை முழுமையாக என்னிடம் கொடுத்துவிடு. அப்பாவித்தனமான ஆசைகள் என்று நீ நினைக்கிறவைகளையும், தீமையான ஆசைகள் என்று நினைப்பவைகளையும்– முழு உடையையும் கொடுத்துவிடு. அதற்கு பதிலாக, நான் புதிய சுயத்தை தருகிறேன். உண்மையைச் சொன்னால் நான் என்னையே உனக்கு தருகிறேன். என்னுடைய சித்தம் உன்னுடையதாகிவிடும். இது நாம் செய்யும்படி முயற்சிப்பதை விட கடினமாகவும் இலகுவாகவும் இருக்கும். நீங்கள் கவனித்திருப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன், கிறிஸ்துவே சிலநேரம் கிறிஸ்தவ முறையை மிக கடினமானது எனவும், இலகுவானது எனவும் சில நேரம் விவரிக்கிறார். அவர் சொல்கிறார், உங்கள் சிலுவையை எடுத்துக் கொள்ளுங்கள் என்று . வேறு வார்த்தையில் சொன்னால், சாகும் வரை அடிக்கப்படுவதற்கு வதை முகாமிற்கு [1] எடுத்துச் செல்லப்படுவதைப் போன்றது அது என்று. அடுத்த நிமிடமே அவர் சொல்கிறார் ''நான் உங்களை ஏற்றுக்கொள்ளச் சொல்லும் வேலை எளிதானது. நான் உங்களைச் சுமக்கச் சொல்லும் பளு இலேசானது'' என்று. அவர் இரு கருத்தையும் சொல்லுகிறார். ஒருவரால் அவை இரண்டையுமே ஏன் உண்மை என்று பார்க்க முடியும்.

சோம்பேறியான மாணவன் தான் இறுதியில் அதிகமாய் உழைத்துக்கொண்டிருப்பான் என்று ஆசிரியர்கள் சொல்லுவார்கள். அவர்கள் இந்த பொருள்படவே சொல்லுகிறார்கள். வடிவ கணிதத்தின் ஒரு கூற்றை செய்யும்படி இரு மாணவர்களுக்கு சொன்னால், உழைப்பதற்கு தயாராக வந்தவன் அதை புரிந்து கொள்ள முயற்சிப்பான்.

1 concentration camp

சோம்பேறியானவனோ அதை மனப்பாடம் செய்து கற்க நினைப்பான். ஏனெனில், அந்த கணத்தில் அதற்கு குறைந்த முயற்சியே போதுமானது. ஆனால், ஆறு மாதங்களுக்கு பின்னர் அவர்கள் பரீட்சைக்கு தயார் செய்து கொண்டிருக்கும்போது, அந்த சோம்பேறி மாணவன் மணிக்கணக்காக மட்டுமே உழைப்பு கொடுத்து அந்த மற்ற மாணவன் புரிந்து கொண்டதை புரிந்து கொள்ள வேண்டும். மற்ற மாணவனோ, சில நிமிடங்களிலேயே நேர்மறையாக சந்தோஷமாக அனுபவித்து கற்றுக் கொள்வான்.

வெகு நேர பயணத்தில் சோம்பேறித்தனமானது அதிக வேலையை தந்துவிடும். அல்லது, இவ்வாறு இதை பாருங்கள். ஒரு போரிலோ அல்லது மலை ஏறுதலிலோ அடிக்கடி ஒரு விஷயத்தை செய்வதற்கே அதிக துணிவு வேண்டும். ஆனால், அதுவே நீண்ட ஓட்டத்தில் பாதுகாப்பிற்கான காரியமாகவும் இருக்கும் அதை செய்வதற்கு அச்சம் கொள்வீர்கள் என்றால், சில மணி நேரங்களில் மிக மோசமான ஆபத்தில் நீங்கள் இருப்பதை பார்க்க முடியும். அந்த கோழைத்தனமான காரியமே மிகவும் ஆபத்தான காரியமும் கூட.

அதுபோலவே இங்கும் உள்ளது. பயங்கரமான விஷயமும், கிட்டத்தட்ட சாத்தியமில்லாத ஒரு விஷயம் என்பது உங்கள் முழு சுயத்தையும் தருவது. உங்களது எல்லா ஆசைகளையும் முன் எச்சரிக்கைகளையும், கிறிஸ்துவிடம் கொடுப்பது. ஆனால், நாம் அதற்கு பதிலாக செய்ய நினைப்பதை விட இது இலகுவானது. ஏனென்றால், நாம் செய்ய நினைப்பது ‘‘நாம் நாமாகவே இருப்பது’’.நமது சுய சந்தோஷத்தை வாழ்வின் மிகப்பெரிய குறிக்கோளாக வைத்துக்கொண்டு, அப்படி இருந்து கொண்டு நல்லவர்களாக இருப்பது.

நாம் எல்லோரும் நமது மனதையும் இருதயத்தையும் அவைகள் வழியில் விட்டுவிட முயற்சிக்கிறோம். அதன் மையமாக பணம் அல்லது இன்பம் அல்லது லட்சியம் மற்றும் நம்பிக்கை கொள்ளுதல் இருக்கிறது. அப்படியிருக்கும் பட்சத்திலும், நாம் நேர்மையோடும், கற்போடும், தாழ்மையோடும் நடந்துகொள்வோம் என்று நம்புகிறோம். அவர் சொன்னது போல ஒரு முள் செடி அத்திப்பழத்தை விளைவிக்க முடியாது. வெறும் புல் விதையைக் கொண்டு ஒரு வயலாகநான் இருப்பேன் என்றால், என்னால் கோதுமையை விளைவிக்க முடியாது. புல்லை வெட்டுவதினால் புல்லை சிறிது சிறிதாக வைத்திருக்கமுடியும்.. ஆனாலும், நான் புல் என்பதையே தான் விளைவிக்க முடியும் கோதுமையை அல்ல. நான் கோதுமையை விளைவிக்க வேண்டுமானால், மாற்றமானது மேற்பரப்பைத் தாண்டி ஆழமாக செல்ல வேண்டும். நான் மறுபடியும் உழப்பட்டு மறுபடியும் விதைக்கப்பட வேண்டும்.

அதனால் கிறிஸ்தவ வாழ்வில் மக்கள் எதிர்பார்க்காத இடத்தில்தான் உண்மையான பிரச்சனை வரும். ஒவ்வொரு நாளும் நீங்கள் கண்விழிக்கும் கணமே ஒவ்வொரு காலையிலும் அது வந்துவிடும். ஒவ்வொரு நாளுக்குரிய ஆசைகளும் எதிர்பார்ப்புகளும் காட்டு மிருகங்களைப் போல உங்களிடம் விரைந்து வந்துவிடும். ஒவ்வொரு நாள்

காலையும் அதை எல்லாம் ஒதுக்கி தள்ளுவதே முதல் வேலையாக இருக்கும். இன்னொரு சத்தத்திற்கு நாம் செவிசாய்க்க வேண்டும், இன்னொரு கண்ணோட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்,இன்னொரு பெரிய வலிமையுள்ள அமைதலான ஜீவனை உள்விட வேண்டும். இவ்வாறாக நாள் முழுதும் நடக்க வேண்டும் காற்றிலிருந்து பறந்து வரும் உங்களுடைய எல்லா கவலைகளிலிருந்தும் பதட்டத்தில் இருந்தும் நீங்கள் ஒரு படி பின் நிற்க வேண்டும்.

முதலாவதாக, ஒரு கணத்தில் மாத்திரமே நம்மால் அதை செய்ய முடியும். ஆனால், அந்த கணங்களில் இருந்து புதிய விதமான ஜீவன் நமது அமைப்பினூடே பரவிவிடும். ஏனென்றால், இப்பொழுது நம்முடைய சரியான பகுதியில் அவரை மாற்றத்தை ஏற்படுத்த அனுமதித்து விட்டோம். இது மேற்பரப்பில் அடிக்கப்படும் வண்ணப்பூச்சுக்கும், மேற்பரப்பை ஊடுருவி முழுவதுமாக பரவும் சாயத்திற்கும் உள்ள வேறுபாடு. அவர் தெளிவில்லாத, கருத்தளவே ஆகும் என்னும் கொள்கை சார்ந்த வெறும் காற்றை பேசவில்லை. அவர் ''பூரண சற்குணராய் இருங்கள்'' என்ற போது அவர் அதையே குறித்தார் நாம் முழுமையான சிகிச்சைக்கு செல்ல வேண்டும் என்ற கருத்து படவே அவர் சொன்னார். அது கடுமையானது தான். ஆனால், அதன் பிறகு நாம் ஏக்கத்தோடு விட்டுக் கொடுக்க வேண்டியவை இன்னும் கடினமானவை– உண்மையாகவே அது சாத்தியமற்றது: ஒரு முட்டை பறவையாக மாறுவதற்கு அதற்கு கடினமாக தான் இருக்கும். அது முட்டையாகவே இருந்து கொண்டு பறக்க படிப்பது என்பது மிகக் கடினமான காரியம். நாம் இப்பொழுது முட்டைகளாகவே இருக்கிறோம். ஒரு சாதாரணமான கண்ணியமான முட்டையாக மாத்திரமே சதாகாலமும் இருந்துவிட முடியாது. நாம் பொரித்த முட்டைகளாக வேண்டும் இல்லையேல் கெட்டுப் போகத்தான் வேண்டும்.

முன்னதாக நான் சொன்னதற்கே நான் இப்பொழுது வரலாமா? இதுவே முழுமையான கிறிஸ்தவம். வேறு ஒன்றும் கிடையாது. இதைப்பற்றி குழம்பி போவது மிகவும் எளிது. தேவாலயத்திற்கு நிறைய காரியங்கள் உண்டு என்று எண்ணுவது மிகவும் எளிது– கல்வி, கட்டிடம், ஊழியங்கள் ஆராதனையை நடத்துவது. ஒரு மாநிலத்திற்கு வெவ்வேறு காரியங்கள் இருப்பதை யோசிப்பது எவ்வளவு எளிமையானதோ அதுபோலவே– ராணுவம், அரசியல், பொருளாதாரம் என்று வேறு என்னதான் இல்லை. ஆனாலும், ஒரு விதத்தில் அவற்றை விட அது மிகவும் எளிமையானது. இந்த வாழ்க்கையில் மனிதர்களின் சாதாரண சந்தோஷத்தை பாதுகாக்கவும் ஊக்குவிக்கவுமே மாநில அமைப்பு என்பது இருக்கிறது.

ஒரு கணவனும் மனைவியும் இதமான தீயூட்டி அருகில் அமர்ந்து கதையிட்டுக்கொள்ள, இரு நண்பர்கள் பொது விடுதியில் ஈட்டி எரியும் விளையாட்டை விளையாட, ஒரு மனிதன் அவன் வீட்டில் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்க, அல்லது அவனது தோட்டத்தில் தோண்டிக் கொண்டிருக்க இதற்கு தான் மாநில அமைப்பு இருக்கிறது. அவர்கள் அவ்வாறு அந்த கணங்களை பாதுகாக்கவோ, நீட்டிக்கவோ

பண்ணவோ, அதிகரிக்கவோ அவைகள் உதவி செய்யாத பட்சத்தில் எல்லா சட்டங்களும் நாடாளுமன்றங்களும் ராணுவமும் மன்றங்களும் காவலும் பொருளாதாரமும் நேரத்தை வீணடிப்பவைகளே, இதைப் போலவே மனிதர்களை கிறிஸ்துவரிடம் சேர்ப்பதற்கே தேவாலயம் இருக்கிறது. அவர்களை குட்டி கிறிஸ்த்துக்களாக்க ஆக்குவதற்கே. அவர்கள் அதை செய்யவில்லை என்றால் கதீட்ரல்கள்(தேவாலயங்கள்), மதகுருக்கள், ஊழியங்கள் போதனைகள், வேதமும் கூட வெறும் நேரத்தை வீணடிக்கத்தான். வேறு எந்த காரணத்திற்காகவும் தேவன் மனிதனாகவில்லை. முழு பிரபஞ்சமும் கூட வேறு எந்த காரியங்களுக்கும் உருவாக்கப்பட்டதா என்பது சந்தேகம்தான்.

வேதத்தில் சொல்லி இருக்கிறது முழு பிரபஞ்சமும் கிறிஸ்துவுக்காக படைக்கப்பட்டது., மற்றும் எல்லாம் அவரில் கட்டி இணைக்கப்பட வேண்டும் என்று. இந்த முழு பிரபஞ்சத்தை குறித்ததான இந்த காரியத்தை நம்மில் எவரும் எப்படி புரிந்து கொள்வோம் என்பது எனக்கு தெரியவில்லை. இந்த பிரபஞ்சத்தின் பகுதிகளில் இந்த உலகில் இருந்து மில்லியன் மைல்களுக்கு அப்பால் என்ன வாழ்கிறது (அப்படி ஏதாவது இருந்தால்) என்பது நமக்குத் தெரியாது. இந்த உலகிலும் கூட மனிதரல்லாத மற்ற காரியங்களுக்கு இது பொருந்துமா? என்பதும் நமக்கு தெரியாது. அதைத்தான் நீங்கள் எதிர்பார்த்து இருப்பீர்கள்.நம்மை குறித்ததான திட்டம் மாத்திரமே நமக்கு காட்டப்பட்டிருக்கிறது.

இது எப்படி மற்ற பொருள்களுக்கும் பொருந்தும் என்பதை கற்பனை செய்வதில் சில நேரம் எனக்கு விருப்பமுண்டு. நான் நினைக்கிறேன், உயர் ரக விலங்குகளை நேசித்து கிட்டத்தட்ட மனிதர்களாகவே மாற்றும் போது ஒருவிதத்தில் அவைகள் மனிதனுக்குள் ஈர்க்கப்படுகிறது. உயிரிழந்த காரியங்களும் செடிகளும் மனிதன் அவைகளைப் படிப்பதினாலும் பயன்படுத்துவதினாலும் மற்றும் அவைகளுக்குரிய மதிப்பை கொடுப்பதினாலும் அவனுள் அவைகள் இழுக்கப்படுகிறதை உணர்கிறேன். ஒருவேளை அறிவார்ந்த சிருஷ்டிகள் மற்ற உலகங்களில் இருக்குமானால் அவர்களது உலகங்களிலும் அவைகள் இதையே செய்யும். அறிவார்ந்த சிருஷ்டிகள் கிறிஸ்துவுக்குள் நுழையும் போது ஒரு விதத்தில் மற்ற எல்லா காரியங்களையும் அதனோடு கூட கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்து விடும். ஆனால் எனக்கு தெரியாது, இது வெறும் கற்பனையே.

நமக்கு சொல்லப்பட்டது என்னவென்றால், மனிதர்களாகிய நாம் எப்படி கிறிஸ்துவின் உள் இழுக்கப்பட்டு அந்த பரிசின் ஒரு பகுதி ஆகலாம் என்பதுதான். ஒரு அற்புதமான பரிசாக, அந்த பிரபஞ்சத்தின் இளவரசர் தன் தந்தைக்கு கொடுக்க விரும்பும் ஒரு பகுதியான, அந்த பரிசு அவரே. ஆதலால், அவருக்குள் நாம் இருக்கிறோம். இந்த ஒரு காரியத்திற்காகவே நாம் உருவாக்கப்பட்டோம். சில விசித்திரமான உற்சாகமூட்டும்

வேதத்தின் குறிப்புகளின் படி நாம் அவரில் ஈர்க்கப்படும் போது இயற்கையில் உள்ள பல்வேறு காரியங்கள் சரியாகிவிடும். அந்த கெட்ட கனவு ஒழிந்து விடும். அது ஒரு விடியலாகிவிடும்.

# 9. விலை கிரயத்தை கணக்கிடுதல்

பூரண சற்குணராய் இருங்கள் என்று நம் ஆண்டவர் சொன்ன வார்த்தைகளை குறித்து பல மக்கள் கவலைப்படுவதை காண்கிறேன். நீங்கள் பூரண சற்குணராய் இல்லாவிட்டால் உங்களுக்கு என்னால் உதவ முடியாது என்பதே இதன் அர்த்தம் என சில மக்கள் புரிந்து கொள்கிறார்கள்,மற்றும் நம்மால் பூரண சற்குணராய் இருக்க முடியாது. ஆதலால், அவர் அந்த அர்த்தத்தில் கூறியிருந்தால் நம்முடைய நிலைமை நம்பிக்கை இல்லாததாய் இருக்கும். ஆனால் அவர் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்று நான் நினைக்கிறேன். அவர் இந்த அர்த்தத்திலேயே சொன்னார் என நினைக்கிறேன். ''நான் உங்களுக்கு கொடுக்கக்கூடிய ஒரே உதவி நீங்கள் பூரண சற்குணர் ஆவதற்கான உதவி. உங்களுக்கு ஏதேனும் குறைவாக தேவைப்படலாம். ஆனால், குறைவான எதையும் நான் கொடுக்கப் போவது இல்லை''.

நான் இதை விவரிக்கட்டும். நான் குழந்தையாய் இருந்தபோது எனக்கு அடிக்கடி பல் வலி வந்தது. நான் என் அம்மாவிடம் சொன்னால் அந்த வலி குறைந்து போக ஏதோ ஒன்றை கொடுப்பார்கள். அது அந்த இரவில் வலி இல்லாமல் என்னை தூங்க வைத்துவிடும். ஆனால், நான் என் தாயிடம் சொல்லவில்லை. குறைந்தபட்சம் அந்த பல்வலி மிகுதியாகாத வரை. அங்கு சொல்லாததற்கு காரணம் என்னவென்றால், என் அம்மா எனக்கு ஆஸ்பிரின் (வலி நீக்கும் மாத்திரை) கொடுக்க மாட்டார்கள் என்று சந்தேகப்பட்டதால் அல்ல. ஆனால், எனக்குத் தெரியும் அவர்கள் வேறு ஒன்றையும் செய்வார்கள் என்று.

அடுத்த நாள் காலையில் என்னை என் அம்மா பல் மருத்துவரிடம் கூட்டிச் செல்வார்கள் என்று எனக்கு தெரியும். நான் விரும்பாத இன்னும் அதிகமான ஏதோ ஒன்றை பெற்றுக் கொள்ளாமல் நான் விரும்பும் ஒன்றை மாத்திரம் என் தாயிடம் இருந்து நான் பெற்றுக் கொள்ள முடியாது. எனக்குத் தேவை உடனடியாக வலியில் இருந்து விடுதலை. ஆனால், என் பல்லை நிரந்தரமாக சீராக்காமல் என்னால் அதைப் பெற்றுக் கொள்ள முடியாது, மற்றும் அந்தப் பல் மருத்துவர்களை எனக்குத் தெரியும் வலி ஆரம்பிக்காத மற்ற பற்களையும் எல்லா விதத்திலும் அவர்கள் நோண்ட ஆரம்பித்து விடுவார்கள். தூங்கிக் கொண்டிருக்கும் நாயை அவர்கள் படுத்திருக்க விட மாட்டார்கள். நீங்கள் ஒரு இன்ச் இடம் கொடுத்தால் 16 இன்ச் அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

இப்பொழுது நான் இவ்வாறாக இதை விவரிக்கிறேன். நம் தேவன் பல் மருத்துவர்கள் போன்றவர் . அவருக்கு ஒரு இன்ச் கொடுத்தால் 16 இன்ச் எடுத்துக் கொள்வார். ஒரு டஜன் கணக்கான மக்கள் அவரிடம், அவர்கள் வெட்கப்படும் ஏதோ ஒரு பாவத்திலிருந்து சுகம் பெற செல்கிறார்கள். (சுய இன்பம் அல்லது உடல் ரீதியான கோழைத்தனம்) அல்லது ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் அவர்கள் வாழ்வை அழிக்கும் கோபம்

அல்லது குடி போன்றவற்றிலிருந்து சுகம் பெறச் சொல்லுகிறார்கள். சரி அவற்றிலிருந்து அவர்களுக்கு சுகம் கொடுத்து விடுவார். ஆனால், அதோடு அவர் நிறுத்தி விடமாட்டார். அதுதான் நீங்கள் கேட்ட அனைத்துமாக இருக்கலாம். ஆனால், ஒருமுறை நீங்கள் அழைத்து விட்டால் அவர் உங்களுக்கு முழு சிகிச்சையே தருவார்.

அதனால் தான் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன் கிரயத்தை கணக்கிட்டு கொள்ளுங்கள் என்று அவர் எச்சரிக்கிறார். தவறாய் கணக்கிட்டு விடாதீர்கள். நீங்கள் எனக்கு இடம் கொடுத்தால்,நான் உங்களை பூரண சற்குணர் ஆக்கி விடுவேன் என்கிறார். உங்களை நீங்கள் என் கரத்தில் வைத்த மாத்திரத்திலேயே நீங்கள் அதற்குள்ளாக தான் வந்து விட்டீர்கள். அதற்கு குறைவானதற்கோ வேறு எதற்குமோ இல்லை. உங்களுக்கு சுயசித்தம் இருக்கிறது மற்றும் நீங்கள் தேர்ந்தெடுத்தால் என்னை தள்ளி விடவும் செய்யலாம்.

ஆனால், நீங்கள் என்னை தள்ளிவிடவில்லை என்றால் புரிந்து கொள்ளுங்கள் இந்த வேலையை நான் செய்து முடிக்க போகிறேன். என்ன துன்பங்கள் இந்த உலக வாழ்வில் அதற்காக நீங்கள் விலை கொடுக்க வேண்டியதாயிருந்தாலும், நினைத்துப் பார்க்க முடியாத என்ன சுத்தப்படுத்துதல் உங்கள் இறப்பிற்கு பின் நீங்கள் கொடுக்க வேண்டியதாயிருந்தாலும், அதற்கு நான் என்ன விலை கிரயம் கொடுக்க வேண்டியதாயிருந்தாலும் நான் ஓய்வெடுக்க மாட்டேன் உங்களையும் ஓய்வெடுக்க விடமாட்டேன். நீங்கள் முழுமையாய் பூரண சற்குணர் ஆகும் வரைக்கும், என் தந்தை உங்களை பார்த்து ஒரு தயக்கமும் இல்லாமல், ‘‘உங்களில் மிகவும் பிரியமாய் இருக்கிறேன்’’ என்று சொல்லும் வரையிலும், அவர் என்னைப் பார்த்து ‘‘உன்னில் மிகவும் பிரியமாய் இருக்கிறேன்’’ என்று சொன்னது போல சொல்லும் வரையிலும். இதை என்னால் செய்ய முடியும் மற்றும் அதையே செய்வேன். ஆனால், அதற்காக அதற்கு குறைவாக எதையும் செய்ய மாட்டேன்.

ஆனாலும், மற்றதும் மற்றும் சரிசமமான முக்கியமான பகுதியும் இதுவே ஆகும். இந்த உதவியாளர் நீண்ட ஓட்டத்தில் சரியான பூரண சற்குணத்தை விட எதிலும் திருப்தி அடைய மாட்டார். நீங்கள் தடுக்கி விழுந்து எடுக்கும் பலவீனமான முயற்சியில் இந்த உதவியாளர் மகிழ்வார், சிறந்த கிறிஸ்தவ எழுத்தாளரான ஜார்ஜ் மெக்டொனால்ட் குறிப்பிட்டபடி ஒவ்வொரு தகப்பனும் பிள்ளை நடக்க எடுக்கும் முதல் முயற்சியில் மகிழ்வான். எந்த தகப்பனும் வளர்ந்த தன் மகன் திடமாக விடுதலையாக மனிதனைப் போல வளர்வதிலேயே அன்றி வேறு எதிலும் திருப்தி அடைய மாட்டான். அதுபோல, அவர் சொன்னார், ‘‘தேவனை பிரியப்படுத்துவது இலகுவானது ஆனால் அவரை திருப்திப்படுத்துவது கடினமானது’’.என்று. நடைமுறையில் விளைவுகள் இதுவே ஆகும். மறுபக்கத்தில் தேவன் நீங்கள் பூரண சற்குணராக இருக்க வேண்டும் என்று நிபந்தனை வைப்பது உங்களை எந்தவிதத்திலும் நீங்கள் நன்மை செய்ய முயற்சிக்கும் காரியத்திலோ அல்லது தற்போதுள்ள உங்கள் தோல்விகளிலும் கூட உங்களைச் சோர்வு கொள்ள செய்யக்கூடாது. ஒவ்வொரு முறையும் நீங்கள் விழும் போது அவர்

உங்களை தூக்கி விடுகிறார் மற்றும் அவருக்கு முழுமையாக தெரியும் உங்களுடைய முயற்சிகள் உங்களை பரிபூரணத்தின் அருகில் கொண்டு செல்ல முடியாது என்று. மறுபக்கத்தில் நீங்கள் புரிந்து இருப்பீர்கள் உங்களை அவர் மிகச் சரியான பரிபூரணம் என்னும் குறிக்கோளுக்கு நேராகவே வழி நடத்துகிறார் என்று. மற்றும் முழு பிரபஞ்சத்திலும் உங்களைத் தவிர அவர் உங்களை இந்த குறிக்கோளுக்கு நேராக கூட்டி செல்லுவதை வேறு எந்த வல்லமையாலும் தடுக்க முடியாது.

அதற்காகத்தான் நீங்கள் வந்தீர்கள் மற்றும் அதை நாம் உணர்ந்து கொள்வது மிகவும் முக்கியமானது. இல்லையென்றால் பின்னர் நாம் பின்னோக்கி இழுக்க முயற்சிப்போம். அல்லது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவரை தடுக்க ஆரம்பித்து விடுவோம். நான் நினைக்கிறேன் நம்மில் அநேகர் கிறிஸ்து நம்மில் வெளிப்படையான தொல்லையாய் இருந்த ஓரிரு பாவங்களை மேற்கொள்ள செய்யும்போது, நாம் போதுமான அளவு நல்லவர்களாகி விட்டோம் என்று நினைக்கக்கூடும். அவர் நமக்கு செய்ய வேண்டும் என்று நாம் நினைத்த அனைத்தையும் அவர் செய்துவிட்டார் நாம் அவருக்கு கடமைப்பட்டுள்ளோம். ஆனால், இப்பொழுது அவர் நம்மை தனியாக விட்டுவிட வேண்டும். மற்றும் நாம் சொல்கிறோம், ‘‘நான் ஒரு பரிசுத்தவானாய் மாற விரும்பவில்லை நான் சாதாரணமான கண்ணியமான மனிதனாகவே இருக்க விரும்புகிறேன்’’.என்று. இப்படி நாம் சொல்லும் போது நாம் தாழ்மையாக நடந்து கொள்கிறோம் என்று நாம் கற்பனை செய்து கொள்கிறோம்.

ஆனால், இது மிக மோசமான தவறு. அவர் நினைக்கும் ஒரு சிருஷ்டியாக நம்மை அவர் மாற்ற வேண்டும் என்று நிச்சயமாக நாம் விரும்பவில்லை கேட்கவில்லை. ஆனால், நாம் என்னவாக இருக்க விரும்புகிறோம் என்பது கேள்வி அல்ல ஆனால் அவர் நம்மை சிருஷ்டித்த போது நாம் யாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார் என்பதே கேள்வி. அவர்தான் கண்டுபிடிப்பாளர் நாம் இயந்திரமே. அவர்தான் ஓவியர் நாம் வெறும் ஓவியமே. நாம் எப்படி இருக்க வேண்டும் என அவர் என்ன கருத்துக் கொண்டார் என்பது எப்படி நமக்கு தெரியும்?. இதோ பாருங்கள் நாம் எப்படி இருந்தோமோ அதிலிருந்து அவர் நம்மை ஏற்கனவே எவ்வளவோ மாற்றி விட்டார். நீண்ட காலத்திற்கு முன்பு நாம் பிறப்பதற்கு முன்னமே நாம் நம் தாயின் உடலில் இருந்தபோது நாம் பல்வேறு நிலைகளின் ஊடாக கடந்து சென்றோம்.

ஒரு காலத்தில் நாம் காய்கறிளைப் போல இருந்தோம் நாம் பிற்காலத்திலேயே மனிதக் குழந்தைகளாக மாறினோம். மற்றும் அந்த ஆரம்ப நிலைகளில் நமக்கு உணர்விருந்தால் நான் நிச்சயமாக சொல்லுவேன் நான் காய்கறியாகவோ அல்லது மீனாகவோ இருந்தாலே போதுமென திருப்தியாக இருந்திருப்போம். நாம் குழந்தைகளாக மாற்றப்பட விரும்பி இருக்க மாட்டோம். ஆனால், அவருக்கு எல்லா நேரத்திலும் நம்மை குறித்த திட்டத்தை குறித்து தெரியும். அதை அவர் செய்யவும் உறுதியாகவே இருந்தார். அதேபோல் ஒன்றுதான் இப்பொழுதும் உயர்வான நிலையில் நடந்து கொண்டு இருக்கிறது.

நாம் நம்மை சாதாரண மனிதர்கள் என்று கூறிக் கொள்வதில் திருப்தி கொள்ளலாம். ஆனால், அவர் முற்றிலும் வேறுபட்ட ஒரு திட்டத்தையே செயல்படுத்த உறுதியாக இருக்கிறார். அந்தத் திட்டத்தை சுருக்கி வைத்துக் கொள்வது தாழ்மையல்ல. அது சோம்பேறித்தனமும் கோழைத்தனமுமே. அதற்கு ஒப்புக்கொடுப்பது என்பது பெருமையோ அல்லது தற்பெருமை கோளாறோ அல்ல. அதுவே கீழ்ப்படிதல்.

இரண்டு பக்கத்தின் உண்மையையும் இவ்வாறாக இங்கு சொல்லலாம். ஒரு பக்கத்தில் உதவி இல்லாமல் நம் சொந்த முயற்சியிலேயே சார்ந்து நம்மை நாம் ''ஒழுக்கமுள்ளவர்களாக'' அடுத்த 24 மணி நேரம் கூட கடந்து செல்ல முடியும் என்று கற்பனை கூட செய்ய முடியாது. அவர் உதவி செய்யாத பட்சத்தில் நம்மில் எவரும் ஏதோ ஒரு அருவருப்பான பாவத்திலிருந்து பாதுகாப்பாக இருக்க முடியாது. மறுபக்கத்தில் எந்த பெரிய புனிதரிடமும் இதுவரை பதியப்பட்ட பரிசுத்தம் அல்லது வீரத்தின் அளவு நம்மில் ஒவ்வொருவரிடம் இறுதியில் அவர் கொண்டுவர விருப்பமானவைகளுக்கு மிஞ்சினது அல்ல. வேலையானது இந்த வாழ்க்கையில் முடிவடைய முடியாது. ஆனால், நம்மை எவ்வளவு தூரம் கொண்டு செல்ல முடியுமோ மரணத்திற்கு முன் நம்மை அதுவரை கொண்டுசெல்வார்.

அதனால் தான் நாம் கடினமான காலங்களை எதிர்கொள்ளுவோம் என்பதை குறித்து ஆச்சரியப்படக்கூடாது. ஒரு மனிதன் கிறிஸ்துவிடம் திரும்பி நன்றாக முன்னேறி வந்து கொண்டிருக்கும்போது அவரது சில கெட்ட பழக்கங்கள் இப்பொழுது சரி செய்யப்பட்டுள்ளது என்று அவன் அடிக்கடி உணரக்கூடும். இப்பொழுதிலிருந்து எல்லா காரியமும் நன்றாக மிருதுவாக சென்றால் அது இயற்கை என்று உணரக்கூடும். ஆனால், பிரச்சனைகள் வரும் போது– உடல் நலமின்மை, பொருளாதார சிக்கல்கள், புதிய விதங்களில் சோதனை– அவன் சோர்வடைந்து விடுவான். இந்த காரியங்கள் அவனது பழைய மோசமான நாட்களில் அவனை எழுப்பி திருந்தச் செய்வதற்கு தேவையாக இருந்திருக்கலாம் என்று அவன் நினைக்கலாம். ஆனால்,இப்பொழுது எதற்காக? ஏனென்றால், தேவன் அவனை உயர்ந்த நிலைக்குச் செல்ல வற்புறுத்துகிறார். அவன் மிகவும் தைரியமாகவும் அல்லது மிகவும் பொறுமையாகவும் அல்லது மிகவும் அன்பாகவும் அவன் கனவில் கூட கண்டிராத அளவுக்கு அவனை நடந்து கொள்ளச் செய்யும் சூழ்நிலைகளில் அவனை வைக்கிறார். அது நம் எல்லோருக்கும் தேவையில்லாதது என்றே தோன்றும் ஆனால், அது ஏன் என்றால் நம்மை அவர் எவ்வாறு பிரம்மாண்டமாக உருவாக்க நினைக்கிறார் என்பதை குறித்து சிறிதளவு எண்ணமும் நமக்கு இல்லாதிருப்பதே.

நான் ஜார்ஜ் மெக்டோனால்டிடம் இருந்து இன்னொரு நீதிக்கதையை கடன் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று காண்கிறேன். நீங்கள் உங்களை ஒரு உயிருள்ள வீடாக கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்த வீட்டை மறுபடியும் கட்ட தேவன் வருகிறார். முதலில் ஒரு வேளை அவர் என்ன செய்கிறார் என்று புரிந்து கொள்ள முடிந்தது. அவர் வடிகால்களை சரி செய்கிறார் மற்றும் கூரையில் உள்ள கசிவுகளை தடுக்கிறார் மற்றும்

அது போன்றவை. இந்த வேலைகள் செய்யப்பட வேண்டியது என்று உங்களுக்கு தெரியும். அதனால், நீங்கள் ஆச்சரியப்படவில்லை. ஆனால், இப்பொழுது அந்த வீடு கடுமையாக பாதிக்கப்படும் படியாக அதை தட்டுகிறார். அதற்கு அர்த்தம் இருப்பதாக தெரியவில்லை.

அவர் என்ன  செய்ய நினைக்கிறார்? அதன் விளக்கம் என்னவென்றால் நீங்கள் நினைத்ததாய் இல்லாத முற்றிலும் வேறுபட்ட வீட்டை அவர் கட்டிக் கொண்டிருக்கிறார். புதிதாய் ஒரு இணைப்பை அங்கே போடுகிறார். கூடுதல் தளத்தை அங்கே கட்டுகிறர். கோபுரங்களை எழுப்புகிறார். முற்றத்தை செய்கிறார். நீங்கள் நினைத்தீர்கள் நீங்கள் ஒரு சிறிய பண்ணை வீடாக மாறப் போகிறீர்கள் என்று. ஆனால், அவர் அரண்மனையை எழுப்புகிறார். அவரே அங்கு வந்து வாழ நோக்கம் கொண்டுள்ளார். பூரண சற்குணராய் இருங்கள் என்ற கட்டளை வெறும் கற்பனை காற்றல்ல. முடியாததைச் செய்யச் சொல்லும் கட்டளையும் அல்ல. நாம் அந்த கட்டளைக்கு கீழ்ப்படியும் ஒரு சிருஷ்டியாக நம்மை அவர் மாற்றுகிறார். அவர் சொன்னார் (வேதத்தில்) நாம் தேவனோடு இருந்தோம் என்று மற்றும் அந்த வார்த்தையை அவர் நிறைவு செய்கிறார்.

நாம் அவரை அனுமதித்தால், நாம் அவரை தடுக்கவும் செய்யலாம், நாம் விரும்பினால்– நம்மில் பலவீனமான மிகவும் அழுக்கானவர்களையும் கூட தேவனாகவும் பெண் தேவனாகவும், மின்னும் ஒளி வீசும், அழியாத சிருஷ்டியாகவும், துடிப்போடு ஊடுருவும் உற்சாகம்,சந்தோஷம், ஞானம் மற்றும் நாம் கற்பனை செய்யக்கூடாதபடி நேசிக்கிற பிரகாசமான கரையற்ற தேவனை பூரணமாக பிரதிபலிக்கும் பிம்பமாக நம்மை அவர் மாற்றிவிடுவார். ஆனாலும், நிச்சயமாக ஒரு சிறிய அளவில் மாத்திரமே அவரது அளவற்ற வல்லமையை மகிழ்ச்சியை மற்றும் நன்மையை காட்டுகிறவர்களாக உருவாக்குகிறார். அந்த செயல்முறை நீண்டதாக இருக்கும் மற்றும் வலி மிகுந்ததாக இருக்கும்.ஆனால், அதற்காகத்தான் நாம் இதற்குள் வந்தோம்.அதற்கு குறைவான எதற்கும் அல்ல, அவர் சொன்னதையே அவர் குறிப்பிட்டார்.

# 10. நல்ல மனிதர்கள் அல்லது புதிய மனிதர்கள்.

அவர் சொன்னதையே அவர் குறித்தார். அவர் கரத்தில் தங்களை வைத்த எவரும் அவர் பூரண சற்குணராய் இருப்பது போலவே பூரண சற்குணராகி விடுவர். அன்பிலே, ஞானத்திலே, மகிழ்ச்சியிலே, அழகிலே மற்றும் அழியாமையிலே பூரணராகிவிடுவர். அந்த மாற்றம் இந்த வாழ்க்கையிலேயே முழுமை அடைந்து விடாது. ஏனென்றால், இறப்பு என்பது அந்த சிகிச்சையில் ஒரு முக்கியமான பகுதி. எந்த குறிப்பிட்ட கிறிஸ்தவனிலும் மாற்றம் என்பது எவ்வளவு தூரம் இறப்பிற்கு முன்பே நிகழ்ந்திருக்கிறது என்பது நிச்சயமாக தெரியாத ஒன்று.

நான் நினைக்கிறேன், இந்த கணமே அடிக்கடி கேட்கப்பட்ட கேள்வியை குறித்து சிந்திக்க வேண்டிய சரியான தருணம் என்று. கிறிஸ்தவம் உண்மையானதாக இருந்தால் ஏன் எல்லா கிறிஸ்தவர்களும் பிற கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களை விட நல்லவர்களாக இல்லை? அந்த கேள்விக்கு பின்னர் இருப்பதில் ஒரு பகுதி கொஞ்சம் விவேகமான ஒன்றும் மற்றும் இன்னொரு பகுதி விவேகமில்லாத ஏதோ ஒன்றும் ஆகும்.

நியாயமான பகுதி இதுவே கிறிஸ்தவத்திற்கு ஒருவர் மாறுவதால் அவருடைய வெளிப்புற செயல்பாடுகளில் ஒரு முன்னேற்றமும் இல்லாமல் அவர் முன்னர் இருந்தது போலவே பெருமை உள்ளவராகவும், பகை உணர்வு உள்ளவராகவும், பொறாமை உள்ளவராகவும், லட்சியவாதியாகவும் இருக்கத் தொடருவாரானால், இந்த மாற்றமானது மிகப்பெரிய கற்பனை என்றே நாம் சந்தேகிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். மற்றும் ஒருவர் நிஜமாகவே மாறிவிட்ட பின்பு ஒவ்வொரு முறையும் அவர் தான் முன்னேறி விட்டதாகவே நினைக்கும் போது அது செயல்படுத்த வேண்டிய பரிட்சை ஆகிவிடுகிறது. நல்ல உணர்வுகள், புதிய உள்நோக்கங்கள், மதத்தின் மேலிருந்த உயரிய விருப்பங்கள் இவை எல்லாம் நம் உண்மையான நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடில், அவைகள் ஒன்றுமே இல்லை. எப்படி ஒரு உடல் நலக்குறைவில் வெப்பநிலைமானி[1] அளவு உயர்வாய் இருப்பதை இன்னும் காண்பித்துக் கொண்டிருக்கையில், நான் நன்றாக இருக்கிறேன் என்பது எப்படி நன்மையாய் இராதோ அது போலவே.

அந்த அர்த்தத்தில் பார்த்தால், வெளிப்புற உலகில் உள்ளவர்கள் கிறிஸ்தவத்தின் விளைவுகளை வைத்து அதை நியாயம் தீர்ப்பது மிகவும் சரியே. கிறிஸ்துவும் விளைவுகளை பார்த்தே நியாயம் தீருங்கள் என்றே சொல்லியிருக்கிறார். ஒரு மரம் அதன் கனியினாலேயே அறியப்படும். அல்லது,அகத்தின் அழகே முகத்தில் தெரியும். கிறிஸ்தவர்களாகிய நாம் தவறாக நடந்து கொள்ளும்போது, அல்லது நன்றாக நடக்கத் தவறும் போது வெளியுலகம் கிறிஸ்தவத்தை நம்ப கூடாதபடி செய்து விடுகிறோம். போர்க்கால நோட்டீசுகள் இவ்வாறாகச் சொன்னது: கவனம் இன்றி பேசுதல் உயிரை

1 Thermometer

எடுக்கும்.அது போன்ற உண்மைதான் இதுவும்.கவனம் இல்லாத வாழ்க்கைகள் தேவையற்ற பேச்சுக்களை கொடுத்து விடும். நமது கவனமற்ற வாழ்க்கை வெளியுலகை பேசச் செய்யும். கிறிஸ்தவத்தின் சத்தியங்களையே சந்தேகிக்கும் அளவு அவர்கள் பேச நாம் இடம் கொடுத்து விடுகிறோம்.

வேறு வழிகளில் விளைவுகளை கட்டாயப்படுத்துவதில் வெளி உலகம் மிகவும் பகுத்தறிவில்லாத நிலையிலேயே உள்ளது. ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்தவனாக மாறும் போது அவனது வாழ்க்கை முன்னேறி இருக்க வேண்டும் என்று மட்டுமேம் அவர்கள் கோரவில்லை. அவர்கள் கிறிஸ்தவத்தை நம்புவதற்கு முன்னமே, உலகமானது சரியாக இரண்டு முகாம்களாக பிரிக்கப்படுவதை பார்க்க வேண்டும் என்று கோரிக்கை வைப்பார்கள்–கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள். மற்றும் முதல் முகாமில் உள்ள எல்லா மக்களும் எந்நேரம் கட்டாயமாக இரண்டாம் முகாமில் உள்ளவர்களை விட நல்ல மக்களாக இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். இது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நியாயமற்றது.

1. முதலாவதாக, நிஜமான உலகில் உள்ள சூழ்நிலைகள் அதைவிட மிகவும் சிக்கலானவை. உலகம் 100% கிறிஸ்தவர்களையும் 100% கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையும் கொண்டிருக்கவில்லை. அநேக மக்கள் கிறிஸ்தவர்களாக இருப்பதை மெதுவாக நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் இன்னும் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் குருமார்கள். இன்னும் மற்றொரு மக்கள் இருக்கிறார்கள் அவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளாவிட்டாலும், மெதுவாக கிறிஸ்தவர்களாகி கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவை பற்றின முழு கிறிஸ்தவ கொள்கையையும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்கள் கிறிஸ்துவால், வலிமையாக ஈர்க்கப்பட்டவர்களாக ஆழமான விதத்தில் அவர்களே புரிந்து கொள்ள முடியாத விதத்தில் அவருடையவர்களாக இருக்கிறார்கள். தேவனின் ரகசியமான ஈர்ப்பால் நடத்தப்பட்டு தங்களது மதத்தில் உள்ள கிறிஸ்தவத்தோடு ஒத்துப்போகும் பகுதிகளை உன்னித்து கவனிக்கிறவர்கள் பிற மதத்தில் இருக்கிறார்கள். ஆதலால் இவர்களுக்கு அறியாமலேயே இவர்கள் கிறிஸ்துவினுடையவர்கள் ஆகிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு நல்ல எண்ணமுள்ள புத்த மதத்தவர் இரக்கத்தை குறித்ததான புத்தருடைய போதனையை அதிக அதிகமாய் கவனித்து நடத்தப்பட்டு புத்தரின் மற்ற போதனைகளை பின்னால் தள்ளி இருக்கலாம். கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன்னாக இருந்த நல்ல புறஜாதியார் இந்த நிலையில் இருந்திருக்கலாம். அதேபோல எப்பொழுதுமே ஒன்றாக சேர்த்து அநேக முரணான நம்பிக்கைகைகளை மனதில் போட்டு குழப்பிக் கொள்ளும் அநேக மக்கள் இருக்கிறார்கள். விளைவாக, ஒரு கூட்டமாக கிறிஸ்தவர்களையோ, கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையோ குறித்து நியாயம் தீர்க்க முயற்சிப்பதில் பெரிதாக எந்த பிரயோஜனமும் இல்லை. பூனைகளையும் நாய்களையும் ஒப்பிட்டுப்பார்ப்பதில் ஏதோ நன்மை இருக்கலாம் அல்லது ஆண்களையும் பெண்களையும் கூட்டமாக ஒப்பிட்டு பார்ப்பதில் கூட ஏதோ நன்மை இருக்கலாம். ஏனென்றால், ஒருவருக்கு எது எதுவென்று

திட்டவட்டமாக தெரியும் மற்றும் ஒரு மிருகமானது மெதுவாகவோ அல்லது சடுதியாகவோ நாயாக இருப்பதிலிருந்து பூனையாக மாறிவிடாது. ஆனால், பொதுவாக நாம் கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களையும் ஒப்பிட்டு பார்க்கும்போது நமக்கு தெரிந்த அந்த உண்மையான மக்களைப் பற்றி நாம் வழக்கமாக யோசிப்பது இல்லை. நமக்கு புதினத்திலும் செய்தித்தாள்களிலும் நமக்கு கிடைக்கும் மங்கலான கருத்துக்களையே யோசிக்கிறோம். நீங்கள் ஒரு மோசமான கிறிஸ்தவரையும் நல்ல நாத்திகரையும் ஒப்பிட நினைத்தால், நீங்கள் சந்தித்த உண்மையான உதாரணங்களைப் பற்றியே யோசிக்க வேண்டும். அப்படி நாம் உடனடியாக, அப்படி தேவையான உண்மைகளைக் கொண்டு அதை தொடங்கவில்லை என்றால் நாம் நேரத்தை வீணடித்துக் கொண்டே இருப்போம்.

2. சரி, நாம் தேவையான உண்மைகளுடன் இறங்கி வந்து இப்பொழுது நாம் கற்பனையான கிறிஸ்தவனையும் கற்பனையான கிறிஸ்தவன் அல்லாதவனையும் குறித்து பேசாமல், உண்மையாகவே நம் அருகில் உள்ள நிஜமான இரண்டு மனிதர்களை பற்றி பேசுவோமானால், அப்பொழுது கூட சரியான கேள்விகளை எழுப்புவதற்கு நாம் கவனமாக இருக்க வேண்டும். கிறிஸ்தவம் உண்மையாக இருக்குமானால் அவைகள் இவற்றையே பின்பற்ற வேண்டும். (அ) எந்த ஒரு கிறிஸ்தவனும் அவன் கிறிஸ்தவனாக இல்லாவிட்டால் இருக்கும் நபரை விட இனிமையானவனாக இருப்பான். (ஆ) எந்த மனிதனும் தான் கிறிஸ்தவனாக மாறிய பிறகு முன்பை விட இனிமையானவனாக இருப்பார் எதை போல் என்றால் கோல்கேட்[1] போன்ற பற்பசை விளம்பரங்கள் உண்மையானவைகள் என்றால் இவைகளை அது தொடர வேண்டும். (அ) அந்த பற்பசையை பயன்படுத்தும் ஒருவரின் பற்கள் நன்றாக இருக்கும் அவர் பற்பசையை பயன்படுத்தாமல் இருந்திருக்கிறதை காட்டிலும். (ஆ) எவர் பயன்படுத்த ஆரம்பித்தாலும் அதன் பின்னர் அவரின் பற்களில் முன்னேற்றம் இருக்கும். குறிப்பிட்டு சொன்னால் நான் ஒரு பிரபலமான பற்பசையை பயன்படுத்துகிறேன். ஆனால், என் பெற்றோரிடமிருந்து நான் மோசமான பற்களையே மரபு வழியாக பெற்றிருக்கிறேன். பற்பசையை ஒரு நாளும் பயன்படுத்தாத ஒரு இளம் கருப்பின மனிதனுடைய நேர்த்தியான பல் அடுக்கு எனக்கு கிடைக்கவில்லை. இதுவே, அந்த விளம்பரம் பொய்யானவை என்று நிருபிக்கவில்லை. கிறிஸ்தவரான செல்வி. ஸ்டெல்லாவுக்கு கிறிஸ்தவரல்லாத பிரகாஷை விட கருணை இல்லாத நாக்கு இருக்கலாம். இதன் மூலமாக கிறிஸ்தவம் வேலை செய்கிறதா என்பதை சொல்லமுடியாது. கேள்வி என்னவென்றால், செல்வி ஸ்டெல்லாவினுடைய நாக்கு அவள் கிறிஸ்தவளாக இல்லை என்றால் எப்படி இருக்கும்? மற்றும் பிரகாஷினுடைய நாவு அவர் கிறிஸ்தவர் ஆனால் எப்படி இருக்கும் ? என்பதுதான். செல்வி ஸ்டெல்லாவிடம் இருக்கும் இயற்கையான காரணங்களின் விளைவாக மற்றும் ஆரம்ப நிலை வளர்ப்பு இவைகளால் சில சுபாவங்கள் உள்ளது. அவைகள் அவர்கள் அனுமதிக்கும் பட்சத்தில் கிறிஸ்தவம் அவர்கள் இருவரது சுபாவங்களையும் ஒரு புதிய

1 Colgate

நிர்வாகத்திற்குகீழ் கொண்டு வருகிறது. நீங்கள் உரிமையோடு கேட்கக் கூடியது என்னவென்றால், நாம் விட்டுக் கொடுக்கும் போது அந்த புது நிர்வாகம் முழுமையாக எடுத்துக் கொள்ளும் போது அது நிலைமையை முன்னேற்றுகிறதா என்பதே. பிரகாஷ் விஷயத்தில் நிர்வகிக்கப்படுவது செல்வி ஸ்டெல்லாவில் நிர்வகிக்கப்படுவதை விட மிகவும் ''நல்லதாக'' உள்ளது என்பது அனைவருக்கும் தெரியும்.இது கருத்தல்ல. ஒரு தொழிற்சாலையின் நிர்வாகத்தை நாம் மதிப்பிட வேண்டும் என்றால் அதன் உற்பத்தியை மாத்திரமே ஆராயக்கூடாது. ஆனால், அந்த தொழிற்சாலையில் உள்ள இயந்திரத் தொகுதியையும் கவனிக்க வேண்டும். தொழிற்சாலை (அ)-வில் உள்ள இயந்திரத் தொகுதியை கவனித்தால் அதிலிருந்து ஏதாவது வருமா? என்னும் அளவிற்கே உள்ளது. முதல் தரமான கருவிகளை கொண்ட தொழிற்சாலை(ஆ)-வை பார்த்தால், அது உயர்வாக இருந்தாலும் அது இருக்க வேண்டிய அளவைவிட அது குறைவாகவே உள்ளது. தொழிற்சாலை (அ-வின்) நல்ல மேலாளர் அங்கு புதிய இயந்திரங்களை அவரால் முடிந்த அளவுக்கு சீக்கிரமாக கொண்டு வருவார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், அது நேரம் எடுக்கும். அதுவரையில் குறைந்த விளைச்சல் இருந்தாலும் அவர் தோற்றவர் என்பதாக அது நிரூபிப்பதில்லை.

3. இப்பொழுதும் நான் கொஞ்சம் ஆழமாக செல்கிறேன். மேலாளர் புதிய இயந்திரத்தை பொறுத்தபோகிறார். செல்வி ஸ்டெல்லாவிடம் கிறிஸ்து வேலையை முடிப்பதற்கு முன்னால் அவள் மிகவும் இனியவளாக மாறப் போகிறாள். ஆனால், அதை நாம் அப்படியே விட்டுவிட்டால் செல்வி ஸ்டெல்லாவை இவ்வளவு நாட்களாக பிரகாஷ் இருக்கும் அளவிற்கு கொண்டு வந்து விடுவதே கிறிஸ்துவின் ஒரே குறிக்கோள் என்பது போல் ஆகிவிடும். பிரகாஷ் ஏதோ சரியாக இருப்பது போல நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஏதோ கிறிஸ்தவம் வெறும் மோசமானவர்களுக்கே தேவையானது. நல்லவர்களுக்கு அல்ல. அது இல்லாமலேயே அவர்கள் இருக்க முடியும் என்பது போல. மற்றும் நன்றாய் இருப்பது மாத்திரமே தேவன் கட்டளையிட்டது போல. ஆனால், இது மிகவும் அபாயகரமான தவறாக இருக்கும். உண்மை என்னவென்றால் கர்த்தருடைய பார்வையில் செல்வி ஸ்டெல்லாக்கு இரட்சிக்கப்படுதல் என்பது எவ்வளவு அவசியமோ அதே போல் பிரகாஷுக்கும் அவசியம். ஒரு பொருள் படும் வகையில்(அது என்ன பொருள் என்பதன் விளக்கத்தை ஒரு கணத்தில் தருகிறேன்) நல்லது என்பது கேள்வியில் வருவதே இல்லை. பிரகாஷினுடைய அமைதியான மனநிலையோ மற்றும் தோழமையான இயற்கையான பண்பையோ நாம் பார்ப்பது போலவே தேவனும் பார்க்க வேண்டும் என்று நாம் பார்க்க கூடாது. தேவனே உருவாக்கின இயற்கையான காரணங்களின் விளைவு தான் அது. பிரகாஷின் ஜீரணித்தல் மாற்றம் கண்டாலே, அவருடைய வெறும் நிதானம் என்பதெல்லாம் மறைந்துவிடும். அந்த நல்லவனாக இருத்தல் என்பதே உண்மையாக தேவன் அவனுக்கு கொடுத்த பரிசு தான். அது பிரகாஷ் தேவனுக்கு கொடுத்த பரிசு அல்ல. அதுபோலவே பாவத்தினால் நூற்றாண்டுகளாக அழிக்கப்பட்டிருக்கும் உலகில் தேவன் இயற்கையான காரியங்களை கிரியை செய்ய அனுமதித்திருக்கிறார். அது செல்வி ஸ்டெல்லாவிடம் குறுகிய மனதையும் மற்றும் பதட்டம் தரும் நரம்பையும் தந்திருக்கிறது. அதுவே அவள் கேவலமாக

நடப்பதற்கு காரணம். அவர் அவரது நல்ல நேரத்தில் அவளின் அந்தப் பகுதியை சரி செய்ய நோக்கம் கொண்டுள்ளார். ஆனால், அதுவே தேவனுக்கு முக்கியமான வேலை இல்லை. இது கஷ்டமான காரியமே அல்ல. அவர் இதைக் குறித்து கவலை கொண்டிருக்கவில்லை. அவர் கவனிப்பதும் காத்திருப்பதும் மற்றும் வேலை செய்து கொண்டிருப்பதுமான ஒன்று தேவனுக்கே இலகுவானது அல்ல. ஏனென்றால், இந்த விஷயத்தின் இயல்பை பார்த்தால் அவர் வெறும் அவரது வல்லமையைக் கொண்டு செய்கிற காரியம் அது அல்ல.

அது அவர்களாகவே அவரிடம் விடுதலையோடு கொடுப்பது. அல்லது விடுதலையோடு அவரிடம் கொடுக்க மறுப்பது ஆகும். அவர்கள் அவரிடம் திரும்புவார்களா?மாட்டார்களா? மற்றும் அவர்கள் உருவாக்கப்பட்டதற்குரிய ஒரே நோக்கத்தை நிறைவேற்றுவார்களா? அவர்களது சுய உரிமை அவர்களிடம் ஒரு திசைகாட்டியின் ஊசி எப்படி அதனால் ஆடிக்கொண்டிருக்குமோ அதுபோலவே நடுங்கி கொண்டிருக்கிறது. ஆனால், அந்த முள்ளுக்கு தெரிந்து இருக்க முடியும் அது உண்மையான வடக்கை சுட்டிக்காட்ட முடியும் என்று. ஆனால், அது அப்படி செய்தாகவேண்டிய அவசியமில்லை.அந்த முள் வட்டமாக சுற்றி தேவனை நோக்கி நிற்குமா?

அது அப்படி செய்வதற்கு அவரால் உதவ முடியும். அவரால் அதை கட்டாயப்படுத்த முடியாது. சொல்லப் போனால் அவரால் தனது கையை வைத்து அதை இழுத்து சரியான நிலையில் வைக்க முடியாது. ஏனென்றால் அப்படி செய்யும் போது அதற்கு மேல் அது சுய விருப்பம் என்று ஆகாது. அது வடக்கை நோக்குமா என்ற கேள்வியிலேயே அது ஊஞ்சலாடுகிறது? பிரகாஷும் ஸ்டெல்லாவும் தங்களது இயற்கையான குணங்களை தேவனுக்கு கொடுப்பார்களா? அவர்கள் தேவனிடம் கொடுக்கப் போகும் அல்லது வைத்துக் கொள்ளப் போகும் இயற்கையான குணங்கள் நல்லவையா? அல்லது மோசமானவயா? என்பது இரண்டாம் பட்சமே. பிரச்சனையின் அந்த பகுதியை தேவன் பார்த்துக் கொள்வார். என்னை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள். நிச்சயமாகவே தேவன் கேவலமான சுபாவத்தை மோசமானது என்றும் வருந்தத்தக்கது என்றும் சொல்லுகிறார். அவர் நன்மையான இயற்கையான குணங்களையே நல்ல விஷயம் என்கிறார். ரொட்டி அல்லது சூரிய ஒளி அல்லது தண்ணீர் என்னும் நல்ல காரியங்களைப் போல. ஆனால், இந்த காரியங்கள் எல்லாம் அவர் கொடுத்து நாம் வாங்கிக் கொள்வதாகும். ப்ரகாஷினுடைய நல்ல நரம்புகளையும் நல்ல ஜீரணிக்கும் தன்மையையும் அவரே உண்டாக்கினார். மற்றும் அங்கிருந்து அநேகம் காரியங்கள் வருகின்றன.

நமக்குத் தெரிந்த படி நன்மையான விஷயங்களை உண்டாக்க தேவனுக்கு எந்த பொருட்செலவும் இல்லை. ஆனால், எதிர்க்கும் விருப்பங்களை மாற்ற அவருக்கு சிலுவையில் அறையப்படுதல் என்ற விலை கிரயம் செலுத்தவேண்டியதாஆயிற்று. அவைகள் எல்லாம் விருப்பங்கள் ஆதலால் அவரது கோரிக்கையை நிராகரிக்க

அவைகளால் முடியும். (நல்ல மனிதர்களில் எவ்வளவோ அதேபோல் கெட்ட மனிதர்களிலும்) மற்றும், ப்ரகாஷினுடைய இயற்கை குணத்தில் ஒரு பகுதியே நன்மை என்பதால், இறுதியில் அது துண்டு துண்டாகிவிடும். இயற்கையானவளே அழிந்து போகக்கூடியவள். இயற்கையான காரணங்கள் எல்லாம் ஒன்றிணைந்து இனிமையான உளவியல் வடிவமைப்பை டிக்–கின் உள்ளாக கொண்டு வந்துள்ளது. எது போல் என்றால் ஒரு கூட்ட கதிர்கள் இணைந்து இனிமையான வண்ணங்களோடு உள்ள சூரியஸ்தமத்தை உருவாக்குவது போல. இப்பொழுது வரையில் (ஏன் என்றால் இயற்கை அப்படியே செயல்படுகிறது) அவைகள் களைந்து ஒன்று விடாமல் போய்விடும். அந்த வடிவமைப்பு இரண்டு காரியத்திலும் மறைந்துவிடும்.

ப்ரகாஷிற்கு திரும்புவதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது (அல்லது தேவன் திருத்த அவரை அனுமதிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது). அந்த நொடி பொழுதிற்கான வடிவமைப்பை அழகான, நித்தியமான ஆவியாக மாற்றுவதற்காக மற்றும், அவன் அதை எடுத்துக்கொள்ளவில்லை. இங்கே ஒரு முரண்பாடு உள்ளது. தேவனிடம் டிக் திரும்பாத மட்டும் அவனுடைய நல்ல குணங்களை எல்லாம் அவனுக்கு சொந்தமானது என்று எண்ணுகிறான். அவன் அப்படி எண்ணும் வரையில் அது அவனுக்கு உரியது அல்ல. எப்பொழுது டிக் தனது நற்குணங்களை தன்னுடையது அல்ல, ஆனால் தேவனிடமிருந்து வந்த பரிசு என்று உணர்ந்து கொள்கிறானோ, அப்பொழுதிலிருந்து அது உண்மையாகவே அவனுக்கு உரியதாகிறது. நாம் வைத்துக் கொள்ளக்கூடிய ஒரே காரியம் நாம் தேவனிடம் தாராளமாய் கொடுத்த காரியமே ஆகும். நாம் நமக்கென்று வைத்துக் கொள்ள முயற்சிக்கும் காரியங்கள் தான் நாம் நிச்சயம் இழக்க போகிறவைகள்.

ஆதலால், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் நாம் மோசமானவர்களை இன்னும் காணும் போது, நாம் நிச்சயமாக ஆச்சரியப்படக்கூடாது. நீங்கள் சிந்தித்துப் பார்க்கும்போது நல்ல மனிதர்களை விட மோசமான மனிதர்கள் ஏன் கிறிஸ்துவுக்குள் அதிகம் வரலாம் என்று எதிர்பார்க்க ஒரு காரணம் உள்ளது. அந்த காரியத்திற்காக தான் கிறிஸ்து உலகில் வாழும் போது அவரை கண்டனம் செய்தார்கள். அவர் அவ்வாறு மோசமான மனிதர்களை ஈர்த்தார். இன்னும் அதையே மனிதர்கள் கண்டனம் செய்கிறார்கள் மற்றும் எப்பொழுதும் அதையே செய்யப் போகிறார்கள் ஏன் என்று உங்களுக்கு தெரியவில்லையா? கிறிஸ்து சொன்னார், ‘‘ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்’’ மற்றும் ‘‘ஐஸ்வர்யவான் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பது எவ்வளவு கடினமாய் இருக்கிறது’’ என்று. முதலில் அவர் பொருளாதாரத்தில் பணக்காரரையும் ஏழைகளையும் என கருதுபவரை சொன்னார். ஆனால், அவரது வார்த்தைகள் மற்றவிதமான செல்வத்துக்கும் ஏழ்மைக்கும் பொருந்தும் அல்லவா?

அதிகமாக பணத்தை வைத்திருப்பதால் வரும் ஆபத்து என்னவென்றால், நீங்கள் பணம் கொடுக்கும் சந்தோஷத்தினால் மிகவும் திருப்தியடைந்து தேவன் உங்களுக்கு எவ்வளவு தேவை என்பதை புரிந்து கொள்ள தவறி விடுவீர்கள். வெறும் காசோலையில் கையொப்பமிடுவதினால் எல்லாம் வந்து விடும் என்றால், நீங்கள் ஒவ்வொரு கணமும்

தேவனையே முழுமையாக சார்ந்து கொண்டிருக்கிறவர்கள் என்பதை மறந்து போவீர்கள். மிக வெளிப்படையாகச் சொன்னால் இயற்கையான வரங்களும் இது போன்ற அபாயத்தை கொண்டுள்ளது. உங்களுக்கு நல்ல நரம்புகளும் அறிவும் ஆரோக்கியமும் புகழும் இருந்தால் உங்களுடைய குணங்களில் நீங்கள் அவைகள் இருப்பதைப் போல் இருப்பதில் மிகவும் திருப்தியாய் இருந்திருப்பீர்கள்.தேவனை எதற்கு இதற்குள் எல்லாம் இழுத்து வரவேண்டும் என்று கேட்டிருப்பீர்கள்.

ஒரு குறிப்பிட்ட அளவிலான நல்ல நடத்தை உங்களுக்கு மிகவும் இலகுவாகவே வந்துவிடும். நீங்கள் ஒன்றும் பாலுணர்வினாலோ, அடங்காத மதுபான பிரியரோ அல்லது படபடப்பானவரும் அல்லது மோசமான கோபம் உள்ளவராகவோ இருந்து எப்பொழுதும் தடுக்கி விழும் இழிவான சிருஷ்டி அல்ல எல்லோரும் உங்களை நல்ல நபர் என்கிறார்கள்.(நமக்கிடையில்) நீங்கள் அதை ஒத்துக் கொள்கிறீர்கள் நீங்கள் செய்யும் நல்ல செயல்களால் இந்த பண்புகள் உங்களுக்குள் இருக்கிறது என்று நீங்கள் நம்பலாம் மற்றும் இதைவிட சிறந்த எந்த வகையான நன்மையும் உங்களுக்கு தேவையில்லை என்றும் உணர்ந்திருக்கலாம்.

இயற்கையாகவே இந்த எல்லாவிதமான நன்மைகளையும் கொண்டுள்ள மனிதர்களை, அவர்களுக்கு ''கிறிஸ்து தேவை'' என்பதை உணரச் செய்யவே முடியாது. எப்பொழுது வரையில் என்றால் ஒரு நாள் அவர்களது இயற்கையான நன்மைகள் அவர்களை கைவிட்டு அவர்களது சுய–திருப்தி உடைக்கப்படும் போது. வேறு வார்த்தையில் சொன்னால்,இந்த அர்த்தத்தில் கொண்டால் செல்வந்தர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது கடினமான ஒன்று. இது மோசமான மக்களுக்கு மிகவும் வேறுபட்டது. சிறிய, தாழ்வான, பயந்த சுபாவம் உள்ள, ஊழல் நிறைந்த, பாதிக்கப்படக்கூடிய தனியான மக்கள், அல்லது உணர்ச்சிமிக்க சிற்றின்பப்பிரியமுடைய, சமநிலை இல்லாத இப்படிப்பட்ட மக்கள் இவர்கள் நன்மை செய்ய ஏதோ ஒரு சிறிய முயற்சி செய்தால், தங்களுக்கு உதவி தேவை என்பதை இரண்டு மடங்கு அதிகமாக துரிதமாக கற்றுக் கொள்வார்கள். அவர்கள் கிறிஸ்துவே,வேற எதுவுமே தேவையில்லை என்றாகி விடுவார்கள். அவர்களை பொறுத்தவரையில் சிலுவையை சுமந்து அவரை பின்பற்ற வேண்டும், அல்லது நம்பிக்கையின்மை மட்டுமே. அவர்கள் தொலைந்து போன ஆடுகள். விசேஷமாக அவர்களை கண்டுபிடிக்கவே அவர் வந்தார்.

அவர்கள் தான் (உண்மையான மற்றும் கடுமையான அர்த்தத்தில்) ஏழைகள். அவர் அவர்களை ஆசீர்வதிக்கிறார். அவர்களே அவர் சேர்த்துக் கொண்ட மோசமான கூட்டம். நிச்சயமாக, பரிசேயர்கள் அவர்கள் முதலில் இருந்து சொன்னது போலவே சொல்லுவார்கள், ''கிறிஸ்தவத்தில் ஏதேனும் இருந்தால் இவர்கள் கிறிஸ்தவர்களாக இருந்திருக்க மாட்டார்கள்'' என்று. இங்கே நம் ஒவ்வொருவருக்கும் எச்சரிப்போ அல்லது ஊக்கப்படுத்துதலோ இருக்கிறது. நீங்கள் நல்ல நபராக இருந்தால், ஒழுக்கமாய் இருத்தல் உங்கள் உங்களுக்கு இலகுவாக வருகிறது என்றால், எச்சரிப்பாய் இருங்கள். அதிகமாக கொடுக்கப்பட்டவர்களிடம் இருந்து அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

தேவன் உங்களுக்கு இயற்கையாக பரிசாக கொடுத்த ஒன்றை உங்களது சாமர்த்தியம் என்று நீங்கள் தவறாக நினைத்தால், மற்றும் வெறும் நல்லவர்களா இருப்பதில் மாத்திரமே திருப்தி கொண்டால், நீங்கள் இன்னும் எதிர்ப்பாளரே. மற்றும், அந்த எல்லா பரிசுகளும் உங்களை இன்னும் கடுமையாக விழுந்து போகச் செய்யும். உங்களுடைய சீர்கேடு இன்னும் அதிக சிக்கல் கொண்டது. உங்களுடைய தவறான எடுத்துக்காட்டு அதிக பேரழிவுக்கு உரியது. பிசாசு ஒரு காலத்தில் பிரதான தேவ தூதனாய் இருந்தான். உங்களுடைய இயற்கையான பரிசுகள் எப்படி மனிதக்குரங்குயை விட மிக உயர்ந்ததோ அதுபோலவே, உங்களுடைய இயற்கையான பரிசுகளை பார்க்கிலும் அவனுக்கு உரியவை மிகவும் உயர்ந்தது.

ஆனால், நீங்கள் ஒரு பாவப்பட்ட சிருஷ்டியானால், ஆபாசமான பொறாமைகள் மற்றும் அர்த்தமில்லாத சண்டைகள் நிறைந்த வீட்டில் மோசமாக வளர்க்கப்பட்டு, விஷமாக்கப்பட்டு இருப்பீர்கள் என்றால், நீங்கள் தேர்ந்தெடுக்காத சுமைகளால் சுமத்தப்பட்டு இருப்பீர்களானால், சில அருவருக்கத்தக்க, இயல்புக்கு முரணான பாலுணர்ச்சி உள்ளவர்களாக, தாழ்வு மனப்பான்மையினால் ஒவ்வொரு நாளையும் தொடங்கி முடித்து உற்ற நண்பர்களிடம் எரிந்து விழுகிறீர்கள் என்றால் நம்பிக்கை இழக்காதீர்கள். அவருக்கு அது பற்றி எல்லாம் தெரியும். அவர் ஆசிர்வதித்த ஏழைகளுள் ஒருவர் நீங்கள். நீங்கள் எவ்வளவு மோசமான வாகனத்தை இயக்க முயற்சிக்கிறீர்கள் என்று அவருக்கு தெரியும். தொடருங்கள். உங்களால் முடிந்ததை செய்யுங்கள். ஒருநாள், ஒருவேளை மறு உலகில் அல்லது மிகவும் சீக்கிரமாகவே அதை குப்பை மேட்டில் வீசி எறிந்து உங்களுக்கு புதியதாக ஒன்றை தருவார். அதன் பின்னர் நீங்கள் எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்து விடுவீர்கள். உங்களைப் பார்த்து நீங்களே வியந்து விடுவீர்கள். ஏனென்றால், நீங்கள் கடுமையான பள்ளியில் வாகனம் இயக்க கற்றீர்கள் (பிந்தினவர்கள் முந்தினோராயும் முந்தினோர்கள் பிந்தினோராயும் இருப்பார்கள்).

'நல்லவர்களாக இருத்தல்'– முழுமையான ஒருங்கிணைக்கப்பட்ட ஆளுமை என்பது மிகச் சிறந்த காரியம். நம்மிடம் உள்ள மருத்துவம்,கல்வி, பொருளாதாரம் மற்றும் அரசியலில் உள்ள பலம்., இவைகள் எல்லாவற்றையும் கொண்டு, நாம் நல்லவர்களாக எவ்வளவு மக்களை வளர்க்க முடியும் என்று முயற்சிக்க வேண்டும். எப்படி எல்லோரும் உண்பதற்கு போதுமான உணவை விளைய செய்ய முயற்சிக்கிறோமோ அதுபோல. ஆனால், எல்லோரையும் நல்லவர்கள் ஆக்குவதில் வெற்றி பெற்றுவிட்டால் நாம் அவர்களது ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்திவிட்டோம் என்று தவறாக நினைத்துக் கொள்ளுதல் கூடாது. நல்லவர்கள் நிறைந்த உலகம்–அவர்கள் தங்களுடைய சொந்த நன்மைகளில் திருத்திக்கொள்கிறார்கள். அதற்கு அப்பால் நோக்காமல், தேவனிடமிருந்து தூரமாக தள்ளிப் போயிருக்கும் மக்கள் என்பவர்கள் எப்படி மோசமான உலகம் இரட்சிப்புக்காக எவ்வளவு தேவையோடு உள்ளதோ அந்த அளவிற்கு நம்பிக்கை இழந்து இரட்சிப்பின் தேவைகளோடு இருக்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு இன்னும் கடினமான இடத்தில் கூட இருக்கிறார்கள்.

நல்லவர்கள் ஆக்குவதில் வெற்றி பெற்றுவிட்டால் நாம் அவர்களது ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் நடத்திவிட்டோம் என்று தவறாக நினைத்துக் கொள்ளுதல் கூடாது. நல்லவர்கள் நிறைந்த உலகம்–அவர்கள் தங்களுடைய சொந்த நன்மைகளில் திருத்திக்கொள்கிறார்கள். அதற்கு அப்பால் நோக்காமல், தேவனிடமிருந்து தூரமாக தள்ளிப் போயிருக்கும் மக்கள் என்பவர்கள் எப்படி மோசமான உலகம் இரட்சிப்புக்காக எவ்வளவு தேவையோடு உள்ளதோ அந்த அளவிற்கு நம்பிக்கை இழந்து இரட்சிப்பின் தேவைகளோடு இருக்கிறார்கள். இரட்சிக்கப்படுவதற்கு இன்னும் கடினமான இடத்தில் கூட இருக்கிறார்கள். ஏனென்றால், வெறும் முன்னேற்றம் மீட்பு ஆகாது. மீட்பு என்பது இங்கும் அங்குமாக கொடுத்தாலும், கொடுக்கப் போகும் ஒன்றாக இருந்தாலும், இறுதியில் நாம் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு முன்னேறி இருக்க செய்திருக்கும். சிருஷ்டிகளை குமாரர்கள் ஆக்கவே தேவன் மனிதனாக மாறினார். பழைய மனிதனை இன்னும் சிறந்த வகையில் மாறின பழைய மனிதனாக உருவாக்க அல்ல. ஆனால், புதிய வகையான மனிதனாக உருவாக்கவே.

இது ஒரு குதிரையை இன்னும் நன்றாக குதிக்க செய்யும் பாடம் போல் அல்ல. ஆனால், ஒரு குதிரையை சிறகுள்ள ஒரு சிருஷ்டியாக மாற்றுவதைப் போல் ஆகும். நிச்சயமாக அதனுடைய சிறகுகளை அது பெற்ற பின் அது இதுவரையில் தாண்டி இருக்காத மதில்களை தாண்டி பறக்கும். ஆகையால், ஒரு இயற்கையான குதிரையை அதனுடைய விளையாட்டில் அது தோற்கடித்து விடும். ஆனால், சிறகுகள் முளைக்க ஆரம்பித்திருக்கும் காலகட்டமும் இருந்திருக்கும். அந்த காலத்தில், அதனால் அப்படி செய்திருக்க முடிந்திருக்காது. அதன் தோள்களில் கட்டிகள் தோன்றும் நிலையில் அவைகள் சிறகுகளாக மாறும் என்று பார்க்கிற எவராலும் சொல்ல முடிந்திருக்காது. அது அருவருப்பான தோற்றத்தை கூட கொடுத்திருந்திருக்கும்.

ஆனால், அநேகமாய் இந்த கேள்வியிலேயே நாம் ஏற்கனவே அதிகமாக செலவழித்து விட்டோம். கிறிஸ்தவத்திற்கு எதிரான ஒரு வாக்குவாதமே உங்களுக்கு வேண்டுமென்றால், (அது உண்மையாக இருக்கும் என்று எண்ணுவதற்கு முன்னாக அப்படிப்பட்ட வாக்குவாதங்களுக்காக ஆர்வமாக நான் காத்திருந்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது) நீங்கள் இலகுவாக ஒரு முட்டாள் மற்றும் திருப்தி இல்லாத கிறிஸ்தவனிடம் இப்படி சொல்வதைக் காணலாம், ''ஆக இதுதான் நீங்கள் மெச்சிக் கொண்டிருக்கிற புதிய மனிதனா? எனக்கு பழைய வகையான மனிதனையே கொடுங்கள்'' என்று. ஆனால், மற்ற அடிப்படையில் கிறிஸ்தவம் சாத்தியமானது என்று நீங்கள் பார்க்க தொடங்கி விட்டால், உங்கள் இருதயத்தில் அது பிரச்சனையை இழுத்தடிக்கிறது என்று உங்களுக்கு தெரியும்.

மற்ற மக்களின் ஆத்துமாக்களை பற்றி இதுவரையில் உங்களுக்கு என்ன தெரிந்திருக்கும். அவர்களது சோதனைகள், அவர்களது வாய்ப்புகள்,அவர்களது போராட்டங்கள்? முழு சிருஷ்டிப்பிலும் ஒரு ஆத்துமாவை பற்றி உங்களுக்கு நிச்சயம் தெரியும். அதனுடைய விதி மட்டுமே உங்கள் கைகளில் வைக்கப்பட்டு இருக்கிறது.

தேவன் இருந்தால் நீங்கள் அவரோடு ஒருவிதத்தில் தனியாகவே இருக்கிறீர்கள். அடுத்த வீட்டுக்காரரை பற்றின ஒரு யூகமாகவோ அல்லது புத்தகங்களில் வாசித்த ஒரு ஞாபகமாகவோ அவரை நீங்கள் தள்ளி வைக்க முடியாது. எல்லா பேச்சுகளும் வாக்குவாதங்களும் எதற்காக? உங்களால் அதை ஞாபகமாவது வைத்துக் கொள்ள முடியுமா? இயற்கை அல்லது உண்மையான உலகம் என்று நாம் சொல்வது அழியும் போது, நாம் எப்பொழுதும் நின்று கொண்டிருந்த பிரசன்னம் தெளிவானதாகவும், உடனடியானதாகவும் மறுக்க முடியாததாகவும் ஆகும்போது இவையெல்லாம் எடுபடுமா?

# 11. புதிய மனிதர்கள்

கடைசி அத்தியாயத்தில் கிறிஸ்துவின் புதிய மனிதர்களை உருவாக்கும் வேலையை குதிரையை சிறகுள்ள சிருஷ்டியாக மாற்றும் செயல்முறைக்கு ஒப்பிட்டு இருந்தேன். இது வெறும் முன்னேற்றம் அல்ல மாற்றம் என்பதை வலியுறுத்த அந்த உச்சக்கட்ட எடுத்துக்காட்டை பயன்படுத்தி இருந்தேன். இதற்கு இணையான மாற்றம் இயற்கை உலகில் இருப்பதை காணலாம். இந்த மாற்றத்தை சில கதிர்களை பூச்சிகளின் மேல் வீச செய்வதன் மூலம் கொண்டு வரலாம். சில மக்கள் இப்படியே பரிணாம வளர்ச்சி செயல்பட்டது என்று எண்ணுகிறார்கள்.

சிருஷ்டிகளில் உள்ள மாற்றங்கள் எல்லாம் விண்வெளியில் உள்ள கதிர்களினால் வந்திருக்கலாம். நிச்சயமாக,மாற்றங்கள் ஒருமுறை வந்த பின்பு இயற்கையாக தேர்ந்தெடுத்தல் என்பது அதில் செயல்பட தொடங்கி விடும். அதாவது, பயனுள்ள மாற்றங்கள் பிழைக்கும், மற்றவை களை அகற்றப்பட்டுவிடும். ஒருவேளை, நவீன மனிதன் இதை பரிணாம வளர்ச்சியோடு இணைத்து சிந்தித்துப் பார்த்தால் இதன் கருத்தை புரிந்து கொள்ளலாம். இப்பொழுது எல்லோருக்கும் பரிணாம வளர்ச்சியை பற்றி தெரியும். சில படித்தவர்கள் அதை நம்பாவிட்டாலும், மனிதன் கீழான ரக வாழ்விலிருந்து வந்தவன் என்று எல்லோருக்கும் சொல்லப்பட்டது.

அதன் காரணமாக, அடுத்தபடி என்ன? மனிதனுக்கும் அடுத்ததாக என்ன வெளிப்படப் போகிறது? என்று மக்கள் அதிசயப்படுகிறார்கள். கற்பனை மிகுந்த எழுத்தாளர்கள் இந்த அடுத்தபடியை காட்சி ஆக்க முயற்சிக்கிறார்கள். சூப்பர் மேன் என்று அவனை அழைக்கிறார்கள். ஆனால், பொதுவாகவே நமக்குத் தெரிந்த மனிதனை விட மோசமானவனாக ஒருவனை வெற்றிகரமாக படமாக்கி விடுகிறார்கள். மற்றும் பின்னர் சமாளிப்பதற்காக கூடுதலாக ஒரு காலையோ ஒரு கையையோ வைக்கிறார்கள். ஆனால், அடுத்தபடி அவர்கள் கற்பனை செய்திராததாகவும் பழைய படியை விட மிகவும் வேறுபட்ட ஏதோ ஒன்றாகவும் இருக்கும் என்று வைத்துக் கொண்டால், அது அதை போல் ஒன்றாக இருக்காது அல்லவா?

பல ஆயிரம் நூற்றாண்டுகளுக்கு முன்னர், மிகவும் கனமான கவசங்களை அணிந்த சிருஷ்டிகள் பரிணமித்தது. பரிணாமக் கொள்கை வந்தபோது இருந்த நேரத்தில் யாராவது ஒருவன் அதை பார்த்திருந்தால், அது இன்னும் கனமாக மேன்மேலும் கனமாகும் கவசங்களை உடையதாகிவிடும் என்று எதிர்பார்த்து இருந்திருப்பான். ஆனால், அவன் தவறாகவே இருந்திருக்க முடியும்.

எதிர்காலம் காரியங்களை மறைத்தே வைத்திருந்தது. அது அந்த நேரத்தில் அவனால் எதிர்பார்க்க முடியாததாய் இருந்திருக்கும். அது அவனிடம் சிறிதான நிர்வாணமான கவசங்கள் அணியாத சிறந்த மூளைகள் கொண்டதான மிருகங்களை

உதித்திருக்கும் : அந்த மூளைகளைக் கொண்டு அது முழு உலகையும் ஆளுகை செய்யும். வரலாற்றுக்கு முந்தைய அரக்கர்களை விட பெரும் புதிய வல்லமையை மாத்திரம் அவைகள் கொண்டிருக்கப் போவதில்லை, புதிய விதமான வல்லமையை அவைகள் பெறப்போகின்றன.

அடுத்தபடி அது வித்தியாசமாய் இருத்தல் மாத்திரமல்ல, புதிய விதத்தில் வேறுபாடுகளை கொண்டிருக்கப்போகிறது. அவன் நோக்கிக் கொண்டிருந்த திசையில் அந்த பரிணாமத்தின் போக்கானது போவதில்லை. உண்மையிலேயே, அது கூர்மையான திருப்பத்தை எடுக்கப் போகிறது.

இப்பொழுது எனக்குத் தோன்றுகிறபடி அடுத்த படியை குறித்த பிரபலமான யூகங்கள் அதேபோன்றுதான் தவறுகளை செய்கின்றன. மனிதர்கள் அதிகமாக அறிவை வளர்ப்பதையும் இயற்கையை கட்டுப்படுத்துவதையும் மக்கள் காண்கிறார்கள். (அல்லது இப்பொழுது அவர்கள் பார்ப்பதாக நினைக்கிறார்கள்) மற்றும், அந்த ஓடை அந்த திசையில் விழுவதாக அவர்கள் நினைப்பதால் அது அந்த திசையிலேயே எப்போதும் சென்று விழுந்து ஓடும் என்று கற்பனை செய்கிறார்கள். ஆனால், அடுத்த படி உண்மையிலேயே புதிதான ஒன்றாக இருக்கும் என்பதை தவிர என்னால் வேறு எதையுமே சிந்திக்க முடியவில்லை. நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத திசையிலேயே அது செல்லும். அப்படி போகாத பட்சத்தில் அதை புதிய படி என்று சொல்லுவதில் எந்த பிரயோஜனமும் இல்லை. நான் வெறும் மாற்றத்தை மாத்திரம் எதிர்பார்க்கக் கூடாது மாறாக ஒரு புதுவித மாற்றத்தை எதிர்பார்க்க வேண்டும். வெறும் மாற்றத்தை நான் எதிர்பார்க்காமல் மாற்றத்தை கொண்டு வரும் புதிய முறையை எதிர்பார்க்க வேண்டும் அல்லது தெளிவாகச் சொன்னால் பரிணாமத்தின் அடுத்த படியானது பரிணாமத்திலேயே இருக்கக் கூடாது என்று நான் எதிர்பார்க்க வேண்டும். மாற்றத்தை கொண்டு வரும் முறையே பரிணாமம் என்று எதிர்பார்ப்பதே மாற்றி அமைக்கப்பட்டது ஆகும். இறுதியாக இந்த காரியம் நடக்கும் போது அது நடைபெறுகிறதை வெகு சில மக்களே கவனிக்கிறார்கள் என்பதைக்குறித்து நான் ஆச்சரியப்படக்கூடாது.

இப்பொழுது இதன் அடிப்படையில் நீங்கள் பேச அக்கறை கொண்டால், அடுத்ததான கிறிஸ்தவ கண்ணோட்டம் ஏற்கனவே தெளிவாக வந்துவிட்டது. மற்றும் அது நிச்சயமாகவே புதிது. அது புத்திசாலி மனிதன் மிக புத்திசாலியாக மாறும் மாற்றம் அல்ல. அது முற்றிலும் வேறு திசையில் செல்லும் மாற்றம். தேவனுடைய சிருஷ்டியாய் இருப்பதிலிருந்து தேவனின் மகன்களாக மாறும் மாற்றம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னால் முதல் சான்று பாலஸ்தீனத்தில் வந்தது. ஒரு அர்த்தத்தில், அந்த மாற்றம் பரிணாமம் அல்ல ஏனென்றால், அது இயற்கையான நிகழ்வினால் நடந்த செயலால் எழும்பி வந்த ஏதோ ஒன்று அல்ல. ஆனால், வெளியே இருந்து இயற்கைக்குள் வந்த ஏதோ ஒன்று. ஆனால், இதைத்தான் நான் எதிர்பார்க்க வேண்டும். பழைய காலத்தை படித்தே நாம் பரிணாமத்தை பற்றின கருத்துக்களை வந்தடைந்தோம். உண்மையாகவே

புதுமையானவைகள் அங்கு சேர்த்து வைக்கப்பட்டுஎதிர்காலத்தில் இருக்குமானால், பழையவற்றை கொண்டு நமக்கு இருக்கும் கருத்துக்கள் அவற்றை நிச்சயமாக உள்ளடக்காது. முந்தின எல்லாவற்றையும் விட இந்த புதிய படி வேறுபட்டு இருக்கும். இயற்கைக்கு வெளியில் இருந்து வரும் ஒன்றினால் மாத்திரமல்ல மற்றும் பல்வேறு வழிகளிலும்.

1. இது பாலியல் இனப்பெருக்கத்தின் மூலம் தொடரவில்லை. நாம் அதில் ஆச்சரியப்பட வேண்டுமா? பாலியல் தோன்றுவதற்கு முன்னால் காலம் இருந்திருக்கிறது. பெருக்கம் வேறு முறையிலும் நடந்திருக்கிறது. இதன் விளைவாக பாலியல் மறைந்துவிடும் நாட்கள் வரும் என்று நாம் எதிர்பார்க்கலாம். இல்லை என்றால்(அதுதான் நடக்கிறது) ஒரு காலகட்டம் அங்கு பாலியல் இருந்திருக்கும். ஆனால், அதுவே பெருகுவதற்கான முக்கியமான வழியாக இருப்பதாக இருந்தது நின்றுபோயிருக்கும்.

2. ஆரம்ப காலகட்டத்தில் ஒரு புதிய படியை எடுப்பதற்கு உயிரினங்களுக்கு வாய்ப்பே இல்லை அல்லது மிகக் குறைந்த வாய்ப்பே இருந்தது. முன்னேற்றம் என்பது பிரதானமாக அவர்களுக்கு நேர்ந்த ஒன்றாய் இருந்தது. அவர்கள் செய்த ஏதோ ஒன்றாக இருக்கவில்லை. ஆனால், ஒரு புதிய படி, சிருஷ்டிகளாய் இருந்த படியில் இருந்து மகன்களான படி என்பது தன்னார்வத்துக்கு உரியது. ஒரு அர்த்தத்தில் தன்னார்வம் என்பது என்ன அர்த்தத்தில் என்றால், நாமே அதை எடுத்துக் கொண்டிருக்கலாம் அல்லது கற்பனை செய்து இருக்கலாம் என்பதினால் அல்ல. ஆனால், தன்னார்வம் என்பது என்ன அர்த்தத்தில் என்றால் நமக்கு அது கொடுக்கப்படும் போது நம்மால் அதை நிராகரிக்க முடியும். நாம் விரும்பினால் நாம் சுருங்கி பின் செல்லலாம், நம் பாதங்களை புதைத்து விட்டு புதிய மனித குலத்தை நாம் இல்லாமல் நம்மை கடந்து செல்ல விட்டு விடலாம்.

3. நான் கிறிஸ்துவை புதிய மனிதனின் ‘‘முதலாம் நிகழ்வு’’ என்று அழைத்தேன். அவர் அதற்கும் மேலான ஏதோ ஒன்று. அவர் வெறும் ஒரு புதிய மனிதன் அல்ல அந்த இனம் அனைத்திற்கும் வெறும் மாதிரி அல்ல. ஆனால், அவரே புதிய மனிதன். அவரே தொடக்கம் நடு மையம் மற்றும் எல்லா புதிய மனிதர்களின் புதிய வாழ்வு. அவர் உருவாக்கப்பட்ட பிரபஞ்சத்திற்குள் வந்தார். அவர் சொந்த விருப்பத்தினாலேயே அவர் சோயி (ZOE)புதிய வாழ்வு என்பதையும் கொண்டு வந்தார். நம்மிடம் கொண்டு வந்தார் என்று அர்த்தம் கொள்ளவே சொன்னேன். சோயி தன்னுடைய இடத்தில் காலம் காலமாக இருக்கிறது மற்றும் அதை அவர் பரம்பரையின் மூலமாக அல்ல, ‘‘நல்ல தொற்று’’ என்று நாம் அழைப்பதன் மூலமாகவே பரப்புகிறார். அது கிடைக்கும் ஒவ்வொருவருக்கும் அவரோடு உள்ள தனிப்பட்ட தொடர்பினாலே கிடைக்கிறது. மற்றவர்கள் அவருக்குள் இருப்பதாலே புதிதாக மாறிவிடுகிறார்கள்.

4. இந்த படியானது முந்தினவற்றைக் காட்டிலும் வேறு வித வேகத்தில் விதத்தில் நடைபெறுகிறது. இந்த கோளில் மனிதன் பெருகினதோடு இதை ஒப்பிட்டால் கிறிஸ்தவம் மனித இனத்தோடு கலந்தது ஒரு மின்னல் வேகத்தில் உள்ளது–. ஏனென்றால் இரண்டாயிரம் வருடங்கள் என்பது பிரபஞ்சத்தின் வரலாற்றில் கிட்டத்தட்ட ஒன்றுமே இல்லை. (நாம் இன்னும் ஆரம்ப கிறிஸ்தவர்கள்) என்பதை மறந்து விடாதீர்கள். இப்பொழுது உள்ள சூதான மற்றும் பிரயோஜனமற்ற பிரிவுகள் ஒரு குழந்தை பருவத்து நோய் என்று நாம் நம்புவோம். இப்பொழுதுதான் நமக்கு பல் முளைத்துக் கொண்டிருக்கிறது. வெளி உலகமானது சந்தேகமே இல்லாமல், நேர் மாறாக தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. நாம் வயதானதால் செத்துக் கொண்டிருக்கிறோம் என்று அது நினைக்கிறது. ஆனால், அதற்கு முன்பை விட வறட்சி அதிகம் நிலவுகிறது. மறுபடியும் மறுபடியுமாக கிறிஸ்தவம் செத்துக்கொண்டிருக்கிறது என்று அது எண்ணியது. துன்புறுத்தலினால் செத்துக் கொண்டிருக்கிறது, அல்லது உள்ளிருக்கும் ஊழலினால் என்று. முகமதியர்கள் எழும்பினதினால், உடல் அறிவியல் எழுந்ததால், மிகப்பெரிய கிறிஸ்தவத்திற்கு எதிரான புரட்சி இயக்கங்கள் வந்ததினால் என்று. ஆனால், ஒவ்வொரு நேரமும் உலகம் ஏமாற்றமடைந்திருக்கிறது. அதனது முதல் ஏமாற்றம் சிலுவை அரைதலை குறித்தது. அந்த மனிதர் மறுபடியும் உயிரோடு எழுந்தார். என்னால் நன்றாக புரிந்து கொள்ள முடிகிறது., ஒரு அர்த்தத்தில் அவர்கள் அச்சப்படும் அளவில் அது நியாயம் இல்லாததாய் இருந்திருக்கிறது. அதன் பின்னர் அது திரும்பத்திரும்ப நடந்து கொண்டே இருக்கிறது அவர் தொடங்கியதை அவர்கள் கொன்று கொண்டே இருக்கிறார்கள், மற்றும் ஒவ்வொரு முறையும் அவர்கள் பூமியை அதன் கல்லறையில் தட்டும் போது அது உயிரோடு இருக்கிறது என்பது அவர்களுக்கு திடீரென்று கேட்கிறது. மற்றும் சில புதிய இடங்களில் அது உடைத்து எழுந்து வந்திருப்பதையும் பார்க்கிறார்கள். அவர்கள் நம்மை வெறுப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.)

5. இழப்புகள் அதிகமாக இருக்கக்கூடிய ஆபத்து உள்ளது.. ஆரம்ப நிலையிலேயே பின்னடைவுக்கு உள்ளானதால், அந்த சிருஷ்டி உலகில் தான் இருந்த சில காலங்களைஅதிகபட்சமாக தொலைத்தது. பல நேரங்களில் அது அதைக் கூட தொலைக்கவில்லை. இப்பொழுது முக்கியமான கணம் வந்துவிட்டது. நூற்றாண்டு நூற்றாண்டுகளாக தேவன் இயற்கையானது சிருஷ்டிகளை விளையச் செய்யும்படி வழி நடத்தினார். எந்த அளவுக்கு என்றால் அதை இயற்கையில் இருந்து பிரித்து எடுத்து தேவன்களாக மாற்றும் அளவுக்கு (அவர்கள் விரும்பினால்).அதனால் அவர்கள் கவரப்பட்டு தங்களை விட்டுக் கொடுப்பார்களா? ஒரு விதத்தில் பிறப்பில் உள்ள சிக்கல் போல இது உள்ளது.

நாம் எழுந்து கிறிஸ்துவை பின்பற்றும் வரையில் நாம் இயற்கையின் பகுதிகளாக, நமது பெரும் தாயின் கருவில் இன்னும் இருக்கிறோம். அவளது பிரசவம் மிகுந்த நேரம் எடுத்ததாயும் வலி மிகுந்ததாயும் மற்றும் கவலைக்குரியதாயும் இருந்தது. ஆனால், அது உச்சகட்டத்தை தொட்டுவிட்டது. அந்த மகத்தான தருணம் வந்துவிட்டது.

எல்லாம் தயாராக உள்ளது. மருத்துவர் வந்து சேர்ந்துவிட்டார். பிரசவம் நிகழ்ந்துவிடும் அல்லவா? நிச்சயமாக, சாதாரண பிறப்பை விட ஒரு முக்கியமான விதத்தில் இது வேறுபட்டது. சாதாரண பிரசவத்தில் குழந்தைக்கு தெரிந்தெடுத்தல் என்று எதுவும் கிடையாது. ஒரு சாதாரண குழந்தைக்கு தேர்ந்தெடுத்தலை கொடுத்தால் அது என்ன செய்யும் என்று நான் யோசித்ததுண்டு.அது பாதுகாப்பான தாயின் கருவில் இருந்த பின்னர் அது இருட்டான இதமான கருவிலேயே இருக்க தெரிந்தெடுக்க கூடும். கருவறைதான் பாதுகாப்பு என்று அது நினைக்கக்கூடும். அந்த இடத்தில் தான் அது தவறு செய்கிறது ஏனென்றால், அங்கேயே அது தங்கினால் அது இறந்துவிடும்.

இந்த கண்ணோட்டத்தில் இந்த காரியம் நடந்திருக்கிறது. ஒரு புதிய படி எடுக்கப்பட்டது மற்றும் எடுக்கப்பட்டு விட்டது. ஏற்கனவே பூமி முழுவதும் புதிய மனிதர்கள் புள்ளியாக அங்கும் இங்குமாக காணப்படுகிறார்கள். சிலர் ஏற்கனவே நான் ஒத்துக் கொண்டபடியே இன்னும் அடையாளம் காண முடியாதபடி சிறிதாக உள்ளார்கள். ஆனால், மற்றவர்களை அடையாளம் காண முடிகிறது. ஒருவர் அவ்வப்போது அவரை சந்தித்துக்கொண்டே இருக்கிறார். நம்முடைய சத்தத்தையும் முகங்களையும் விட அவர்களுடையது வேறுபட்டதாக இருக்கிறது, பலம் உள்ளதாய், அமைதலுள்ளதாய் ,சந்தோஷம் உள்ளதாய் மற்றும் மிகவும் பிரகாசமானதாய் உள்ளது. நம்மில் பலர் கைவிடும் இடத்தில் அவர்கள் தொடங்குகிறார்கள்.

நான் சொல்கிறேன் அவர்கள் அடையாளம் கண்டு கொள்ளும்படி இருக்கிறார்கள். ஆனால், உங்களுக்கு எதை பார்க்க வேண்டும் என்று தெரிய வேண்டும்.? சமயத்தார் என்று சொல்லப்படுபவபவர்களை குறித்து உங்களுக்கு உள்ள யோசனையைப் போல் அப்படியே அவர்கள் இருக்கப் போவதில்லை. நீங்கள் அந்த யோசனையை அல்லது கருத்தை பொதுவான உங்கள் வாசிப்பின் மூலம் பெற்றீர்கள். அவர்கள் கவனத்தை தங்கள் மீது ஈர்க்க மாட்டார்கள். நீங்கள் அவர்களிடம் கருணையாய் இருக்கிறீர்கள் என்று நினைக்க நேரலாம். ஆனால் உண்மையாகவே அவர்கள் தான் உங்களிடம் கருணையாய் இருப்பார்கள். பிற மனிதர்கள் உங்களிடம் அன்பு கூறுவதை விட இவர்கள் உங்களிடம் அதிகமாக அன்பு கூறுவார்கள். ஆனால், அவர்களுக்கு நீங்கள் அதிகம் தேவையில்லை. நாம் அதிகம் தேவைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று எண்ணத்தை விட்டு விட்டு ஓய வேண்டும். சில நல்ல மனிதர்களுக்கு விசேஷமாக பெண்களுக்கு எல்லா சோதனைகளிலும் எதிர்க்க கடினமான சோதனை அதுதான். நீங்கள் எங்கிருந்து இவர்களுக்கு நேரம் கிடைக்கிறது என்று எண்ணும் அளவிற்கு இவர்களுக்கு அதிக நேரம் கிடைக்கும்.

நீங்கள் அவர்களில் ஒருவரை அடையாளம் கண்டு கொண்ட பின் இலகுவாக அடுத்தவரை அடையாளம் கண்டு கொள்வீர்கள். நான் திடமாக சந்தேகிக்கிறேன் (அது எப்படி எனக்கு தெரியும்?) அவர்கள் ஒருவரை ஒருவர் நிறம், பாலினம், சமுதாயப் பிரிவு,வயது, மத கோட்பாட்டையும் கூட தாண்டி உடனடியாக பிழையில்லாமல் ஒருவரையொருவர் கண்டுகொள்வார்கள். அந்த வகையில் பரிசுத்தமாகுதல் என்பது

ஒரு ரகசிய சமுதாயத்தை சேர்வது போன்றது. அடிப்படையில் வைத்து பார்த்தால் அது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும். ஆனால், புதிய மனிதர்கள் அனைவரும் ஒன்றுபோலவே இருப்பார்கள் என்று நீங்கள் சாதாரண அர்த்தத்தில் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. நான் கடைசி புத்தகத்தில் சொன்ன யாவற்றையும் வைத்துப் பார்க்கும்போது நான் அவ்வாறாகத்தான் சொல்ல கட்டாயப்படுத்தப்பட்டு இருக்கிறேன் என்று நீங்கள் எண்ணலாம். புதிய மனிதன் என்னவென்றால், நாம் நாமாக இருப்பதை இழந்து போவது. நம்மிடம் இருந்து வெளியே வந்து, கிறிஸ்துவினுள்ளே செல்ல வேண்டும். அவருடைய திருச்சித்தமே நம் சித்தமாக வேண்டும். நமக்கு அவரது மனம் வேண்டும் என்றால் நாம் அவரது சிந்தனைகளை சிந்திக்க வேண்டும். அதையே வேதம் சொல்கிறது, கிறிஸ்து ஒருவராய் இருந்து நம் எல்லோரிலும் அவர் இருந்தார் என்றால் நாம் எல்லோரும் அவரைப் போலவே இருப்போம் அல்லவா?. நிச்சயமாக கேட்பதற்கு அப்படி இருந்தாலும், நிஜத்தில் அது அப்படி அல்ல.

இங்கு நல்ல விளக்கத்தை கொடுக்க கடினமாக இருக்கிறது. படைத்தவர் தன் படைப்போடு கொண்டுள்ள உறவு போன்று வேறு எந்த இரண்டு காரியங்களின் உறவும் இருக்காது. ஆனால், சத்தியத்தை குறித்து ஒரு குறிப்பு சொல்ல இரண்டு குறையுள்ள விளக்கத்தை தர முயற்சி செய்கிறேன். இருட்டிலே மாத்திரமே வாழ்ந்த அநேக மக்களை கற்பனை செய்து கொள்ளுங்கள். அவர்களிடம் நீங்கள் வந்து வெளிச்சம் என்றால் என்ன என்பதை விளக்க முயற்சிக்கிறீர்கள். அவர்கள் அந்த வெளிச்சத்திற்கே வந்தால் அதே வெளிச்சம் அவர்கள் மேல் விழும். அதையே அவர்களும் பிரதிபலிப்பார்கள். அதனால் அவர்கள் காணப்படுவார்கள் என்று நாம் அவர்களிடம் சொல்லலாம்.

அதை அவர்கள் இவ்வாறாக கற்பனை செய்வார்கள் என்பது நிச்சயமாக சாத்தியமல்லவா? அவர்கள் அனைவரும் ஒரே வெளிச்சத்தை பெறுவதாலும் அதற்கு ஒரே போல் எதிர் விளைவு செய்வதாலும் (அதாவது, ''எல்லோரும் பிரதிபலிப்பது'') அவர்கள் எல்லோரும் ஒரே போல் இருப்பார்கள் என்பதாக?. உங்களுக்கும் எனக்கும் தெரியும் அந்த வெளிச்சமானது அவர்கள் எவ்வாறு வேறுபட்டு இருக்கிறார்கள் என்பதையே வெளிக்கொண்டுவரும். அல்லது, மறுபடியும் உப்பை பற்றி ஒன்றும் தெரியாத ஒரு மனிதன் இருக்கிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஒரு சிட்டிகை உப்பை அவனிடம் சுவைத்து பார்க்க கொடுத்தால் அவன் வலிமையான கூர்மையான சுவையை உணர்வான். அதன் பின்னர் எங்கள் நாட்டில் எங்கள் நாட்டினர் சமையலில் உப்பை பயன்படுத்துவர் என்று சொன்னால், அப்பொழுது அவன், ''அப்படி என்றால் நான் நினைக்கிறேன், உங்களது பதார்த்தங்கள் அனைத்தும் ஒரே சுவையில் இருக்கும்'' என்று.ஏனென்றால், நீங்கள் எனக்கு இப்பொழுது கொடுத்த பொருளின் சுவை மிகவும் வலிமையுள்ளதாக பிற எல்லா சுவையையும் கொன்று விடுவதாக உள்ளது'' என்று சொல்லுவானே.

ஆனால், உங்களுக்கும் எனக்கும் தெரியும் உண்மையாகவே உப்பின் விளைவு அதற்கு நேர் எதிரானது என்று. முட்டையின் உடைய இறைச்சியினுடைய,முட்டைகோஸினுடைய சுவையை அழிக்காமல் அது உண்மையிலேயே அதை வெளிக்கொண்டுவரும். நீங்கள் உப்பை சேர்க்கும் வரையில் அது தன் உண்மையான அதனுடைய சுவையை வெளிக்கொண்டு வராது. ஆமாம் நான் உங்களை எச்சரித்தேன். இது மிகச்சிறந்த விளக்கமாக இருக்காது என்று. ஏனென்றால், அதிகமான உப்பை சேர்க்கும் போது மற்றவைகளின் சுவையைக் கொன்று விட முடியும். ஆனால், கிறிஸ்துவை அதிகமாக சேர்ப்பதினால் ஒரு மனிதனுடைய தனித்தன்மையின் சுவையை அழிக்க முடியாது. என்னால் முடிந்தவரை சிறப்பானதை தந்து நான் விளக்கிக் கொண்டு இருக்கிறேன்.

நமக்கும் கிறிஸ்துவுக்கும் இதுபோல் ஒன்றே. நாம் இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கும் ‘‘நமது’’ என்பதை தள்ளி வைத்துவிட்டு அவரை நம்மை ஆளுகை செய்ய விடும்போது, நாம் அதிகமாக நாமாகவே மாறுகிறோம். அவர் மிகவும் அதிகமானவராய் இருப்பதால் கோடி கோடியான சின்ன கிறிஸ்துக்கள் வேறு வேறாக இருந்தும் அவரை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு குறைவாகவே இருக்கிறார்கள். அவர் அவர்கள் எல்லாரையும் படைத்தார் ஒரு எழுத்தாளர் கதாபாத்திரங்களை கண்டுபிடிப்பது போல கண்டுபிடித்தார். வெவ்வேறு மனிதர்களாக நாம் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் நினைத்தாரோ அதுபோல. அந்த வகையில் நம்முடைய உண்மையான சுயங்களை அவரிலிருந்து பெற காத்திருக்கிறோம்.அவர் இல்லாமல் ‘‘நான் நானாக’’ இருக்க முயற்சிப்பதில் எந்த நன்மையும் இல்லை.

நான் எவ்வளவுக்கு எவ்வளவு அவரை தடுத்து நான் சுயமாக வாழ முயற்சிக்கிறேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு என்னுடைய சுய பாரம்பரியத்தால், என்னுடைய வளர்ப்பால், சூழ்நிலையால் மற்றும் எனது இயற்கையான ஆசைகளால், மேற்கொள்ளப்படுகிறேன். உண்மையிலேயே, நான் பெருமையாக ‘‘நான்’’ என்று சொல்லிக் கொண்டது நான் தொடங்காத இடத்தில் நிகழும் வெறும் நிகழ்வுகளின் சந்திப்பாகவும் என்னால் நிறுத்த முடியாத ஒன்றாகவும் இருக்கிறது. என்னுடைய ஆசைகள் என்று நான் சொன்னது வெறும் எனது உடலினால் அல்லது மனதினுடைய எண்ணத்தினால் அழுத்தப்பட்ட அல்லது பிசாசுகள் எனக்கு பரிந்துரைத்ததாய் கூட இருக்கிறது.

ரயில் பெட்டியில் எனக்கு எதிராக அமர்ந்திருந்த பெண்ணை காதல்வசப்படுத்த, நான் என்னைக் குறித்து பெருமையாகச் சொல்லக்கூடிய என் சொந்த உயரிய தனித்தன்மை மற்றும் என்னை வித்தியாசப்படுத்திக் காட்டக்கூடிய காரியங்களாக நான் எண்ணுகிறவைகளெல்லாம் உண்மையாக நான் உண்ணுகிற உணவு, குடித்த மது மற்றும் என்னுடைய தூக்கத்திலிருந்துதான் தொடங்குகின்றன. என்னுடைய சொந்த அரசியல் கொள்கையின் தொடக்கமான பிரச்சாரத்தையே சொல்லுவேன். என்னுடைய இயற்கையான நிலையில் நான் அதிகம் நம்ப விரும்பும் அளவிற்கான மனிதனல்ல நான். ‘‘நான்’’ என்று அழைப்பதை இலகுவாக விவரித்து விடலாம். நான் கிறிஸ்துவிடம்

திரும்பி, என்னை அவருடைய ஆளுமைக்கு ஒப்புக்கொடுக்கும்போதுதான் முதல்முறையாக எனக்கு என்று சொந்த ஆளுமையை கொண்டிருக்க ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் நான் சொல்லி இருந்தேன், மூன்று–ஆளுமை தேவனிடம் இருக்கிறது என்று. இன்னும் முன்னேறிச் சொல்கிறேன், வேறு எங்கும் வேறு எந்த உண்மையான ஆளுமையும் இல்லை.

உங்களுடைய சுயத்தை நீங்கள் விட்டுக் கொடுக்காத வரையில் உங்களுக்கு உண்மையான சுயம் என்பது இருக்காது. இயற்கையான மனிதர்களுள் மிகவும் இயற்கையாக நபரிடம் ஒரே மாதிரியான தன்மை இருக்கும். ஆனால், தங்களுடைய வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தவர்களுக்கு அப்படி இருக்காது. எப்படி சொல்லி வைத்தார் போல எல்லா அரக்கர்களும், (ராஜ்யங்களை) கைப்பற்றியவர்களும் இருந்திருக்கிறார்கள். எவ்வளவு மகிமையான வேறுபாடுகளோடு பரிசுத்தவான்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், அங்கு உண்மையாகவே சுயத்தை விட்டுக் கொடுத்தல் இருக்க வேண்டும். பேச்சாகச் சொன்னால், கண்ணை மூடிக்கொண்டு அதை தூக்கி எறிந்து விட வேண்டும்.கிறிஸ்து உங்களுக்குள் நிச்சயமாக உண்மையான ஆளுமையை கொடுப்பார். ஆனால், அந்த காரணத்திற்காக நீங்கள் அவரிடம் செல்லக்கூடாது, உங்களுடைய சொந்த ஆளுமையை குறித்து நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் வரை நீங்கள் அவரிடம் போகப் போவதே இல்லை.

முதல் படியாக சுயத்தை குறித்ததானவற்றை அடியோடு மறக்க முயற்சிக்க வேண்டும். உங்களுடைய உண்மையான புதிய சுயம் (கிறிஸ்துவினுடையதும் உங்களுடையதும் ஆனது. அது அவருடையது என்பதாலேயே அது உங்களுடையதாகிறது) நீங்கள் உங்களைத் தேடும் வரையில் அது வராது, அவரை தேடும்போதே அது உங்களிடம் வரும். இது கேட்க விசித்திரமாக இருக்கிறதா? உங்களுக்கு தெரியுமா? இதே கொள்கைதான் ஒவ்வொரு நாளும் தேவையானது. சமுதாய வாழ்க்கையிலும் கூட, நீங்கள் என்ன பிறர் உள்ளத்தில் பதிவு செய்கிறீர்கள் என்று எண்ணிக்கொண்டே இருந்தால், உங்களால் நல்ல பதிவை ஏற்படுத்தவே முடியாது. இலக்கியத்திலும் கலையிலும் கூட தனித்துவத்தோடு இருக்கவேண்டும் என கவலைப்படும் எந்த மனிதனாலும் அப்படி இருக்க முடியாது .அதேநேரம் நீங்கள் உண்மையை மாத்திரம் சொல்ல முயற்சிக்கும் போது, (இதற்கு முன்னால் அது எத்தனை காசுக்கு சொல்லப்பட்டது என்று கவலைப்படாமல் முயற்சித்தால்) நீங்கள் கவனிக்காமலேயே 9/10 முறை தனித்துவத்தோடு இருப்பீர்கள். இந்தக் கொள்கையே வாழ்வில் மேலே இருந்து கீழே வரை உள்ளது.

உங்களது சுயத்தை விட்டு விடுங்கள். நீங்கள் உண்மையான உங்களையே கண்டுபிடித்து விடுவீர்கள். வாழ்க்கையை இழந்து விடுங்கள் அதை பாதுகாத்துக் கொள்வீர்கள். சாகும்வரை ஒப்புக்கொடுங்கள், உங்களுடைய குறிக்கோள்கள் சாகும் வரை, உங்களுக்கு பிடித்தமான ஆசைகளை ஒவ்வொரு நாளும் சாகடியுங்கள். இறுதியாக, முழு உடலையும் சாவுக்கு கொடுங்கள். உங்கள் உயிரின் ஒவ்வொரு நூல்

இழையையும் சமர்ப்பியுங்கள். நீங்கள் நித்திய வாழ்வை கண்டு கொள்வீர்கள். எதையும் வைத்துக் கொள்ளாதீர்கள். நீங்கள் விட்டுக் கொடுக்காத எதுவும் என்றைக்கும் உங்களுடையதாக இருக்காது. உங்களில் சாகாத ஒன்றும் சாவிலிருந்து உயிரடைந்து எழாது உங்களை மட்டுமே கவனமாக பார்த்துக் கொண்டால், வெகு தொலைவான ஓட்டத்தில் நீங்கள் வெறுப்பை, தனிமையை, நம்பிக்கை இன்மையை, கோபத்தை, அழிவை மற்றும் அழுகுவதை காண்பீர்கள். ஆனால், கிறிஸ்துவை நோக்கி பார்த்தால் நீங்கள் அவரை கண்டடைய முடியும். அவரோடு கூட மற்ற எல்லாவற்றையும் தான்.

# முற்றும்